**அர்ப்பணம்...**



தேவ கிருபையால் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாரின் உதவியோடு **வேர்ல்டு இவான்சலிசம் பைபில் ஸ்கூல்** 2014-ம் ஆண்டு துவங்கப்பட்டது. அன்று முதல் இன்றுவரை அநேக மாணவ, மாணவிகள் வேதாகமத்தை முறையாக கற்று பட்டம் பெற்றுள்ளனர். குறிப்பாக இந்த ஊழியத்தை உற்சாகப்படுத்தியவர்கள் Bro.Jerry & Sis.Paula Bates.

இப்பள்ளியில் சேர்ந்து இரண்டு ஆண்டுகள் முடித்து 5வது பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்றுக்கொண்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நினைவாக இந்த புத்தகத்தை வெளியிடுவதில் மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' வானொலி மற்றும் தொலைக்காட்சியில் வெளிவந்த 53 தலைப்பின் கீழான தேவ செய்திகள் அடங்கிய ஆறாவது தொகுப்பினை வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சியடைகிறோம்.

என்றென்றும் அழியாத கர்த்தருடைய செய்திகளை வாசித்து, வேதபாட வகுப்புகள் மற்றும் வேதாகமபள்ளிகளிலும் இப்புத்தகத்தை பயன்படுத்துங்கள். மேலும் கர்த்தருடைய சபையாருக்கும் அறிமுகம் செய்யுங்கள்.

இப்புத்தகத்திற்கு ஓய்வு வேண்டாம். உலக அளவில் உள்ள கிறிஸ்தவ நண்பர்கள் பயன்பெறும் வகையில் இப்புத்தகத்தைக் கொடுத்து உதவிடுங்கள் மேலும் பிரதிகளுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

கிறிஸ்துவின் பணியில்,
B.Arjunan & Glory


**Order From**

World Literature Publications
P.O.Box.5, Batlagundu -624 202, South India.
E-mail:arjunanglory@gmail.com
Our Phone:04543 263278 Mobile :9443558041



Sharon Print System, Madurai -2, Phone - 99439-33377


ரேடியோ மற்றும் டெலிவிஷன் தேவச் செய்திகள் 2011

கிறிஸ்துவின் சபையார் வழங்கும்

# கிறிஸ்துவின் வசனம்

ரேடியோ மற்றும் டெலிவிஷன்
தேவச் செய்திகள்

**2011**




செய்தியாளர்
B.அர்ஜுனன்

*Published by*
**The Word of Christ**

**Vol.6**

# THE WORD OF CHRIST

God's Message of Radio & Television is
Presented by
Church of Christ

**2011**

Preacher
**B.ARJUNAN**

Published by
**THE WORD OF CHRIST**

**Copyright: 2020**
**The Word of Christ Publications**
**First Printing, Tamilnadu - 2020**
**This Printing - 1000 Copies**



# செய்தியாளரைப் பற்றி...!

பல வருடங்களாக நாங்கள் அர்ஜூனன் மற்றும் குளோரி தம்பதியரை அறிந்தவர்களாகவும் பல முறை அவர்களுடைய வீட்டிற்குச் சென்றவர்களாகவும் இருக்கிறோம். அவர்கள் எப்போதும் மிகவும் உபசரிக்கிறவர்களாகவும் அன்புடையவர்களாகவும் இருந்திருக்கின்றனர்.

தமிழகம் முழுவதும் தேவனுடைய ராஜ்யத்தைப் பரப்புவதில் அவர்களுடைய அர்ப்பணிப்பினை நாங்கள் பாராட்டுகிறோம். கிறிஸ்துவுக்காக அவர்கள் பல காரியங்களைத் தியாகம் செய்துள்ளனர்.

அர்ஜூனன் ஒரு உண்மையான வேதாகம ஆசிரியராகவும் தேவனுக்கும் அவருடைய சபைக்கும் சேவை செய்வதில் தன்னை முழுவதும் அர்ப்பணித்தவராகவும் இருக்கின்றார்.

வானொலி செய்திகள் அடங்கிய இப்புத்தகத்தினை நாங்கள் இதயப்பூர்வமாக பரிந்துரை செய்வதோடு இச்செய்திகள் நல்லதும் உண்மையுமான இருதயங்களில் விழுந்து தேவநாம மகிமைக்கென்று பலனளிக்கும்படி ஜெபிக்கிறோம்.

**ஜெர்ரி மற்றும் பவுலாபேட்ஸ்**

*Jerry & Paula Bates*
*10th June 2020*

# பொருளடக்கம்


1. மந்தையின் ஆடுகள் - The Sheep of The Flock
2. துளிர்த்த ஆரோனின் கோல் - The Budded Rod of Aaron
3. தேவ வசனம் - The Word of God
4. பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன் - Fear Not For I Am With You (Isa.43:5)
5. கர்த்தருக்குப் பயப்படும் பயம் - The Fear of The Lord
6. கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன் - One Thing I Ask of The Lord
7. மூன்று காலங்களில் தேவன் - God Was In Three Periods
8. தரியுவின் ஞானமான தீர்மானம் - Darius`s Wise Decree
9. பரிசுத்த ஆவியானவரின் பணி - Work of The Holy spirit
10. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும் - For Abundance of The Heart The Mouth will Speak
11. கர்த்தருடைய வழி - The Lord`s Way
12. அநேகருடைய அன்பு தணிந்துபோம் - The Love of Many Will Grow Cold
13. மன்னிப்பு - Forgiveness
14. அவருடைய சத்தியத்தை மேய்ந்துகொள் - Feed On His Faithfulness
15. மாயமற்ற விசுவாசம் - The Genuine Faith
16. விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் - I Have Kept The Faith
17. நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ? - You Also Want To Go Away?
18. ஒரே நம்பிக்கை - The One Hope
19. உள்ளான மனுஷனும் புறம்பான மனுஷனும் - Inward Man & Outward Man
20. நல்ல கனிகொடுங்கள் - Give Good Fruits
21. மரித்தோருக்கும் ஜீவனுள்ளோருக்கும் ஆண்டவர் - He Is The Lord To Both The Dead And The Living
22. தேவனுடைய மனுஷன் - The Man of God
23. மனுஷி - Woman
24. பிள்ளைகள் - Children
25. கொடுத்தலும், பெற்றுக்கொள்ளுதலும் - Giving and Getting
26. அழிவை குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? - What Do You Think About The Destruction?

27. அழிவிலிருந்து வரும் பாடம் - The Lesson From Destruction
28. ஓ, தாகமாயிருக்கிறவர்களே - Ho! Everyone Who Thirsts
29. செத்த ஈக்கள் - Dead Flies
30. கர்த்தர் ஞானத்தைத் தருகிறார் - The Lord Gives Wisdom
31. கர்த்தர் கொடுப்பதும், பிசாசு கொடுப்பதும் - The Things God Give and Devil Give
32. கர்த்தருடைய ஊழியக்காரன் எப்படியிருக்க வேண்டும்? - How Should Be The Lord`s Servant
33. நீங்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே... - As You Have Received Christ Jesus The Lord...
34. கிருபையும் கிறிஸ்தவர்களின் நடத்தையும் - Grace and Christians` Activity
35. தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்தினாலே உண்டாயிருக்கிறது 1 கொரி.4:20 - For The Kingdom of God Is Not In Word But In Power
36. என் ஜனம் - My People
37. இருமனமுள்ளவன் - Double - Minded Man
38. வீட்டைக் கட்டுகிறவர் யார்? - Who Build The House?
39. நூறுமடங்கு பலன்- Hundred fold Blessing
40. துக்கம் - Sorrow
41. சத்தியமும் பணமும் - Truth & Money
42. புதுபெலன் - New Strength
43. கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சி - Perfect In Christ Jesus
44. சோம்பல் - Slackness
45. தேவனுக்கு உபயோகமான பாத்திரம் - A Useful Vessel For God
46. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நான் கடனாளியாயிருக்கிறேன் -I Am A Debtor to Preach The Gospel
47. கர்த்தருடைய சிந்தை - The Lord's Mind
48. அறிவு மற்றும் அன்பு - Knowledge & Love
49. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார் - God Was Manifested In The Flesh
50. காணப்படுகிறவைகள் மற்றும் காணப்படாதவைகள் - The Things Which are Seen & Which are not Seen
51. அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள் - Many Walk Differently
52. இயேசுவைப் பின்தொடர் - Follow Jesus
53. இரக்கமுள்ளவர்களாயிருங்கள் - Be Merciful



# 1. மந்தையின் ஆடுகள்

## The Sheep of the Flock

**ஆ**ண்டவர் இயேசு தம்முடைய ஜனங்களைப் பார்த்து "நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்" என்றார் (யோவா.10:11). நாமெல்லாரும் அருவடைய ஆடுகளாயிருக்கிறோம். அவர் நமக்காக ஜீவனைக் கொடுத்திருக்கிறார். அவர் நல்ல மேய்ப்பனாயிருக்கிற படியால் தமது ஆடுகளைக் காப்பாற்றும்படியாக தமது ஜீவனையே கொடுத்திருக்கிறார். மேய்ப்பனானவனுடைய சத்தத்தைக்கேட்டு ஆடுகள் மேய்ப்பன் பின்செல்வதைப்போல ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்கும் அவருடைய ஆடுகளாகிய நீங்கள் அவருடைய சத்தத்திற்கு செவிகொடுப்பீர்களா? "அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல் அவனை விட்டோடிப்போம்" (யோவா.10:5).

நீங்கள் அவருடைய ஆடுகளாயிருந்தால் அவருடைய சத்தத்திற்கு செவிகொடுங்கள். அவர் உங்களை நேசிக்கும் ஒரு நல்ல மேய்ப்பனாயிருக்கிறார். "நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன்" என்றார் (யோவா.10:15). ஒரு நல்ல மேய்ப்பனை மந்தையின் ஆடுகள் நன்கு அறிந்திருக்கும். அதைப்போல அவருடைய மந்தையின் ஆடுகள் அவரை அறிந்து, அவருக்கும் அவருடைய வழிநடத்துதலுக்கும் கீழ்ப்படிகிறது. ஒரு நல்ல மேய்ப்பன் தன் ஜீவனை பெரிதாக எண்ணமாட்டான் தன்னுடைய மந்தையின் மீது தன்னுடைய முழுகவனத்தையும் செலுத்துவான். ஏனெனில் அவன் தன் மந்தையை நேசிக்கிறபடியால், ஆடுகளின் மீது அதிக கவனம் செலுத்துகிறான். நம்முடைய ஆண்டவர் இயேசுவும் தம்முடைய மந்தைக்காக ஜீவனையே கொடுத்திருக்கிறார். காணாமற்போன ஆடுகளாகிய உங்களை அவர் மிகவும் நேசிக்கிறார்.

"இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" என்றார் (யோவா.10:16). இந்த உலகத்தில் உள்ள ஆடுகள் எல்லாம், அதாவது ஆத்துமாக்கள் எல்லாம் அவருடைய ஆடுகளாகும். அவைகளையெல்லாம் ஒரே மந்தையின் ஆடுகளாக கூட்டிச்சேர்க்கும்படியாக ஆண்டவர் இவ்வுலகத்திற்கு வந்தார். அவர் கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே ஆண்டவர் அல்ல. உலகில் உள்ள அனைத்து தரப்பினருக்கும் அவர் தேவனால்

ஏற்படுத்தப்பட்டிருக்கிற அதிபதியாகவும் இரட்சகராகவும் இருக்கிறார். அவராலே உலகம் இரட்சிக்கப்படும்படியாக உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும் தேவாட்டுக்குட்டியாக அனுப்பப்பட்டார். ஆகையால் அவருடைய சத்தத்திற்கு செவிகொடுத்து ஒரே மந்தையின் ஆடுகளாக அவருடைய மந்தையில் சேர்ந்துகொள்ளுங்கள். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா காக்கப்படும்.

"மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளைவிட்டு ஓடிப்போகிறான்; அப்போழுது ஓநாய் ஆடுகளைப்பீறி, அவைகளைச் சிதறடிக்கும்" (யோவா.10:12). ஆம், அன்பானவர்களே, இவ்வுலகத்திலே மேய்ப்பனாயிராதவர்களை நாம் அறிகிறோம். அவர்கள் கூலிக்காக வேலைசெய்கிறவர்களானபடியால் ஓநாய் வருவதைக்கண்டவுடன் மந்தையை விட்டு ஓடிப்போகிறார்கள். தன்னை ஓநாய் பீறிப்போட்டுவிடும் அல்லது கடித்து விடும் என்று பயந்துபோய் மந்தையை விட்டு தன் ஜீவன் தப்ப ஓடிப்போய்விடுகிறார்கள். ஏனெனில் "கூலியாள் கூலிக்காக வேலை செய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான்" என்றார் (யோவா.10:13). ஆனால், நல்ல மேய்ப்பராகிய இயேசு அப்படிப்பட்டவரல்ல மந்தையை காக்கும்படியாக தன் உயிரை கொடுத்து மந்தையை காக்கிறார். அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதும்போது; "உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்" என்கிறார் (1பேது.5:2-4).

தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற மந்தையை கூலிக்காக மேய்க்கிற மேய்பர்களைப்போல மேய்க்காமல், மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்பு செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். ஏனெனில் உக்கிராண உத்தியோகம் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மந்தையை அடித்துச் சாப்பிடுகிற மேய்ப்பர்களைப் காண்கிறோம். ஓநாய் ஒருபுறம் மந்தையை அடித்துக்கொண்டிருக்கிறது, அதை மேய்க்கிற கூலியாள் ஒருபுறம் அதை அடித்துச்சாப்பிட்டுக்கொண்டும் இருக்கிறார்கள். இப்படி செய்வார்களானால் மந்தையின் பிரதான மேய்ப்பர் வரும்போது அவர்களுடைய நிலைமை என்னவாகும்? எனக்கு அன்பான சகோதரனே, உங்களிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள மந்தையின் மீது உங்களுடைய முழுகவனத்தைச் செலுத்துங்கள். மந்தைக்காக தமது ஜீவனைக் கொடுத்த பிரதான மேய்ப்பராகிய



இயேசுகிறிஸ்துவரும்போது அவருடைய மந்தையை சிறப்புடன் காத்துக்கொண்ட மேய்ப்பார்களாயிருங்கள். அப்பொழுது அவர் உங்களுக்கு வடாத ஜீவகிரீடத்தைக் கொடுப்பார்.

தாவீது அரசனைக்குறித்து அறியாதவர்களே இருக்கமுடியாது அவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபோது நடந்த சம்பவத்தை அவர் சவுலுக்குச் சொன்னார்; "ஒரு விசை ஒரு சிங்கமும் ஒரு விசை ஒரு கரடியும் வந்து, மந்தையிலிருக்கிற ஒரு ஆட்டைப் பிடித்துக்கொண்டது. நான் அதைத் தொடர்ந்துபோய், அதை அடித்து, அதை அதின் வாய்க்குத் தப்புவித்தேன்; அது என்மேல் பாய்ந்தபோது, நான் அதின் தாடியைப் பிடித்து, அதை அடித்துக் கொன்றுபோட்டேன்" என்றார் (1சாமு.17:34,35). மந்தையின் ஆடுகளைப் பிடிக்க ஒரு சிங்கம் வந்தால் மேய்ப்பர்கள் என்ன செய்வார்கள் தலை தெரிக்க ஓடுவிடுவார்கள் அல்லவா? ஆனால் தாவீதோ அந்த மந்தையின் மீது கவனமாயிருந்தபடியால் தன் ஜீவன் போனாலும் பரவாயில்லை இந்த சிங்கத்தினிடமிருந்து என் ஆட்டை எப்படியாவது மீட்பேன் என்று அதைப் பின்தொடர்ந்தான். ஒரு சிங்கத்தைப் பின்தொடர்வது என்பது ஒரு சாதாரண விஷயமல்ல. அதனுடைய வேகம் எப்படிப்பட்டதாக இருக்கும்? அதைத்தொடாந்துபோய் அந்த ஆட்டை அதன் வாய்க்கு தப்புவித்தான். சிங்கம் அவன் மேல் பாய்ந்தபோது அதின் தாடியைப் பிடித்து அதை அடித்துக் கொன்றுபோட்டான். தாடி வளர்ந்திருக்கிறது என்றால் அது மிகப்பெரிய சிங்கமாகத்தானிருந்திருக்க வேண்டும். அப்படிப்பட்ட சிங்கத்தைக் கொன்று அதன் வாய்க்கு தப்புவித்த தாவீது எப்படிப்பட்ட மேய்ப்பன் என்று பார்த்தீர்களா?

இன்றைக்கு இப்படிப்பட்ட மேய்ப்பர்களைக் கர்த்தர் எதிர்பார்க்கிறார். நீங்கள் இப்படிப்பட்ட மேய்ப்பராக உங்களை தேவனுடைய மந்தைக்கு ஒப்புக்கொடுப்பீர்களா? அப்படி ஒப்புக்கொடுத்து மந்தைக்காக வேலை செய்யும்போது பிரதான மேய்ப்பர் வெளிப்படுகையில் அவரிடத்தில் வாடாத ஜீவகிரீடத்தைப் பெற்றுக்கொள்வீர்கள். உங்களுடைய வேலை எப்படிப்பட்டதாக இருக்கிறது. கூலிக்காக மந்தையை மேய்த்துக்கொண்டிருக்கிறீர்களா? அநேகர் கூலிக்காக வேலைசெய்யவே விரும்புகின்றனர். ஒருச்சான் வயிற்றுக்காக வேலை செய்கிற மக்களாக இருக்கக்கூடாது. பொதுவாக எல்லோரும் சொல்லக்கூடிய வார்த்தை ஒருச்சான் வயிற்றுக்காகத்தான் இந்தப்பாடுகள் என்பார்கள். நாம் அவ்விதமாக வேலை செய்கிற ஜனங்களாக இருக்கக்கூடாது. தேவனுடைய மந்தையை கட்டாயமாய்யல்ல நாம் மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்பு செய்யவேண்டும். ஒரு சபையின் மூப்பனுடைய வேலை இப்படிப்பட்டதாயிருக்கிறது.

மேய்ப்பன் இருக்கும்வரை மந்தைக்குப் பாதுகாப்பு கிடைக்கும், மேய்ப்பனுக்கு ஒரு பிரச்சனை என்றால் மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் அல்லவா, அதைப்போல ஒரு சூழ்நிலை உருவானது. "மேய்ப்பனை வெட்டுவேன், மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்கள் எல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" என்று தம்முடைய சீஷர்களைப் பார்த்து கார்த்தர் சொன்னார் (மத்.26:31). வேதாகமத்தில் சொல்லப்பட்டபடியே இயேசுவை பிடித்து அடித்து கொன்றுபோட்டால் அவருடைய சீஷர்கள் எல்லாரும் ஓடிவிடுவார்கள் என்று அறிந்து அவரைப்பிடிக்க வகைதேடினார்கள். அந்தப்படியாக இயேசுவை பிடித்து வாரினால் அடித்து அவரைத் துன்பப்படுத்தி சிலுவையில் அரைந்து கொன்றார்கள். அன்று இரவே எல்லா சீஷர்களும் அவரை விட்டு ஓடிப்போனார்கள். மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று சொல்லப்பட்ட வேதவாக்கியத்தின்படி சிதறடிக்கப்பட்டார்கள். இயேசுவைப் பிடித்தவுடன் அவருக்கு என்ன சம்பவிக்கும் என்பதை பார்க்கும்படியாக வந்த பேதுருவும் "அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம் பண்ணவும் தொடங்கினான்" என்று காண்கிறோம் (மத்.26:74).

நீங்கள் அவருடைய மந்தையின் ஆடுகளாக இருந்து, அவரை மறுதலித்து வாழ்ந்துகொண்டிருக்கிற கிறிஸ்தவர்களாக இருக்கிறீர்களா? அல்லது அவருடைய மந்தைக்கு சாட்சிகளாக அவருடைய நாமத்தை அறிவிக்கும் சுவிசேஷகர்களாக இருக்கிறீர்களா? எனக்கு அன்பான தேவ ஜனமே, அவருடைய மந்தையின் ஆடுகளாக இருந்து அவருடைய ஆசீவாதங்களை பெற்றுக்கொள்ளும் தேவபிள்ளைகளாக இருக்கப் பிரயாசப்படுங்கள். நம் ஆண்டவர் "காணாமற்போன ஆடுகளாகிய இஸ்ரவேல் வீட்டாரிடத்திற்கு அனுப்பப்பட்டேனேயன்றி, மற்றப்படியல்லவென்றார்" (மத்.15:24). ஒருவேளை அந்த காணாமற்போன இஸ்ரவேல் வீட்டாரைப்போல நீங்களும் காணாமற்போனவர்களாக இருக்கலாம். இப்பொழுதே தேவ சத்தம்கேட்டு அவருடைய மந்தையின் ஆடுகளாக இருக்கப் பிரயாசப்படுங்கள். மந்தைக்காக இயேசு மீண்டும் வரப்போகிறார். அவருடைய மந்தையின் ஆடுகளாக இருப்பீர்களென்றால் அவரோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு என்றென்றும் அவரோடு வாழும் பாக்கியத்தை அடைவீர்கள். இல்லையேல் கைவிடப்படுவீர்கள்.

ஒருவேளை நீங்கள் நினைக்கலாம் நான் அவருடைய சபைக்கு செல்கிறேன், நான் ஒரு கிறிஸ்தவராக வாழ்ந்துகொண்டிருக்கிறேன் அவர் என்னைக் கைவிடுவாரா? என்று கேட்கலாம்; "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானே



யல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்கிறார் (மத்.7:21). தேவனுடைய சித்தத்தின்படி செய்யாதவர்கள் தேவனுடைய மக்கள் அல்ல, யாரெல்லாம் தேவனுடைய சித்தத்தை அறிந்து அதன்படி ஜீவிக்கிறார்களோ அவர்களே தேவனுடைய ஜனங்களாகவும், அவருடைய மந்தையின் ஆடுகளாகவும் இருக்கிறார்கள். நீங்கள் அவருடைய ஆடுகளாக இல்லாதபட்சத்தில் உங்களுக்கு அநேக ஆபத்துக்கள் காத்திருக்கிறது. அதேவேளையில் மந்தையோடு மந்தையாக இருப்பீர்களேயானால் உங்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு இருக்கும். அதுவும் பிரதான மேய்ப்பனாகிய இயேசுவிடம் நீங்கள் திருப்பப்படும்போது உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடையும் பாக்கியத்தைப் பெறுவீர்கள். இந்த ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ள கால தாமதம் செய்யாதீர்கள். இன்றே அவருடைய சத்தம்கேட்டு அவருடைய மந்தையின் ஆடுகளாயிருக்கப் பிரயாசப்படுங்கள். அப்பொழுது அளவில்லா ஆசீர்வாதம் பெறுவீர்கள்.

**கேள்வி**

**சிதறிப்போனவர்கள் அப்படியே போய்விட்டார்களா?**

மேய்ப்பனை வெட்டுவேன் மந்தையின் ஆடுகள் சிதறடிக்கப்படும் என்று சொல்லப்பட்டபடி அவர்கள் போனாலும் அவர்களை கர்த்தர் மீண்டும் மந்தையில் சேர்க்கும்படியாக அவர்களை சந்தித்து என் ஆடுகளை மேய்ப்பாயாக என்று கர்த்தர் பேதுருவிடம் கேட்கும்போது அப்படியே அவன் ஒப்புக்கொடுத்து, முதல் சுவிசேஷகனாக தன்னை ஆயத்தப்படுத்தினான். நீ பேதுருவாய் இருக்கிறாய் இந்தக் கல்லின்மீது என் சபையைக் கட்டுவேன் என்று சொன்னார். முதன் முதலில் எருசலேமில் ஆண்டவருடைய சபை ஆரம்பிக்கப்பட்டது. பேதுருவின் பிரசங்கத்தைக்கேட்ட 3000பேர் உடனே ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் கர்த்தரால் சேர்க்கப்பட்டார்கள். சுவிசேஷம் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே அறிவிக்கப்பட்டது. "சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" என்று அப். 8:4-ல் வாசிக்கிறோம்.

எத்தனையோ மார்க்கங்கள் தோன்றி இந்த உலகத்தில் அழிந்துபோய் விட்டது, இன்னும் சில அழிந்துகொண்டிருக்கிறது. ஆனால் ஆண்டவர் இயேசுவினால் தோற்று விக்கப்பட்ட ஜீவனுள்ள மார்க்கம் இன்றும் ஜீவனோடு இருக்கிறது. அவரால் ஏற்படுத்தப்பட்ட அப்போஸ்தலர்கள், கர்த்தருடைய கடைசி கட்டளையின்படி உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர். அதில் ஒருவராகிய தோமா இந்தியாவுக்கு வந்து சுவிசேஷம்

அறிவித்தார் என்று நாம் வரலாற்றுப்பூர்வமாக அறிகின்றோம். சிதறடிக்கப்பட்டவர்கள் அப்படியே சிதறடிக்கப்பட்டவர்களாக போய்விடவில்லை. மாறாக சுவிசேஷ வசனத்தை பிரசங்கிக்கிறவர்களா அதற்கு சாட்சியாக எங்கும் சுற்றித்திரிந்தனர். அன்பான தேவஜனமே, நீ சுவிசேஷத்தை அறிவித்து கர்த்தருடைய மந்தையில் கணக்கில்லா ஆத்துமாக்களை சேர்க்கப்பிரயாசப்படு, அப்பொழுது கணக்கில்லா ஆசீர்வாதங்களை கர்த்தடைய சமுகத்தில் நீ பெற்றுக்கொள்வாய். கர்த்தர் உங்கள் முயற்சியை ஆசீர்வதிக்கும்படியாக உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 2. துளிர்த்த ஆரோனின் கோல்
## The Budded Rod of Aaron

இஸ்ரவேலிலே, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாக கோராகு தாத்தான் கூட்டத்தார் முறுமுறுத்தார்கள். அவர்களுடைய முறுமுறுப்பை ஒழியப்பண்ணும்பொருட்டு, தேவன், அவர்களுடைய பிதாக்களின் வம்சங்களின்படியே ஒவ்வொரு கோலாகப் பன்னிரெண்டு கோலை வாங்கி அவனவனுடைய கோலில் அவனவனுடைய பேரை எழுதும்படி கட்டளையிட்டு, நான் தெரிந்துகொள்ளும் கோல் துளிர்க்கும் என்றார். அந்தப்படியாக எழுதி லேவியின் கோலின்மேல் ஆரோனுடைய பேரை எழுதினார்கள். பின்பு அந்தக்கோல்களை மோசே, சாட்சியின் கூடாரத்திலே கர்த்தருடைய சமுகத்தில் வைத்தான். "மறுநாள் மோசே சாட்சியின் கூடாரத்துக்குள் பிரவேசித்தபோது, இதோ, லேவியின் குடும்பத்தாருக்கு இருந்த ஆரோனின் கோல் துளிர்த்திருந்தது; அது துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது" (எண்.17:8).

என்ன ஆச்சரியம்! ஆரோனின் காய்ந்தகோல் அநேகர் பார்க்கும்வண்ணமாக ஒரு நாள் இரவிலே துளிர்விட்டு, பூப்பூத்து, வாதுமைப் பழங்களைக் கொடுத்தது. இதிலிருந்து நாம் என்ன தெரிந்துகொள்கிறோம்? தேவனால் கூடாத காரியம் ஒன்றுமில்லை. தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாக முறுமுறுத்துக் கொண்டிருந்தவர்களுக்கு முன்பாக தேவன் தாம் தெரிந்துகொண்ட லேவிகோத்திரத்தானாகிய ஆரோனை தெரிந்துகொண்டார். கோராகும், தாத்தானும் அப்படி என்ன முறுமுறுத்தார்கள் என்று நீங்கள் நினைக்கக்கூடும்; "மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை நோக்கி; எல்லாரும் மிஞ்சிப்போகிறீர்கள்; சபையார் எல்லாரும் பரிசுத்தமானவர்கள்; கர்த்தர் அவர்கள் நடுவில் இருக்கிறாரே; இப்படியிருக்க, கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்றார்கள்" (எண்.16:3). இன்றைக்குங்கூட சபைகளில் ஊழியக்காரர்களுக்கு விரோதமாக



கூட்டங் கூடுகிறர்வர்களைப் காண்கிறோம். அன்பானவர்களே, தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மேல் குற்றஞ்சொல்லாதிருங்கள். ஏனெனில் அவர்கள் ஆபிரகாமின் குமாரரும் குமாரத்தி களுமாயிருக்கிறார்கள். அநேக ஜாதிகளுக்கு உன்னைத் தகப்பனாக ஏற்படுத்தினேன் என்று தேவன் ஆபிரகாமைக்குறித்துச் சொல்லியிருக்கிறார்; "...இல்லாதவைகளை இருக்கிறவைகளைப்போல அழைக்கிறவருமாயிருக்கிற தேவனுக்கு முன்பாக நம்மெல்லாருக்கும் தகப்பனானான்" என்று வாசிக்கிறோம் (ரோம.4:17). இச்செய்தியை வாசிக்கிற அன்பு நண்பரே ஆரோனின் காய்ந்தகோல் துளிர்விட்டிருக்கும்போது வாழ்க்கையில் நொந்து, வெந்து போன உன் வாழ்க்கையை ஒளிமயமான வாழ்க்கையாக மாற்ற கர்த்தர் வல்லவராயிருக்கிறார். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? விசுவாசித்தால் தேவனுடைய மகிமையான காரியங்களைப் பார்ப்பீர்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று எங்கள் நம்பிக்கை அற்றுப்போயிற்று என்று சொல்ல ஆரம்பித்தார்கள். இன்றைக்கும் வளர்ந்த கிறிஸ்தவர்கள் கூட சிலவேளைகளில் இந்தவிதமாக சொல்வதைக் கேள்விப்படுகிறோம். தேவன் ஒருவரையும் கைவிடுகிற தேவன் அல்ல. அவர் எல்லோரையும் நேசிக்கிறார். அவர் மனிதனை நேசிக்கிறபடியால் அவனுக்கு தேவையான எல்லாவற்றையும் இந்தப் பூமியில் வைத்து வைத்திருக்கிறார். எங்கள் எலும்புகள் உலர்ந்துபோயிற்று என்று சொன்ன இஸ்ரவேலருக்கு முன்பாக எசேக்கியேல் தீர்க்கதரிசியைக் கொண்டு கர்த்தர் சில காரியங்களை அவர்களுக்கு உணர்த்திக்கொண்டுவந்தார்.

ஒருமுறை உலர்ந்த எலும்புகள் நிறைந்த பள்ளத்தாக்குக்கு அந்த தீர்க்கனைக் கொண்டுபோனார். அவர் அவனை நோக்கி: மனுபுத்திரனே இந்த எலும்புகள் உயிரடையுமா என்று கேட்டார்; அதற்கு அவன்; கர்த்தராகிய ஆண்டவரே அதை அறிவீர் என்றான். பின்பு அவர் சொன்னபடி அவன் தீர்க்கதரிசனம் உரைத்தபோது "ஆவி அந்த எலும்புகளுக்குள் பிரவேசிக்க அவர்கள் உயிரடைந்து காலூன்றி மகா பெரிய சேனையாய் நின்றார்கள்" (எசே.37:10). அன்பானவர்களே, நம்முடைய தேவன் உலர்ந்து எலும்புகளுக்கு உயிர்கொடுக்கும் தேவன். அவரை நீங்கள் பற்றிக்கொள்ளும்போது நீங்கள் உயிரடைவீர்கள்.

ஒருமுறை மரித்து நான்கு நாட்களான லாசருவின் வீட்டிற்கு கர்த்தர் வந்தபோது, மார்த்தாள் ஆண்டவரே, நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டான் என்றாள். இயேசு அவளை நோக்கி நீ விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பாய் என்றார். ஆண்டவர்

லாசருவின் கல்லறைக்கு அருகாமையில் சென்று "லாசருவே, வெளியே வா என்று, உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி; இவனைக் கட்டவிழ்த்துவிடுங்கள் என்றார்" (யோவா.11:43,44).

மரித்தவர்களுடைய உயிர் மூன்று நாள்வரை அங்கேயே இருக்கும் என்ற நம்பிக்கை யூதர்களுக்குள்ளாக இருந்ததாக வேதாகம ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். ஆகையால் ஒருவேளை ஆண்டவர் நான்காம் நாள் லாசருவின் கல்லறைக்கு போயிருக்கலாம் எனவும் அதினாலே நான்காம் நாளில் அவனை உயிரோடு எழுப்பினார் எனவும் சொல்லுகிறார்கள். அதிலும் குறிப்பாக பாருங்கள், லாசருவே வெளியேவா என்று சொன்னவருக்கு அந்தக்கட்டுகளை அவிழ்த்துவிட முடியாதா என்ன? ஏன் அதைச் செய்யவில்லை, நம்பிக்கையற்ற அவர்களுக்கு நம்பிக்கை ஏற்படவேண்டும் என்பதற்காகவே அவர்களையே லாசருவின் மேல் கட்டப்பட்டிருந்த சீலைகளை அவிழ்த்துவிடும்படி சொன்னார்.

இந்த அற்புதத்தைப் பார்த்த யூதர்களில் அநேகர் அவரிடத்தில் விசுவாசம் வைத்தார்கள் என காண்கிறோம். இன்றைக்கு உங்களுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதாக இருக்கிறது. என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் என்று கர்த்தர் சொல்லுகிறார். மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட லாசரு அநேக நாள் உயிரோடிருந்தான். ஆண்டவருடைய ஊழியத்தில் பங்குபெற்றான். இன்றைக்கு நீங்கள் மரித்தோரை உயிரோடு எழுப்புகிற கர்த்தர் மீது உங்களுடைய நம்பிக்கையை வைப்பீர்கள் என்றால் கர்த்தர் செய்கிற பெரிய காரியங்களைக் காண்பீர்கள். மேலும், கர்த்தர் சொல்லும்போது; "உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்றார் (யோவா.11:26). கர்த்தரை நம்புகிறவர்கள் என்றுமே மரிப்பதில்லை. ஏனென்றால் அவர் ஜீவனுள்ளவர் அவரைப்பின்பற்றுகிறவர்களும் ஜீவனுள்ளவர்களாக மாற்றப்படுகிறார்கள்.

நீங்களும் ஜீவனுள்ளவர்களாக மாற்றப்பட உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். உலர்ந்த எலும்புகளை உயிரடையச் செய்கிற தேவன் உங்களையும் உயிரடையச் செய்வார். பழைய பாவங்களுக்குச் செத்து புதிதானவர்களாயிருக்கும்படியாக உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து அவர் கொடுக்கும் பாவ மன்னிப்பை



ஞானஸ்நானத்தின் மூலம் பெற்றுக்கொண்டு ஜீவனுள்ளவர்களாக கர்த்தருடைய சபையில் சேர்க்கப்படுங்கள்.

"நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள் ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்; என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது" என்கிறார் (யோவா.15:5). தேவனால் ஏற்படுத்தப்பட்ட திராட்சச்செடி கிறிஸ்துவாக இருக்கிறார். நாமெல்லாரும் அவரில் நிலைத்திருக்கிற கொடிகளாயிருக்கிறோம். ஒருவன் அவரிலும் அவர் அவனிலும் நிலைத்திருந்தால்தான் மிகுந்த கனிகளைக் கொடுக்கமுடியும். பெயரளவில் இருந்துகொண்டு ஒட்டவைக்கப்பட்ட கொடிகளைப்போல இருப்போமானால் அவர் நம்மில் இருக்க மாட்டார். அந்த கொடிகளுக்கு ஏற்ற சாரம் கிடைக்காமல் காய்ந்துபோகும். அவரிலிருந்து துளிர்க்கும் கொடிகளாக வளரவேண்டும். அப்பொழுதே நாம் கனிகொடுக்க முடியும். இன்றைக்கு அநேகர் இந்த விதமான சத்தியங்களை உணராமல். தாங்களாக கனிகொடுக்கும்படி முயற்சிக்கிறார்கள். அவர்களுடைய பிரயாசம் வீணாய்போய்விடும். மேலும் சொல்கிறார்; "ஒருவன் என்னில் நிலைத்திராவிட்டால், வெளியே எறியுண்டு உலர்ந்து போவான்; அப்படிப்பட்டவைகளைச் சேர்த்து, அக்கினியிலே போடுகிறார்கள்; அவைகள் எரிந்துபோம்" என்றார் (யோவா.15:6). நீங்கள் அவரில் நிலைத்திராவிட்டால் உங்களுடைய நிலைமை எரிந்து போடப்பட்ட அல்லது வெட்டப்பட்ட கிளையைப்போல தள்ளப்பட்டுப் போவீர்கள். ஆகையால் அவரில் நிலைத்திருந்து கனிகொடுக்கப்பிரயாசப்படுங்கள்.

"நீங்கள் என்னிலும், என் வார்த்தைகள் உங்களிலும் நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக்கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும். நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராயிருப்பீர்கள்" என்றார் (யோவா.15:7,8). அநேகருக்கு இயேசுவின் சீஷர்களாக இருக்க விருப்பம். ஆனால் அவருடைய வார்த்தைகள் அவர்களில் நிலைத்திருப்பதற்கு இடம் கொடுப்பதில்லை. அப்படி அவருடைய வார்த்தைகளில் நிலைத்திருக்கவில்லையென்றால் நம்முடைய ஜெபம் கேட்கப்படுவது எப்படி? நாம் முதலாவது அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கும்போது அவரும் நமக்குச் செவிகொடுப்பார்.

என்னில் நிலைத்திருங்கள் அப்பொழுது உங்களில் நிலைத்திருப்பேன் என்கிறார். நிலைத்திருப்பது என்பது ஆண்டவருடைய உபதேசத்தில் நிலைத்திருப்பது. இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: "நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்.

சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:31,32). உபதேசத்தில் நிலைத்திராமல் அவருக்கு சீஷராயிருப்பது கூடாதகாரியம். அநேகர் நான் ஆண்டவருடைய பிள்ளை என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவருடைய உபதேசத்தின்படி நடப்பதில்லை. பின்பு எப்படி ஆண்டவருக்கு சீஷராகவும் தேவனுக்குப் பிள்ளைகளாகவும் இருக்கமுடியும்?

அன்பு வாசகரே, நீங்கள் தேவனை அறிந்தவரா, ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட சபையில் இருக்கிறீர்களா? ஆண்டவர் இயேசுவையும் அவருடைய உபதேசத்தையும் முதலாவது அறிந்துகொள்ளுங்கள். அப்பொழுது அவருடைய சீஷர்களாயிருப்பீர்கள். வாரந்தோறும் சபையாக கூடி தேவனை ஆராதிக்கவேண்டும். அந்நாளில் குறிப்பாக இயேசுகிறிஸ்துவினுடைய பாடு மரணத்தை நினைவுகூரவேண்டும். இவர்களே அவருடைய உபதேசத்தின்படி நடப்பவர்கள். நான் சபைக்கும்போவதுமில்லை, அவரை நினைவு கூருவதுமில்லையென்று ஒருவர் சொல்லிக்கொண்டு ஒரு கிறிஸ்தவராக இருப்பது கூடாதகாரியம். **ஒருவருடமாக சபையாக கூடிய தேவனை ஆராதனை செய்து வந்தவர்களையே வேதம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கிறது.** இது முதலாவது அந்தியோகிய பட்டணத்தில் ஏற்படுத்தப்பட்டது. அது முதல் அவரை பின்பற்றுகிற, அவருடைய உபதேசத்தின்படி நடக்கிற, அனைவரும் கிறிஸ்தவர்கள் அல்லது கிறிஸ்துவின் சீஷர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். நீங்களும் இவ்விதமாக அழைக்கப்பட அவருடைய உபதேசத்தின்படி நடக்க பிரயாசப்படுங்கள். இஸ்ரவேலரைப் பார்த்து கர்த்தர் சொல்லும்போது; "நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன்; நீ எனக்குத் காட்டுத் திராட்சச் செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?" என்றார் (எரே.2:21).

தேவனுடைய எதிர்பார்ப்புக்கு விரோதமான கனிகளை இஸ்ரவேல் மக்கள் கொடுத்தார்கள். அது தேவனுக்கு பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்தது. நீ கிறிஸ்துவில் நிலைத்திருப்பாயானால் அவருக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்கவேண்டும். அப்படி கொடுக்காத பட்சத்தில் தேவன் அதை அறுத்துப்போடுவார் என்பதை நீ அறியவேண்டும். ஆரோனின் துளிர்த்த கோலைப்போல நீங்கள் கர்த்தரில் துளிர்த்து கனிகொடுக்க உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

**"கர்த்தருக்குப் பயப்படுதல் ஜீவனுக்கேதுவானது; அதை அடைந்தவன் திருப்தியடைந்து நிலைத்திருப்பான்; தீமை அவனை அணுகாது"**

**நீதி. 19:23**



**கேள்வி**

**தேவனாலே கூடாதகாரியம் ஒன்று உண்டா?**

நாம் பார்க்கிற எல்லாம் தேவனால் உண்டானவைகளாயிருக்கிறது. நம்முடைய எண்ணத்திற்கு மேலாக அவர் உயர்ந்தவராயிருக்கிறார். அவரால் எல்லாம் கூடும். அவரால் கூடாதது ஒன்றுமில்லை. யோவான்ஸ்நானன் பிரசங்கிக்கும்போது; "மனந்திரும்புதலுக்கு ஏற்றகனிகளைக் கொடுங்கள். ஆபிரகாம் எங்களுக்குத் தகப்பன் என்று உங்களுக்குள்ளே சொல்லிக்கொள்ள நினையாதிருங்கள்; தேவன் இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராயிருக்கிறார் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்.3:8,9). ஆதாமை சிருஷ்டிக்கும்போது மண்ணிலிருந்து அவனை சிருஷ்டித்தார். அதைப்போல இந்தக் கல்லுகளினாலே ஆபிரகாமுக்கு பிள்ளைகளை உண்டுபண்ண அவர் வல்லவராயிருக்கிறார் என்பதை நாம் அறியவேண்டும்.

தேவதூதன் மரியாளிடத்தில் அனுப்பப்பட்டு நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப்பெறுவாய் அவருக்கு இயேசு என்று பெயரிடுவாயாக என்று சொல்லும்போது; மரியாள் தேவதூதனை நோக்கி; இது எப்படியாகும்? புருஷனை அறியேனே என்றாள். அதற்கு தேவதூதன் "தேவனாலே கூடாதகாரியம் ஒன்றுமில்லை என்றான்" (லூக்.1:27). ஆம் அன்பானவர்களே தேவனாலே எல்லாம் கூடும். அவர் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா. அவரில் நிலைத்திருந்து ஆவிக்குரிய கனிகளை கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 3. தேவ வசனம்

## The Word of God

"**தே**வனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது" என எபிரெயர் புத்தகத்தில் படிக்கிறோம் (எபி.4:12). உலகத்தில் அநேக வார்த்தைகள் இருக்கிறது.

அவைகளுக்கெல்லாம் ஜீவன் இல்லை. ஆனால் கர்த்தருடைய வார்த்தைக்கு ஜீவன் இருக்கிறது. அதை எடுத்து ஒரு மனிதனுடைய இருதயத்தில் விதைக்கும்போது அது ஒன்றும், முப்பதும், அறுபதும் நுறுமாகவும்

பலன் கொடுக்கிறது என காண்கிறோம். அது எந்தப்பட்டயத்தைக் காட்டிலும் கருக்கானதாகவுமிருக்கிறது. குறிப்பாக இருபுறமும் கருக்குள்ளதாயுமிருக்கிறது. அதை எடுத்து பயன்படுத்தும்போது மிகுந்த கவனத்துடன் பயன்படுத்த வேண்டும். ஏனெனில் அதை எடுத்து பயன்படுத்துகிறவர்களுக்கு நேராகவும் கருக்கு இருக்கிறது, எதிராக இருக்கிறவர்களுக்கு நேரேயும் கருக்கு இருக்கிறது. ஆகையால் இருவரையும் அது வெட்டக்கூடியதாக இருக்கிறது. மேலும் ஆத்துமாவையும் ஆவியையும் கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது என காண்கிறோம்.

இப்படி வல்லமையுள்ள வார்த்தைகளுக்கு யார் செவிகொடுப்பார்கள்? என நீங்கள் நினைக்கக்கூடும். ஆண்டவர் சொல்லும்போது; "தேவனால் உண்டானவன் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான்" என்று சொல்லுகிறார் (யோவா.8:47). நீங்கள் தேவனால் உண்டானவர்களாய் இருப்பீர்களானால் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுப்பீர்கள். ஒரு முறை செர்கியுபவுல் என்று சொல்லக்கூடிய ஒரு மனுஷன் பர்னபாவையும் சவுலையும் அழைத்து அவர்களால் கர்த்தருடைய வசனத்தைக் கேட்க ஆசையாயிருந்தான். அங்கு பர்யேசு என்னும் பேர்கொண்ட மாயவித்தைக்காரன் அந்த செர்கியுபவுல் என்று சொல்லக்கூடிய அதிபதியை விசுவாசத்தினின்று திருப்பும்படி வகைதேடி பர்னபாவோடும் பவுலேடும் எதிர்த்து நின்றான்.

இதைக்கண்ட பவுல் அவனை உற்றுப்பார்த்து "எல்லாக் கபடமும் எல்லாப் பொல்லாங்கும் நிறைந்தவனே, பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே கர்த்தருடைய செம்மையான வழிகளைப் புரட்டுவதில் ஓயமாட்டாயோ என்றான்" (அப்.13:10). ஆனால் அந்த செர்கியுபவுல் என்று சொல்லக்கூடிய அதிபதி நடந்தவைகளைக் கண்டு, கர்த்தருடைய உபதேசத்தைக்குறித்து அதிசயப்பட்டு விசுவாசித்தான்.

அன்பானவர்களே, தேவனால் உண்டானவர்கள் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறார்கள். அதை விசுவாசிக்கவும் செய்கிறார்கள். தேவனால் உண்டாகாதவர்கள் அதாவது மாயவித்தைக்காரனைப்போல எலிமாக்கள் கர்த்தருடைய வசனத்திற்கு எப்போதும் எதிர்த்து நிற்பார்கள். ஏனெனில் அவர்கள் பிசாசின் பிள்ளைகள். ஆகையால் பவுல் அந்தப் பர்யேசுவைப் பார்த்து பிசாசின் மகனே, நீதிக்கெல்லாம் பகைஞனே என்று சொல்வதைப் பார்க்கிறோம்.

தேவ வசனத்தை ஒரு மனுஷன் கைக்கொள்ளும்போது அவனிடத்தில் தேவனுடைய அன்பு மெய்யாகவே பூரணப்பட்டிருக்கும் என்று



யோவான் அப்போஸ்தலன் சொல்லுகிறார். "அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோமென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்" (1யோவா.2:5).

கிறிஸ்தவர்களை அவர்களுடைய கனிகளினாலே அறியலாம். அதைப்போல வசனத்தை கைக்கொள்ளுகிறவர்களிடத்தில் தேவனுடைய அன்பு இருக்கும். அன்பு இல்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார். தேவனை அறிந்தவனிடத்தில் தேவனுடைய அன்பு ஊற்றப்பட்டிருக்கும். சிலர் உதட்டளவில் அன்பு செலுத்துகிறார்கள். சிலர் எழுத்தளவில் அன்பு செலுத்துகிறார்கள். ஆனால் கர்த்தருடைய வசனம் நமக்குப்போதிப்பது என்ன? "என் பிள்ளைகளே, வசனத்தினாலும் நாவினாலுமல்ல, கிரியையினாலும் உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்" (1யோவா.3:18). கிரியை இல்லாத விசுவாசம் செத்தது. அதைப்போல வசனத்தினாலும் நாவினாலுமல்ல கிரியையினாலும் அன்பு கூரவேண்டும்.

ஒருவனுக்கு பசியாயிருக்கும்போது நம்மிடத்தில் அவனுடைய தேவையை பூர்த்திசெய்ய பணம் இருந்தும் அவனைநோக்கி குளிர் காய்ந்து பசியாரு என்று சொல்லி அவனுடைய தேவையை பூர்த்திசெய்யாமல் நாவினால் சொல்லி அனுப்பிவிட்டால் அவனுடைய தேவை சந்திக்கப்படுமா? அல்லது உனக்காக நான் ஜெபிக்கிறேன் என்று சொல்லி அனுப்பினால் போதுமா? நாம் நம்முடைய கிரியை மூலம் அன்பை வெளிப்படுத்த வேண்டியவர்களாயிருக்கிறோம். திருமண நிகழ்ச்சிகளில் வாழ்க்கை துணையை ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆண்கள் அன்பிற்கு அடையாளமாக மோதிரத்தை அல்லது தாலிச் செயின் போன்றவற்றை அனிவிக்கிறார்கள்.

அதைப்போல நாம் மற்றவர்கள் மீது காட்டுகிற அன்பிற்கு அடையாளமாக கிரியைகள் மூலம் காண்பிக்கவேண்டும். கிரியை என்று பார்க்கும்போது அது நலமானதாக இருக்கவேண்டும். யோவான் இரண்டு நபர்களை நமக்கு அடையாளப்படுத்துகிறார். ஒருவன் காயின் மற்றொருவன் ஆபேல். இவர்களைப் பற்றி சொல்லும்போது; "பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப்போலிருக்க வேண்டாம்; அவன் எதினிமித்தம் அவனைக் கொலைசெய்தான்? தன் கிரியைகள் பொல்லாதவைகளும், தன் சகோதரனுடைய கிரியைகள் நீதியுள்ளவைகளுமாயிருந்ததினிமித்தந்தானே" என்கிறார் (1யோவா.3:12). தேவனுடைய அன்பு நம்மில் இருக்குமானால் இவ்விதமாக இருக்கமாட்டோம். காயின் பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை

செய்தான். யூதாசுக்குள் பிசாசு புகுந்தபடியால் அவன் இயேசுவைக் காட்டிக்கொடுத்தான். ஆகையால் தான் பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள் என வேதம் எச்சரிக்கிறது. சிறிதளவு இடம் கொடுத்தாலும் அதன் வழியாக பிசாசு வந்து குடிகொண்டு ஆதிக்கம் செய்யத் துவங்கிவிடுவான். அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். தேவனுடைய வசனம் உங்களில் தங்க முதலாவது இடம்கொடுங்கள். அப்பொழுது அன்பு உங்களில் குடிகொள்ளும். நீங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர் களாயிருப்பீர்கள்.

தேவ வசனத்தை நீங்கள் விசுவாசிக்கும்போது அது உங்களுக்குள் பெலன் செய்யும். அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேய சபையாருக்கு எழுதும்போது இதை தெரியப்படுத்துகிறார். "நீங்கள் தேவ வசனத்தை எங்களாலே கேள்விப்பட்டு ஏற்றுக்கொண்டபோது, அதை மனுஷர் வசனமாக ஏற்றுக்கொள்ளாமல், தேவவசனமாகவே ஏற்றுக்கொண்டதினால் நாங்கள் இடைவிடாமல் தேவனுக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறோம்; அது மெய்யாகவே தேவவசனந்தான், விசுவாசிக்கிற உங்களுக்குள்ளே அது பெலனும் செய்கிறது" (1தெச.2:13).

நாம் கர்த்தருடைய வசனத்தை விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது அது நமக்குள்ளே பெலன் செய்கிறது. ரயில் நிலையத்தில் வண்டி வரும் நேரத்தை அறிவிக்கிறார்கள். அதைக் கேட்டவர்கள் ஆயத்தமாக இருந்து ரயிலில் பயணம் மேற்கொள்கிறார்கள். அதை அறியாது ஒருவர் தூங்கிவிடுவாரேயானால் ரயில் வந்தது சென்றது தெரியாது. பின்பு விழித்துப்பார்த்து யாரிடமாவது கேட்டால் வண்டி சென்று ஒரு மணிநேரம் ஆகிவிட்டது அல்லது இரண்டு மணிநேரம் ஆகிவிட்டது என்பார்கள். பின்பு அவர் தன்னுடைய பயணத்தை தொடரமுடியாமல் வருத்தத்துடன் வீடு திரும்ப வேண்டியிருக்கும்.

கர்த்தருடைய வசனம் பிரசங்கிக்கப்படும்போது ஒருவர் தூங்குவாரேயானால் அவருடைய நிலைமையும் இப்படித்தானிருக்கும். அதை கவனமாக ஏற்றுக்கொண்டு தன் இருதயத்தில் வைக்கிறவர்கள் நூறத்தனையான ஆசீர்வாதங்களைப் பெறுவார்கள். எரேமியா தீர்க்கன் சொல்லும்போது; "உம்முடைய வார்த்தைகள் கிடைத்தவுடனே அவைகளை உட்கொண்டேன்; உம்முடைய வார்த்தைகள் எனக்குச் சந்தோஷமும் என் இருதயத்துக்கு மகிழ்ச்சியுமாயிருந்தது; சேனைகளின் தேவனாகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் எனக்குத் தரிக்கப்பட்டிருக்கிறது" (எரே.15:16).

இந்த எரேமியாவைப்போல வசனம் கிடைத்தவுடனே அதை ஏற்றுக்கொள்ளும்போது வாழ்க்கையில் சந்தோஷத்தையும் சமாதானத்தையும்



நாம் அனுபவிக்க முடியும். சிலர் காலம் தாழ்த்துவார்கள். நேரம் பார்ப்பார்கள். அல்லது பலரிடத்தில் ஆலோசனை கேட்டு கீழ்ப்படிவார்கள். இவர்களுடைய கீழ்ப்படிதலை தேவன் விரும்புவது இல்லை. கர்த்தருடைய வார்த்தைக்கு காலதாமதம் செய்யக்கூடாது. உடனே அவைகளை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதுவே குழந்தைகளைப்போல ஏற்றுக்கொள்ளும் தன்மையாகும். குழந்தைகள் பாலின் மேல் வாஞ்சையாயிருப்பதைப்போல நாம் கலங்கமில்லா வசனமாகிய திருவசனத்தின்மேல் வாஞ்சையாயிருக்க வேண்டும்.

தேவனுடைய வசனம் எப்பொழுது நமக்குப் பலன் கொடுக்கிறதென்றால்; "நீங்கள் அதைக்கேட்டு, தேவகிருபையைச் சத்தியத்தின்படி அறிந்துகொண்ட நாள்முதல், அது உங்களுக்குள்ளும் பலன் தருகிறதாயிருக்கிறது" என்று கொலோசெய கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதுகிறார் (கொலோ.1:6). வசனத்தைப் படிக்கிறோம், கேட்கிறோம், இதையெல்லோருமே செய்கிறார்கள். நாம் என்று அதைக்கேட்டு தேவனுடைய இரக்கத்தை சத்தியத்தின்படி அறிந்து கொள்கின்றோமோ அந்த நாள் முதல் அது நமக்குள்ளே பலன் தருகிறது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரும்வரை அவன் பாவியாகவே இருக்கிறான். அவன் வேண்டினாலும், ஜெபித்தாலும், பழைய பாவியாகவே இருக்கிறான். அப்பா, பிதாவே என்று தேவனை நோக்கி கூப்பிட அவன் தகுதியற்றவனாகவே இருக்கிறான்.

அவன் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்து பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளும்போது அவனுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு தேவனுடைய பிள்ளையாக மாற்றப்படுகிறான். தேவனுக்கும் அவனுக்கும் நடுவாக இருந்த சுவர் தகர்க்கப்பட்டு தேவனோடு ஒப்புரவாக்கப்படுகிறான். கிறிஸ்துவின் மூலமாக சுவிகார புத்திர பாக்கியத்தை அடைகிறான். அந்த நாள் முதல் அவன் தேவனுடைய பிள்ளையாயிருப்பதினால் அவனுடைய வேண்டுதல் கேட்கப்பட்டு தேவனுடைய சகல ஆசீர்வாதத்திற்கும் தகுதியுள்ளவனாகிறான்.

சகேயு வீட்டிற்கு எப்போது இரட்சிப்பு வந்தது. அவன் காட்டத்தி மரத்தில் உட்கார்ந்திருக்கும்போது அல்ல அவன் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருடைய உபதேச சட்டத்திற்கு கீழ்ப்படியும்போது வந்தது. இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே தேவ வசனத்தை சத்தியத்தின்படி ஏற்றுக்கொண்டு அதற்கு கீழ்ப்படிவாயானால் அது உனக்குள்ளும் பலன் கொடுக்கும். உம்மோடு கர்த்தர் வாசமாயிருப்பார். நீங்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களாயிருப்பீர்கள்.

இச்செய்தியில் நாம் தியானித்தபடி தேவ வசனம் ஜீவனுள்ளதாகவும் எந்தப்பட்டயத்திலும் கருக்கானதாயும் இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளும்போது நம்முடைய இருதயத்தில் அது குடிகொள்ளும் அப்பொழுது மெய்யான அன்பு உடையவர்களாவோம். மேலும் சத்தியத்தின்படி தேவ வசனங்களை ஏற்றுக்கொள்ளும்போது அது நமக்குள்ளே பலன் கொடுக்கிறதாயிருக்கிறது. அது உங்களுக்குள்ளும் பலன் கொடுக்க தேவனுடைய வசனத்திற்கு இடம்கொடுத்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**கேள்வி**

**நாம் திருவசனத்தைக் கேட்டால் மட்டும் போதுமா?**

இன்றைக்கு அநேகர் வசனத்தை கேட்டாலே ஆசீர்வாதம் வந்துவிடும் என்று நினைத்து கிரியையில்லா கிறிஸ்தவர்களாக இருக்கிறார்கள். யாக்கோபு சொல்கிறார்; "நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என்கிறார் (யாக்.1:22). கிரியையுள்ள கிறிஸ்தவர்கள் நிறைந்து காணப்பட்டால் உலகமே கிறிஸ்தவர்களாக காணப்படுவார்கள். 2000 வருடங்களுக்கு மேலாகியும் தேவனுடைய வசனம் இன்னும் உலகத்தின் பல இடங்களுக்கு செல்லாமலே இருக்கிறது. வசனத்தை கேட்கிறார்கள் ஆனால் அதன்படி தன்னை மாற்றியமைத்துக்கொள்வதில்லை. இது மிகுந்த வேதனையைத் தருகிறது.

மாணவன் ஆசிரியர் சொல்லிக்கொடுக்கும் பாடத்தை படிக்காமலே இருந்தால் அந்த ஆசிரியருக்கு எவ்வளவு வேதனை உண்டாகும். அதைப்போல எவ்வளவுதான் பிரயாசப்பட்டு போதித்தாலும் அதைக்கேட்டதோடு நின்று விட்டால் யாருக்கு என்ன பயன்? கிரியையுள்ள கிறிஸ்தவர்களாக மாறவேண்டும். ஆகையால் யாக்கோபு சொல்லும்போது உங்களை நீங்களே வஞ்சியாதபடிக்கு திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் அல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள் என்கிறார். கர்த்தருடைய போதனையின்படி நடந்த முற்பிதாக்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள். அதற்கு எதிர்த்து நின்றவர்கள் வனாந்தரத்தில் அழிக்கப்பட்டார்கள். நீங்களும் உங்களுடைய குடும்பமும் காக்கப்பட கர்த்தருடைய வசனத்திற்கு செவிகொடுங்கள்.

நோவாவும் அவனுடைய குடும்பமும் அழிவிலிருந்து காக்கப்பட கர்த்தருடைய வார்த்தையின்படியே ஒரு பேழையை உண்டுபண்ணி தேவனுக்குக் கீழ்ப்படிந்தபடியால் அவனும் அவனுடைய குடும்பமும் அழிவிலிருந்து காக்கப்பட்டது. அதைப்போல கிறிஸ்து உண்டுபண்ணி வைத்திருக்கிற அவருடைய சபையை அடையாளம் கண்டு அதில் உங்களை இணைத்துக்கொள்ளப் பிரயாசப்படுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# 4. பயப்படாதே, நான் உன்னோடே இருக்கிறேன்

## Fear Not For I Am With You (Is.43:5)

இந்த வார்த்தை நம்மை தேற்றுகிறது அல்லவா! ஆம், தேவனாகிய கர்த்தர் நம்மோடிருக்கிறார். நமக்கு இந்த உலகத்தில் சில பாடுகள் பிரச்சனைகள் வந்தவுடன் பயந்துபோகின்றோம். ஐயோ, நம்மை எல்லோரும் கைவிட்டு விட்டார்களே என்று சொல்லி கலங்குகிறோம். அன்பானவர்களே, நம்மை நேசிக்கும் கர்த்தர் நான் உன்னோடே இருக்கிறேன் என்று சொல்லுகிறார். இஸ்ரவேலரைப் பார்த்துச்சொல்லும்போது, "யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே, உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது; பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது" என்கிறார் (ஏசா.43:1,2).

கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொண்டிருப்பவர்களுக்கு அவர் என்றும் உதவ வல்லவராயிருக்கிறார். அப்போஸ்தலர்கள் காலத்தில் பல பாடுகள் பிரச்சனைகள் வந்தது. அவர்கள் கர்த்தரையே தன் நம்பிக்கையாக கொண்டிருந்தபடியால் எல்லா உபத்திரவங்களிலும் அவர்களை விடுவித்தார். பவுல் தனக்கு வந்த சில பாடுகளைக் குறித்து கொரிந்து சபையாருக்கு எழுதிய புஸ்தகத்தில் படிக்கிறோம். "ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று.

நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்ததோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார். இப்பொழுதும் தப்புவிக்கிறார். இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" என்று எழுதுகிறார் (2கொரி.1:8-10). பவுலுடைய சுவிசேஷபயணத்தின்போது பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் உண்டானது. பவுலுடைய மூன்று சுவிசேஷபயணத்தின்போது அவர் அதிகமாக கப்பல் பயணம் செய்தார்.

தண்ணீரைக் கடந்து சென்று சுவிசேஷம் சொல்லவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் கர்த்தர் அவர்களை கைவிடவில்லை. அவர்களை தப்புவித்தார் இன்னும் தப்புவிப்பார் என நம்பிகையோடிருக்கிறோம் என்பதாக எழுதுகிறார். மனிதனுக்கு ஏற்படக்கூடிய சில பாடுகளை எண்ணி நாம் கலங்கிவிடாதிருக்க வேண்டும். "நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுது கொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?" (உபா.4:7). நாம் வேண்டிக் கொள்ளுகிறதற்கும் நினைப்பதற்கும் அதிகமாக நன்மை செய்கிற தேவன் நம்முடைய தேவன். அவரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம் அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறார்.

ஆண்டவர் இயேசு, இதோ வாசல் படியிலே நின்று கதவை தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு கதவைத் திறந்தால் அவனோடு போஜனம் பண்ணுவேன் என்கிறார். இவ்வளவு சமீபமாக பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி உலகத்தில் இல்லை. அன்பானவர்களே கலங்காதிருங்கள் கர்த்தர் உங்களை எல்லா இக்கட்டுக்கும் விலக்கி இரட்சிப்பார். ஒரு முறை தம்முடைய சீஷர்களைப் பார்த்து ஆண்டவர் இயேசு அக்கறைக்குப்போங்கள் என்றார். அவர்கள் படவில் ஏறி அக்கறைக்குப்போனார்கள். அப்பொழுது படவு நடுக்கடலிலே சேர்ந்து எதிர்க்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது. இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார்.

"பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான். அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி இயேசுவினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிந்துபோகையில் ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து அற்பவிசுவாசியே ஏன் சந்தேகப்பட்டாய் என்றார்" (மத்.14:28-31). இயேசுவைப்போல கடலின்மேல் நடக்க பேதுருவுக்கு ஆசை. அவனுடைய ஆசையை நிறைவேற்ற கர்த்தர் நடந்து வா என்றார். அவனோ இயேசுவைப்போல கடலில் நடந்தான். ஆனால் நடந்தது என்ன? காற்று பலமாய் இருக்கிறதைக் கண்டு பயந்து கடலில் அமிந்துபோகையில் ஆண்டவரே என்னை ரட்சியும் என்றான். கர்த்தர் அழைத்தார் அவனோடே இருக்கிறார். இருந்தபோதும் அவனுக்குள் பய உணர்வு இருக்கத்தான் செய்தது.

ஆம், அன்பானவர்களே அதைப்போல பய உணர்வு நமக்குள்ளும் இருக்கிறது. சில வேளைகளில் நாமும் அவிசுவாசத்தினால் வாழ்க்கையில்



வரக்கூடிய சில பிரச்சனைகளில் அமிந்துபோகையில் பேதுருவைப்போல கர்த்தரை நோக்கி கூப்பிடுகிறோம். பேதுருவை கையை நீட்டி ரட்சித்த கர்த்தர் நம்மையும் இரட்சிப்பார். அவர் தண்ணீரைக் கடக்கும்போதும் நம்மோடிருந்து நம்மை இரட்சிக்கும் கர்த்தர்.

இரண்டாவது ஏசாயா புத்தகத்திலே நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புறளுவதில்லை என்கிறார். ஆம், பவுலுடைய வாழ்க்கையில் சுவிசேஷப்பயணத்தின்போது எவ்வளவோ பாடுகள். அவர் சொல்லும்போது; "அநேகந்தரம் பிரயாணம் பண்ணினேன்; ஆறுகளால் வந்த மோசங்களிலும் கள்ளரால் வந்த மோசங்களிலும், என் சுயஜனங்களால் வந்த மோசங்களிலும், பட்டணங்களில் உண்டான மோசங்களிலும், வனாந்தரத்தில் உண்டான மோசங்களிலும், சமுத்திரத்தில் உண்டான மோசங்களிலும், கள்ளச்சகோதரரிடத்தில் உண்டான மோசங்களிலும். பிரயாசத்திலும், வருத்தத்திலும், அநேகமுறை கண்விழிப்புகளிலும், பசியிலும் தாகத்திலும், அநேகமுறை உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தேன்" என்கிறார் (2கொரி.11:26,27).

இவையெல்லாவற்றிலும் அவரோடிருந்த கர்த்தர் அவரை எல்லா இக்கட்டுக்கும் விலக்கி காத்தார். ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் பவுலின்மேல் புரளவில்லை. எல்லா இடங்களிலும் சுவிசேஷத்தை பிரசங்கித்தார். பவுலின் நிமித்தமாக அநேகர் காப்பாற்றப்பட்டார்கள். எலியாவுக்கு பின்பு வந்த எலிசாவின் ஊழியத்தில் அவன் யோர்தானைக் கடக்கும்போது; "அவன் எலியாவின்மேலிருந்து கீழே விழுந்த சால்வையை எடுத்துத் திரும்பிப்போய், யோர்தானின் கரையிலே நின்று, எலியாவின் மேலிருந்து கீழே விழுந்த சால்வையைப் பிடித்து; எலியாவின் தேவனாகிய கர்த்தர் எங்கே என்று சொல்லித் தண்ணீரை அடித்தான்; தண்ணீரை அடித்தவுடனே அது இருபக்கமாய்ப் பிரிந்ததினால் எலிசா இக்கரைப்பட்டான்" (2இரா.2:13,14). எலியாவின் தேவன் எலிசாவோடு அந்த நேரத்தில் தானே அங்கே இருந்தார். அதினாலே அவன் யோர்தானை கடந்து சென்றான்.

மேலும் நாம் வாசிக்கிறோம். மோசேக்கு பின்பாக இஸ்ரவேலரை யோசுவா என்ற தேவ மனிதன் வழிநடத்தினான். யோர்தானின் நதியை இஸ்ரவேலர் கடக்கவேண்டும் அப்பொழுது அறுப்புக்காலம், ஆகையால் தண்ணீர் கரைபுரண்டு ஓடும். ஆனால் யோசுவாவோ ஜனங்களை நோக்கி: கர்த்தரின் உடன்படிக்கை பெட்டியை சுமக்கிற ஆசரியர்களின் உள்ளங்கால்கள் யோர்தானின் தண்ணீரிலே பட்டமாத்திரத்தில், மேலேயிருந்து ஒடிவருகிற யோர்தானின் தண்ணீர் ஓடாமல் ஒரு குவியலாக நிற்கும் என்றான்.

அந்தப்படியாக, "மேலேயிருந்து ஓடிவருகிற தண்ணீர் நின்று சார்தானக்கடுத்த ஆதாம் ஊர்வரைக்கும் ஒரு குவியலாகக் குவிந்தது உப்புக்கடல் என்னும் சமனான வெளியின் கடலுக்கு ஓடிவருகிற தண்ணீர் பிரிந்து ஓடிற்று; அப்பொழுது ஜனங்கள் எரிகோவுக்கு எதிரே கடந்துபோனார்கள். சகல ஜனங்களும் யோர்தானைக் கடந்து தீருமளவும் கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியைச் சுமக்கிற ஆசாரியர்கள் யோர்தானின் நடுவிலே தண்ணீரில்லாத தரையிலே காலூன்றி நிற்கும்போது, இஸ்ரவேலரெல்லாரும் தண்ணீரற்ற உலர்ந்த தரைவழியாய்க் கடந்துபோனார்கள்" (யோசு.3:16,17). லட்சக்கணக்கான இஸ்ரவேர் உலர்ந்த தரைவழியாக யோர்தானைக் கடந்தார்கள். எத்தனை சிறு பிள்ளைகள் இருந்திருப்பார்கள். வயதான முதியவர்கள் இருந்திருப்பார்கள். ஆடு, மாடு, வண்டிகள் எத்தனை இருந்திருக்கும் என்பதை நாம் நினைத்துப்பார்க்கும்போது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. இவ்வளவு ஜனங்களும் யோர்தான் ஆற்றைக் கடக்கும் மட்டும் கர்த்தர் அவர்களோடே இருந்தார். ஏனெனில் அவர் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை. ஆம் ,அன்பானவர்களே, ஆறுகளைப்போல உங்களுடைய வாழக்கையில் போராட்டங்கள் வந்தாலும் அவைகளிலிருந்து உங்களை கர்த்தர் காப்பார்.

மூன்றாவதாக நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய் என்கிறார். இயேசுவின் நாட்களில் ஒரு மனுஷன் இயேசுவினிடத்தில் வந்து; "ஆண்டவரே, என் மகனுக்கு இரங்கும், அவன் சந்திரரோகியாய்க் கொடிய வேதனைப்படுகிறான்; அடிக்கடி தீயிலும், அடிக்கடி ஜலத்திலும் விழுகிறான்" என்றான் (மத்.17:15). காயம்பட்டால் காயத்தை மருந்து போட்டு சரிசெய்து விடலாம். ஆனால் இந்த விதமாக ஒருவன் அடிக்கடி தீயிலும் அடிக்கடி ஜலத்திலும் விழுந்தால் எப்படி அவனைக் காப்பாற்ற முடியும். இயேசு அவனை சுகமாக்கினார். நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய் என்று சொன்ன கர்த்தர் அவனை அடிக்கடி தீயிலும் ஜலத்திலும் விழாதபடி காத்தார். ஆனால் ஆண்டவருடைய சீஷர்களால் இது கூடாமற்போனது என காண்கிறோம்.

மனிதனால் கூடாதவைகள் தேவனால் மாத்திரமே கூடும் என்பதை இதன்மூலம் அறிகிறோம். மோசே ஜனங்களை நோக்கி: "அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிற தேவனுடைய சத்தத்தை நீ கேட்டதுபோல, யாதொரு ஜனமாவது கேட்டதும் உயிரோடிருந்ததும் உண்டோ" என்றார் (உபா.4:33). ஆம் அன்பானவர்களே, நம்முடைய தேவன் அக்கினியின் நடுவிலிருந்து பேசுகிறதேவன். ஒருவரும் சேரக்கூடாத ஒளியிலே அவர் வாசம் பண்ணுகிறவர். அக்கினியின் நடுவிலே தூக்கிப்போடப்பட்ட மூவரை



அறியாதவர்களே இருக்கமுடியாது. ராஜா நிறுத்தின சிலையை வணங்காதபடியால் சாத்ராக், மேசாக், ஆபேத்நேகோ ஆகிய மூன்று தேவ மனிதர்களையும் அக்கினி ஜுவாலையில் தூக்கிப்போட்டார்கள். நடந்தது என்ன? அவர்களை கர்த்தர் காத்தார். அந்த ராஜாவோ ஆச்சரியப்பட்டுப் போனான். "இதோ, நாலுபேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதைக் காண்கிறேன்; அவர்களுக்கு ஒரு சேதமுமில்லை; நாலாம் ஆளின் சாயல் தேவபுத்திரனுக்கு ஒப்பாயிருக்கிறது என்றான்" (தானி.3:25). அவர்கள் ஆராதித்த தேவன் அவர்களை அந்த அக்கினிக்கு விடுவித்து இரட்சித்தார். நீ அக்கினியில் நடக்கும்போதும் வேகாதிருப்பாய் என்று சொன்ன கர்த்தர் அவர்கள் வெந்துபோகாதபடி காத்தர். அவர்கள் மேல் அக்கினியின் மனம்கூட வீசவில்லை. ஆனால் அவர்களை தூக்கிக்கொண்டு சொன்ற மனிதரை அக்கினி அழித்துப்போட்டது. இச்செய்தியை கேட்கிற அன்பு வாசகரே நீ பயப்படாதே உன் தேவனாகிய கர்த்தர் நீ தண்ணீரைக் கடக்கும்போதும், ஆறுகளைக்கடக்கும்போதும், அக்கினி உன்மேல் பற்றாமல் பாதுகாப்பார். அவரில் நம்பிக்கையாயிரு.

**கேள்வி**

**தேவன் நம்மை பெயர் சொல்லி அழைக்கின்றாரா?**

யாக்கோபை பெயர் சொல்லி அழைத்தார் என இச்செய்தியில் படித்தோம். நம்மெல்லோரையும் புதிய நாமத்தினால் அழைக்கிறார். அது எத்தனை ஆசீர்வாதமான காரியமாக இருக்கிறது. புது உடன்படிக்கையின் படி வாழ்கின்ற நாம் புதிய நாமத்தினால் அழைக்கப்படுகிறோம். யாக்கோபை இஸ்ரவேல் என்று அழைத்தார். நாம் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறோம். முதல் முதல் அந்தியோகியாவிலே கூடிவந்த ஆண்டவருடைய சீஷர்களுக்கு இவ்விதமாக பெயர் வழங்கப்பட்டது. "அவர்கள் ஒரு வருஷகாலமாய்ச் சபையோடே கூடியிருந்து, அநேக ஜனங்களுக்கு உபதேசம் பண்ணினார்கள். முதல் முதல் அந்தியோகியாவிலே சீஷர்களுக்குக் கிறிஸ்தவர்கள் என்கிற பேர் வழங்கிற்று" (அப்.11:26).

கிறிஸ்துவினுடைய சீஷர்களுக்குத் தான் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் சம்பந்தமில்லை. அநேகர் கிறிஸ்துவின் நாமம் தூஷிக்கப்படும்படியாக நடக்கிறார்கள். அவர்களுக்கும் கிறிஸ்துவுக்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. சில பிரசங்கியார்கள் சிலரை பெயர் சொல்லி அழைக்கின்றனர். தங்களுக்கு அவர்களுடைய பெயரை கர்த்தர் முன்னுரைத்ததாக சொல்லுகிறார்கள். ஆண்டவர் ஒருவருக்கே மற்றவர்களை பெயர் சொல்லி அழைக்க அதிகாரம்

உள்ளது. அவர் சொல்லி அழைத்த பெயரை ஒருவனாலும் மாற்றமுடியாது. அல்லது திருத்தவும் முடியாது. இன்றைக்கு நாமெல்லாரும் ஒரே நாமத்தினாலே தாகம் தீர்க்கப்படுகிறோம். ஆகையால் அந்த கிறிஸ்துவின் நாமத்தினாலே சபையாக கூடுகிறோம். கிறிஸ்தவர்கள் என்றும் அழைக்கப்படுகிறோம். நீங்கள் எவ்விதமாக அழைக்கப்பட விரும்புகிறீர்கள்? வேதாகமம் நம்மை அழைக்கும்படி நீங்கள் அழைக்கப்பட வீரும்புகிறீர்களா? அல்லது உலக மக்கள் அதற்கு முன்னும் அதற்கு பின்னும் சில வார்த்தைகளைப்போட்டு நாங்கள் இன்னதிலிருந்து வந்தவர்கள் நாங்கள் இன்ன ஜாதியிலிருந்து வந்தவர்கள் என்று சொல்லி அந்த அடைமொழி வார்த்தைகளைப் போடும்படியாக விரும்புகிறீர்களா? அன்பு நண்பரே, தேவன் நம்மை அழைத்தபடியாக அழைக்கப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 5. கர்த்தருக்குப் பயப்படும் பயம்

## The Fear of The Lord

கர்த்தருக்குப் பயப்படும் பயம் ஜனங்கள் மத்தியில் குறைவாகவே காணப்படுகிறது. வருவது வரட்டும் கர்த்தர் கவனியார், கர்த்தர் பாரார் என்று துணிந்து அநேகர் பலவிதமான பாவங்களில் இறங்குகின்றனர். அன்பானவர்களே, காதை உண்டாக்கினவர் கவனியாரோ, கண்ணை உண்டாக்கினவர் பாராரோ! இவைகளையெல்லாம் உண்டாக்கினவர் நாம் என்னசெய்கின்றோம் எப்படி ஜீவிக்கின்றோம் என்பதை அநுதினமும் கண்ணோக்கிப்பார்க்கிறார். சாலொமோன் ராஜா தமது நீதிமொழிகள் புத்தகத்தில் எது கர்த்தருக்குப் பயப்படும் பயம் என்பதை நமக்கு தெளிவாகச் சொல்கிறார்; "தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்; பெருமையையும், அகந்தையையும், தீய வழியையும், புரட்டுவாயையும் நான் வெறுக்கிறேன்" என்கிறார் (நீதி.8:13).

தீமைசெய்வதற்கு அநேகர் தீவிரிக்கிறனர். யாரையாவது விழப்பண்ணாமலிருந்தால் அவர்களுக்கு தூக்கம் வராது, அதைப்போல பெருமையோடும், கர்வத்தோடும், முன்னுக்குப் பின் முரண்பாடாக பேசுகிறவர்களையும் நாம் அறிகிறோம். இப்படிப்பட்ட காரியங்களை கர்த்தர் வெறுக்கிறார். இப்படிப்பட்டவர்கள் கர்த்தருக்குப் பயப்படாமல். தங்கள் கால்போனபோக்கிலே செல்லக்கூடியவர்கள். தங்களுக்கு தாங்களே போதகர்களாயிருப்பவர்கள். இஸ்ரவலில் அநேகர் இவ்விதமாக இருந்தார்கள்.

ஆகையால் கர்த்தர் அவர்களைக் குறித்துச் சொல்லும்போது; "என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய



என்னை விட்டுவிட்டார்கள்: தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்" (எரே.2:13). இன்றைக்கும் இவ்விதமாக தங்களுக்குக் தாங்களே தீமைகளை வருவித்துக்கொள்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய வேதத்திற்கும் செவிகொடாமல் தங்களுக்கு ஏற்றபோதகர்களை அல்லது தங்களுக்கு தாங்களே போதகர்களாக மாறிக்கொண்டு வீணானவைகளைப் பின்பற்றி வீணராய்போய் விடுகிறார்கள். தன்னுடைய ஞானத்தினாலே சம்பாதிக்கிறவன் அந்தப் பணத்தை சம்பாதித்து பொத்தளான பையிலே போடுகிறான். பின்பு தன் பணத்தை அவன் பார்க்கும்போது அதுபோகும் வழி அறியாமற்போகிறான். இதற்கு தேவனுடைய ஞானம் வேண்டுமல்லவா!

இஸ்ரவேலர் தேவனை விட்டுவிடா திருப்பார்களேயானால் அவர்களுக்கு கர்த்தர் போதுமானவராயிருந்திருப்பார். ஆனால் அவர்கள் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய அவரை விட்டுவிட்டார்கள். தண்ணீர் நிற்காத தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள். இதனால் அவர்கள் திருப்தியுடன் வாழமுடியுமா? இப்படி அநேகர் தங்களை கெடுத்துக் கொள்கிறார்கள். என் அன்பு சகோதரனே, சகோதரியே உன் தேவனாகிய கர்த்தரை விட்டுவிடாதே. அவர் உனக்கு ஜீவத்தண்ணீரைக் கொடுப்பார். அவர்கொடுக்கும் தண்ணீரை நீ பெற்றுக்கொண்டால், நீ ஜீவகாலமெல்லாம் ஜீவனுள்ளவர்களாய், இவ்வுலகத்தில் வாழலாம்.

நீதிமொழிகள் 8-ம் அதிகாரம் 13-ம் வசனத்தில் கர்த்தர் வெறுக்கும் நான்கு காரியங்களை படித்தோம். அதில் ஒன்று பெருமை - Pride. மனிதன் ஒவ்வொருநாளும் ஏதாவது ஒரு வகையில் பெருமையோடு வாழவே விரும்புகிறான். தாழ்மையை அநேகர் விரும்புவதில்லை. மற்றவர்கள் நம்மை மதிக்கவேண்டும், நமக்குக் கீழாக அநேகர் வேலைசெய்யவேண்டும் என்றே நினைக்கின்றனர். இப்படி அநேகர் நினைக்கிறபடியால், ஆண்டவர் இயேசு, இவ்வுலகத்திற்கு வந்தபோது அடிமையின் கோலம் பூண்டார். தன்னைத் தானே தாழ்த்தினார். சிலுவையின் மரணபரியந்தமும் தன்னை தாழ்த்தினார். அவர் எவ்வளவு உயர்வானவர். அவர் சொல்ல ஆகும். அவர் கட்டளையிட நிற்கும்.

இப்பேர்பட்ட வல்லமைக்கு பாத்திரரான இயேசு இவ்வுலகத்தில் தன்னை முழுவதுமாக தாழ்த்தி தேவசித்தம் செய்ய தன்னை முழுவதுமாக அற்பணித்தார். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பான வாசகரே, உன்னிடத்தில் பெருமை காணப்படுகிறதா? உன்னிடத்தில் பெருமை இருந்தால் உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார் என்பதை நீ முதலாவது அறியவேண்டும். தேவனுக்கு பிடிக்காத ஒரு காரியம் உன்னில் காணப்படாதபடி

உன்னைப் பார்த்துக்கொள். வேதம் சொல்கிறது; "நாளையத்தினத்தைக் குறித்துப் பெருமைபாராட்டாதே; ஒருநாள் பிறப்பதை அறியாயே" (நீதி.27:1). இது எத்தனை உண்மையான காரியம். ஒருநாள் பிறப்பதை நாம் அறியோம். நாளைக்கு நடப்பது யாருக்கும் தெரியாது. அப்படி தெரியுமானால் அவர்கள் சொல்லியிருப்பார்கள் நாளைய தினம் நான் சரியாக 2.00மணிக்கு மரித்துவிடுவேன். ஆகையால் நம் உறவினருக்கு தகவல் கொடுத்துவிடுங்கள் என்று யாராவது தன்னுடைய மரண நாளை சரியாய் சொன்னது உண்டா? அல்லது நாளைக்கு இன்ன இடத்தில், இன்னதை வாங்குவோம் என்று சொல்லி அந்தப்படியாக அவர்கள் சென்றடைந்து அதை வாங்கியது உண்டா? விடிந்தால்தான் நிச்சயம் என்று முதியவர்கள் சொல்லக்கேள்விப்படுகிறோம். ஆம், ஒரு நாள் பிறப்பதை நாம் அறியோம்.

நம்முடைய ஜீவன் புல்லின் பூவைப்போல ஒழிந்துபோகிறது. ஆகையால் உங்களில் பெருமை எழும்பாமல் பார்த்துக்கொள்ளுங்கள். "...தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொலியிருக்கிறது" என யாக்கோபு நமக்கு நினைப்பூட்டுகிறார் (யாக்.4:6). தேவன் பெருமையை வெறுப்பது மாத்திரமல்ல, அப்படிப்பட்டவைகளுக்கு அவர் எதிர்த்தும் நிற்கிறார். நமக்குள்ளே பெருமை இருக்குமானால். நாம் இங்கே நினைக்கவேண்டும். என் தேவன் அதை வெறுக்கிறார், அதற்கு எதிர்த்து நிற்கிறார். ஆகையால் என் வாழ்வில் பெருமைக்கு இடம் கொடுக்க மாட்டேன் என்ற தீர்மானத்தோடு செயல்படுங்கள்.

இரண்டாவது அகந்தை - Arrogance. அகந்தை இருக்கும்போது சண்டை சச்சரவுகள் அதிகரிக்கும். "அகந்தையினால் மாத்திரம் வாது பிறக்கும்; ஆலோசனையைக் கேட்கிறவர்களிடத்திலோ ஞானம் உண்டு" என்று நீதி.13:10-ல் வாசிக்கிறோம். அநேக குடும்பங்களில் சண்டைகள் எழும்புவதற்கு இதுவே மூலகாரணமாயிருக்கிறது. அகந்தை குடிகொள்ளும்போது அக்குடும்பங்களில் சண்டை எழும்புகிறது. இது அழிவுக்கு ஒரு மனிதனைக் கொண்டு செல்லும். ஏனெனில் "அழிவுக்கு முன்னானது மனமேட்டிமை" என காண்கிறோம் (நீதி.16:18).

ஒரு மனிதன் விழப்போகிறான் என்றால் அவனுடைய வாழ்வில் அகந்தை அதாவது மனமோட்டிமை காணப்படுகிறது என்று அர்த்தம். அவன் சடுதியில் விழுவான். தம்முடைய பிள்ளைகள் தம்மைப்போல இருக்கும்படியாக தேவன் விரும்புகிறார். ஆகையால் இப்படிப்பட்ட காரியங்களை கர்த்தர்



வெறுக்கிறார் என அறிகிறோம். அன்பானவர்களே, இப்படிப்பட்ட காரியங்கள் உங்களுடைய ஜீவியத்தில் காணப்படுமானால் அவைகளை களைந்து போடுங்கள். கர்த்தருக்குப் பிரியமானதை செய்ய நாடுங்கள்.

மூன்றாவது தீயவழி - Evil way. நாம் முன்னமே தியானித்தபடி சிலருக்கு தீங்கு செய்யாமலிருந்தால் தூக்கம் வராது. யாரையாவது கெடுக்கவேண்டும். அதை கண்டு சந்தோஷப்பட வேண்டுமென்று தீங்குசெய்வதற்கு தீவிரிப்பார்கள். சாலொமோனும் இப்படிப்பட்டவர்களைக் குறித்து சொல்லும்போது; "தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால்" என குறிப்பிடுகிறார் (நீதி.6:18). கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்களில் இதுவும் ஒன்று. மேலும், பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "கன்னானாகிய அலெக்சந்தர் எனக்கு வெகு தீமைசெய்தான்; அவனுடைய செய்கைக்குத்தக்கதாகக் கர்த்தர் அவனுக்குப் பதிலளிப்பாராக. நீயும் அவனைக் குறித்து எச்சரிக்கையாயிரு; அவன் நம்முடைய வர்த்தைகளுக்கு மிகவும் எதிர்த்துநின்றவன். நான் முதல்விசை உத்தரவு சொல்ல நிற்கையில் ஒருவனும் என்னோடேகூட இருக்கவில்லை, எல்லாரும் என்னைக்கைவிட்டார்கள்; அந்தக் குற்றம் அவர்கள்மேல் சுமராதிருப்பதாக. கர்த்தரோ எனக்குத் துணையாக நின்று, என்னாலே பிரசங்கம் நிறைவேறுகிறதற்காகவும், புறஜாதியாரெல்லாரும் கேட்கிறதற்காகவும், என்னைப் பலப்படுத்தினார்; சிங்கத்தின் வாயிலிருந்தும் நான் இரட்சிக்கப்பட்டேன். கர்த்தர் எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சித்து, தம்முடைய பரமராஜ்யத்தை அடையும்படி காப்பாற்றுவார்; அவருக்குச் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்" என்று எழுதுகிறார் (2தீமோ.4:14-18).

பவுலுக்கு சுவிசேஷத்தில் அநேக பாடுகள் பிரச்சனைகள் இருந்தது. ஆனால் எல்லா பாடுகளிலும் தீங்கிலுமிருந்து கர்த்தர் பவுலைக் காப்பாற்றினார். கன்னானாகிய அலெக்சாந்தர் அவருக்கு ஊழியத்தில் வெகு தீமை செய்ததை குறித்து சொல்லுகிறார். நம்முடைய ஜீவியத்திலும் உடன் உள்ளவர்கள் மூலமும், கள்ளச்சகோதரர்கள் மூலமும் அநேக தீங்குகள் ஏற்படுத்தப்படுகிறது. பவுலை எல்லாத் தீங்குக்கும் விடுவித்த கர்த்தர் நம்மையும் விடுவிப்பார் என்ற நம்பிக்கையோடு அவைகளை கர்த்தருடைய சமுகத்திற்கு விட்டுவிடவேண்டும். பதிலுக்கு பதில் செய்வது நியாயப்பிரமாணத்தின் போதனை. புதிய உடன்படிக்கையின்படி ஜீவிக்கிற நாம் நீங்கள் பழிவாங்காமல் கோபாக்கினைக்கு இடம்கொடுங்கள். "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு

இடங்கொடுங்கள்" ரோம.12:19-ல் பவுல் ரோமகிறிஸ்தவர்களுக்கு எழுதியதைபோல தீமைசெய்தவர்களை நாம் பழிவாங்காமல் நாம் தேவனுடைய சமுகத்திற்கு விட்டுவிடவேண்டும்.

நான்காவது புரட்டுவாய் - The perverse mouth. முன்னுக்குப் பின் முரண்பாடாக பேசுவது. அதாவது பொய் பேசுவது. பொய் பேசும் வாய்க்குப் போஜனம் கிடைக்காது என முதியவர்கள் சொல்லக்கேள்விப்பட்டிருக்கிறோம். சிலர் பொய்யை தங்களுடைய சரீரத்தில் அணிந்துகொண்டு வாழ்கின்றார்கள். வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையும் பொய்யாய் இருக்கும். இதை அவர்கள் பெரிதாக கருதுவதில்லை. பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எறிகிற கடலிலே பங்கடைவார்கள் என வெளிப்படுத்தின புத்தகத்தில் படிக்கிறோம். தேவன் இப்படிப்பட்டவர்களை அருவெறுக்கிறார். தேவன் வெறுக்கிற ஏழு காரியங்களில் இதுவும் ஒன்று " அபத்தம்பேசும் பொய்ச்சாட்சி, சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டுபண்ணுதல்" (நீதி.6:19). தேவன் நமக்கு உடல் உறுப்புகளில் மூன்று முக்கியமானவைகளை கொடுத்திருக்கிறார். ஒன்று கேட்கிற காதுகள், இரண்டு காண்கிற கண்கள், மூன்று பேசுகிற வாய். இவைகளை நம்முடைய ஜீவிய நாட்களிலெல்லாம் நலமான காரியங்களுக்கு இவைகளை பயன்படுத்தவேண்டும்.

இதை மனிதன் சிந்திக்காதவனாக காண்கிறதெல்லாம் நமக்குத்தான் என்று நினைத்து இச்சிக்கிறான். கேட்கிற எல்லாவற்றையும் கேட்டு கோள்சொல்லுகிறவனாய் மாறிவிடுகிறான். வாயிக்கு வந்ததெல்லாம் பேசி பொய்யனாய் போய்விடுகிறான். அன்பானவர்களே நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள்? நீங்கள் மற்றவர்களோடு உண்மையை பேசி உள்ளளவும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்று அநுபவியுங்கள். இன்றைய நாள் செய்தியிலே கர்த்தர் வெறுக்கிற நான்கு காரியங்களைக்குறித்து பரிசுத்த வேதாகமத்திலிருந்து தியானித்தோம். கர்த்தர் வெறுக்கிற பெருமையையும், அகந்தையையும், தீயவழிகளையும், புரட்டுவாயையும் நம்மை விட்டு அகற்றுவோம். அப்பொழுது சதாகாலமும் ஜீவிக்கிற கர்த்தர் நம்மோடு இருப்பார்.

**கேள்வி**

**பாவிகள் நூறு பொல்லப்பை செய்து நன்றாய் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களே அது எப்படி?**

இன்றைக்கு அநேகர் சத்தியத்திலிருந்து வழிவிலகிப்போவது பெரும்பாலும் இப்படிப்பட்ட துன்மார்க்கர்களைப் பார்த்துத்தான். அவர்கள்



எல்லாம் கணக்கில்லா பாவங்களைச் செய்து நன்றாய் இருக்கிறார்களே என்று சொல்லி தாங்களும் அப்படிப்பட்ட வழியை தெரிந்துகொண்டு பாவத்தில் விழுந்துபோகிறார்கள். ஆனால் வேதம் நமக்குப்போதிப்பது என்ன? "பாவி நூறுதரம் பொல்லாப்பைச் செய்து நீடித்து வாழ்ந்தாலும் என்ன? தேவனுக்கு அஞ்சி, அவருக்கு முன்பாகப் பயந்திருப்பவர்களே நன்றாயிருப்பார்கள் என்று அறிந்திருக்கிறேன்" என்கிறார் பிரசங்கி (பிர.8:12). யோபு என்ற தேவ மனிதனுக்கு வந்த கஷ்டங்கள் இந்தப் பூமியில் ஒருவருக்கும் வந்திருக்க வாய்ப்பில்லை என்று எண்ணுகிறேன். அவனுக்கு உண்டான எல்லாம் பரிபோய் விட்டது. ஆனாலும் அவன் தேவனைக் குறித்து குறைசொல்லவில்லை. கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் என்று சொல்லி தன்னுடைய உத்தமத்தில் நிலைத்திருந்தான். அவைகளை விட்டு அவன் பின்வாங்கவில்லை. ஆனபடியால் இறுதியில் அவன் இவ்பூமியிலே இரட்டிப்பான ஆசீர்வாதங்களை தேவனுடைய சமுகத்தில் பெற்றுக் கொண்டான்.

வாழ்க்கையில் நூறு பொல்லப்பை செய்து நீடித்து வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களை நாம் நோக்கிப்பார்க்காமல், யோபுவைப் போன்றவர்களை நோக்கிப்பார்த்து தேவனுக்கு அஞ்சி நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். என்ன பாடுகள் பிரச்சனைகள் வந்தாலும் அவைகளுக்கு நாம் எதிர்த்து நின்று போரிடவேண்டும். தேவன் நமக்கு சர்வாயுதவர்க்கத்தை கொடுத்திருக்கிறார். சகல நேரத்திலும் வேத வசனமாகிய பட்டயத்தை எடுத்துக்கொண்டு வாழ்கிறவர்களாக இருக்கவேண்டும். வாழ்க்கை என்பது அது அற்புதமான தேவனுடைய திட்டம். அந்த திட்டத்தில் நாம் அவருடைய பிள்ளைகள். நாம் என்ன செய்கிறோம்? எப்படி வாழ்கின்றோம் என்பதை அநுதினமும் தேவன் கண்ணோக்கிப்பார்க்கிறார். ஆகையால் தேவனுக்கு அஞ்சி அதாவது தேவனுக்குப் பயப்படும் பயத்தோடு வாழுங்கள். அப்பொழுது தேவனால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 6. கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன்

## One Thing I Ask of The Lord

மனிதர்களை நோக்கி அநேகர் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். அந்த மனிதனுக்கு யார் கொடுத்தது? என்று நினைப்பதில்லை. அவனுக்குக் கொடுத்த கர்த்தர் நமக்கும் கொடுக்கமாட்டாரா? தேவன் பட்சபாதம் உள்ள தேவன் அல்ல. அவர் எல்லோருக்கும் தேவன். தம்மை நோக்கி வேண்டிக்கொள்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். தாவீது அரசனை

நீங்கள் அறிவீர்கள். அவன் சொல்லிய வாக்கியத்தை கேளுங்கள். "கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன்; நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன்" என்றான் (சங்.27:4). ஒவ்வொருவருடைய விருப்பமும் பலவிதமாக இருக்கிறது. ஆனால் தாவீதின் விருப்பம் அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியான விருப்பமாயிருந்தது. அநேக சபைகளில் வேதாகம பாடசலை வைத்து நடத்துகிறார்கள். சிலருக்கு அந்த விதமான வேதாகம பாடசாலையில் கலந்து கொள்ளவிருப்பமில்லை. காரணம் பலவிதமான வேலைகள் இருக்கிறது என்பார்கள். தாவீது வேலையில்லாமல் இருந்தாரா? அவரோ ஒரு அரசன். அவருக்கு ராஜ்யத்தின்வேலைகள் எவ்வளவாய் இருந்திருக்கும்! அத்தனை வேலைகள் இருந்தபோதிலும் அவர் தேவனை தேடவும், அவருடைய நியாயப்பிரமாணபுத்தகங்களை ஆராய்ந்து பார்க்கவும் முக்கியத்துவம் கொடுத்தார். நம்முடைய வாழ்க்கையில் எதற்கு நாம் முக்கியத்துவம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். உலக காரியங்களுக்கா? அல்லது தேவனுடைய காரியங்களுக்கா? உலகம் உலகத்தை சிநேகிக்கிறது.

நீங்கள் தேவனுடைய ஜனங்களாயிருப்பீர்களானால். தேவனுடைய காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து கர்த்தருக்குரிய காரியங்களைக் குறித்து சிந்தித்து செயல்படுங்கள். மேலும், தாவீது நான் என் ஜீவனுள்ளநாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் என்கிறார். அவருடைய நோக்கமெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தைப்பற்றியதாயிருந்தது. இன்றைக்கு சபைக்கு செல்லவே சிலருக்கு கடினமாக இருப்பதாக சொல்கிறார்கள். ஆராதனைக்கு சென்று கர்த்தரை தொழுதுகொள்வதில் அவர்களுக்கு அப்படி என்ன பிரச்சனை இருக்கிறது என்பது தெரியவில்லை. அதை கேட்கும்போது ஆச்சரியமாக இருக்கிறது. நாம் உயிரோடிருப்பதே தேவனுடைய சுத்த கிருபை. அந்த ஜீவனை ஒவ்வொருநாளும் கூட்டி வழங்கிக்கொண்டிருக்கும் அவரை நாம் ஆராதிப்பது எவ்வளவு ஆனந்தமாயிருக்கிறது! கர்த்தரையும் அவருடைய செயல்பாடுகளையும் குறித்து ருசிபாராத சிலரை நாம் நினைக்கும்போது அவர்களுக்காக நாம் ஜெபிக்கவேண்டியவர்களாயிருக்கிறோம்.

ராஜ அரண்மனை வாழ்வை அதிகமாக விரும்பாத தாவீது, கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடினார். அவர் அந்த அளவுக்கு கர்த்தரையும் அவருடைய வேலைகளையும் நேசித்திருக்கிறார். அவருக்கு கர்த்தருடைய ஆலயத்திலே நிம்மதி கிடைத்திருக்கும். அநேக



பக்தியுள்ள தேவமக்கள் தேவசமுகத்தில் இருப்பதையே விரும்புகின்றனர். ஆம் பிரியமானவர்களே, அது மிகவும் உண்மையான வார்த்தை. அங்கே சந்தோஷம் உண்டு, சமாதானமுண்டு, தேவஆசீர்வாதமுண்டு. இதை ருசித்தவர்கள் தேவசமுகத்தை நித்தமும் நாடுவார்கள், தேடுவார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, நீங்கள் எதை நாடி தேடிக்கொண்டிருக்கிறீர்கள். தாவீதைப்போல ஆராய்ந்து, அவருடைய சமுகத்தை நித்தமும் தேடவும் உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். தாவீதை ஆசீர்வதித்த கர்த்தர் உங்களையும் ஆசீர்வதிப்பார்.

தாவீதைப்போல தன்னைவிட்டெடுபடாத நல்ல பங்கை தெரிந்துகொண்ட மரியாளைக்குறித்து லூக்.10:42-ம் வசனத்தில் படிக்கிறோம். "தேவையானது ஒன்றே, மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள்" என்று ஆண்டவர் இயேசு மார்த்தாளை பார்த்துச் சொன்னார். உலகத்திலே எத்தனையோ காரியங்கள் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் ஒவ்வொரு மனுஷிக்கும் பல விதமான ஆசைகள் இருக்கிறது. ஆனால் தன் வீட்டிற்கு வந்த ஆண்டவர் இயேசுவின் பாதத்தை விட்டு எழுந்திருக்க மரியாளுக்கு மனதில்லை. ஆண்டவருடைய வார்த்தைகளை கேட்கும்படியாக உட்கார்ந்துகொண்டு வசனத்தைக் கவனமாக கேட்டுக்கொண்டிருந்தாள்.

ஆனால் மார்த்தாளுக்கோ பற்பலவேலைகளைச் செய்வதில் கவனமுள்ளவளாயிருந்தாள். தன்னுடைய வீட்டிற்கு வந்திருப்பது யார்? அவர் எப்படிப்பட்டவர்? அவருடைய வல்லமை எப்படிப்பட்டது? என்பதை நன்கு அறிந்தவளாயிருந்திருந்தாள் இப்படி வேலைகளில் கவனமாயிருந்திருக்க மாட்டாள். அவள் இயேசுவை மரியாள் அறிந்த அளவு அறியவில்லை என்றே சொல்லவேண்டும். ஆகையால் வேலையில் கவனமாயிருந்தாள். மரியாளோ ஆண்டவரை விட்டெடுபடாத நல்ல பங்கைத் தெரிந்துகொண்டாள். அன்பான சகோதரிகளே, நீங்கள் எவைகளைத் தெரிந்துகொண்டவர்களாக இருக்கிறீர்கள்? மார்த்தாளைப்போலவா? அல்லது மரியாளைப்போலவா? உலகத்தில் இருக்கும்வரை உங்களுக்கு வேலைகள் இருக்கத்தான் செய்யும். ஏனென்றால் ஆதாமுக்கு துணையாக ஏவாளை உண்டாக்கினார்.

சகோதரிகளாகிய நீங்கள் ஏற்ற துணையாக தேவனால் உண்டாக்கப்பட்டபடியால் உங்களுக்கு வேலை அதிகமாகவே இருக்கும். அதில் சந்தேகமில்லை. அந்த வேலைகளை சற்று ஒதுக்கிவைத்துவிட்டு நல்ல பங்கை தெரிந்துகொண்ட மரியாளைப்போல ஆண்டவருடைய வசனங்களுக்கு செவிகொடுக்கவேண்டும். மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல தேவனுடைய

வாயிலிருந்து பிறக்கும் ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என வேதம் போதிக்கிறது. ஆகையால் தேவனுடைய வசனங்களுக்கு முதலிடம் கொடுங்கள். குடும்பத்தில் உள்ள அனைவரும் சபைக்கு செல்வது உங்களுடைய கரத்தில் இருக்கிறது. வீட்டுவேலைகளை பொதுவாக எல்லாக் குடும்பங்களிலும் பெண்களே அதிகமாக கவனிக்கிறார்கள். அந்த வேலைகளை நீங்கள் சீக்கிரத்தில் எழுந்து முடித்தால்தான் எல்லோரும் சபைக்கு குடும்பத்துடன் செல்லமுடியும். பாதிவேலையை முடித்துவிட்டு சபை கூட்டங்களுக்கு சென்றால் பாதி எண்ணம் வீட்டிலும், பாதி எண்ணம் சபையிலும் இருக்கும். புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டை கட்டுகிறாள் என்ற வசனத்திற்கேற்ப நீங்கள் ஞானமாய் காரியங்களைச் செய்யக் கற்றுக்கொள்ளுங்கள். மார்த்தாளைப்போல வீட்டு வேலைகளைக் குறித்து கலங்கி கவலைப்படாதிருங்கள். நல்ல பங்கை தெரிந்துகொள்ளுங்கள்.

நுற்றுக்கு அதிபதியைக் குறித்துப் படிக்கிறோம். அவன் கர்த்தரிடத்தில் ஒன்றைக் கேட்டான் அது மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது. நாமெல்லாம் நல்லசுகம் வேண்டும். என் குடும்பம் ஆசீர்வதிக்கப்படவேண்டும். இப்படி பல காரியங்களை நமக்காக வேண்டிக்கொள்ளுவோம். ஆனால் இந்த நூற்றுக்கு அதிபதியோ; இயேசுவை நோக்கி: "நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்று தன் சிநேகிதரிடத்தில் சொல்லி அனுப்பினான் (லூக்.7:7). யாராவது வேலைக்காரனுக்காக வேண்டிக்கொண்டதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? வேலைக்காரன் சுகவீனமாயிருந்தால் லீவு கொடுத்து அனுப்பிவிடுவார்கள்.

சிலர் எந்த விதத்திலும் வேலைக்காரனைக் கண்டுகொள்ள மாட்டார்கள். ஆனால் இந்த நூற்றுக்கு அதிபதியாகிய எஜமான் அவன் மீது அன்பு செலுத்தியபடியால், அந்த வேலைக்காரனை ஒரு வேலைக்காரன் போல பார்க்காமல் தன் வீட்டில் ஒருவருக்கு சுகமில்லாமல்போனால் எந்த அளவு அவர்களுடைய சுகத்திற்காக முயற்சி எடுப்போமோ அந்த அளவு அவனுக்காக இயேசுவை நோக்கி வேண்டிக்கொண்டான். ஆண்டவர் இயேசு இந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைக் கண்டு இஸ்ரவேலுக்குள்ளும் நான் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார்.

என் அன்பு சகோதரனே, சகோதரியே நீ என்றாவது உன் வேலைக்காரனுக்கா கர்த்தரை நோக்கி ஜெபித்ததுண்டா? அவர்களும் நம்முடைய வீட்டில் ஒரு வேலையைச் செய்யக்கூடிய ஒரு நபராக இருக்கிறார்கள். அவர்கள் நலமாக இருந்தால்தான் நாம் நலமாக இருக்கமுடியும். நாம் எத்தனையோ காரியங்களுக்காக கர்த்தரிடத்தில்



மன்றாடுகிறோம். இந்த நூற்றுக்கு அதிபதியைப்போல நம் வேலைக்காரர்களுக் காகவும் ஜெபிப்போம்.

பர்திமேயு என்ற பார்வையற்ற ஒருவனை இயேசு கண்டு நான் உனக்கு என்ன செய்யவேண்டும் என்றார். பொதுவாக இப்படிக்கேட்டுவிட்டால் என்ன நினைப்பார்கள். நாம் கேட்டதையெல்லாம் செய்துவிடுவார் என்று கார், பங்களா என்று அடிக்கிக்கொண்டே போவார்கள். ஆனால் இந்த கண்பார்வையற்ற குருடன். அப்படிக்கேட்கவில்லை; " ஆண்டவரே நான் பார்வையடையவேண்டும் என்றான்" (மாற்.10:51). அநேக பார்வையற்ற சகோதரர்களை நான் சந்தித்திருக்கிறேன். அவர்கள் என்னிடம் நல்ல மனைவிவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். அல்லது நீங்கள் கொடுக்கும் உதவி எனக்குப்போதவில்லை கொஞ்சம் அதிகமாக கொடுங்கள் என்று கேட்டிருக்கிறார்கள். நான் பார்வையடையவேண்டும் எனக்காக ஜெபியுங்கள் என்று ஒருவர் கூட கேட்டதில்லை. எல்லாம் உலக காரியங்களையே கேட்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்த பர்திமேயு தன் தேவை ஒன்று அதையே கர்த்தரிடம் கேட்டான். நான் பார்வையடையவேண்டும் ஆண்டவரே என்றான். அவனுடைய கோரிக்கையை கர்த்தர் உடனே அந்த நிமிடமே நிறைவேற்றினார். எத்தனை ஆச்சரியமான காரியம் பார்த்தீர்களா? அன்பான வாசகரே நீங்கள் எதைக் கர்த்தரிடத்தில் கேட்டுக்கொண்டிருக்கிறீர்கள். தேவையான காரியத்தை கர்த்தரிடத்தில் கேட்டுப்பெற்றுக்கொள்ளுங்கள்.

லூக்.23:42-ம் வசனத்தில் இயேசுவோடு சிலுவைகளில் அறையப்பட்ட இரண்டு கள்ளர்களில் ஒருவன்; "இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்". தன் மரணத்தை நோக்கிக்கொண்டிருந்த இந்தக் கள்ளனின் விருப்பம் அதுவாயிருந்தது. ஒருவேளை நீங்கள் அந்த இடத்தில் இருந்தால் என்ன கேட்டிருப்பீர்கள். மனைவி பிள்ளைகளை காப்பாற்றும்படியாகவோ அல்லது என்னை சிலுவையில் அறைந்த அந்த ராஜ்யத்தின் மக்களை ஏதாவது செய்யுங்கள் என்றோ அல்லது மற்ற கள்வனைப்போல நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள்ளும் என்றோ கேட்டிருப்போம் அல்லவா? அவனோ கர்த்தரிடத்தில் ஒன்றை கேட்டான் அதுவும் நிலையான வாழ்வு, நித்திய ஜீவனுக்குரிய வாழ்வு. பணம் பொருளை கேட்டிருந்தால் அது உலகத்தோடு போய்விடும். அவன் மனந்திரும்பியவனாக, தன்னுடைய குற்றத்திற்கு ஏற்ற தண்டனையை அனுபவிக்கிறோம் என்று சொன்னவனாக, ஆண்டவரிடத்தில் ராஜ்யத்தில் இடம் கேட்டான்.

அவருடைய ராஜ்யத்தைப் பற்றி அவன் அறிந்திருக்கக்கூடும். ஆகையால் சிறப்பானதைக் கேட்டான். அவனுடைய விருப்பத்தின்படி இன்று என்னுடனே பரதீசில் இருப்பாய் என்றார். எத்தனை பாக்கியம் பார்த்தீர்களா? இயேசுவோடு உண்டு உறங்கின செபதேயுவின் குமாரர்கள் யாக்கோபு யோவான், மகிமையிலே வலது இடது புறத்தில் உட்கார இடம் கேட்டார்கள். அதற்கு ஆண்டவர் அது என் காரியமல்ல என்றார். சிலுவையில் தொங்கிய கள்ளனுக்கு இயேசுவோடு பரதீசுக்கு போகும் பாக்கியம் கிடைத்தது. யாருக்குமே கிடைக்காத ஒரு பாக்கியம் என்றே சொல்லவேண்டும்.

ஒரு ஆயக்காரனின் ஜெபம் என்னவாயிருந்தது; "தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும்" என்றான் (லூக்.18:13). இன்றைக்கு நம்முடைய வேண்டுதல் எப்படியிருக்கிறது. முதலாவது நான் ஒரு பாவி என்று நாம் ஒத்துக்கொள்கின்றோமா? அநேகர் மரணம் வரை தங்களுடைய தவறை ஒத்துக்கொள்வதில்லை.

தாவீது தன் பாவத்தை கர்த்தரிடத்தில் அறிக்கையிட்டான். ஆகையால் தேவனிடத்தில் அவன் இரக்கம் பெற்றான். இந்த ஆயக்காரன் அப்படியாக ஜெபித்தான். ஆனால் பரிசேயனோ ஆயக்காரனை குறைகூறி ஜெபித்தான். இவனுடைய ஜெபத்தை தேவன் நிராகரித்தார். ஆயக்காரனுடைய ஜெபமோ கேட்கப்பட்டது. உங்களுடைய ஜெபம் தேவசமுகத்தில் கேட்கப்பட முதலாவது இந்த ஆயக்காரனைப்போல உங்களைத் தாழ்த்துங்கள்.

**கேள்வி**

**நம்முடைய ஜெபம் எப்பொழுது கேட்கப்படும்?**

எல்லோரும் ஜெபிக்கிறோம். ஆனால், சிலருடைய ஜெபம் கேட்கப்படுகிறது சிலருடைய ஜெபத்திற்கு எந்தவிதமான பதிலும் தேவனுடைய சமுகத்திலிருந்து வருகிறதில்லை. இதற்கு காரணம் என்ன? அநேகர் இக்கேள்வியை எழுப்புகின்றனர். பரிசுத்த வேதாகமம் இதற்கான பதிலை கொடுக்கிறது. "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும் அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்று அறிந்திருக்கிறோம்" என்கிறார் யோவான் அப்போஸ்தலன் (1யோவா.5:14,15).

நம்முடைய நம்பிக்கை எப்படியோ அப்படியே நம்முடைய ஜெபத்திற்கு பதிலும் இருக்கும். அநேக தேவனுடைய மக்களைக்குறித்து இச்செய்தியில்



தியானித்தோம். அவர்கள் கர்த்தரிடத்தில் ஒன்றை கேட்டார்கள் அதையே நாடினார்கள் பெற்றுக் கொண்டார்கள். நீங்களும் கேளுங்கள், நாடுங்கள் அப்பொழுது பெற்றுக்கொள்வீர்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 7. மூன்று காலங்களில் தேவன்

## God Was In Three Periods

இக்கடைசி காலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிற நாம் இச்செய்தியில் மூன்று காலங்களில் தேவன் ஜனங்களோடு எப்படி தொடர்பு கொண்டார் என்பதைக் குறித்து தியானிப்போம்.

**முற்பிதாக்களின் காலத்தில் தேவன்.** நம்முடைய முற்பிதாக்களோடு பேசிவந்தார். "பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள். அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே ஒளித்துக்கொண்டார்கள்" என்று ஆதியாகமம் 3:8-ம் வசனத்தில் படிக்கிறோம். தேவன் ஆதி முற்பிதாவாகிய ஆதாமோடு பேசினார். ஆதாமே நீ எங்கே இருக்கிறாய் என்று கேட்டார். அதைப்போல நோவாவின் நாட்களில் பார்க்கும்போது; "தேவன் நோவாவை நோக்கி: மாம்சமான யாவரின் முடிவும் எனக்கு முன்பாக வந்தது; அவர்களாலே பூமி கொடுமையினாலே நிறைந்தது; நான் அவர்களைப் பூமியோடுங்கூட அழித்துப்போடுவேன்" என்று சொன்னார் (ஆதி.6:13).

அந்நாட்களில் நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது. நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். அவன் தேவனோடே சஞ்சரித்துக் கொண்டிருந்தான். குறிப்பாக தேவன் ஆதி முற்பிதாக்களோடு பேசும்போது குடும்பத்தலைவர் களோடு பேசிவந்தார் என காண்கிறோம். ஒரு குடும்பத்திற்கு கணவன் தலையாயிருக்கிறான். அவனை தேவன் முதலாவது உண்டாக்கினார். ஆகையால் அவர்களோடு பேசிவந்தார். தாம் செய்யப்போகிற காரிங்களைக்குறித்தும், அவர்கள் நடக்கவேண்டிய விதத்தைக்குறித்தும் அவர்களோடு அவருடைய வார்த்தையின் மூலமாக பேசிவந்தார்.

ஆனால் இன்று தேவன் அவ்விதமாக பேசுவதில்லை. பரிசுத்த வேதாகமத்தின் மூலமும், தேவன் தாம் தெரிந்துகொண்ட ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாகவும், அவருக்குப்பின் அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியானவர் மூலமாகவும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட தேவ தாசர்கள்

எழுதிய வேத வாக்கியங்களின் மூலமாகவும் இன்று திருவுளம் பற்றுகிறார் என அறிகிறோம்.

நோவாவுக்கு பின்பு முக்கியமான நபர்களில் ஆபிரகாமைக்குறித்து படிக்கிறோம். "கர்த்தர் ஆபிராமை நோக்கி: நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ. நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதி.12:1-3). இந்த வார்த்தைகளை ஆபிரகாமோடு தேவன் பேசும்போது அவன் உடனே அவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து தன் மனைவி சாராளை அழைத்துக்கொண்டு தேவன் காண்பிக்கும் தேசத்துக்கு சென்றான். அங்கு அவனுடைய கையாட்சிக்கு கையளவு இடமுமில்லை. அழைத்த தேவனை நம்பி கடந்துசென்றான் அவனோடு கர்த்தர் இருந்தார். அவன் விசுவாசத்தினாலே ஆசீர்வதிக்கப்பட்டான். இன்றளவும் ஆபிரகாம் விசுவாசிகளின் தகப்பனாயிருக்கிறான்.

யாக்கோப்புடன் பேசும்போது; "நான் உன் தகப்பனாகிய ஆபிரகாமின் தேவனும் ஈசாக்கின் தேவனுமாகிய கர்த்தர்; நீ படுத்திருக்கிற பூமியை உனக்கும் உன் சந்ததிக்கும் தருவேன். உன் சந்ததி பூமியின் தூளைப்போலிருக்கும்; நீ மேற்கேயும், கிழக்கேயும் வடக்கேயும், தெற்கேயும் பரம்புவாய்; உனக்குள்ளும் உன் சந்ததிக்குள்ளும் பூமியின் வம்சங்களெல்லாம் ஆசீர்வதிக்கப்படும். நான் உன்னோடே இருந்து, நீ போகிற இடத்திலெல்லாம் உன்னைக் காத்து இந்தத் தேசத்துக்கு உன்னைத் திரும்பிவரப்பண்ணுவேன்; நான் உனக்குச் சொன்னதைச் செய்யுமளவும் உன்னைக் கைவிடுவதில்லை என்றார்" (ஆதி.28:13-15). யாக்கோபு நித்திரை தெளிந்து விழித்தபோது மெய்யாகவே கர்த்தர் இந்த ஸ்தலத்தில் இருக்கிறார்; இதை நான் அறியாதிருந்தேன் என்று சொல்லி அந்த இடத்திற்கு பெத்தேல் என்று பேரிட்டான். கர்த்தர் யாக்கோபோடு இருந்தது காரியங்களை வாய்க்கச்செய்தார்.

**இஸ்ரவேலின் காலத்தில் தேவன்** மோசே இஸ்ரவேலை வழிநடத்தின மாபெரும் வழிகாட்டியாக தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர். இவனோடும் கர்த்தர் பேசிவந்தார். இவனோடு தேவன் முகமுகமாய் பேசிவந்தார் என்று காண்கிறோம். நாற்பது நாள் தேவ பர்வதத்தில் தேவனோடு இருந்து கட்டளைகளைப் பெற்றவர் மோசே. இஸ்ரவேலை எகிப்திலிருந்து



கானான் தேசத்திற்கு வழிநடத்தியவர். தேவன் இவனைக் கொண்டு அநேக அடையாளங்களையும் அற்புதங்களையும் எகிப்திலே நடத்தினார். மோசே ஜலத்திலிருந்து எடுக்கப்பட்டவன். தேவன் இவனோடு பேசும்போது; "இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொல்லி, இருக்கிறேன் என்பவர் என்னை உங்களிடத்துக்கு அனுப்பினார் என்று இஸ்ரவேல் புத்திரரோடே சொல்வாயாக என்றார்" (யாத்,3:14).

இப்படி அநேக முற்பிதாக்களைக்குறித்து நாம் வேதத்தில் படிக்கிறோம். நம்முடைய பிதாவாகிய தேவன் இந்த முற்பிதாக்களைத் தெரிந்துகொண்டு அவர்களோடு பேசி அவர்களைக் கொண்டு அற்புதவிதமாக தம்முடைய ஜனங்களை வழிநடத்திக்கொண்டு வந்தார். அவர்கள் மத்தியில் உலாவுகிற தேவனாக இருந்தார். அவர்களை எதிர்க்க ஒருவராலும் கூடாதிருந்தது. ஏனெனில் அவர்களை அழைத்த தேவன் அவர்களோடிருந்தார். "கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும் இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன்சென்றார். பகலில் மேகஸ்தம்பமும், இரவிலே அக்கினிஸ்தம்பமும் ஜனங்களிடத்திலிருந்து விலகிப்போகவில்லை" (யாத்.13:21,22). எந்த அளவு இஸ்ரவேலரை தேவன் நேசித்து, அவர்களை கழுகு தன் குஞ்சுகளை சுமப்பதுபோல சுமந்து வந்திருக்கிறாரென்று பார்த்தீர்களா?

"அவர் யாக்கோபிலே அக்கிரமத்தைக் காண்கிறதும் இல்லை, இஸ்ரவேலிலே குற்றம் பார்க்கிறதும் இல்லை, அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடே இருக்கிறார்; ராஜாவின் ஜயகெம்பீரம் அவர்களுக்குள்ளே இருக்கிறது" என்று எண்ணாகம புத்தகத்தில் படிக்கிறோம் (எண்.23:21). தேவன் தெரிந்துகொண்டவர்கள் மீது குற்றம் சுமத்த யாராலே கூடும். அவன் நின்றாலும் விழுந்தாலும் தேவனுக்கே கணக்குக்கொடுக்கவேண்டும் என்ற வசனத்தின்படி அவர் அவர்களிலே குற்றம் பார்க்கவில்லை. எகிப்திலே அடிமைகளாக இருந்த அவர்களை அணியணியாய் புறப்படப் பண்ணினார்.

மேலும் நாம் வாசிக்கிறோம்; "நம்முடைய தேவனாகிய கர்த்தரை நாம் தொழுதுகொள்ளுகிறபோதெல்லாம், அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல, தேவனை இவ்வளவு சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது?" (உபா.4:7). எகிப்து மந்திரவாதங்களும் சூனியங்களும் நிறைந்த இடம். இன்னும் சொல்லப்போனால் விக்கிரக ஆராதனை பெருகிய இடம். ஆனால் அவர்கள் ஜீவனுள்ள தேவனை கண்டுகொள்ளவில்லை. நடக்கமாட்டாத பேசமாட்டாத தேவனையும் தேவிகளையும் இயற்கைகளையும் வணங்கிவந்தனர். ஆனபடியாலே இவ்வசனத்தில் அவர் நமக்குச் சமீபமாயிருக்கிறதுபோல தேவனை இவ்வளவு

சமீபமாய்ப் பெற்றிருக்கிற வேறே பெரிய ஜாதி எது என கேள்வி எழுப்புகிறார். அவ்வளவு சமீபமாக இஸ்ரவேலின் தேவன் அவர்களுக்குள்ளே உலாவுகிற தேவனாக இருந்தார். தேவன் செய்கின்ற அற்புதங்களை கண்கூடாக கண்டார்கள். ஆனால், எகிப்தின் ஜனங்கள் கண்டு கலங்கினார்கள். மிகவும் வைராக்கியமுள்ளவனாயிருந்த பார்வோனின் இருதயம் கரைந்துபோயிற்று. தேவனுக்கு முன்பாக அவனால் நிற்க முடியாமற்போனது.

பார்வோனையும், அவன் இரதத்தையும், குதிரை வீரரையும், சிவந்த சமுத்திரம் மூடிப்போட்டது. அன்பானவர்களே, நம்முடைய முற்பிதாக்களையும், இஸ்ரவேலையும் அவரவருடைய காலத்தில் தேவன் கண்மணியைப்போல காத்து வழிநடத்தி வந்தார். அவர்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர். ஆகையால் அவர்கள் சோர்ந்துபோகும்போது அவர்களை அவரவருடைய முற்பிதாக்களின் மூலமாக பேசி அவர்களை தேற்றி ஆலோசனைகளைக் கொடுத்து வழிநடத்தி வந்தார். உலகமெங்கிலும் அவர்கள் பழுகி பெருகினார்கள். ஏதேன் தோட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட மனித இனம் பூமியை அவருடைய வார்த்தையின்படி அவருடைய சித்தத்தின்படி நிரப்பிற்று.

**கிறிஸ்துவின் காலத்தில் தேவன்** கிறிஸ்துவின் காலத்தில் இருக்கிற நீங்களும் நானும் கிறிஸ்துவின் வசனத்திற்கு செவிகொடுக்கவேண்டும்; "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம்பண்ணுவோம்" என்று இயேசு சொல்கிறார் (யோவா.14:23). இன்று நம்மத்தியில் தேவன் வாசம் பண்ண நாம் இயேசுவினிடத்தில் அன்பாயிருந்து அவருடைய வசனத்தைக் கைக்கொள்ளும்போது, பிதாவாகிய தேவன் நம்மில் அன்பாயிருப்பார். அவர்கள் வந்து நம்மோடே வாசமாயிருப்பார்கள். தேவன் இப்படிப்பட்டவர்கள் மத்தியில் தற்போது வாசம் பண்ணுகிறார். நாம் ஆலயங்களை நாடிப்போக வேண்டியதில்லை. நீங்களே தேவனுடைய ஆலயமாக இருக்கிறீர்கள் என வேதம் போதிக்கிறது. பலி இடவேண்டிய அவசியமில்லை. இயேசுவே நித்திய பலியாக ஒரே பலியாக சிலுவையில் தம்மை ஒப்புக்கொடுத்து, பாவத்திலிருந்து மனிதனுக்கு நித்திய விடுதலையைக் கொடுத்தார்.

இயேசு சொல்கிறார்; "இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ, அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன் என்றார்" (மத்.18:20). இயேசுவின் நாமத்தில் எங்கே கூடுகிறார்களோ அங்கே ஆண்டவர் இருக்கிறார். இன்று நாம் கிறிஸ்துவின் மூலமாக தேவனை நோக்கி ஜெபிக்கிறோம். கிறிஸ்துவின் நாமத்தினால் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்படுகிறோம். பிதாவாகிய தேவன் ஆண்டவர்



இயேசுவை முன்குறித்தார். இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று பிதாவாகிய தேவன் தம்முடைய குமாரனைக் குறித்துச் சொல்லியிருக்கிறார். நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும்; நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்னதுண்டா? இல்லையே! வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமே அல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை.

"பூர்வகாலங்களில் பங்குபங்காகவும் வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம்பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக்கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" என எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.1:1,2). இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே மூன்று காலங்களில் நம்முடைய பிதாவாகிய தேவன் இருக்கிறவராக இருந்துகொண்டு, "கர்த்தராகிய தம்மை அவர்கள் தடவியாகிலும் கண்டுபிடிக்கத்தக்கதாகத் தம்மைத் தேடும்படிக்கு அப்படிச் செய்தார்; அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே. ஏனெனில் அவருக்குள் நாம் பிழைக்கிறோம், அசைகிறோம், இருக்கிறோம்; அப்படியே உங்கள் புலவர்களிலும் சிலர், நாம் அவருடைய சந்ததியார் என்று சொல்லியிருக்கிறார்கள்" என்று வாசிக்கிறோம் (அப்.17:27,28). இச்செய்தியை வாசிக்கிற உங்களுக்கு அவர் தூரமானவரல்ல. அன்பாவர்களே அவரில் நிலைத்திருந்து அவரை ஆவியோடும் உண்மேயோடும் ஆராதியுங்கள்.

**கேள்வி**

**மூன்று காலங்களிலும் ஆண்டவர் இயேசு இருந்தாரா?**

ஆம், "ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது" என்று யோவான் 1:1-4 வசனங்களில் படிக்கிறோம். அவராலே சகலமும் உண்டாக்கப்பட்டது. மோசே காலத்தில் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள் அந்த கன்மலை கிறிஸ்துவே என காண்கிறோம். என் மீட்பர் உயிரோடிருக்கிறார் அவரை நான் கடைசி நாட்களில் பார்ப்பேன் என யோபு சொல்கிறார்.

மேலும், அப்போஸ்தலர்கள் அவரைக் குறித்து சொல்லும்போது; "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும் எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது, ... நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கு அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்றார்கள் (1யோவா.1:1-3). மூன்று காலங்களிலும் இருந்த இயேசு கிறிஸ்து இக்கடைசி காலத்தில் நம்மோடு ஜீவிக்கிறார். உங்களோடும் கர்த்தர் இருக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 8. தரியுவின் ஞானமான தீர்மானம்

## Darius`s Wise Decree

அநேக ராஜாக்கள் ஞானமில்லாமல் ஆட்சி செய்ததினால் அவர்களுடைய ராஜ்யபாரம் நிலை நிற்கவில்லை என்று நாம் வேதத்தில் படிக்கிறோம். ஆனால் தரியுவின் ராஜ்யபாரம் மிகவும் ஆசீர்வாதமானதாக மாறியது. அதற்கு காரணம்; "ராஜாவாகிய தரியு தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதினது என்னவென்றால்; உங்களுக்குச் சமாதானம் பெருகக்கடவது. என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்படவேண்டுமென்று என்னாலே தீர்மானம் பண்ணப்படுகிறது; அவர் ஜீவனுள்ள தேவன், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர்; அவருடைய ராஜ்யம் அழியாதது; அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும்" என்று தன் ராஜ்யபாரம் எங்கும் அறிவித்தான் (தானி.6:25,26).

இவன் இப்படி அறிவித்ததற்கு காரணம் இருந்தது. அதை நீங்கள் அறிவீர்களா? தானியேலை சிங்கங்களின் வாய்க்கு தப்புவித்த கர்த்தருடைய அதிசயத்தை தரியு கண்டான். மேலும், தானியேலோடு கர்த்தர் இருக்கிறார் என்பதையும் அறிந்து, அவர் அற்புதமானவர் ஆகையால் அவருக்குப் பயப்படவேண்டும் என்ற ஒரு தீர்மானத்தை தன் ராஜ்யமெங்குமுள்ள ஜனங்களுக்கு தெரியப்படுத்தினான்.

அவன் முதலாவது உங்களுக்கு சமாதானம் என்று எழுதினான். இவ்வார்த்தை எவ்வளவு அற்புதமானது பார்த்தீர்களா! சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் என்று நம்முடைய ஆண்டவர் இயேசு



மலைப்பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறார். இந்த சமாதான வார்த்தையை தரியு தன் ராஜ்யத்தின் ஜனங்களுக்கு முதலாவது எழுதுகிறான். நாம் கூட சிலருக்கு கடிதம் எழுதும்போது உங்களுக்கு வாழ்த்துக்கள் என்று சொல்லி எழுதுகிறோம். அதைப்போல இவன் சமாதானம் கூறி தன்னுடைய வாக்கியத்தை துவக்குகிறான். இயேசுவின் பிறப்பின் போது; பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி; "உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள்" என்று லூக்.2:14-ல் வாசிக்கிறோம்.

பூமியிலே சமாதானத்தை உண்டு பண்ண கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிறந்தார். ஆகையால் பூமியிலே சமாதானம் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள். அந்தப்படியாக தரியு தன் ஜனங்களுக்கு சமாதானம் கூறி எழுதினான். அதைத் தொடர்ந்து எழுதும்போது; என் ராஜ்யத்தின் ஆளுகைக்குள் எங்குமுள்ளவர்கள் யாவரும் தானியேலின் தேவனுக்கு முன்பாக நடுங்கிப் பயப்பட வேண்டுமென்றும் என்னாலே தீர்மானம்பண்ணப்படுகிறது என்றான்.

நடந்த சங்கதிகளை தன் கண்ணாரக்கண்டபடியால் தானியேலின் தேவன் வல்லமையுள்ள தேவன் என்றபடியால் அவருக்கு முன்பாக யாவரும் நடுங்கிப் பயப்படவேண்டும் என்று தீர்மானமாக ஒரு கட்டளையை பிறப்பித்தான். சங்கீதத்தில் படிக்கிறோம்; "கர்த்தருக்குப் பயப்படுகிற பெரியயோரையும் சிறியோரையும் கர்த்தர் ஆசீர்வதிப்பார் (சங்.115:13). ஆம், அன்பானவர்களே கர்த்தருக்கு பயப்படுகிற பெரியோரும் சிறியோரும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். நீங்களும் உங்களுடைய குடும்பமும் கர்த்தருக்குப் பயப்படுகிற குடும்பமாக இருக்கிறதா?

மேலும் தன் ராஜ்யபாரத்தின் ஜனங்களுக்கு அவர் ஜீவனுள்ள தேவன் என்பதை அறிவித்தான். ஜனங்கள் ஜீவன் இல்லாத தேவனையும் தேவிகளையும் வணங்கி வந்தார்கள் ஆகையால் அவர்களும் ஜீவனுள்ள தேவனை அடையாளம் கண்டுகொண்டு, அவரை தொழுதுகொள்ளவேண்டுமென்பதற்காக தானியேலின் தேவனை சகல ஜனங்களுக்கும் அறிமுகப்படுத்தும்போது; அவர் ஜீவனுள்ள தேவன் என்று எழுதினான். இன்றைக்கு உலகம் ஜீவனுள்ள தேவனை அறியாமல். தேவனால் உண்டாக்கப்பட்டவைகளை வைத்துக்கொண்டு இதுவே நம்மை உண்டாக்கின தேவன் என்று சொல்லி வணங்கிவருகிறார்கள்.

இச்செய்தியைக் வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பரே, நீ யாரைத் தொழுது கொண்டுவருகிறாய், வானத்தையும் பூமியையும்

உண்டாக்கின தேவன் தானியேலின் தேவன். அவர் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுதுகொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகெள்ளவேண்டும். பிதாவாகிய தேவன் தம்மை தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படியே தம்மைத் தொழுதுகொள்ள வேண்டுமென்று விரும்புகிறார். அந்த தேவனை இப்பூமியில் நீங்கள் தொழுதுகொண்டு அவரால் ஆசீர்வதிக்கப்படுங்கள். ஒரு முறை அந்நிய தேவனை தொழுதுகொண்டு வந்த தீர்க்கதரிசிகளுக்கும் கர்த்தருடைய தீர்க்கதரிசியாகிய எலியாவுக்கும் வாக்குவாதம் உண்டானது, அப்பொழுது எலியா கர்த்தர் தெய்வமானால் அவரைப் பின்பற்றுங்கள் பாகால் தெய்வமானால் அவனைப் பின்பற்றுங்கள் என்றான். அப்பொழுது எலியா ஜனங்களை நோக்கி; கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பதுபேர். இப்போதும் இரண்டு காளைகளை எங்களிடத்தில் கொண்டுவரட்டும் ஒரு காளையை அவர்கள் தெரிந்துகொண்டு அதை நெருப்புப்போடாமல் பலியிடட்டும். ஒரு காளையை நான் நெருப்புப்போடாமல் பலியிடுகிறேன். அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான்.

அவர்கள் காலைதொடங்கி மத்தியானம் மட்டும் பாகாலின்பெயரைச் சொல்லி கூப்பிட்டார்கள் ஒரு உத்தரவும் பிறக்கவில்லை. எலியா பலிபீடத்தை செப்பனிட்டு பலியின் மேல் தண்ணீர் ஊற்றி வாய்க்கால்களை உண்டுபண்ணி, அதிலும் தண்ணீர் ஊற்றி "கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும் என்னைக் கேட்டருளும் என்றான். அப்பொழுது கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி அந்தச் சர்வாங் தகனபலியையும், விறகுகளையும் கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. ஜனங்கள் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து கர்த்தரே தெய்வம், கர்த்தரே தெய்வம் என்றார்கள்" (1இரா.18:37,39).

அவர் நாம் கூப்பிடும்போது செவிகொடுக்கும் ஜீவனுள்ள தேவனாக இருக்கிறார். ஆகையால் தரியு தன் ராஜ்யபாரத்து ஜனங்களுக்கு அவர் ஜீவனுள்ள தேவன் என்று எழுதினான். இந்த ஜீவனுள்ள தேவனை ஆராதித்து ஜீவனுள்ள நாளெல்லாம் அவருக்கு ஊழியம் செய்யுங்கள். அப்பொழுது வானத்திற்கும் பூமிக்கும் மேலான கர்த்தரால் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள்.

மேலும், அவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர் என்று எழுதினான். இன்று இருந்து நாளைக்கு அடுப்பிலே போடக்கூடிய மரத்தை



வைத்து மனிதன் நமஸ்கரிக்கிறான். ஆனால் தேவன் அழியக்கூடியவர் அல்ல. அவர் அழிவில்லாதவர் என்றென்றைக்கும் நிலைத்திருக்கிறவர். மனிதர்கள் கொஞ்நாட்கள் வாழ்ந்து மரித்துப்போகிறார்கள். அதைப்போல அவர் மரித்துப்போகிற ஒருவரல்ல. மனிதன் தேவனை அவனுடைய எண்ணத்திற்கும் சாயலுக்கும் ஒப்பிட்டு பார்க்கிறான். அன்பானவர்களே தேவன் மனிதனை உண்டாக்கினார். மனிதன் தேவனை உண்டாக்க முடியாது. ஏனென்றால் அவர் ஒளியாயிருக்கிறார். ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் அவர் வாசம்பண்ணுகிறார். அவரை ஒருவரும் கண்டு உயிரோடிருக்க முடியாது அவர் வல்லமையில் மகத்துவமுள்ளவர். ஆலோசனையில் அதிசயமானவர். அவர் அடைத்தால் ஒருவரும் விடுவிக்கமுடியாது.

அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். அந்த தேவனை மனிதானால் சிருஷ்டிக்க முடியுமா? அவர் மோசேயோடு பேசும்போது; "இருக்கிறவராக இருக்கிறேன் என்று மோசேயுடனே சொன்னார்" (யாத்.3:14). அவர் எப்படியிருக்கிறாரோ அப்படியே அவர் இருக்கிறார். அவர் சத்தியபரர் பொய்யுரையாத தேவன் என்று வேதம் நமக்குப் போதிக்கிறது. மனிதன் மாறுவான் அவனுடைய எண்ணங்கள் மாறும். ஆனால் கர்த்தரோ என்றும் மாறாதவர். ஆண்டவர் இயேசுவைப் பற்றி எபிரெய ஆசான் எழுதும்போது "இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார் என்று எழுதுகிறார் (எபி.13:8).

மேலும், அவருடைய ராஜ்யம் அழியாதது என்று எழுதினான். ஆம், அன்பானவர்களே அழிந்துபோகிற ராஜ்யத்தில் ஆளுகை செய்துகொண்டிருக்கும் தரியு ராஜா ஒரு அழியாத ராஜ்யபாரத்தைக் கண்டு கொண்டான். தானியேல் அந்த ராஜ்யத்தைக்குறித்து தானியேல் 2:44-ல் சொல்லியிருக்கிறார்; "அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்திற்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதைக் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" என்றான்.

உலக ராஜ்யங்கள் உலகத்தில் ஏற்படுத்தப்பட்டவைகள் ஆனால் தேவன் என்றென்றைக்கும் அழிந்துபோகாத ஒரு ராஜ்யத்தை கிறிஸ்துவின் மூலமாக ஏற்படுத்தியிருக்கிறார். அந்த ராஜ்யத்தைக்குறித்து தானியேல் தீர்க்கதரிசனமாக உரைத்தார். பரலோகத்தின் தேவன் ஆவிக்குரிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் அநேகரை சேர்த்துக்கொண்டும் வருகிறார் என

அறிகிறோம். இந்த ராஜ்யத்தை தன்னுடைய ராஜ்யபாரத்தில் ராஜாவாக இருந்த தரியு தானியேல் மூலமாக அறிந்துகொண்டான்.

இயேசுவின் பிறப்பின்போது ஏரோது யூதருக்கு ராஜாவாக பிறந்திருக்கிறவர் எங்கே என்று முறுமுறுத்தான். தன்னுடைய ராஜ்யத்திற்கு விரோதமாக ஒரு ராஜா பிறந்திருக்கிறாரா! என்ற அச்சம் பயம் அவனுக்குள் ஏற்பட்டது. ஆனால் தரியு ராஜாவாக இருந்தும் அழியாத ஒரு ராஜ்யத்தைக் கண்டுகொண்டு அதை ஜங்களுக்கு எழுதி தெரியப்படுத்தினான். இந்த தரியுவுக்கும் ஏரோதுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பார்த்தீர்களா? இது அவனுடைய ஞானமான தீர்மானம் என காண்கிறோம். யோவான் ஸ்நானன் தேவனால் இயேசுவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்டவன். அவன் இயேசு வந்தவுடன் அவனுடைய வேலை முடிந்துவிட்டது. ஆகையால், அவன் இயேசுவைக்குறித்து சொல்லும்போது; அவருடைய பாதரட்சையின் வாரை அவிழ்ப்பதற்கும் நான் பாத்திரனல்ல என்றான்.

மேலும், தம்முடைய சீஷர்களைப் பார்த்து இதோ, உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்கூட்டி என்றான். அவனுடைய சீஷர்கள் அவர் பின்னே போனார்கள். தன் பணியை நிறைவேற்றி தனக்குப்பின் வரும் ஆண்டவர் இயேசுவை அறிவித்தான். அதைப்போல தரியு ராஜாவாக இருந்தும் தனக்குப்பின் வரும் அழியாத தேவனுடைய ராஜ்யத்தை ஜனங்களுக்குத் தெரியப்படுத்தினான். மேலும். அவருடைய கர்த்தத்துவம் முடிவுபரியந்தமும் நிற்கும். பாதியிலே போகும் ஆட்சியை பார்க்கிறோம். ஆனால் தேவனுடைய ஆட்சி முடிவுபரியந்தமும் நிலைநிற்கும். ஆளுகை என்றவுடன் அநேகர் கிறிஸ்து ஆயிரம் வருஷம் அரசாளுவார். அப்பொழுது அவருடைய ஆளுகையின் கீழ் நாமெல்லாரும் இருப்போம் என்று எண்ணுகிறார்கள்.

கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருடம்போலவும் ஆயிரம் வருடம் ஒருநாள் போலவும் இருக்கிறது. இந்த உண்மையை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம். ஆண்டவருடைய ராஜ்யம் இவ்வுலகத்திற்குரியது அல்ல; "என் ராஜ்யம் இவ்வுலகத்திற்குரிதானால் நான் யூதரிடத்தில் ஒப்புக்கொடாதபடிக்கு என் ஊழியக்காரர் போராடியிருப்பார்களே; இப்படியிருக்க என் ராஜ்யம் இவ்விடத்திற்குரியதல்ல" என்று இயேசுதாமே சொல்லியிருக்கிறார் (யோவா.18;36).

கடைசியாக, தரியு எழுதும்போது; அவர் தப்புவிக்கிறவரும் இரட்சிக்கிறவரும், வானத்திலும் பூமியிலும் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கிறவருமாயிருக்கிறார் என்று எழுதினான். ஆம், அன்பானவர்களே, இயேசு ஒருவரே வானத்திலும் பூமியிலும்



அடையாளங்களைச் செய்ய வல்லவர். அவருக்கு அந்தவிதமான அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமும் எனக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது" என்றார் (மத்.28;18). தரியு ராஜாவைப்போல அந்த ஜீவனுள்ள தேவனிடத்திற்கு உங்களை திருப்புங்கள். மற்றவர்களுக்கும் அவரைக் குறித்து அறிவியுங்கள்.

**கேள்வி**

**ஜீவனுள்ள தேவனை சேவிக்க பாஷை ஒரு பிரச்சனையா?**

உலகத்தில் தோன்றின எல்லா பாஷைகளையும் கர்த்தர் அறிவார். பாஷைகள் பாபேல் கோபுரத்திற்குப் பின்பு உண்டாயின. எல்லா பாஷைக்காரர்களும் கர்த்தரை தொழுதுகொள்ளலாம். "சகல ஜனங்களும் ஜாதியாரும் பாஷைக்காரரும் அவரையே சேவிக்கும்படி, அவருக்குக் கர்த்ததுவமும் மகிமையும் ராஜரீகமும் கொடுக்கப்பட்டது; அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும், அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும்" என தானி.7:14-ல் படிக்கிறோம்.

இதை அறிந்த தரியு தேசமெங்கும் குடியிருக்கிற எல்லா ஜனங்களுக்கும் ஜாதியாருக்கும் பாஷைக்காரருக்கும் எழுதினான். ஜீவனுள்ள தேவனை சேவிக்க பாஷை ஒரு தடையல்ல. எந்த பாஷையில் தொழுது கொண்டாலும் கர்த்தர் கேட்டு அவர்களுடைய தொழுகையை அங்கிகரிப்பார். "எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவனெவனோ அவனே அவருக்கு உகந்தவன் என்றும் நிச்சயமாய் அறிந்திருக்கிறேன்" என்கிறார் பேதுரு (அப்.10:35). பாஷையோ அல்லது எந்த ஜனமோ ஒரு பிரச்சனை அல்ல. உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 9. பரிசுத்த ஆவியானவரின் பணி

## Work of The Holyspirit

**ப**ரிசுத்த ஆவியானவரைப் பற்றி பலர் பலவிதமான கருத்துக்களைச் சொல்லுகிறார்கள். பரிசுத்த வேதாகமம் பரிசுத்த ஆவியானவரின் பணியைப் பற்றி என்ன சொல்லுகிறதென்று இன்றைய நாள் செய்தியில் நாம் தியானிப்போம். நமது ஆண்டவர் இயேசு சொன்னார்; "நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன்; நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும்; நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார்; நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன். அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும்,

நியாயத்தீர்ப்பைக் குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்"என்றார் (யோவா.16:7,8). ஆண்டவர் இயேசு பாவிகளாகிய நமக்காக சிலுவையில் மரித்தார். பின்பு தேவனால் உயிரோடு எழுப்பப்பட்டார். அவர் இன்றும் என்றும் உலகத்தின் பாவிகளை இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்.

அவர் உயிர்த்தெழுந்து நாற்பது நாட்களுக்குப் பின்பு பரிசுத்த ஆவியானவர் அனுப்பப்பட்டார். அவர் தேற்றரவாளனாகவும், பாவத்தையும், நீதியையும், இனிவரக்கூடிய நியாயத்தீர்ப்பைக்குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார் என்பதாய் கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஆனால் பரிசுத்த ஆவியானவர் அந்நிய பாஷைக்கு அடையாளமாயிருக்கிறார் என்றும், பரிசுத்த ஆவியானவரைப் பெற்றவர்கள் ஆவிக்குரியவர்கள் எனறும், ஆவியினால் வழிநடத்தப்படுகிறார்கள் என்றும் சொல்லிவருகிற ஒரு கூட்டத்தைக் குறித்து கேள்விப்படுகிறோம். வேத வசனம் நம் எல்லோருக்கும் போதிப்பது என்ன?

முதலாவது பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக்குறித்து கண்டித்து உணர்த்துவார் என படிக்கிறோம். ஆதாம் முதல் பாவமானது எல்லோரையும் ஆண்டுகொண்டது. பாவம் மனிதனை தேவனிடத்திலிருந்து பிரிக்கிறது. அன்றும் சரி இன்றும் சரி பாவத்தினால் மனிதன் சாபத்திற்கு தள்ளப்படுகிறான். இயேசுவின் நாட்களில் அநேகர் இயேசுவை விசுவாசித்தார்கள். அதேவேளையில் அவரை விசுவாசியாமல் இருந்த கூட்டமும் இருந்தது. ஆகையால் இயேசுவானவர் சொல்லும்போது; "அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும்"... கண்டித்து உணர்த்துவார் என்கிறார் (யோவா.16:9-11). பாவம் மனிதனுக்கும் தேவனுக்கும் நடுவாக பிரிவினையை உண்டாக்குகிறதல்லவா! ஆகையால் பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக்குறித்து கண்டித்து வசனத்தின் மூலமாக இன்றும் உணர்த்திக்கொண்டுவருகிறார் என்பதுவே உண்மை. இதை எல்லா நிருபங்களிலும் வாசிக்கிறோம். பாவத்தைக்குறித்து பேசாத, எழுதாத அப்போஸ்தலர்களோ அல்லது தேவதாசர்களோ இல்லை. எல்லோருமே ஆவியானவருடைய உதவியோடு பாவத்தைக்குறித்து கண்டித்து எழுதுவதை நாம் ஒவ்வொரு நிருபங்களிலும் பார்க்கிறோம்.

இது பரிசுத்த ஆவியானவருடைய பணிகளில் ஒன்றாயிருக்கிறது. பாவத்தைக்குறித்து கண்டித்து உணர்த்தாத சபை, பரிசுத்த ஆவியானவரின் பணிக்கு தடைசெய்கிறது என்றே சொல்லவேண்டும். ஆண்டவர் தாம் வளர்ந்த ஊருக்கு வந்தார். அங்கு "அவர்களுடைய அவிசுவாசத்தைக்குறித்து ஆச்சரியப்பட்டு, கிராமங்களிலே சுற்றித்திரிந்து, உபதேசம்பண்ணினார்" என்று காண்கிறோம் (மாற்.6:6). இன்றும் சொந்த ஊரில் ஒரு ஊழியனுக்கு



மதிப்பில்லை. ஆகையால் கர்த்தருடைய வார்த்தையை அவர்கள் புறம்பே தள்ளுகிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு பரிசுத்த ஆவியானவருடைய பணி மிகவும் அவசியமாயிருக்கிறது.

மேலும் நாம் படிக்கிறோம்; "கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத்.11:21). இப்படி அநேக பட்டணங்கள் இயேசுவின் அற்புதங்களைப் பெற்றும். அவரையும் அவருடைய வல்லமைகளைக் கண்டும் விசுவாசியாமற் போனது. இப்படிப்பட்டவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் பணி அவசியமாயிருக்கிறது. அவர் பாவத்தைக்குறித்தும் அவர்கள் தேவனுக்கு விரோதமாக செய்யக்கூடிய காரியங்களைக்குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார். ஏசாயா சொல்லுகிறார்; "உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது" (ஏசா.59:2). பாவங்கள் தேவனுக்கும் மனிதனுக்கும் நடுவே பிரிவினையை கொண்டுவருகிறது. பரிசுத்த ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்ட கர்த்தருடைய வசனமோ மனிதனை பாவத்திலிருந்து விடுவித்து அவரோடு ஒப்புரவாக்குகிறது.

இரண்டாவதாக பரிசுத்த ஆவியானவர் நீதியைக் குறித்தும் கண்டித்து உணர்த்துவதற்கான காரணம் என்னவென்றால்; இயேசு சொல்கிறார்; "நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும் ...கண்டித்து உணர்த்துவார் என்கிறார்" (யோவா.16:9-11). பரிசுத்த ஆவியானவர் ஆண்டவருடைய போதனையிலிருந்து நீதிக்குறிய காரியங்களை எடுத்துரைக்கிறார்; "அவர் என்னுடையதில் எடுத்து உங்களுக்கு அறிவிப்பதினால் என்னை மகிமைப்படுத்துவார்" என்று சொல்லுகிறார் (யோவா.16:14). பிதா குமாரன் பரிசுத்த ஆவியானவர் இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள்.

பிதாவானவர் இயேசுவை இவர் என் நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் ஆகையால் இவருக்குச் செவிகொடுங்கள் என்கிறார். இயேசுவானவர் நான் போய் உங்களுக்கு ஒரு தேற்றரவாளனை அனுப்புவேன் என்கிறார். பரிசுத்த ஆவியானவர் இயேசுவை மகிமைப்படுத்துகிறார் என அறிகிறோம். ஏசாயா சொல்கிறார்; "நீதி அவருக்கு அரைக்கட்டும், சத்தியம் அவருக்கு இடைக்கச்சையு மாயிருக்கும்" (ஏசா.11:5). ஆண்டவர் நீதியை வஸ்திரமாக தரித்தவர். ஆகையால் அவருடைய

வசனத்தை பரிசுத்தஆவியானவர் எடுத்து இங்கே மகிமைப்படுத்துகிறார். நீதிக்குறிய காரியங்களை அவர் போதிப்பதின் இரகசியம். ஒவ்வொருவரும் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவப்பட்டு நீதிமான்களாக மாற்றப்படவேண்டும். நீதிமான்களை கர்த்தர் நேசிக்கிறார் அவர்களை இரட்சிக்கிறார்.

எப்படியென்றால் "நாள்தோறும், அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்ட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும், அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளானவர்களாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" என பரிசுத்த ஆவியானவரின் உதவியினால் எழுதிய பேதுரு தமது நிருபத்தில் சொல்லியிருக்கிறார் (2பேது.2:8,9). அன்பான தேவனுடைய ஜனமே, பரிசுத்த ஆவியானவர் பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும் அவருடைய வசனத்தின் மூலம் கண்டிக்கிறார். என்பதை இச்செய்தியின் வாயிலாக அறிகிறோம். எதற்காக கண்டிக்கிறார்? நம்முடைய நன்மைக்காவே. நாம் இரட்சிக்கப்படவேண்டும். அவர் தேற்றரவாளன் மாத்திரமல்ல. அவர் நம்மை கண்டித்து சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தும் ஆவியானவராயிருக்கிறார். ஆகையால் பரிசுத்த ஆவியானவரின் கடிந்துகொள்ளுதலுக்கு செவிகொடுத்து கர்த்தருக்குப் பிரியமானபடி வாழ பிரயாசப்படுங்கள்.

மேலும் பரிசுத்த ஆவியானவர் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார். இன்றைக்கு மனிதன் என்னதான் பிரசங்கங்களைக் கேட்டாலும் அவன் நியாயத்தீர்ப்பு ஒன்று இருக்கிறது என்பதை மறந்துவிடுகிறான். நியாயத்தீர்ப்பின் பயத்தை அவனுக்கு அவ்வப்போது நினைப்பூட்டவேண்டியிருக்கிறது. ஆகையால் ஆவியானவர் இப்பணியை செய்துகொண்டிருக்கிறார். இயேசு சொல்லும்போது; "இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார்" என்கிறார் (யோவா.16;11). நியாயத்தீர்ப்பு எல்லோருக்குமே இருக்கிறது. நான் ஒரு நீதிமான் எனக்கு நியாயத்தீர்ப்பு இருக்காது என்று ஒருவரும் சொல்லமுடியாது. பிரசங்கி சொல்லும்போது; "ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்" என்பதாக சொல்லுகிறார் (பிர.12:14).

தேவனுடைய நியாயமான தீர்ப்புக்கு ஒருவரும் தப்பமுடியாது எனஅறிகிறோம். நியாயத்தீர்ப்பு கர்த்தரிடத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.



"கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும்; அவர் தமது கண் கண்டபடி நியாயந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச்செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது (ஏசா.11:3,4). கர்த்தர் தமது இஷ்டத்திற்கு நியாயத்தீர்ப்பு செய்யமாட்டார். தம்முடைய வசனத்தின்படி ஒவ்வொருவனையும் நியாயத்தீர்ப்பு செய்வார். என்னுடைய வசனமே உங்களை நியாயந்தீர்க்கும் என்று சொல்லியிருக்கிறபடி அவர் நியாயந்தீர்ப்பார். பரிசுத்த ஆவியானவர் அவருடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து பல தேவதாசர்களுடைய வாக்கியங்கள் மூலமாக எச்சரித்து, கண்டித்து உணர்த்திக்கொண்டிருக்கிறார்.

மேலும், பரிசுத்த ஆவியானவர் கர்த்தரைக்குறித்தும் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் பேதுருவைக் கொண்டு பேசும்போது; "அன்றியும் அவரே உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதியென்று ஜனங்களுக்குப் பிரசங்கிக்கவும், சாட்சியாக ஒப்புவிக்கவும், அவர் எங்களுக்குக் கட்டளையிட்டார். அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவானென்று தீர்க்கதரிசிகளெல்லாரும் அவரைக்குறித்தே சாட்சிகொடுக்கிறார்கள் என்றான்" (அப்.10:42,43). தீர்க்கதரிசிகளின் காலமுதலே இயேசுவைக்குறித்து பேசப்பட்டது. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெறுகிறோம். அதைப்போல அவரால் நியாயந்தீர்க்கப்படப்போகிறோம்; ஆகையால் "சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (2கொரி.5:10).

உலகத்தில் நம்மை பாவத்திலிருந்து இரட்சிக்கிற இரட்சகராக ஆண்டவர் இயேசு இருக்கிறார். நாம் மரித்து பின்பு நியாயத்தீர்ப்பின் நாளுக்கு எழுந்திருக்கும்போது நம்மை அவர் நியாயந்தீர்க்கும் நியாயாதிபதியாக வீற்றிருப்பார். அவருடைய நியாயசனத்திற்கு முன்பாக எல்லோரும் வெளிப்படவேண்டும். அவர் தமது கண்கண்டபடி நியாயத்தீர்ப்பு செய்யாமலும் தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும் நியாயமாய் தீர்ப்புச்செய்வார் என்று சொல்லப்பட்டபடி நியாயந்தீர்ப்பார். அவருடைய நியாயத்தீர்ப்புக்கு நீ ஆயத்தமாயிருக்கிறாயா? இதை பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு நிருபங்களிலும் தேவனுடைய ஜனங்களுக்கு எச்சரித்து புத்திசொல்லிக்கொண்டு

வருகிறதை நாம் அறிகிறோம். அவர் பாவத்தைக்குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் எடுத்துரைக்கிறார். எச்சரிப்படைந்து தேவனை சந்திக்க ஆயத்தப் படுங்கள்.

**கேள்வி**

**சத்திய ஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவார் என்று சொல்லப்பட்டிருக்கிறதே அது எப்படி?**

ஆம், "சத்தியஆவியாகிய அவர் வரும்போது சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரபோகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்" என்று அவரைக்குறித்து ஆண்டவர் இயேசு சொல்லியிருக்கிறார் (யோவா.16:13). சகல சத்தியத்திற்குள்ளும் எப்படி நடத்துவார்? என்ற சந்தோகம் அநேகருக்கு இருக்கிறது. நாம் கண்களை மூடிக்கொண்டு ஆவியானவர் சொல்லுகிறதாவது என்று ஒரு பிரசங்கி சொன்னால் அது ஆவியானவர் சொல்லுகிறது என்ற முடிவுக்கு வந்துவிடக்கூடாது.

"வேதவாக்கியங்களெல்லாம் தேவஆவியினால் அருளப் பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது" என்று பவுல் தீமோத்தேயுவுக்கு தெளிவாக எழுதியிருக்கிறார் (2தீமோ.3:16,17). நாம் வைத்திருக்கிற வேத புத்தகம் ஆவியானவரால் அருளப்பட்டிருக்கிறது. தேவ மனிதர்கள் தேவ ஆவியினால் அவைகளை எழுதினார்கள். ஆகையினாலே பேதுரு சொல்லும்போது; "ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் என்றார்" (1பேது.4:11). ஆவியானவர் அவருடைய வசனங்களின் மூலமாக செயல்படுகிறார்.

வசனங்களைக் கேட்டு நாம் விசுவாசத்திற்குள்ளாக வருகிறோம். வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. "நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரைபோடப்பட்டீர்கள்" என பவுல் தெளிவு படுத்துகிறார் (எபே.1:13). பரிசுத்த ஆவியானவர் நாம் பரிசுத்தமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பதற்காக அவர் நம்மை சகல சத்தியத்திற்குள்ளும், அதாவது கிறிஸ்துவின் வசனங்களுக்குள் வழிநடத்துகிறார்.



## 10. இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்
## For Abundance of The Heart The Mouth will Speak

**இ**ருதயத்தில் என்ன இருக்கிறதோ அதுவே வாயின்வழியாக வெளிப்படும். இது குறித்து பரிசுத்த வேதாகமம் என்ன சொல்லுகிறது என்று பார்ப்போம். "நல்ல மனுஷன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லவைகளை எடுத்துக்காட்டுகிறான், பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்" (மத்.12:35). இப்படியாக அவனவனுடைய இருதயத்தில் என்ன இருக்கிறதோ அதையே அவன் வெளிப்படுத்துவான். இருதயம் நல்லவையாக இருக்கும்போது அதிலிருந்து வெளிப்படும் வார்த்தைகளும் நல்லவையாகவே இருக்கும்.

விதை விதைக்கிற உவமையைப் பற்றி கர்த்தர் சொல்லும்போது; "நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்டு, அதை உண்மையும் நன்மையுமான இருதயத்திலே காத்துப் பொறுமையுடனே பலன்கொடுக்கிறவர்களாயிருக்கிறார்கள்" என்றார் (லூக்.8:15). இன்றைக்கு கர்த்தருடைய வசனம் பலவகையில் விதைக்கப்படுகிறது. அதைக் கேட்கிறவர்கள் தங்களுடைய இருதயத்தில் அவைகளைப் பதித்துக்கொண்டு பொறுமையுடனே பலன் கொடுக்கிறார்கள். பலர் அதைக்கேட்டும் அதனுடைய வல்லமையை உணராதவர்களாக அதைப் பற்றிக்கொள்ளாமல் உலக காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து தங்களுடைய ஆத்துமாக்களைக் கெடுத்துக்கொள்கிறார்கள். நிலம் நன்றாக இருந்தால் அதில் விதைக்கப்பட்ட விதையும் நன்றாக வளர்ந்து பலன் தரும். அதைப்போல சிலர் நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட வசனத்தைக் கேட்டு, பெற்றுக்கொண்டு அதற்கேற்ற பலன்கொடுக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

ஆண்டவர் இயேசு "பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்" என்றார் (மத்.13:44). நலமான பொருட்களை வாங்குவதற்கு எல்லோருக்குமே விருப்பமாக இருக்கிறது. ஏன்? அது நல்ல பொருள் என நினைக்கிறோம். பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது என்ற இந்த உவமையில் சொல்லப்பட்ட மனுஷன். அந்தப் பொக்கிஷத்தைக் கண்டு அதை மறைத்து, அதைப்பற்றிய சந்தோஷத்தினாலே சென்று தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தை வாங்குகிறான்.

அன்பு நண்பரே, நீ பரலோகராஜ்யத்தைக் குறித்து என்ன நினைக்கிறாய்? அதில் பிரவேசிக்க என்ன செய்ய வேண்டும்? அதை அடைந்துகொள்ள நீ பிரயாசப்பட்டுக் கொண்டிருக்கிறாயா? மனிதன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும் தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன? என திருமறை கேள்வி எழுப்புகிறது. மறைக்கப்பட்ட பொக்கிஷத்தை அடையவேண்டுமென்று தன்னிடத்தில் உள்ள எல்லாவற்றையும் விற்று அந்த நிலத்தைக்கொண்ட மனிதனைப்போல, நீ பரலோகராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்தில் பிரவேசிக்க இன்றே உனக்குள்ளவைகளை விற்றாகிலும் கர்த்தருடைய வார்த்தையை சம்பாதித்துக்கொள். அது உன் ஆத்துமாவை காக்கும். நித்தியமாக தேவனோடு வாழும் பாக்கியத்திற்கு நேரே உன்னை வழி நடத்தும்.

மேலும், "பொல்லாத மனுஷன் பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாதவைகளை எடுத்துக்காட்டுகிறான்" என படித்தோம். நிலம் மோசமாக இருக்கும்போது அதில் விதைக்கப்பட்ட விதையும் வளர்ச்சியடையாமல் பலன்கொடாமற்போகிறது. அதைப்போல பொல்லாத மனுஷனுடைய இருதயமானது பொல்லாங்கானவைகளையே எடுத்துக்காட்டுகிறது. நலமான காரியத்திற்கு அங்கே இடமில்லை. ஆகையால் பொல்லாங்கானவைகளால் நிறைந்திருக்கிறது. இயேசுவின் சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸை அறிவீர்கள். அவன் ஒரு முறை "இந்தத் தைலத்தை முந்நூறு பணத்துக்கு விற்று, தரித்திரருக்குக் கொடாமல் போனதென்ன என்றான்" (யோவா.12:5).

அவன் தரித்திரரைக்குறித்துக் கவலைப்பட்டு இப்படிச் சொல்லாமல், அவன் திருடனானபடியினாலும், பணப்பையை வைத்துக்கொண்டு அதிலே போடப்பட்டதைச் சுமக்கிறவனானபடியினாலும் இப்படிச் சொன்னான். இப்படிப்பட்ட அநேகரைக்குறித்துக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அப்படிப்பட்டவர்கள் பொல்லாங்கனால் நிறைந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களுடைய இருதயத்தில் எவைகள் நிறைந்திருக்கிறதோ அவைகளே வாயின் வழியாக வெளிப்படும். யூதாசும் பண ஆசையுள்ளவனாயிருந்தபடியால் அவன் இப்படிச்சொன்னான். மேலும், சிலுவையில் தொங்கிய ஒரு கள்ளன் இயேசுவைப் பார்த்து "நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான்" (லூக்.23:39). அவனுடைய இருதயத்தில் விசுவாசம் இல்லை. மற்றவர்களைப்போல இயேசுவை இகழ்ந்தான். ஆனால் மற்றவன் அவனைப் பார்த்து நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா? என்று கேட்டான். இவனுடைய இருதயம் மனந்திரும்பியதாகவும், செம்மையாகவும் இருந்தது. ஆகையால் இவன் இரட்சிக்கப்பட்டான்.



நல்ல மனுஷனுடைய இருதயத்தைப் பற்றியும், பொல்லாத மனுஷனுடைய இருதயத்தைப் பற்றியும் நாம் தியானித்தோம். இப்படிப்பட்டவைகளில் தேவனுடைய விருப்பம் என்னவாயிருக்கிறது? "உண்மையாய்த் தொழுதுகொள்ளுகிறவர்கள் பிதாவை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளுங்காலம் வரும், அது இப்பொழுது வந்திருக்கிறது தம்மைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் இப்படிப்பட்டவர்களாயிருக்கும்படி பிதாவானவர் விரும்புகிறார்" என காண்கிறோம் (யோவா.4:23). தொழுகையில் ஆவியோடும் மற்றும் உண்மையோடும் என்ற வார்த்தைகளைக் காண்கிறோம். ஆவியோடு என்று சொல்லக்கூடிய வார்த்தையை அநேகர் தவறாக புரிந்துகொண்டு குதித்துக்கொண்டும், ஆடிக்கொண்டும், ஒரு விதமான உணர்ச்சியோடும், பரவசத்தோடும், மிகப்பெரிய சத்தத்தோடும் என்று நினைக்கின்றனர். அப்படியல்ல ஆவியோடு என்று சொல்லும்போது; தேவன் ஆவியாயிருக்கிறார் என்பதை நாம் முதலாவது நினைக்க வேண்டும். அவர் எப்படியிருக்கிறாரோ அப்படியே நாமும் அவரை தொழுதுகொள்ளவேண்டும்.

அங்கு விக்கிரகங்களுக்கு இடமில்லை. கண்களை மூடி ஆவிக்குரிய தேவன் எப்படியிருக்கிறாரோ அப்படியே அவரை நோக்கிப் பார்க்கவேண்டும். இது அமைதலோடு செய்யப்படவேண்டிய ஒன்று. அசுத்த ஆவி பிடித்தவன் தான் சத்தம்போட்டு கூச்சலிட்டதாக வேதாகமத்தில் வாசிக்கிறோம். ஆவிக்குரிய தொழுகையில் உண்மையிருக்க வேண்டும். உண்மை என்று சொல்லும்போது பொய்க்கு அங்கு இடமில்லை. தேவன் உண்மையுள்ளவர் அவரை தொழுதுகொள்ள கூடி வருகிறவர்களும் உண்மையோடு அவரை தொழுதுகொள்ளவேண்டுமென அவர் விரும்புகிறார். ஆகையால் அவர்களுடைய தொழுகையில் உண்மை காணப்படவேண்டும். இது குறித்து கர்த்தர் சொல்லும்போது; " உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை" என்கிறார் (மாற்.12:30).

மற்றவர்களுக்காக தேவனை தொழுதுகொள்ளும்படியாக செல்லக்கூடாது. சிலர் சொல்லக்கேள்விப்பட்டிருக்கிறேன். என் மனைவிக்காக நான் சபைக்குச் செல்கிறேன் என்றும், என் பிள்ளைகளுக்காக சபைக்குச் செல்கிறேன் என்றும் சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன். ஆக, இவர்கள் உண்மையிலே தேவனை தொழுதுகொள்ள முழு இருதயத்தைக் கொடுக்கவில்லை. இப்படிப்பட்டவர்களுடைய தொழுகையை கர்த்தர் அங்கிகரிக்கமாட்டார். நாம் நம்மை முழுமையாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து

அவரை ஆராதிக்க அல்லது தொழுதுகொள்ளவேண்டும். அதையே கர்த்தர் அங்கிகரிப்பார். மனிதர்கள் பெரும்பாலும் முகத்தைப் பார்த்து தீர்ப்புச் செய்வார்கள். ஆனால் கர்த்தர் இருதயத்தைப் பார்க்கிறார் என்பதை நீங்கள் முதலாவது அறிந்துகொள்ளுங்கள். சாமுவேல் என்ற தீர்க்கன் அவ்விதமாக பார்த்தான். ஆகையால் கர்த்தர் அவனைப்பார்த்து; "மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்" (1சாமு.16:7).

அன்பான வாசகரே, உங்களுடைய இருதயம் எப்படி இருக்கிறது? தேவனுடைய பார்வையில் அது நல்ல இருதயமாக, அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கும் இருதயமாக இருக்கட்டும். பொல்லாதவைகளை உங்கள் கண் முன்வைக்காதிருங்கள். அவைகளை கர்த்தர் அருவருக்கிறார். நலமான காரியங்களை சிந்தியுங்கள். உங்களுடைய முழு இருதயத்தையும் கர்த்தருடைய சமுகத்திற்கு நேராக திருப்புங்கள். ஆண்டவர் இயேசு மலைப்பிரசங்கத்தில்; "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்கிறார் (மத்.5:8).

நீங்கள் இருதயத்தில் சுத்தமுள்ளவர்களாயிருக்கும்போது தேவனைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெறுவீர்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிக்கமுடியாது. ஏனெனில் நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தமுள்ளவர்களாயிருங்கள் என்கிறார். ஆகையால் பரிசுத்தமுள்ள தேவனை உங்கள் இருதயத்தில் பரிசுத்த அலங்காரத்துடனே ஆராதியுங்கள்.

மனிதனை தீட்டுப்படுத்தக்கூடியது அவனுடைய இருதயமே என வேதம் எச்சரிக்கிறது. அநேகர் தொட்டால் தீட்டு என்றும் அல்லது பார்த்தால் தீட்டு என்றும் சொல்லுவார்கள். ஆனால் பரிசுத்த வேதம்; "வாயிலிருந்து புறப்படுகிறவைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டுவரும்; அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்" என போதிக்கிறது (மத்.15:18). வாய்க்குள் போகிறது மனுஷனை தீட்டுப்படுத்தாது. ஆனால் அநேகருடைய எண்ணங்கள் தவறானதாகவே இருக்கிறது. வாய்க்குள் போகிறதே மனுஷனை தீட்டுப்படுத்தும் என்கிறார்கள். வாய்க்குள்ளே போகிறது மனுஷனை காப்பாற்றுகிறது. வாயிலிருந்து வெளிவரக்கூடிய வார்த்தைகள் இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகின்றன அவைகளே ஒரு மனுஷனை தீட்டுப்படுத்தும். அப்படி என்னவெல்லாம் வருகிறது? என்று நீங்கள் சிந்திக்கலாம். "இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங்களும், விபசாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும் தூஷணங்களும் புறப்பட்டுவரும். இவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்; கைகழுவாமல் சாப்பிடுகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது என்றார்" (மத்.15:19,20).



இருதயத்திலிருந்து வரக்கூடிய பொல்லாத சிந்தனைகள் ஒரு மனிதனை கொலைகாரனாகவும், கொள்ளைக்காரனாகவும், விபசாரக்காரனாகவும், வேசிக்கள்ளனாகவும் மாற்றிவிடுகிறது. இவைகளால் அவனுடைய ஆத்துமா கெட்டு தேவனாலும், ஜனங்களாலும் புறம்பாக்கப்படுகிறான். தாவீது என்ற அரசன் சொல்லுகிறான்; "என் இருதயத்தில் அக்கிரமசிந்தை கொண்டிருந்தேனானால், ஆண்டவர் எனக்குச் செவிகொடார்" (சங்.66:18).

அநேகருடைய ஜெபங்கள் கேட்கப்படவில்லை. இதற்கு காரணம் என்ன? அவர்களுடைய சிந்தை சரியில்லாமல் தேவனுடைய சமுகத்தில் ஜெபித்திருக்கலாம். அதனால் ஆண்டவர் அவர்களுடைய ஜெபத்திற்கு பதில்கொடாமலிருப்பார். நாம் இயேசு கிறிஸ்துவில் இருந்த சிந்தைப்படியே இருப்போமானால், நாம் தேவனிடத்தில் கேட்டவைகளைப் பெற்றுக்கொள்வோம். சிந்தை சரியாகும்போது அவனுடைய இருதயமும் சரியாகும். தாவீது தேவனுடைய ஆலயத்தை கட்ட முயற்சிக்கும்போது; அதை தேவன் ஏற்றுக்கொள்ளவில்லை. நீ இரத்தம் சிந்திய கரங்கள் உடையவனாயிருக்கிறாய் என்றார். தாவீதின் பாவம் அவனுடைய நற்காரியங்களைச் செய்ய தடையாயிருந்தது. அவன் மனந்திரும்பும்போது, அவனுடைய பாவத்தைக் கர்த்தர் மன்னித்தார். நம்முயை இருதயத்தில் இருக்கிற பாவக்கறைகள் களையப்படவேண்டும். அதற்கு நாம் செய்யவேண்டுவதென்ன, நம்முடைய இருதயத்தை தேவனுயை வார்த்தைக்கு நேரே திருப்பவேண்டும். "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்" என ஞானி சாலொமோன் குறிப்பிடுகிறார் (நீதி.28:26). உங்களுடைய இருதயத்தை நம்பிக்கொண்டிராதபடி கர்த்தருடைய வசனங்களுக்கு கவனமாக செவிகொடுங்கள்.

**கேள்வி**

**மாறுபாடுள்ள இருதயமுடையவர்கள் கர்த்தருக்கு எப்படிப்பட்டவர்கள்?**

அருவருப்பானவர்கள் என நீதி.11:20-ம் வசனத்தில் படிக்கிறோம். அருவருப்பு என பார்க்கும்போது; நாய், தான் கக்கினதையே தின்னும். அது நமக்கு அருவருப்பு. அதைப்போல செய்த பாவத்தையே நாம் திரும்ப திரும்ப செய்யும்போது அது கர்த்தருக்கு அருவருப்பு. அப்படிப்பட்டவர்கள் மாறுபாடான இருதயமுடையவர்கள். ஒழுங்கில்லாதவர்கள், ஒருநாள் வாழ்வை இன்பமென்றெண்ணி வாழ்கிறவர்கள்.

இப்படிப்பட்டவர்களைக் குறித்து யூதா எழுதுகிறார்; "இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால்

அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களு மாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது'' (யூதா 12,13).

இப்படிப்பட்ட மாறுபாடுள்ள இருதயமுடையவர்களை விட்டு உங்களைக் காத்துக்கொள்ளுங்கள். தேவன் அருவருக்கிற மக்களோடு ஐக்கியம் கொள்ளாதிருங்கள். உங்களுடைய வாயின் வார்த்தைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 11. கர்த்தருடைய வழி

## The Lord`s Way

**உ**லகத்தில் அநேக வழிகள் இருக்கிறது. ஆனால் கர்த்தருடைய வழி செம்மையானவைகள். இவ்வழியைக்குறித்து இந்நாளில் நாம் தியானிப்போம். ''கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள் நீதிமான்கள் அவைகளில் நடப்பார்கள்; பாதகரோவென்றால் அவைகளில் இடறிவிழுவார்கள்'' என்று ஓசியா தீர்க்கன் சொல்லுகிறான் (ஓசி.14:9). ஆம், அன்பானவர்களே கர்த்தருடைய வழிகள் செம்மையானவைகள். அந்த வழியாய் செல்லுகிறவர்களுக்கு நம்பிக்கையுண்டு. அவர்கள் திசைகெட்டுப்போவதில்லை. அவர்களை வழிநடத்துகிற கர்த்தர் வல்லவர். அவர்கள் சோர்ந்துபோவதில்லை. அநுதினமும் கர்த்தரால் போஷிக்கப்படுவார்கள். துன்மார்க்கர் அந்தவழியில் இருப்பதில்லை. நீதிமான்கள் அந்தவழியில் நடப்பார்கள். துன்மார்க்கர் அந்த வழியாய் போகலாம் என்று முயற்சித்தாலும் அவர்களால் கூடாமற்போகும்.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் தேவ ஜனமே நீங்கள் எந்த வழியில் இருக்கிறீர்கள். உலக வழியிலா அல்லது கர்த்தருடைய வழியிலா? ஏரேமியா புத்தகத்தில் வாசிக்கிறோம்; ''வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அவர்களோ, நாங்கள் அதிலே நடக்கமாட்டோம் என்கிறார்கள்'' (எரே.6:16).

எல்லோரும் போகிறார்கள் ஆகையால் நானும் அந்தவழியே போகிறேன் என்று சொல்லி கோடிக்கணக்கான ஜனங்கள் கூட்டம் நிறைந்த வழியை தெரிந்துகொள்கிறது. அந்தவழியே போனால் நம்முடைய ஆத்துமா இரட்சிக்கப்படுமா? என்று அவர்கள் கடுகளவும் சிந்திப்பதில்லை.



அன்பு சகோதரனே, சகோதரியே நீ எந்த வழியை தெரிந்து கொண்டுள்ளாய்? ஜீவனுள்ள வழி ஒன்று உண்டு. அந்த வழியைக்குறித்து பரிசுத்த வேதாகமம் பேசுகிறது. அது ஜீவனுக்குப்போகிற வாசல், அது கர்த்தருடைய வழியாக இருக்கிறது. அவ்வழியை கர்த்தர் ஏற்படுத்தியிருக்கிறார். ஆகையால் பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து நல்ல வழி எங்கே என்று பார்த்து அதிலே நடக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது உங்களுடைய ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என்னுடைய உறவினர் வழியில் போகிறேன் என்று அவர்களைப் பிரியப்படுத்த நீங்கள் போவீர்களானால், அவர்களும் ஏமாற்றப்படுவார்கள், நீங்களும் ஏமாற்றப்படுவீர்கள். சற்று நின்று நிதானித்து நல் வழி எங்கே என்று கேட்டு, விசாரித்து பூர்வ பாதைகளை தெரிந்துகொள்ளுங்கள். மலைப்பிரதேசங்களில் அநேக பாதைகள் போகும். எல்லா பாதைகளும் பார்ப்பதற்கு நன்றாகத்தானிருக்கும். ஆனால் ஒரு வழி மட்டுமே நாம் செல்லக்கூடிய மலைதேசத்திற்கு நம்மை கொண்டு செல்லும். மற்ற பாதைகள் காட்டிற்குள் வழிநடத்திவிடும். அங்கு நம்முடைய நிலைமை என்னவாகும் என்பதை சற்று யோசித்துப்பாருங்கள். அதைப்போல நீங்கள் ஜீவனுள்ள வழியை விட்டு பாதாளத்தை நோக்கிப் போகும் வழியை தெரிந்துகொண்டு போய்விடாதீர்கள்.

தாவீது அரசனைப்போல கர்த்தரை நோக்கி வேண்டுங்கள்; ''கர்த்தாவே, உமது வழியை எனக்குப் போதித்து, என் எதிராளிகளினிமித்தம் செவ்வையான பாதையில் என்னை நடத்தும்'' என்று ஜெபியுங்கள் (சங்.27:11). கர்த்தர் உங்களை அவருடைய வழியில் நடத்த சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆடு மேய்ப்பனாயிருந்த தாவீதை தம்முடைய வழியே நடத்தி அவனை அரசனாக்கினார். ஆகையால் தாவீது ''உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால் எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்'' என்கிறார் (சங்.119:104).

உண்மை என்று ஒன்று இருந்தால் அதற்கு மாறாக பொய்யானவைகள் பல இருக்கிறதை நாம் அறிகிறோம். அதைபோல கர்த்தருடைய வழி என்று ஒன்று இருக்கிறது. அதற்கு எதிராக பிசாசினால் பொய்யான பல வழி அவனால் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இதை அறிந்த தாவீது ராஜா உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன். எல்லா பொய் வழிகளையும் வெறுக்கிறேன் என்கிறான். கர்த்தருடைய கட்டளைகளை வைத்து நாம் பொய்யானவைகளை அடையாளம் கண்டுகொள்ளலாம். ஆகையால் அன்பான தேவ ஜனமே, நீங்கள் கர்த்தருடைய வழியை தெரிந்துகொள்ளுங்கள். அவைகள் செம்மையானவைகளாயிருக்கிறது.

இயேசு சொல்கிறார்; "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் (யோவா.14:6). அவரே வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவும் இருக்கிறார். உலகத்தில் ஒரே வழியுண்டு அது கர்த்தருடைய வழியாகயிருக்கிறது. கர்த்தரே அந்த வழியாகவுமிருக்கிறார். அவர் சத்தியம் நிறைந்தவர். ஜீவனுள்ளவர் என காண்கிறோம். இவ்வழியே சென்றால் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டைவீர்கள். உங்களுடைய ஆத்துமா செழிக்கும். "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று மேச்சலைக்கண்டைவான்" என்கிறார் (யோவா.10:9). நீங்கள் செல்லும் வாசல் இயேசுவின் வழியாக இருக்கிறதா? அப்படியில்லை என்றால் இன்றே உங்களுடைய வழியை மறு ஆய்வு செய்யுங்கள். இல்லையேல் உங்களுடைய பிரயாசம் எல்லாம் வீணாய்போய்விடும்.

எல்லோரும் போகிறார்களே அவர்களுக்கு வருவது எனக்கும் வரட்டும் என்று அநேகர் சென்ற வழியே போய்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வழி மிகவும் விசாலமாகவும் இருக்கிறது. ஆனால் ஜீவனுக்குப்போகிற வாசல் இடுக்கமாக இருப்பதாக நாம் வேதத்தில் படிக்கிறோம். "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" (மத்.7:14). இந்த வழி இடுக்கமான வழியாக இருக்கிறது. ஆகையால் இதில் போவது கஷ்டம் என்று அநேகர் இந்த வழியை தெரிந்துகொள்வதில்லை. வெகுதூரம் பயணம் செய்கிறவர்கள் பைப்பாஸ் ரோட்டையே தேர்வு செய்கின்றனர். அதைப்போல விசாலமானவழியை அநேகர் தேர்வு செய்கின்றனர்.

அது பாதாளத்திற்குப்போகும் வழியாக இருக்கிறது. இடுக்கமும் நெருக்கமுமான வழி ஜீவனுக்குப்போகிற வழியாக இருக்கிறது. அதில் பயணிக்கிறவர்கள் சிலர் என்று காண்கிறோம். அன்பானவர்களே, நீங்கள் உங்களுடைய வழியை மறு ஆய்வு செய்யுங்கள். சரியான வழியை தெரிந்துகொள்ளுங்கள். இடுக்கமான வழியே உட்பிரவேசிக்க பிரயாசப்படுங்கள். அந்த வழியே சமாதானமும், சந்தோஷமும், நீடிய தயவும் உண்டு, மேலும் நீங்கள் வேண்டிக்கொள்ளுகிறவைகளுக்கு பதில் கிடைக்கும். அந்த வழி நம்மை நித்தியத்திற்கு நேரே வழி நடத்தும்.

மேலும், "சகோதரரே, நாம் பரிசுத்தஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய்ப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணினபடியால், அந்த மார்க்கத்தின்வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம்



உண்டாயிருக்கிறது..." (எபி.10:19,20). கர்த்தருடைய வழியே போகிறவர்களுக்கு முழு தைரியம் உண்டாயிருக்கிறது. எப்படியென்றால்; கர்த்தர் தம்முடைய இரத்தத்தை சிந்தி அந்த வழியை ஏற்படுத்தியிருக்கிறார். அவருடைய இரத்தத்தினால் கழுவப்பட்டவர்கள் அந்த ஜீவனுள்ள மார்க்கத்தில் நடப்பதற்கு தைரியமுள்ளவர் களாயிருக்கிறார்கள். ஆசரிப்புக் கூடாரத்துக்குள்ளாக வருடந்தோறும் இரத்தத்தோடு ஆசாரியன் பிரவேசிப்பான். ஜனங்களுக்காகவும் தனக்காகவும் பாவநிவர்த்திசெய்யும் பொருட்டு உள்ளே பிரவேசிப்பான். நம்முடைய ஆண்டவர் இயேசுகிறிஸ்து நாம் பரிசுத்த ஸ்தலத்தில் அதாவது பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு தமது மரணத்தின் மூலம் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு ஏற்படுத்தினார். இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவ மன்னிப்பு இல்லை. ஆகையால் ஆண்டவர் தம்முடைய இரத்தத்தை சிந்தி யாவருக்கும் நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.

இந்த மார்க்கத்தை அறிந்துகொள்ளுங்கள். மாம்சமான யாவருக்கும் உண்டாக்கப்பட்ட புதிதும் ஜீவனுமுள்ள மார்க்கம். உலகத்தில் தோன்றின மார்க்கங்கள் எல்லாம் மண்ணோடு மண்ணாய் போய்விட்டது. இன்னும் சில மார்க்கங்கள் மறையும் நேரம் நெருங்கிக்கொண்டிருக்கிறது. ஆனால் கர்த்தருடை மார்க்கம் அதாவது அவருடைய வழி இன்றும் என்றும் அழியாமல் ஜீவனுள்ள மார்க்கமாகவே இருக்கிறது. அவருடைய மார்க்கத்தை அறிந்த அப்பொல்லோவுக்கு, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாவும் மேலும் விவரித்துக் காண்பிக்கிறதை நாம் அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் படிக்கிறோம்.

"அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம்பண்ணிக்கொண்டுவந்தான். அவன் ஜெபஆலயத்தில் தைரியமாய்ப் பேசத்தொடங்கினபோது, ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும் அவன் பேசுகிறதைக் கேட்டு, அவனைச் சேர்த்துக்கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள்" (அப்.18:25,26). இன்றைக்கும் அநேகர் கிறிஸ்தவத்தை அறிந்திருக்கிறார்கள் இந்த அப்பொல்லோவைப்போல, ஆனால் அவர்கள் கர்த்தருடைய வழியில் தாங்கள் செய்யவேண்டிய அல்லது நிறைவேற்றவேண்டிய அநேக கட்டளைகளை நிறைவேற்றாமலே இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வேத வசனங்களை சற்று உற்று கவனிக்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். அப்பொழுதே அவர்கள் கர்த்தடைய முழு கட்டளைகளையும் நிறைவேற்ற முடியும்.

அதைப்போல ஏசாயா தீர்க்கதரிசியின் புத்தகத்தை வாசித்துக்கொண்டு ரதத்தில் பயணித்த மந்திரியை பிலிப்பு சந்தித்து நீர்

வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்று கேட்டபோது, ஒருவன் அறிவிக்காவிட்டால் அது எப்படி எனக்குத் தெரியும் என்றான். பின்பு பிலிப்பு பேசத்தொடங்கி இந்த வேதவாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக்குறித்து அவனுக்குப் பிரசங்கித்தான். பின்பு அவன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டான். அதனால் அவன் கர்த்தருடைய வழியை தெரிந்துகொண்டான்.

இன்றைக்கு வேதாகமத்தை வாசிக்கிறார்கள். ஆனால் அதன் கருத்து அநேகருக்கு தெரிவதில்லை. ஏதோ ஒரு புத்தகத்தை படிப்பதைப்போல படித்துக்கொண்டிருக்கிறார்கள் அல்லது கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்துவிட்டோம் என்று சொல்லி படித்துக்கொண்டிருக்கிறார்கள். உண்மையிலே வானத்திற்கும் பூமிக்கும் ஆண்டவர் ஒருரே. அவரே இயேசு. அவர் நம்முடைய பாவங்களை நீங்கும்படி சிலுவையில் தன்னை ஒப்புக்கொடுத்தார். அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பு உண்டாயிருக்கிறது. அவர் ஜீவனுள்ள ஒரு மார்க்த்தை ஏற்படுத்தியுள்ளார். இப்படிப்பட்ட அநேக சத்தியங்களை அறியாதவர்களாகவே இருக்கிறார்கள்.

உலக வழிகளைப் பாராது "இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்" என்று மத்.7:13-ல் படிக்கிறோம். பொதுவாக ஜனங்கள் கூட்டத்தையே அதிகமாக விரும்புகிறார்கள். கூட்டம் அதிமாக இருந்தால் அவர்களுக்கு நம்பிக்கை வந்துவிடுகிறது. ஆகையால் அந்த கூட்டத்தோடு கூட்டமாக இவர்களும் கலந்துகொள்ள பிரயாசப்படுகிறார்கள். எல்லாரும் போகிறார்கள் ஆகையால் நாங்களும் போகிறோம் என்று சொல்லக்கூடிய அநேகரை நாம் அக்கூட்டங்களில் காணமுடியும். இப்படிப்பட்டவர்கள் கூட்டத்தைப்பார்த்து ஏமாற்றமடையக்கூடியவர்கள். கேட்டுக்குப்போகிற வாசல் இப்படித்தானிருக்கிறது. அதில் பிரவேசிக்கிறவர்கள் அநேகர் என வேதம் சொல்லுகிறது. உங்களுடைய தேர்வு கர்த்தருடைய வழியாய் இருக்கட்டும்.

**கேள்வி**

**இயேசுவையல்லாது நாம் இரட்சிக்கப்பட வேறு வழி உண்டா?**

பேதுரு சொல்லுகிறார்; "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்றான் (அப்.4:12). உலகத்தில் பிதாவாகிய தேவன் நமக்கு அறிமுகப்படுத்தியது அவருடைய நேச குமாரனாகிய இயேசு



ஒருவரையே அவரே உலகத்தின் இரட்சகர். உலகத்தின் பாவத்தைப்போக்கும் தேவ ஆட்டுக்குட்டி. அவர் இல்லாமல் இரட்சிப்பு மனிதனுக்கு வேறுவழியில் இல்லை. அவரே வழியாகவும் சத்தியமாகவும் ஜீவனாகவும் இருக்கிறார். பவுல் சொல்லும்போது; "இப்படியிருக்க முக்கியமான வரங்களை நாடுங்கள்; இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன்" என்கிறான் (1கொரி.12:31).

இப்படிப்பட்ட மேன்மையான வழிகளை மனிதன் நாடாமல். தனக்குத்தானே வழியை ஏற்படுத்திக்கொள்ளுகிறான். அந்த வழி அவனை இரட்சிப்பதில்லை. தேவன் நமக்கு ஒரு அற்புதமான திட்டத்தை ஏற்படுத்தியிருக்கிறார். பாவத்தில் விழுந்துபோன மனிதனை அவர் அப்படியே விட்டுவிடாமல். தம்முடைய குமாரனுடைய இரத்தத்தை கொண்டு பாவத்திலிருந்து மீட்டெடுக்கிறார். இது அவருடைய மாபெரும் இரட்சிப்பின் திட்டம் அல்லவா? இதை வேதாகமத்தின் துணைகொண்டு அறிந்துகொள்ளுகிறோம். நீங்கள் உங்களுடைய குடும்பத்தாரோடு இந்த விழிசெல்ல பிரயாசப்படுங்கள். உங்களுடைய குடும்பத்தில் உள்ள ஒருவரும் விடுபட்டுப்போய்விடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள். கர்த்தருடைய வழிசென்று கணக்கில்லா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 12. அநேகருடைய அன்பு தணிந்துபோம்

## The Love of Many Will Grow Cold

**அ**நேகருடைய அன்பு தணிந்துபோவதற்கு காரணம் என்னவென்றால். உலகத்தில் அக்கிரமம் மிகுதியாவதினால் அன்பு தணிந்துபோகிறது. நல்லவர்களும் மோசமானவர்களாக மாறிவிடுகின்றனர். நேற்றுவரை அவர் நல்லவராகத்தானே இருந்தார் பின்பு எப்படி இப்படியொரு காரியத்தை செய்துவிட்டார் என்று பலர் சொல்லக் கேள்விபட்டிருக்கிறோம். அந்த மனிதனுடைய வாழ்க்கையில் தாங்கமுடியாத ஏதோ ஒரு சம்பவம் நடந்திருக்கிறது ஆகையால் அவர் இவ்விதமாக மாறிவிட்டார் என்பார்கள். இது சரி என்று நாம் சொல்லி விடமுடியாது. அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்து போகும் உண்மைதான். வேதமும் அவ்வாறே சொல்லுகிறது "அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்போம்" என்று (மத்.24:12).

அன்பு தணிந்துபோகாதிருக்க நாம் கர்த்தரைப் பற்றிக் கொண்டிருக்க வேண்டுமல்லவா? நீங்கள் அவ்விதமாக உங்களுக்கு வரக்கூடிய பாடுகள்

பிரச்சனைகளில் கர்த்தரைப் பற்றிக் கொண்டிருக்கிறீர்களா? நோவா என்ற தேவ மனிதனை அறிவீர்கள். அவனுடைய காலத்தில் அக்கிரமம் பூமியில் பெருகினது. "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்ற மெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதி.6:5,6).

உலக காரியங்களைப் பார்த்து அநேகர் வேதனை கொள்ளுகின்றனர். நோவா காலத்து மனிதர்களை கண்ட கர்த்தருக்கு மனவேதனை உண்டானது. தாம் பூமியிலே உண்டாக்கின மனிதனுக்காக அவர் வேதனை கொண்டார். இன்று இருக்கிற நமக்கு மிகுந்த வேதனையை கொண்டுவருகிறது. ஆகையால் அநேகருடைய அன்பு தணிந்துபோகிறது. அந்நாட்களில் வாழ்ந்த நோவாவுக்கு எவ்வளவு மனவேதனை இருந்திருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். அவன் தன் காலத்திலே இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான் என அவனைக்குறித்து படிக்கிறோம். அவனுக்கும் அநேகருடைய அக்கிரம கிரியைகளைக் கண்டு அன்பு குறைந்திருக்கும். ஆனாலும் அவன் கர்த்தரையே தஞ்சமாக கொண்டிருந்தபடியால் கர்த்தருடைய கண்களில் நோவாவுக்கு கிருபை கிடைத்தது. அவன் அந்த அன்பிலே பெலப்பட்டு கர்த்தருடைய வார்த்தையின்படி ஒரு பேழையை உண்டுபண்ணி தன்குடும்பத்தை இரட்சித்தான். இந்நாட்களில் வாழ்கின் நாமும் அன்பு குறைந்துபோகாதிருக்க கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் பற்றிக்கொண்டிருப்போம்.

"நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள்" என்ற எபே.5:16-ல் சொல்லப்பட்ட வசனத்தின்படி காலத்தை நாம் பிரயோஜனப்படுத்திக்கொள்ளவேண்டும். நாளை நம்முடைய நாள் அல்ல. இன்றே இரட்சணிய நாள். ஒரு நாள் பிறப்பதை நாம் அறியோம். கர்த்தர் ஒருவரே அறிவார். ஆகையால் ஒவ்வொரு நாளும் நம்முடைய ஆத்துமாவை பாதுகாத்துக்கொள்ள ஆவியில் அனல் உள்ளவர் களாயிருப்போம்.

"அக்கிரமக்காரருக்குள் வாசமாயிருக்கையில் அவர்களுடைய காமவிகார நடக்கையால் வருத்தப்பட்டு, நாள்தோறும், அவர்களுடைய அக்கிரமக்கிரியைகளைக் கண்டு கேட்டு நீதியுள்ள தன்னுடைய இருதயத்தில் வாதிக்கப்பட்ட நீதிமானாகிய லோத்தை அவர் இரட்சித்திருக்க; கர்த்தர் தேவபக்தியுள்ளவர்களைச் சோதனையினின்று இரட்சிக்கவும்,



அக்கிரமக்காரரை ஆக்கினைக்குள்ளாக நியாயத்தீர்ப்பு நாளுக்கு வைக்கவும் அறிந்திருக்கிறார்" (1பேது.2:7-9). நாம் வாழும் நாட்டிலும் அக்கிரமம் இல்லாமல் இல்லை. ஒவ்வொருநாளும் லோத்துவைப்போல வேதனைப்படுகிறோம். அக்கிரமக்காரருக்குள்ளே வாசமாயிருக்கிறோம். லோத்தை இரட்சித்த கர்த்தர் நம்மையும் இரட்சிக்க வல்லவராயிருக்கிறார் என்ற நம்பிக்கையோடு அன்பிலே நிலைத்திருக்க வேண்டும்.

அன்பு எப்பொழுது தணிந்துபோகிறது என்று நாம் பார்க்கும்போது. ஒன்று நம்முடைய கோரிக்கைகள் நிறைவேறாத சமயங்களில் நம்முடைய அன்பு தணிய ஆரம்பிக்கிறது அல்லது நம்முடைய எதிர்பார்ப்பு நிறைவேறாத சமயங்களில் அன்பு தணிந்துபோகிறது.

யோனாவை தேவனாகிய கர்த்தர் நினிவே பட்டணத்திற்கு அனுப்பினார். யோனா நகரத்தில் பிரவேசித்து ஒரு நாள் பிரயாணம்பண்ணி, இன்னும் நாற்பது நாள் உண்டு, அப்பொழுது நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று கூறினான். அதன்பின்பு நினிவேக்கு நடக்கப்போகும் சம்பவத்தைப் பார்க்க "யோனா நகரத்திலிருந்து புறப்பட்டு, நகரத்துக்குக் கிழக்கே போய், அங்கே தனக்கு ஒரு குடிசையைப் போட்டு, நகரத்துக்குச் சம்பவிக்கப் போகிறதைத் தான் பார்க்குமட்டும் அதின் கீழ் நிழலில் உட்கார்ந்திருந்தான்... கர்த்தர் ஒரு ஆமணக்குச் செடியை முளைக்கக் கட்டளையிட்டு, அதை அவன் மேல் ஓங்கிவளரப்பண்ணினார்; அந்த ஆமணக்கின்மேல் யோனா மிகவும் சந்தோஷப்பட்டான். மறுநாளிலே கிழக்கு வெளுக்கும் நேரத்தில் தேவன் ஒரு பூச்சியைக் கட்டளையிட்டார்; அது ஆமணக்குச்செடியை அரித்துப் போட்டது; அதினால் அது காய்ந்துபோயிற்று. சூரியன் உதித்தபோது தேவன் உஷ்ணமான கீழ்க்காற்றைக் கட்டளையிட்டார்; அப்பொழுது வெயில் யோனாவுடைய தலையில் படுகிறதினால் அவன் சோர்ந்து போய், தனக்குள்ளே சாவை விரும்பி; நான் உயிரோடிருக்கிறதைப் பார்க்கிலும் சாகிறது நலமாயிருக்கும் என்றான்; அப்பொழுது தேவன் யோனாவை நோக்கி: நீ ஆமணக்கினிமித்தம் எரிச்சலாயிருக்கிறது நல்லதோ என்றார்; அதற்கு அவன்; நான் மரணபரியந்தமும் எரிச்சலாயிருக்கிறது நல்லதுதான் என்றான்.

அதற்குக் கர்த்தர்: நீ பிரயாசப்படாததும், நீ வளர்க்காததும், ஒரு இராத்திரியிலே முளைத்ததும், ஒரு இராத்திரியிலே அழிந்துபோனதுமான ஆமணக்குக்காகப் பரிதபிக்கிறாயே, வலதுகைக்கும் இடதுகைக்கும் வித்தியாசம் அறியாத இலட்சத்து இருபதினாயிரம்பேருக்கு அதிகமான மனுஷரும் அநேக மிருகஜீவன்களும் இருக்கிற மகா நகரமாகிய நினிவேக்காக நான் பரிதபியாமலிருப்பேனோ என்றார்" (யோனா 4:5-11).

அன்பானவர்களே, நாம் நினைத்தது நடக்கவில்லை என்று வருந்துகிறோம் பரிதபிக்கிறோம். இதனால் மனமுடைந்து இருப்பதைக் காட்டிலும் சாவதே மேல் என்று முடிவுக்கும் வந்துவிடுகிறோம். நாம் சற்று சிந்திக்கவேண்டும். அண்ட சராசரங்களையும் ஆண்டுபோஷிக்கும் கர்த்தர் எல்லோரையும் நேசிக்கிறார். ஒருவரும் கெட்டுப்போவது அவருடைய விருப்பமல்ல. இதை நாம் புரிந்துகொண்டு தேவசித்தம் செய்யவேண்டுமல்லவா? கர்த்தருடைய வழியைவிட்டு தர்ஷீசுக்கு போன யோனாவுக்கு சரியான பாடம் புகட்டி நினிவேக்கு அனுப்பினார். அங்கும் அவன் அவர்களுடைய அழிவை காணும்படியாக எதிர்பார்த்து காத்திருந்தபோது மீண்டும் ஒரு பாடத்தை அவனுக்கு புகட்டினார். அன்பானவர்களே நமக்குள் சோர்வு வரும்போது அன்பு குறைந்துபோய் நற்கிரியைகளை செய்ய தவறிவிடுகிறோம். "ஆவியை அவித்துப் போடாதிருங்கள்" என 1 தெச.5:19-ல் படிக்கிறோம்.

நாம் அனலுள்ளவர்களாக இருந்து கர்த்தருக்காக பெரிய காரியங்களைச் செய்யவேண்டும். மேலும், "பகலுக்குரியவர்களாகிய நாமோ தெளிந்தவர்களாயிருந்து, விசுவாசம் அன்பு என்னும் மார்க்கவசத்தையும், இரட்சிப்பின் நம்பிக்கையென்னும் தலைச்சீராவையும் தரித்துக் கொண்டிருக்கக்கடவோம்" (1தெச.5:8). வேதாகமம் தேவனுடைய மக்களை பகலுக்குரியவர்கள் என்று அழைக்கிறது. இரவுக்குரியவர்கள் இரவிலே பலருக்கு விரோதமாக சதிதிட்டங்களை தீட்டுவார்கள். நாமோ நற்கிரியைகளைசெய்யும்படியாக அழைக்கப்பட்டவர்களாயிருக்கிறோம்.

ஆகையால் நம்மை பகலுக்குரியவர்கள் என வேதம் அழைக்கிறது. இந்த அழைப்புக்குப் பாத்திரவான்களாக இருந்து செயல்படுவோம். ஊழியம் என்பது அது அற்புதவிதமானது. அதற்கு மாதிரியை நம்முடைய கர்த்தர் வைத்து சென்று இருக்கிறார். அவர் ஊழியம் கொள்ளும்படியாக வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கவும் வந்தார். அதைப்போல நாமும் ஒவ்வொரு நாளும் ஊழியம் செய்யவேண்டும். "சகோதரரே நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" என பவுல் ஆலோசனை சொல்லுகிறார் (கலா.5:13).

ஊழியம் என்பது அது அன்பினாலே செய்யப்படவேண்டும். கட்டாயத்தின்பேரிலோ அல்லது வற்புறுத்தலின்பேரிலோ செய்வதல்ல. ஆண்டவரின் மீது நாம் கொண்டுள்ள அன்பினாலே செய்யவேண்டும். அவர் நமக்காக சிலுவையில் இரத்தம் சிந்தியிருக்கிறார். நாம் அவருக்காக என்ன செய்யப்போகிறோம். அன்பிலே பயமில்லை, பொறாமையில்லை,



வணகண்இல்லை, அன்பு சகலத்தையும் நம்பும் சகிக்கும். இந்த அன்பு தணிந்துபோயிவிடாது பார்த்துக்கொள்ளுங்கள்.

அன்பு தணிந்துபோகாது தன்னைப் பாதுகாத்து "முடிவு பரியந்தமும் நிலைத்திருப்பவனே இரட்சிக்கப்படுவான்" என திருமறையில் காண்கிறோம் (மத்.24:13). ஒரு துவக்கத்தைக் காட்டிலும் முடிவு நல்லது. ஒரு காரியத்தை செய்ய துவங்கிவிடலாம் ஆனால் முடிவுபரியந்தமும் நிலைத்திருந்து அதை செய்து முடிக்கவேண்டும். அதுவே அதன் தனிச்சிறப்பு. ஞானஸ்நானம் பெற்று விடுகிறார்கள். ஆனால் முடிவுபரியந்தமும் சபையில் நிலைத்திருந்து கர்த்தருடைய கட்டளைகளை நிறைவேற்றுகிறார்களா? என்றால் அநேகர் பின்வாங்கிப் போய்விடுகிறார்கள். அவர்களால் நிலைத்திருக்கமுடியவில்லை. இயேசுவின் மீது கைபோட்டவுடன் எல்லா சீடர்களும் அவரைவிட்டு ஓடிப்போய்விட்டார்கள்.

ஆனால் யோசேப்பு என்று சொல்லப்பட்ட அந்தரங்க சீஷன் அவர் சிலுவையில் மரித்து தொங்கிக் கொண்டிருக்கும்போது; "அவன் பிலாத்துவினிடத்தில் போய், இயேசுவின் சரீரத்தைக் கேட்டு அதை இறக்கி, மெல்லிய துப்பட்டியிலே சுற்றி, கன்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒருவனும் வைக்கப்படாதுமாயிருந்த ஒரு கல்லறையிலே வைத்தான்" (லூக்.23:52,53). இவன் தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவனும் யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனு மாயிருந்தான் என காண்கிறோம். அந்நாட்களில் யூதர்களாலே ஆண்டவர் இயேசுவுக்கு இத்தனை பாடுகள் நடந்தது. அந்த யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனாயிருந்து துணிந்து இயேசுவின் சரீரத்தைப் பெற்று அதை அடக்கம்செய்தான். இவனுடைய அன்பு தணிந்துபோகவில்லை. எதைக்குறித்தும் பயப்படவில்லை.

அந்நாட்களில் இயேசுவை சிலுவையில் அறைந்து கொன்றதைப்போல நம்மையும் கொன்றுபோடுவார்கள் என்ற பயம் எல்லோருக்குள்ளும் இருந்தது. ஆனாலும் இந்த யோசேப்பு பயப்படாமல் இக்காரியத்தை செய்தான். இவன் கிறிஸ்துவினுடைய போதனையில் நிலைத்திருந்த ஒரு சீஷனாக காணப்பட்டான். அன்பானவர்களே, ஆபத்தைக் கண்டு ஓடுவதோ, அல்லது மறுதலிப்பதோ ஒரு சீஷனுக்கு அழகல்ல. நாம் பெற்றுக்கொண்ட சத்தியத்திற்காக போராட வேண்டியவர்களாயிருக்கிறோம். மாற்.4:17-ல் சொல்லப்பட்டபடி "தங்களுக்குள்ளே வேர்கொள்ளாதபடியால், கொஞ்சக்காலமாத்திரம் நிலைத்திருக்கிறார்கள், வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைகிறார்கள்; இவர்களே கற்பாறை நிலத்தில் விதைக்கப்பட்டவர்கள்". நீங்கள் எப்படிப்பட்டவர்களாயிருக்

கிறீர்கள். யோசேப்பைப்போல துணிவுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? அல்லது ஆண்டவர் மீது கைபோட்டவுடனே அவரை விட்டு ஓடிப்போன சீடர்களைப்போல இருக்கிறீர்களா?

பவுல் சொல்லுகிறார்; "நல்ல போராட்டத்தைப் போராடினேன்; ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்" என்கிறார் (2தீமோ.4:7). அன்பு தணிந்துபோகாது காத்துக்கொண்டு பவுல் தன்னுடைய ஓட்டத்தை முடித்தார். ஆகையால் அவருக்கு நீதியின் கிரீடம் வைக்கப்பட்டிருக்கிறதாக எழுதுகிறார். அவருக்கு மாத்திரமல்ல கர்த்தருடைய பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் என எழுதுகிறார். அந்த நீதியின் கிரீடத்தை பெற்றக்கொள்ளத்தக்கதாக நல்ல போராட்டத்தை இவ்வுலகத்தில் போராடி உங்களுடைய ஓட்டத்தை முடிக்க முயற்சி எடுங்கள்.

**கேள்வி**

**அன்பு ஒழிந்துபோகுமா?**

உலகத்தில் உள்ள எல்லாமே ஒரு நாள் அழிந்துபோகும். ஆனால் "அன்பு ஒருக்காலும் ஒழியாது தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்" என 1கொரி.13:8-ல் காண்கிறோம். ஒழிந்துபோகாத அன்பை யாராலும் அழிக்கமுடியாது இந்த அன்பிலே நிலைத்திருங்கள். "அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" (1யோவா.4:18).

தேவன் அன்பாகவே இருக்கிறார். ஆனபடியாலே அவர் எல்லோரையும் நேசிக்கிறார். அந்த அன்பிலே தணிந்துபோகாதிருந்து, உங்களுக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக யாவருக்கும் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யுங்கள். உங்களுடைய நன்மை ஒருநாளும் வீணாய் போவதில்லை. அவருடைய ஜீவபுஸ்தகத்தில் அவைகள் எழுதப்படுகின்றன. அதற்கேற்ற கூலியை கர்த்தர் உங்களுக்கு கொடுப்பார். அன்பில்லாதவன் தேவனை அறியான் என வேதம் சொல்லுகிறது. ஆகையால் ஒழிந்துபோகாத அந்த அன்பிலே நிலைத்திருங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திடநம்பிக்கை உண்டு;**
**அவன் பிள்ளைகளுக்கும்**
**அடைக்கலம் கிடைக்கும்." நீதி. 14:26**



# 13. மன்னிப்பு
# Forgiveness

மன்னிப்பு என்பது ஒரு மகத்தான செய்தியாகும். மன்னிப்பைப் பற்றி பேசிவிடலாம் ஆனால் மன்னிப்பது என்பது இருதயப்பூர்வமாக வரவேண்டிய ஒன்று. நாம் பிறரை மன்னிக்கும்போது நாம் மன்னிப்பைப் பெறுவோம். நம்முடைய ஆண்டவர் இது குறித்துப்போதிக்கும்போது; "நீங்கள் நின்று ஜெபம்பண்ணும்போது, ஒருவன்பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள்" என்கிறார் (மாற்.11:25). முதலாவது நம்முடைய ஜெபம் அதாவது வேண்டுதல் கேட்கப்பட வேண்டுமானால் நாம் பிறரை மன்னிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். பிறரை மன்னிக்காமல் இருந்துகொண்டு நாம் தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளும்போது அவர் அந்த ஜெபத்திற்கு பதில் கொடுப்பது எப்படி?

மேற்கண்ட வசனத்தின்படி நாம் பார்க்கும்போது முதலாவது, நாம் மற்றவர்கள் செய்யும் தவறை மன்னித்து விட்டு பின்பு தேவனிடத்தில் வேண்டிக்கொள்ளவேண்டும். நாம் மற்றவர்களை மன்னிக்காமல் இருந்துகொண்டு தேவனிடம் செல்வது ஏற்கப்படாது. இருவர் ஜெபம்பண்ணும்படி தேவாலயத்திற்கு சென்றார்கள்; "ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன். பரிசேயன் நின்று; தேவனே! நான் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப் போலவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்; என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம்பண்ணினான். ஆயக்காரன் தூரத்திலே நின்று தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு; தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான். அவனல்ல, இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப்போனான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஏனெனில் தன்னை உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றார்" (லூக்18:10-14).

மற்றவர்களை குறைசொல்லி தேவனை நோக்கி ஜெபித்த பரிசேயனுடைய ஜெபத்தைக் கர்த்தர் நிராகரித்தார். தன்னை முழுவதுமாக தாழ்த்தி தான் ஒரு பாவி என்பதை ஒத்துக்கொண்டு ஜெபித்த ஆயக்காரனுடைய

ஜெபத்தை கர்த்தர் அங்கிகரித்தார். ஆம், அன்பானவர்களே, நம்மை தேவனுடைய சமுகத்தில் தாழ்த்தும்போது கர்த்தரால் உயர்த்தப்படுவோம். பிறரை குறை சொல்லாமல் நாம் ஒரு பாவி என்பதை ஒத்துக்கொண்டு கர்த்தருடைய சமுகத்தில் முறையிடுவோம்.

அதைபோல மற்றொரு உவமையில் ஆண்டவர் குறிப்பிடும்போது; "ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன் பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்க வேண்டியதாயிருந்தது. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார். சீமோன் பிரதியுத்தரமாக; எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான் அதற்கு அவர் சரியாய் நிதானித்தாய் என்றார்" (லூக்.7:41-43).

சீமோன் சரியாய் நிதானித்து கர்த்தர் கேட்ட கேள்விக்கு பதில் அளித்தான். ஆனால் அவனோ ஆண்டவர் இயேசுவுக்கு கால்களை கழுவ தண்ணீர் கொடுக்கவில்லை, அவரை முத்தஞ்செய்யவில்லை. இயேசு சீமோன் வீட்டில் இருக்கிறார் என்று கேள்விப்பட்டு அவரை கண்டு தன் பாவங்களை கண்ணீரால் நனைக்க வந்த பாவியாகிய ஸ்திரீயோ, அவர் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்து, கண்ணீரினால் ஆண்டவருடைய கால்களை நனைத்து, தன் கூந்தலினால் அவைகளை துடைத்தாள். மேலும் ஆண்டவருடைய பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். அவளுடைய அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார். நாம் எந்த அளவு தேவனிடத்தில் அன்புகூருகிறோமோ அந்த அளவு அவர் நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். அதுபோல நாமும் பிறரை மன்னிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

அதைப்போல மற்றொரு உவமையில்; "பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன் பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும்; அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக் கட்டளையிட்டான். அப்பொழுது, அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி: ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான்.



அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். அப்படியிருக்க, அந்த உழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து, தொண்டையை நெரித்து நீ பட்ட கடனை எனக்குக் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து என்னிடத்தில் பொறுமையாயிரும் எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய் அவன் பட்டகடனை கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான். நடந்ததை அவனுடைய உடன் வேலைக்காரர் கண்டு, மிகவும் துக்கப்பட்டு ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததையெல்லாம் அறிவித்தார்கள். அப்பொழுது, அவனுடைய ஆண்டவன் அவனை அழைப்பித்து; பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால் அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். நான் உனக்கு இரங்கினதுபோல, நீயும் உன் உடன்வேலைக்காரனுக்கு இரங்கவேண்டாமோ என்று சொல்லி, அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரமபிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார்" என்றார் (மத்.18:23-35). நாம் மற்றவர்களை மனப்பூர்வமாக மன்னிக்கும்போது நம்மையும் பிதாவாகிய தேவன் மன்னிப்பார். நாம் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே நமக்கும் அளக்கப்படும் என்பதை மறந்துபோகாதிருங்கள்.

மன்னிக்கிற விஷயத்தில் முதலாவது இருப்பவர். நம்முடைய ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துதான். நாமெல்லாம் அந்த அளவு மன்னிக்க மாட்டோம். ஏதாவது ஒன்றைச் சொல்லி. அவனை எப்படி மன்னிப்பது அவன் செய்த காரியம் உனக்கெல்லாம் தெரியாது. உனக்கு நடந்திருந்தால் தானே உனக்குத் தெரியும் என்று சொல்லி மன்னிக்காமல் பழைய காரியங்களை நினைத்து மற்றவர்களை குற்றப்படுத்திக் கொண்டே இருப்போம். இயேசுவை பிடித்து வாரினால் அடித்து முள்முடியை அவர் தலையில் வைத்து, அடித்து, அவமானப்படுத்தி சிலுவையில் அறைந்தார்கள். இத்தனை பாடுகளையும் அவர் பொறுமையுடன் சகித்தார்.

நம்மால் ஒரு வார்த்தையைக்கூட தாங்கிக்கொள்ள முடியவில்லை. ஆண்டவர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர். அவரால்

உண்டாக்கப்பட்ட மனிதர்கள் அவர்மேல் பாய்ந்து பலவிதமான குற்றச்சாட்டுகளைச் சொல்லி, அவரை சிலுவையில் ஆணியடித்து, குற்றவாளிகள் இரண்டு பேரை அவருடைய வலதுபக்கத்தில் ஒருவனையும், அவருடைய இடது பக்கத்தில் ஒருவனையும் சிலுவைகளில் அறைந்தார்கள். இதையெல்லாம் தாங்கிக்கொண்டு வேதனையோடு இருந்த கர்த்தராகிய இயேசுவானவர்; "பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார்" (லூக்.23:34). இந்த மன்னிப்பின் வார்த்தையை நீங்களும் நானும் சொல்லமுடியுமா? என்பதை சற்று நினைத்துப்பாருங்கள். மற்றவர்களை மன்னிப்பதற்கு அளவு இல்லை. அந்த அளவு அவர்களை மன்னித்தார். அவர்களுக்காக பிதாவாகிய தேவனைநோக்கி வேண்டிக்கொள்ளவும் செய்தார்.

அதைப்போல அவருடைய சீடர்களில் ஒருவனாகிய ஸ்தேவான் ஒரு வல்லமையான பிரசங்கத்தை செய்துகொண்டிருந்தான். அதைக்கேட்டுக்கொண்டிருந்த ஜனங்கள் அவனுக்கு கொடுத்த பரிசு என்னவென்றால் அவனைக் கல்லால் அடித்தார்கள். அவன் இயேசுவின் உண்மையான சீஷனாக இருந்தபடியால் அவர்களை அவன் திட்டவும் இல்லை. அவர்கள் அடித்த கல்லை எடுத்து அவர்களை திரும்பவும் அடிக்கவுமில்லை. மாறாக "அவனோ, முழங்காற்படியிட்டு ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டு சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்" (அப்.7:60).

ஆண்டவர் நமக்கு மாதிரியாக எவ்வளவோ போதனைகளை வைத்திருக்கிறார். அவைகளை புதிய ஏற்பாட்டு புத்தகத்தில் படிக்கிறோம். ஆனால் அவைகளின்படி நாம் நடக்கிறோமா என்றால் இல்லை. அநேகர் பிரசங்கிக்கிறார்கள். ஆனால் அவைகளின் படி நடப்பதில்லை. ஆனால் முதல் நூற்றாண்டு சீடர்கள் அந்தவிதமாக நடந்தார்கள், அதை அப்படியே கைக்கொண்டார்கள். இயேசு சிலுவையில் மற்றவர்களை மன்னித்து ஜெபித்ததைப்போல இந்த ஸ்தேவான் தன்னை கல்லால் அடித்தவர்களுக்காக ஆண்டவரை நோக்கி ஜெபித்தான். இது மன்னிப்பின் மகத்தான செயலாக இருக்கிறது அல்லவா! நீங்கள் இந்த விதமாக உங்களுக்கு விரோதமாக இருப்பவர்களை மன்னிப்பீர்களா! அப்படி மன்னிக்கும்போது உங்களுடைய பாவங்களை கர்த்தர் மன்னிப்பார்.

மனந்திரும்பிய ஒரு மகனைப்பற்றி பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். அவன் தன்னுடைய பங்கை பிரித்துக்கொடுக்கும்படி கேட்டு வாங்கிக்கொண்டு தூரதேசத்திற்கு சென்று துன்மார்க்கமாய் வாழ்ந்து



எல்லாவற்றையும் செலவு செய்தான். பணம் முற்றிலும் தீர்ந்தவுடன். பன்றிகளை மேய்க்கும் வேலையில் அமர்த்தப்பட்டான். பன்றிகளுக்கு கொடுக்கும் உணவுகூட அவனுக்குக் கிடைக்காமல் கஷ்டப்பட்டான். அப்பொழுது அவனுக்கு புத்தி வந்தது. நம்முடைய வீட்டில் வேலைக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். "நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்; தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு விரோதமாகவும் பாவஞ்செய்தேன். இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல, உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி" மனந்திரும்பினான் (லூக்.15:18,19).

புத்தி வந்தபோது மனந்திரும்பிய இந்த மனிதனைப்போல மனந்திரும்பும்போது, பிதாவாகிய தேவன் நம்மையும் மன்னித்து, ஏற்றுக்கொண்டு மனந்திரும்பி தன்னிடம் வந்த அந்த குமாரனுக்கு அவன் தகப்பன் எப்படி விருந்து செய்தானோ அதைப்போல நமக்கும் பிதாவாகிய தேவன் செய்வார். புதிய மனிதனாக மாற்றப்படுவோம். நீங்கள் இன்றே மாற்றப்பட உங்களுடைய பழைய சுபாவங்களை விட்டு தேவனிடத்திற்கு திரும்புங்கள். மற்றவர்களை மன்னியுங்கள் அப்பொழுது உங்களுடைய தப்பிதங்களையும் கர்த்தர் மன்னிப்பார்.

**கேள்வி**

**பரலோகத்தில் உள்ள தேவனைப்போல நாமும் பூரணமானவர்களாக மாற சாத்தியம் உண்டா?**

சாத்தியமில்லாத ஒன்றை வேதம் நமக்குப்போதிக்காது. நம்முடைய ஆண்டவரும் அதை சொல்லமாட்டார். அவரைப்போல நாம் ஒவ்வொருவரும் மாற்றப்படவேண்டும் என்பதுவே தேவனுடைய விருப்பம். ஆகையால் தமது ரூபத்தின்படியே நம்மை சிருஷ்டித்தார். "பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரண சற்குணராயிருக்கிறதுபோல, நீங்களும் பூரண சற்குணராயிருக்கக் கடவீர்கள்" (மத்.5:48). அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். நல்லோருக்கும் மழைபெய்கிறது தீயோருக்கும் மழை பெய்கிறது. மழை நமக்கு மட்டும் பெய்யவில்லை.

இதிலிருந்து நாம் என்ன தெரிந்து கொள்கிறோம் கர்த்தர் எல்லோரையும் நேசிக்கிறார். அவருக்கு வேண்டாதவர்கள் என்று ஒருவரும் பூமியில் இல்லை. எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பதுவே அவருடைய விருப்பமாயிருக்கிறது. அவர் எப்படி இருக்கிறாரோ அதைப்போல ஒவ்வொருவரும் இருக்க வேண்டும். அவர் பூரண சற்குணராயிருப்பதுபோல

நாமும் பூரண சற்குணராக மாறுவோம். அதற்காகவே ஆண்டவர் இயேசு இந்த உலகத்தில் வந்து மனிதனைப்போல மாமிசத்தில் காணப்பட்டு, மனிதர்களைப்போல உண்டு, உறங்கி, மனிதனுக்கு வரும்பாடுகளைப்போல அவருக்கும் பல பாடுகள் வந்தபோதும் அவைகளையெல்லாம், ஜெயித்து நமக்கு மாதிரியை பின்வைத்துப்போயிருக்கிறார்.

அவைகளை நாம் தொடர்ந்து சென்று கிறிஸ்துவின் வெற்றி வீரர்களாக இப்பூயில் தேவசித்தம் செய்யவேண்டும். பூமிமுழுவதும் கர்த்தரை அறிகிற அறிவில் வளர நீங்களும் நானும் ஒவ்வொருநாளும் பாடுபடவேண்டியவர்களாக இருக்கிறோம். தேவன் தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக! உங்களுக்காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

## 14. அவருடைய சத்தியத்தை மேய்ந்துகொள்
## Feed On His Faithfulness

**ச**த்தியம் சத்தியம் என்று சொல்லக் கேள்விப்படுகிறோம். அந்த சத்தியத்தை குறித்து நீங்கள் ஆராய்ந்து பார்த்ததுண்டா? சத்தியம் நம்மை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுவிக்கக்கூடியது. சத்தியபரராகிய இயேசுவையும் அவருடைய மேலான சத்தியங்களையும் இன்றைய நாள் செய்தி வேளையில் தியானித்து நாம் அதை மேய்ந்து கொள்ளுவோம். வேதம் சொல்கிறது; "கர்த்தரை நம்பி நன்மைசெய், தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள்" (சங்.37:3).

நன்மைசெய்கிறவர்கள் பிரதிபலன் எதிர்பார்த்து நன்மைசெய்வார்கள். ஆனால் வேதம் கர்த்தரை நம்பி நன்மைசெய் என போதிக்கிறது. உங்களுடைய நன்மை எப்படிப்பட்டதாயிருக்கிறது? கைமாறு கருதாமல் நன்மை செய்கின்றீர்களா? நாம் நன்மை செய்து, நன்மை செய்து என்னத்தைக் கண்டோம். நமக்கு எல்லாமே தீமையாகத்தான் முடிகிறது என்று சொல்லுகிறீர்களா? கவலைப்படாதிருங்கள் கர்த்தரை நம்பி நன்மைசெய்ய பழகுங்கள். நீங்கள் செய்த நன்மைக்கு ஏற்ற பலனை கர்த்தரால் நிச்சயம் பெற்றுக்கொள்வீர்கள். யாக்கோபு சொல்லுகிறார்; "ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்" (யாக்.4:17). பாவம் பல வழிகளில் உருவம் கொள்ளுகிறது. அதில் ஒரு வழிதான் நன்மைசெய்ய அறிந்தும் அதைச் செய்யாமற்போவது. நமக்குத் தெரிகிறது ஒருவன் வஸ்திரம் இல்லாமல் இருக்கிறான். அவனைப் பார்த்தும் பார்க்காதவண்ணமாக கடந்துசெல்வோமென்றால் அது பாவமாயிருக்கிறது.



நம்மிடத்தில் பணம் இருக்கிறது, ஒரு வஸ்திரத்தை வாங்கிக்கொடுக்க திரணியிருக்கிறது. பின்பு தயக்கம் ஏன்? அதை உடனே செய்யவேண்டும். யாராவது ஒருவர் அதைச் செய்யட்டும் என்று கண்டும் காணாமற்போவோமானால் தேவனுடைய பார்வையில் அது குற்றமாயிருக்கிறது. மேலும், "நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம்" என பவுல் கலாத்திய சபையாருக்கு எழுதுகிறார் (கலா.6:10). பாத்திரம் அறிந்து பிச்சையிடு என்று சொல்லப்படுவதை கேள்விப்பட்டிருக்கிறோம். ஏன், எதற்காக இப்படிச் சொல்லுகிறார்கள். நாம் செய்யக்கூடிய உதவி அவர்களுக்கு சென்றடைய வேண்டும். ஏமாற்றுக்காரர்கள் அதிகமாக காணப்படுகிறார்கள். பஸ் நிலையங்களில் அநேகர் பிச்சையெடுப்பதைப் பார்த்திருப்பீர்கள்.

அவர்களைப் பற்றி ஒரு காரியத்தை நான் கேள்விப்பட்டேன். சிலர் பிச்சை எடுத்து அந்தப் பணத்தை வட்டிக்கு விடுவதாக கேள்விப்பட்டேன். இப்படிப்பட்டவர்களுக்கு நாம் உதவி செய்வோமானால் அவர்கள் அந்த பணத்தை வட்டிக்கு கொடுத்து எந்தெந்த விதத்தில் அதை செலவு செய்கிறார்களோ நமக்குத் தெரியாது. ஆகையால் பாத்திரம் அறிந்து உதவிசெய்ய வேண்டியவர்களாயிருக்கிறோம். கூடுமானால் வசனம் சொல்லுகிறபடி நாம் விசுவாச குடும்பத்தார்களுக்கு உதவிடவேண்டும். வேதாகமத்தில் உதவியைப் பெற்றுக்கொண்ட அநேகர் விசுவாசிகளாகவே இருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக பாருங்கள். சாறிபாத் விதவை, ரூத், நகோமி, கானானிய ஸ்திரீ போன்றோர். "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" (நீதி.19:17).

நாம் ஏழைக்கு இரக்கம் செய்யும் போது கர்த்தருக்கே கடன் கொடுக்கிறவர்களாக இருக்கிறோம். ஏழைகள் நமக்குத் திரும்பக் கொடுக்கமாட்டார்கள். அவர்களால் இயலாது. அப்படிப்பட்டவர்களுக்கே நாம் உதவி செய்யவேண்டியவர்களாயிருக்கிறோம். அவனுடைய நிலைமை அவன் ஏழையாய் பிறந்திருக்கிறான் என்று அவனை ஏளனம் செய்யக்கூடாது. நம்மால் முடிந்த அளவு அப்படிப்பட்டவர்களுக்கு உதவிடவேண்டும். "எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்" என கொலோசெய புத்தகத்தில் வாசிக்கிறோம் (கொலோ.3:24). நாம் யாருக்குச்செய்தாலும் முதலாவது நாம் நினைவுகூர வேண்டிய ஒரு விஷயம் என்னவென்றால் அதை நான் அவனுக்காகச் செய்யவில்லை. கர்த்தருக்காக செய்கிறேன் என்ற எண்ணத்தோடு

செய்யவேண்டும். சிலர் இதை நினைக்காமல் அவனுக்கு நான் அதைச் செய்தேன் இதைச்செய்தேன் நன்றியில்லாமற்போய்விட்டான் என்று தூற்ற ஆரம்பித்துவிடுவார்கள். இப்படி கவலைப்படுவதை தவிர்க்க முதலாவது எதைச் செய்தாலும் அதை கர்த்தருக்கென்று செய்ய ஆரம்பியுங்கள். அதற்கேற்ற பலனை கர்த்தரால் பெற்றுக் கொள்வீர்கள்.

பேதுரு சொல்லுகிறார்; "ஜீவனை விரும்பி, நல்ல நாட்களைக் காணவேண்டுமென்றிருக்கிறவன் பொல்லாப்புக்குத் தன் நாவையும், கபடத்துக்குத் தன் உதடுகளையும் விலக்கிக்காத்து, பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தைத் தேடி அதைப் பின்தொடரக்கடவன்" என்கிறார் (1பேது3:10,11). நாமெல்லாரும் ஜீவனை விரும்புகிறோம். ஜீவனை விரும்பாதவர்கள் இருக்க வாய்ப்பு இல்லை. எல்லோருமே ஜீவனை விரும்புவார்கள். ஆகையால் நாம் செய்யவேண்டுவதென்ன? நல்ல நாட்களைக் காணவேண்டு மென்றிருக்கிற நாம் பொல்லாப்புக்கு நம்முடைய நாவையும், கபடத்துக்குத் நம் உதடுகளையும் விலக்கிக் காத்து நன்மை செய்து சமாதானத்தை தேடி அதைத் தொடரவேண்டும். நன்மைசெய்வதால் நற்பெயர் வரும் என்று சொல்லிவிட முடியாது.

ஏனென்றால் உலகத்தையே தம்முடைய நன்மையால் நித்தம் வழிநடத்தும் ஆண்டவருக்கு இந்த உலகம் என்னத்தைக் கொடுத்ததோ, அதையே தான் நமக்கும் கொடுக்கும். பச்சமரத்துக்கே இப்படி என்றால் பட்டமரமாகிய உங்களுக்கு எப்படியோ! என்று சொல்லப்பட்டபடி நடக்கும். நாம் நன்மை செய்யும்படியாக உருவாக்கப்பட்டுள்ளோம், நற்பெயருக்காக அல்ல. நன்மைசெய்வதில் சோர்ந்துபோகாதிருக்க வேண்டும். நல்ல சமாரியனைப்பற்றி ஒவ்வொரு சபைகளிலும் பிரசங்கிக்கிறார்கள். அதை நாம் கேள்விப்படுகிறோம்.

குற்றுயிராக கிடந்த அந்த மனிதனைக் கண்டு அவன் மீது "மனதுருகி, கிட்டவந்து அவனுடைய காயங்களில் எண்ணெய் வார்த்து காயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான்" (லூக்.10:32-34). அவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தான். ஆனால் அவனோ, தேவனை அறியாத ஒரு சமாரியன். தேவனை அறிந்த ஆசாரியனும், லேவியனும் குற்றுயிராய் கிடந்த மனிதனைக் கண்டு பக்கமாய் விலகிப்போனார்கள். நன்மை செய்ய அறிந்தவர்கள் அதைச் செய்யவில்லை.

சத்தியத்தை நாம் எப்படி மேய்ந்துகொள்ளமுடியும்? சத்தியத்தை படிப்பதின் வாயிலாகவும், அதைக்கைக்கொள்வதன் வாயிலாகவும், அதைக்கேட்பதின் வாயிலாகவும் சத்தியத்தை மேய்ந்துகொள்ளமுடியும். இயேசு



சொல்லுகிறார்; "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும்" என்றார் (யோவா.8:32). யூதர்கள் அவருடைய உபதேசத்தையும், சத்தியத்தையும் அறியாதிருந்தனர். அவருடைய உபதேசத்தை கேட்டு விசுவாசித்த யூதர்களைப் பார்த்து நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள். சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்.

இன்று ஆண்டவருடைய உபதேச சட்டங்களை அறியாமல் அவருக்கு சீஷராயிருப்பதாக சொல்லுகிறார்கள். அதற்கு வசனத்தில் இடமில்லை. கர்த்தருடைய உபதேசத்தை அறியாமல் சத்தியத்தை அறிய வாய்ப்பு இல்லை. சத்தியத்தை நாம் அறிந்துகொள்ளும்போது அது நம்மை பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலையாக்கும். மற்றபடி நாம் விடுதலையாவதற்கு வேறு வழி இல்லை. ஆகையால் எல்லோருமே சத்தியத்தை மேய்ந்துகொள்ள வேண்டும். பிரதான மேய்ப்பர் இயேசுவானவர் நல்மேய்ப்பராயிருக்கிறார். அவருடைய மேய்ச்சலின் ஆடுகளாய் இருப்பீர்களானால், நீங்கள் நன்கு போஷிக்கப்படுவீர்கள். மற்றபடி உங்களுடைய பிரயாசம் வீணாய்போய்விடும். பவுல் சொல்லுகிறார்; "சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்" என்பதாக சொல்லுகிறார் (2தீமோ.4;4). அது இப்பொழுதும் நடந்துகொண்டிருக்கிறது. அநேகர் சத்தியத்துக்குச் செவியை சாய்க்காமல். கட்டுக்கதைகளுக்கும், குறிசொல்லுதலுக்கும் செவிகொடுக்கிறார்கள். தங்களுக்காக அநேக போதகர்களை சம்பாதித்துக் கொண்டு அவர்களுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுத்து மோசம்போகிறார்கள். அவர்கள் வயிற்றுக்காக ஊழியம் செய்கிறவர்கள். தேவன் இப்படிப்பட்டவர்களை கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுக்கிறார் என்று அறிகிறோம்.

"சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார்" என காண்கிறோம் (2தெச.2:11,12). சத்தியத்தை நேசிக்காத ஜனங்களை இவ்விதமான கொடியவஞ்சகத்திற்கு தேவனே ஒப்புக்கொடுக்கிறார் என அறிகிறோம். நீ தேவனால் நேசிக்கப் படுவாயானால் சத்தியத்திற்கு உன் செவியை சாய்த்து அதைக் கேட்டு அதற்கு கீழ்ப்படியும்படியாக உன்னை ஒப்புக்கொடு. அப்பொழுது சத்தியம் உன்னை விடுதலையாக்கும். நீ சத்தியத்திற்கு செவி கொடாமல் மாயைக்கு உன்னை ஒப்புக்கொடுப்பாயானால்; இழிவான இச்சைரோகங்களுக்கு உன்னை தேவன் ஒப்புக்கொடுப்பார்.

அப்படியாக சிலரை ஒப்புக்கொடுத்ததை நாம் ரோம.1:28-33 வரை படிக்கிறோம் "தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்தினாலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு; பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும் நிறைந்தவர்களுமாய், புறங்கூறுகிறவர்களுமாய், அவதூறு பண்ணுகிறவர்களுமாய், தேவபகைஞருமாய், துராகிருதம் பண்ணுகிறவர்களுமாய், அகந்தையுள்ளவர்களுமாய், வீம்புக்காரருமாய், பொல்லாதவைகளை யோசித்துப் பிணைக்கிறவர்களுமாய், உணர்வில்லாதவர்களுமாய், உடன்படிக்கைகளை மீறுகிறவர்களுமாய், சுபாவ அன்பில்லாதவர்களுமாய், இரக்கமில்லாதவர்களுமாய் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் மரணத்திற்குப் பாத்திரராயிருக்கிறார் களென்று தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பை அவர்கள் அறிந்திருந்தும், அவைகளைத் தாங்களே செய்கிறதுமல்லாமல், அவைகளைச் செய்கிற மற்றவர்களிடத்தில் பிரியப்படுகிறவர்களுமாருக்கிறார்கள்". என 25 பாவங்களை நினைப்பூட்டுகிறார்.

இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கிற அன்பு சகோதரே, நீங்கள் சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள். அப்பொழுது இப்படிப்பட்ட பாவத்திலிருந்து விடுதலையாவீர்கள். சத்தியத்தை நாம் விதைக்கும்போது அதைமேய்ந்து கொள்ளும் ஜனங்களைப் பார்க்கும்போது நமக்கு எவ்விதமான சந்தோஷம் உண்டாகும். அதை யோவான் தன்னுடைய வாழ்க்கையில் கண்டார்.

"மூப்பனாகிய நான் சத்தியத்தின்படி நேசிக்கிற பிரியமான காயுவுக்கு எழுதுகிறதாவது; பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன். சகோதரர் வந்து நீ சத்தியத்திலே நடந்துகொள்ளுகிறாய் என்று உன்னுடைய உண்மையைக்குறித்துச் சாட்சி கொடுத்தபோது மிகவும் சந்தோஷப்பட்டேன். என் பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறார்கள் என்று நான் கேள்விப்படுகிற சந்தோஷத்திலும் அதிகமான சந்தோஷம் எனக்கு இல்லை" என்கிறார் (3யோவா.1-4). சத்தியத்திலே நாம் எல்லோரும் நடந்து அதை மேய்ந்துகொள்ளவேண்டும். அப்பொழுதே நாம் அவர் மேய்ச்சலின் ஆடுகளாவோம்.



**கேள்வி**

**யாருக்கு திறந்தவாசல் வைக்கப்பட்டிருக்கிறது?**

அவருடைய ஆடுகளுக்கு திறந்த வாசல் வைக்கப்பட்டிருக்கிறது. மேய்ப்பனானவன் மந்தையை மேய்த்துவிட்டு தன்னுடைய ஆடுகளை தொழுவத்திற்கு ஓட்டிச்செல்லுகிறான். ஆடுகள் அவனுடைய தொழுவத்தை அறிந்து அங்கே செல்கிறது. அதை அவன் திறந்துவைத்திருக்கிறான். நீங்கள் அவருடைய மேய்ச்சலின் ஆடுகளாய் இருப்பீர்களானால் உங்களுக்காக திறந்த வாசல் வைக்கப்பட்டிருக்கிறது. "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" என பிலதெல்பியா நாட்டு சபைக்கு கர்த்தர் திருவுளம்பற்றுகிறார் (வெளி.3:8).

உங்களுக்கும் திறந்த வாசல் வைக்கப்பட்டிருக்கிறது. எப்பொழுது என்றால்; நீங்கள் அவருடைய நாமத்தை மறுதலியாமல், உங்களுக்கு வரக்கூடிய சோதனையிலும், அவரையும், அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் நீங்கள் மறுதலியாமல் அவைகளை அறிக்கையிடும்போது. பேதுரு ஆண்டவரே காவலிலும் சாவிலும் உம்மைப் பின்பற்றி வருவேன் என்று சொன்னான் அன்று இரவே அவனுக்கு சோதனை வந்தது. நீ என்னை சேவல் கூவுகிறதற்கு முன்னமே மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று சொன்னார்.

அந்தப்படியாக அவரை அறியேன் என்று சொல்லி சபிக்கவும், சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உங்களுக்கும் அந்த விதமான சோதனை வரும் அவரை மறுதலியாமல். சத்தியத்தை பற்றிக்கொண்டு அறிக்கையிடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 15. மாயமற்ற விசுவாசம்

## The Genuine Faith

**வி**சுவாசம் எல்லோருக்குள்ளும் இருக்கிறது. அந்த விசுவாசம் மாயமற்ற விசுவாசமாயிருக்கிறதா? இந்த மாயமற்ற விசுவாசத்தை அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவிடம் கண்டார். "உன்னிலுள்ள மாயமற்ற விசுவாசத்தை நினைவுகூருகிறதினால், என் முன்னோர்கள் முதற்கொண்டு சுத்த மனச்சாட்சியோடே ஆராதித்துவரும் தேவனை நான் ஸ்தோத்திரிக்கிறேன்" என்றார் (2தீமோ.1:4). இப்படிப்பட்ட விசுவாசத்தை நாம் பார்ப்பது அரிதாயிருக்கிறது. இந்த "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின்

உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. அதினாலே முன்னோர்கள் நற்சாட்சி பெற்றார்கள்" (எபி.11:1,2). நாம் காணாத ஒரு காரியத்தை விசுவாசிக்கும்போது அது உண்மையிலே இருக்கிறது என்று நம்புகிறோம். அதுவே சிறந்த விசுவாசமாயிருக்கிறது. எடுத்துக்காட்டாக பாருங்கள் "விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சிபெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்; அவன் மரித்தும் இன்னும் பேசுகிறான்" (எபி.11:4).

காயீனும், ஆபேலும் காணிக்கைகளை தேவனுக்குச் செலுத்தினார்கள். இதிலே குறிப்பாக ஆபேலுடைய காணிக்கைகளை கர்த்தர் அங்கிகரித்தார். காயீனுடைய காணிக்கைகளை அவர் அங்கிகரிக்கவில்லை. இருவருமே காணிக்கை செலுத்தினார்கள். ஒருவனுயை காணிக்கையை மட்டும் அங்கிகரித்ததன் காரணம் என்ன? "தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டுவந்தான். ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கிகரித்தார்" என ஆதி.4:4-ல் படிக்கிறோம். ஆபேல், காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான் என வேதம் தெளிவாக எடுத்துரைக்கிறது. காணிக்கை செலுத்துவதில் போதனை இல்லாத நாட்களில் ஆபேலுடைய இருதயத்தில் தேவனுக்கு முதல் தரமான கொழுமையானதை செலுத்த வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. காயீனுடைய விஷயத்தில் நாம் பார்க்கும்போது; அவன் நிலத்தின் கனிகளைக் கர்த்தருக்குக் காணிக்கையாக கொண்டுவந்தான் என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. அவனோ ஒரு விவசாயி நிலத்தை பயிரிடுகிறவன். அதில் விளைந்த கனிகளைக் கர்த்தருக்கு கொண்டுவந்தான். ஆபேலுக்கும் காயீனுக்கும் என்ன வித்தியாசம்.

ஆபேல் தலையீற்றுகளில் முதன்மையானதை செலுத்தினான் என்பதே குறிப்பிடத்தக்கது. முதற்பலனை கொடுத்தான் என்பது இதன் தனிச்சிறப்பு என்று சொல்லலாம். இருதயத்தைப் பார்க்கிற கர்த்தரை, துவக்ககாலத்திலே ஆபேல் நன்கு புரிந்துகொண்டு கர்த்தருக்குக் காணிக்கை செலுத்தினான். அவன் மரித்தும் இன்றும் பேசுகிறான் என்பது அவனுக்குக் கிடைத்த மாபெரும் பாக்கியம் என்றே சொல்லவேண்டும். இவர்கள் எல்லாம் அநேக காரியங்களைக் காணாதிருந்தும் விசுவாசத்தினாலே கர்த்தரை தொழுதுகொண்டார்கள்.

விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமை நாம் அறிவோம். "ஆபிரகாம் பெயெர்செபாவிலே ஒரு தோப்பை உண்டாக்கி, சதாகாலமுமுள்ள தேவனாகிய



கர்த்தருடைய நாமத்தை அவ்விடத்தில் தொழுதுகொண்டான்" என ஆதி.21:33ம் வசனத்தில் வாசிக்கின்றோம். அவனை அழைத்த கர்த்தரை நம்பி தன்னுடைய வீட்டையும், தேசத்தையும், இனத்தையும் விட்டு விட்டு, தேவன் காண்பிக்கிற தேசத்திற்கு கடந்துசென்று அங்கு தேவனை தொழுதுகொண்டான். அநேகர் வெளியிடங்களுக்கு சென்றுவிட்டால் சபைக்கு போக வசதியில்லை. இங்கு சபை எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை. ஆகையால் நாங்கள் தேவனை தொழுதுகொள்ள முடியவில்லை என்று சாக்குபோக்கு சொல்வதை கேள்விப்படுகிறோம்.

இந்த ஆபிரகாமைப்போல செல்லக்கூடிய இடத்தில் நாமே ஒரு தொழுகையை ஆரம்பித்தால், தேவனை அறியாத புறஜாதி மக்களும் ஜீவனுள்ள தேவனை தெரிந்துகொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படுமல்லவா! இதை ஏன் நீங்கள் செய்யக்கூடாது. வீட்டில் சபை நடத்தினால் அது நன்றாயிருக்காது என்று தங்களுக்கு தாங்களே ஏதாவது ஒரு சில காரியங்களைச் சொல்லி அதற்கு தடையாக இருந்துவிடுகிறார்கள். ஆபத்திலே மாட்டிக்கொண்ட ஒரு நபர் தேவனை நோக்கி கதறுவதில்லையா, அவர் இந்த இடத்திலிருந்து கர்த்தரை நோக்கி கூப்பிடக்கூடாது, சபைக்கு சென்றுதான் ஜெபிக்க வேண்டும் என்று நினைப்பாரேயானால் அவர் காப்பாற்றப்படுவது எப்படி? எங்கும் பிதாவை தொழுதுகொள்ளும் காலத்தில் நாம் இருக்கிறோம். நம்முடைய விசுவாசம் சரியாய் இருக்கும்போது நாம் செல்லக்கூடிய இடங்களில் ஒரு இடத்தை தெரிந்துகொண்டு அங்கே கர்த்தரை நாம் தொழுது கொள்ளலாம்.

மாயமற்ற விசுவாசம் நம் முற்பிதாக்களிடம் இருந்ததைப்போல தீமோத்தேயுவின் பாட்டியினிடத்திலும் அவனுடைய தாயினிடத்திலும் இருந்ததாக பவுல் குறிப்பிடுகிறார்; "அந்த விசுவாசம் முந்தி உன் பாட்டியாகிய லோவிசாளுக்குள்ளும் உன் தாயாகிய ஐனிக்கேயாளுக்குள்ளும் நிலைத்திருந்தது; அது உனக்குள்ளும் நிலைத்திருக்கிறதென்று நிச்சயித்திருக்கிறேன்" என்று எழுதுகிறார் (2தீமோ.1:5). பாரம்பரியமாக அநேகரிடத்தில் தேவையற்ற காரியங்கள் தொற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால், மாயமற்ற விசுவாசம் தீமோத்தேயுவின் குடும்பத்தில் காணப்பட்டது. அவனுடைய பாட்டி காலமுதல் அது அவர்களுடைய ஜீவியத்தில் தொடர்ந்தது. அன்பானவர்களே, நாம் ஆபிரகாமின் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்போமானால் நம்முடைய ஜீவியத்திலும் நம்முற்பிதாக்களின் விசுவாசம் காணப்படவேண்டும். காணாததை அவர்கள் விசுவாசத்தினாலே பெற்றுக்கொண்டார்கள்.

யோவான் 9-ம் அதிகாரத்தில் ஒரு பிறவிக்குருடன் ஆண்டவர் இயேசுவினால் பார்வையடைந்தான். அவன் பார்வையடைந்தவுடன் அவன்

இயேசுவை பார்க்கவில்லை. ஏனென்றால்; அவர் அவனை நோக்கி: நீ போய் ஸீலோவாம் குளத்திலே கழுவு அப்பொழுது பார்வையடைவாய் என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டார். பின்பு ஒரு முறை அவனை சந்திக்கும்போது நீ அவரைக் கண்டிருக்கிறாய் உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார். "உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி அவரைப் பணிந்துகொண்டான்" (யோவா.9:38). காணாத அவன் விசுவாசத்தினாலே பின்பு கண்டுகொண்டான்.

அன்பானவர்களே, காணாதவர்கள் காணும்படியாகவும் காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்று இயேசு சொல்கிறார். நீங்கள் அவரை காணவில்லை. ஆனால் விசுவாசிப்பீர்கள் என்றால் ஒரு நாள் அவரைக் காண்பீர்கள். இந்தவிதமான நம்பிக்கையிலே நாம் வளர்ந்துபெருக வேண்டும். பவுல் தீமோதேயுவுக்கு சொல்லும் ஆலோசனை என்னவென்றால்; "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" என்கிறார் (2தீமோ.4:12).

எல்லாவற்றிலும் ஒரு ஊழியன் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்க வேண்டியவனாயிருக்கிறான். அவனுடைய பிரசங்கத்தையும், நடத்தையையும் ஒவ்வொருவரும் உன்னிப்பாக கவனிப்பார்கள். ஆகையால் பவுல் எழுதும்போது குறிப்பாக விசுவாசத்திலும் என்ற ஒரு வார்த்தையை படிக்கிறோம். ஊழியனுக்கு விசுவாசமானது மிக அவசியம்.

அநேகரை வழிநடத்தக்கூடிய அவனுக்கே விசுவாசமில்லாமல், நம்பிக்கையற்றவனாயிருப்பானேயானால் விசுவாசிகளை எப்படி விசுவாசப் பாதையில் நடத்தமுடியும். பவுலுடைய நாட்களில் பேதுருவினுடைய மாய்மாலத்தை பவுல் கடிந்துகொள்கிறதை நாம் கலாத்தியர் 2:11-14 வசனங்களில் படிக்கிறோம். "எப்படியெனில், யாக்கோபினிடத்திலிருந்து சிலர் வருகிறதற்குமுன்னே அவன் புறஜாதியாருடனே சாப்பிட்டான்; அவர்கள் வந்தபோது, விருத்தசேதனமுள்ளவர்களுக்குப் பயந்து, விலகிப் பிரிந்தான். மற்ற யூதரும் அவனுடனேகூட மாயம்பண்ணினார்கள் பர்னபாவும் இழுப்புண்டான்.

இப்படி அவர்கள் சுவிசேஷத்தின் சத்தியத்திற்கேற்றபடி சரியாய் நடவாததை நான் கண்டபோது, எல்லாருக்கும் முன்பாக நான் பேதுருவை நோக்கிச் சொன்னது என்னவென்றால்; யூதனாயிருக்கிற நீர் யூதர் முறைமையாக நடவாமல், புறஜாதியார் முறைமையாக நடந்துகொண்டிருக்க, புறஜாதியாரை யூதர் முறைமையாக நடக்கும்படி நீர் எப்படிக்



கட்டாயம்பண்ணலாம்? என்றான். யாராக இருந்தாலும் உபதேசவிஷயத்தில் நாம் கடிந்து கொண்டு கண்டனம் பண்ணி போதிக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். இதிலே பிரசங்கிக்கிற நாம் மிகவும் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாக வாழும்படி அநேகர் முயற்சிக்கிறார்கள். ஆனால் வேதம் நமக்குப்போதிப்பதென்ன? "விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்கவேண்டும்" என காண்கிறோம் (எபி.11:6).

தேவன் ஒருவர் உண்டென்பதை அநேகர் விசுவாசிப்பதில்லை. அப்படி விசுவாசிப்பார்களேயானால் அவர்கள் அவருக்குக் கீழ்ப்படிந்து தேவசித்தம் செய்ய ஒவ்வொரு நாளும் தங்களை ஒப்புக்கொடுப்பார்கள். பிசாசுகள் விசுவாசிப்பதைப்போல விசுவாசிக்கிறார்கள். அந்த விசுவாசம் ஒருவனுக்குள் இரட்சிப்பை கொண்டுவராது. ஏனெனில் பிசாசுகளும் தேவன் ஒருவர் உண்டென்று சொல்லி நடுங்குகின்றன. இதைக்குறித்து யாக்கோபு 2-ம் அதிகாரத்தில் 19வது வசனத்தில் படிக்கிறோம். நம்மில் உள்ள விசுவாசத்தை காத்துக்கொண்டு ஒவ்வொருநாளும் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக வாழவேண்டும். பேதுரு சொல்லுகிறார்; "கடைசிகாலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்புக்கு ஏதுவாக விசுவாசத்தைக்கொண்டு தேவனுடைய பலத்தினாலே காக்கப்பட்டிருக்கிற உங்களுக்கு அந்தச் சுதந்தரம் பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறார் (1பேது.1:5).

விசுவாசத்தைக் காத்துக்கொண்டு முடிவு பரியந்தம் நிலைத்திருப்பவர்களே இரட்சிக்கப்படுவார்கள். மற்றபடி உங்களுடைய விசுவாசம் வீணாய்போய்விடும். மேலும், சொல்லுகிறார்; "உங்கள் விசுவாசமும் நம்பிக்கையும் தேவன்மேலிருக்கும்படி, அவரை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவருக்கு மகிமையைக் கொடுத்தார். ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள்" என்கிறார் (1பேது.1:21,22).

அன்பு திரளான பாவங்களை முடும். ஆகையால் நாம் ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூரவேண்டியவர்களாயிருக்கிறோம். அன்பு

செலுத்துகிறேன் என்று வாயினால் சொல்லிவிட்டு சகோதரனுக்கு விரோதமாக நடப்போமென்றால் அந்த அன்பு எப்படிப்பட்ட அன்பாயிருக்கும். நாம் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாயிருந்து மாயமற்ற விசுவாசத்தோடு அன்பு செலுத்தவேண்டும். அன்பில்லாதவன் தேவனை அறியான் ஏனென்றால்; தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் நம்மில் ஒருவருக்கும் தூரமானவரல்லவே.

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பான வாசகரே உங்களிலே மாயமற்ற விசுவாசத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். இந்த விசுவாசத்தை நம்முடைய முற்பிதாக்கள் பெற்றவர்களாயிருந்து, கர்த்தருடைய சமுகத்தில் அநேக ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்கள். மேலும் "விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன் கொண்டார்கள்; யுத்தத்தில் வல்லவர்களானார்கள். அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்" (எபி.11:33,34). இவைகளையெல்லாம் தங்களுடைய விசுவாசத்தினாலே நடப்பித்து விசுவாசத்தினாலே வெற்றிகொண்டார்கள்.

**கேள்வி**

**நம்முடைய மாயமற்ற விசுவாசத்தினால் நமக்குக் கிடைக்கும் பலன் என்ன?**

பலன் இல்லாமல் ஒரு காரியத்திற்காக போராடமாட்டோம். நாம் போராடுகிற ஒவ்வொன்றிற்கும் பலன் உண்டு. இதிலே ஆவிக்குரிய விஷயத்தில் அதிகமாகவே உண்டு. "உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள்" என பேதுரு குறிப்பிடுகிறார் (1பேது.1:9). ஆத்தும இரட்சிப்பு என்பது மிகவும் அருமையானது. நம்முடைய ஆத்துமா இப்பூமியில் இந்த மண்ணான சரீரத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறது. இந்த மண்ணான சரீரத்தை விட்டு ஒரு நாள் தேவனிடத்தில் எடுத்துக்கொள்ளப்படும். அப்பொழுது இந்த ஆத்துமா தேவனோடு நித்திய நித்தியமாக வாழவேண்டும். அதற்காவே நாம் தேவனுடைய கட்டளைகளின்படி ஒவ்வொருநாளும் வாழும்படி ஆசைப்படுகிறோம்.

பரிசுத்த வேதாகமம் அதை நமக்குப் போதிக்கிறது. மனிதன் எதை எதையே இரட்சிக்கிறான். ஆனால் அவனால் அவனுடைய ஆத்துமாவை இரட்சிக்க முடியாது. இரட்சிப்பு தேவனிடத்தில் இருக்கிறது. இரட்சிக்கிறவர் கர்த்தர். அவர் தமக்குச் சித்தமானவனை இரட்சிக்கிறார். அந்த இரட்சிப்புக்கு



தேவையானது பணமோ, பொருளோ இல்லை. உங்களுடைய விசுவாசம்! அந்த விசுவாசம் மாயமற்ற விசுவாசமாக இருக்கும்போது உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்படும். இந்த ஆத்தும இரட்சிப்பை பெற்றுக்கொள்ள உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 16. விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்

## I have kept the Faith

**ம**ரித்து பின்பு உயிர்த்தெழுதலில் முதற்பலனாக இருப்பவர் நம்முடைய ஆண்டவர் இயேசு ஒருவரே. அநேகர் மரித்து உயிர்த்தெழுந்ததாக சொல்லுகிறார்கள். அது வெறும் கட்டுக்கதையாகவே இன்றும் இருக்கிறது. அவர் உயிர்த்தெழுந்து இன்றும் ஜீவிக்கிறார். பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார் என அறிகிறோம். அவரை விசுவாசிக்கிற, அவரை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் இந்தவிதமான நம்பிக்கையிருக்கிறது. அவரை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். இந்தவிதமான நம்பிக்கை அப்போஸ்தலனாகிய பவுலுக்கு இருந்தது. ஆகையால் அவர் தீமோத்தேயு என்ற உத்தத் குமாரனுக்கு எழுதும்போது; "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்" என எழுதுகிறார் (2தீமோ.4:7). இந்த ஒரு வசனத்தில் மூன்று முக்கிய காரியங்களை பவுல் சொல்லுகிறார்.

**முதலாவது பவுல் நல்ல போராட்டதைப் போராடினேன் என்கிறார்.** பூமியில் பிறந்த ஒவ்வொருவருக்கும் பலவிதமான போராட்டங்கள் வாழ்க்கையில் நடக்கிறது. அதில் போராடி சிலர் வெற்றிகொள்ளுகிறார்கள். பலர் தோல்வியடைகிறார்கள். ஆனால் பவுல் நல்ல போராட்த்தைப் போராடினேன் என்று சொல்லுகிறார். அவருக்குக் கொடுக்கப்பட்ட போராட்டத்தை நல்லவிதமாக போராடி மேற்கொண்டார். பந்தையசலையில் எல்லோரும் ஓடுவார்கள். ஆனால் ஒருவனே பந்தையப் பொருளைப் பெற்றுக்கொள்ளுவான். அதற்காக அவர்களுடைய போராட்டமானது எப்படிப்பட்டதாக இருக்குமோ அவ்விதமாக போராடி வெற்றிகொண்டார்.

இயேசுவின் நாட்களில் அவருடைய பிறப்பு முதல் அவருடைய சிலுவை மரணம் வரை அவருக்குப்போராட்டம் இருந்தது என காண்கிறோம். சிலர் தங்களுக்கு வரும் பிரச்சனைகளையும் பாடுகளையும் எண்ணி எனக்கு வந்த பாடுகள் அந்த ஆண்டவனுக்குக் கூட வந்திருக்காது என்பார்கள். இப்படிச்சொல்லுகிறவர்கள் மத்தியில் இயேசுவுக்கு அத்தனை பாடுகளை தேவன் அநுமதித்தார். இயேசுவின் பிறப்பின்போது "கர்த்தருடைய தூதன்

சொப்பனத்தில் யோசேப்புக்குக் காணப்பட்டு; ஏரோது பிள்ளையைக் கொலைசெய்யத் தேடுவான்; ஆதலால் நீ எழுந்து, பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு எகிப்துக்கு ஓடிப்போய், நான் உனக்குச் சொல்லும்வரைக்கும் அங்கே இரு என்றான். அவன் எழுந்து, இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டிக்கொண்டு, எகிப்துக்குப் புறப்பட்டுப்போய், ஏரோதின் மரணபரியந்தம் அங்கே இருந்தான். எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன் என்று, தீர்க்கதரிசியின் மூலமாய்க் கர்த்தரால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது" (மத்.2:13-15). இயேசு குழந்தையாக இருந்தபோது யோசேப்பும் மரியாளும் அந்த குழந்தையை வைத்துக்கொண்டு இரவு பகல் பாராது மிகவும் கஷ்டப்பட்டிருக்கக்கூடும். ஏரோதின் மரணபரியந்தம் ஒவ்வொருநாளும் குழந்தைக்கு ஏதாவது ஆபத்து வந்தவிடுமோ என்ற அச்சத்தோடு இருந்திருப்பார்கள் அல்லவா?

அன்பானவர்களே, வானத்தையும் பூமியையும் உண்டாக்கின தேவன் இப்பூமியில் உள்ள ஒரு சிறிய ஊரிலே அதாவது எருசலேமிலே உள்ள பெத்லகேம் என்னும் ஒரு சிற்றூரிலே பிறந்து. இரவோடு இரவாக எகிப்துக்கு கொண்டு போகப்பட்டு வளர்க்கப்பட்டார். அவருக்குத்தான் பிறப்பின்போது எத்தனைபாடுகள். அந்நாட்களில் பெத்லகேமிலும் அதின் சகல எல்லைகளிலும் இருந்த இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் ஏரோது கொலைசெய்து போட்டான். எவ்விதமான துக்கம் அப்பகுதியில் உண்டாயிருக்கும். இதையெல்லாம் எண்ணிப்பார்க்கும்போது உங்களுக்கும் எனக்கும் வந்த பாடுகள் எம்மாத்திரம்.

மேலும், இயேசுவின் நாட்களில் "பஸ்கா என்னப்பட்ட புளிப்பில்லாத அப்பப்பண்டிகை சமீபமாயிற்று. அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக் கொலைசெய்யும்படி யோசித்து, ஜனங்களுக்குப் பயப்பட்டபடியினால், எவ்விதமாய் அப்படிச் செய்யலாமென்று வகைதேடினார்கள்" (லூக்.22:1,2). அவருடைய ஊழிய நாட்களிலும் அவருக்கு ஆபத்து காத்திருந்தது. தமக்கு விரோதமாக இருந்தவர்களைக்குறித்து அவர் கலங்கவில்லை. தாம் என்ன நோக்கத்திற்காக இப்பூமிக்கு பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டாரோ அந்தநோக்கத்தை அவர் செய்து முடிக்கும்வரை ஒலிவமலைகளிலும் தம்மை ஏற்றுக்கொண்டவர்கள் மத்தியிலும் இருந்து ராஜ்யத்தின் சுவிசேஷ சத்தியத்தை எடுத்துச்சொல்லி அநேகரை சத்தியத்தின் பாதையில் வழிநடத்தினார். அவருக்கு இருந்த போராட்டத்தைப்போல பவுலுக்கும் கொஞ்சம் இருந்தது. "யூதர்கள் பவுலைக் கொலைசெய்யும்படி ஆலோசனைபண்ணினார்கள்" என்று அப்.9:23-ல் படிக்கிறோம். இயேசுவை



கொலைசெய்ய தேடியதைப்போல பவுலையும் கொலைசெய்யும்படியாக சதித்திட்டம் தீட்டினார்கள். இத்தனை பாடுகளின் மத்தியிலும் பவுல் நல்ல போராட்டத்தை போராடினேன் என்கிறார்.

**இரண்டாது பவுல் ஓட்டத்தை முடித்தேன் என்கிறார்.** ஓட்டத்தின் துவக்கத்தைப் பார்க்கிலும் அதை முடிப்பது மிக சிறப்பானதாக இருக்கும். நாம் எல்லோரும் ஓடிக்கொண்டிருக்கிறோம். இன்னும் நம்முடைய பந்தையத்தை முடிக்கவில்லை. எப்படி முடிக்கப்போகிறோம் என்று தெரியாமல் ஓடிக்கொண்டிருக்கிறோம். அன்பானவர்களே, இயேசுவானவர் தம்முடைய பணிகளை செய்து நிறைவேற்றி ஒரு அழகான வார்த்தையை சொன்னார். என்னவென்றால், "பிதாவே, உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று மகா சத்தமாய்க் கூப்பிட்டுச் சொன்னார்; இப்படிச் சொல்லி ஜீவனை விட்டார்" (லூக்.23:46).

பூமியிலே அநேகர் மரிக்கும் தருவாயில் இருக்கும்போது பிள்ளைகளைப் பார்க்கவேண்டும் அல்லது மனைவியைப் பார்க்கவேண்டும் அல்லது உறவினர்களைப் பார்க்கவேண்டும் என்று சொல்லி பார்த்தபின்பு அவர்களுக்கு உயிர்போகும். நம் ஆண்டவர் யோசேப்பையோ அல்லது மரியாளையோ நேக்கவில்லை தம்மை அனுப்பின பிதாவை நோக்கிப்பார்த்து, அவருடைய கரங்களில் ஆவியை ஒப்புக்கொடுத்தார். இது அவருக்கும் பிதாவுக்கும் உள்ள ஐக்கியத்தை அதாவது ஒற்றுமையை நமக்கு வெளிப்படுத்துகிறது. நம்முடைய ஓட்டத்தை எப்படி நிறைவேற்றப்போகிறோம். ஸ்தேவான் என்ற தேவனுடைய தாசனை யூதமக்கள் கல்லால் அடித்து கொலைசெய்து போட்டார்கள். அவனுடைய பிரசங்க வாக்கியங்களை கேட்ட அவர்களுக்கு மனதில்லாமற்போனது. ஏகோபித்து பல்லைக் கடித்து அவனை கல்லால் அடித்தார்கள். "அவனோ, முழங்காற்படியிட்டு, ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்ற மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்" (அப்.7:60). விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடி, ஓட்டத்தை முடித்தவர்களில் சிலர் மரணத்தைத் தழுவியிருக்கிறார்கள். அதிலே குறிப்பாக ஸ்தேவான் ஒருவர். இன்னும் சில சீஷர்களை சிலுவையில் தலைகீழாகவைத்து ஆணியடித்ததாக வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் சொல்லுகிறார்கள். அந்தவிதமான பாடுகளும் பிரச்சனைகளும் வந்தபோதும். கர்த்தருடைய நாளிலே உயிர்த்தெழுவோம் என்கிற நம்பிக்கையிலே தங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுத்தார்கள்.

**மூன்றாவதாக பவுல் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன் என்கிறார்.** "மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கி நிற்கிற

பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்கிறார் (எபி.12:1). நாம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். அந்த விசுவாசத்தை நம்மில் துவக்கியவரே அவர்தான். இதை நீங்கள் அறிவீர்களா? அந்த விசுவாசத்தை முடிக்கிறவரும் அவர்தான். ஆகையால் நம்பிக்கையோடு ஓடுங்கள்.

உங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ளுங்கள். மரித்து அநேகரை அடக்கம்செய்யப்பட்ட கல்லறைகளைப் பார்க்கும்போது எனக்கு ஞாபகத்திற்கு வருவது என்னவென்றால்; இவர்கள் எல்லாம் விசுவாசத்தை காத்துக்கொண்டு இளைப்பாறுகிறார்கள். நாமும் இவ்விதமாக விசுவாசத்தை மரணபரியந்தமும் காத்துக்கொள்ளுவோமா? என்ற கேள்விக்குறியோடு கல்லறைகளை பார்ப்பேன். அன்பானவர்களே, நாளைக்கு என்ன நடக்கும் என்பதை நாம் அறியோம். தேவன் அறிவார். ஒவ்வொருநாளும் நாம் உயிரோடு இருப்பது அவருடைய சுத்தகிருபை. மரணத்திற்குள்ளாக நம்மை எப்படியாவது கர்த்தரை மறுதலிக்கச்செய்யவேண்டும் என்று எதிராளியாகிய பிசாசு வலம் வந்துகொண்டிருக்கிறான். அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்ல. இயேசுவையே "பரிசுத்த நகரத்திற்குக் கொண்டுபோய் தேவாலயத்து உப்பரிகையின்மேல் அவரை நிறுத்தி, நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில் தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான்" (மத்.4:5,6). ஆண்டவரையே சோதித்த பிசாசு நம்மை விட்டுவைப்பானா? நாம் நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டு அவனோடு எதிர்த்துநிற்க வேண்டும். ஆண்டவர் இயேசுவைப் பற்றி வேதாகமம் இப்படியாகச் சொல்லுகிறது; "அவர் பாவஞ்செய்யவில்லை, அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவுமில்லை; அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும, நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1பேது.2:22,23).

இன்றைக்கு நாம் அந்தவிதமாக ஆண்டவர் இயேசுவைப்போல பாவஞ்செய்யாமல் வஞ்சனைகாணப்படாமல், பதில் வையாமல், யாரையும் பயமுறுத்தாமல், நியாயமாய்த் தீர்ப்புச்செய்கிறவருக்கு நம்மை ஒப்புக்கொடுத்துள்ளோமா? நம்முடைய விசுவாசத்தைக் காத்துக் கொண்டுள்ளோமா? என்பதை எண்ணிப்பாருங்கள். "பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும்



கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது" என யூதா எழுதுகிறார் (யூதா 3).

ஒரே முறைதான் நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்கு பிழைத்திருக்கும்படியாக ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுத்தோம். இந்த விசுவாசம் ஒரே விசுவாசம் இந்த விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டும் என ஆலோசனை சொல்லுகிறார் யூதா. உங்களுடைய போராட்டம் எப்படிப்பட்டதாக இருக்கிறது? பவுலுடைய போராட்டத்தை பற்றி தியானித்தோம். எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் அவர் சோர்ந்துபோகாது போராடி மேற்கொண்டார். ஓட்டத்தை முடித்தேன் என எழுதுகிறார். இந்த விதமான நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா? இந்த நம்பிக்கையினாலே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியத்தை பெறுவோம். இப்படி ஓட்டத்தை முடித்தவர்களுக்கு பவுல் நம்பிக்கையூட்டும்படி எழுதும்போது; "எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" என்று எழுதுகிறார் (1கொரி.15:52).

இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் சகோதரரே, சகோதரிகளே நீங்கள் உங்களுடைய விசுவாசத்தைக் காத்துக்கொண்டவர்களாக இருக்கிறீர்களா? ஆண்டவர் பூமியில் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ என வசனம் கேள்வி எழுப்புகிறது. அந்த அளவுக்கு ஒவ்வொரு விசுவாசிகளுக்கும் உலகத்தில் உபத்திரவமானது வைக்கப்பட்டிருக்கிறது. இவைகளில் அவர்கள் போராடி மேற்கொள்ளவேண்டியவர்களாக இருக்கிறார்கள். பொதுவாக ஜனங்கள் சுபிட்சமாகவே வாழ ஆசைப்படுகிறார்கள்.

ஆனால் அவ்விதமான வாழ்க்கை மனிதனாக பிறந்த மானிடனுக்கு இப்பூமியில் இல்லை. எல்லோரும் பாடு அநுபவித்தே ஆகவேண்டும். பாடு இல்லையென்றால் பரலோக பாக்கியம் இல்லை. நமக்கு எல்லாவிதத்திலும் மாதிரியாக கொடுக்கப்பட்ட ஆண்டவர் இயேசுவுக்கு பாடுகள் நிறைந்து இருந்தது. அவர் அவையெல்லாவற்றையும் ஜெயித்து பிதாவின் சித்தம் செய்தார். நீங்களும் நானும் அவரையே நோக்கிப்பார்த்து நம்முடைய விசுவாசத்தைக் காத்துக்கொள்வோம்.

**"உமது கட்டளைகளால் உணர்வடைந்தேன், ஆதலால்**
**எல்லாப் பொய்வழிகளையும் வெறுக்கிறேன்" (சங்.119:104).**

### கேள்வி

**நாம் அவரோடு பாடுகளைச் சகிக்கும்போது அவரோடு ஆளுகை செய்வோமா?**

ஆம், "நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூட பிழைத்துமிருப்போம்; அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்" (2தீமோ.2:11,12). நாம் அவரோடு பிழைப்பதும், அவரோடு ஆளுகை செய்வதும் நம்முடைய விசுவாச ஜீவியத்திலும், நம்முடைய அறிக்கையிலும் இருக்கிறது. நாம் அவரை மறுதலிக்கும்போது அவரும் நம்மை மறுதலிப்பார். அநேகருக்கு இப்பூமியிலே நடக்கிற காரியங்களைப் பார்க்கும்போது, இருக்கிற விசுவாசமும் குறைய ஆரம்பிக்கிறது. ஏன் இவைகள் எல்லாம் நடக்கிறது. தேவன் இவைகளை கண்டுகொள்ளாமல் இருக்கிறாரா, என்ற எண்ணம் அவர்களுக்குள் எழ ஆரம்பித்துவிடுகிறது. போதாதற்கு உற்றார், உறவினர்கள், நண்பர் என்று அவர்களுடைய விசுவாசத்தை குழைத்துப்போடும்படியாக அநேகரை பிசாசு ஏவுகிறான். இதனால் அவர்களுடைய நம்பிக்கை அற்றுப்போகிறது. அவரோடு பாடுபடும்போது அவரோடு ஆளுகையும் செய்வோம். நம்பிக்கையோடிருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 17. நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ?
## You Also Want To Go Away?

இயேசுவானவர் ஒரு முறை கப்பர்நகூமிலுள்ள ஜெபஆலயத்தில் உபதேசிக்கையில் அவருடைய சீஷர்களில் அநேகர் இது கடினமான உபதேசம் என்றார்கள். அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள். ஆகையால் "இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விடமனதாயிருக்கிறீர்களோ என்றார்" (யோவா.6:67). உபதேசம் அவர்களுக்குப்பிடித்தார்போல் இல்லாதபடியால் இது கடினமான உபதேசம் என்று பின்வாங்கிப்போனார்கள். இன்றைக்கும் ஒவ்வொருவருக்குபிடித்தார்போல பிரசங்கியார்கள் பிரசங்கம் செய்தால் மிகவும் நன்றாயிருக்கிறது என்பார்கள்.

ஒரு நோயாளியை சுகப்படுத்துகிற வைத்தியன், நோயாளிக்கு பிடித்தார்ப்போல வைத்தியம் செய்தால் அந்த நோய் சுகமாகுமா? நோயாளி நோயாளியாகவேதானிருப்பான். அதைப்போல ஆண்டவர் இயேசுவின் உபதேசத்திற்கு கீழ்ப்படியவேண்டிய சீஷர்கள் இது கடினமான உபதேசம் என்று



சொன்னார்கள். ஆகையால் பன்னிருவரையும் நோக்கி நீங்களும் போய்விடமனதாயிருக்கிறீர்களோ என்று கேட்டார். சபைகளிலும், ஒரு குடும்பம் பின்வாங்கிப்போனால் அவர்களைப் பார்த்து மற்றவர்களும் பின்வாங்குகிறார்கள். சத்தியம் என்ன சொல்லுகிறது நாம் சத்தியத்தின்படி நடக்க என்னசெய்யவேண்டும் என்று சிந்திப்பதில்லை. மேலான தேவனுடைய உபதேசங்களை கைக்கொள்ளுவது கடினம் என்று சொல்லுவது, நோயாளி இந்த மருந்தை சாப்பிடுவது எனக்கு கசப்பாக இருக்கிறது, ஆகையால் நான் அதை சாப்பிடமாட்டேன் என்று சொல்லுவதைப்போல இருக்கிறது. நாம் ஆவிக்குரிய நன்மைகளைப் பெறவேண்டுமானால் ஆண்டவருடைய உபதேசத்தின்படி நடக்க நம்மை அர்ப்பணிக்கவேண்டுமே தவிர அவைகள் கடினமானவைகள் என்று சொல்லுவதோ, அதை யார் கேட்பார் என்று சொல்லுவதோ, தேவனுடைய மாபெரும் வல்லமையுள்ள வசனங்களை உதாசினப்படுத்துகிறதாயிருக்கிறது.

ஆண்டவர் இயேசு வேறே 70 பேரை தெரிந்துகொண்டு தாம் போகும் சகல பட்டணங்களுக்கும் இடங்களுக்கும் அவர்களைத் தமக்கு முன்னே இரண்டிரண்டு பேராக அனுப்பினார். "சீஷரை நோக்கி: உங்களுக்குச் செவிகொடுக்கிறவன் எனக்குச் செவிகொடுக்கிறான், உங்களை அசட்டைபண்ணுகிறவன் என்னை அசட்டைபண்ணுகிறான், என்னை அசட்டைபண்ணுகிறவன் என்னை அனுப்பினவரை அசட்டைபண்ணுகிறான் என்றார்" (லூக்.10:16). இந்த சீஷர்களை ஏற்றுக்கொண்டவர்கள் ஆசீர்வதிக்கப் பட்டார்கள். ஆண்டவரால் அனுப்பப்பட்டவர்களுக்கு செவிகொடுக்கிறவன் அவருக்குச் செவிகொடுக்கிறான். ஆண்டவரை ஏற்றுக்கொள்வதும், அவருடைய சுத்த சுவிசேஷத்திற்கு தங்களை அர்ப்பணிப்பதும் மாபெரும் காரியமாயிருக்கிறது. உலகமுழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என்பதை நாம் அறிவோம். இப்படிப்பட்ட உலகத்தில் அவருடைய உபதேசத்தை ஏற்றுக்கொண்டு வரக்கூடியவர்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் என்றே சொல்லவேண்டும்.

வேதமும் "ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறாவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன்" என்று இயேசு சொல்லுகிறார் (யோவா.6:65). இன்றைக்கு அநேகர் கர்த்தரிடம் வரவில்லை அதற்கு காரணம் என்ன? அவர்கள் பிதாவினால் தெரிந்துகொள்ளப்படவில்லை. அவருடைய அருளைப் பெறவில்லை என்றே சொல்லவேண்டும். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவன் அவருடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறான். தேவனால் தெரிந்துகொள்ளப்படாதவன் அவருக்கு விரோதியாயிருக்கிறான்.

சிலர் கொஞ்சகாலம் வந்து நல்லவர்கள்போல நடித்து பின்பு பின்மாற்றமடைகிறார்கள். இவர்களைப் பற்றி நாம் என்னசொல்வது. இவர்கள் தேவனால் முன்குறிக்கப்படவில்லை என்றே சொல்லவேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாயிருந்திருப்பார்களேயானால் பின்வாங்கிப் போயிருக்கமாட்டார்களே.

நீங்களும் போய்விடமானதாயிருக்கிறீர்களோ என்று சீஷர்களைப் பார்த்து கர்த்தர் கேட்டவுடனே; சீமோன் பேதுரு; "அவருக்குப் பிரதியுத்தரமாக; ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்திய ஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்" (யோவா.6:68,69). அந்த சீஷனின் அறிக்கையைப் பார்த்தீர்களா? யாரிடத்தில் போவாம் என்று கேட்டான். நாம் இந்த உலகத்தில் இரட்சிக்கப்பட வேறு வழி இல்லை. ஒரு மனிதன் எனக்கு இந்த உலகத்தில் தண்ணீர் வேண்டாம். தேவன் உண்டாக்கின காய்கறிகள், நவதாணியங்கள், பழங்கள் ஒன்றும் வேண்டாம் என்று சொல்லி ஒதுக்கி வைத்திடமுடியுமா? அதைப்போல நாம் இந்தப் பூமியில் இருப்பதற்கே காரண கர்த்தாவாகிய இயேசு இல்லாமல், நாம் எங்கே போகமுடியும். அவரால் நாம் வாழுகின்றோம்.

நமக்கு வேண்டிய நித்திய ஜீவவசனங்கள் ஆண்டவர் இயேசுவிடம் உண்டு அவைகளை நாம் பெற்றுக்கொண்டு வாழும்போது நித்தியமான வாழ்வை பெறுவோம். அவர் நமக்கு ஜீவதண்ணீரை கொடுக்கிறார். இஸ்ரவேலர் இந்த ஜீவத்தண்ணீரை விட்டுவிட்டார்கள் என்று கர்த்தருடைய வேதம் சொல்லுகிறது. அவர் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது. அவனுக்குள்ளே நித்திய காலமாய் ஊறுகிற நீர் ஊற்றாயிருக்கும். இவைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்குக் கடினமாயிருக்கிறதா? அல்லது கசப்பாயிருக்கிறதா? அல்லது கடினமான உபதேசமாயிருக்கிறதா? சிந்தியுங்கள்.

கர்த்தர் நமக்கு எப்பொழுதும் நல்லவராகவே இருக்கிறார். அவருடைய சிருஷ்டிகளைப் பார்க்கும்போது சொல்லிமுடியாத நன்மைகளை நமக்கு கொடுத்துக்கொண்டிருக்கிறது. இப்படி நம்மை நேசிக்கும் கர்த்தர் ஒருவர் இருக்கும்போது அவருடைய வசனங்களுக்கு நாம் செவிகொடுத்து அவைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டியது நமது கடமையல்லவா? யோபு என்ற தாசனுக்கு வந்த பாடுகளைப்போல உலகத்தில் ஒருவருக்கும் வந்திருக்க வாய்பு இல்லை. அவ்வளவு கஷ்டங்கள் வந்தபோதும் அவன் சொல்லுகிறான். "அவர் என்னைக் கொன்றுபோட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம்பண்ணுவேன்"



என்கிறான் (யோபு 13:15). இப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்லுவது எளிது. ஆனால் அவனுடைய நிலைமையில் இருந்துகொண்டு இந்தவிதமான வார்த்தைகளை நம்மால் சொல்லமுடியுமா என்றால் நிச்சயமாக முடியாது என்றே சொல்லுவேன்.

ஏனென்றால், ஒரு மனிதனுக்கு உண்டான எல்லாம் பறிபோனபிறகும் அவன் உயிரோடு இருப்பதைக்காட்டில் சாவதே மேல் என்று எண்ணுவான் அல்லது தேவனை தூஷிக்க முற்படுவான். ஆனால் யோபு அந்தவிதமாக செய்யவில்லை. எல்லாமே போனாலும் அவர் அதாவது தேவன் என்னைக் கொன்றுபோட்டாலும் அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன் என்று சொன்னான். ஆக, அவனுடைய நம்பிக்கை எப்படிப்பட்டதென்று பார்த்தீர்களா, அவனுடைய மனைவி இன்னும் நீ உயிரோடு இருப்பானேன் தேவனை தூஷித்து ஜீவனை விடும் என்றாள். பைத்தியக்காரி பேசுகிறதுபோல பேசுகிறாய். இவ்வளவு நாட்களாக தேவனிடத்தில் நம்மைகளைப் பெற்ற நாம் தீமைகளையும் பெறவேண்டாமோவென்றான். யாருக்காவது தீமைகளை பெற விருப்பமா? கஷ்டம் வந்தவுடன் கர்த்தர் இல்லையென்பார்கள். தனக்கு வந்த கஷ்டத்தை ஏற்றுக்கொண்டு கர்த்தரை பின்பற்றுகிறதில் வல்லவனான்.

அன்பான சகோதரனே, சகோதரியே உனக்கு வந்த கஷ்டங்கள் பெரிதல்ல. உம்மைக் காட்டிலும் கஷ்டத்திலும் வேதனையிலும் தவிக்கும் கோடிக்கணக்கான மக்களை கர்த்தா அநுதினமும் போஷித்து வழிநடத்திக்கொண்டு வருகிறார். இயேசுவின் கீர்த்தியைக் குறித்துக் கேள்விப்பட்ட நூற்றுக்கு அதிபதி தன்வேலைக்காரனுக்காக ஆண்டவர் இயேசு நோக்கி வேண்டிக்கொள்ளும்போது; "தன் சிநேகிதரை நோக்கி: நீங்கள் அவரிடத்தில் போய், ஆண்டவரே! நீர் வருத்தப்படவேண்டாம்; நீர் என் வீட்டு வாசலுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமானவான்" என்றான் (லூக்.7:6,7). அவருடைய கீர்த்தியைக் குறித்துக் கேள்விப்பட்ட இந்த அதிபதியின் நம்பிக்கையைப் பார்த்தீர்களா? ஆண்டவர் இவனுடைய விசுவாசத்தைக் குறித்துச் சொல்லும்போது இஸ்ரவேலுக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்றார். அப்படியானால் இஸ்ரவேலர்கள் வனாந்திரத்தில் நற்பது வருஷம் போஷிக்கப்பட்டவர்கள். கர்த்தருடைய அற்புதங்களை கண்ணாரக்கண்டவர்கள். அவர்களிடத்தில் கூட இப்படிப்பட்ட விசுவாசம் இல்லை. இயேசுவின் கீர்த்தியைக் குறித்து கேள்விப்பட்டு அவரிடத்தில் விசுவாசம் கொண்டு தன் வேலைக்காரனுக்காக வேண்டிக்கொண்ட இந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசம் பெரிதாயிருந்தது.

அதைப்போல கானானிய ஸ்திரீ அவரைப் பணிந்து கொண்டு பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்குப் போடுகிறது நல்லதல்ல என்று சொன்ன ஆண்டவர் இயேசுவைப்பார்த்து "மெய்தான் ஆண்டவரே, ஆகிலும் நாய்க்குட்டிகள் தங்கள் எஜமான்களின் மேஜையிலிருந்து விழும் துணிக்கைகளைத் தின்னுமே என்றாள்" (மத்.15:27). இவளுடைய விசுவாசத்தைப் பார்த்து உம்முடைய விசுவாசம் பெரிது, நீ விரும்புகிறபடி உனக்கு ஆகக்கடவது என்றார் அந்நேரமே அவளுடைய மகள் ஆரோக்கியமானாள். வேறு யாரிடத்திலும் போனாலும் தன் மகளுக்கு விடுதலை இல்லை என்பதை அறிந்த கானானிய ஸ்திரீ கர்த்தரை விட்டுவிடாமல் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டாள். நாம் இரட்சிக்கப்படுவதற்கு வேறு வழி இல்லை. வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவில்லை என்பதை அறிந்து. உங்களை அவருக்கும் அவருடைய வல்லமையுள்ள வசனத்திற்கும் ஒப்புக்கொடுங்கள்.

"என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான், என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்" என்றார் (லூக்.11:23). ஆம் இன்று கர்த்தரோடிராதவர்கள் அவருக்கு விரோதமாயிருக்கிறார்கள். அவருடைய அன்பையும் அரவணைப்பையும் அறியாதவர்களாக இருந்துகொண்டு மேன்மேலும் கேடுஉண்டாக்குகிறார்கள். இச்செய்தியை கேட்டுக்கொண்டிருக்கும் அன்பு நேயரே, நீ அவரோடு இருக்கின்றாயா? அவர் உனக்காக இரத்தம் சிந்தினார். உம்மை பாவத்திலிருந்து மீட்கும்படியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார் என்பதை நீ அறிவாயா? இயேசுவானவர் ஒரு முறை ஜெபிக்கும்போது; "என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது; நீங்கள் இங்கே தங்கி, என்னோடேகூட விழித்திருங்கள்" என்றார் (மத்.26:38). அப்பொழுது அவருடைய ஆத்துமா என்னபாடுபட்டிருக்கும். இன்னும் சற்றுநேரத்தில் தம்மை வந்து பிடித்துக்கொண்டு போய்விடுவார்கள். அப்பொழுது தாம் சம்பாதித்த இந்த ஆடுகளெல்லாம் தம்மைவிட்டு ஓடிப்போய் விடும் என்பதை அறிந்த இயேவின் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டது.

அந்த வேளையில் இயேசுவைப் பிடித்தவுடன் எல்லா சீஷர்களும் ஓடிப்போய்விட்டார்கள் (மத்.26:56). பேதுரு மட்டும் இயேசுவுக்கு நடக்கவுள்ள காரியங்களைப் பார்க்கும்படி வந்தான். அவனைப் பார்த்து நீயும் அவர்களில் ஒருவன் உன்பேச்சு வெளிப்படுத்துகிறது என்றவுடன் "அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று" (மத்.26:74). அவரை பிடித்தவுடன் எல்லோரும்



அவரைவிட்டு ஓடிப்போனார்கள். அன்பு நண்பரே, நீ ஆண்டவர் இயேசுவைப் பற்றியும் அவருடைய உபதேசங்களைப் பற்றியும் என்ன நினைக்கிறாய். அவருடைய வசனம் உன்னை பாவமற கழுவும். அவைகளுக்கு உன்னை ஒப்புக்கொடு.

**கேள்வி**

**எல்லாரும் இயேசுவை விட்டு ஓடிப்போனவுடன் அவர் தனித்துவிடப் பட்டிருந்தாரா?**

நாம் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய நண்பர்கள் உறவினர்கள் எல்லோரும் நம்மை விட்டு விட்டார்கள் என்றால் நான் அனாதையாகிவிட்டேன் என்று நொந்துகொள்ளுகிறோம். அதைப்போல இயேசுவை விட்டு எல்லோரும் போனவுடனே ஆண்டவர் இயேசு நம்மைபோல அவர் நினைக்கவில்லை. ஏனென்றால் அவரும் பிதாவும் ஒன்றாயிருக்கிறார்கள் அல்லவா! பிதாவாகிய தேவன் அவருக்கு நடப்பதை அவர் கண்ணோக்கிக்கொண்டே இருந்தார். தமக்கு சம்பவிக்கப்போகிறதை முன்னமே அறிந்த கர்த்தர் தம்முடைய சீஷர்களிடத்தில் பேசும்போது; "இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப்போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்" என்றார் (யோவா.16:32).

இந்தவிதமான நம்பிக்கை இன்று நமக்குள்ளும் இருக்குமானால், நாம் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. சதா காலமும் நம்முடன் இருக்கும் கர்த்தர் நம்மை காத்து, நம்முடனே கூட இருந்து கிரியை நடப்பிப்பார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனிமையானவன் அல்ல. அவனோடு கர்த்தர் இருக்கிறார். ஒரு தகப்பனையாவது, தாயையாவது இயேசுவினிமித்தம் இழக்கிறவன் நூறத்தனையான தகப்பனையும் தாய்களையும் பெற்று ஆசீர்வதிக்கப்படுவான். அவனை ஆசீர்வதிக்க கர்த்தர் வல்லவராயிருக்கிறார். நம்பிக்கையோடிருங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 18. ஒரே நம்பிக்கை

## The One Hope

**ந**ம்பிக்கை இல்லாமல் வாழ்க்கையில்லை. நாம் ஒவ்வொருவரும் நம்பிக்கையோடு ஒவ்வொருநாளும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒருவர் நான் நம்பிக்கையில்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லமுடியாது. நம்பிக்கையானது விசுவாசத்தின் மூலமாக வருகிறது. விசுவாசமில்லாவிட்டால் நம்பிக்கை இல்லை. ஒரே நம்பிக்கையைக் குறித்து

பரிசுத்தவேதாகமத்தில் படிக்கிறோம். "உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல, ஒரே சரீரமும், ஒரே ஆவியும் உண்டு" (எபே.4:4). நம்மை பரமஅழைப்புக்கு அழைத்த தேவன் ஒரே நம்பிக்கைக்கு அழைத்திருக்கிறார். அவருடைய அழைப்பு மாறாததாயிருக்கிறது. அழைத்த தேவன் உண்மையுள்ளவர். நாம் அந்த நம்பிக்கையை உறுதியாய் பற்றிக்கொள்ள வேண்டியவர் களாயிருக்கிறோம். சிலகாரியங்களில் ஒற்றுமையாக இருக்க சிலர் ஒன்று கூடுகிறார்கள். ஆனால் நாளடைவில் அவர்களுடைய ஐக்கியம் நிலைநிற்காமல் உடைந்துபோகிறது. நாம் அந்தவிதமாக அழைக்கப்பட வில்லை, "தம்முடைய குமாரனும் நம்முடைய கர்த்தருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு உங்களை அழைத்த தேவன் உண்மையுள்ளவர்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்திய கிறிஸ்தவர்களுக்கு எழுதின கடிதத்தில் வாசிக்கிறோம் (1கொரி.1:9).

நாம் கிறிஸ்துவுடனே ஐக்கியமாயிருப்பதற்கு ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்படுகிறோம். நாம் அவரோடு ஐக்கியமாயிருக்கவேண்டுமானால் கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தை நம்மிடம் இருக்கவேண்டும். அப்பொழுது அவரோடு ஐக்கியப்பட முடியும். இனம் இனத்தோடு சேரும் என்பார்கள்.

அவர் பரிசுத்தர், நாமும் பரிசுத்தவான்களாக இருந்தால்தான் அவரோடு ஐக்கியம் கொள்ளமுடியும். அவரோடு ஐக்கியப்படுவதற்கு நாம் உடைகளை மாற்றவேண்டிய அவசியம் இல்லை. சிலர் வெளிவேஷமாகவே இருக்க விரும்புகின்றனர். அவருடைய ஐக்கியம் ஆவிக்குரியதாக இருக்கிறது. ஆகையால், "அவனவன் தான் அழைக்கப்பட்ட நிலைமையிலே நிலைத்திருக்கக்கடவன்" என்று 1கொரி.7:20-ல் வாசிக்கிறோம். நீங்கள் ஒரு போதகராய் அழைக்கப்பட்டிருந்தால், போதகராயிருந்துகொண்டு கிறிஸ்துவினுடைய ஐக்கியத்தில் வளர்ச்சியடையவேண்டும். ஒரு விசுவாசியாக அழைக்கப்பட்டிருந்தால் விசுவாசத்தில் இருந்துகொண்டு கிறிஸ்துவினுடைய ஐக்கியத்தில் வளர்ச்சியடையவேண்டும்.

ஒரு கிறிஸ்தவ எஜமானனுக்கு வேலைக்காரனாக இருப்பாயானால், நீ ஒரு நல்ல வேலைக்காரனாக உண்மையும் உத்தமும் உள்ள வேலைக்காரனாக இருந்து, உன் எஜமானன் உன்னைப்போல ஒரு கிறிஸ்தவனாயிருப்பதினால் தேவனுக்கு நன்றி சொல்லிக்கொண்டு, அவனுக்குக் கீழ்ப்படிந்து வேலைசெய்யவேண்டும். இந்த விஷயத்தில் யாரும் யாரையும் அடிமை கொள்ளக்கூடாது. ஏனெனில் நீங்கள் கிரயத்துக்குக் கொள்ளப்பட்டவர்கள். ஆகையால் மனுஷர்களுக்கு அடிமைகளாகாதிருங்கள்.



மேலும் பவுல் சொல்லுகிறார்; "எப்படியெனில், சகோதரரே, நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்பைப் பாருங்கள்; மாம்சத்தின்படி ஞானிகள் அநேகரில்லை, வல்லவர்கள் அநேகரில்லை, பிரபுக்கள் அநேகரில்லை. ஞானிகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பைத்தியமானவைகளைத் தெரிந்துகொண்டார்; பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்துகொண்டார்" (1கொரி.1:26,27). நாம் யாரும் முன்னே ஞானிகள் இல்லை வல்லவர்கள் இல்லை. ஆனாலும் தேவன் நம்மை தகுதிப்படுத்தினார். அழைத்த தேவன் வல்லவராயிருக்கிறபடியினாலே நம்மை தகுதிப்படுத்தினார். இப்படி ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்ட நாம் நம்பிக்கையில் தளர்ந்துபோகாமல் கிறிஸ்துவோடு உள்ள ஐக்கியத்தில் உறுதிப்படுவோம்.

எகிப்திலிருந்து இந்தவிதமான நம்பிக்கைக்கு அழைக்கப்பட்ட இஸ்ரவேலர் வழியிலே தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: "நீ இறங்கிப்போ; எகிப்துதேசத்திலிருந்து நீ நடத்திக்கொண்டுவந்த உன் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள். அவர்களுக்கு நான் விதித்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகினார்கள்; அவர்கள் தங்களுக்கு ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து, அதைப் பணிந்துகொண்டு, அதற்குப் பலியிட்டு; இஸ்ரவேலரே, உங்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த உங்கள் தெய்வங்கள் இவைகளே என்று சொன்னார்கள் என்றார்" (யாத்.32:7,8). எகிப்திலிருந்து அழைத்துக்கொண்டுவந்த தேவனை விட்டு அவ்வளவு சீக்கிரமாய் கெட்டுப்போனார்கள். அவர்களுடைய நம்பிக்கை தண்ணீரில் கழுவும் சாம்பலைப்போல போனது. இச்செய்தியை வாசிக்கும் அன்பு சகோதரரே, உங்களுடைய நம்பிக்கை எத்தகையது? நீங்கள் கர்த்தரால் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்பதை மறந்துவிடாதீர்கள்.

இந்த ஒரே நம்பிக்கை நமக்குள் திட நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. பவுல் சொல்லுகிறார்; "அவரைப் பற்றும் விசுவாசத்தால் அவருக்குள் நமக்குத் தைரியமும் திடநம்பிக்கையோடே தேவனிடத்தில் சேரும் சிலாக்கியமும் உண்டாயிருக்கிறது" என்கிறார் (எபே.3:12). நம்பிக்கையில்லாமல் ஒருவரும் தேவனை தரிசிக்கமுடியாது. தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும் அவர் தம்மை தேடுகிறவர்களுக்கு பலன் அளிக்கிறவர் என்றும் விசுவாசிக்கவேண்டும் என காண்கிறோம். "உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே, ஆகையால், அது நமக்காகவே எழுதியிருக்கிறது" என்கிறார் பவுல் (1கொரி.9:10). உழுகிறவனுக்கு நம்பிக்கை

இல்லையென்றால் அவன் உழவேண்டிய அவசியமில்லை. வேறு ஏதாவது ஒரு வேலையைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்றில்லாமல் உழுகிறவன் இந்த வருடம் நல்ல விளைச்சலை அறுவடைசெய்வோம் என்ற நம்பிக்கையோடு உழவுசெய்கிறான். அதைப்போல போரடிக்கிறவனும் பலனைப் பெற்றுக்கொள்வோம் என்ற நம்பிக்கையோடே போரடிக்கிறான்.

அந்தப்படியே பிரசங்கிக்கிறவன் சபையில் அநேக ஆத்துமாக்கள் வந்துசேரும் என்ற நம்பிக்கையோடே பிரசங்கிக்கும்போது அது ஆத்துமாக்களாலே நிறைக்கப்படும். நம்புகிறவர்களுக்கு நல்லதே நடக்கும். உங்களுடைய நம்பிக்கை எப்படியோ அப்படியே உங்களுடைய விசுவாசமும் இருக்கும். சிலவேளைகளில் பவுலுடைய ஊழியத்தில் அவனுடைய விசுவாசம் அற்றுப்போகத்தக்கதாக சோதனை வந்தது. ஆனாலும் தளர்ந்து போகாதிருந்தான்.

பவுல் தனக்கு வந்த ஒரு காரியத்தைச் குறித்துச் சொல்லும்போது; "சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை, என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" என்பதாய் எழுதுகிறார் (2கொரி.1:8-10). கர்த்தரிடத்தில் கொண்ட திடநம்பிக்கையினால் அவர்கள் தப்புவிக்கப்பட்டார்கள். நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல் என்ற ஒரு வார்த்தையை சொல்லுகிறார். இன்றைக்கு நம்மில் அநேகர் நம்பிக்கையை தங்கள் மேல் வைத்திருக்கிறார்கள். நம்மை நாமே இரட்சிக்கமுடியுமா? ஒருக்காலும் முடியாது. உலகத்தையே ஆண்டு வழிநடத்தும் கர்த்தர் ஒருவரே நம் எல்லோரையும் இரட்சிக்கமுடியும்.

மேலும், பவுல் தன்னுடைய கப்பல் பயணத்தின்போது அவரோடு இருந்த அநேகர் தப்பிப்பிழைப்போம் என்கிற நம்பிக்கை இல்லாது பயப்பட்டனர். அப்பொழுது பவுல்; அவர்களைத் தைரியப்படுத்தி, "என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்துநின்று. பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்கவேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரைபண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார்



என்றான். அனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள், எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன் என்றான்" (அப்.27:22-25).

அநேகரிடத்தில் நம்பிக்கையில்லாதபடியால் பயத்தின் ஆவி அவர்களைத் தொற்றிக்கொள்ளுகிறது. தாங்கள் பயத்தின் ஆவியையுடையவர்ளானபடியால் மற்றவர்களையும் பயப்படும்படி செய்துவிடுகிறார்கள். அன்பானவர்களே திடமனதாயிருங்கள்.

பேதுரு சொல்கிறார்; "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" (1பேது.3;15). பல வருடங்களாக கிறிஸ்தவர்களாக இருக்கிறவர்களிடத்தில் அவர்களுடைய நம்பிக்கையைப்பற்றிக் கேட்கும்போது பலர் சோர்வான பதிலையே சொல்லுகிறார்கள்.

அதேவேளையில் புதிதாக கிறிஸ்துவுக்குள் வந்தவர்களை சந்தித்துக்கேட்டால் கர்த்தர் செய்த நன்மைகளை கணக்கில்லாமல் சொல்லுவார்கள். முந்தினோர் பிந்தினோராகவும், பிந்தினோர் முந்தினோராகவும் இருப்பார்கள் என்ற வசனத்திற்கேற்ப இருக்கிறார்கள். நம்முடைய நம்பிக்கையை குறித்து விசாரித்துகேட்கிற யாவருக்கும் நாம் சாந்தத்தோடு பதில் சொல்லவேண்டியவர்களாயிருக்கிறோம். அதை கர்த்தர் கேட்கிறார் என்ற உணர்வோடு அவர்கள் மத்தியில் நாம் சொல்லவேண்டும். எனக்கு ஒன்றும் கர்த்தர் செய்யவில்லை என்று எந்த ஒரு மனிதனும் சொல்லமுடியாது. ஏனெனில் அவன் உயிரோடிருப்பதே அவருடைய கிருபையினால்தான். அப்படியிருக்கும்போது எனக்கு ஒன்றும் கர்த்தர் செய்யவில்லை என்று சொல்லிவிடமுடியாது. நாம் எதற்காக ஆண்டவர் இயேசுவை பின்பற்றுகிறோம். நமக்கு அவர் கொடுக்கப்போகும் வாக்குத்தத்தம் என்ன? என்பதை அறிந்திருக்கிறோம்.

அந்த நம்பிக்கையினாலே அவரில் விசுவாசம் கொண்டுள்ளோம். இந்த நம்பிக்கையை அவர்களோடு பகிர்ந்து கொள்ளும்போது அவர்களும் அந்த வாக்குத்தத்தைப்பற்றிக்கொள்ள வழி ஏற்படும். ஆகையால் உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கும்போது எனக்கு வேலை இருக்கிறது. பின்பு சந்திப்போம் என்று சொல்லிவிடாதிருங்கள். சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் கர்த்தருடைய வார்த்தைகளை உபதேசிக்க ஆயத்தமாயிருக்கவேண்டும். எரிகோ பட்டணத்தில் வேவுகாரரை ஏற்றுக்கொண்ட வேசி "நீங்கள்

எகிப்திலிருந்து புறப்பட்டபோது; கர்த்தர் உங்களுக்கு முன்பாகச் சிவந்த சமுத்திரத்தின் தண்ணீரை வற்றிப்போகப்பண்ணினதையும், நீங்கள் யோர்தானுக்கு அப்புறத்தில் சங்காரம் பண்ணின எமோரியரின் இரண்டு ராஜாக்களாகிய சீகோனுக்கும் ஓகுக்கும் செய்ததையும் கேள்விப்பட்டோம். கேள்விப்பட்டபோது எங்கள் இருதயம் கரைந்துபோயிற்று, உங்களாலே எல்லாருடைய தைரியமும் அற்றுப்போயிற்று; உங்கள் தேவனாகிய கர்த்தரே உயர வானத்திலும், கீழே பூமியிலும் தேவனானவர்" என்றாள் (யோசு.2:10,11).

அவளுடைய நம்பிக்கையின் அறிக்கையைப் பார்த்தீர்களா, இந்த விசுவாசத்தினாலே அவளும் அவளுடைய குடும்பமும் காக்கப்பட்டது. தாவீது தன் நம்பிக்கையை சவுல் ராஜாவிடம் அறிக்கையிட்டான்."என்னைச் சிங்கத்தின் கைக்கும் கரடியின் கைக்கும் தப்புவித்த கர்த்தர் இந்தப் பெலிஸ்தனுடைய கைக்கும் தப்புவிப்பார் என்றான்" (1சாமு.17:37). தாவீதுடைய நம்பிக்கை இளம்வயதில் அற்புதவிதமாக இருந்தது. ஆகையால் கர்த்தர் அவனோடிருந்தார். இன்று நம்மோடு கர்த்தர் இருக்க நம்முடைய நம்பிக்கையை அவர் மீது வைத்து நம்மிடத்தில் கேட்கிறவர்களுக்கு கர்த்தருடைய நாமத்தை மகிமைப்படுத்தவேண்டும். அப்படிச்செய்வீர்களா! பவுல் சொல்லுகிறார்: "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப்படேன் என்று" (ரோம.1:6). அப்படி வெட்கப்படாத மனிதனாக வாழுங்கள். இயேசுவினால் பார்வையடைந்த பிறவிக்குருடன் தான் பார்வையடைந்த விதத்தை திரும்பத்திரும்ப தன்னிடத்தில் கேட்டவர்களைப் பார்த்து "அவருக்குச் சீஷராக உங்களுக்கு மனதுண்டோ என்றான்" (யோவா.9:27). அவன் சற்றும் சலிக்காமல் அவர்களுக்கு பதில் சொல்லி, கடைசியில், உங்களுக்கும் சீஷராக மனதுண்டோ என்றான். நம்முடைய நம்பிக்கையைக்குறித்து கேட்பவர்களிடம் சலித்துப்போகாமல் ஆண்டவரைப் பற்றி சொல்லி கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவோம்.

**கேள்வி**

**இம்மைக்காக கர்த்தரிடத்தில் நம்பிக்கையாருப்பவர்களின் முடிவு எப்படியிருக்கும்?**

"இன்மைக்காமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிகையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப் படத்தக்கவர்களாயிருப்போம்" என பவுல் குறிப்பிடுகிறார் (1கொரி.15:19). நம்முடைய நம்பிக்கை இம்மைக்குரிய காரியங்களைப் பற்றியதாக இருக்கக்கூடாது. பொதுவாக இம்மைக்குரியவைகளுக்காக கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள்.



ஆகாயத்துப் பறவைகளைக் கவனித்துப்பாருங்கள் அவைகள் விதைக்கிறதும் இல்லை களஞ்சியங்களில் சேர்த்துவைக்கிறதுமில்லை அவைகளையும் தேவன் பிழைப்பூட்டுகிறார். இவைகள் எல்லாம் நமக்கு தேவை என்பதை பிதாவானவர் அறிந்திருக்கிறார். ஆகையால் நம்முடைய நம்பிக்கையானது அழிந்துபோகாத நித்திய வாழ்வைக்குறித்ததாக இருக்கட்டும். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 19. உள்ளான மனுஷனும் புறம்பான மனுஷனும்

## Inward Man & Outward Man

**உ**ள்ளான மனுஷனும் புறம்பான மனுஷனும் என இரண்டு விதமான மனுஷர்களை நாம் பார்க்கிறோம். இதைக்குறித்து பவுல் கொரிந்திய சபையாருக்கு எழுதும்போது; "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது" என்கிறார் (2கொரி.4:16). முதலாவது எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும் என குறிப்பிடுவதை கவனியுங்கள். புறம்பான மனுஷன் என்று சொல்லும்போது பழைய சுபாவங்கள் அழிக்கப்படுகிறது. "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்ற 2கொரிந்தியர் 5:17-ன்படி அவன் கர்த்தருக்குள் இருக்கும்போது பழையவைகள் ஒழிந்துபோகிறது.

அவனோ ஒரு புதிய சிருஷ்டியாயிருக்கிறான். மனிதன் அதே மனிதன்தான் ஆனால் அவனுடைய பழைய பழக்கவழக்கங்கள் முற்றிலும் கர்த்தருடைய வசனத்தினால் அழிக்கப்படுகிறது. ஆகையால் அவனுடைய செயல்பாடுகள் முற்றிலும் புதிய சிருஷ்டிக்குரியவையாக மாறுகிறது. முன்னே துன்மார்க்கமாய் வாழ்ந்த அவன், கிறிஸ்துவுக்குள் வந்தவுடன் கர்த்தருக்கு ஏற்றவைகளை சிந்தித்து செயல்பட துவங்குகிறான். தேவனுக்கு ஏற்றவனாக கர்த்தருடைய வசனம் அவனை மாற்றுகிறது. ஆகையால் பவுல் ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதும்போது; "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ்செய்யாத படிக்கு,பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" என்பதை நினைப்பூட்டுகிறார் (ரோம.6:6).

கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒருவன் பாவத்திற்கு ஊழியஞ் செய்வதில்லை, ஏனெனில் அவன் பாவத்துக்கு செத்து நீதிக்கு அவரோடேகூட பிழைத்தவனாயிருக்கிறான். எப்படியென்றால் ஞானஸ்நானத்திலே இது நடைபெறுகிறது. அன்பு வாசகரே, நீங்கள் பாவத்துக்கு செத்து நீதிக்கு

அவரோடேகூட பிழைத்தவராயிருக்கிறீர்களா? அப்படியில்லையென்றால் இன்றே அவரோடே கூட மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்வுடனே கூட அடக்கம்பண்ணப்பட்டு அவருடைய மரணத்தின் சாயலில் இணைக்கப்படுங்கள். அப்பொழுது அவருடைய உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்படுவீர்கள்.

பழையவைகள் முற்றிலும் அழிக்கப்படவேண்டியவை. அவைகள் எதுவென்றால்; "விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள்" (கொலோ.3:5). பாவத்தை பிறப்பிக்கும் இடமே, நம்முடைய அவயவங்கள் தான். இவைகள் மூலமாக பிசாசு இச்சைகளை தூண்டுகிறான். ஆகையால் மாம்சத்தில் எழும்பும் விபசாரம், அசுத்தம் அதாவது அசுத்தமான நினைவுகள் நம்மை கறைபடுத்திவிடும். எனவே இருதயத்தில் இச்சித்தாலே விபசாரம் செய்தாயிற்று என்று கர்த்தர் சொல்லுகிறார். எனவே இச்சை பாவத்தை பிறப்பிக்கும். ஆகையால் சகல அசுத்தத்தையும் நம்மைவிட்டு களையவேண்டும்.

மேலும், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை. விக்கிரக ஆராதனை செய்தால் தான் விக்கிரக ஆராதனை என்பதல்ல. பொருளாசையே விக்கிரக ஆராதனைக்கு சமமாக இருக்கிறது. அதிகமான பொருட்களை அநேகர் வாங்கி குவித்துவைப்பார்கள். இது நாளடைவில் பொருளாசைக்கு ஒரு மனிதனை இழுத்துசென்று விடும். இவைகளை பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போட வேண்டும். அதை அழிப்பது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல. கர்த்தருடைய வசனத்தை வைத்து அவைகளை அழிக்க முற்படவேண்டும். ஒரு பூச்சி பிடித்த செடியை, அந்த பூச்சிகள் எப்படி முற்றிலும் அழித்துப்போடுகிறதோ, அதைப்போல விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை போன்ற பாவங்கள், ஒரு மனிதனை ஆட்கொள்ளும்போது நாளடைவில் அவனை முற்றிலும் அவைகள் அழித்துப்போடும்.

அவைகள் அவனை அழித்துப்போடும் முன் அவன் அவைகளை கர்த்தருடைய வசனத்தினாலே அழித்துப்போடவேண்டும். "நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து; தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைகளுக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினால் அழிந்துபோகுமே. இப்படிப்பட்ட போதனைகள்



சுயஇஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும்பற்றி ஞானமென்கிற பேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" என வேதம் நமக்கு தெளிவாக போதிக்கிறது (கொலோ.2:20-23).

சிலர் மாம்சமானதை தன் புயபலமாக்கிக்கொண்டு கர்த்தரை விட்டு விலகுகிறார்கள். மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது. ஒருவன் மாம்சத்தில் மேன்மை பாராட்டுவதற்கு என்னஇருக்கிறது. இவையெல்லாம் அநுபவிக்கிறதினாலே அழிந்துபோகும் என காண்கிறோம். மனுஷனுடைய போதனைகள் மாம்சபிரகாரமாக இருக்கிறது. ஆனால் கர்த்தருடைய போதனைகள் ஆவிக்குரியதாகவும், அவைகள் ஒரு மனுஷனை உயிர்ப்பிக்கக்கூடியதாகவும் இருக்கிறது. ஆகையால் கிறிஸ்துவுடனே ஞானஸ்நானத்திலே உலக வழிபாடுகளுக்கு நாம் மரித்திருந்தோமானால் உலக வழக்கத்தின்படி இல்லாமல் ஆவிக்குரியவர்களாக கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்துகிறவர்களாக இருப்போம்.

"மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" (ரோம.8:13). நீங்கள் ஒவ்வொரு நாளும் புறம்பான காரியங்களை அழித்து கிறிஸ்துவுக்குள் புதுசிருஷ்டியாக இருக்கப்பிரயாசப்படுங்கள். அப்பொழுது பிதாவாகிய தேவன் உங்களை அதிகமாக நேசிப்பார். உங்களைக்கொண்டு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்வார். உலகத்தோடு ஒத்துவாழ்வோம் என்று தீர்மானித்து மாம்சத்தின்படி பிழைப்பீர்களானால் சாவீர்கள். கர்த்தருடைய ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழிக்கும்போது அவரோடு பிழைப்பீர்கள். வாழ்வதும் வீழ்வதும் உங்கள் கைகளில் இருக்கிறது. சவுல் ராஜா கர்த்தருடைய சொல்லை கேளாமல் கொள்ளையில் நேர்த்தியாதை தேர்வு செய்தபடியால், கர்த்தருடைய ஆவியானவர் அவனை விட்டுவிலகினார். அவனோ மரித்தான். நீங்கள் இன்றே ஒரு நல்ல தீர்மானத்தை எடுத்து புறம்பான காரியங்களை அழித்துப்போடுங்கள்.

**இரண்டாவது உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படவேண்டும்.** நாம் புதிதானவர்களாக இருக்கும்போது நம்முடைய வேலைகளும் புதியவைகளாகவே இருக்கும். வளர்ச்சியடையக்கூடிய ஒரு செடியானது எப்படி நாளுக்கு நாள் வளர்ச்சியடைகிறதோ, அதைப்போல புதிதாக்கப்பட்டவர்கள் நாளுக்குநாள் வளர்ச்சியடைய வேண்டியவர்களாயிருக்கிறார்கள். நம்மிடத்திலே பழைய சுபாவங்கள் இல்லை என்பதை எப்படி நாம் மற்றவர்களுக்கு காண்பிக்கமுடியும். நம்முடைய

நற்கிரியைகளின் மூலமாகவும், நம்முடைய மாதிரியான வளர்ச்சியின் மூலமாகவும் காண்பிக்கமுடியும். பவுல் சொல்லுகிறார்; "இனிமேல் ஒருவனும் எனக்கு வருத்தம் உண்டாக்காதிருப்பானாக; கர்த்தராகிய இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக் கொண்டிருக்கிறேன்" என்றார் (கலா.6:17).

இயேசுவினுடைய சுவிசேஷ சத்தியத்திற்கு கீழ்ப்படிவதோடு அநேகர் நின்று விடுகின்றனர். ஆனால் பவுல் இயேசுவினுடைய அச்சடையாளங்களை நான் என் சரீரத்திலே தரித்துக்கொண்டிருக்கிறேன் என்கிறார். அப்படியானால் அவரைப் பார்க்கும்போதெல்லாம் இயேசுவை ஜனங்கள் பார்த்தார்கள். அவருடைய சுபாவம் முற்றிலும் அழிக்கப்பட்டு இயேசுவின் குணாதிசயங்கள் பவுல் மூலமாக வெளிப்பட்டன. இன்றைக்கு இப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள் உலகமெங்கும் எழும்புவார்களேயானால் உலகம் ஒரே நாளிலே கிறிஸ்தவமாக மாறிவிடும்.

ஒவ்வொருவரும் நாளுக்கு நாள் கிறிஸ்துவின் அச்சடையாளங்களை தன் சரீரத்திலே தரித்துக்கொண்டு தேவனை அறியாதவர்கள் மத்தியில் கிறிஸ்துவையும், அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் பேச்சிலும், நடத்தையிலும், செய்கையிலும், வெளிப்படுத்தவேண்டும். இப்படி செய்யும்போது கிறிஸ்துவினுடைய நாமம் மகிமைப்படும்.

"நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்" (ரோம.6:13). முன்னே பாவத்துக்கு அடிமைகளாக இருந்த காலத்தில் நம்முடைய அவயவங்களை பாவத்துக்கு ஒப்புக்கொடுத்திருந்தோம். இப்பொழுதுதோ பாவத்திலிருந்து மீட்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானோம். ஆகையால் உங்கள் அவயவங்களை பாவத்திற்கு இனி ஒப்புக்கொடாமல் நீதிக்குரிய ஆயுதங்களாக அவைகளை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

முன்னே பாவம் செய்கிற ஜனங்களோடு ஒத்துப்போன நீங்கள் இப்பொழுது பாவத்திற்கு விலகினவர்களாகவும், அவர்களை நீதியின் பக்கம் திருப்புகிறவர்களாகவும் இருக்கவேண்டும். அப்படிப்பட்டவர்களோடு ஒருநாளும் ஒத்துப்போய்விடாதிருங்கள். உங்களுடைய பரிசுத்தம் அவர்களை பற்றிப்பிடிக்கவேண்டும். "அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. உங்களில் ஞானியும்



விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்" என யாக்கோபு சொல்லுகிறார் (யாக்.3:12,13).

ஆம், நாம் கிறிஸ்துவில் நிலைத்திருக்கிற திராட்சைக் கொடிகளாயிருப்போமானால் அதற்கேற்ற கனிகளைக் கொடுக்கிறவர் களாயிருப்போம். அதனதன் கனி அதனதன் கொடியினாலும், கனியினாலும் அறியப்படும். நாம் கர்த்தருடையவர்களானால் கர்த்தருக்கேற்ற காரியங்களைச் செய்து, அவருக்குப்பிரியமான கனிகளைக் கொடுக்கப்பிரயாசப்படுவோம். ஒரு ஸ்திரீயானவளைப் பற்றி பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்தபுத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்" என எழுதுகிறார் (1தீமோ.2:9,10). பொதுவாக ஸ்திரீகள் தங்களை பலவிதமான நகைகளினாலும், இன்றைய நவீன காலத்தில் பியூட்டி பார்லர் என்று சொல்லக்கூடிய இடங்களுக்கும் சென்று தங்களை அலங்கரித்துக் கொள்கிறார்கள். ஆனால் பரிசுத்த வேதாகமம் போதிப்பதென்ன? ஸ்திரீகள் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது முத்துக்களினாலாவது தங்களை அலங்கரியாமல், தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்தபுத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடி நற்கிரியைகளினாலும் அலங்கரிக்கவேண்டும் என காண்கிறோம்.

இப்படியே பூர்வ ஸ்திரீகள் தங்களை அலங்கரித்தார்கள். ஆகையால் பவுல் மேலும், பொதுவாக எல்லோருக்கும் சொல்லும்போது; "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோமர் 12:2) என குறிப்பிடுகிறார். நாம் ஒவ்வொரு நாளும் புதிதானவர்களாகவும் அதாவது புறம்பானது நாளுக்கு நாள் அழிந்தும் உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படவும் வேண்டும். அப்படி மாற பிரயாசம் எடுங்கள்.

**கேள்வி**

**புறம்பாக யூதனானவன் யூதனா?**

"புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல, உள்ளத்திலே

யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்; இப்படிப்பட்டவனுக்குரிய புகழ்ச்சி மனுஷராலே அல்ல, தேவனாலே உண்டாயிருக்கிறது" (ரோம.2:28,29).

இயேசுவின் நாட்களில் அநேக யூதர்கள் நாங்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் என்று தங்களை குறித்து புகழ்ந்துகொண்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் ஆபிரகாமின் பிள்ளைகளாயிருந்தால் ஆபிரகாமின் கிரியைகளைச் செய்வீர்களே. தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொன்ன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள், ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே என்றார். ஆகையால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, அதைபோல புறம்பாக மாம்சத்திலே செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்ததேசனமல்ல, பவுல் சொல்லியபடி உள்ளத்திலே யூதனானவனே யூதன்; எழுத்தின்படி உண்டாகாமல், அதாவது எழுத்துகொள்ளும் ஆவியோ உயிர்ப்பிக்கிறது, ஆகையால் எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் விசுவாசித்து ஞானஸ்நானம் பெறும் விருத்தசேதனமே விருத்தசேதனம். இது மனுஷரால் அல்ல தேவனாலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகையால் புறம்பான காரியங்களை அழித்துப் போட்டு உள்ளான மனுஷனில் நாளுக்கு நாள் புதிதாகுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 20. நல்ல கனிகொடுங்கள்

## Give Good Fruits

**க**னிஇல்லாத வாழ்க்கை கால் வாழ்க்கை என்றே சொல்லவேண்டும். ஒவ்வொருவரும் நல்ல கனிகளைக் கொடுக்கும்படியாக தேவனால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளோம். உலகத்தில் தேவனால் படைக்கப்பட்ட அனைத்தும் உலகம் உண்டானது முதல் நல்ல கனிகளைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அதைப்போல மனிதர்களாகிய நாமும் தேவனுக்கு ஏற்ற கனிகளை கொடுக்க வேண்டும். ஆண்டவர் இயேசு தம்முடைய ஜனங்களுக்குப் போதிக்கும்போது; ஒரு உவமையைச் சொன்னார் என்னவென்றால்; "ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்; அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றும் காணவில்லை. அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடிவருகிறேன்; ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான். அதற்கு அவன்: ஐயா, இது இந்த



வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார்" (லூக்.13:6-9). இந்த உவமையிலே சொல்லப்பட்ட தோட்டக்காரன் தான் நடவு செய்திருந்த அத்திமரத்தில் கனியை தேடினான். ஆனால் ஒன்றும் அகப்படவில்லை. அவனுக்குத்தான் எவ்வளவு கவலையிருந்திருக்கும். நம்முடைய பிதாவாகிய தேவன் தாம் தெரிந்துகொண்ட ஜனங்களைக்குறித்து சொல்லும்போது; "நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன்; நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனது என்ன?"என்றார் (எரே.2:21).

தேவன் தமக்கென்று ஒரு கூட்ட ஜனத்தை பிரித்தெடுத்து அவர்களை ஆசீர்வதித்துக்கொண்டுவந்தார். எனவே நான் உன்னை முற்றிலும் நற்கனிதரும் உயர்குலத் திராட்சச்செடியாக நாட்டினேன் நீ எனக்குக் காட்டுத் திராட்சச்செடியின் ஆகாத கொடிகளாய் மாறிப்போனதென்ன என்று அந்த ஜனங்களைப் பார்த்துக்கேட்டார். ஆம், அன்பான தேவஜனமே நீ தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாக இருப்பாயானால் உன்னைப் பார்த்து கர்த்தர் கேட்கும் கேள்வியாக இது இருக்கிறது. அவர் உன்னிடத்தில் கனிகளை எதிர்பார்க்கிறார். "தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி, தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்" (ஆதி.2:8). தேவனாகிய கர்த்தர் மனிதனை ஏதோன் தோட்டத்தில் உண்டாக்கினதின் நோக்கமே அவன் தனக்கேற்ற கனிகளைக் கொடுக்கும்படியாக சிருஷ்டிக்கப்பட்டான். நாம் பார்த்த உவமையிலே திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை அந்த தோட்டக்காரன் நடவு செய்திருந்தானே.

அதைப்போல தேவனாகிய கர்த்தர் ஏதோன் தோட்டத்தில் மனிதனை அங்கே வைத்தார். எல்லா மரங்களும் கனிகளைக் கொடுப்பதைப்போல இவனும் கனிகளை கொடுக்கும்படியாக சிருஷ்டிக்கப்பட்டான். நீங்கள் நினைக்கலாம், நான் எந்தவிதமான கனிகொடுக்க முடியுமென்று, அன்பானவர்களே கனிளைக்கொடுக்கும் மரங்களையும் செடிகளையும் பராமரிக்கும் மனிதன் கனிகளைக் கொடுக்கமுடியாதா? அவன் தேவனுக்குப்பிரியமான கனிகளைக் கொடுக்கமுடியும். அவன் தனித்திருந்தல்ல கர்த்தரோடு இசைந்து கனிகொடுக்கமுடியும். இயேசு சொல்கிறார்; "நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்" (யோவா.15:1). மேலும் "நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்;

என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது'' என்கிறார் (யோவா.15:5). எப்படி திராட்சச்செடியில் நிலைத்திருக்கும் கொடிகள் கனிகளைக் கொடுக்கிறதோ, அதைபோல நீங்களும் நானும் ஆண்டவரில் நிலைத்திருந்தால் ஆவிக்குரிய கனிகளை கொடுக்கமுடியும். இன்றைக்கு சிலர் இயேசுவைப் பற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர் அவர்களில் இருக்கின்றாரா? என்பதுதான் கேள்விக்குரியாக இருக்கிறது. ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால் அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்றார்.

அவனும் ஆண்டவரில் நிலைத்திருக்கவேண்டும். ஆண்டவரும் அவனில் நிலைத்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் மிகுந்த கனிகளைக் கொடுக்கமுடியும். ஒருவன் தேவனுக்கு ஏற்காத காரியங்களை செய்யும்போது அவனில் ஆண்டவர் நிலைத்திருப்பது எப்படி? திராட்சச்செடியில் பூச்சிபிடித்ததையும் காய்ந்துபோனதையும், கனி கொடாததையும் களைந்து போடுகிறதுபோல அவர் அப்படிப்பட்டவர்களைக் களைந்துபோடுகிறார். அதன் முடிவு சுட்டெரிக்கப்படுவதே என காண்கிறோம்.

அத்திமரத்தை நடவு செய்திருந்தவன். மூன்று வருடங்களாக அந்த மரத்தில் அத்திப்பழங்களைத் தேடிவந்தான் என இயேசு சொல்லுகிறார். அவன் எவ்வளவு வாஞ்சையோடு அதை தேடிவந்திருப்பான் என்பதை நீங்கள் சற்று சிந்தித்துப்பாருங்கள். ஒருவேளை தன்னுடைய வீட்டில் சொல்லி இருக்கக்கூடும் அடுத்த வருடம் நம்முடைய அத்திமரம் அத்திபழங்களைக் கொடுக்கும் அப்பொழுது நாம் அத்திபழங்களை சாப்பிடலாம். நம்முடைய உறவினர்களுக்கு அத்தி அடைபண்ணி கொண்டுபோய் கொடுக்கலாம் என்றெல்லாம் கனவு கண்டு இருப்பான் அல்லவா!

ஆனால் அந்த அத்திமரமோ மூன்றாண்டுகளாக பலன் கொடாதிருந்தது. அதுவரை அவன் அதை வெட்டிப்போட மனதில்லாதிருந்தான். ஆண்டவர் சொல்லும் 100 ஆடுகள் பற்றிய உவமையில் "உங்களில் ஒரு மனுஷன் நூறு ஆடுகளை உடையவனாயிருந்து, அவைகளில் ஒன்று காணாமற்போனால், தொண்ணூற்றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்திலே விட்டு, காணாமற்போன ஆட்டைக் கண்டுபிடிக்குமளவும் தேடித்திரியானோ? என்று சொல்லுகிறார் (லூக்.15:4). ஆம், அதைப்போல இந்த தோட்டக்காரன் அத்திமரத்தில் வருஷந்தோரும் கனியைத் தேடிவந்தான். ஆனால் கனிகளோ அகப்படவில்லை. ஒரு முறை ஆண்டவர் இயேசு ஊழியத்தை முடித்துவிட்டு தம்முடைய சீஷர்களோடு வந்துகொண்டிருக்கும்போது; அவருக்குப் பசியுண்டாயிற்று "அப்பொழுது இலைகளுள்ள ஒரு அத்திமரத்தைத் தூரத்திலே கண்டு, அதில் ஏதாகிலும் அகப்படுமோ என்று பார்க்கவந்தார். அத்திப்பழக் காலமாயிராதபடியால், அவர் அதனிடத்தில் வந்தபோது அதில்



இலைகளையல்லாமல் வேறொன்றையும் காணவில்லை. அப்பொழுது இயேசு அதைப் பார்த்து: இதுமுதல் ஒருக்காலும் ஒருவனும் உன்னிடத்தில் கனியைப் புசியாதிருக்கக்கடவன் என்றார்; அதை அவருடைய சீஷர்கள் கேட்டார்கள்'' (மாற்.11:13,14).

ஆண்டவர் அத்திமரத்தில் கனியைத் தேடியதைப்போல நம்முடைய வாழ்க்கையிலும் தேடுகிறார். நாம் எக்காலத்திலும் கனிகளைக் கொடுக்கும்படியாக அவர் விரும்புகிறார். அன்பு நேயரே, நீ கர்த்தருக்கு ஏற்றவிதத்தில் கனிகொடுப்பாயா, உன்னை கனி கொடுக்கும்படியாக அவர் சிருஷ்டித்திருக்கிறார். என்னால் கனிகொடுக்க முடியவில்லையே என்று கலங்கிக்கொண்டிருக்கிறாயா? கவலைப்படாதே, அவரில் நிலைத்திரு அப்பொழுது எக்காலத்திலும் கனிகொடுப்பாய். ஆண்டவர் தம்முடைய சீஷர்களை அவருடைய ஊழியத்திற்காக தெரிந்துகொண்டார் என்பதை நாம் அறிவோம். அவர்களோ இயேசுவைப்பிடித்தவுடன் சிதறிப்போனார்கள். அந்நாட்களில் பேதுரு மறுபடியும் தன்னுடைய மீன்பிடி வேலையை துவக்கினான். ஆனால் இயேசு அவர்களை அதிகமான நேசித்தபடியால் மீண்டும் அவர்களை சந்தித்தார்.

அவர்களோ இரவெல்லாம் கடினப்பட்டு ஒன்றும் பிடிக்கவில்லை. "விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள், இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை என்றார்கள்'' (யோவா.21:4,5). அவர்களிடத்தில் கர்த்தர் எதிர்பார்த்தார் ஆனால் அவர்களோ ஒன்றுமில்லை என்றார்கள். அற்புத கர்த்தர் அவர்களுக்கு ஒரு ஆலோசனை கொடுத்து வலது புறமாக வலையைப் போடுங்கள் என்றார் அந்தப்படியாக போட்டு அதிகமான மீன்களைப் பிடித்தார்கள். பின்பு அவர்களை அழைத்துவந்து "அப்பத்தையும் மீனையும் எடுத்து, அவர்களுக்குக் கொடுத்தார்'' (யோவா.21:13).

பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உண்டா என்று கேட்ட கர்த்தருக்கு அவர்களால் ஒன்றும் கொடுக்கமுடியாமற்போனது. ஆனால் இரவெல்லாம் கடினப்பட்டு ஒன்றும் பிடிக்காத அவர்களுக்கு ஆண்டவர் சுடான அப்பத்தையும் மீனையும் கொடுத்து போஷித்தார். அன்பானவர்களே, நீங்களும் நானும் ஆண்டவர் எதிர்பார்க்கிற காரியங்களை செய்யவேண்டும். அவர் அற்புதமானவர். அவராலே கூடாதது ஒன்றுமில்லை என்பதை நாம் அறிவோம். அவர் விரும்புகிற கனிகளை கொடுக்க ஒவ்வொருநாளும் முயற்சியுங்கள். "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன்

சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" என்கிறார் (லூக்.13:34).

ஆதிமுதலாக தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு தம்முடைய ஜனங்களை வழிநடத்திக்கொண்டு வந்தார் என்பதை நாம் அறிவோம். தன்னிடத்தில் அனுப்பப்பட்ட அந்த தீர்க்கதரிசிகளுடைய வார்த்தைக்கு செவிகொடாமல் அவர்களை கல்லெறிந்து கொன்றுபோட்டார்கள். ஸ்தேவானும் அப்படியாக மரித்துப்போனான் என்று அறிவோம். இப்படி அநேகமுறை தம்முடைய ஜனங்களை கூட்டிச்சேர்த்துக்கொண்டுவந்தார். அதைப்போல வலைகளைவிட்டு இயேசுவின் பின்னே வந்தவர்கள் அவரைவிட்டு மீன்பிடிக்கும்படி மறுபடியும் திரும்பினார்கள். அவர்களை மீண்டும் சந்தித்து தமது ஆடுகளை மேய்க்கும்படியாக சொன்னார்.

கடைசியாக அத்திமரத்தை நடவு செய்திருந்த அந்த தோட்டக்காரனின் முடிவை பார்ப்போம். அவன் தன் வேலைக்காரனை அழைத்து இதை வெட்டிப்போடு என்றான். இதைக்கேட்ட வேலைக்காரன் ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும்; நான் இதைச் சுற்றிலும் கொத்தி, எருப்போடுவேன், கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால் இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான். ஆம் அன்பானவர்களே, ஆண்டவர் இயேசு உங்களுக்காக பிதாவிடம் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். ஒருவேளை நீங்கள் இதுவரை கனிகொடாத கிறிஸ்தவர்களாக வாழ்ந்திருப்பீர்களானால் இந்த வருடமாவது கனிகள் நிறைந்த வாழ்க்கை வாழ பிரயாசப்படுங்கள்.

என்னிடத்தில் ஒன்றுமில்லை நான் எப்படி கனிகொடுக்கிற கிறிஸ்தவனாக வாழ முடியும் என்று நினையாதிருங்கள். உங்களிடத்தில் இருக்கிறவைகளை கர்த்தர் ஆசீர்வதிக்க வல்லவராயிருக்கிறார். ஆண்டவர் ஐந்து அப்பத்தையும் அந்த இரண்டு மீன்களையும் ஆசீர்வதித்து கொடுக்கு முன் தம்முடைய சீஷர்களைப் பார்த்து; நீங்களே அவர்களுக்கு போஜனங் கொடுங்கள் என்றார். அவர்களோ "இங்கே எங்களிடத்தில் ஐந்து அப்பமும் இரண்டு மீன்களுமேயல்லாமல், வேறொன்றும் இல்லை என்றார்கள்" (மத்.14:17). அந்த ஐந்து அப்பத்தையும் இரண்டு மீன்களையும் ஆசீர்வதித்து கொடுத்தார் ஐயாயிரம்பேர் சாப்பிட்டு மீதியானதை பன்னிரண்டு கூடைநிறைய எடுத்தார்கள். இவ்வளவு பேருக்கு எங்கே போவது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனென்றால் அற்புத கர்த்தர் அவர்களோடு இருந்தார் அல்லவா? இன்று நம்மோடும் இருக்கிறார்.



ஆகையால் ஆண்டவரில் விசுவாசமுள்ளவர்களாக ஜெபத்துடனே எதையும் செய்ய ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். இதுவும் கனிகொடுக்கும் ஜீவியத்தில் ஒன்று. எலிசா தன்னிடத்தில் முறையிட்ட விதவையின் குடும்ப கடனை தீர்க்க உன்னிடத்தில் என்ன இருக்கிறது என்று கேட்கும்போது அந்த ஞானமான ஸ்திரீ "ஒரு குடம் எண்ணெய் அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறொன்றும் இல்லை என்றாள்" (2இரா.4:2). அதை மற்ற குடங்களில் வார்க்கச் செய்து கடன் முழுவதையும் அடைக்கும்படி எலிசா ஒரு அற்புதத்தை செய்தான். அவளோ கனி கொடுக்கிறவளாயிருந்தாள்.

அதைப்போல கானானிய ஸ்திரீயை ஆண்டவர் பார்த்து உன் விசுவாசம் பெரிது என்றார்" (மத்.15:28). அவளும் கனியுள்ள அதாவது விசுவாசமிக்கவளாயிருந்தாள். இப்படியிருக்கும்போது; "நடுகிறவனாலும் ஒன்றுமில்லை, நீர்ப்பாய்ச்சுகிற வனாலும் ஒன்றுமில்லை, விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்" என காண்கிறோம் (1கொ.3:7). நடுகிறவனும் நீர்ப்பாய்ச்சுகிறவனும் ஒன்றாயிருக்கிறார்கள்; அவனவன் தன்தன் வேலைக்குத் தக்கதாய்க் கூலியைப் பெறுவான். நீங்களோ உங்களுடைய வாழ்க்கையில் கனிகொடுக்கிறவர் களாயிருங்கள்.

**கேள்வி**

**அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படுமா?**

ஆம், அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும். "நல்ல மரமானது கெட்ட கனிகொடாது, கெட்ட மரமானது நல்ல கனிகொடாது. அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும்; முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச் செடியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை" என்று இயேசு சொல்கிறார் (லூக்.6:43,44).

அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படுவதுபோல, நாம் கர்த்தருடையவர்களை அவர்களுடைய கனிகளினாலே அறிந்துகொள்ளலாம். கர்த்தருடையவன் கர்த்தருக்கேற்ற கனிகளைக் கொடுப்பான். பொல்லாங்கனால் உண்டானவன் தீமைகளை கொப்பளிப்பான். அவரவருடைய கனிகளினாலே அறியலாம். நீங்கள் கர்த்தருடையவர் களாயிருந்து கணக்கில்லா கனிகளைக் கொடுத்து ஆசீர்வதிக்கப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

**"கர்த்தரை நம்பி நன்மைசெய், தேசத்தில் குடியிருந்து**
**சத்தியத்தை மேய்ந்துகொள்"**
**(சங்.37:3)**

# 21. மரித்தோருக்கும் ஜீவனுள்ளோருக்கும் ஆண்டவர்

# He Is The Lord To Both The Dead And The Living

மரித்துவிட்டால் அவ்வளவுதான் அவர்களுடைய கதை முடிந்துவிட்டது என்று பலர் சொல்வதைக்கேட்டிருப்பீர்கள். உண்மை அதுவல்ல. மரித்தபின் ஒரு அருமையான நித்திய வாழ்க்கை ஆரம்பமாகிறது என்றே சொல்ல வேண்டும். அதுவும் தேவனோடு வாழும் பாக்கியம். இயேசு மரித்தோருக்கும் ஆண்டவராயிருக்கிறார். சகல அதிகாரமும் அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. "கிறிஸ்துவும் மரித்தோர்மேலும் ஜீவனுள்ளோர் மேலும் ஆண்டவராயிருக்கும் பொருட்டு, மரித்தும் எழுந்தும் பிழைத்துமிருக்கிறார்" என்று ரோம.14:9-ல் வாசிக்கிறோம். மரித்துப்போன ஒருவனால் பேசமுடியாது, நடக்க முடியாது, அவன் மீண்டும் பிழைப்பதில்லை. அப்படிப்பட்டவன்மேல் ஆண்டவர் இயேசு அதிகாரமுடையவராயிருக்கிறார். "கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" என்று வாசிக்கிறோம் (1தெச.4:16).

கிறிஸ்துவுக்குள்ளாக மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். அவர்களுடைய சரீரம் எழுப்பப்படும். ஒரு விதையை விதைக்கும்போது அது எப்படி முளைத்து துளிர்விடுகிறதோ, அதைப்போல இயேசுவின் வருகையின்போது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். அவருடைய வருகையின்போது இது நடைபெறும். பலவருடங்களாக கர்த்தருக்குள்ளாக மரித்தவர்கள் இருப்பார்கள். அவர்களுடைய எண்ணிக்கையை நாம் அறியோம். ஆனால் ஒரு திரளான கூட்டம் அவருடைய வருகையில் எழுப்பப்படும் என நம்புகிறோம்.

ஆகையால் கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என காண்கிறோம். ஆண்டவர் இயேசுவை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். ஆண்டவர் இயேசு உயிரோடிருந்த நாட்களில் ஒருமுறை நான்கு நாட்களுக்கு முன்னே மரித்துப்போன லாசருவை உயிரோடு எழுப்பினார். "லாசருவே வெளியே வா என்று உரத்த சத்தமாய்க் கூப்பிட்டார். அப்பொழுது மரித்தவன் வெளியே வந்தான். அவன் கால்களும் கைகளும் பிரேதச் சீலைகளினால் கட்டப்பட்டிருந்தது, அவன் முகமும் சீலையால் சுற்றப்பட்டிருந்தது. இயேசு அவர்களை நோக்கி; இவனைக் கட்டவிழ்த்து விடுங்கள் என்றார்" (யோவா.11:43,44).



இதைப் பார்த்த ஜனங்கள் இயேசுவின் மீது விசுவாசம் வைக்க ஆரம்பித்தனர். மரித்தோருக்கும் அவர் ஆண்டவராயிக்கிறபடியால் மரித்து நான்கு நாட்கள் ஆன லாசருவை பெயர் சொல்லி அழைத்தவுடன். மரித்த லாசருவின் உயிர் அவனுக்குள் திரும்பவந்தது, அவன் எழுந்து வெளியே வந்தான். நீங்களும் நானும் மரித்த சரீரத்தைப் பார்த்து வெளியே வா என்று சொன்னால் அது வெளியே வந்துவிடுமா? நமக்கும் அந்த விசுவாசம் இருந்தால் வந்துவிடும் என்று சிலர் சொல்லுவார்கள். அன்பானவர்களே, ஆண்டவருக்கு அந்த அதிகாரம் பிதாவாகிய தேவனால் கொடுக்கப்பட்டிருந்தது. மேலும் அவர் மரித்தோருக்கும் ஜீவனுள்ளோருக்கும் ஆண்டவராயிருக்கிறார். இந்த அதிகாரத்தை மோசேயோ அல்லது யோவான்ஸ்நானகனோ பெற்றுக் கொள்ளவில்லை. ஆண்டவர் ஒருவருக்கு மட்டுமே இந்த அதிகாரத்தை பிதாவாகிய தேவன் கொடுத்திருந்தார். இயேசுவோடு சிலுவைகளில் தொங்கிக்கொண்டிருந்த ஒரு கள்வன் இயேசுவை நோக்கி உமது இராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: "இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்" (லூக்.23:43).

சிலுவையில் ஜீவனை விட்ட இந்த கள்வன் இயேசுவோடு பரதீசுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். அவன் ஒரு குற்றவாளி என்று அந்த அரசு அவனை சிலுவையில் இயேசுவோடு அறைந்தது. ஆனால் அந்த ஆத்துமாவுக்கு அதிகாரியான இயேசு அவனுடைய விசுவாசத்தையும், மனந்திரும்பிய அவனுடைய அறிக்கையையும் கேட்டு, அவனை நோக்கி; இன்று என்னுடனேகூட பரதீசிலிருப்பாய் என்றார்.

பேதுரு சொல்லும்போது; "கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். அந்த ஆவியிலே அவர் போய்க் காவலிலுள்ள ஆவிகளுக்குப் பிரசங்கித்தார். அந்த ஆவிகள், பூர்வத்திலே நோவா பேழையை ஆயத்தம்பண்ணும் நாட்களிலே, தேவன் நீடிய பொறுமையோடே காத்திருந்தபோது, கீழ்ப்படியாமற்போனவைகள்; அந்தப் பேழையிலே சிலராகிய எட்டுப்பேர்மாத்திரம் பிரவேசித்து ஜலத்தினாலே காக்கப்பட்டார்கள்" (1பேது.3:18-20). நோவா காலத்தில் கீழ்ப்படியாமற்போன அந்த ஆவிகளுக்குப் போய் ஆண்டவர் இயேசு பிரசங்கித்தார். ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லோரும் இரட்சிக்கப்படவேண்டும் என்பது தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆகையால் அவர் காவலிலுள்ள ஆவிகளுக்கும் பிரசங்கித்தார். அவருக்கு அந்த ஆவிகளின்மேலும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் மரித்தோருக்கும்

ஆண்டவர் ஆகையால் அவைகளுக்கும் பிரசங்கித்தார் என காண்கிறோம். பேதுரு இன்னும் சற்றுவிளக்கமாக எடுத்துச்சொல்லுகிறார் எப்படியென்றால்; "இதற்காக மரித்தோரானவர்கள், மனுஷர்முன்பாக மாம்சத்திலே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருந்தும், தேவன்முன்பாக ஆவியிலே பிழைக்கும்படியாக, அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது" என்கிறார் (1பேது.4:6).

ஆகையால் இக்காலத்தில் பாவத்தில் வாழ்ந்து மரிக்கிறவர்களுக்கும் மரித்தபின்பு சுவிசேஷம் சொல்லப்படும் என்று மெத்தனமாக இருந்து மரித்தாலும் நமக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படும் என்று எண்ணிவிடாதீர்கள். நமக்கெல்லாம் மன்னிப்பு இப்பூமியில்தான். மரித்தபின்பு நியாயத்தீர்ப்புக்கு நம்முடைய ஆத்துமா காத்திருக்கும். அவர் இப்பொழுது நம்முடைய இரட்சகராயிருக்கிறார். நாம் மரித்தபின்பு நமக்கு நியாயாதிபதியாக வீற்றிருப்பார் என்பதை மறந்துவிட வேண்டாம். ஆண்டவர் உயிர்த்தெழுந்தபோது; ஒரு மாபெரும் சம்பவம் நடைபெற்றது. அது என்னவென்றால் அவர் மரித்தோருக்கும் ஆண்டவர் என்பதை நிரூபிக்க; "கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்தபின்பு, இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள்" (மத்.27:52,53).

இயேசு சொல்கிறார்; "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்" என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி.1:18). இந்த திறவுகோல்களை பிதாவாகிய தேவன் அவருக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையால் மரித்தோரை அவர் எழுப்ப வல்லவராயிருக்கிறார். மரித்தோர் யாவரும் அவருடைய சத்தம்கேட்பார்கள்.

இயேசு ஜீவனுள்ளோருக்கும் ஆண்டவர் என காண்கிறோம். ஆகையால் பேதுரு சொல்லும்போது; "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம், நித்தியஜீவவசனங்கள் உம்மிடத்தில் உண்டே. நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான்" (யோவா.6:68,69). அவரிடத்தில் நித்திய ஜீவவசனங்கள் இருக்கிறபடியால் நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் என்று சொன்னான். அவர் சதாகாலங்களிலும் ஜீவிக்கிறவராகவும் ஜீவனுள்ளவைகளுக்கெல்லாம் ஆகாரம் கொடுக்கிறவராகையால் ஜீவனுள்ளோருக்கும் ஆண்டவராயிருக்கிறார். பேதுரு தம்முடைய முதல் பிரசங்கத்தில் இயேசுவைக் குறித்துப்போதிக்கும்போது; "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த



இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான்" (அப்.2:36).

இயேசு தேவனுடைய குமாரன் என்று சொன்னதினாலே அவர் மீது யூதர்கள் மிகவும் கோபமுள்ளவர்களாயிருந்தார்கள். ஆகையால் அவரை சிலுவையில் அறையும்படியாக ஒப்புக்கொடுத்தார்கள். அவர்களை இரட்சிக்கும்படியாக இயேசு யூத கோத்திரத்தில் பிறந்தார் என்ற செய்தியை அறிந்த அந்த மக்கள் அறிவில்லாமல் அவரை ஒப்புக்கொடுத்தார்கள். எனவே பேதுரு நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறிந்துகொள்ளுங்கள் என்று பிரசங்கித்தார். யாரை இந்த ஜனங்கள் புறம்பாக்கிப் போட்டார்களோ அவருடைய நாமத்தையே தேவன் உயர்த்தினார். "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" என்று பேதுரு பிரசங்கிக்கத்தொடங்கினான் (அப்.4:12).

ஆகையால் "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என்று வேதம் சொல்லுகிறது (1யோவா.5:12). நீங்கள் தேவனுடைய குமாரனை சொந்த இரட்சகராக கொண்டவராயிருக்கிறீர்களா? நீங்கள் ஒரு கிறிஸ்தவராயிராவிட்டால் உங்களுக்கும் கிறிஸ்துவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. உலகத்தில் உள்ள ஒரு சாதாரண நபரைப்போல இருப்பீர்கள். நீங்கள் அவருடையவர்களாக மாறும்போது ஜீவனுள்ளவர்களாக இருப்பீர்கள். அவரை ஏற்றுக்கொள்ளாதவராயிருப்பீர்களானால் வேதம் சொல்லுகிறது நீங்கள் ஜீவன் இல்லாதவர்கள் என்று. நீங்கள் எப்படிப்பட்டவராயிருக்கிறீர்கள் என்பதை இந்த வசனத்தை வைத்து உங்களை நீங்களே தற்சோதனை செய்துபாருங்கள்.

ஒரு பிறவிக்குருடன் இயேசுவினால் பார்வையடைந்தான். அவனை இயேசு உமிழ்நீரினால் சேறுண்டாக்கி அந்தச் சேற்றைக் குருடனுடைய கண்களின்மேல் பூசி, நீ போய் சீலோவாம் குளத்திலே கழுவு என்றார் அந்தப்படியாக அவன்போய் கழுவி பார்வையடைந்தான். பின்பு உடனே அவரை அவன் பார்க்கவில்லை சில காலம் கழித்து, இயேசு அவனை சந்தித்தார்; "நீ அவரைக் கண்டிருக்கிறாய், உன்னுடனே பேசுகிறவர் அவர்தான் என்றார். உடனே அவன்: ஆண்டவரே, விசுவாசிக்கிறேன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டான்" (யோவா.9:37,38).

அப்பொழுது இயேசு: காணாதவர்கள் காணும்படியாகவும், காண்கிறவர்கள் குருடராகும்படியாகவும் நியாயத்தீர்ப்புக்கு நான் இந்த உலகத்தில் வந்தேன் என்றார். ஆம் அன்பானவர்களே, அவரை காணாத குருடராக அநேகர் இருக்கிறார்கள். அவர் ஜீவனுள்ளோர் எல்லோருக்கும் ஆண்டவராயிருக்கிறார். ஆகையால் அந்த பிறவிக்குருடன் ஆண்டவரே விசுவாசிக்கிறேன் என்றான். நீங்கள் இன்று விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள். ஒரு முறை சமாரியா ஸ்திரீயிடம் இயேசு பேசிக்கொண்டிருக்கும்போது; "அந்த ஸ்திரீ அவரை நோக்கி: கிறிஸ்து என்னப்படுகிற மேசியா வருகிறார் என்று அறிவேன், அவர் வரும்போது எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பார் என்றாள். அதற்கு இயேசு; உன்னுடனே பேசுகிற நானே அவர் என்றார்" (யோவா. 4:25,26).

ஆம், அவரே எல்லாவற்றையும் நமக்கு அறிவிப்பவராக வெளிப்படுத்தப்பட்டார். ஆகையால் பிதா தாமே இயேசுவை குறித்து வெளிப்படுத்துகையில் இவர் என் நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று மேகத்திலிருந்து திருவுளம்பற்றினார். அவருடைய சத்தத்தை கேட்டார்கள். இன்றைக்கு இவ்வுலகத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் யாவரும் இயேசுவின் வார்த்தைக்குச் செவிகொடுத்து அதற்கு கீழ்ப்படிய வேண்டும்.

"பிதாவானவர் குமாரனில் அன்பாயிருந்து எல்லாவற்றையும் அவர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்தியஜீவனை உடையவனாயிருக்கிறான்; குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை, தேவனுடைய கோபம் அவன்மேல் நிலைநிற்கும்" என காண்கிறோம் (யோவா.3:35,36). சகல அதிகாரம் பெற்ற ஆண்டவர் இயேசுவுக்கு உங்களை முற்றிலுமாக ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது நித்தியஜீவனைப் பெற தகுதியுள்ளவர்களாயிருப்பீர்கள்.

**கேள்வி**

**நாம் பிழைத்தாலும் மரித்தாலும் யாருடையவர்களாயிருக்கிறோம்?**

"நாம் பிழைத்தாலும் கர்த்தருக்கென்று பிழைக்கிறோம்; நாம் மரித்தாலும் கர்த்தருக்கென்று மரிக்கிறோம்; ஆகையால் பிழைத்தாலும் மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம்" என பவுல் நமக்கு தெளிவுபடுத்துகிறார் (ரோம.14:8). பவுல் இந்த விதமான நம்பிக்கையை பெற்றவராயிருந்தார். ஆகையால் கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம் என்றார்.



மரித்தாலும் நாம் கர்த்தருடையவர்கள். உயிரோடிருந்தாலும் நாம் கர்த்தருடையவர்கள். சிலருக்கு மரண பயம் இருக்கிறது. ஐயோ மரித்துவிட்டால் என்ன நடக்குமோ என்ற அச்சம். மரித்தபின்பு அவர்கள் இளைப்பாறுதலுக்குள்ளாக பிரவேசிப்பார்கள். அதன்பின்பு கர்த்தருடைய வருகையின் போது அவர்கள் ஜீவனுள்ளவர்களாக எழுப்பப்படுவார்கள். அப்பொழுது அவர்களுக்கு ஆவிக்குரிய சரீரம் கொடுக்கப்படும். பின்பு நித்திய நித்தியமாக தேவனோடு என்றென்றும் வாழும் பாக்கியத்தை அடைவார்கள்.

ஆகையால் அன்பானவர்களே, நாம் பிழைத்தாலும் மரித்தாலும் கர்த்தருடையவர்களாயிருக்கிறோம் என்ற சந்தோஷத்துடனே ஒவ்வொரு நாளும் வாழுங்கள். இந்த பாக்கியம் கர்த்தருடையவர்களுக்கு மட்டுமே என காண்கிறோம். இந்த பாக்கியத்தை நீங்களும் பெற்றுக்கொள்ள உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 22. தேவனுடைய மனுஷன்
## The Man Of God

**நா**ம் தேவனால் உண்டாக்கப்பட்டபடியால் தேவனுடைய மனுஷன் என்று அழைக்கப்படுகிறோம். இது எத்தனை ஆசீர்வாதமான வார்த்தை என்று பார்த்தீர்களா? உலகில் நாம் பார்க்கிற எல்லாமே தேவனால் சிருஷ்டிக்கப்பட்டது. அதில் விசேஷமாக மனிதன் தேவனால் உண்டாக்கப்பட்டான். ஆகையால் அவன் தேவனுடைய மனுஷன் என்று அழைக்கப்படுகிறான். தேவனுடைய மனுஷன் என்று நாம் அழைக்கப்படும்போது அவருடைய குணங்கள் நம்மில் காணப்பட வேண்டுமல்லவா! ஆம், எலியாவைக்குறித்து யாக்கோபு இப்படியாக சொல்லுகிறார்; "எலியா என்பவன் நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது" (யாக்.5:17,18).

அன்பானவர்களே, இந்த எலியா தேவனுடைய மனுஷன் என்று அழைக்கப்பட்டான். இவனைப் பற்றி யாக்கோபு சொல்லும்போது எலியா நம்மைப்போலப் பாடுள்ள மனுஷனாயிருந்தும் என்றும் குறிப்பிடுகிறார். இன்றைக்கு அநேகர் என்ன நினைக்கிறார்கள் என்றால்; தேவனுடைய ஊழியக்காரனுக்கு எந்தவிதமான பாடுகளும் இருக்காது என்று நினைக்கிறார்கள். அப்படியல்ல, மனிதனாக பிறந்த எல்லோருக்குமே பாடுகள் இருக்கத்தான் செய்கிறது. அதிலே குறிப்பாக தேவனுடைய ஊழியக்காரருக்கு அதிகமான பாடுகள் இருக்கும் என்றே சொல்லலாம்.

இந்த எலியா நம்மைப்போல பாடுள்ள ஒரு மனுஷனாகவே இருந்தார். ஆனால் அவர் கருத்தாய் ஜெபம்பண்ணினார். அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் மழைபெய்யாமலிருந்து. மீண்டும் ஜெபித்தார் அப்பொழுது மழைபெய்தது என்று காண்கிறோம். இவருடைய கருத்தான ஜெபம் தேவசமுகத்தில் கேட்கப்பட்டது. இன்றைக்கு நீங்களும் நானும் இவரைப்போல தேவனால் உண்டாக்கப்பட்டவர்கள்தான் நாமும் தேவனை நோக்கி கருத்தாக ஜெபிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். மேலும் இவருடைய உருக்கமான ஜெபத்தை நாம் 1இரா.17:20-21-ல் வாசிக்கிறோம். "என் தேவனாகிய கர்த்தாவே, நான் தங்கியிருக்க இடங்கொடுத்த இந்த விதவையின் மகனைச் சாகப்பண்ணினதினால் அவளுக்குத் துக்கத்தை வருவித்தீரே என்று கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு; அந்தப் பிள்ளையின்மேல் மூன்றுதரம் குப்புறவிழுந்து: என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பிவரப்பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்". இந்த உருக்கமான ஜெபத்தைக் கர்த்தர் கேட்டார்.

அப்பொழுது பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பிவந்தது. எலியா பிள்ளையை அவளுடைய தாயினிடத்தில் ஒப்புவித்தான். அப்பொழுது அந்த ஸ்திரீ என்ன சொன்னாள் என்று தெரியுமா? "நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை என்றும், இதினால் இப்போது அறிந்திருக்கிறேன் என்றாள்" (1இரா.17:24). தேவனுடைய மனுஷனின் வார்த்தைக்கு தேவன் செவிகொடுக்கிறார் என்று அறிகிறோம். நீங்களும் நானும் தேவனுடைய மனுஷனாக இருப்போமானால் அவர் நம்முடைய வேண்டுதலுக்கு செவிகொடுப்பார்.

**இந்த எலியா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தான்.** தேவனுடைய மனுஷன் என்றால் நாம் யாருக்கும் பயப்படவேண்டிய அவசியமில்லை என்று அர்த்தமல்ல. அநேகர் அப்படித்தான் தவறாக புரிந்துகொண்டு அநேகருக்கு எதிர்த்து நிற்கிறார்கள். நாம் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்ற வேண்டுமானால் அதிகாரங்களுக்கு எதிர்த்து நிற்கக்கூடாது. அவைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். இது தேவனுடைய திட்டமாக இருக்கிறது.

அந்தப்படியாக ஒரு முறை எலியாவுக்கு கர்த்தருடைய வார்த்தை உண்டாகி; "நீ இவ்விடத்தை விட்டுக் கீழ்த்திசையை நோக்கிப் போய், யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையில் ஒளித்துக்கொண்டிரு. அந்த ஆற்றின் தண்ணீரைக் குடிப்பாய்; அங்கே உன்னைப் போஷிக்க, காகங்களுக்குக் கட்டளையிடுவேன் என்றார். அவன் போய், கர்த்தருடைய வார்த்தையின்படியே யோர்தானுக்கு நேராயிருக்கிற கேரீத் ஆற்றண்டையிலே



தங்கியிருந்தான்" (1இரா.17:3-6). ஒருவேளை இந்த இடத்தில் நாமாக இருந்தால் என்ன செய்திருப்போம் என்பதை சற்றே சிந்திக்கும்படி உங்களை கேட்டுக்கொள்கிறேன். மினரல் வாட்டர் குடிக்கக் கூடிய நாம் ஆற்றுத் தண்ணீரை குடித்திருப்போமா? சுகாதாரமாக சாப்பிட்டுக்கொண்டிருக்கும் நாம் காகங்கள் கொண்டுவந்து கொடுக்கும் அப்பத்தை தின்று இருப்போமா? ஆனால் எலியா கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தவனாக ஆற்றுத் தண்ணீரைக் குடித்துக்கொண்டும், காகங்கள் கொண்டுவந்த போடும் அப்பத்தையும் இறைச்சியையும் சாப்பிட்டுக் கொண்டு, ஆகாப் ராஜாவுக்கு பயந்து ஒளிந்துகொண்டிருந்தான்.

மாபெரும் அற்புதங்களை செய்த இந்த தீர்க்கன். கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடந்தான். இன்றைக்கு நாம் இவ்விதாக கர்த்தருடைய வர்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்கின்றோமா? என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். ஆற்றுத் தண்ணீர் வற்றியவுடன் மீண்டும் கர்த்தருடைய வர்த்தை எலியாவுக்கு உண்டானது. "நீ எழுந்து, சீதோனுக்கடுத்த சாறிபாத் ஊருக்குப் போய், அங்கே தங்கியிரு; உன்னைப் பராமரிக்கும்படி அங்கே இருக்கிற ஒரு விதவைக்குக் கட்டளையிட்டேன் என்றார்" (1இரா.17:9). சாறிபாத் ஊரிலே எத்தனையோ வசதிபடைத்தவர்கள் இருந்திருக்கக்கூடும் ஆனால் எலியா ஒரு விதவையின் வீட்டிற்கு அனுப்பப்பட்டார்.

நம்முடைய தேவன் ஏழைகளின் தேவன் அவர் ஏழைகளை அதிகமாக நேசிக்கிறார், அவர்களைக் காப்பாற்றுகிறார். ஆகையால் எலியாவை அந்த விதவையின் வீட்டிற்கு அனுப்பினார். அவளோ சாவின் விளிம்பிற்கு சென்றுவிட்ட ஒரு பெண். அவள் வீட்டில் ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே இருந்தது. அதை சுட்டு சாப்பிட்டு தானும் தன் மகனும் செத்துப்போக இரண்டு விறகு பொறுக்கிக்கொண்டு இருந்தாள். அதிலே பங்குக்கு எலியா அனுப்பப்பட்டார். அதிலும் ஒரு சிறிய அடையைப் பண்ணி முதலாவது எனக்கு கொண்டுவா என்று சொல்லி அவளுக்குக் கட்டளையிட்டார். அவளோ தேவனுடைய மனுஷனுக்குக் கீழ்ப்படிந்தபடியால் ஒன்றும் பேசாமல் அதை ஆயத்தம் பண்ணிகொண்டுபோய் கொடுத்தாள். நடந்த அற்புதம் என்ன? பானையில் மா செலவாகவில்லை, கலயத்தில் எண்ணெய் குறைவில்லை. பஞ்சகாலமுழுவதும் சாப்பிட்டார்கள். நண்பர்களே, நம்முடைய தேவன் எவ்வளவு வல்லவர் என்று பார்த்தீர்களா?

ஆகாப் ராஜாவுக்கு பயந்து இவ்வளவு நாட்களாக ஒளித்துக்கொண்டிருந்த இந்த எலியாவைப் பார்த்ததும் மீண்டும் கர்த்தருடைய வார்த்தை உண்டானது. என்னவென்றால்; "நீ போய் ஆகாபுக்கு உன்னைக்

காண்பி; நான் தேசத்தின்மேல் மழையைக் கட்டளையிடுவேன் என்றார். அப்பொழுது எலியா ஆகாபுக்கு தன்னைக் காண்பிக்கப்போனான்; பஞ்சமோவெனில் சமாரியாவிலே கொடிதாயிருந்தது" (1இரா.18:1,2). இந்த வசனத்தின் பின்பகுதியில் கவனித்தீர்களா பஞ்சமோ சமாரியாவிலே கொடிதாயிருந்தது. ஆனால் கர்த்தருடைய வார்த்தை என்ன? நான் மழையை கட்டளையிடுவேன். நீ ஆகாபுக்கு உன்னைக் காண்பி என்றார். ஆகாபுக்கு காண்பிக்கப் போனால் என்னநடக்கும். எலியாவைக் கொன்று போடுவான். அல்லது சிறைக்கைதியாக்கி விடுவான். மழையும் இல்லை தண்ணீரும் இல்லை சமாரியாவிலே ஒரே பஞ்சம். மழை வரப்போகுது என்றால் அதற்குரிய அறிகுறிகள் காணப்படவேண்டுமல்லவா? ஆனால் அதற்குரிய அறிகுறிகள் ஒன்றுமில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஆகாபினிடத்தில் எலியா அனுப்பப்பட்டார். அவர் தேவனுடைய மனுஷனாயிருந்தபடியால் உடனே கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து சென்றார். இப்படி கீழ்ப்படிவோரை கர்த்தர் ஒவ்வொருநாளும் எதிர்பார்க்கிறார்.

இந்த எலியா பரலோகத்திற்கு ஏறிப்போனார் என்பதை அறிவீர்களா? நாமெல்லாம் பரலோகத்திலிருந்து கர்த்தர் வருவார் என எதிர்பார்த்து காத்துக்கொண்டிருக்கிறோம் அல்லவா? ஆனால் எலியாவுக்கோ பரலோகத்திற்கு ஏறிப்போகும் பாக்கியம் கிடைத்தது. மரித்து அடக்கம்பண்ணப்படாமல் அப்படியே அவர் எடுத்துக்கொள்ளப்பட்டார். எத்தனை ஆச்சரியமான காரியம்.

ஒருமுறை எலியாவும் எலிசாவும் பேசிக்கொண்டு நடந்துபோகையில், "இதோ, அக்கினிரதமும் அக்கினி குதிரைகளும் அவர்கள் நடுவாக வந்து இருவரையும் பிரித்தது; எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்" (2 இராஜா.2:11). பலமுறை எலியா இப்படி மறைந்திருக்கக்கூடும். எப்படி சொல்லுகிறேன் என்றால் அரண்மனையில் வேலை பார்த்து வந்த ஒபதியா என்ற தேவமனுஷன் சொல்லும்போது; "நான் உம்மைவிட்டுப்போனவுடனே ஒருவேளை கர்த்தருடைய ஆவியானவர் உம்மை எடுத்து, நான் அறியாத இடத்திற்குக் கொண்டுபோவார்; அப்பொழுது நான் ஆகாபிடத்திற்குப் போய் அறிவித்த பின்பு, அவன் உம்மைக் காணாவிட்டால், என்னைக் கொன்றுபோடுவானே; உமது அடியானாகிய நான் சிறுவயதுமுதல் கர்த்தருக்குப் பயந்து நடக்கிறவன்" என்றான் (1இரா.18:12).

எலியாவைப் பற்றி நன்கு அறிந்தவனாக இந்த ஒபதியா இருந்தான். அன்பானவர்களே, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகளில் எலியா ஒரு அருமையான தேவனுடைய மனுஷனாக இருந்தான். அவன் இயேசுவோடு அவருடைய மரணத்தைக்குறித்து பேசுகிறவனாக புதியஏற்பாட்டில் காணப்பட்டான். ஒரு காரியத்தை இரண்டு மூன்று போர் கூடி பேசுகிறார்கள்



என்றால் அந்த காரியத்திற்கு உடன்பட்டவர்களே அப்படிப்பட்டவர்களோடு பேச முடியும் அல்லவா? அந்த விதமான பாக்கியத்தை பெற்றவனாக இந்த எலியா என்ற தேவனுடைய மனுஷன் காணப்பட்டான்.

"ஆறுநாளைக்குப் பின்பு, இயேசு பேதுருவையும் யாக்கோபையும் அவனுடைய சகோதரனாகிய யோவானையும் கூட்டிக்கொண்டு தனித்திருக்கும்படி உயர்ந்த மலையின்மேல் போய், அவர்களுக்கு முன்பாக மறுரூபமானார்; அவர் முகம் சூரியனைப்போலப் பிரகாசித்தது, அவர் வஸ்திரம் வெளிச்சத்தைப்போல வெண்மையாயிற்று. அப்பொழுது மோசேயும் எலியாவும் அவரோடே பேசுகிறவர்களாக அவர்களுக்குக் காணப்பட்டார்கள்" (மத்.17:1-3). எலியா வாழ்ந்த நாட்கள் கிறிஸ்துவுக்கு முன். ஆனால் அவன் இயேசுவோடு புதுஉடன்படிக்கையின் காலத்தில் நிறைவேற்றப்போகிற திட்டங்களைக் குறித்து ஆண்டவர் இயேசுவோடு பேசுகிறவர்களாக சீஷர்களுக்குக் காணப்பட்டார்கள்.

இயேசு பரமேறிச் செல்லும்வேளையில் "கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்" என்று நாம் அப்.1:11-ம் வசனத்தில் படிக்கிறோம். ஆகையால் நாம் ஆண்டவர் இயேசுவின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கிறோம். ஆனால் எலியா என்ற தேவ மனுஷன் அவனுடைய நாட்களில் பரலோகத்திற்கு ஏறிப்போனான் என்று படிக்கிறோம். அந்த தேவனுடைய மனுஷனுக்குக் கர்த்தர் கொடுத்த அதிகாரம் எத்தனை பெரியது என்று பார்த்தீர்களா? இன்றைக்கு உயிரோடிருக்கும் நாமும் ஒரு நாளில் ஆண்டவர் இயேசுவோடு ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவோம் என்று 1 தெச.4:17-ல் படிக்கிறோம். தேவனுக்கு பயப்படுகிற ஒவ்வொருவரையும் அவரோடு நித்திய நித்தியமாக வைத்துக்கொள்ளும்படியாக அவர் நம்மைச் சேர்த்துக்கொள்ளுவார். அதற்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

**கேள்வி**

**நீ தேவனுடைய மனுஷனானால் அவருடைய சித்தம் செய்ய ஆயத்தமாயருக்கிறாயா?**

எலியா என்ற தேவனுடைய மனுஷன் நம்மைப்போல பாடுள்ள மனுஷனாயிருந்தும் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவராய் ஜீவித்தார். தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து ஒவ்வொருநாளும் நடந்து தேவனுடைய வார்த்தைக்கு எதிர் வார்த்தை பேசாமல், தேவனை நோக்கி ஜெபித்து வல்லமையுள்ள தேவனுடைய மனுஷனாக வாழ்ந்து முன்னோடியான தீர்க்கதரிசியானார்.

இன்றைக்கு இப்பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கும் நீங்களும் நானும்கூட தேவனால் உண்டாக்கப்பட்ட மனுஷர்களாக இருக்கிறோம். இந்த எலியாவைப்போல நம்மை தேவனுக்கு ஒப்புக்கொடுத்து வாழ்வோம். "நம்முடைய தேவன் உங்களை தமது அழைப்புக்குப் பாத்திரராக்கவும், தமது தயையுள்ள சித்தம் முழுவதையும் விசுவாசத்தின் கிரியையையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று, எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக் கொள்ளுகிறோம்" (2தெச.1:12).

அப்போஸ்தலனாகிய பவுல் புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்தவர்களில் மிகவும் முக்கியமானவர். பேச்சோடு நின்று விடாமல் வாழ்ந்து காட்டியவர். ஆகையால் அவர் எழுதும்போது விசுவாசத்தின் கிரியையும் பலமாய் உங்களிடத்தில் நிறைவேற்றவும் வேண்டுமென்று எப்பொழுதும் உங்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறோம் என்று தெசலோனிக்கேய சபையாருக்கு எழுதியிருக்கிறார்.

ஆம், அன்பானவர்களே, அழைத்த தேவனுக்கு பாத்திரராக நடந்து கொண்டு உங்களுடைய விசுவாசத்தை கிரியைகளின் மூலமாக காண்பியுங்கள். தேவனுடைய சித்தத்தை ஒவ்வொரு நாளும் நிறைவேற்ற பிரயாசப்படுங்கள். நீங்கள் தேவனால் உண்டாக்கப்பட்டவர்கள் என்பதை ஒருநாளும் மறந்துபோகாதிருங்கள். எலியாவை பெலப்படுத்தின கர்த்தர் உங்களையும் பெலப்படுத்தும்படியாக உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 23. மனுஷி

## Woman

மனுஷனிலிருந்து உருவாக்கப்பட்டவள்தான் மனுஷி. பெண்கள் பிள்ளைகளை பெறுகிறார்கள். ஆண்பிள்ளையாக இருந்தாலும், பெண்பிள்ளையாக இருந்தாலும் இரண்டுபேரையுமே பெற்றெடுப்பது பெண்கள்தான். ஆனால் முதலாவது பெண் உருவாக்கப்பட்ட விதம். ஆணுடைய விலா எலும்பிலிருந்து தேவனாகிய கர்த்தர் மனுஷியை உருவாக்கினார் என நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். "தேவனாகிய கர்த்தர் தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டுவந்தார்" என காண்கிறோம் (ஆதி.2:22). இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் காரியம் என்னவென்றால் முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான் பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள்.

முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டபடியால் அவன் குடும்பத்தின் தலைவனாக ஏற்படுத்தப்பட்டான். ஆகையால் எல்லா ஆண்களும் குடும்பத்தின்



தலைவர்களுடைய பட்டியலில் முதலாவது வகிக்கிறார்கள். இந்த மனுஷியானவள் ஆதாமுக்கு ஏற்ற துணையாக உருவாக்கப்பட்டாள் என காண்கிறோம். "பின்பு, தேவனாகிய கர்த்தர்: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்" (ஆதி.2:18). உலகத்திலே எத்தனையோ விதவிதமான கனி மரங்கள், விதவிதமான பூக்கள், விதவிதமான மிருகஜீவன்கள் இருந்தபோதும். தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்ட ஆதாமுக்கு ஏற்றதுணை காணப்படவில்லை. ஆகையால் தேவன் தம்முடைய சித்தத்தின்படி அவனுடைய விலா எலும்பை எடுத்து அவனைப்போல மாம்சமும் எலும்புமுடைய ஒரு ஸ்திரீயை உண்டாக்கினார். அதுவே அவனுக்கு ஏற்றதுணையாக காணப்பட்டது.

ஆகையால் இன்றுவரை மனிதன் என்னவெல்லாம் சம்பாதித்தாலும், பல பங்களாக்களை கட்டினாலும், கடல்கடந்து பணியாற்றினாலும், கைநிறைய சம்பாதித்தாலும் அவனுக்கு ஏற்றவேளையில் ஒரு திருமணம் செய்யவேண்டுமென்று அவனைப்பெற்ற பெற்றோர்கள் ஒரு நல்ல குணமுள்ள பெண்ணைப் பார்க்கிறார்கள். அதுவே அவனுக்கு ஏற்றதாக இருக்குமென்று நினைக்கிறார்கள். இது தேவனுடைய திட்டத்திலிருந்து வந்த ஒன்றுதான். இதை மட்டும் எல்லா மதத்தவர்களும் சரியாக இன்றுவரை செய்கிறார்கள். அதைப்போல கைக்கொள்ளவேண்டிய போதனைகள் வேதாகமத்தில் நிறைய உண்டு. அதையும் செய்வார்களேயானால் அவர்கள் தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்களாயிருப்பார்கள்.

சிறுபிள்ளைகள் வளர்ந்து வரக்கூடிய நாட்களில் வீட்டில் வளர்க்கப்படும் நாய்களையும், கண்ணாடி தொட்டியில் வளர்க்கப்படும் பலவிதமான மீன்களையும் நேசிப்பார்கள். அதைபோல பூனைகளையும் ஆடு மாடுகளையும் கூட நேசிப்பார்கள். ஆனால் அதுவே அவர்களுக்கு ஏற்றதுணையாகிவிடுமா? என்றால் துணையாக இருக்காது. சிலர் நாய் நன்றியுள்ளது என்பார்கள். உண்மைதான். ஆனால் நாய் நாய்தான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. அதை நாம் வீட்டைக் காக்கவும் மீதமானதை கொடுத்து அவைகளை வளர்க்கின்றோம். அது இருக்க வேண்டிய இடத்திலே தான் இருக்கவேண்டும். நாம் படுக்கும் இடத்தில் அவைகளை நாம் படுக்க வைப்பதில்லை. ஒரு வேட்டைக்காரர் ஒருமுறை சிறுத்தை குட்டி ஒன்றை வேட்டையாடபோன இடத்தில் பார்த்து அதை எடுத்து வந்து தன் பிள்ளைகளுக்கு கொடுத்திருக்கிறார். அந்த சிறுத்தை குட்டி அவர்களோடே விளையாடவும் அவர்களை சந்தோஷப்படுத்தவும் செய்தது. இதைப் பார்த்த வேட்டக்காரர் நம்முடைய பிள்ளைகளுக்கு பொழுதுபோக நல்ல ஒரு நண்பனை

அவர்களுக்குக் கொடுத்துவிட்டோம். நம் தைரியமாக எங்கும்போய் வரலாம். நம்முடைய பிள்ளைகள் அந்த சிறுத்தைக்குட்டியோடு விளையாடி நம்மை மறந்த நேரத்தில் நாம் மற்ற வேளைகளை முடித்துவிடலாம் என்று அந்த சிறுத்தைக்குட்டியோடு அவர்களை விளையாட விட்டு வேட்டைக்காரர் மற்ற வேளைகளை கவனிக்க சென்றுவிடுவார். பின்பு வருவார் அவர்கள் சிறுத்தைக்குட்டியோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள். அல்லது விளையாடிய களைப்பில் தூங்கி விடுவார்கள்.

இப்படியே நடந்துகொண்டிருந்தது. சிறுத்தையும் வளர ஆரம்பித்தது. அவர்களோடு சேர்ந்து எல்லாவற்றையும் சாப்பிட ஆரம்பித்தது. ஒருமுறை வேட்டைக்காரன் நான் வெளியில் செல்கிறேன் வர இரண்டொரு நாட்கள் ஆகும். நீங்கள் கவனமாக இருங்கள். நம்முடைய காம்பவுண்டை விட்டு எங்கும் போகாதிருங்கள் என்று சொல்லி சென்றுவிட்டார். வழக்கம்போல பிள்ளைகள் தன்னுடைய செல்ல சிறுத்தையோடு விளையாட ஆரம்பித்தார்கள். அப்பொழுது காம்பவுண்டு ஓரத்தில் உள்ள ஒரு முட்புதரில் ஒருவன் விழுந்துவிட்டான். அவனுடைய உடம்பிலிருந்து இரத்தம் கசிய ஆரம்பித்தது. இதைப்பார்த்த சிறுத்தை அவனுடைய முகத்தை நக்கிக்கொடுக்க ஆரம்பித்தது. அது தன்னை நேசித்து இவ்விதமாக செய்கிறது என்று நினைத்தான்.

சிறுத்தைக்கு இரத்தத்தின் மீது ஆசை ஏற்பட சற்று ருசித்து நக்கிக்கொடுக்க ஆரம்பித்தது. அது அதிகரிக்கவே தன் எஜமானை மறந்து தன்னுடைய சுபாவகுணத்தினால் கடிக்கவும் தன் கால்களால் கீறவும் செய்தது. மற்ற சிறுவர்களின் உயிர்போகும் அளவிற்கு அவர்களையும் சின்னாபின்னமாக்கியது. கத்தினாலும் கேட்பார் இல்லாமற்போகவே அவர்கள் அதே இடத்தில் சிறுத்தைக்கு பலியானார்கள். பின்பு அந்த சிறுத்தை காட்டைநோக்கி செல்ல ஆரம்பித்தது. வேட்டைக்காரன் வந்து தன் வீட்டைப்பார்க்கும்போது கதறி அழுதான். பெரிய தவறு செய்துவிட்டேன் என்று கதற ஆரம்பித்தான். அன்பானவர்களே, இந்த உலகத்தில் ஒரு மனிதனுக்கு ஏற்ற துணை என்பது அவனுக்கென்று ஏற்படுத்தப்பட்ட ஒரு ஸ்திரீயே என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். மிருகங்களோ அல்லது மற்றவைகளோ ஒருவனுக்கு ஏற்றதல்ல. இதை தேவனாகிய கர்த்தர் முதலாவது அறிந்தார். ஆகையால் ஆதாமுக்கு ஏற்ற துணையாக ஏவாளை அவனுடைய விலா எழும்பிலிருந்து சிருஷ்டித்தார்.

ஸ்திரீயானவள் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக் கொடி என வேதம் அவளைக்குறித்து சொல்லுகிறது. "உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப்போல் இருப்பாள்; உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல்



இருப்பார்கள்" (சங்.128:3). இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் அவர்கள் இவ்விதமாக கனிகளை கொடுக்கக்கூடிய திராட்சக்கொடியைப்போல் இருப்பார்கள். பெண்கள் ஆண்களுக்கு உதவியாக தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் என்பதை நாம் ஒருநாளும் மறந்துபோகாதிருப்போம்.

இன்றைய நவீன உலகில் இருவர் வேலைக்கு சென்றுதான் குடும்பம் நடத்தவேண்டும் என்று வேலைக்குப்போகும் பெண்களை நாம் அதிகமாக பார்க்கிறோம். இருவரும் வேலைக்கு சென்று கைநிறைய சம்பளம் வாங்குகிறார்கள். குடும்பத்தில் உள்ள பிள்ளைகளை யார் பார்ப்பது? அதைப்பற்றி அவர்கள் சற்றும் யோசிப்பதில்லை. திட்டமிடுகிறார்கள் ஆனால் வேதாகமத்தில் சொல்லப்பட்ட திட்டங்களுக்கு ஒத்தார்போல தங்களை மாற்றியமைத்துக் கொள்வதில்லை. வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியென்றாள். அவள் வீட்டை அழகு படுத்தவேண்டிய பொறுப்பில் இருக்கிறாள். வீட்டோரத்தில் திராச்சைசெடி கனிகொடுத்துக்கொண்டிருந்தால் அது எப்படியிருக்கும். அந்த குடும்பத்தையே திராட்சை ரசத்தால் திருப்தியாக்குமல்லவா? மேலும் அந்த செடிய வீட்டோரத்தில் இருப்பதால் அதற்குவேண்டிய தண்ணீர் மற்றும் சத்தான உரங்கள் அதற்கு அவ்வப்போது கிடைத்துக்கொண்டே இருக்கும்.

ஆகையால் வீட்டோரங்களில் உள்ள திராட்சச்செடி அதினதின் காலத்தில் தவறாமல் கனிகொடுக்குமல்லவா? அதைப்போல அந்த ஸ்திரீயானவளும் இருப்பாள். "புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள்; புத்தியில்லாத ஸ்திரீயோ தன் கைகளினால் அதை இடித்துப்போடுகிறாள்" என்ற நீதி.14:1-ம் வசனத்தின் படி அநேக ஸ்திரீகள் தங்களுடைய வீட்டை கர்த்தருடைய ஞானத்தைக் கொண்டு கட்டுகிறார்கள். சிலர் தங்கள் கைகளினாலே தாங்கள் கட்டின வீட்டை இடிக்கிறார்கள். இது எப்படி முடியும் என நீங்கள் நினைக்கலாம். உங்கள் வீட்டில் நடக்கும் சின்னசின்ன சண்டைகளையும் பெலவீனங்களையும் பக்கத்து வீட்டில் சொன்னாலே போதும் அது உங்கள் வீட்டை நீங்களே இடிப்பதற்கு சமம்.

ஆனால் "குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது. அவள் புருஷனுடைய இருதயம் அவளை நம்பும்; அவன் சம்பத்துக் குறையாது. அவள் உயிரோடிருக்கிற நாளெல்லாம் அவனுக்குத் தீமையையல்ல, நன்மையையே செய்கிறாள். ஆட்டுமயிரையும் சணலையும் தேடி, தன் கைகளினால் உற்சாகத்தோடே வேலை செய்கிறாள். அவள் வியாபாரக் கப்பல்களைப் போலிருக்கிறாள்; தூரத்திலிருந்து தன் ஆகாரத்தைக் கொண்டுவருகிறாள். இருட்டோடே எழுந்து தன் வீட்டாருக்கு ஆகாரங்கொடுத்து, தன்

வேலைக்காரிகளுக்குப் படியளக்கிறாள். ஒரு வயலை விசாரித்து அதை வாங்குகிறாள்; தன் கைகளின் சம்பாத்தியத்தினால் திராட்சத்தோட்டத்தை நாட்டுகிறாள்" (நீதி.31:10-16).

இப்படிப்பட்ட ஸ்திரீயானவள் "சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள். அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவளைப்பார்த்து; அநேகம் பெண்கள் குணசாலிகளா யிருந்ததுண்டு; நீயோ, அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்" (நீதி.31:27-29). இந்தவிதமான ஸ்திரீயைப்போல நீங்கள் இருக்கின்றீர்களா? குணசாலியான ஸ்திரீகளாக இருந்துகொண்டு உங்களுடைய வீட்டைக்கட்டுங்கள்.

கர்த்தருக்குப் பயப்படுகிற ஒரு ஸ்திரீயாக இருக்கப் பிரயாசப்படுங்கள். வேதம் சொல்லுகிறது; "சௌந்தரியம் வஞ்சனையுள்ளது, அழகும் வீண், கர்த்தருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப்படுவாள்" (நீதி.31:30). சில பெண்கள் கர்த்தருக்கு பயப்படுவார்கள். ஆனால் தன்னுடைய கணவனுக்கு கீழ்ப்படியாதிருப்பார்கள். கர்த்தருக்கு நீங்கள் எப்படி கீழ்ப்படிகின்றீர்களோ அதைப்போல தேவனால் உங்களுக்குக் கொடுக்கப்பட்ட கணவனுக்கும் கீழ்ப்படியவேண்டும். வேதமும் அப்படியே போதிக்கிறது. "மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்கும் கீழ்ப்படியுங்கள்" (எபே.5:22). இதை பவுல் தன்னுடைய யோசனையாக சொல்லவில்லை பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துதலின்படி சொல்லுகிறார். ஆகையால் எல்லா ஸ்திரீகளும் இந்த வசனத்திற்கு கீழ்ப்படிய வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

வேதாகமத்தில் அநேக பக்தியுள்ள ஸ்திரீகளைப் பற்றி படிக்கிறோம். அதில் குறிப்பாக ஆபிரகாமின் மனைவி சாராளைக் குறித்துப்படிக்கும்போது; அவள், "ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்" என்று பேதுரு தமது நிருபத்தில் எழுதியிருக்கிறார் (1பேது.3:6).

இவள் எல்லோருக்கும் தாயானவள். இவள் தேவனுக்கும் தன் கணவனுக்கும் கீழ்ப்படிந்திருந்தாள். இவளைப்போல நீங்கள் இருப்பீர்களானால் இவளுக்கு குமாரத்திகளாயிருப்பீர்கள். ஒரு பெண்ணானவள் தன் குடும்பத்தில் மிக முக்கியமானவளாக இருக்கிறாள் என்று நாம் அறிகிறோம். ஆகையால் தேவன் என்ன நோக்கத்திற்காக மனுஷியை



உண்டாக்கினாரோ அந்த நோக்கத்தை நிறைவேற்றவேண்டிய பொறுப்பு பெண்ணானவளுக்கு இருக்கிறது. அதை உணர்ந்து பெண்கள் தாங்கள் பெற்றெடுக்கிற பெண்பிள்ளைகளுக்கும் அந்த விதமான போதனைகளை கொடுத்து அவர்களை கர்த்தருக்கு ஏற்றவர்களாக வளர்க்கவேண்டிய பொறுப்புடையவர்களாக பெண்கள் இருக்கிறார்கள்.

இந்த செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அருமையான சகோதரியே நீ தேவனால் அவருடைய அற்புதமான கரத்தினால் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்திரீ என்பதை மறந்துபோகாதே! உன் மூலமாகவே சந்ததிகள் பெருக தேவன் திட்டமிட்டுள்ளார். அந்த திட்டத்திற்கு இசைவாக செயல்படுவாயானால் கர்த்தர் உம்மை ஆசீர்வதிப்பார்.

**கேள்வி**

**பெண்கள் மட்டுமே கணவனுக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டுமா?**

இது ஒரு நல்ல கேள்வி. இருவருமே தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்தான். முதலாவது ஆதாம் உருவாக்கப்பட்டான் பின்பு ஏவாள் உருவாக்கப்பட்டாள். இருவருமே கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்திருக்கவேண்டும். மேலும், "தெய்வபயத்தோடே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்கவேண்டும்" என பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதின புத்தகத்தில் படிக்கிறோம் (எபே.5:21).

இருவருமே ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்திருக்க போதிக்கப் படுகிறார்கள். அதினாலே ஒருவர்மேல் ஒருவர் ஆதிக்கம் செலுத்தமுடியாது. கர்த்தர் சபையை நேசிப்பதுபோல ஒவ்வொருவரும் ஒருவரையொருவர் நேசிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். இருவருமே தேவனால் சிருஷ்டிக்கப்பட்டபடியால் தேவனை இருவரும் மகிமைப்படுத்த வேண்டும். இருவராக இருந்தாலும் இருவருமே ஒரே சரீரமாக இருக்கிறார்கள். இது எத்தனை உண்மையான காரியம். ஆதாமிலிருந்து ஏவாள் எடுக்கப்பட்டாள்.

ஆகையால் இவள் என் எலும்பில் எலும்பும் என் மாம்சத்தில் மாம்சமுமாயிருக்கிறாள் என்று சொல்லி மனுஷி என்று ஆதாம் பெயரிட்டான். ஆக, இருவருமே ஒரே சரீரமாக இருக்கிறார்கள். ஆகையால் தேவன் இணைத்ததை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன் என காண்கிறோம். கர்த்தருடைய திட்டத்தின்படி குடும்பங்களை கட்டுங்கள். அப்பொழுது கர்த்தர் உங்களுடைய வீட்டைக் கட்டுவார். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

**"விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மைபெறுவான்; கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான்" நீதி. 16:20**

# 24. பிள்ளைகள்
# Children

**பி**ள்ளைகள் என்றாலே பொதுவாக எல்லோருக்கும் பிடிக்கும். பிள்ளைகளை கர்த்தர் அதிகமாக நேசிக்கிறார். எதிர்கால உலகை கட்டி காக்க வேண்டிய பொறுப்பு பிள்ளைகளுக்கு இருக்கிறது. பிள்ளைகளுக்கு முதலாவது இருக்கவேண்டிய குணம். **கீழ்ப்படிதல்;** இந்த கீழ்ப்படிதல் இருக்கும்போது அனைத்து ஆசீர்வாதங்களும் அவர்களை தேடிவரும். நாம் வேதத்தில் வாசிக்கின்றோம்; "பிள்ளைகளே, உங்களைப் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படியுங்கள்; இது கர்த்தருக்குப் பிரியமானது" (கொலோ.3:20). பிள்ளைகள் பொதுவாக மற்றவர்களுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிவார்கள் ஆனால் பெற்றாருக்குக் கீழ்ப்படிய மாட்டார்கள். பக்கத்து வீட்டில் இருக்கும் அங்கிள் சொல்லும் வார்த்தைக்கு உடனே கீழ்ப்படிவார்கள். அங்கிள் சொல்லுங்க உடனே வாங்கிக் கொடுக்கிறேன் என்பார்கள். அதே வேளையில் அப்பா சொல்லும் ஒரு வார்த்தைக்கு போங்கப்பா எனக்கு வேலை இருக்கு என்று மழுப்பிவிடுவார்கள். இது நாமறிந்ததே. ஆனால் வேதாகமம் பிள்ளைகள் பெற்றாருக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என போதிக்கிறது.

சாலொமோன் ஞானி சொல்லுகிறார்; "உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே" என்று (நீதி.23:22). நாங்கள் வழிநடத்துகிற சபையில் ஒரு குடும்பம் உண்டு அவர்களுக்கு இரு பிள்ளைகள் இருக்கிறார்கள். மூத்தபிள்ளை பெண்பிள்ளை இரண்டாவது ஆண்பிள்ளை. மூத்த பிள்ளையிடம் ஒருகேள்வி கேட்டோம். அந்தபிள்ளை L.K.G படித்துக் கொண்டிருக்கிறாள். உனக்கு அப்பா பிடிக்குமா அல்லது அம்மா பிடிக்குமா என்று கேட்டோம். பொதுவாக பிள்ளைகளை அப்பா பிள்ளை அம்மா பிள்ளை என்று சொல்லி வளர்ப்பார்கள். ஆகையால் பிள்ளைகள் அம்மாவை பிடிக்கும் அல்லது அப்பாவை பிடிக்கும் என்பார்கள். ஆனால் நாங்கள் கேட்ட பிள்ளையோ அம்மாவையும் பிடிக்கும் அப்பாவையும் பிடிக்கும் என்றது. மிக சிறப்பான பதிலை கொடுத்தது. அந்த பிள்ளையின் பெற்றொர்கள் இதைக்கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டனர்.

சாலொமோன் ஞானி உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவி கொடு என்றும் உன் தாய் வயது சென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே என்று குறிப்பிடுகிறார். இன்றைக்கு அநேக குடும்பங்களில் பிள்ளைகள் பெற்றோர்களை அசட்டைபண்ணி முதியோர்



இல்லங்களில் சேர்த்துவிடுகிறார்கள். அதற்கு ஒரு நொண்டிச்சாக்கு சொல்லுகிறார்கள். நாங்கள் இருவரும் வேலைசெய்கிறோம். ஆகையால் எங்களுடைய பெற்றோர்களை பராமரிக்க ஆட்கள் இல்லை. ஆகையால் முதியோர் இல்லத்தில் சேர்த்து பணம்கொடுக்கிறோம். வேதாகமத்தில் சொல்லப்பட்டபடி கொர்ப்பான் என்னும் காணிக்கை கொடுத்துவிட்டால் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணிக்கொள்கிறார்கள். அன்பானவர்களே, அதுவல்ல அவர்கள் முதியோர் ஆகும்போது; நாம் குழந்தைகளாக இருக்கும்போது எப்படி பராமரித்தார்களோ அதைப்போல அவர்களை நாம் பராமரிக்கவேண்டும். இதை நீங்கள் செய்துகொண்டிருக்கிறீர்களா?

சில பெற்றொர்கள் இருக்கிறார்கள். கர்த்தரை ஏற்றுக்கொண்டவுடன் ஏதோ செய்யக்கூடாத ஒரு காரியத்தை மகன் செய்துவிட்டதுபோல நினைத்து துரத்திவிடுவார்கள். இந்த விஷயத்தில் வேதாகமத்தின் போதனை என்னவென்றால்; "பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்" (எபே.6:1). தகப்பன் ஒரு விக்கிரகாரதனைக்காரராக இருக்கும்போது மகன் அவருக்குக் கீழ்ப்படிந்து விக்கிரகாராதனை செய்யவேண்டிய அவசியமில்லை. இந்த விஷயத்தில் அந்தபிள்ளை கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டியவனாயிருக்கிறான்.

தன்னுடைய கிறிஸ்தவ ஜீவியத்தினால் தன் தகப்பனுடைய குடும்பத்தை ஆதாயம் செய்யவேண்டிய பொறுப்புடையவனாயும் இருக்கிறான். இதினிமித்தம் அவர்களை அவன் வெறுக்காதவனாயும் இருக்கவேண்டும். ஏனெனில் கட்டளையில் நாம் பார்க்கும்போது "உன் தாயையும் தகப்பனையும் கனம்பண்ணுவாயாக" என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவன் தன் தகப்பனையும் தாயையும் கனம் பண்ணவேண்டும்.

பிள்ளைகளை கர்த்தர் நேசிக்கிறார். இயேசுவின் நாட்களில், சிறுபிள்ளைகளை சீஷர்கள் அதட்டினார்கள்; "இயேசுவோ; சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது என்று சொன்னார்" (மத்.19:14). குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று சொல்வார்கள். ஏனென்றால் குழந்தைகளிடம் எந்தவிதமான கள்ளங்கபடமும் இருக்காது. ஆகையால் அப்படிச்சொல்லுகிறார்கள். மற்றபடி குழந்தை தெய்வமாகிவிடாது. பிள்ளைகளை கர்த்தர் நேசிக்க பல காரணங்கள் உண்டு. ஒன்று பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. ஒருவன் கிறிஸ்துவுக்குள் வரும்போது ஒரு குழந்தையைப்போல மாறவேண்டியவனாக இருக்கிறான். வயதிலோ அல்லது எடையிலோ அல்ல. குழந்தைகளுடைய குணத்திலும் அவர்கள் பாலின்மேல் வாஞ்சையாயிருப்பதைப்போல, அவன் கர்த்தருடைய

வசனத்திலே வாஞ்சையுள்ளவனாக இருக்கவேண்டும். பிரசங்கி சொல்லுகிறான்; "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை; தீங்குநாட்கள் வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும்" என்று படிக்கிறோம் (பிர.12:1).

வாலிப வயது மிகவும் ஒரு அற்புதமான வயது என்றே சொல்லவேண்டும். நன்கு யோசித்து முடிவு எடுக்கும் வயது. தானே முடிவு எடுக்கும் வயது. நல்லது கெட்டதை அறியும் வயது. முழுபெலமும் உள்ள வயது. இப்படி சொல்லிக்கொண்டே போகலாம். இந்த வயதில் நீ உன் சிருஷ்டிகரை நினை என வேதம் சொல்லுகிறது. இந்த வயதில் கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள் சலுகைக்காகவோ, அல்லது படிப்பிற்காகவோ, அல்லது திருமணத்திற்காகவோ கர்த்தரை ஏற்றுக்கொண்டிருக்கமாட்டார்கள்.

ஏனெனில் நன்கு சிந்தித்து செயல்படுகிற வயது அல்லவா, அவர்களாக பலஇடங்களில் நடக்கும் சம்பவங்களையும், செயற்பாடுகளையும் பார்த்து முடிவு எடுக்கும் பக்குவமான வயதை உடையவர்களாக இருக்கிறபடியால் இந்த வயதில் முடிவு எடுப்பவர்கள் கர்த்தருடைய பிள்ளையாக வருவதற்கு சிறப்பான வாய்ப்புகள் அதிகம் உள்ளது. ஆகையால் மற்ற வயதில் கர்த்தரை ஏற்றுக்கொண்டவர்கள் சிறப்பானவர்கள் அல்ல என்று நான் சொல்லவில்லை. அவர்களும் சிறப்பானவர்களே. வேதாகமம் இந்த வயதை முக்கியமாக குறிப்பிடுகிறது.

இளமை பிராயம் என்பது மிக முக்கியமானதே. ஆகையால் பவுல் தீமோத்தேயு என்ற வாலிபனுக்கு எழுதும்போது; "உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" என எழுதுகிறார் (1தீமோ.4:12). இன்றைக்கு இளமையில் இருக்கும் பிள்ளைகள் இவ்வசனத்தை உற்றுநோக்கி, ஒருவனும் அசட்டைபண்ண இடங்கொடாதபடி வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் மாதிரியாக ஜீவிக்க கற்றுக்கொள்ளவேண்டும். இளைய சமுதாயத்தை நம்பி நாடு இருக்கிறது. இளமைபிராயம். பெலவீனங்களை கொண்டுவரும் வயது. அதேவேளையில் சாதிக்க துடிக்கும் வயதும் இதுவே.

ஆகையால் எல்லா வகையிலும் மாதிரியாக செயல்பட்டு கிறிஸ்துவின் நாமத்தை மகிமைப்படுத்த வேண்டும். பெற்றோர்களுக்கு நற்பெயர். பணத்தாலோ, பொருளாளோ, கொடுக்க முடியாது. சத்தியத்தின்படி நடப்பதாலே கொடுக்கமுடியும். யோவான் பிரியமான அம்மாளுக்கு எழுதும்போது;



"பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்" என்கிறார் (2யோவா.4).

இன்றைக்கு சந்தோஷம் பொதுவாக பலவழிகளில் வருகிறது. ஆயிரம் தவறு செய்தவனாக இருந்தாலும் குழந்தையைப் பெற்றாள் சந்தோஷம். எப்படியாவது பாஸ் பண்ணிவிட்டால் சந்தோஷம். எப்படியாவது நாலு காசு சம்பாதித்தால் சந்தோஷம். எங்கிருந்தாவது பொருட்களை கொண்டுவந்தால் சந்தோஷம். ஆனால் அப்போஸ்தலனாகிய யோவான். உம்முடைய பிள்ளைகள் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன் என்கிறார். இயேசுகிறிஸ்துவின் வசனமே சத்தியம் இந்த சத்தியத்திலே அவர்கள் நடந்திருக்கிறார்கள். அதை அவர் கண்ணார கண்டு இருக்கிறார். இதுவே மெய்யான சந்தோஷம், உண்மையான சந்தோஷம்.

இதையே பிதாவாகிய தேவன் விரும்புகிறார். யோவானும் அந்த அம்மாளும் எந்த கற்பனையின்படி நடக்கிறார்களோ அந்த கற்பனையின்படியே நடக்கக்கூடிய பிள்ளைகளைப் பார்த்து சந்தோஷம் அடைகிறார்கள். சந்தோஷம் எந்தவகையில் வந்தால் என்ன? எல்லாம் சந்தோஷம் தானே என்றுநினைக்கக்கூடாது. மெய்யான சந்தோஷம் சத்தியத்திலிருந்து வரவேண்டும். அதுவே மெய்யான சந்தோஷம். தவறிலிருந்து வரும் சந்தோஷம் பின்பு மறக்கமுடியாத வேதனையை கொண்டுவரும்.

பெற்றோருக்கான சில காரியங்களை பவுல் குறிப்பிடுகிறார். "பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக" என்கிறார் (எபே.5:4). பிள்ளைகளை வளர்க்கவேண்டிய பொறுப்பு பெற்றோர்களுக்கு உண்டு. எனக்கெல்லாம் ஒன்றும் தெரியாது அது அவன்பாடு என்று பெற்றோர் ஒதுங்கக்கூடாது. அவர்களைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் வளர்க்கவேண்டும். கர்த்தருக்கேற்ற போதனை என்று சொல்லும்போது, ஞாயிறு பாடசாலைக்கு அனுப்பிவிட்டால் மட்டும்போதாது. பொதுவாக டியூசன் அனுப்புவதைப்போல ஞாயிறு பாடசாலைக்கும் அனுப்பி வைக்கிறார்கள். நீங்களே அவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவும் வேண்டும். எப்படியென்றால் இது குறித்து உபாகம புத்தகத்தில் படிக்கிறோம்.

"நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப்

பேசி" என்று படிக்கிறோம் (உபா.6:7). நான்கு சமயங்களிலும் வேதத்தை குறித்து பேசவேண்டும். ஒவ்வொரு நாளும் எவ்வளவோ மணித்துளிகளை நாம் வீணாக்குகிறோம். நீங்கள் என்றாவது சிந்தித்ததுண்டா? நீங்கள் உங்கள் வீட்டில் உட்கார்ந்திருக்கும்போது இவைகளைக்குறித்துப்பேசியதுண்டா? அந்தப்படியே நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கும் போதும் பேசவேண்டும்.

அப்பொழுது நான்கு வேளையும் சொல்லிக்கொடுக்கும் போதனை அவர்களுடைய மனதில் நிறைந்து காணப்படும். அப்பொழுது அவர்களை எந்தவிதமான தீயபழக்கங்களும் பற்றிக்கொள்ளமுடியாது. எதிர்காலத்தில் உங்களுக்கு அழங்காரமான முடியாயிருப்பார்கள்.

அந்தப்படியாக பிள்ளைகளுக்கு சாலொமோன் எழுதும்போது; "பிள்ளைகளே, நீங்கள் தகப்பன் போதகத்தைக் கேட்டு, புத்தியை அடையும்படி கவனியுங்கள்" என்று எழுதுகிறார் (நீதி.4:1). ஒவ்வொரு பிள்ளைகளுக்கும் அவர்களுடைய தகப்பன் போதகம் மிகவும் முக்கியமானதே. உங்களை பள்ளியில் சேர்ப்பவர்கள் அவர்கள்தான். அவர்கள் அந்நாட்களில் பள்ளிக்கு அனுப்பாமல் வேறே இடத்திற்கு உங்களை அனுப்பியிருந்தால் உங்களுடைய நிலைமை எப்படியிருந்திருக்கும்? என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள். அவர்கள் நலமான காரியத்தை உங்களுக்கு போதனையாக கொடுத்திருக்கிறார்கள். ஆகையால் நீங்கள் தகப்பனுடைய போதனையை அசட்டைபண்ணாதிருந்து, கர்த்தருக்குள்ளாக ஒரு புதிய மனிதனாக பிறக்க முயற்சியுங்கள்.

ஏனெனில் "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோவா.5:4). நீங்கள் கர்த்தருடைய பிள்ளைகளாக இருந்து கொண்டு உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படிந்துகொண்டு உலகத்தை ஜெயிக்கும் பிள்ளைகளாக வளருங்கள்.

**கேள்வி**

**உலகத்தை ஒரு சாதாரண மனிதன் ஜெயிக்க முடியுமா?**

உலகத்தில் எத்தனையோ விளையாட்டுகள் இருக்கிறது. இவைகளில் மனிதர்கள் விளையாடி ஜெயித்துவிடுகிறார்கள். ஆம், அது அவர்களால் முடியும். ஆனால் உலகத்தை ஜெயிக்க ஒரு சாதாரண மனிதனால் முடியாது என்றே வேதம் சொல்லுகிறது. "இயேசுவானவர் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறவனேயன்றி உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?" (1யோவா.5:5).

இயேசுவை விசுவாசிக்காதவன், அவரை தேவனுடைய



குமாரனென்று அறிக்கையிடாதவன் இந்த உலகத்தையும் அதின் காரியங்களையும் ஜெயிக்க முடியாது. இந்த உலகத்தையும், அதில் பிசாசு கொண்டுவந்த அனைத்து சோதனைகளையும் சிலுவையில் ஜெயித்து வெற்றிகொண்டவர் இயேசு ஒருவரே. அவரை விசுவாசிக்கிறவன். அவரைப்போல இந்த உலகத்தையும், அதின் காரியங்களையும் வெற்றிகொள்ளமுடியும். நீங்கள் இயேசுவை விசுவாசிக்கும் ஒரு விசுவாச ஜெப வீரனாயிருக்கிறாயா? அப்படியானால் நீங்கள் உலகத்தை ஜெயிக்க முடியும். நீங்கள் உலகத்தில் உள்ள அனைத்து ஆசீர்வாதங்களை பெற்றவராயிருக்கலாம்.

உலக கல்வி, பணம், பலம், பெற்றவராயிருக்கலாம். ஆனால் இயேசு உங்களுடைய வாழ்க்கையில் இல்லையென்றால் நீங்கள் இந்த உலகத்தை ஜெயிக்க முடியாது. நீங்கள் இயேசுவோடு வாழும்போது உலகத்தை ஜெயிப்பீர்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 25. கொடுத்தலும், பெற்றுக்கொள்ளுதலும்

## Giving and Getting

**ந**ம்முடைய ஆண்டவர் இயேசு சொல்லுகிறார்; "கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள்; நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார்" (லூக்.6:38). கொடுத்தலைப் பற்றிய உபதேசத்தில் அநேகர் புரிந்துகொள்ளாமலே இருக்கிறார்கள் என்றுதான் சொல்லவேண்டும். கொடுத்து ஆசீர்வதிக்கப்பட்ட அநேகரை நாம் வேதாகமத்தில் பார்க்கமுடியும். அவர்கள் கொடுத்தது கொஞ்சம் பெற்றுக்கொண்டது, சொல்லமுடியா ஆசீர்வாதம். ஆண்டவர் சொல்வதைப்போல கொடுக்கும்போது அவர்களுக்கு அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் போடப்படும்.

நான் பலசரக்கு கடை வைத்திருக்கும்போது வாங்க வரும் நபர்களில் சிலருக்கு நான் அரிசியை படியில் அளக்கும் போது நன்றாய் குலுக்கிக் குலுக்கி அளந்துபோடுவேன். அதை மீண்டும் அளந்துபார்ப்போமானால் ஒரு படிக்கும் அதிகமாகவே இருக்கும். எல்லாருக்கும் அப்படியல்ல தொடர்ந்து நன்றாக வரவு செலவு பண்ணுகிறவர்களுக்கு அவ்விதமாக செய்வேன். இங்கே ஆண்டவர் கொடுக்கிறவர்களுக்கு அந்தவிதமாக கொடுக்கப்படும் என்கிறார். பரிசுத்த வேதாகமத்தில் அநேக தேவமனிதர்களைப் பற்றி படிக்கின்றோம். குறிப்பாக நாம் யோபு என்ற தாசனை குறித்துப் படிப்போமானால் அவன் உயிரோடிருந்த

நாட்களில் அவனால் நன்மையை பெற்றவர்கள் அதிகமாக இருந்தார்கள். அந்த அளவுக்கு அவன் கொடையாளியாக இருந்தான். "அவன் இனத்தார்களில் திருப்தியாகாதவனைக் காண்பிப்பவன் யாரென்று என் கூடாரத்தின் மனுஷர் சொல்லார்களோ? பரதேசிவீதியிலே இராத்தங்கினதில்லை; வழிப்போக்கனுக்கு என் வாசல்களைத் திறந்தேன்" என்றான் யோபு (யோபு 31:31,32).

அந்த அளவு ஜனங்களை நேசித்து அவர்களை போஷித்தான். யோபு பெரிய சீமானாய் இருந்தான். அவனிடத்தில் சென்று வெறுமையாய் திரும்பினவர்கள் ஒருவரும் இல்லை என்றே சொல்லவேண்டும். அந்தஅளவு கொடுத்து அனுப்பினான். அப்படிப்பட்டவனுக்கோ ஒரு சோதனை வந்து அவனுக்குள்ளயெல்லாம் பறிபோய்விட்டது. ஆனால் யோபு தேவனை தூஷிக்கவில்லை, அவரைப் பற்றி குறைசொல்லவுமில்லை. கர்த்தர் கொடுத்தார் கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான்.

அவனோ, முடிவிலே இரட்டிப்பான ஆசீர்வதங்களை பெற்றுக்கொண்டான். கர்த்தர் அவன் சிறையிருப்பை மாற்றினார். "அப்பொழுது அவனுடைய எல்லாச் சகோதரரும் சகோதரிகளும், முன் அவனுக்கு அறிமுகமான அனைவரும் அவனிடத்தில் வந்து, அவன் வீட்டிலே அவனோடே போஜனம்பண்ணி, கர்த்தர் அவன்மேல் வரப்பண்ணின சகல தீங்கினிமித்தம் அவனுக்காக அங்கலாய்த்து அவனுக்கு ஆறுதல் சொல்லி, அவரவர் ஒவ்வொரு தங்கக் காசையும், அவரவர் ஒவ்வொரு பொன் ஆபரணத்தையும் அவனுக்குக் கொடுத்தார்கள்" இது கதையல்ல உண்மைச் சம்பவம் (யோபு 42:11).

ஆண்டவர் நாமத்தினிமித்தம் கொடுத்தவர்கள் எவரும் தரித்திரர் ஆனதில்லை. யோபு கொடுத்ததைக் காட்டிலும் பன்மடங்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான். அன்பானவர்களே, ஆண்டவர் சொன்ன வசனத்தில் நாம் தியானித்தபடி அமுக்கிக் குலுக்கி சரிந்துவிழும்படி யோபுவுக்கு கொடுக்கப்பட்டது. அவன் அவைகளைப் பெற்றுக்கொண்டான். அவனுக்கு வானத்திலிருந்து கர்த்தர் கொட்டவில்லை. மாறாக அவனுக்கு அறிமுகமானவர்கள் எல்லாம் ஒவ்வொரு தங்கக் காசையும், பொன் ஆபரணங்களையும் கொடுத்தார்கள்.

புதிய ஏற்பாட்டில் யூதஜனங்களை நேசித்து அவர்களுக்கு ஒரு ஜெபஆலயத்தைக் கட்டிக்கொடுத்த ஒரு நூற்றுக்கு அதிபதியைப் பற்றி படிக்கின்றோம். கொடுக்கக்கூடிய அநேகரை குறித்து நாம் கேள்விப்படுகிறோம். ஆலயம் கட்ட ஒரு சிறு உதவி கொடுப்பார்கள் அல்லது கதவு வாங்க பணம் கொடுப்பார்கள் அல்லது மின் விளக்குகள் வாங்க பணம் கொடுப்பார்கள். இவனைப் பற்றி அந்த ஜனங்கள் இயேசுவிடம் சொல்லும்போது; "அவன்



நம்முடைய ஜனத்தை நேசிக்கிறான், நமக்கு ஒரு ஜெப ஆலயத்தையும் கட்டினான் என்றார்கள்" (லூக்.7:5).

அவன் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதம் ஆச்சரியமானது. நாமாக இருந்தால் நம்முடைய குடும்பத்தாருக்காக ஆண்டவரிடம் மன்றாடுவோம். அல்லது ஒரு பணக்காரனாக மாறவேண்டும் என வாஞ்சிப்போம். நூற்றுக்கு அதிபதியோ அப்படியல்ல, அவனுடைய வேலைக்காரனுக்காக ஆண்டவரிடம் மன்றாடுகிறான். எப்படியென்றால் ஆண்டவர் இயேசுவின் மீது நம்பிக்கையுள்ளவனாயிருந்தபடியால்; "நான் உம்மிடத்தில் வரவும் என்னைப் பாத்திரவனாக எண்ணவில்லை; ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான்" என்றான் (லூக்.7:7).

இதைக் கேட்ட ஆண்டவர் நான் இஸ்ரவேலருக்குள்ளும் இப்படிப்பட்ட விசுவாசத்தைக் காணவில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். 40 வருடங்களாக அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் கண்ட இஸ்ரவேலரர் இலட்சக்கணக்கானோரிடம் இந்த நூற்றுக்கு அதிபதியின் விசுவாசத்தைக் காணவில்லை என்றார். அப்படியானால் அவனுடைய விசுவாசம் எப்போர்பட்டது என்று பார்த்தீர்களா? உங்களுடைய விசுவாசம் எப்படிப்பட்டதாயிருக்கிறது. கர்த்தருக்காக நீங்கள் கொடுத்தது என்ன? பெற்றுக்கொண்டது என்ன? இவைகளைக்குறித்து என்றாவது சிந்தித்தது உண்டா? அன்பானவர்களே, இந்த நூற்றுக்கு அதிபதியைப்போல யாவருக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள். உங்களுக்காகவும் உங்கள் குடும்பங்களுக்காகவும் மட்டுமே வேண்டிக்கொள்ளாமல் பிறரையும் நேசியுங்கள். அப்பொழுது தேவனுடைய ஆசீர்வாதங்களைக் காண்பீர்கள்.

ஒரு பாவியாகிய ஸ்திரீ இயேசுவுக்கு செலுத்தினதையும் அவள் பெற்றுக்கொண்டதையும் பார்ப்போம். பரிசேயன் ஒருவனுடைய வீட்டில் இயேசுவானவர் பந்தியிருக்கிறதை அறிந்து, "ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டுவந்து, அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்" (லூக்.7:37,38).

இயேசுவை அழைத்த பரிசேயன் அவருடைய கால்களுக்கு தண்ணீர் தரவில்லை, அவரை அவன் முத்தஞ்செய்யவில்லை, தலையில் எண்ணெய் பூசவில்லை. ஆனால் அழையாமல் உள்ளே வந்து இயேசுவின் பின்னாக அழுது கொண்டு அவளுடைய கண்ணீரினால் இயேசுவின் கால்களை

நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். அவள் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்தது முதல் இயேசுவின் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள், மேலும் அவருடைய பாதங்களில் பரிமளதைலம் பூசினாள். இவள் மிகவும் அன்புகூர்ந்தபடியால் இவளுடைய அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார் லூக்கா 7:48.

அன்பு தேவ ஜனமே, நீங்கள் தேவனுடைய மக்களாயிருக்கலாம். அவரைப்பற்றி அறிந்திருக்கலாம், ஆனால் நீங்கள் எந்த அளவு அவரிடத்தில் அன்பு வைத்திருக்கிறீர்கள்? நீங்கள் எந்த அளவு நெருக்கமாயிருக்கிறீர்களோ அந்த அளவு அவர் உங்களுடைய பாவங்களை மன்னிப்பதற்கு கிருபை பொருந்தினவராயிருக்கிறார். வானத்தையும் பூமியையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின அற்புதமானவர், பரிசுத்தர், வல்லமையுள்ளவர், இப்பூமிக்கு வந்திருக்கிறார் என்பதை அறிந்த பாவியாகிய ஸ்திரீ அவருக்கு பரிமளதைலத்தை வாங்கிக்கொண்டுவந்தாள்.

அப்பொழுது இருந்தவர்கள் இவள் ஒரு பாவி என்பதைத்தான் அறிந்திருக்கக்கூடும். அவளுடைய இருதயத்தை அறிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. இருதயத்தை அறியும் ஆண்டவர் இயேசு அவளுடைய கண்ணீர் ஜெபத்தை கேட்டார். பரிசேயனோ தான் ஒரு நீதிமான் என்று கருதி இவள் பாவியாயிருக்கிறாளே, இவர் ஒரு தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்று அறிந்திருப்பார் என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான். அநேகர் இப்படித்தான் தங்களுக்குத் தாங்களே போதகர்களாக இருந்துகொண்டு மற்றவர்களைக் குற்றப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். அன்பு நேயரே, பாவியாகிய ஸ்திரீ இயேசுவிடம் அழுது கண்ணீர் விட்டதைப்போல, அழுது உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களுடைய ஜெபத்தைக்கேட்டு கர்த்தர் உங்களுக்கும் இரங்குவார்.

சாறிபாத் ஊரில் ஒரு விதவை இருந்தாள். அவளிடம் எலியா என்ற தேவமனிதன் அனுப்பப்பட்டான். சாறிபாத் ஊரிலே பெரிய பணக்காரர்கள் இருந்திருப்பார்கள். ஆனால் கர்த்தர் அவனை இந்த விதவையின் வீட்டிற்கு அனுப்பினார். அந்த விதவைப் பெண்ணோ தானும் தன் மகனும் சாப்பிட்டு செத்துப்போக இரண்டு விறகு பொறுக்கிக்கொண்டிருந்தாள். அவளை சந்தித்த எலியா தீர்க்கதரிசி "அவளைப் பார்த்து; பயப்படாதே; நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து; ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா; பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்" என்றான் (1இரா.17:13).

அவளிடத்திலோ ஒரு பிடி மாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல் வேறொன்றும் இல்லை. எலியா தீர்க்கதரிசியோ முதலாவது



அடையை எனக்கு கொண்டுவா என்று சொல்லியிருக்கிறார். இதையெல்லாம் அறிந்த சாறிபாத் விதவை சாகப்பேகிறபோதும் முதலாவது அடையை பண்ணி எலியா தீர்க்கதரிசி சொன்னபடி செய்தாள்; அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். "கர்த்தர் எலியாவைக்கொண்டு சொன்ன வார்த்தையின்படியே, பானையிலே மா செலவழிந்துபோகவும் இல்லை; கலசத்தின் எண்ணெய் குறைந்துபோகவும் இல்லை" (1 இராஜ.17:16).

இந்த சாறிபாத் விதவை பஞ்சகாலத்தில் நாம் வாழ்வது கூடாத காரியம் இருக்கக்கூடிய கொஞ்சமாவையும் எண்ணெயையும் எடுத்து அடைபண்ணி சாப்பிட்டு தானும் தன் பிள்ளையாண்டானும் செத்துப்போகலாம் என முடிவெடுத்திருந்தாள். இருதயங்களைப் பார்க்கிற கர்த்தர் எலியாவை அந்த வீட்டிற்கு அனுப்பினார். இக்கட்டான சூழ்நிலையிலும் கர்த்தருடைய தாசனைபோஷிக்க அவள் அறிந்தபடியால் பஞ்சகாலமெல்லாம் போஷிக்கப்பட்டாள். அவள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதம் எத்தனை ஆச்சரியமானது என்று பார்த்தீர்களா?

இதுவரை கொடுத்தவர்களையும் அவர்கள் பெற்ற ஆசீர்வாதங்களையும் குறித்து தியானித்தோம். இப்பொழுது வாங்கியவர்களும் மற்றும் அவர்கள் பெற்றுக்கொண்ட சாபங்களையும் பார்ப்போம். சிலர் பெற்றுக்கொள்வதிலே குறியாயிருப்பார்கள். மற்றவர்களுக்கு கொடுக்கும் எண்ணமில்லாதவர்கள். கேயாசி என்ற ஒரு உடன் ஊழியன் எலிசாவுடன் இருந்தான். அவன், "அந்தச் சீரியனாகிய நாகமான் கொண்டு வந்ததை என் ஆண்டவன் அவன் கையில் வாங்காமல் அவனை விட்டுவிட்டார் நான் அவன் பிறகே ஓடி, அவன் கையிலே ஏதாகிலும் வாங்குவேன் என்று கர்த்தருடைய ஜீவன்மேல் ஆணையிட்டு நாகமானைப் பின்தொடர்ந்தான்" (2இரா.5:20).

இதைக் கண்ட நாகமான் அவன் வருவதை அறிந்து அவனுக்கு எதிர்கொண்டு வந்து கேட்கும்போது, இரண்டு வாலிபர் இப்பொழுதுதான் வந்தார்கள் அவர்களுக்கு இரண்டு மாற்றுவஸ்திரம் வேண்டும் என் எஜமான் என்னை அனுப்பினார் என்றான். அவனோ, இரண்டு தாலந்து வெள்ளியையும், இரண்டு மாற்று வஸ்திரத்திரங்களையும் கொடுத்து அனுப்பினான். கேயாசியோ, அவைகளை தன் கூடாரத்திற்குள் வைத்துவிட்டு எலிசாவுக்கு முன்பாக நின்றான். எலிசா அவனை நோக்கி: எங்கே போனாய் என்று கேட்டதற்கு அடியான் எங்கும்போகவில்லை என்றான். இதை அறிந்த தீர்க்கதரிசியாகிய எலிசா, பணத்தை வாங்குகிறதற்கு இது காலமா? என்று சொல்லி; நாகமானை விட்ட குஷ்டம் உன்னையும் உன் சந்தியையும் பிடித்திருக்கும் என்றான். உடனே கேயாசி உறைந்த மழை நிறமான

குஷ்டரோகியானான். அன்பானவர்களே, பொய்சொல்லி பெற்றுக்கொண்ட கேயாசியின் முடிவை பார்த்தீர்களா?

அதைப்போல குற்றமில்லாத இரத்ததை காட்டிகொடுத்த யூதாஸின் முடிவும் இப்படித்தானிருந்தது. 30 வெள்ளிக்காசுகளை பெற்றுக்கொண்ட யூதாஸ் இயேசுவை காட்டிக்கொடுத்து நான்று கொண்டு செத்தான் (மத்.27:5). அப்போஸ்தலர்களிலே ஒருவனாயிருந்த இந்த யூதாஸ் சிறப்பான இடத்தை தன்னுடைய பணஆசையாலே இழந்தான். உங்களுடைய முடிவு என்ன? கொடுத்து ஆசீர்வதிக்கப்பட விரும்புகின்றீர்களா? அல்லது பெற்றுக்கொண்டு சபிக்கப்பட விரும்புகிறீர்களா? ஒரு நல்ல முடிவு எடுத்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**கேள்வி**

**வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியமா?**

ஆம், வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பது பாக்கியம். இது குறித்து பவுல் கர்த்தராகிய இயேசுசொன்ன வசனத்தை அவர் நமக்கு நினைப்பூட்டுகிறார். "இப்படிப் பிரயாசப்பட்டு பலவீனரைத் தாங்கவும், வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம் என்று கர்த்தராகிய இயேசு சொன்ன வார்த்தைகளை நினைக்கவும் வேண்டுமென்று எல்லா விதத்திலேயும் உங்களுக்குக் காண்பித்தேன் என்றான்" (அப்.20:35).

உலகத்தில் தேவனால் படைக்கப்பட்ட எல்லாமே அன்றுமுதல் இன்றுவரை கொடுத்துக்கொண்டே இருக்கிறது. கனிகளைக் கொடுக்கக்கூடிய ஒரு மரம் என்னிடத்தில் உள்ள கனிளை எல்லாம் இந்த மனிதன் பறித்துவிட்டான் என்று சொல்லி பின்பு அது கனிகொடாமலில்லை. திரும்வும் கொடுத்துக்கொண்டே இருக்கிறது. அதைப்போல கொடுக்க பழகுங்கள். பாக்கியவானாயிருப்பீர்கள்.

## 26. அழிவை குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

## What Do You Think About The Destruction?

**உ**லகத்தில் பலவிதமான அழிவுகளைக்குறித்து கேள்விப்படுகிறோம். தொலைக்காட்சியில் அந்தக் காட்சிகளை பார்க்கிறோம். நம்நாட்டிலும் கூட சிலஇடங்களில் அந்தவிதமான அழிவுகள் ஏற்படுகிறது. கடந்த சிலவருடங்களுக்கு முன்பு சுனாமி போன்ற பேரலைகள் வந்து அநேகரை வாரிக்கொண்டது. இவைகளையெல்லாம் பார்க்கும்போது நீங்கள் அந்த விதமான அழிவைக்குறித்து என்ன நினைக்கிறீர்கள்? பொதுவாக



ஜனங்களுடைய பேச்சு என்னவென்றால். அவர்கள் எல்லாம் பாவிகள் என்றும் தேவனுக்கு விரோதமான காரியங்களில் ஈடுபட்டவர்கள் என்றும் நினைக்கின்றனர். இந்தவிதமான சம்பவங்கள் வேதாகமத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. "சீலோவாமிலே கோபுரம் விழுந்து பதினெட்டுப்பேரைக் கொன்றதே; எருசலேமில் குடியிருக்கிற மனுஷரெல்லாரிலும் அவர்கள் குற்றவாளிகளாயிருந்தார்களென்று நினைக்கிறீர்களோ?" என்று ஆண்டவர் இயேசு கேள்வி எழுப்பினார் (லூக்.13:4). அதற்கு அவருடைய பதில்: "அப்படியல்லவென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; நீங்கள் மனந்திரும்பாமற்போனால் எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் என்றார்" (லூக்.13:5).

ஆம், ஒரு அழிவு வருகிறதென்றால் அது நமக்கு ஒரு எச்சரிப்பாக இருக்கிறது. காலம் செல்லாது நாமெல்லாரும் மனந்திரும்பவேண்டும். அதுவே உண்மையாக இருக்கிறது. இதில் அழிவில் இறந்தவர்கள் எல்லாரும் குற்றவாளிகள் என்றோ, பாவிகள் என்றோ சொல்வது தவறாகும். சில காரியங்கள் நடப்பது நாம் மனந்திரும்புவதற்கு ஏற்றதாயிருக்கிறது. "நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப்போல் ஆகாவிட்டால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்.18;3). நம்முடைய மனந்திரும்புதலானது பிள்ளைகளைப்போல மாறவேண்டும். பலதவறான காரியங்களைக் கற்றுக்கொண்டு பெரியவர்களாக மாறிவிடுகிறோம். கற்றுக்கொள்ளுவதற்கு முன்பு நாம் எப்படியிருந்திருப்போம்? தாய், தகப்பனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடக்கிற பிள்ளைகளாக இருந்திருப்போம் அல்லவா? அப்படிப்பட்ட சூழ்நிலைக்கு நாம் மனந்திரும்பவேண்டும். அப்பொழுது ராஜ்யத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தை அடைவோம்.

எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லி காலங்களை கழிப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பிக்கொள்வோம்? ஏசாயா தீர்க்கன் சொன்ன காரியம் நிறைவேறுகிறதை கர்த்தர் நமக்கு நினைப்பூட்டுகிறார்; "காதாரக்கேட்டும் உணராதிருப்பீர்கள்; கண்ணாரக்கண்டும் அறியாதிருப்பீர்கள்; இந்த ஜனங்கள் கண்களினால் காணாமலும், காதுகளினால் கேளாமலும், இருதயத்தினால் உணர்ந்து மனந்திரும்பாமலும், நான் அவர்களை ஆரோக்கியமாக்காமலும் இருக்கும்படியாக அவர்கள் இருதயம் கொழுத்திருக்கிறது; காதால் மந்தமாய்க் கேட்டு, தங்கள் கண்களை மூடிக்கொண்டார்கள் என்பதே" (மத்.13:14,15). உலகமெங்கும் நற்செய்தி அறிவிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு நாளும் தொலைக்காட்சியிலும், வானொலியிலும், மாதஇதழ்கள் மூலமாகவும்,

கைபிரதிகள் மூலமாகவும், சபை மூலமாகவும், வேத மாணவர்கள் மூலமாகவும், சுவிசேஷ கூட்டங்கள் மூலமாகவும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அவர்கள் கண்ணார காண்கிறார்கள். ஆனால் அதைக்குறித்து சிந்திப்பதில்லை. காதார கேட்கிறார்கள். ஆனால் அதைக்குறித்து யோசிப்பதில்லை. தாங்கள் போகின்ற வழியே போய்கொண்டிருக்கிறார்கள். அது பாதாளத்திற்கு போகும்வழி என்பதை அறிந்தும் உணராதிருக்கிறார்கள். நோவாவின் நாட்களில் நடந்த சம்பவத்தை கர்த்தர் நமக்கு நினைவுபடுத்துகிறார்; "ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்; அப்படியே மனுஷகுமாரன் வருங்காலத்திலும் நடக்கும்" என்றார் (மத்.24:39).

இன்றைக்கும் அதுதான் நடந்துகொண்டிருக்கிறது. ஜப்பான் அழிவை உலகமக்கள் எல்லோரும் தொலைக்காட்சி வாயிலாக பார்த்தார்கள். ஜப்பானியரும் கண்கூடாக பார்த்தார்கள். ஜலப்பிரளயம் வந்து எல்லோரையும் வாரிக்கொண்டது. சுனாமி எச்சரிக்கை கருவிகள் வைத்திருந்தார்கள். ஆனால் பயனில்லாமற்போனது. ஒரு சில நிமிடத்தில் அவர்களுடைய கனவெல்லாம் தவிடுபொடியானது.

ஆகையால் அன்பான சகோதரனே சகோதரியே, "யோனாவின் பிரசங்கத்தைக்கேட்டு நினிவே பட்டணத்தார் மனந்திரும்பினார்கள்; இதோ, யோனாவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்; ஆதலால் நியாயத்தீர்ப்புநாளிலே நினிவே பட்டணத்தார் இந்தச் சந்ததியாரோடெழுந்து நின்று, இவர்கள்மேல் குற்றஞ்சுமத்துவார்கள்" என்கிறார் (லூக்.11:32). யோனா ஒரு தேவனுடைய மனுஷன்: அவன் நினிவேயில் ஒரு நாள் பிரயாணப்பட்டு இன்னும் நாற்பது நாள் உண்டு நினிவே கவிழ்க்கப்பட்டுப்போம் என்று பிரசங்கித்தான். நினிவே மூன்றுநாள் பிரயாணவிஸ்தாரமுள்ள பட்டணமாயிருந்தது. நினிவேயின் மக்கள் இதைக் கேட்டவுடன் இரட்டு உடுத்தி மனந்திரும்பினார்கள். கர்த்தர் மனஸ்தாபப்பட்டு நினிவேக்கு இரக்கம் செய்தார். இதோ, யோனவிலும் பெரியவர் இங்கே இருக்கிறார் என்று இயேசுவானவர் பிரசங்கித்தார். ஆம், அன்பானவர்களே தீர்க்கதரிசிகளை அனுப்பிக்கொண்டுவந்த தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனையே அனுப்பினார். அவர் யோனாவிலும் பெரியவர். அவருடைய வார்த்தைக்குச் செவிகொடுத்து மனந்திரும்புங்கள்.

மனந்திரும்பாத பட்டணங்களைக் கடிந்துகொண்டார் என காண்கிறோம். ஏன் கடிந்துகொண்டார் என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது. "தமது பலத்த செய்கைகளில், அதிகமானவைகளைச் செய்யக்கண்ட பட்டணங்கள் மனந்திரும்பாமற்போனபடியினால் அவைகளை அவர் கடிந்துகொள்ளத் தொடங்கினார்" என்று அறிகிறோம் (மத்.11:20). ஆண்டவர்



தம்முடைய அற்புதத்தினால் தேவனுடைய குமாரன் என்பதை உறுதிப்படுத்தினார். அவர் தேவனிடத்தில் இருந்து வந்தவரென்றும் இதுவரை யாரும் செய்திராத காரியங்களை செய்கிறார் என்றும் உலகமுண்டாது முதல் இப்படிப்பட்ட பலத்த செய்கைகளை நாம் ஒருக்காலும் கண்டதில்லையே என்றும் சொன்ன பட்டணங்கள் மனந்திரும்பாமல் வேடிக்கை பார்க்கிற ஜனங்களாகவே போய்விட்டார்கள். ஆகையால் அவைகளை கடிந்துகொண்டார்.

"கோராசினே! உனக்கு ஐயோ, பெத்சாயிதாவே! உனக்கு ஐயோ, உங்களில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் தீருவிலும் சீதோனிலும் செய்யப்பட்டிருந்ததானால், அப்பொழுதே இரட்டுடுத்திச் சாம்பலில் உட்கார்ந்து மனந்திரும்பியிருப்பார்கள். நியாயத்தீர்ப்புநாளிலே உங்களுக்கு நேரிடுவதைப்பார்க்கிலும், தீருவுக்கும் சீதோனுக்கும் நேரிடுவது இலகுவாயிருக்கும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார் (மத்.11:21,22). இன்றைக்கு அற்புத ஊழியம் என்று அநேகர் இயேசுவின் நாமத்தினாலே நாங்கள் அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள்.

இயேசுவின் நாட்களிலே இத்தனை அற்புதங்களையும் கண்ணாரக் கண்டு மனந்திரும்பாமற்போனார்கள். இந்தப் பட்டணங்களுக்கு ஐயோ, என்கிறார். இப்படி மனந்திரும்பாமற் போகிறபடியால் இது கடைசி காலம் என்று அறிகிறோம். "ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும்; பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும், பஞ்சங்களும் கலகங்களும் உண்டாகும்; இவைகள் வேதனைகளுக்கு ஆரம்பம்" (மாற்.13:8). இவைகள் எல்லாம் இப்பொழுது எல்லா நாடுகளிலும் நடந்துகொண்டுதான் இருக்கிறது. மனிதன் நிம்மதியற்றவனாயிருக்கிறான். குடும்பங்களில் சமாதானமில்லை. நாட்டில் சமாதானமில்லை. இன்று அழிவு வந்துவிடுமோ, நாளை வந்துவிடுமோ? என்ற அச்சத்தோடு மனிதன் ஒவ்வொரு நாளும் வாழ்ந்துகொண்டிருக்கிறான். நாட்டுக்கு நாடு ஆயுதங்களை குவித்துக்கொண்டிருக்கிறது. இதில் ஜனங்கள் மத்தியில் நம்பிக்கை நாளுக்கு நாள் குறைந்துகொண்டே போகிறது.

"கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக, எப்படியெனில், மனுஷரில் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர் களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்க மில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்

களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்வர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப்பிரியராயும், தேவபக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு" என்று உத்தம குமாரனாகிய தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதுகிறார் (2தீமோ.3:1-5). இப்படிப்பட்டவர்கள் பெருகுகிறபடியால் இது கடைசி காலம் என்று அறிகிறோம்.

இந்த அழிவுகாலத்தில் இருக்கிற நாம் தேவனையும், கர்த்தரையும் அறிந்துகொள்ளவேண்டும். இயேசு சொல்கிறார்: "சகலமும் என் பிதாவினால் எனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது; பிதா தவிர வேறொருவனும் குமாரனை அறியான்; குமாரனும், குமாரன் எவனுக்கு அவரை வெளிப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனும் தவிர, வேறொருவனும் பிதாவை அறியான்" (மத்.11:27). அழிந்துபோகிற உலகத்தில் மனிதனுடைய கண்டுபிடிப்புக்கு அளவே இல்லை. மிகசிறப்பானவற்றைக் கண்டுபிடித்து அவைகளை நடைமுறைபடுத்தியிருக்கிறார்கள். அது மனிதனுக்கு பலவழிகளில் பயனுள்ளதாகவே இருக்கிறது.

பரிசுத்த வேதாகமம் ஜீவனுள்ள வசனத்தைக் கொண்டுள்ளது. அதை ஒரு மனிதன் கைக்கொள்ளும் போது அவனுடைய வாழ்வில் புத்துணர்ச்சியை ஏற்படுத்துகிறது. பரலோக பிதாதாமே இயேசுவை வெளிப்படுத்தினார். இவர் என் நேசகுமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள் என்று. அந்தப்படியே நானும் பிதாவும் ஒன்றாயிருக்கிறோம் என்று இயேசுதாமே சொல்லியிருக்கிறார். என்னைக் கண்டவன் பிதாவைக்கண்டவன் என்கிறார். நாம் தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடையும்போது சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடைபெறும்.

பவுல் கொலோசெயர் சபைக்கு எழுதிய கடிதத்தில்; "சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப்பிரியமுண்டாக அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்" என குறிப்பிடுகிறார் (கொலோ.1:10). அழிந்துபோகின்ற உலகத்தில் ஜீவிக்கிற நாம் சகலவித கனிகளையும் கொடுக்கிறவர்களாக இருக்கவேண்டும். அதை பிதாவாகிய தேவன் விரும்புகிறார். மேலும் அவருக்குப் பிரியமாகவும் பாத்திரமாகவும் நடந்துகொள்ள பிரயாசப்படவேண்டும். பொதுவாக மனிதர்களை பிரியப்படுத்தும்படி அநேகர் விரும்புகின்றனர். அப்படி அவர்கள் மனிதர்களை பிரியப்படுத்துவதால் என்ன நடைபெறுகிறது. வீண்பெருமைக்கு வழிவகுக்கிறது.



அழிந்துபோகிற பட்டணத்தை ஒரு மனிதனால் தடுத்து நிறுத்திவிடமுடியுமா? ஒவ்வொருவரும் தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடையும்போது உலகத்தில் பாவம் குறைய ஆரம்பிக்கும். தேவபிரசன்னம் நம்மோடிருக்கும். மேலும் பேதுரு சொல்லும்போது; "தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் பெருகக்கடவது" (2பேது.1:2). இந்த வசனத்தில் சமாதானம் பெருக வழி சொல்லப்பட்டுள்ளது. இந்த வழியை ஒவ்வொருவரும் பின்பற்றுவோமானால் சமாதானம் நம்முடைய நாட்டிலும், வீட்டிலும், எங்கும் காணப்படும். ஆகையால் தேவனையும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் அறிகிற அறிவில் வளருங்கள். "ஏலியின் குமாரர் பேலியாளின் மக்களாயிருந்தார்கள்; அவர்கள் கர்த்தரை அறியவில்லை" என வசனம் எடுத்துரைக்கிறது (1சாமு.2:12). ஏலி ஒரு ஆசாரியன் ஆனால் அவனுடைய குமாரரோ கர்த்தரை அறியவில்லை. ஒருவேளை உங்களுடைய பிள்ளைகளும் ஏலியின் குமாரரைப்போல இருக்கலாம். ஆகையால் தேவனையும், கர்த்தரையும் அறிகிற அறிவில் வளர்ச்சியடைய பிரயாசப்படுங்கள்.

**கேள்வி**

**அவபக்தியாய் நடப்பவர்களுக்கு எப்பட்டணங்களை திருஷ்டாந்தமாக கர்த்தர் வைத்தார்?**

எத்தனையோ நாடுகள் அழிந்துகொண்டிருந்தும் மனிதன் தன்னுடைய தவறான வழியைவிட்டு மனந்திரும்பாமல் வருவதுவரட்டும் என்று துணிந்து பாவம்செய்துகொண்டே செல்கிறான். "பூர்வ உலகத்தையும் தப்பவிடாமல், நீதியைப் பிரசங்கித்தவனாகிய நோவா முதலான எட்டுப்பேரைக் காப்பாற்றி, அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகத்தின்மேல் ஜலப்பிரளயத்தை வரப்பண்ணி; சோதோம் கொமோரா என்னும் பட்டணங்களையும் சாம்பலாக்கிக் கவிழ்த்துப்போட்டு, ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்து, பிற்காலத்திலே அவபக்தியாய் நடப்பவர்களுக்கு அவைகளைத் திருஷ்டாந்தமாக வைத்து" என 2பேது.2:5,6 வசனங்களில் படிக்கிறோம். இன்றுவரை அந்தப்பட்டணங்கள் திருஷ்டாந்தமாக வைக்கப்பட்டுள்ளது. அவைகளை பார்க்கிறவர்கள் உல்லாசமாக சென்று பார்த்துவருகிறார்களே தவிர இந்த விதமான அழிவு வந்தால் நம்முடைய வாழ்க்கை என்னவாகும் என்று சிந்திப்பதில்லை.

அன்பானவர்களே, நாம் மனந்திரும்பும்படியான சந்தர்ப்பங்களை இப்பூமியில் தேவன் நமக்குக் கொடுத்துக்கொண்டே வருகிறார். அதை இரட்சிப்பு என்று எண்ணுங்கள். காலம் கடந்துபோகிறது. முதாதையருடைய வாழ்கை

சரித்திரத்தை புரட்டிப்பாருங்கள். நமக்கு அநேக திருஷ்டாந்தங்கள் வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு கிடைத்த அழிவு நமக்கு ஒருவேளை அது இரட்சிப்பைக் கொண்டுவரும். அழிவிலிருந்து உங்களுடைய ஆத்துமா காக்கப்பட உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

## 27. அழிவிலிருந்து வரும் பாடம்

## The Lesson From Destruction

**உ**லகத்தின் அழிவு நமக்கு அநேக பாடத்தைக் கற்றுத்தருகிறது. இதைக்குறித்து அப்போஸ்தலனாகிய பேதுரு தமது நிருபத்தில் சொல்லும்போது; "இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிறதாயிருக்கிற படியால் நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியும் உள்ளவர்களாயிருக்க வேண்டும்" என குறிப்பிடுகிறார் (2பேது.3:11). அழிந்துபோகிற உலகத்தைப் பார்த்து இன்னும் கொஞ்சம் சந்தோஷமாயிருப்போம் என்று சொல்லி பாவத்தை தண்ணீரைப்போல பருகுகிறார்கள்.

ஒரு முறை ஸ்கைலாப் என்ற ராக்கெட் விழப்போவதாக அரசு அறிவித்தது. இதை அறிந்த ஜனங்கள் நாமெல்லாரும் சாகப்போகிறோம் என்று சொல்லி களியாட்டில் அநேகர் இறங்கினர். வேறு சிலர் இருக்கும்வரை நன்கு அனுபவித்து விட்டு சாவோம் என்று சொல்லி குடிக்கவும், புசிக்கவும் மற்றும் அநேக தவறுகளைச் செய்யவும் ஈடுபட்டனர். ஆனால் பேதுரு நமக்கு உணர்த்தும் பாடம் என்ன? இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிற தாயிருக்கிறபடியால் நாம் எப்படிப்பட்ட பரிசுத்த நடக்கையும் தேவபக்தியுள்ளவர்களாயும் இருக்கவேண்டும் என்று உணர்த்துகிறார். அழிவு நமக்கு ஒரு எச்சரிப்பைக் கொண்டுவருகிறது. அதைப்பார்க்கும்போது நாம் இன்னும் பரிசுத்தமாக ஜீவிக்கவும், நலமான காரியங்களைச் செய்யவும் சிந்திக்கவும் முற்படவேண்டும்.

சமீபத்தில் ஜப்பான் அழிவு நமக்கு மிகுந்த துக்கத்தை கொண்டுவந்தது. அந்த அழிவை தொலைக்காட்சியில் பார்த்தபோது வாழ்க்கை என்பது என்ன? என்ற கேள்விக்குறியாகிவிட்டது. மனிதனுடைய எண்ணங்கள் அனைத்தும் தவிடுபொடியாகிவிட்டது. நாளைக்கு இன்னின்னதை செய்வோம் என்று சொல்லியவர்களுடைய கனவு அனைத்தும் வீணாய் போய்விட்டது. ஆகையால் தேவன் ஒருவர் இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட முடியாது. இவைகள் மனிதனுக்கு ஒரு எச்சரிப்பையும் ஒரு பாடத்தையும் கற்றுத்தருகிறது என்பதுவே மறுக்கமுடியாத உண்மை. ஆகையால்; "அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும்



அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்" என திருமறை நமக்கு போதிக்கிறது (வெளி.22:11). அநியாயஞ்செய்கிறவனுக்கும் பரிசுத்தமாயிருக்கிறவனுக்கும் ஒரே தீர்ப்பா? என்று அநேகர் இப்படிப்பட்ட அழிவைப் பார்த்து சிந்திக்கின்றனர். மரணம் என்பது யாவருக்கும் வரக்கூடிய ஒன்றுதான். நீதிமானும் மரிக்கிறான் துன்மார்க்கனும் மரிக்கிறான். இதில் வித்தியாசம் இல்லை. ஆனால் அவரவருக்கு தேவனால் கொடுக்கப்படும் நீதி என்றும் மாறாது.

ஆகையால் நாம் அநியாயஞ்செய்கிறவர்களை நோக்கிப்பார்க்காமல், நாம் நீதியுள்ளவர்களாயிருந்தால் இன்னும் நீதிசெய்யவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருந்தால் இன்னும் பரிசுத்தமாயிருக்கவும் நாடவேண்டும். மேலும் பரிசுத்த வேதாகமம்; "நாம் அவபக்தியையும் லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது" (தீத்து 2:12,13). அநேகர் பக்தியின் வேஷமாகவே வாழ்கின்றனர்.

ஆபிரகாமுடைய நாட்களில் பத்து நீதிமான்கள் இருந்தால் கூட அந்த பட்டணத்தை அழிக்கமாட்டேன் என்று கர்த்தர் சொன்னார். சோதோம், கொமோரா பட்டணங்களில் பத்து நீதிமான்கள்கூட இல்லாதபடியால் அவைகள் அழிக்கப்பட்டன. அவைகள் இன்றும் துன்மார்க்கர்களுக்கு எச்சரிப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய துன்மார்க்கம் தேவசமுகத்தை எட்டினது. ஜனங்கள் தங்களை கெடுத்துக்கொண்டிருந்தார்கள். இச்செய்தியை வாசித்துக் கொண்டிருக்கும் அன்பான தேவஜனமே நீங்கள் துன்மார்க்கத்தின் வழிநடவாமல் கர்த்தருடைய வேதத்தை நோக்கிப்பாருங்கள். லௌகிக இச்சைகளை வெறுத்து, தெளிந்த புத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ண முற்படுங்கள். கொர்நேலியு என்ற ஒரு தேவமனிதனை குறித்து நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். "அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்" (அப்.10:2). இவனுடைய நாட்களிலும் பல இடங்களில் அழிவு ஏற்பட்டிருக்கும். ஆனாலும் இவன் அந்த அழிவை பார்த்து விசுவாசத்தை விட்டுவிடவில்லை. இத்தாலியா பட்டாளத்திலே பணிசெய்துகொண்டு தேவபக்தியுள்ளவனாய் இருந்திருக்கிறான். அநேகர் சொல்லுவார்கள். எங்களுடைய பணியில் பக்தியாக

இருப்பது கூடாத காரியம். நல்லவர்களையும் அவர்கள் கெடுத்துவிடுவார்கள். அவர்களோடு ஒத்துப்போகவேண்டும் என்பார்கள்.

இங்கே கவனியுங்கள் கொர்நேலியு பட்டாளத்திலே பணிசெய்தபோதும் அவன் தன்னுடைய பக்தியிலிருந்து கடுகளவும் பிசகாமல் தன் குடும்பத்தாரோடு பயபக்தியுள்ளவனாயிருந்திருக்கிறான். ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்திருக்கிறான். எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபித்திருக்கிறான். இன்றைக்கு நீங்களும் நானும் இந்த கொர்நேலியுவைப்போல இருப்போமானால் அழிவிலிருந்து காக்கப்படுவோம்.

அழிவு நமக்கு மேலும் ஒரு பாடத்தை கற்றுக்கொடுக்கிறது; "தேவனுடைய நாள் சீக்கிரமாய் வரும்படிக்கு மிகுந்த ஆவலோடே காத்திருங்கள்; அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம்" (2பேது.3:12). இப்படி இவைகளெல்லாம் அழிந்துபோகிற படியால் நாம் கர்த்தருடைய நாளை எதிர்நோக்க வேண்டும். அவைகளுக்கு நாம் ஆவலோடே காத்திருக்கவும், நீங்கள் கர்த்தருடைய நாளை சந்திக்கவும் ஆயத்தமாயிருக்கிறீர்களா? ஆயத்தமுள்ளவர்கள் ஆகாயத்தில் அவரோடே எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என்பதை அறிவீர்களா? அந்த நாளிலே நாம் பார்க்கிற வானங்களும் பூமியும் அதில் உள்ளவைகளும் வெந்து அழிந்துபோகும். அதில் பேதுரு குறிப்பிடும்போது எரிந்து உருகிப்போம் என்கிறார். உருகிப்போன பொருள்களை பார்த்திருக்கிறீர்களா? அவைகளை வைத்து ஒன்றும் செய்யமுடியாது.

ஆகையால் அன்பான சகோதரனே, சகோதரியே நீ கர்த்தருடைய நாளுக்கு ஆயத்தப்படு. அழிந்துபோகும் பொருட்கள் மீது உன் கவனத்தை செலுத்தாதே. நித்தியமான வசனத்திற்கு செவிகொடு. வானமும் பூமியும் ஒழிந்துபோம் என்வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். ஆகையால் "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக்காத்திருங்கள்" (யூதா 21). இந்த உலகத்தில் உங்களை பாதுகாக்க உங்களுடைய முயற்சியால் முடியாது. தேவனுடைய அன்பிலே தான் உங்களை காத்துக்கொள்ளமுடியும். அப்படி பாதுகாத்துக்கொண்டு கர்த்தராகிய இயேசுவின் இரக்கத்தை பெறகாத்திருக்க வேண்டும். நிற்கிறேன் என்று சொல்லுகிறவன் விழாதபடி எச்சரிக்கையா யிருக்கக்கடவன் என்ற வசனத்தின்படி கர்த்தருடைய இரக்கத்தைப் பெற காத்திருக்கவேண்டும்.

கானானிய ஸ்திரீ தன் மகளுக்காக ஆண்டவரிடம் மன்றாடினாள். பிள்ளைகள் சாப்பிடும்போது சிந்தும் துணிக்கைகளை நாய்க்குட்டிகள்



தின்னுமே அந்த ஆசீர்வாதத்தையாவது எனக்கு அருளவேண்டும் என்று இயேசுவிடம் மன்றாடி பெற்றுக்கொண்டாள். ஆண்டவர் அவளுடைய விசுவாசத்தைப் பார்த்து உன் விசுவாசம் பெரிது என்றார். நாம் நன்மைகளைப் பெற தேவனுடைய அன்பினாலே நம்மை காத்துக்கொள்ளவேண்டும். சங்கீதக்காரன் சொல்லுகிறான்; "எப்பொழுது விடியும் என்று விடியற்காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது" என்கிறார் (சங்.130:6). ஜாமக்காரர்கள் தூங்கமாட்டார்கள். அவர்கள் விடியலை நோக்கி இருப்பார்கள். அதைப்போல தாவீது ஆண்டவரை நோக்கி காத்திருந்தார்.

இன்றைக்கு அநேகர் தேவனுடைய ஆலோசனைக்கு காத்திராமல், துரிதமாக முடிவெடுக்கிறார்கள். அல்லது மற்றவர்களுடைய ஆலோசனையை ஏற்று வாழ்க்கையை அமைத்துக்கொள்கிறார்கள். அது நாளடைவில் அவர்களுடைய வாழ்க்கையில் வருத்தத்தைக்கொண்டு வரும். தாவீது தேவ சமுகத்தில் காத்திருந்தபடியால் அவனுடைய ராஜ்யபாரம் நிலைத்தது.

அழிவிலிருந்து வரும் மற்றொரு பாடம். "இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய்ச் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்" (2பேது.3:14). இவ்வுலகத்தில் கறையற்றவர்களாக வாழவேண்டும். கறையுள்ளவர்களை கழுவும்படியாக இயேசு இப்பூமியில் இரத்தம் சிந்தினார். கறையுள்ளவர்கள் கடுகளவும் கர்த்தருடைய ராஜ்யத்தை சுதந்தரிக்க முடியாது. ஆகையால் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்தியில் காணப்படவேண்டும். இன்றைக்கு சபையில் இருக்கிறவர்கள் அடிதடி சண்டையில் இறங்குகிறார்கள். அவர்களிடத்திலே சமாதானமில்லை.

அப்படிப்பட்டவர்கள் எப்படி அவருடைய சமுகத்தில் நிற்கமுடியும்? மேற்கண்ட வசனத்தின்படி கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி காத்திருக்கிறவர்கள் அவருடைய சமுகத்தில் நீடிய பொறுமையுள்ளவர் களாயிருந்து, கர்த்தர் பரிசுத்தராயிருக்கிறதுபோல தங்களை இயேசுவின் இரத்தத்தினாலே கழுவினர்களாகவும், குற்றமற்றவர்களாகவும் தங்களை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். மேலும் நாம் வாசிக்கிறோம்; "சமாதானத்தின் தேவன் தாமே உங்களை முற்றிலும் பரிசுத்தமாக்குவாராக. உங்கள் ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக" எனச் சொல்லப்பட்டுள்ளது (1தெச.5:23).

ஆவிலே மட்டும் பரிசுத்தமாயிருந்தால் போதாது ஆவி ஆத்துமா சரீரம் இம்மூன்றும் குற்றமற்றதாயிருக்க வேண்டும். அநேகர் தங்களை ஆவிக்குரியவர்கள் என்று சொல்லி சரீரத்தில் சொல்லமுடியாத தவறுகளை செய்துகொண்டிருக்கிறார்கள். அஞ்ஞானிகளுக்குள்ளும் பேசப்படாத பாவத்தை செய்துகொண்டிருக்கிறார்கள் இவர்களுடைய நிலைமையை எண்ணிப்பார்க்கும்போது, மிக வேதனையாக இருக்கிறது. பரிசுத்தம் இல்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிக்கமுடியாது. இது தேவனுடைய அழியாத வசனமாயிருக்கிறது. ஆகையால் அழிந்துபோகும் இப்பூமியில் வாழ்ந்துகொண்டிருக்கும் நாம் அழியாத வசனங்களை நோக்கிப்பார்த்து நம்மை சரிசெய்துகொள்வோம். "தேவனை அறியாதவர்களுக்கும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும் வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்...அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" (2தெச.1:7,10). இன்றைக்கு உலக அழிவிலிருந்து தப்பிக்கொண்டேன் என்று ஒருவர் பெருமையாக பேசிக் கொள்ளலாம். ஆனால் ஒரு மாபெரும் அழிவு காத்துக்கொண்டிருக்கிறது. அது நித்திய அழிவு இந்த அழிவுக்கு தேவனை அறியாத எவரும் தப்பிக்கொள்ளமுடியாது.

ஆகையால் அன்பு வாசகரே, நீங்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவரில் வளர்ந்து பெருகுங்கள். "நான் நேசிக்கிறவர்களெவர்களோ அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக்கிறேன்; ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து மனந்திரும்பு" என்கிறார் (வெளி.3:19). கர்த்தருடைய கடிந்துகொள்ளுதலை ஏற்றுக்கொண்டு மனந்திரும்பி, தேவபக்தியோடு கர்த்தருடைய வருகைக்கு காத்திருந்து குற்றமற்றவர் களாயிருக்க பிரயாசப்படுங்கள்.

**கேள்வி**

**கர்த்தர் வரும் வரை இவைகளைக் கைக்கொள்ளவேண்டுமா?**

ஆம், அவர் வரும்வரை கர்த்தருடைய வேதவசனங்களின்படி நம்மை பாதுகாத்துக்கொள்ளவேண்டும். "உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்" என வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் படிக்கிறோம் (வெளி.2:25). நமக்குள்ளது என்ன? தேவபக்தி, தேவனுடைய நாளுக்கு காத்திருப்பது, அவருடைய சந்நிதியில் குற்றமற்றவர்களாகவும்



பிழையில்லாதவர்களாகவும் காணப்படுவது மற்றும் விசுவாசத்தோடும், நம்பிக்கையோடும், அன்போடும் நாம் நிலைத்திருக்கும்போது, கர்த்தரால் வாடாத ஜீவகிரீடத்தைப் பெறுவோம். மற்றபடி அவிசுவாசத்தையும் இவ்வுலக ஆஸ்திகளிலும் நம்முடைய கவனத்தை வைப்போமானால் தேவ சமுகத்திலிருந்து தள்ளப்படுவோம். ஆகையால் உனக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிரு என சொல்லுகிறார். தனக்குள்ளதை இழந்த ஐந்து புத்தியற்ற கன்னிகைகள் மணவாளனோடு பிரவேசிக்கும் சிலாக்கியத்தை இழந்தார்கள். அவர்கள் எண்ணெய் வாங்கும்படி கடைக்கு சென்று இருக்கும்போது மணவாளன் வந்துவிட்டார். அதைப்போலதான் கர்த்தருடைய நாள் இருக்கும். ஆகையால் உங்களுக்குள்ளதை அவர் வருமளவும் பற்றிக் கொண்டிருங்கள். அவர் வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று எண்ணிவிடாதிருங்கள். அவருடைய வருகை நீங்கள் எதிர்பாராத நேரத்தில் இருக்கும். இன்றே ஆயத்தப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 28. ஓ, தாகமாயிருக்கிறவர்களே

## Ho! Everyone Who Thirsts

**தா**கமாயிருக்கிறவர்களுக்கு கர்த்தர் ஜீவத்தண்ணீரைக் கொடுக்கிறார். ஆண்டவராகிய இயேசு இப்பூமியில் ஊழியம் செய்து கொண்டுவந்த நாட்களில்; "சத்தமிட்டு; ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன். வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்" (யோவா.7:37,38). இந்த ஜீவத்தண்ணீரை ஆவிக்குரியவர்கள் அதாவது இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவர்கள் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். கர்த்தர் நம்மை நிலையான காரியத்திற்கு நேரே வழிநடத்துகிறார். உலகத்தில் இருக்கிற மனிதன் கண்களினால் திருப்தியடைகிறதில்லை. ஆனால் ஆவியானவர் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்துகிறார்.

ஜீவத்தண்ணீரை ஒரு மனிதன் பெற்றுக்கொள்ளும்போது ஜீவ காலமெல்லாம் அவன் திருப்தியுள்ளவனாயிருக்கிறான். அவன் உள்ளத்திலே நதிகள் ஓடும். திருப்தியுள்ளவன் தேன்கூட்டையும் மிதிப்பான் என்ற வசனத்தின்படி அவன் ஆசீர்வதிக்கப்படுவான். மேலும் கர்த்தர் சொல்லும்போது; "நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது, நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும் என்றார்" (யோவா.4:14).

கர்த்தராகிய இயேசுவை விசுவாசித்துப் பற்றிக்கொண்டவர்கள் ஒருக்காலும் சோர்ந்துபோவதில்லை. கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த ஜீவனுள்ள வசனம் அவர்களுடைய ஜீவியகாலமெல்லாம் நித்திய நித்திய காலமாய் ஊறுகிற நீருற்றாக இருக்கிறது. ஆகையால் ஏசாயா தீர்க்கன் மூலம் கர்த்தர் சொல்லும்போது; "ஓ, தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து வாங்கிச் சாப்பிடுங்கள்; நீங்கள் வந்து, பணமுமின்றி விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள். நீங்கள் அப்பமல்லாததற்காகப் பணத்தையும், திருப்திசெய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும் செலவழிப்பானேன்? நீங்கள் எனக்குக் கவனமாய்ச் செவிகொடுத்து, நலமானதைச் சாப்பிடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமா கொழுப்பான பதார்த்தத்தினால் மகிழ்ச்சியாகும்" என்றார் (ஏசா.55:1,2).

இன்றைக்கு திருப்திசெய்யாத பொருளுக்காக செலவுசெய்து ஏமாற்றப்படுகிற அநேகரை நாம் காண்கிறோம். மனிதர்கள் அங்கும் இங்கும் அலைந்து ஓடி தங்களை அழிவுக்கு நேரே வழிநடத்தும் பொருட்களை வாங்கி அழிந்துபோகிறார்கள். கர்த்தர் பணமுமின்றி விலையுமின்றி திராட்சரசமும் பாலும் கொள்ளுங்கள் என்று அழைக்கிறார். அவர் சகலத்தையும் நமக்கு இலவசமாகவே கொடுத்திருக்கிறார். சிலர் இலவசமாக கொடுத்தால் தவறாக புரிந்து கொள்கிறார்கள். நம்மை மதம் மாற்றுவதற்கு இலவசமாக கொடுக்கிறார்கள் என்று தப்பு கணக்குப்போடுகிறார்கள்.

அன்பானவர்களே, உங்களுடைய தகப்பன் உங்களுக்கு நலமான காரியங்களை செய்வதற்கு உங்களிடத்தில் பணம் பெற்றுக்கொள்வாரா? உங்களுடைய பரமபிதா உங்களுடைய நன்மையை விரும்புகிறார். ஆகையால் ஓ தாகமாயிருக்கிறவர்களே என்னிடத்தில் வந்து இவைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள் என்று அழைக்கிறார். அவர் கொடுக்கிறவைகளை நீங்கள் உலகத்தில் வேறு எங்கும் பெற்றுக்கொள்ள இயலாது.

"சிறுமையும் எளிமையுமானவர்கள் தண்ணீரைத் தேடி, அது கிடையாமல், அவர்கள் நாவு தாகத்தால் வறளும்போது, கர்த்தராகிய நான் அவர்களுக்குச் செவிகொடுத்து, இஸ்ரவேலின் தேவனாகிய நான் அவர்களைக் கைவிடாதிருப்பேன். உயர்ந்த மேடுகளில் ஆறுகளையும், பள்ளத்தாக்குகளின் நடுவே ஊற்றுகளையும் திறந்து வனாந்தரத்தைத் தண்ணீர்த் தடாகமும், வறண்ட பூமியை நீர்க்கேணிகளுமாக்கி, வனாந்தரத்திலே கேதுருமரங்களையும், சீத்தீம்மரங்களையும், மிருதுச் செடிகளையும், ஒலிவமரங்களையும் நட்டு, அவாந்தரவெளியிலே தேவதாரு



விருட்சங்களையும், பாய்மரவிருட்சங்களையும், புன்னை மரங்களையும் உண்டுபண்ணுவேன். கர்த்தருடைய கரம் அதைச் செய்தது என்றும், இஸ்ரவேலின் பரிசுத்தர் அதைப் படைத்தார் என்றும், யாவரும் கண்டு உணர்ந்து சிந்தித்து அறிவார்கள்" (ஏசா.41:17-20).

யார் தாகத்திற்கு தண்ணீரைத்தேடிவருகிறார்கள் என்றால் சிறுமையும் எளிமையுமானவர்கள்தான் வருகிறார்கள். மற்றவர்கள் எங்களுக்கு என்ன குறையிருக்கிறது என்று மெத்தனமாக உலக ஆசாபாசங்களில் மயங்கி தங்களை மாய்த்துக்கொள்கிறார்கள். ஆகையால் சிறுமையானவர்களின் தேவன் அவர்களுக்கு இரங்கி அவர்கள் நடுவிலே பெரிய காரியங்களைச் செய்கிறார். வனாந்தரம் தண்ணீர் தடாகமாக மாறுகிறது. வறண்ட பூமி நீர்க்கேணியாக மாறுகிறது. இவைகளை கர்த்தர் தம்முடைய வல்லமையால் செய்கிறார். மோசே வனாந்தரத்தில் ஆறுலட்சம்பேரை வழிநடத்தும்போதும், அவர்கள் தண்ணீர் கேட்டு முறுமுறுக்கும்போதும் கன்மலையிலிருந்து தண்ணீர் புறப்படப்பண்ணினார். ஆம், அவர் உங்களுடைய வாழ்க்கையிலும் இப்படிப்பட்ட செழுமையை கட்டளையிட முடியும். அதை நீங்கள் விசுவாசித்தால் தேவனுடைய மகிமையைக் காண்பீர்கள்.

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான் என்றார்" (யோவா.6:35). தாகமுள்ளவர்களுக்குத்தான் கர்த்தர் ஜீவதண்ணீரைக் கொடுக்கிறார். நம்முடைய முற்பிதாக்களின் நாட்களில் தேவனை நோக்கி கதறியவர்களுக்கு அவர் இறங்கினார். தாவீது சொல்லும்போது; "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுதும் தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?" என்கிறார் (சங்.42:1,2). மான்கள் நன்கு மேய்ந்து விட்டு தாகத்திற்கு நீரோடைகளை நோக்கி கதறிக்கொண்டு ஓடும். அதைப்போல தாவீது கர்த்தரை நோக்கி கதறினார். உலகத்திலே எத்தனையோ இருந்தாலும் தாவீதுடைய தாகத்தை தீர்ப்பது தேவசமுகத்தில் இருந்தது. ஆகையால் என் ஆத்துமா தேவன்மேல் ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது என்கிறார். உங்களுடைய ஆத்துமா இவ்விதமாக தேவனை நோக்கி கதறுகிறதா? மேலும், "ஜீவஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம்" என்கிறார் (சங்.36:9). கர்த்தரிடத்தில் ஜீவஊற்று இருக்கிறது நம்முடைய தாகத்தை தீர்க்கும் ஜீவ ஊற்று. ஆகையால்

ஜீவதண்ணீரண்டைக்கு வாருங்கள் என்று அழைக்கிறார். ஒரு முறை இயேசுவோடு சீஷர்கள் படவில் சென்று கொண்டிருந்தபோது படவு அலைகளினாலும் ஜலத்தினால் நிறைந்தது. அப்பொழுது சீஷர்கள், "ஐயரே, ஐயரே, மடிந்துபோகிறோம் என்று அவரை எழுப்பினார்கள்; அவர் எழுந்து காற்றையும் ஜலத்தின் கொந்தளிப்பையும் அதட்டினார்; உடனே அவைகள் நின்றுபோய், அமைதலுண்டாயிற்று" (லூக்.8:24).

இங்கே சீஷர்களால் கடலின் கொந்தளிப்பை நிறுத்த முடியவில்லை. ஆகையால் இயேசுவை நோக்கி: ஐயரே, ஐயரே, என்று கதற ஆரம்பித்தனர். அவர்களுடைய கூக்குரலை கேட்டு கர்த்தர் காற்றையும் கடலையும் அமைதல்படுத்தினார். நாம் பலவேளைகளில் இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொள்கிறோம். அப்பொழுது சிலநேரங்களில் மனிதர்களை நாடுகிறோம். அவர்களால் அப்படிப்பட்ட சூழ்நிலையிலிருந்து நம்மை காப்பாற்ற முடியாமற்போய்விடுகிறது. நாம் கர்த்தரை நோக்கி கதறுவோமானால் கட்டாயம் கர்த்தர் நம்மை எப்படிப்பட்ட சூழ்நிலையிலும் காப்பார்.

எஸ்றா என்ற தேவ மனிதனை அறிவீர்கள். அவன் தன் ஜனங்களுக்காக கர்த்தரை நோக்கி மன்றாடினான். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, நீர் நீதியுள்ளவர்; ஆகையால் இந்நாளில் இருக்கிறதுபோல, நாங்கள் தப்பிமீந்திருக்கிறோம்; இதோ, நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளானவர்கள்; இதினிமித்தம் நாங்கள் உமக்கு முன்பாக நிற்கத்தக்கவர்கள் அல்ல என்று பிரார்த்தித்தேன். எஸ்றா இப்படி விண்ணம்பம்பண்ணி, அறிக்கையிட்டு அழுது, தேவனுடைய ஆலயத்துக்கு முன்பாகத் தாழ விழுந்துகிடக்கையில், இஸ்ரவேலில் புருஷரும் ஸ்திரீகளும் பிள்ளைகளுமான மகா பெரிய சபை அவனிடத்தில்வந்து கூடிற்று, ஜனங்கள் மிகவும் அழுதார்கள்" (எஸ்றா 9:15 மற்றும் 10:1). எஸ்றா தங்களுடைய குற்றத்தை தேவசமுகத்தில் அறிக்கையிட்டு அழுதான். அவனுடைய கண்ணீரை கர்த்தர் கண்ணோக்கினார்.மேலும் அவனோடு சேர்ந்து அழுத இஸ்ரவேலின் கண்ணீரைக் கண்டார். அவர்களுக்கு இரக்கம் செய்தார்.

இப்படிப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள் சிலகாலம் கர்த்தரை விட்டுவிட்டார்கள். ஆகையால் எரேமியா தீர்க்கன் மூலம் உணர்த்தும்போது; "என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவதண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக்கொண்டார்கள்" (எரே.2:13). இத்தனை ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்ட இந்த இஸ்ரவேலர் ஜீவதண்ணீர் ஊற்றாகிய கர்த்தரை விட்டு பாகால்களை சேவிக்கவும் தேவனுக்கு விரோதமாக



காரியங்களில் ஈடுபடவும் ஆரம்பித்தனர். இன்றைக்கும் அநேகர் தங்களுடைய கையின் பிரயாசத்தை நம்பி கர்த்தரை மறுதலித்துப்போய்விடுகிறார்கள். அவர்கள் அதிகமாக சம்பாதிக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் கடனாளிகளாக இருக்கிறார்கள். காரணம் என்ன? அவர்களுடைய சம்பாத்தியம் அவர்களில் நிற்பதில்லை. கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அவர்களோ, தண்ணீர் நிற்காத தொட்டிகளை தங்களுக்கு வெட்டிக்கொள்கிறார்கள். ஒரு முறை சீஷர்கள் மீன்பிடிக்கும்படி சென்றார்கள். அன்று இரவிலே ஒன்றும் பிடிக்கவில்லை. விடியற்காலமானபோது, இயேசு கரையிலே நின்றார்; அவரை இயேசு என்று சீஷர்கள் அறியாதிருந்தார்கள். அப்பொழுது அவர்களை நோக்கி: பிள்ளைகளே புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்று கேட்டார். அதற்கு அவர்கள் ஒன்றுமில்லை என்றார்கள். இவர்கள் ஒன்றும் பிடிக்காததற்கு காரணம் என்ன? ஜீவனுள்ள கர்த்தரை விட்டுவிட்டார்கள். அவர் அழைத்த ஊழியத்தை விட்டுவிட்டார்கள். பேதுருவோடு சேர்ந்து கொண்டு மீண்டும் மீன்பிடிக்கும்படி கடலுக்குச் சென்றார்கள்.

இந்தவிதமாக தம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் அசட்டை செய்துவிட்டு செல்லுகிறவர்கள் ஒன்றும் பெற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏனெனில் அவர்கள் தாங்கள் அறிந்த கர்த்தரை விட்டுவிட்டார்களே! அன்பு சகோதரனே சகோதரியே உங்களுடைய சூழ்நிலை எப்படியிருக்கிறது? நீங்கள் ஜீவனுள்ள கர்த்தரை இஸ்ரவேல் மக்களைப்போல விட்டுவிட்டு தண்ணீர் நிற்காத தொட்டிகளை கட்டிக்கொண்டீர்களா? அல்லது சீஷர்களைப்போல மீண்டும் உங்களுடைய வேலைக்கு திரும்பிவிட்டீர்களா? கர்த்தரை விட்டுவிடாது பற்றிக்கொள்ளுங்கள் அப்பொழுது கணக்கில்லா ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள். இயேசுவை விட்டு விட்ட யூதாஸின் நிலைமையை நீங்கள் அறிவீர்கள். பணத்தை இச்சித்து பின்வாங்கிப்போன அவன் நான்றுகொண்டு செத்தான் (மத்.27:5). அவனுடைய முடிவை அவனே தெரிந்துகொண்டான். கர்த்தர் அவனை ஒரு அப்போஸ்தலனாக தெரிந்துகொண்டார். அவனோ பாவத்தை சம்பாதித்து, மரணத்தை தெரிந்துகொண்டான். இவனைப்போல நம்முடைய முற்பிதாக்களில் சவுல் என்ற ராஜாவும் அவன் மூன்று பிள்ளைகளும் அவன் ஆயுததாரியும் ஒருமிக்க செத்துப்போனார்கள் என்று 1சாமு.31:6-ம் வசனத்தில் படிக்கிறோம்.

இவர்களுடைய மரணத்திற்கு காரணம் என்ன? கர்த்தருடைய வார்த்தையை புறம்பாக்கிப்போட்டார்கள். ஆகையால் பாவத்தின் சம்பளம் மரணம் என்ற வசனத்தின்படி மரணத்தை தழுவிக்கொண்டார்கள். அன்பு தேவ

ஜனமே நாம் கர்த்தரை விட்டு விடும்போது மரணம் நம்மை பற்றிக்கொள்ளும். நீங்கள் ஒருக்காலும் ஜீவனுள்ள தேவனை விட்டுவிடாது பற்றிக்கொள்ளுங்கள். தாவீதைப்போல, எஸ்றாவைப்போல, ஆண்டவருடைய பதினொரு சீஷர்களைப்போல இயேசுவை பற்றிக்கொள்ளுங்கள். அவர் உங்களோடு இருக்கும்போது உங்களுக்கு பாதுகாப்பு உண்டு எல்லா இக்கட்டுகளுக்கும் உங்களை விடுவித்து காப்பார்.

**கேள்வி**

**கர்த்தரை பற்றிக்கொண்டவர்களுக்கு கர்த்தருடைய வசனம் கொடுக்கும் வாக்குத்தத்தம் என்ன?**

"இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவது மில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள் மேல் படுவதுமில்லை, சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்" என காண்கிறோம் (வெளி.7:16,17). இந்த வாக்குத்தத்த ஆசீர்வாதங்களை சுதந்தரித்துக்கொள்ள, இன்றே கர்த்தருடைய சித்தத்திற்கு உங்களை முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள். அவருடைய வசனத்திற்கு முக்கியத்துவம் கொடுங்கள். உங்களை நீங்களே ஆண்டுகொள்ள இடம்கொடாதிருங்கள். மனித பாரம்பரிய கட்டுகளை விட்டுவிட்டு, ஆண்டவரின் சத்தம் கேட்கும் ஆடுகளாக மாறுங்கள்.

அவர் தம்மிடம் வருவோரை ஜீவத்தண்ணீருள்ள ஊற்றண்டைக்கு நடத்துகிறார். அப்படிப்பட்டவர்கள் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவார்கள். ஆகையால் அவர்கள் ஒருக்காலும் தாகமடையார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இவ்வுலகத்தில் மாயையைப் பற்றிக்கொள்ளாமல், ஜீவனுள்ள மார்க்கத்திற்கு நேரே வழிநடக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது கர்த்தர் கொடுக்கும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 29. செத்த ஈக்கள்

## Dead Flies

**பி**ரசங்கி சொல்லுகிறான்; "செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்" (பிர.10:1). ஒரு தைல வியாபாரியினுடைய தைலத்தில் செத்த ஈக்கள் கெடுக்குமானால்



அவனுடைய தைல வியாபாரம் கெட்டுப்போய்விடும். எப்படியென்றால், அவனுடைய தைலத்தில் செத்த ஈக்கள் இருக்கும்போது அந்த தைலத்தை முழுவதுமாக நாறிக் கெட்டுப்போகப்பண்ணுமல்லவா? அதைப்போல சபையிலும் ஆவிக்குரிய விஷயத்தில் செத்தவர்கள் இருக்கும்போது சபை முழுவதும் பாழடிக்கப்படும்.

ஆகையால் கர்த்தர் சர்தை சபையின் தூதனுக்கு எழுதும்போது; "தேவனுடைய ஏழு ஆவிகளையும் ஏழு நட்சத்திரங்களையும் உடையவர் சொல்லுகிறதாவது; உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்" என்கிறார் (வெளி.3:1). இன்றைக்கும் சபையில் பல வருடங்களாக இருக்கிறவர்கள் உயிருள்ளவனென்று சொல்லி ஆவிக்குரிய விஷயத்தில் செத்தவர்களாயிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் ஆவியில் பெலப்படவேண்டும். இல்லையேல் அவர்களைப் பார்த்து மற்றவர்களும் ஆவிக்குரிய விஷயத்தில் சோர்ந்துபோவார்கள்.

மேலும் அடுத்த வசனத்தில்; "நீ விழித்துக்கொண்டு, சாகிறதற் கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து; உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை" என்கிறார் (வெளி.3:2). சபையில் இருக்கிற ஒவ்வொருவருக்கும் சில பொறுப்புகளை தேவன் கொடுக்கிறார். சிலர் மேய்ப்பராகவும், போதகராகவும், உதவிக்காரர்களாகவும் செயல்படுகிறார்கள். இவர்கள் மந்தையின் மீது கவனத்தை செலுத்தி அவர்களுடைய நிலைமையை அறியவேண்டும். சாகிறதற்கேதுவாக இருக்கிறவைகளை அடையாளம் கண்டு கொண்டு அவர்களை ஆவிக்குரிய விஷயத்தில் திடப்படுத்தவேண்டியவர் களாயிருக்கிறோம். அவர்கள் போனால் போகட்டும் என்று நாம் மெத்தனமாக இருந்துவிடக்கூடாது. ஏனெனில் ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல என காண்கிறோம்.

ஒவ்வொருவரும், "உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்" என பவுல் ரோமசபையாருக்கு எழுதுகிறதை படிக்கிறோம் (ரோம.6:11). ஞானஸ்நானத்திலே பாவத்திற்கு செத்து நீதிக்கு பிழைத்தவர்களாக இருக்கிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறோம் என்பதை நாம் ஒவ்வொரு நாளும் எண்ணிப்பார்க்கவேண்டும். சிலர் நான் எதற்காக வாழ்கிறேன் என்று நொந்துகொள்வார்கள். உங்களை மீட்கும்படியாக இயேசுதாமே சிலுவையில் இரத்தம் சிந்தினார். உங்களை தேவனுடைய சமுகத்திற்கு கொண்டு

சேர்க்கும்வரை அவர் உங்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார். இப்படிப்பட்ட நம்பிக்கையோடிருப்பீர்களானால் நீங்கள் சபையில் என்றும் உயிருள்ளவர்களாக இருப்பீர்கள். செத்தவர்களாயிருக்க மாட்டீர்கள்.

லூக்கா 12;1-ம் வசனத்தில் பரிசேயருடைய புளித்த மாவைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று கர்த்தர் முதலாவது தம்முடைய சீஷர்களுக்குச் சொன்னார். ஏன் அப்படிச் சொன்னார். இன்றைக்கு புளிப்புள்ள இவர்கள் மற்றவர்களையும் உப்பப்பண்ணுவார்கள். முழுவதையும் உப்பப்பண்ணி கெட்டுப்போகப் பண்ணுவார்கள். "நியாயசாஸ்திரிகளே, உங்களுக்கு ஐயோ, அறிவாகிய திறவுகோலை எடுத்துக்கொண்டீர்கள், நீங்களும் உட்பிரவேசிக்கிற தில்லை, உட்பிரவேசிக்கிறவர்களையும் தடைபண்ணுகிறீர்கள் என்றார்" (லூக்.11:52). ஆகையால் பரிசேயருடைய புளித்த மாவைக்குறித்து அதாவது அவர்களுடைய உபதேசத்தைக்குறித்து எச்சரிக்கையாயிருக்கச் சொன்னார். சபைகளில் பொதுவாக ஒருவரையொருவர் பார்த்து கற்றுக்கொள்ளுகிறார்கள்.

ஒருவர் ஒரு தவறை செய்துவிட்டால் மற்றவரும் அதே தவறை செய்வார். ஏன் அப்படி செய்தீர்கள் என்று கேட்டால். அவர் செய்தார் ஆகையால் நானும் செய்தேன் என்பார். அது வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்பதை பார்க்கமாட்டார்கள். இந்த பரிசேயர் போன்றோர் சொல்லுவார்கள் ஆனால் செயல்படமாட்டார்கள். இப்படிப்பட்ட போதகர்களுக்கு உலகத்தில் பஞ்சமில்லை. ஆண்டவர் ஊழியம் கொள்ள வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கவும் இவ்வுலகிற்கு வந்தார். ஆகையால் அப்படிப்பட்ட சிந்தையோடு உயிருள்ளவர்களாயிருந்து செயல்படுவோம்.

பிரசங்கி சொன்ன அதே வசனத்தில்; "செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப் பண்ணுவதுபோல; ஞானத்திலும் கனத்திலும் பேர்பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும் என்று சொல்லுவதை வாசிக்கிறோம். ஆம், எவ்வளவு பெரிய ஞானியாக இருந்தாலும் அவர்களுடைய சொற்ப மதியீனம் அவர்களுடைய ஞானத்தை அசட்டை செய்துவிடும். செத்த ஈக்களைப்போல அவர்களுடைய ஞானத்தை நாறிக்கெட்டுப்போகப்பண்ணும். சாலொமோன் ஞானி ஒரு சிறப்பான ஞானி, சிறப்பான ராஜா என்றெல்லாம் நாம் அறிகிறோம்.

ஆனால் அவனுடைய பின் நிலைமையைப் பார்க்கும்போது, அவனுடைய இருதயத்தை அவன் நேசித்த பெண்கள் வழுவிப்போகப் பண்ணினார்கள் (1இரா.11:3). இந்த சாலொமோன் சிறப்பான ஞானவானாக இருந்தும் அவனுடைய சொற்ப மதியீனமான காரியத்தினால் அவனுடைய ஸ்திரீகள் அவனுடைய இருதயத்தை தேவனுக்கு விரோதமாக செய்ய



தூண்டினார்கள். ஆகையால் "முத்துக்களைப்பார்க்கிலும் ஞானமே நல்லது; இச்சிக்கப்படத்தக்கவைகளெல்லாம் அதற்கு நிகரல்ல" என்கிறார் (நீதி.8:11). ஒருவேளை ஞானம் அசட்டை பண்ணப்படலாம். அப்படி அசட்டை பண்ணப்படுவதால் ஞானம் வீழ்ந்துவிட்டது என்பதல்ல. "ஞானமுள்ள ஒரு ஏழை மனிதன் இருந்தான்; அவன் தன் ஞானத்தினாலே அந்தப் பட்டணத்தை விடுவித்தான்; ஆனாலும் அந்த ஏழை மனிதனை ஒருவரும் நினைக்கவில்லை. ஆகையால் ஏழையின் ஞானம் அசட்டைபண்ணப்பட்டு, அவன் வார்த்தைகள் கேட்கப்படாமற் போனாலும், பெலத்தைப்பார்க்கிலும் ஞானமே உத்தமம் என்றேன்" என்கிறார் பிரசங்கி (பிர.9:15,16). உங்களுடைய ஞானம் ஒருவேளை அசட்டை பண்ணப்பட்டிருக்கலாம் அதினாலே நீங்கள் சோர்ந்து போகாதிருங்கள். ஞானமே பிரதானம் என காண்கிறோம்.

செத்த ஈக்கள் மத்தியில் உயிருள்ள ஈக்கள் இருப்பதைப்போல கர்த்தருடைய சபையில் செத்தவர்கள் மத்தியில் உயிருள்ளவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடையவர்கள் ஜீவனுடையவர்கள் என்றே சொல்லவேண்டும். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு எத்தனையோ பாடுகள் பிரச்சனைகள் வந்தது. அத்தனை பாடுகளிலும் பிரச்சனைகளிலும் அவன் சோர்ந்துபோகாமல் கர்த்தருடைய நாமத்தை பறைசாற்றிக்கொண்டு வந்தான்.

ஒரு முறை "அந்தியோகியாவிலும் இக்கோனியாவிலுமிருந்து சில யூதர்கள் வந்து, ஜனங்களுக்குப் போதனைசெய்து, பவுலைக் கல்லெறிந்து, அவன் மரித்துப்போனானென்று எண்ணி, அவனைப் பட்டணத்துக்கு வெளியிலே இழுத்துக்கொண்டுபோனார்கள். சீஷர்கள் அவனைச் சூழ்ந்துநிற்கையில், அவன் எழுந்து, பட்டணத்திற்குள் பிரவேசித்தான். மறுநாளில் பர்னபாவுடனேகூடத் தெர்பைக்குப் புறப்பட்டுப்போனான்" என காண்கிறோம் (அப்.14:19,20).

பவுலுக்கு வந்த பிரச்சனை நமக்கு வந்தால் எத்தனைபேர் கிறிஸ்தவத்தில் நிலைத்திருப்போம்? சில சிறு பாடுகள் வந்தவுடன் சோர்ந்துபோய் பின்வாங்கிப்போகிறார்கள். பவுல் மறித்துப்போனான் என்று எண்ணினார்கள். அந்த அளவு அவன் மீது கல் வீசப்பட்டிருக்கிறது. ஆனால் அவனை கர்த்தர் பெலப்படுத்தினார். சுவிசேஷத்தின் மீதுள்ள தாகத்தினாலும், அவனுடைய வாஞ்சையினாலும் அவர்கள் அடித்த கல் அவனுக்கு ஒன்றும் பெரியதாக தெரியவில்லை. ஆண்டவருடைய அன்பு அவனை நெருக்கி ஏவினதினால். பர்னபாவுடன் தெர்பைக்கு சென்று ஊழியம் செய்தான். இன்றைக்கு ஒவ்வொரு ஊழியக்காரர்களும் பவுலை மாதிரியாக கொள்வார்களேயானால் ஒருநாளும் சோர்ந்துபோகார்கள்.

"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்; துன்மார்க்கரோ தீங்கிலே இடறுண்டு கிடப்பார்கள்" (நீதி.24:16). பவுல் ஒரு நீதிமானாக இருந்தபடியால் அவன் திரும்பவும் எழுந்து ஊழியம் செய்தான். மாம்சத்தில் இருக்கும்வரை ஒவ்வொருவருக்கும் பெலவீனம் சோர்வுகள் வரும். ஆனாலும் கர்த்தருடையவர்கள் அதாவது இயேசுவின் இரத்தத்தினால் நீதிமான்களாக்கப்பட்டவர்கள் ஏழுதரம் விழுந்தாலும் அவருடைய அன்பை நினைத்து மீண்டும் மீண்டும் எழுந்து கர்த்தருக்கு சாட்சியாக நிலைப்பார்கள்.

நீங்கள் எந்நிலைமையில் இருக்கிறீர்கள்? இந்த உலகத்தில் நீங்கள் வாழும் வாழ்க்கைதான் உங்களுக்கு சாட்சியாக பரலோகத்தில் தேவனுடைய நியாயத்தீர்ப்பில் வந்து சாட்சிசொல்லப்போகிறது. இதில் சாக்குபோக்கு சொல்ல இடமில்லை. ஆகையால் ஒவ்வொரு நாளும் ஜீவனுள்ளவர்களாக இருக்க பிரயாசப்படுங்கள். மரித்துப்போன எலிசாவின் கல்லறையில் போட்ட பிரேதம் உயிரடைந்தது (2இரா.13:21). அநேகருடைய கல்லறையில் புல்லுகள் கூட முளைப்பதில்லை. ஆக, இந்த எலிசா தேவனுடைய மனுஷனாக எந்த அளவு தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவனாக வாழ்ந்திருந்தால். அவனுடைய கல்லறையில் போட்ட பிரேதம் எழுந்திருக்கும் என்பதை சற்று சிந்தித்துப் பாருங்கள்.

பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "இந்த வார்த்தை உண்மையுள்ளது; என்னவெனில், நாம் அவரோடேகூட மரித்தோமானால், அவரோடேகூடப் பிழைத்துமிருப்போம்" என்கிறார் (2தீமோ.2:11). அவரோடேகூட உயிரோடு எழுப்பப்பட விரும்புகிற ஒருவர் முதலாவது அவரோடு கூட மரிக்க வேண்டும் அப்பொழுது தான் அவரோடேகூட பிழைக்கும் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும். அவருக்காக ஒரு நஷ்டத்தைக்கூட அநுபவிக்காத ஒருவர், அவருக்காக கடுகளவு இரத்தம் சிந்தாத ஒருவர் எப்படி அவரோடு எழுந்திருக்க முடியும். அன்பானவர்களே, அப்போஸ்தலர்களும் முதல் நூற்றாண்டு கர்த்தருடைய சீஷர்களும் அவருடைய நாமத்திற்காக அநேக பாடுகளை அநுபவித்தனர். இன்று நீங்கள் கர்த்தருக்காக பட்ட பாடுகள் என்னவென்பதை எண்ணிப்பாருங்கள். நாம் அவரோடேகூடப் பாடுகளைச் சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம்; என்று நம்மை பவுல் உற்சாகப்படுத்துகிறார். பாடுகள் இல்லையென்றால் அது கிறிஸ்தவ வாழ்க்கையில்லை என்றே சொல்ல வேண்டும்.

வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தை எழுதின யோவான் சொல்லும்போது; "அன்றியும் நான் சிங்காசனங்களைக் கண்டேன்; அவைகளின்மேல் உட்கார்ந்தார்கள்; நியாயத்தீர்ப்புக் கொடுக்கும்படி



அவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது இயேசுவைப் பற்றிய சாட்சியினிமித்தமும் தேவனுடைய வசனத்தினிமித்தமும் சிரச்சேதம்பண்ணப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களையும், மிருகத்தையாவது அதின் சொருபத்தையாவது வணங்காமலும் தங்கள் நெற்றியிலும் தங்கள் கையிலும் அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமலும் இருந்தவர்களையும் கண்டேன். அவர்கள் உயிர்த்துக் கிறிஸ்துவுடனேகூட ஆயிரம் வருஷம் அரசாண்டார்கள். மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை.

இதுவே முதலாம் உயிர்த்தெழுதல். முதலாம் உயிர்த்தெழுதலுக்குப் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான்; இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை; இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடேகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்" (வெளி.20:4-6).

இப்படிப்பட்ட பாக்கியத்தை இப்பூமியில் பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானத்திலே அவரோடுகூட அடக்கம் செய்யப்பட்டு பின்பு அவரோடுகூட உயிர்ப்பிக்கப்பட்டு, சாட்சியுள்ளவர்களாக இருக்கிறவர்கள். அவரோடுகூட அவருடைய ராஜ்யத்தில் வாழுகிறார்கள். இவர்களுக்கு இரண்டாம் மரணம் இல்லை.

**கேள்வி**

**உயிரோடிருந்து கர்த்தரை விசுவாசிக்கிறவன் என்றென்றைக்கும் மரியாமல் இருப்பானா?**

ஆம், "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும், என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (யோவா.11:25,26). அவரை விசுவாசிக்கிற ஒவ்வொருவரும் மரித்தாலும் எழுப்பப்படுவார்கள். ஆகையால் கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்று காண்கிறோம்.

அவர் ஒருவரே உயிர்த்தெழுதலில் முதலாவதாக இருப்பவர். அவரை எழுப்பின கர்த்தர் அவரோடு நம்மையும் எழுப்புவார். இந்த நம்பிக்கை உங்களில் இருக்குமானால் நீங்கள் கர்த்தருடைய நாளில் உயிர்ப்பிக்கப்படுவீர்கள். உயிரோடிருந்து ஆண்டவரை விசுவாசிக்கிறவர் களுக்கு இரண்டாம் மரணம் இல்லை. அவர்கள் உயிர்த்து கிறிஸ்துவோடு அவர் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதைப்போல இவர்களும்

கர்த்தருடைய குடும்பத்தில் நித்திய நித்தியமாக என்றென்றும் நிலைத்திருப்பார்கள். இந்தவிதமான பாக்கியத்தை நீங்களும் பெற்றுக்கொள்ள இன்றே உங்களுடைய ஆவி ஆத்துமா சரீரத்தை கர்த்தருக்கு ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது என்றென்றும் கர்த்தரோடு ஜீவனுள்ளவர் களாயிருப்பீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 30. கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்

## The Lord Gives Wisdom

இந்த உலகத்தில் வாழ்வதற்கு ஞானம் மிகவும் முக்கியமாக இருக்கிறது. இந்த ஞானத்தை கொடுப்பவர் கர்த்தர் என்று நாம் திருமறையில் படிக்கிறோம். "கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்; அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்" (நீதி.2:6). நீங்கள் தேவனிடத்தில் இந்த ஞானத்தையும் அறிவையும் பெற்றுக்கொண்டிருக்கிறீர்களா? முற்பிதாக்காளின் காலத்தில் இந்த ஞானத்தைப் பெற்றுக்கொண்ட தானியேல், சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்ற நான்கு புருஷரைப் பற்றி நாம் பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம். "இந்த நாலு வாலிபருக்கும் தேவன் சகல எழுத்திலும் ஞானத்திலும் அறிவையும் சாமர்த்தியத்தையும் கொடுத்தார்; தானியேலைச் சகல தரிசனங்களையும் சொப்பனங்களையும் அறியத்தக்க அறிவுள்ளவனாக்கினார்" (தானி.1:17). இவர்களுடைய நாட்களில் அநேக கல்விமான்கள் அறிஞர்கள் இருந்தார்கள். ஆனாலும் அவர்ளுக்கு மேலான ஞானத்தையும், சகல எழுத்திலும் தேர்ச்சியடையக்கூடிய விசேஷித்த அறிவையும் ஞானத்தையும் இந்த நான்குபேருக்கும் தேவன் கொடுத்தார்.

ஆகையால் இவர்களுடைய நாட்களில் ஆட்சிசெய்துகொண்டு வந்த ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் மிகவும் ஆச்சரியப்பட்டுப்போனான். இவர்களைப்போல வேறொருவரும் காணப்படவில்லை; ஞானத்துக்கும் புத்திக்கும் அடுத்த எந்த விஷயத்தில் ராஜா அவர்களைக்கேட்டு விசாரித்தானோ, அதிலே தன் ராஜ்யம் எங்குமுள்ள சகல சாஸ்திரிகளிலும் ஜோசியரிலும் அவர்களைப் பத்து மடங்கு சமர்த்தராகக் கண்டான்.

ஆகையால் இவர்கள் ராஜசமுகத்தில் நின்றார்கள். கர்த்தர் கொடுக்கும் ஞானம் எவ்வளவு பெரியது என்று பார்த்தீர்களா? அநேகர் தேவனுடைய ஞானத்தை அசட்டைசெய்கிறார்கள். பிள்ளைகளை கர்த்தருடைய ஞானத்திற்கு நேரே வழிநடத்த தவறிவிடுகிறார்கள். தமக்கும் தம்முடைய வசனத்திற்கும் கீழ்ப்படிகிற யாவருக்கும் கர்த்தர் ஞானத்தை தருகிறார். ஆண்டவர் இயேசு ஊழியத்திற்காக பன்னிரண்டு சீஷர்களை தேர்வு செய்தார். பின்பு அவர்



பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகையில் எருசலேமிலே காத்திருக்கும் படியாக சொல்லியிருந்தார்.

அந்தப்படியாக அப்போஸ்தலர்கள் பெந்தெகொஸ்தே நாளில் எருசலேமிலே காத்திருந்தனர். அப்பொழுது அவர்களுக்கு பரிசுத்த ஆவியின் வரம் கொடுக்கப்பட்டது. "அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டு ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள்" (அப்.2:4). அப்பொழுது வானத்தின்கீழிருக்கும் சகல தேசத்தாரிலுமிருந்து வந்த தேவபக்தியுள்ள யூதர்கள் அப்பொழுது எருசலேமிலே வாசம்பண்ணினார்கள். தங்கள் தங்கள் பாஷையில் அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள். எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து; இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா? அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? என்று ஆச்சரியப்பட்டனர்.

கர்த்தர் நம்முடைய ஊழியத்திற்காக இவர்களை பிரித்தெடுத்து உலகமெங்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படும்படியான வேலைக்கு இவர்களுக்கு விசேஷித்த ஞானத்தை கொடுத்தார். இவர்கள் உலகமெங்கும் ஜனங்கள் பேசுகிற பாஷைகளை பேசும் ஞானத்தை தேவனுடைய சமுகத்திலிருந்து பெற்றுக்கொண்டார்கள். இதைப்பார்த்த மற்ற தேசங்களிலிருந்து வந்த யூதர்கள் கலிலேயராகிய இவர்கள் நம்முடைய பாஷைகளை பேசுகிறார்களே என்று ஆச்சரியப்பட்டனர். அன்பானவர்களே, தேவன் தமக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்கு ஞானத்தைக் தருகிறார்.

இரண்டாவது இந்த "ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்" என்று நீதி.3:13-ல் வாசிக்கிறோம். மனிதர்கள் பெரும்பாலும் சம்பாத்தியத்திலே தங்களுடைய வாழ்நாட்களை கழித்துவிடுகிறார்கள். ஞானத்தையும், புத்தியையும் சம்பாதித்தார்களா என்றால் இல்லை. சம்பாதித்த பணத்தை ஞானமாய் பயன்படுத்த தவறிவிடுகிறார்கள். முதலாவது ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள் என்று காண்கிறோம். எந்த ஒரு பொருளையும் தேடினால்தான் கண்டடைய முடியும். ஞானம் வீதியில் விற்கும்பொருள் அல்ல அதை நாம் தேடி கண்டுகொள்ள வேண்டும்.

சோம்பேறி இவைகளை நாடமாட்டான். அவனோ உள்ளது போதும் என்று நித்திரை செய்வான். "சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில்போய், அதின்

வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்" என வேதம் போதிக்கிறது (நீதி.6:6). மிகவும் அற்பமான சந்துவாக இருந்தும் எறும்பு சுறுசுறுப்புடன் வேலைசெய்கிறது. ஆகையால் சோம்பலான மனிதன் எறும்பினிடத்தில் ஞானத்தைக் கற்றுக்கொள்ள அறிவுறுத்தப்படுகிறான். ஞானத்தைக் கற்பதற்கு யூனிவர்சிட்டி செல்ல வேண்டியதில்லை. உங்கள் வீட்டு அருகாமையில் உள்ள அல்லது உங்கள் வீட்டிலே உள்ள எறும்பு புற்றை நீங்கள் கவனித்துப் பார்த்து ஞானத்தை கற்றுக்கொள்ளலாம். தேவன் படைத்த ஒவ்வொன்றிலுமிருந்து நாம் ஒவ்வொரு காரியத்தைக் கற்றுக்கொள்ள முடியும். தேவன் சகலத்தையும் ஞானமாக படைத்திருக்கிறார். அவர் சர்வ ஞானி என காண்கிறோம். "ஞானமே முக்கியம், ஞானத்தை சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்" (நீதி.4:7).

என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள் என்ற வாக்கியத்தைக் கவனியுங்கள். உலகத்திலே எதை வேண்டுமானாலும் சம்பாதித்துவிடலாம் ஆனால் புத்தியை சம்பாதிப்பது கடினம். ஆகையால் என்னத்தைச் சம்பாதித்தாலும புத்தியைச் சம்பாதித்துக்கொள் என திருமறை நமக்கு ஆலோசனை சொல்லுகிறது. இந்த ஞானத்தையும் அறிவையும் புத்தியையும் கடையிலே போய் வாங்க முடியாது.

அப்படி கடைகளில் வாங்கும் ஒரு பொருளாக இருந்தால் இன்று வசதி படைத்தவர்கள்தான் இப்பூமியில் வாழமுடியும். இவைகளை கர்த்தர் தம்முடைய கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளார். அவரிடமே இவைகளை நாம் பெற்றுக்கொள்ளமுடியும். ஆகையால் கர்த்தரை நோக்கி வேண்டிக் கொள்ளுங்கள் அவர் உங்களுக்கு ஞானத்தையும் அறிவையும் புத்தியையும் கட்டளையிடுவார். சாலொமோனைப் பற்றி நாம் வேதத்தில் படிக்கிறோம். அவன் தேவனிடத்தில் ஞானத்தை கேட்டுபெற்றுக்கொண்டான். அவன் தேவனிடத்தில் கேட்கும்போது உலகத்தையும் உலகத்தில் உள்ள பொருள்களையும் கேட்கவில்லை. இவையெல்லாவற்றையும் ஆண்டுகொள்ள ஞானமுள்ள இருதயத்தை அடியேனுக்குத்தாரும் என்று கேட்டான் (1இரா.3:9). எல்லாம் இருந்து ஞானமில்லையென்றால் அவைகளை எப்படி ஆளுவது?

ஆகையால் சாலொமோன் இந்த விஷயத்தில் கர்த்தரிடம் நலமாக காரியத்தைக் கேட்டான். இன்றைக்கு நீங்கள், உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைகளுக்கும் எவைகளை நாடிக்கொண்டிருக்கிறீர்கள்? உலகமும் உலகத்தில் உள்ளவைகளும் ஒருநாளில் அழிந்துபோகும்.

இப்படி அழிந்துபோகும் பொருட்களுக்காக ஒவ்வொரு நாளும் நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? என்றென்று அழியாத ஞானத்தை கர்த்தர் கொடுக்கிறார். அந்த ஞானத்தைப் பெற்றுக்கொண்டு கர்த்தரை அறிகிற அறிவில்



வளர்ச்சியடையுங்கள். ஞானமுள்ள மகன் தகப்பனை சந்தோஷப்படுத்துகிறான். அதைப்போல நீங்கள் ஞானமுள்ள பிள்ளைகளாக இருந்து தேவனுடைய சித்தம் செய்ய ஒவ்வொருநாளும் நாடுங்கள். சாலொமோனைப்போல ஞானத்தை பெற்றவர்கள் ஒருவரும் இல்லை என்று சொல்லலாம். அந்த அளவு ஞானத்தை சாலொமோனுக்கு கர்த்தர் கொடுத்தார். சாலொமோனின் ஞானத்தைக் குறித்துக் கேள்விப்பட்ட பூமியின் சகல ராஜாக்களும் நானா ஜாதியான ஜனங்களும் அவனுடைய ஞானத்தைக் கேட்கிறதற்காக வந்தார்கள். "அவன் மூவாயிரம் நீதிமொழிகளைச் சொன்னான்; அவனுடைய பாட்டுகள் ஆயிரத்து ஐந்து" (1இரா.4:32). இந்த ஞானம் அவனுடைய ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்தினது. நீங்களும் உங்களுடைய குடும்பமும் இவ்விதமாக சாலொமோனைப்போல ஆசீர்வதிக்கப்பட ஞானத்திற்கு முதலிடம் கொடுங்கள். இவைகளை தேவனிடத்திலிருந்து பெற்று ஞானமாய் வாழ கற்றுக்கொள்ளுங்கள்.

மூன்றாவது "ஞானவான்களுடைய போதகம் ஜீவ ஊற்று; அதினால் மரணக்கண்ணிகளுக்குத் தப்பலாம்" என்று நீதி.13:14-ல் படிக்கிறோம். ஞானமுள்ள போதகத்தை மூடர் அசட்டை செய்கிறார்கள். ஆனால் அந்த போதகம் ஜீவ ஊற்றாக இருக்கிறது. அது ஜீவனுக்கு நேரே வழிநடத்துகிறது. ஜீவகாலமெல்லாம் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் அதினாலே பெற்றுக்கொள்ளலாம். மேலும் மரணக்கண்ணிகளுக்கு அவைகள் நம்மை தப்புவிக்கும். நினிவே பட்டணத்து மக்கள் அக்கிரமங்களால் தங்களை கெடுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு யோனா மூலமாக தேவன் ஒரு எச்சரிப்பின் செய்தியை அனுப்பினார்.

இந்த யோனா ஒரு நாள் பிரயாணப்பட்டு நினிவேயின் மக்களுக்கு கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தான். இன்னும் நாற்பது நாள் உண்டு நினிவே கவிழ்க்கப்பட்டுபோம் என்று பிரசங்கித்தான். இந்த போதகத்தைக் கேட்ட "நினிவேயிலுள்ள ஜனங்கள் தேவனை விசுவாசித்து, உபவாசஞ்செய்யும்படிக் கூறினார்கள்; சிறியோர் முதல் பெரியோர்மட்டும் இரட்டுடுத்திக்கொண்டார்கள். இந்தச் செய்தி நினிவேயின் ராஜாவுக்கு எட்டினபோது, அவன் தன் சிங்காசனத்தை விட்டு எழுந்து, தான் உடுத்தியிருந்த உடுப்பைக் கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான். மேலும் ராஜா, தானும் தன் பிரதானிகளும் நிர்ணயம்பண்ணின கட்டளையாக, நினிவேயிலெங்கும் மனுஷரும் மிருகங்களும், மாடுகளும் ஆடுகளும் ஒன்றும் ருசிபாராதிருக்கவும், மேயாமலும் தண்ணீர் குடியாமலும் இருக்கவும், மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும்,

அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம் தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள். யாருக்குத் தெரியும்; நாம் அழிந்து போகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிரகோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான். அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைக் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்று சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு அதைச் செய்யாதிருந்தார்'' (யோனா 3:5-10).

யோனாவின் ஞானமான போதகத்தை நினிவேயின் ஜனங்கள் ஏற்றுக்கொண்டு மனந்திரும்பியபடியால் அவர்கள் மரணகண்ணிக்கு தப்புவிக்கப்பட்டார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு சகோதரனே சகோதரியே, நீயும் ஞானமான போதகத்திற்கு உனது செவியை சாய்த்து செவிகொடுத்து, உங்களுடைய பொல்லாத வழியை விட்டு மனந்திரும்புகள். அப்பொழுது நீங்களும் மரணக் கண்ணிக்கு விடுவிக்கப்படுவீர்கள். அப்பொழுது உங்களுடைய ஆத்துமா காக்கப்படும். அப்பொழுது நித்தியமான வாழ்வை தேவனிடத்தில் பெற்றுக்கொள்வீர்கள்.

''ஞானிகளோடே சஞ்சரிக்கிறவன் ஞானமடைவான்; மூடருக்குத் தோழனோ நாசமடைவான்'' என்று நீதி.13:20-ல் வாசிக்கிறோம். நீங்கள் நினிவே பட்டணத்து மக்களைப்போல உள்ளவர்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்களா? அந்தப்பட்டணத்து மக்கள் ஏகோபித்து யோனாவின் பிரசங்கத்தை ஏற்றுக்கொண்டார்கள். நீங்கள் ஞானமுள்ள ஜனங்களோடே வாழ்வீர்கள் என்றால் நீங்களும் ஞானமடைவீர்கள். ஞானமற்ற சோதோம் கொமோரா பட்டணங்களில் வாழ்ந்த மக்களைப்போல உள்ள மக்கள் மத்தியில் வாழ்வீர்கள் என்றால் லோத்தைப்போல தேவ வார்த்தைக்கு செவிகொடுத்து காக்கப்படுங்கள். இல்லையேல் அவர்களோடு ஒருமித்து நீங்களும் அழிந்துபோவீர்கள். ஏனெனில் மூடருக்குத் தோழனோ நாசமடைவான் என மேற்கண்ட வசனத்தில் படிக்கிறோம். ஆகையால் ஞானத்தையும் புத்தியையும் நாடுங்கள்.

**கேள்வி**

**ஞானம் எந்த சூழ்நிலையிலும் நம்மை காப்பாற்றுமா?**

ஆம், ஞானம் எந்த சூழ்நிலையிலும் நம்மை காப்பாற்றும். ''ஞானத்தை அறிந்துகொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்; அதைப் பெற்றுக்கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண்போகாது'' என்று நீதி.24:14-ல் வாசிக்கிறோம். உலகத்திலே பிறந்த



ஒவ்வொருவரும் எதை அறிகிறார்களோ அல்லது அறியவில்லையோ, முதலாவது ஞானத்தை அறிந்துகொள்ள வேண்டும். அது கிடைக்கும் இடம் எது? அது உருவாகும் இடம் எது? அதைக் கொடுப்பவர் யார்? என்பதை அறிந்துகொள்ளவேண்டும். மனிதர்கள் பெரும்பாலும் உலகக்காரியங்களுக்கே முக்கியத்துவம் கொடுத்து ஞானத்தை அறியாமலே போகிறார்கள். பிள்ளைகளுக்கு நலமான காரியங்களை செய்ய பெற்றோர் விரும்புகிறார்கள். நல்லதுதான். அந்த நலமான காரியம் என்ன என்பதை சற்றும் சிந்திப்பதில்லை. நலமில்லாத காரியத்தை விலைகொடுத்து வாங்கி பிள்ளைகளுக்கு கொடுக்கிறார்கள்.

இலவசமாக தேவன் கொடுக்கும் ஞானத்தையும் அறிவையும் பெற்றுக்கொள்ள பிள்ளைகளை பயிற்றுவிப்பதில்லை. ஆகையால் அநேகர் ஞானமற்றவர்களாவே போய்விடுகிறார்கள். அன்பு வானொலி நண்பரே நீ உன் பிள்ளைகளுக்கு தேவன் கொடுக்கும் ஞானத்தை பெற்றுக் கொள்ள வழியை ஏற்படுத்திக்கொடு. அப்பொழுது அவன் அந்த ஞானத்தைப் பெற்று எச்சூழ்நிலையிலும் காக்கப்படுவான். அது அவனுடைய ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும். அது அவனுடைய வாழ்க்கையின் முடிவில் உதவும். உன் நம்பிக்கையும் வீண்போகாது. இன்றே இவைகளை உங்களுடைய பிள்ளைகளுக்கு எடுத்துச் சொல்லுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 31. கர்த்தர் கொடுப்பதும், பிசாசு கொடுப்பதும்

## The Things God Give and Devil Give

முதலாவது கர்த்தர் கொடுக்கும் மூன்று காரியங்களைப் பற்றி தியானிப்போம். ''இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரியது'' (1கொ.13:13). இவைகளை கர்த்தர் கொடுக்கின்றாரா? என்ற கேள்வி உங்களில் எழும்பும். ஆம், இவைகள் கர்த்தர் நமக்கு கொடுக்கும் ஆவிக்குரிய ஆயுதங்கள் என்றே சொல்லலாம். உலகப்பிரகாரமான ஆயுதங்களை எடுக்கிறவர்கள் கிறிஸ்தவர்களாக இருக்கமுடியாது. ஆண்டவரை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் தேவையானவற்றை ஆண்டவர் நம்மில் உண்டாக்குகிறார். ''மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்'' என்கிறார் பவுல் (எபி.12:1).

**முதலாவது நம்மிலே விசுவாசத்தை** துவக்குகிறவரும் முடிக்கிறவரும் ஆண்டவர் இயேசுவே என்று காண்கிறோம். உங்களில் ஆண்டவர் துவக்கியுள்ள அந்த விசுவாசத்தை நீங்கள் முடிவுபரியந்தமும் காத்துக்கொள்ளவேண்டிய பொறுப்புடையவராயிருக்கிறீர்கள். இந்த விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. காணாததை விசுவாசிக்கும் விசுவாசம் ஆபிரகாமிடம் இருந்தது. அவர் விசுவாசிகளின் தகப்பன் என்று அழைக்கப்பட்டார். விசுவாசமுள்ளவர்கள் விசுவாசிகளின் தகப்பனாகிய ஆபிரகாமோடு சேர்ந்து ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். கர்த்தர் உங்களில் துவக்கும் இந்த விசுவாசத்தை முடிவுபரியந்தமும் காத்து ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**இரண்டாவது நம்பிக்கை.** இந்த நம்பிக்கையை ஆண்டவர் நம்மில் ஏற்படுத்துகிறார். ஆண்டவருடைய பிள்ளைகள் நம்பிக்கையை தங்களில் வளர்த்துக்கொள்கிறார்கள். பேதுரு நம்பிக்கையை பற்றி சொல்லும்போது; "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம்பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக்குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்" என்கிறார் (1பேது.3:15). ஆண்டவர் எவரையும் பலவந்தம்பண்ணி, என்பின்னே வாருங்கள் என்று அழைக்கவில்லை. "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்" என்றார். எனவே பேதுரு மேற்கண்ட வசனத்தில் குறிப்பிடும்போது உங்களிலிருக்கிற நம்பிக்கையை குறித்து என்று எழுதுவதை கவனியுங்கள். நீங்கள் எந்த அளவு அவரை ஏற்றுக்கொண்டு நம்பிக்கையுள்ளவர்களாக இருக்கிறீர்கள்? அந்த நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக்கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும், வணக்கத்தோடும், உத்தரவுசொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள் என்று எழுதுகிறார். ஒருவர் நம்முடைய நம்பிக்கையை பற்றிகேட்கும்போது அது எப்படிப்பட்டது என்பதை நாம் சொல்லக்கூடிய விதத்திலிருந்தே தெரிந்துகொள்வார்கள். இந்தவிதமான நம்பிக்கை வேதவசனங்களைப்படிப்பதன் மூலமாகவும், அநேக சாட்சிகள் மூலமாகவும், கர்த்தராலும் நமக்கு உண்டாகிறது. இந்த நம்பிக்கை நம்மை நித்தியத்திற்கு நேரே வழிநடத்தும்.

**மூன்றாவது அன்பு.** விசுவாசம், நம்பிக்கை, இம்மூன்றில் அன்பே பெரியது என வாசித்தோம். ஆம், அன்பு கர்த்தருடைய கட்டளையின் நிறைவாக இருக்கிறது. தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில்லாதவன் தேவனை அறியான் என்றெல்லாம் படிக்கிறோம். "அவருடைய வசனத்தைக்



கைக்கொள்ளுகிறவனிடத்தில் தேவ அன்பு மெய்யாகப் பூரணப்பட்டிருக்கும்; நாம் அவருக்குள் இருக்கிறோ மென்பதை அதினாலே அறிந்திருக்கிறோம்" (1யோவா.2:5).

அன்பு எங்கே தங்கும்? எங்கே குடிகொள்ளும்? தேவனுடைய வசனத்தை யார் கைக்கொள்ளுகிறார்களோ அவர்களிடத்தில் தேவனுடைய அன்பு மெய்யாகவே பூரணப்பட்டிருக்கும் என்று கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது. அப்படிப்பூரணப்பட்டிருப்பவர்கள் அவருக்குள் அதாவது கர்த்தருக்குள் இருக்கிறார்கள் என்பதை அதினாலே அறிந்துகொள்ளலாம். இதினாலே தேவனுடைய பிள்ளைகளை நாம் அடையாளம் கண்டுகொள்ளலாம்.

தேவசமுகத்திலிருந்து கிடைக்கும் இந்த விசுவாசத்தையும், நம்பிக்கையையும், அன்பையும் பெற்றுக்கொண்டு உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருக்க பிரயாசப்படுங்கள். அப்பொழுது எல்லாபுத்திக்கும் மேலான சமாதானம் உங்களை ஆண்டுகொள்ளும். இந்த மூன்றையும் பெற்றுக்கொண்டு தேவனை அறிகிற அறிவிலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவிலும் வளர்ச்சியடையுங்கள்.

உண்மைக்கு எதிராக பொய் இருப்பதைப்போல பிசாசு மூன்று காரியங்களை உலகத்தில் விதைத்து வைத்திருக்கிறான். அவைகள் என்னவென்றால்; "மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்" (1யோவா.2:16). அவைகளில் ஒன்று மாம்சத்தின் இச்சை. இந்த மாம்சத்தின் இச்சைக்கு அடிபணிந்தவர்கள் தேவனுடைய கட்டளைகளை தள்ளிவிட்டு, பிசாசின் உபதேசங்களுக்குச் செவிகொடுத்து வீழ்ந்துபோகிறார்கள். மாம்சத்தின் இச்சை மனதை மயக்கக்கூடியதாக இருக்கிறது. இதில் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட அநேகர் வீழ்ந்துபோய் பாவத்தினால் பிடிபட்டார்கள் என பரிசுத்த வேதாகமத்தில் படிக்கிறோம்.

சத்தியத்திற்கு எதிராக இருக்கக்கூடிய இந்த மாம்சத்தின் இச்சைக்கு அநேகர் பலியாகிறார்கள். இதைக்குறித்து சிந்திக்கிறவர்கள் குறைவாகவே இருக்கிறார்கள். **மாம்ச இச்சை** என்று சொல்லும்போது மாம்சத்தை அதிகமாக இச்சித்து சாப்பிடுவது அல்ல. மாம்சத்தின் கிரியைகளைக் குறித்து நாம் படிக்கிறோம்; "அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள், பொறாமைகள்,

கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்" (கலா.5:19-21).

இவைகள் மாம்சத்தின் கிரியைகளாக இருக்கிறது. இவைகளில் ஒன்று இருந்தாலும் அவன் ஆவிக்குரியவன் அல்ல மாம்சத்தின் இச்சைக்கு கீழ்ப்படிந்தவன். பிசாசு அவனை ஆண்டுகொள்ளுவான். அவனுடைய முடிவு மரணம் என்று காண்கிறோம். பிசாசு கொடுக்கும் ஒவ்வொன்றும் முடிவில் மரணத்தைக் கொண்டுவரும். அவனுடைய முடிவும் அழிவாகவே இருக்கிறது. அவன் தேவனுடைய நியமத்திற்கு எதிர்த்துநிற்கிறான். தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் களைகளை விதைத்து குழப்பத்திற்குள்ளாக கொண்டுசெல்லுகிறான்.

**இரண்டாவது கண்களின் இச்சை.** கண்களை தேவன் நலமான காரியத்திற்காக மனிதனுக்கு உண்டாக்கினார். ஒருவனுக்கு கண்ஒளி இல்லையென்றால் அவனால் ஒன்றையும் பார்க்கமுடியாது. கண் சரீரத்தின் விளக்காக இருக்கிறது. இவைகளை கர்த்தர் மனிதனுக்கு உண்டுபண்ணினார். இந்த கண்களை நலமான காரியங்களுக்கு பயன்படுத்தும்போது நலமானவைகளைப் பெற்றுக்கொள்வோம். ஆனால் பிசாசு கண்களின் இச்சையை தூண்டும் சில காட்சிகளை கண்களுக்கு முன்பாக வைக்கிறான் இதினாலே அநேகர் கண்களின் இச்சைக்கு அடிபணிந்துவிடுகிறார்கள். இதில் நம்முடைய ஆதி தாய் ஏவாள் முதலாவது வீழ்ந்தாள் என காண்கிறோம்.

"அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்" (ஆதி.3:6). ஏவாள் தேவனால் விலக்கப்பட்ட கனி பார்வைக்கு இன்பமாயிருக்கிறது என்று கண்டாள். இன்றைக்கு அநேக தேவனுடைய பிள்ளைகள் விழ்ந்துபோவது கண்களின் இச்சையினால்தான். அது நன்றாக இருக்கிறது, இது நன்றாக இருக்கிறது என்று அங்கும் இங்கும் பார்த்து அநேகர் கெட்டுப்போகிறார்கள். அவைகளை பார்க்குமுன் தேவன் நமக்கு கொடுக்கும் எச்சரிப்பை பார்ப்போமானால் நாம் பிசாசு விதைத்து வைத்திருக்கும் காரியங்களை தேவன் நமக்கு கொடுத்திருக்கும் ஆவிக்குரிய கண்களினால் அறிந்துகொள்ளலாம்.

அவைகளை பார்க்கக்கூடாது என்று சிலருடைய கண்களை பிசாசு குருடாக்கி வைத்திருக்கிறான். அப்படிப்பட்டவர்களிடம் நாம் மிகவும் சாந்தமாக



உபதேசிக்க வேண்டியவாகளாக இருக்கிறோம். பிசாசு கொடுக்கும் இந்த கண்களின் இச்சையின் முடிவு என்ன? இதனுடைய முடிவு அழிவு. தேவன் உண்டாக்கின ஒவ்வொன்றும் குற்றமற்றதாக இருக்கும்படி காக்கப்படவேண்டும். ஆத்துமாவில் சரியாயிருந்தால் போதும் என்ற போதனை ஜனங்கள் மத்தியில் இருக்கிறது. ஆவி ஆத்துமா சரீரம் முழுவதும் குற்றமற்றதாயிருக்கும்படி காக்கப்படுவதாக என்று வேதத்தில் வாசிக்கிறோம்.

**மூன்றாவது ஜீவனத்தின் பெருமை.** இந்த பெருமை பிசாசினால் உலகத்தில் விதைக்கப்பட்டிருக்கிறது. பிசாசு பெருமையுள்ளவன். ஆகையால் ஆண்டவர் இயேசுவைப் பார்த்து என்னைப் பணிந்துகொள் இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்றான். அப்பாலே போ சாத்தானே என்று சொல்லி அவனை ஜெயித்தார். இப்படி இயேசுவைப்போல பிசாசை ஜெயிக்க முடியாமல். அவன் கொண்டுவரும் பெருமைக்கு அநேகர் அடிபணிந்துவிடுகின்றனர். "பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (1பேது.5:5). பெருமையுள்ள எந்த மனிதனுக்கும் முதல் எதிராளியாக இருப்பவர் கர்த்தர்.

மனிதன் பெருமைப்படுவதற்கு என்ன இருக்கிறது? ஒரு மனிதன் ஒருபெரிய கோபுரத்தைக் கட்டுகிறான். அவர்தான் இந்த கோபுரத்தை கட்டியவர் என்று, அவனை பெருமையாக ஜனங்கள் பேசுவார்கள். நான் கேட்கிறோன் அவர் அந்த கோபுரத்தை கட்டுவதற்கு பொருட்களை எங்கே சேகரித்தார். இந்த பூமியிலிருந்துதானே சேகரித்தார். இல்லாதவைகளிலிருந்த அவர் சேகரித்தாரா? இல்லையே ஏற்கனவே தேவனால் உண்டாக்கப்பட்ட பொருட்களிலிருந்து ஒரு கோபுரத்தை வடிவமைத்து இருக்கிறார். அவ்வளவு தான். அவர் ஒன்றும் பெரியவர் அல்ல. பெருமைக்குரியவரும் அல்ல. எல்லா புகழும் தேவன் ஒருவருக்கே சேரவேண்டும்.

நாம் மண்ணாயிருக்கிறோம் என்பதை நினைவுகூரவேண்டும். மண்ணாகிய நாம் தேவனுடைய பார்வையில் நீதிமான்கள் அல்ல. தேவனே நம்மை பரிசுத்தப்படுத்த வல்லவர். பெருமைக்குரிய பிசாசு உலகத்தில் விழத்தள்ளப்பட்டான். அவனுடைய பெருமை அவனை விட்டு அகலவில்லை. அவன் ஜீவனத்தின் பெருமையை ஜனங்கள் மத்தியில் வைத்து அவர்களை தம்மைப்போல மாற்றுகிறான். இதனுடைய முடிவு அழிவு.

தேவன் கொடுக்கின்ற விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நம்மை நித்தியத்திற்கு வழிநடத்தும் ஆயுதங்களாக நமக்கு இப்பூமியில் உதவும். இவைகளை ஒரு மனிதன் பெற்றுக்கொள்ளும் போது எல்லையில்லா ஆசீர்வாதங்களை பெற்று முடிவில், நித்திய வாழ்க்கையில்

தேவனோடிருப்பான். பிசாசு கொடுக்கும் மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை இவைகளை ஒருமனிதன் பெற்றுக் கொள்ளும்போது அவனுடைய வாழ்வில் அசுத்தம் குடிகொள்ளும். முடிவில் நித்திய அழிவை அடைவான். அங்கே அக்கினி அவியாமலும் புழு சாவாமலும் இருக்கும். அந்த இடத்தில் பங்கடைவான். இன்றே தீர்மானம் செய்யுங்கள். தேவன் கொடுக்கும் மூன்றை பெற்றுக்கொண்டு நித்தியத்தில் தேவனோடு வாழப்போகிறீர்களா? அல்லது பிசாசு கொடுக்கும் மூன்றை பெற்றுக்கொண்டு நித்திய நரகத்தில் பிசாசுடன் அழியப்போகிறீர்களா? இவைகளைத் தெரிந்துகொள்வது உங்களுடைய கரத்திலுள்ளது.

**கேள்வி**

**உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோகுமா?**

ஆம், "உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்" (1யோவா.2:17). உலகத்தில் உண்டான இச்சைகள் பிசாசினால் கொண்டு வந்தவைகள் அவைகள் ஒழிந்துபோம். ஆனால் இந்த உலகத்தில் பிசாசினால் விதைக்கப்பட்ட இவைகளை ஏற்றுக் கொள்ளாது தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவர்கள் என்றென்றைக்கும் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போலிருப்பார்கள்.

அன்பானவர்களே, உலகத்தில் உள்ளளவும், பிசாசு கொண்டுவரும் இச்சைகளுக்கு அடிபணியாது உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள். வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் ஒழிந்துபோகாத ஆண்டவருடைய வசனங்களுக்கு செவிகொடுத்து வாழ்நாளெல்லாம் ஜீவனுள்ள தேவனைப் பற்றிக்கொண்டு, ஜீவனுள்ள வார்த்தையின்படி ஜீவிக்க பிரயாசப்படுங்கள். விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அன்பையும் உங்களுடைய ஆயுதமாக தரித்துகொள்ளுங்கள். கர்த்தர் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும்படி ஜெபிக்கிறோம்.

## 32. கர்த்தருடைய ஊழியக்காரன் எப்படியிருக்கவேண்டும்?

## How Should Be The Lord`s Servant

கர்த்தருக்கு ஊழியம் செய்ய சிலர் ஒப்புக்கொடுக்கிறார்கள் நல்லது தான். ஆனால் அவர்கள் எப்படியிருக்க வேண்டுமென வேதாகமம் போதிக்கிறது. "மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப்



பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள். அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து, மனுஷருக்குகென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ்செய்யுங்கள்" என அப்போஸ்தலனாகிய பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதின நிருபத்தில் வாசிக்கிறோம் (எபே.6:6-8).

உலக வேலைசெய்கிறவர்களுக்கும் கர்த்தருக்கு ஊழியஞ்செய்கிறவர் களுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. அதோடு கர்த்தருடைய ஊழியத்தை ஒப்பிட முடியாது. உலகவேலையில் மனுஷரை பிரியப்படுத்த வேலைசெய்வார்கள். கர்த்தருடைய ஊழியம் அப்படிப்பட்டது அல்ல. கர்த்தருக்கென்று நல்மனதோடே செய்யவேண்டும். ஒரு ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாய் இருக்கக்கூடாது என படிக்கிறோம். "கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும்" (2தீமோ.2:24).

சமாதானத்தை போதிக்கிறவன் சண்டைபண்ணிக் கொண்டிருந்தால் அவன் எப்படி கர்த்தருடைய வசனத்தை மற்றவர்களுக்கு போதிப்பான். மேலும் அவன் போதகசமர்த்தனு மாயிருக்கவும் தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டுமென காண்கிறோம். இவர்களே கர்த்தருடைய ஊழியத்தை செய்ய தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள். மேலும் பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" என எழுதுகிறார் (2தீமோ.2:15).

வெட்கப்படக்கூடிய ஒரு நபர் கர்த்தருக்கு ஊழியம் செய்யமுடியாது. சுவிசேஷத்தைக்குறித்து வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது? அது இரட்சிப்பை உலகமக்களுக்கு கொடுக்கக்கூடியது. அதைக்குறித்த வைராக்கியம், வல்லமையுள்ள சுவிசேஷத்தை எடுத்துச்சொல்வதில் வெளிப்பட வேண்டும்.

"சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு" என காண்கிறோம் (2தீமோ.4:2). சுவிசேஷத்தை சொல்லுவதற்கு நேரத்தையோ காலத்தையோ நோக்கிக்கொண்டிருக்கவேண்டிய அவசியமில்லை. சமயம்

கிடைக்கும்போதெல்லாம் அவன் வாயிலிருந்து வெளிப்படுவது இயேசுவின் மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தியாகிய சுவிசேஷமாக இருக்க வேண்டும்.

மேலும் "உன்னைக்குறித்தும் உபதேசத்தைக் குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக் கொள்ளுவாய்" என்கிறார் பவுல் (1தீமோ.4:16). வேதாகமம் இருபுறமும் கருக்குள்ள பட்டயம் அதைப்பயன்படுத்துவது அவ்வளவு எளிதானதல்ல. கர்த்தருடைய உபதேசத்தைப் போதிக்கும்போது ஒரு ஊழியக்காரன் மிகவும் அந்த உபதேசத்தைக்குறித்து எச்சரிக்கையுள்ளவனாக இருக்கவேண்டும்.

கர்த்தர், அவருடைய ஊழியக்காரர்களை சும்மா வேலைவாங்க விரும்பவில்லை. அவர்களுக்கு அதினால் பிழைப்பு உண்டாக்கி வைத்திருக்கிறார். "அந்தப்படி சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்" (1கொ.9:14). வேலை செய்கிறவன் கூலிக்கு பாத்திரனாயிருக்கிறான். உலக எஜமான்களுக்கு வேலைசெய்கிறவர்கள் அன்றாட படி அவர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அதைப்போல கர்த்தரும் எவரையும் வெறமனே வேலைகொள்ள விரும்பவில்லை. ஆக, சுவிசேஷத்தை அறிவிக்கிற அவர்களுக்கு அந்த சுவிசேஷத்தினாலே பிழைப்பை ஏற்படுத்தியிருக்கிறார் என்று படிக்கிறோம். ஒரு சுவிசேஷகன் பலவந்தமாக ஏற்படுத்தப்படுவதில்லை. அதை அவன் கடமையாக கொள்ளவேண்டும். "சுவிசேஷத்தை நான் பிரசங்கித்துவந்தும், மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை; அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால், எனக்கு ஐயோ" என்கிறார் பவுல் (1கொரி.9:16). கடமைக்காக செய்கிறவர்கள் உண்டு. அந்தவிதமாக கடமைக்காக செய்வதைப்பற்றி இவ்வசனம் நமக்கு போதிக்கவில்லை. அதை நான்தான் செய்யவேண்டும்.

ஏனெனில் அது எனக்குத்தான் தெரியும். அந்த சுவிசேஷம் எப்படிவந்தது? அது எதற்காக வந்தது? அதன் பயன் என்ன? போன்ற வினாக்களுக்கு விடையளிக்க முடியும். கடமைக்காக செய்கிறவர்கள் அதனுடைய விலை மதிப்பை அறியார்கள். இந்த சுவிசேஷம் யாருக்கு சொல்லப்படவேண்டும் என்ற கேள்வியை எழுப்புவோமானால்; வேதம் சொல்லுகிறது "அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டுவருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான்



ஊழியக்காரனானேன்" (கொலோ.1:23). ஆண்டவரும் நீங்கள் உலகமெங்கும் போய் சர்வசிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்றார். அந்தப்படியாக இன்றுவரை சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல தேசத்தாருக்கும் பலவகையில் எடுத்துச் செல்லப்படுகிறது. அதற்கென்றே பவுல் தன்னை சுவிசேஷத்தில் ஈடுபடுத்திக்கொண்டார் என காண்கிறோம்.

இந்த சுவிசேஷம் ஊழியம் அன்பின் ஊழியம். இது கட்டாயத்தின்பேரில் செய்யக்கூடிய ஊழியம் அல்ல என்பதை நாம் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். "சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கு அழைக்கப்பட்டீர்கள், இந்தச் சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" (கலா.5:13). மேலும், "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப்பார்க்கிறேன்? நான் இன்னும் மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" (கலா.1:10). ஒவ்வொரு ஊழியனும் கர்த்தரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்துகொண்டு ஊழியத்தை செய்யவேண்டும். மனுஷரைப்பிரியப்படுத்தி ஊழியஞ்செய்கிறதினாலே அவன் கர்த்தருக்கேற்ற ஒரு ஊழியக்காரனாக இருக்கமுடியாது.

ஒரு ஊழியன் தர்ம பணத்தை குறித்த விஷயத்தில் உண்மையுள்ளவனாயிருக்க போதிக்கப்படுகிறான். பவுல் இந்த விஷயத்தில் "எங்கள் ஊழியத்தினாலே சேர்க்கப்படும் இந்த மிகுதியான தர்மப்பணத்தைக்குறித்து ஒருவனும் எங்களைக் குற்றப்படுத்தாதபடிக்கு நாங்கள் எச்சரிக்கையாயிருந்து" என குறிப்பிடுகிறார் (2கொரி.8:20). ஊழியத்தில் நற்சாட்சி மிகவும் அவசியம். மற்றவர்கள் நம்மீது நம்பிக்கையற்றவர்களாக இருக்கும்போது நாம் சொல்லக்கூடிய சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்வது கடினம். இதனால் சுவிசேஷம் தடைபடும்.

ஒவ்வொரு சுவிசேஷகனும் தன்னைப் பற்றிய கதைகளையே சொல்லாமல் சுவிசேஷத்தை அறிவிக்கிறவனாக இருக்க பிரயாசப்படவேண்டும். பவுல் சொல்லுகிறார்; "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல் கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" என்கிறார் (2கொரி.4:5). ஒரு சுவிசேஷகன் இயேசுவின் நிமித்தமாக ஜனங்களுக்கு ஊழியக்காரனாக இருக்கிறான். அதற்கேற்ற கூலியை அவன் கர்த்தரிடத்தில் பெறுவான். மேலும் பவுல்; "வெட்கமான அந்தரங்க காரியங்களை நாங்கள் வெறுத்து, தந்திரமாய்

நடவாமலும், தேவ வசனத்தைப் புரட்டாமலும், சத்தியத்தை வெளிப்படுத்துகிறதினாலே தேவனுக்கு முன்பாக எல்லா மனுஷருடைய மனச்சாட்சிக்கும் எங்களை உத்தமரென்று விளங்கப்பண்ணுகிறோம்" என்கிறார் (2கொரி.4:2).

**கிறிஸ்தவம் உண்மையின் மார்க்கம்.** அதில் கூட்டிச் சொல்வதற்கோ, அல்லது குறைத்து சொல்வதற்கோ இடமில்லை. அநேக மார்க்கங்கள் உலகத்தில் இருக்கிறது. அவைகளை சிலர் கூட்டியும் குறைத்தும் திரித்தும் கூறுவர். வேதாகமத்தை பொறுத்தவரை சத்தியத்தை சத்தியமாகவே சுவிசேஷகர்கள் கையாண்டு வருகிறார்கள். தந்திரமாகவும் வேதவசனத்தை புரட்டியும் சொல்லவேண்டிய அவசியமில்லை. உண்மை சத்தியத்தை எடுத்துரைக்கும்போது தேவனால் உண்டானவர்கள் தேவனுடைய வசனங்களுக்குச் செவிகொடுக்கிறார்கள். தேவனால் உண்டாகாதவர்கள் தேவனுடைய வசனங்களுக்கு எதிர்த்து நிற்கிறார்கள். அதினாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும் பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் அறிந்துகொள்கிறோம்.

மேலும், ஒரு ஊழியன் கர்த்தருக்கு ஊழியக்காரனாயிருக்கிறான் என்பதை அவன் ஒருபோதும் மறந்துபோகாதிருக்க வேண்டும். ஏனெனில் பவுல் கொரிந்துசபைக்கு எழுதும்போது; "உங்கள் விசுவாசத்திற்கு நாங்கள் அதிகாரிகளாயிராமல், உங்கள் சந்தோஷத்திற்குச் சகாயராயிருக்கிறோம்; விசுவாசத்தினாலே நிலைநிற்கிறீர்களே" என்கிறார் (2கொரி.1:24). சில சபைபோதகர்கள் தாங்கள் அதிகாரிகள்போல விசுவாசிகளிடம் நடந்துகொள்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் அந்தவிதமாக நடந்துகொள்ளவில்லை. அவர்களுடைய சந்தோஷத்திற்குச் சகாயராக இருந்திருக்கிறார். அவரவர் விசுவாசத்தினால் நிற்கிறார்கள்.

கிறிஸ்துவானவர் நமக்கு என்ன கட்டளை கொடுத்திருக்கிறாரோ அவைகளை செய்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அதைவிட்டு, விட்டு நாம் மற்றவர்கள் மீது துரைத்தனம் பண்ணுவது நல்லதல்ல. அவன் நின்றாலும் விழுந்தாலும் தேவன் ஒருவருக்கே கணக்கு ஒப்புவிக்கவேண்டியவனாயிருக்கிறான். நாம் நம்முடைய கணக்கை தேவனுக்கு ஒப்புக்கொடுக்கவேண்டியவர்களாக இருக்கிறோம். ஆகையால் "ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன்; பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன்; முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்; இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன்" (ரோம.12:7,8).



அவரவருக்கு கொடுக்கப்பட்ட வேலையை செய்வார்களேயானால் கர்த்தருடைய சபை வளர்ச்சிப் பாதையில் இருக்கும். தேவையில்லாமல் மற்றவர்களுடைய வேலையில் தலையிடும்போது கர்த்தருடைய ஊழியம் பாதிக்கப்படுகிறது. சபையிலே அவரவருடைய தாலந்துகளுக்கு ஏற்றவாறு தேவன் வேலையை கொடுத்திருக்கிறார். இதில் தாலந்து குறைவாக இருக்கிறவன் நிறைவாக இருக்கிறவனைப் பார்த்து பொறாமை கொண்டு அவனைப்போல நான் செயல்படவேண்டும் என்று நினைத்து அந்த பதவிக்கு முயற்சிப்பது பலன் அளிக்காது. தனக்கு என்ன வேலையை கொடுத்திருக்கிறாரோ அதை அவன் சிறப்பாக தேவனுடைய சமுகத்தில் செய்து நிறைவேற்றும்போது தேவன் அதற்குமேலான பதவிகளை அவனுக்குக் கொடுப்பார். ஆகையால் நீங்கள் ஒரு சபைபோதகராக இருந்தால் அவைகளில் இன்னும் தேர்ச்சியடைய முற்படுங்கள் அல்லது நீங்கள் ஒரு சுவிசேஷகராக ஊழியராக இருந்தால் உங்களுக்கு கொடுக்கப்பட்ட வேலையை சிறப்புடன் செய்து அதை நிறைவேற்றுங்கள்.

எதுவாக இருந்தாலும் கர்த்தருக்குச் சித்தமானது அவர் கையினாலே வாய்க்கும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கவேண்டும். "அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்; ஆவியிலே அனலாயிருங்கள்; கர்த்தருக்கு ஊழியஞ்செய்யுங்கள்" (ரோம.12:11). கர்த்தருடைய ஊழியக்காரன் கர்த்தருக்கு ஊழியஞ்செய்யவேண்டும். அப்பொழுது தேவனால் அவன் கனத்தைப் பெற்றுக்கொள்ளுவான்.

### கேள்வி

**ஒரு ஊழியக்காரன் சுவிசேஷத்தினிமித்தமாக தீங்கு அநுபவிக்க வேண்டுமா?**

ஆம், ஒரு ஊழியக்காரன் சுவிசேஷத்தினிமித்தம் தீங்கு அநுபவிக்கவேண்டும். அப்படியானால் யார் இந்த வேலைக்கு வருவார்கள் என்ற கேள்வி உங்களுக்குள் எழும்பும். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இவைகளை ஏற்றுக்கொண்டு கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள். இயேசு சொல்கிறார்; "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிற வனானால் என்னைப் பன்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோவா.12:26).

இயேசுவை பின்பற்றி அவருக்கு ஊழியஞ்செய்கிறவன் பிதாவினால் ஆசீர்வதிக்கப்படுகிறான். மனிதர்களை பின்பற்றி ஊழியஞ்செய்கிறவர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். உண்மையான ஒரு ஊழியன் சுவிசேஷத்தின்

நிமித்தமாக தீங்கு அநுபவிக்கவேண்டும். இதையே பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று" என்றார் (2தீமோ.4;5). ஒரு உண்மையுள்ள ஊழியக்காரனுக்கு அநேக பொறுப்பு இருக்கிறது. அவன் மனத்தெளிவுள்ளவனாயிருக்கவேண்டும், தீங்கநுபவித்துக் கொண்டு சுவிசேஷக வேலையை செய்யவேண்டும். அத்தோடு நின்றுவிடாமல் அவனுடைய ஊழியத்தை அவன் நிறைவேற்றவேண்டும் பாதியிலே விட்டு விட்டுச் செல்லும் வேலையில்லை இது. நீங்கள் எப்படிப்பட்டவர்! உங்களுடைய ஊழியத்தை கர்த்தர் ஆசீர்வதிக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 33. நீங்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே...

## As You Have Received Christ Jesus The Lord...

**ஆ**தி அன்பு பொதுவாக எல்லோருடைய வாழ்க்கையிலும் குறைய ஆரம்பிக்கிறது. இந்த அன்பில் குறையாதவர்களாக இருக்க நாம் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே தொடர்ந்து ஆவிக்குரிய விஷயத்தில் வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக வாழவேண்டும். "ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்துகொண்டு, நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" (கொலோ.2:6,7).

ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் இந்தவசனத்தின்படி இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே ஸ்தோத்திரத்தோடே பெருகுவார்கள் என்றால், இன்று உலகமே கிறிஸ்தவமயமாகத்தான் இருக்கும். அவர்களுக்கு வரக்கூடிய சோதனையை சகிக்க பெலன் இல்லாமல் அவரை ஏற்றுக்கொண்ட நாட்களில் இருந்த அன்பில் குறைந்துபோகின்றார்கள். அவருக்குள்ளாக வேர்கொள்ளும்போது நாம் ஒருபோதும் வாடிப்போக மாட்டோம். அவர் மெய்யான திராட்சச்செடியாக இருக்கிறார். நீங்கள் கொடிகளாக இருக்கிறீர்கள் என்பதை மறந்துபோகக்கூடாது.

"நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம்" (எபே.5:30). நாம் அவருடைய மாம்சத்திற்கும் எலும்புகளுக்கும் உரியவர்கள்



என்பதை நினைக்கும்போது எத்தனை ஆசீர்வாதத்திற்கு பங்குள்ளவர்களாக இருக்கிறோம் என்பதை நினைத்துப் பாருங்கள்.

ஒரு புகழ் பெற்ற கிரிக்கெட் வீரருடைய பேனா என்னிடத்தில் இருக்கிறது என்றால் அதை எவ்வளவு பெருமையாக சொல்லிக் கொள்வோம். நாமே அவருடைய சரீரத்தின் எலும்புகளுக்கு உரியவர்களாக இருக்கிறோம் என்பதை நினைக்கும்போது நாம் எந்த அளவு சந்தோஷமுள்ளவர்களாக இருக்கவேண்டுமென்பதை நினைத்துப்பாருங்கள். அவருடைய மாம்சமும் இரத்தமும் உலகத்தின் பாவத்தை போக்கியது. அநேக நோயாளிகளை சுகமாக்கினது. அப்படிப்பட்ட மாம்சத்திற்கும் எலும்புக்கும் சொந்தக்காரர்கள் என்றால் அது எத்தனை ஆசீர்வாதமான வார்த்தை. மேலும், "அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும்" என வாசிக்கிறோம். நீங்கள் இயேசுவின் மீது உங்களுடைய ஆவிக்குரிய துவக்கத்தை ஆரம்பித்திருக்கிறீர்களா? முதல் நூற்றாண்டு சபையானது அஸ்திபாரமாகிய கல்லான கிறிஸ்துவின் மீது துவங்கப்பட்டது. தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன். அதின் மேல் விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்திலே சொல்லியிருக்கிறது.

"அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள்; அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார் அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது; அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" (எபே.2:20-22). எந்த ஒரு மனிதனும் மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட சபையில் சேர்க்கப்படுவதில்லை. கர்த்தர் ஒருவரே சபையில் சேர்க்கிறார். அநேகர் மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சபையில் ஐக்கியம் கொள்ளுகிறார்கள். அவர்களுடைய விசுவாசம் தவறாக இருக்கிறது. அப்படிப்பட்டவர்கள் வேத வசனங்களை கவனிக்கவேண்டும். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து ஒருவரே அவரே சபையின் மூலைக்கல்லாக இருக்கிறார். மற்றபடி அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள் என்பவர்கள் அதற்குமேலாக கட்டப்பட்டார்கள். அதற்குமேலாக நம்மைப்போன்ற விசுவாசிகள் அத்தோடு இசைவாய் இணைத்து கட்டப்படுகிறார்கள் இப்படியாக கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயம் எழும்புகிறது. இந்தவிதமான நம்பிக்கை உங்களுக்குள் இருக்கிறதா?

அவருக்குள் நாம் நடக்கவேண்டும் என காண்கிறோம். அவருக்குள் என்றால் அவருடைய நாமத்தை தரித்துக்கொண்டு வாழும்போது வரக்கூடிய

போராட்டங்களை மேற்கொள்வது. அவர் நாமத்தின் நிமித்தமாக பாடுபடுவது. "ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்தக்கடவன்" (1பேது.4:16). பாடுகள் வரும்போது தேவன் என்னை மறந்தார் என்றுசொல்லி பொதுவாக எல்லோருமே விசுவாசத்தில் சற்று பெலவீனப்படுவார்கள்.

அந்தவிதமான நேரங்களில் நாம் தேவனை மகிமைப்படுத்தும்படியாக நம்முடைய வாயின் வார்த்தைகளைக்குறித்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தேவன் நம்மை கண்ணோக்கிக் கொண்டிருக்கிறார். நாம் இவ்வுலகத்தில் கர்த்தருக்கு சாட்சியுள்ள பிள்ளைகளாக ஜீவிக்கவேண்டும். மேலும் பவுல் கொலோசே சபைக்கு எழுதும்போது; "நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுவீர்களாக" (கொலோ.2:7). இன்றைக்கு அநேகருக்கு ஆண்டவருடைய போதனை நன்கு தெரியும் ஆனால் அதன்படி நடப்பதில்லை. பலவிதமான சோதனைகள் வந்தவுடன் பின்வாங்கிப்போகிறார்கள். வசனத்தினிமித்தம் உபத்திரவம் வந்தவுடன் மறுதலிக்கிறார்கள்.

நாம் எந்த அளவு கர்த்தருடைய வசனத்தினாலே போதிக்கப்பட்டிருக்கிறோமோ அந்த அளவு விசுவாசத்தில் நாம் வளரவேண்டும். வேதம் இதை எதிர்பார்க்கிறது. யோபு என்ற தாசனுக்கு கொடுக்கப்பட்ட எல்லாம் பறிபோனது. அப்பொழுது அவன் சொன்ன வார்த்தை கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார் கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம் என்றான். நாமும் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் சொல்லி விசுவாசத்தில் முன்னோக்கி செல்ல வேண்டும். தீமோத்தேயுவுக்கு எழுதும்போது; "ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு" என்றார் (1தீமோ.6:20). தீமோத்தேயு ஒரு நல்ல போர்ச்சேவகனாயிருந்தவன். அவன் விசுவாசவிஷயத்தில் மிகச்சிறப்பாக இருந்தவன்.

அவன் விசுவாசத்தில் நன்றாக இருக்கின்றானே என்று பவுல் அவனுக்கு புத்திமதிகள் சொல்லாமலில்லை, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக்கொண்டு, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும் ஞானமென்று பொய்யாய் பேர்பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு என்கிறார். இன்றைக்கும் பொய்யான காரியங்கள் நாம் வாழும் பூமியில் கொட்டிக்கிடக்கின்றது. இவைகளுக்கு சிலர் செவிகொடுத்து விசுவாசத்தை விட்டு விலகிப்போகின்றனர். நாமோ நம்மிடத்தில் ஒப்புவிக்கப்பட்ட கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற சுவிசேஷத்தை பாதுகாத்து, சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு



விலகி விசுவாசத்தில் தொடர்ந்து வெற்றியுள்ள கிறிஸ்தவர்களாக வாழ்வோம். இப்படிப்பட்ட வாழ்க்கைக்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா?

கொலோ.2:7-ல் விசுவாசத்தில் உறுதிப்பட்டு என்ற ஒரு வாசகத்தை காண்கிறோம். விசுவாசம் நம்மை இரட்சிப்புக்கு நேரே வழிநடத்துகிறது. இந்த விசுவாசத்தில் நீங்கள் உறுதிப்பட்டவர்களாக இருக்கின்றீர்களா? விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாதகாரியம் என்பதை நாம் அறிவோம். இந்த விசுவாசத்தில் நம்முற்பிதாக்கள் உறுதியோடு இருந்து "ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள். சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலன்கொண்டார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்; வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்" (எபி.11:33-36). இப்படிப்பட்ட உறுதியோடு நாம் விசுவாசத்தை மறுதலிக்காமலிருந்து இவ்வுலகத்தில் சாட்சியோடு வாழ்ந்த நம் முற்பிதாக்களைப்போல வாழவேண்டியவர்களாகயிருக்கிறோம். "தேவனால் பிறப்பதெல்லாம் உலகத்தை ஜெயிக்கும்; நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்" (1யோவா.5:4).

தேவனை அறியாத ஒரு நபர் உலகத்தை ஜெயித்துவிட்டான் என்று சொன்னால் அது உண்மைக்குப் புறம்பானது. தேவனால் பிறந்த ஒரு மனிதன்தான் இந்த உலகத்தில் பிசாசு கொடுண்டுவரும் காரியங்களை ஜெயிக்கமுடியும். தேவனால் பிறந்தவன் என்றால் மறுபடியும் பிறந்தவன். ஒருவன் மறுபடியும் எப்படி பிறக்கமுடியும் என்று நீங்கள் கேட்கலாம். கிறிஸ்துவின் வல்லமையுள்ள வசனங்களை கேட்டு மனந்திரும்பி, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றவன் மறுபடியும் பிறந்தவன். இவனோடு தேவனுடைய ஆவியானவர் இருப்பார். இவன் ஆவிக்குரிய வசனங்களுக்குச் செவிகொடுப்பான்.

இவன் பிசாசு கொண்டுவரும் சகல காரியங்களையும், தேவனுடைய வல்லமையுள்ள வசனத்தினாலே போராடி ஜெயிப்பான். இப்படிப்பட்டவர்களே தங்களுடைய விசுவாசத்தினாலே இந்த உலகத்தை ஜெயிப்பார்கள். மற்றபடி இந்த உலகத்தில் ஜெயித்துவிட்டான் என்று உலகப்பிரகாரமான வெற்றியை ஒருவன் கொண்டாடினாலும் அவன் உலகத்தை ஜெயித்தவனாக

கருதமுடியாது. அவன் ஜெயிக்கவேண்டிய உண்மையான ஒரு போராட்டம் ஒன்று உண்டு. அதுவே ஆவிக்குரிய போராட்டம்.

கடைசியாக நாம் ஒவ்வொன்றிலும் ஸ்தோத்திரத்தோடே பெருகவேண்டும் என்று வாசித்தோம். எல்லாவற்றிற்கும் ஸ்தோத்திரம் செலுத்த கற்றுக்கொள்ளவேண்டும். சிலர் நன்மைகளைப் பெற்றுக்கொண்டால் மட்டும் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்துவார்கள். தேவனுடைய சமுகத்தில் நன்மைகளைப் பெற்ற நாம் கர்த்தருக்கு ஸ்தோத்திரம் செலுத்துவதுபோல தேவனுடைய நாமத்தினிமித்தம் தீமைகள் வரும்போதும் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று பிலிப்பியர் 4:6-ல் வாசிக்கிறோம்.

தேவன் நம்மோடிருக்கிறார் என்ற நம்பிக்கை உங்களில் இருக்குமானால் நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டியதில்லை. கவலைகள் நம்முடைய விசுவாசத்தை பாதிக்கக்கூடியவை ஆகையால் நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல் அவைகளைப் பார்க்கிற கர்த்தருக்கு அவைகளை தெரியப்படுத்த வேண்டும். தேவனுக்கு என்ன என்னுடைய கஷ்டங்கள் தெரியாதா என்று ஒரே வார்த்தையில் சொல்லிவிடுவார்கள். தேவனுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை.

ஆனால் தேவன் தம்மை நோக்கி கூப்பிடுகிறவர்களுக்கு அவர் உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் அல்லவா! ஆகையால் நாம் ஒன்றுக்கும் கவலைப்படாமல் எல்லாவற்றையும் குறித்து உங்களுடைய விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினால் தேவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும். நம்முடைய ஜெபமானது பொதுவாக இருக்கக்கூடாது அதில் அதிகமாக குறிப்பாக இழந்ததை எண்ணி கவலைப்படாமல், அதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம் சொல்லி ஜெபிக்கவேண்டும். அப்படி ஜெபிக்கும்போது தேவனுடைய சித்தத்தை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்று அர்த்தம். நம்முடைய விருப்பமே நடக்க வேண்டும் என்று அநேகர் நினைப்பார்கள். அப்படி நடைபெறாத சமயத்தில் விசுவாச விஷயத்தில் சோர்ந்துபோவார்கள்.

அன்பானவர்களே, நீங்கள் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் வேர்கொண்டவர்களாகவும் அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும் அவருக்குள் நடந்துகொண்டு நீங்கள் போதிக்கப்பட்டபடியே விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதிலே பெருகுங்கள்.



**கேள்வி**

**நாம் தேர்ச்சியடைந்த அளவு ஒழுங்காய் நடந்தால் போதுமா?**

முழுவதும் நன்கு வளர்ச்சியடையவேண்டும் என்று கருதி பத்து சதவீதம் கூட வளர்ச்சியடையாமற்போவார்கள். ஆகையால் பவுல் பிலிப்பிய சபையாருக்கு சொல்லும்போது; "நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ, அதுமுதல் ஒரே ஒழுங்காய் நடந்துகொண்டு, ஒரே சிந்தையாயிருப்போமாக" என்று எழுதுகிறார் (பிலி.3;16). வளர்ச்சியடைந்த அளவு நாம் முதலாவது ஒரே ஒழுங்காய் நடக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். வளர்ச்சியடைந்ததிலிருந்து சற்று சறுக்கி விழுவோமானால் பூரணமாக எப்படி நடக்கமுடியும். படிப்படியாக வளர்ச்சியடைய முற்படுங்கள். நாம் தேர்ச்சியடைந்த அளவு அதாவது அந்த அளவு முதல் ஒரே ஒழுங்காய் நடந்து, ஒரே சிந்தையாயிருப்போம்.

இஸ்ரவேலர் எகிப்தை விட்டு கர்த்தருடைய வார்த்தையின்படி கானானுக்குச் சென்றனர். ஆனால் சிவந்த சமுத்திரத்தை நெருங்கும்போது அவர்கள் கானானை நோக்கி விசுவாசத்தில் முன்னேறவில்லை எகிப்தை திரும்பிப் பார்த்தார்கள். விசுவாசத்தில் தளர்ச்சியடைந்தார்கள். எதுவரை சென்றிருந்தார்களோ அந்த அளவு தங்களுடைய விசுவாசத்தை காத்துக்கொண்டிருப்பார்களேயானால் அவர்களுடைய தேவன் அவர்களை நேசித்து அத்தனை ஜனங்களையும் கானானுக்குள் பிரவேசிக்க செய்திருப்பார். ஆனால் அவர்கள் அவிசுவாசிகளாக போனார்கள் என்று காண்கிறோம். அப்படி நாம் சென்றுவிடாதிருக்க நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ அதுமுதல் ஒரே ஒழுங்காக நடந்து, ஒரே சிந்தையாக இருப்போம். கர்த்தர் நமக்கு உதவி செய்வாராக! நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

# 34. கிருபையும் கிறிஸ்தவர்களின் நடத்தையும்

## Grace and Christians` Activity

**கி**ருபையை நாம் சொல்லால் சொல்லிவிடமுடியாது அந்த அளவு தேவன் நமக்கு கிருபைசெய்துள்ளார். "முற்காலத்தில் நீங்கள் அந்தகாரமாயிருந்தீர்கள், இப்பொழுதோ கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்; வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்து கொள்ளுங்கள்" (எபே.5:8). கிறிஸ்து இயேசுவுக்குள் வருவதற்கு முன்பு நாம் அந்தகாரமாயிருந்தோம். அந்தகாரம் அதாவது பாவ இருள் நம்மைப் பற்றிக் கொண்டிருந்தது. ஆகையால் பழைய மனிதனுடைய வாழ்க்கையில் நாம் அந்தகாரமாயிருந்தோம். "முன்னே அந்நியராயும் துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களைப் பரிசுத்தராகவும்

குற்றமற்றவர்களாகவும் கண்டிக்கப்படாதவர்களாகவும் தமக்கு முன் நிறுத்தும்படியாக அவருடைய மாம்ச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே இப்பொழுது ஒப்புரவாக்கினார்" (கொலோ.1:21). நாம் தேவனுக்கு சத்துருக்களாயிருந்தோம். அதாவது பிசாசின் உபதேசங்களுக்கு செவிகொடுத்து அந்நியர்களாகவும் துர்க்கிரியைகளை நடப்பிக்கிறவர்களாகவும் இருந்தோம். இப்படிப்பட்ட நம்மை தேவன் இயேசுகிறிஸ்துவின் மரணத்தின்மூலம் அவருடைய இரத்தினால் கழுவி நீதிமான்களாக்கினார். இது அவருடைய கிருபையல்லவா!

மேலும், "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக் கொள்ளுங்கள்" (எபே.2:12). நாம் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாது இருந்த காலத்தில் வாக்குத்தத்தத்தின் பிள்ளைகளாக இல்லை. அந்நியர்களாகவும், நம்பிக்கையற்றவர் களாகவும், இவ்வுலகத்தில் தேவன் என்றால் யார் என்று கேட்கக்கூடிய அளவிற்கு தேவனற்ற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தோம் என்பதை பவுல் நினைப்பூட்டுகிறார்.

இஸ்ரவேலை தெரிந்துகொண்ட தேவன் அவர்களோடு மட்டுமே வாசம்பண்ணினார். மற்ற யாவரும் தேவனை அறியாதவர்களாக மரம், செடி, கொடிகளையும் மற்றும் ஆடு, மாடு, பாம்பு போன்றவைகளை வணங்கிக்கொண்டும் இதுவே நம்மை உண்டாக்கின தேவன் என்று சொல்லிக்கொண்டு பாரம்பரியமாக வாழ்ந்துகொண்டு வந்தோம் என்பதையும் நினைப்பூட்டுகிறார். இந்த பவுல் ஒரு காலத்தில் தேவனை அறியாதவராக இருந்துகொண்டு இந்த மார்க்கத்து புருஷரையும் ஸ்திரீகளையும் மரண பரியந்தமும் துன்பப்படுத்தினதாக அப்.22:4-ல் சொல்லுவதை வாசிக்கிறோம்.

தேவனை அறியாது இருந்தபோது பவுல் ஒருவகையில் நம்மைப்போல தேவனை அறியாதவராக இருந்தார். கர்த்தர் பவுலை சந்தித்தபோது அவருக்கும் அவருடைய வல்லமையுள்ள சுவிசேஷத்திற்கும் கீழ்ப்படிந்து தாமதமில்லாமல் ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் இணைக்கப்பட்டு, ஒரு வல்லமையுள்ள அப்போஸ்தலனாகவும், ஆசிய முழுமைக்கும் சுவிசேஷத்தை அறிவிக்கும் மாபெரும் சுவிசேஷகனாகவும் அநேக இடங்களில் சபைகளை ஏற்படுத்தி கர்த்தருடைய சபைக்கு முன்மாதிரியான ஊழியக்காரனாக இருந்தார். இது அவருக்குக் கிடைக்கப்பெற்ற கர்த்தருடைய கிருபை என்றே சொல்லவேண்டும்.

இன்றைக்கு அதாவது, கர்த்தருடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்ட நாம் எப்படியிருக்கிறோம்? "கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிறீர்கள்" என்கிறார்



பவுல். அப்படியானால் ஒருவனுடைய பழைய ஜீவியமானது முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டது. இப்போது புதுசிருஷ்டியாக இருக்கிறான். இதையே பவுல்; "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின எல்லாம் புதிதாயின" என்கிறார் (2கொரி.5;17). முன்னே அந்நியராக இருந்தவன் கிறிஸ்துவுக்குள் வந்தவுடன் புதுசிருஷ்டியாகவும் வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைக்கு பங்காளியுமாகிறான். எத்தனை ஆசீர்வாதம்!

மேலும், "ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு, நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும். இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது" (கொலோ.1:12-14). நாம் இரட்சிக்கப்பட்டது அவருடைய கிருபை என்றே சொல்லவேண்டும். ஏனெனில் இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கினவரும் அவரே, ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்தரத்தில் பங்கடைவதற்கு நம்மைத் தகுதியுள்ளவர்களாக்கினவரும் அவரே, இயேசு கிறிஸ்துவினுடைய ராஜ்யமாகிய சபைக்குள் நம்மை உட்படுத்தினவரும் தேவனே. அவருடைய கிருபையின் ஐசுவரியம் எத்தனை பெரியது என்று பார்த்தீர்களா?

"அக்கிரமங்களில் மரித்தவர்களாயிருந்த நம்மைக் கிறிஸ்துவுடனேகூட உயிர்ப்பித்தார்; கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" (எபே.2:5). நாம் இரட்சிக்கப்பட்டது அவருடைய சுத்த கிருபை. நம்முடைய பக்தியினாலே அல்லது முதாதையருடைய நற்பண்புகளினாலோ நாம் இரட்சிக்கப்படவில்லை. தேவன் நம்மை இருளின் அதிகாரத்தினின்று விடுதலையாக்கி தமது அன்பின் குமாரனுடைய இராஜ்யமாகிய சபையில் உட்பிரவேசிக்கும் சிலாக்கியத்தை கொடுத்தார். எனவே கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிற நாம் "மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது" (மத்.5:16).

நீங்கள் உங்களுடைய சமுதாயத்தின் மத்தியில் எப்படிப்பட்டவர்களாக ஜீவித்துக் கொண்டிருக்கிறீர்கள்? வெளிச்சமுள்ளவர்களாக வாழவேண்டும். ஏனெனில் நீங்கள் இனி வெளிச்சத்தின் பிள்ளைகள் என்று உங்களை வேதம் அழைக்கிறது. அதற்கு பாத்திரவான்களாக நடந்துகொள்ளுங்கள். தேவனை அறியாத ஜனம் உங்களை பார்த்துக்கொண்டிருக்கிறது.

உங்களுடைய செயல்பாடுகளை அனுதினமும் கண்ணோக்கிக் கொண்டிருக்கிறது. உங்கள் நிமித்தமாக பரிசுத்த மார்க்கம் தூசிக்கப்படாதபடி பார்த்துக்கொள்ளவேண்டிய பொறுப்பும் உங்களுக்கு இருக்கிறது. ஆகையால் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்தின் தேவனை அறியாத ஜனங்கள் உங்கள் மூலமாக அவரைக் கண்டுகொண்டு, அவரை துதிக்கும்படி உங்கள் வெளிச்சம் எப்பொழுதும் அவர்களுக்கு முன்பாக பிரகாசமாக இருக்கட்டும்.

மேலும், அதே வசனத்தில் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்துகொள்ளுங்கள் என காண்கிறோம். வெளிச்சத்தின் பிள்ளைகளாக எப்படி நடந்துகொள்வது. இருளுள்ள ஸ்தலத்தில் வெளிச்சம் கொடுக்கிற ஒரு விளக்கைப்போன்று இருக்க வேதம் நம்மை ஊக்கப்படுத்துகிறது. ஏனென்றால் "அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்" (1யோவா.1:7). தேவன் எப்படியிருக்கிறாரோ அப்படியே ஒவ்வொரு கிறிஸ்தவனும் இருக்கவேண்டும். அப்படிச்செய்யும்போது தேவன் நம்மோடிருப்பார். அந்த வெளிச்சத்திலே வெளிச்சம் காணலாம். ஒருவரோடு ஒருவருக்கு ஐக்கியம் ஏற்படும். அப்பொழுது நம்முடைய சகல பாவங்களும் நமக்கு மன்னிக்கப்படும். கண்ட சகோதரனோடு ஐக்கியமாக இல்லையென்றால் காணாத தேவனோடு நாம் எப்படி ஐக்கியம் கொள்ளமுடியும்? தேவன் எல்லோரையும் நேசிக்கிறார். அவருக்கு ஒரே ஒரு எதிராளிதான். அவனே பிசாசு.

அவன் ஆதிமுதல் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான். அவன் ஒருவனே தேவனுக்கு சத்துருவாக இருக்கின்றான் என காண்கிறோம். "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" (ரோம.12:2). இப்பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பிசாசின் செயல்பாடுகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப்போல நீங்களும் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஏற்றாற்போல ஒத்தவேஷம் தரித்துவிடக்கூடாது. அவர்களுக்கும் நமக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. நாம் தேவனுடைய ஜனங்கள் தேவனைப்போல நலமான காரியங்களை செய்ய வேண்டும்.

ஒவ்வொரு நாளும் தேவனுடைய ஜனங்கள் மறுரூபமாகவேண்டும். மறுரூபம் என்று சொல்லும்போது உடையை மாற்றுவதுபோல நம்மை மாற்றிக்கொள்வது அல்ல. வாழ்க்கையில் தவறிலிருந்து விடுபட்டு,



நற்கிரியைகளை செய்கிறதில் நாளுக்கு நாள் நம்முடைய செயல்பாடுகள் மாறிக்கொண்டே இருக்கவேண்டும். (எ.டு) நேற்றுவரை வாழ்ந்த மாயாண்டியின் வாழ்க்கையை பாருங்கள். அவர் ஒரு குடிகாரனாகவும், கொள்ளைக்காரனாகவும், கொடுரமானவராகவும் இருந்தார் இப்பொழுது கர்த்தர் என் ஆண்டவர் என்று சொல்லி வாய்பேசாத ஆட்டைப்போல மாறிவிட்டார் என்று ஜனங்கள் சொல்லும் அளவிற்கு ஜனங்கள் மத்தியில் மாற்றம் ஏற்படவேண்டும். இதுவே மறுரூபப்படுவது. இப்படி நாளுக்கு நாள் மாற்றப்படும்போது ஆண்டவர் இயேசுவின் சாயலுக்கு ஒப்பாக மாறுவோம்.

"இத்தாலியா பட்டாளம் என்னப்பட்ட பட்டாளத்திலே நூற்றுக்கு அதிபதியாகிய கொர்நேலியு என்னும் போர்கொண்ட ஒரு மனுஷன் செசரியா பட்டணத்திலே இருந்தான். அவன் தேவபக்தியுள்ளவனும் தன் வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனுமாயிருந்து, ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்து, எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தான்" (அப்.2;1,2). இந்த கொர்நேலியு ஆண்டவர் இயேசுவை குடும்பத்துடன் ஏற்றுக்கொண்டு ஒரு சாட்சியுள்ள மகனாக அந்நாட்டு மக்கள் மத்தியில் வாழ்ந்திருக்கிறார். அவருக்கு யாராவது காசுகொடுப்பார்கள் என்றோ, அல்லது அரசாங்கத்தில் சலுகை கிடைக்கும் என்றோ எதிர்பார்த்து வாழவில்லை. தன் வீட்டாரோடு தேவனுக்குப் பயந்து வாழ்ந்தார். தான் பட்டாளத்தில் வேலைசெய்து கிடைக்கக்கூடிய பணத்தை தன் வீட்டுத்தேவைக்கு போக ஜனங்களுக்கும் தானதர்மம் செய்யும் பழக்கத்தை உடையவராக இருந்திருக்கிறார்.

இன்றைக்கு நாம் இவரை மாதிரியாக கொள்ளலாம். நமக்கும் ஒரு வேலையிருக்கிறது. அந்த வேலையில் பணம் கிடைக்கிறது. நம்முடைய வீட்டுதேவைகள்போக இவரைப்போல தானதர்மம் செய்கின்றோமா? நம் வீட்டாரோடு தேவனுக்கு பயந்து ஜீவிக்கின்றோமா? என்று நம்மையே கேட்டுப்பாருங்கள்.

அந்த ஜனங்கள் மத்தியில் தேவனுடைய நாமத்தை பரைசாற்றும் ஒரு ஸ்தாபனமாக கொர்நேலியு வாழ்ந்திருக்கிறார். அநேகருக்கு வெளிச்சம் காட்டுகிற மகனாக வாழ்ந்திருக்கிறார். நீங்கள் எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? சத்தியத்திலே நாம் நடந்தால் நம்மை வழிநடத்தியவர்களுக்கு சந்தோஷம் ஏற்படும். யோவான் பிரியமான அம்மாளுக்கு எழுதும்போது; "பிதாவினால் நாம் பெற்ற கற்பனையின்படியே உம்முடைய பிள்ளைகளில் சிலர் சத்தியத்திலே நடக்கிறதை நான் கண்டு மிகவும் சந்தோஷப்பட்டேன்" என்கிறார் (2யோவா.4).

இன்றைக்கு சந்தோஷம் எப்படி வரும்? சத்தியத்திலே நடப்பதை நாம் பார்க்கும்போது சந்தோஷம் ஏற்படும். ஒரு மகன் குடிகாரனாக ஒயின்சாப் கடையை நாடிப்போகும்போது நமக்கு சந்தோஷம் ஏற்படுமா? இப்படி கெட்டுப்போய்விட்டானே என்று கவலை கொள்ளுவோம் அல்லவா? ஆனால் யோவான் அம்மாளுக்கு எழுதும்போது; அங்கே சிலர் சத்தியத்திலே நடப்பதைகேள்விப்பட்டு சந்தோஷம் அடைகிறார். பிள்ளைகள் வெளிச்சத்திலே நடக்கும்போது நமக்கும் சந்தோஷம் ஏற்படும். அப்படி நடக்க பிள்ளைகளை உற்சாகப்படுத்துங்கள். நீங்களும் வெளிச்சத்தின் பிள்ளைகளாய் நடந்துகொள்ளுங்கள். அப்பொழுது உங்களைப் பார்க்கிற உங்கள் பிள்ளைகள் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடக்கப்பிரயாசப்படுவார்கள். நாம் இன்றைய நாளில் தியானித்தபடி கர்த்தருக்குள் வெளிச்சமாயிருக்கிற நீங்கள் வெளிச்சத்தின் பிள்ளைகளாக நடந்துகொள்ளுங்கள்.

**கேள்வி**

**அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே நமக்கு மன்னிப்பு உண்டா?**

ஆம், "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய (அதாவது இயேசுவினுடைய) இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது" என தெளிவாக எபே.1:7-ல் படிக்கிறோம். இந்த ஐசுவரியத்தின் கிருபையை அசட்டை செய்யாமல். இயேசுவின் பாடுகளை நோக்கிப்பார்த்து இரட்சிக்கப்படுங்கள். எனக்காக ஒருவர் மரித்திருக்கும்போது அவருடைய உபதேசம் என்ன? அவருடைய போதனை என்ன? என்பதை வேதாகமத்தின் துணைகொண்டு வாசித்து தெரிந்துகொள்ளுங்கள்.

இந்த உலகத்தில் இப்படிப்பட்ட போதனைகள் அநேகருக்கு மதமாக தோன்றுகிறது. பாரம்பரிய கட்டுகள் அவர்களை கட்டிவைத்திருக்கிறது. ஆகையால் இவைகளுக்கு செவிகொடுக்க அவர்களுடைய செவி திறப்பதில்லை. இச்செய்தியை வாசிக்கும் அன்பு வாசகரே, நீ எப்படிப்பட்ட சூழ்நிலையில் வாழ்ந்துகொண்டிருக்கிறாய். உன்னை நீயே இந்த உலகத்தில் இரட்சிக்க முடியாது. உனக்கு ஒரு இரட்சகர் தேவை.

அவர் பரிசுத்தமுள்ளவராகவும் பாவம் அறியாதவராகவும், இவ்வுலகத்திற்கு அப்பாற்பட்டவராகவும் இருக்கவேண்டும். அவர் இயேசு ஒருவரே. அவரே உன் பாவத்தை போக்கும்பலியாக இவ்வுலகத்திற்கு தேவனால் அனுப்பப்பட்டவர். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே நமக்கு பாவமன்னிப்பாகிய மீட்பு உண்டாயிருக்கிறது. இதை அறிந்துகொண்டு இரட்சிக்கப்பட பிரயாசப்படுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



## 35. தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்தினாலே உண்டாயிருக்கிறது - 1கொரி.4:20

## For The Kingdom of God Is Not In Word But In Power

**தே**வனுடைய ராஜ்யம் பலத்தோடு வரும் என்று நம்முடைய ஆண்டவராகிய இயேசு தம்முடைய ஊழியத்தின் நாட்களில் சொல்லியிருந்தார். அந்தப்படியாக வந்தது; "அன்றியும், அவர் அவர்களை நோக்கி: இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன், மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மாற்.9:1). மிக சமீபமாக இருக்கக்கூடிய அவருடைய ராஜ்யத்தைக்குறித்து சொன்னார். ஆகையினால் இங்கே நிற்கிறவர்களில் சிலர் தேவனுடைய ராஜ்யம் பலத்தோடே வருவதைக் காணுமுன் மரணத்தை ருசிபார்ப்பதில்லையென்றார்.

இவைகள் தனியேல் புத்தகத்தில் தீர்க்கதரிசனமாக உரைக்கப் பட்டுள்ளது. "அந்த ராஜாக்களின் நாட்களில், பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்" என்று வாசிக்கிறோம் (தானி.2;44). உலகத்தில் தோன்றிய ராஜ்யங்கள் எல்லாம் தேவனால் அனுமதிக்கப்பட்டவைகளே. தேவனே ராஜாவாக இருந்தும் இஸ்ரவேலர் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று உலக ராஜ்யங்களைப் பார்த்து கேட்டபடியினாலே அவர்களுக்கு ராஜாக்களையும் ராஜ்யங்களையும் ஏற்படுத்தினார்.

இந்த ராஜ்யங்களும் மற்ற ராஜ்யங்களும் நிரந்தரமான ராஜ்யங்கள் அல்ல. அவைகள் தற்காலத்துக்கேற்றவைகள். அவைகள் இரும்பும் வெண்கலமும் களிமண்ணும் கலந்த ராஜ்யங்கள். தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட கல்லுக்கு முன்பாக அவைகள் எம்மாத்திரம் அது மோதினவுடனே அவைகள் நொருங்கிப்போயின. அந்தப்படியாக கிறிஸ்துவானவர் சிலுவையில் மரித்து உயிர்த்தெழுந்து பெந்தெகொஸ்தே என்னும் நாளிலே மூவாயிரம் அங்கத்தினர்களுடன் அவருடைய மெய்யான ஆவிக்குரிய ராஜ்யம் ஆரம்பமானது.

இந்த ராஜ்யத்திற்கு காத்திருந்த யோசேப்பை குறித்து நாம் லூக்கா 23:51-ம் வசனத்தில் படிக்கிறோம். "யோசேப்பு என்னும் பேர்கொண்ட ஒரு ஆலோசனைக்காரன் இருந்தான்; அவன் உத்தமனும் நீதிமானுமாயிருந்தான். அவன் யூதருடைய பட்டணங்களிலொன்றாகிய அரிமத்தியாவிலிருந்து வந்தவனும், தேவனுடைய ராஜ்யத்துக்குக் காத்திருந்தவனும், யூதர்களுடைய ஆலோசனைக்கும் செய்கைக்கும் சம்மதியாதவனுமாயிருந்தான்" என்று படிக்கிறோம். இந்த யூதனாகிய யோசேப்பு தானியேல் புத்தகத்தில் சொல்லப்பட்ட தேவனுடைய ராஜ்யத்திற்கு காத்திருந்தான். அது இயேசுவினுடைய மரணத்தின் மூலமாக அவருடைய ராஜ்யமாகிய சபை உருவாகப்போகிறது என்பதையும் அறிந்தவனாயுமிருந்தான்.

இந்த ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருந்தது. அப்போஸ்தலருடைய நாட்களில் வல்லமையோடு செயல்பட்டதை காண்கிறோம். பவுல் சொல்லும்போது; "எங்கள் சுவிசேஷம் உங்களிடத்தில் வசனத்தோடே மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும், முழுநிச்சயத்தோடும் வந்தது; நாங்களும் உங்களுக்குள்ளே இருந்தபோது உங்கள் நிமித்தம் எப்படிப்பட்டவர்களாயிருந்தோமென்று அறிந்திருக்கிறீர்களே" என்றார் (1தெச.1:5). இந்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அப்போஸ்தலர்கள் எடுத்துச்சொல்லும்போது அது வெறும் வார்த்தையாக மாத்திரமல்ல வல்லமையோடு கிரியை நடப்பிக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொண்டவர்கள் முழுபெலத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

உலகராஜ்யத்தின் காரியங்களுக்கும் செயல்பாடுகளுக்கும் அப்பாற்பட்டதாக இருந்தது. ஆகையால் மேலும் பவுல் சொல்லும்போது; "என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது" என்கிறார் (1கொரி.2:5). இன்றைக்கு பேச்சினால் சிலர் சிலரை மயக்கிவிடுகிறார்கள். அந்தவிதமான தந்திரமுள்ளதாகவும் நயவசனிப்புள்ளதாகவும் இல்லை. ராஜ்யத்தின் சுவிசேஷம் ஆவியினாலும் பெலத்தினாலும் வல்லமையுள்ளதாகவும் அது உறுதிப்படுத்தப்பட்டதாகவும் இருந்தது.

அவருடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு முன்பாக இயேசு அப்போஸ்தலர்களைப் பார்த்து சொன்னார்; "பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்" (அப்.1:8). இவர்களைப் பெலப்படுத்தினவர் கர்த்தர். அவர் சொன்னபடியே பெந்தெகொஸ்தே என்னும் ஐம்பதாவது நாளில்



அப்போஸ்தலர்கள் முழுபெலத்தையும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக பெற்றுக் கொண்டார்கள்.

அதன்பின்பு கர்த்தருடைய வார்த்தையின்படி அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பயன்படுத்தப்பட்டார்கள். அவர்களுடைய வசனம் வல்லமையுள்ளதாயிருந்தது. முதலாவது எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அறிவித்தனர் பின்பு உலகமெங்கும் கர்த்தருக்குச் சாட்சியாக அவர்கள் எடுத்துப் பயன்படுத்தப்பட்டனர். இன்றைக்கு நாம் கிறிஸ்தவர்களாகவும் அவருடைய ராஜ்யத்தின் சுவிகாரபுத்திராகவும் இருக்கிறோமென்றால் அப்போஸ்தலர்களால் சொல்லப்பட்ட ராஜ்யத்தின் சுவிசேஷம் வசனம் நமக்கும் வந்தடைந்தது. இது ஒரு உலகப்பிரகாரமான மார்க்கம் என்றால் இந்த அளவு வளர்ச்சியடைந்திருக்காது.

இது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட மார்க்கமாகையால் வல்லமையோடு செயல்பட்டது. அப்போஸ்தலர்களைக் கொண்டு தேவன் அநேக அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி கிருபை செய்தார். அது வெறும் வசனத்தோடே மாத்திரம் செயல்படவில்லை பரிசுத்த ஆவியானவருடைய முழுபெலத்தோடே கிரியை நடப்பிக்கப்பட்டது. ஆகையால் அன்பானவர்களே, தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்தினாலே உண்டாயிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

இந்த ராஜ்யத்தைக்குறித்து நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இன்றைக்கு ராஜ்யத்தின் சுவிசேஷத்தை அநேகர் சொல்லிவருகிறார்கள். அந்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தின் வல்லமை பல இடங்களில் வல்லமையோடு செயல்பட்டு வருகிறது. நாம் அதை பலவந்தமாக சொல்லவேண்டியதில்லை. அதை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள். அதனுடைய மகிமையை கண்டுகொள்வார்கள். நாம் அதை திரித்து கூறவேண்டியதில்லை அல்லது கர்த்தருக்காக பொய்சொல்லவேண்டிய அவசியமுமில்லை. சிலர் சாட்சி சொல்லுகிறேன் என்று கூட்டியும் குறைத்தும் சொல்லுகிறார்கள். இதனால் கர்த்தருடைய ராஜ்யம் விரிவுபடுத்தப்படுமா? அப்படி செய்வதை தேவன் ஏற்றுக்கொள்வாரா?

பொய்யினால் தேவனுடைய ராஜ்யத்தின் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டியதில்லை. அதை தேவன் ஏற்றுக்கொள்ள மாட்டார். அவர் இந்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தின் வல்லமையை வெளிப்படுத்தியிருக்கிறார். ஆண்டவர் இயேசு ராஜ்யத்தின் தலைவராகவும் அதன் அதிபதியாகவும் இருக்கிறார். அந்த அதிபதியை கொன்றுபோட்டனர். பரலோகத்தின் தேவன்

அவரை மூன்றாம் நாள் எழுப்பி தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். அப்பொழுது இருந்த அரசு இதைக் கண்டு ஆச்சரியப்பட்டது. ஜனங்களும் ஆச்சரியப்பட்டனர். அதன் பின்பு கர்த்தர் தம்முடைய அப்போஸ்தலர்களை எடுத்துப் பயன்படுத்தினார்.

இந்த ராஜ்யத்தின் அங்கமாக நீங்கள் இருக்கின்றீர்களா? அப்படியானால்; "உங்களுக்குள்ளதை நான் வருமளவும் பற்றிக்கொண்டிருங்கள்" என்று திருவுளம்பற்றுகிறார் (வெளி.2:25). அநுதினமும் தேவனுடைய வார்த்தைகளை கேட்கிறோம், பேசுகிறோம் இவைகள் மட்டும் போதாது ஏனெனில் தேவனுடைய ராஜ்யம் பேச்சிலே அல்ல பெலத்திலே உண்டாயிருக்கிறது. ஆகையால் இயேசுகிறிஸ்துவானவர் வரும்வரை நாம் பெற்றுக்கொண்ட இந்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பற்றிக்கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

சிலர் பாதியிலே விசுவாசத்தை விட்டு மறுதலித்துப்போய் விடுகின்றனர். தங்களுக்கு வரும் பாடுகள் பிரச்சனைகளினால் நிலைநிற்க முடியாமற்போய்விடுகிறார்கள். அப்போஸ்தலர்கள் ராஜ்யத்தின் சுவிசேஷத்தை பெற்றபடியினாலே ராஜவாழ்க்கை வாழ்ந்தார்களா? அநேகர் தவறாக புரிந்து கொள்கிறார்கள். அப்போஸ்தலர்கள் அநேக பாடுகளை ராஜ்யத்தினிமித்தம் அநுபவித்தார்கள். கொஞ்சங்குறைய அநேகர் மரணத்தை தழுவினார்கள். ஸ்தேவான் கல்லால் அடித்துக்கொலை செய்யப்பட்டான். யோவான்ஸ்நானகன் சிரச்சேதம் செய்யப்பட்டான். இவர்களெல்லாரும் ராஜ்யத்தின் நிமித்தமாக பாடுகளை அநுபவித்தார்கள்.

கர்த்தருடைய வார்த்தையின்படி சாட்சியுள்ளவர் களாக இருந்தார்கள். "ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருக்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்" என்கிறார் எபிரெய ஆசான் (எபி.12:1).

எண்ணிலடங்கா வேதாகம சாட்சிகளைக் குறித்து நாம் தியானிக்கிறோம். நம்முடைய விசுவாசத்தை துவக்குகிறவரும் அதை முடிக்கிறவரும் இயேசுவே. இந்த விசுவாசத்தைக் காத்துக்கொண்டு இரட்சிப்பின் சுவிசேஷவசனத்திற்கு கீழ்ப்படிந்து ராஜ்யத்தின் பிள்ளைகளாக தொடர்ந்துநிலைத்திருங்கள். 1கொரிந்தியர் 13:1-முதல் சிலவசனங்களை நாம் வாசிக்கும்போது; "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும்



பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம்போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப்பேர்க்கத்தக்கதாகச் சகல விசவாசமுள்ள வனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை. எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம் பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" எனக் காண்கிறோம் (1கொரி.13:1-3).

இந்த ராஜ்யத்தின் சுவிசேஷத்தின் வல்லமை பேச்சிலே அல்ல என்பதை நாம் முதலாவது புரிந்துகொள்ளவேண்டும். சிலர் நான் அந்த வரத்தைப்பெற்றிருக்கிறேன் இந்த வரத்தைப்பெற்றிருக்கிறேன் என்று சொல்லி பெருமை அடித்துக்கொண்டு திரிகிறார்கள். தேவன் அன்பாயிருக்கிறார். அவருடைய ராஜ்யத்தின் வேலைகளும் அன்பு நிறைந்ததாக இருக்கிறது. என் சரீரத்தையே சுட்டெரிக்கக் கொடுத்தாலும் அன்பு எனக்கிராவிட்டால் ஒன்றுமில்லை என்கிறார் பவுல். இப்படிப்பட்ட அகாப்பே அன்பு உங்களிடத்தில் இருக்கிறதா? அப்படியிருந்தாலே நீங்கள் பெலமுள்ள ராஜ்யத்தின் பிள்ளைகள். அந்நியபாஷை இரட்சிப்புக்கு அடையாளமாக இருக்கிறது என்கிறார்கள். ஒருவன் தேவதூதர் பாஷைகளை பேசினாலும் அவனிடத்தில் அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை.

ஒபதியா என்ற தேவமனிதனை குறித்து நாம் 1இரா.18:4ம் வசனத்தில் படிக்கிறோம். அவன் ஒரு ராஜ்யத்தில் வேலைசெய்துகொண்டு தன்னுடைய சொந்த பணத்தை செலவுசெய்து நூறு தீர்க்கதரிசிகளை காப்பாற்றி வந்தான். அப்பொழுது அந்த தீர்க்கதரிசிகளுக்கு விரோதமாக அந்த ராஜ்யம் செயல்பட்டது. ஒபதியாவோ அந்த ராஜ்யத்தில் வேலைசெய்துகொண்டும் அந்த ராஜ்யத்திற்கு பயப்படாமல், தேவனுக்கு பயந்தபடியால் தேவனுடைய தீர்க்கதரிசிகளை போஷித்தான். இது அவனுடைய பெலத்தைக் காட்டுகிறது. பேசிவிடலாம் ஆனால் செயல்படுத்துவது மிக கடினம். ஒபதியாவோ எத்தனை கஷ்டத்தை அநுபவித்திருப்பான். அக்காலத்திலே பயங்கரமான பஞ்சம் அந்த பஞ்சகாலத்திலும் ஒபதியா தீர்க்கதரிசிகளை ராஜ்யத்திற்கு தெரியாமல் பராமரித்தான். தினமும் அப்பமும் தண்ணீரும் கொடுத்து அவர்களை அந்த ராஜ்யத்தின் கொலைவெறியிலிருந்து காத்தான்.

இன்றைக்கு நீங்களும் நானும் தேவனுடைய ராஜ்யத்தின் புத்திரராயிருப்போமானால், இந்த ஒபதியாவைப்பேல தேவனுடைய ராஜ்யம் பெலத்திலே உண்டாயிருக்கிறது என்பதை நம்முடைய நற்கிரியை மூலமாக ஜனங்களுக்குக் காண்பிக்கவேண்டும்.

**கேள்வி**

**ராஜ்யத்தின் புத்திரரைக்குறித்து சொல்லப்படும் முடிவு என்ன?**

"அநேகர் கிழக்கிலும் மேற்கிலுமிருந்து வந்து, பரலோகராஜ்யத்தில் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்களோடே பந்தியிருப்பார்கள். ராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளிலே தள்ளப்படுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்குமென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்" (மத்.8:11,12). இந்த வசனத்தைக் கேட்கும்போது மிகுந்த மனவேதனை உண்டாகின்றது. ராஜ்யத்தின் புத்திரராய் வாழ்ந்தவர்களுக்கு கிடைக்கப்போகும் முடிவு அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். ஏன் இந்த நிலை?

இயேசு சொல்கிறார்; "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை" என்றார் (மத்.7:21). தேவனுடைய சித்தத்தை அறிந்தும் அதின்படி வாழாதவன் ராஜ்யத்தின் புத்திரனாயிருக்கமாட்டான். நீங்கள் தேவனுடைய சித்தம் செய்தால் நித்தியமான ராஜ்யத்தை சுதந்தரிப்பீர்கள். நீங்கள் சுதந்தரிக்க உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 36. என் ஜனம்

## My People

**எ**ன் ஜனம் - My people என்று சொல்லி, கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஆதிமுதலாக நேசித்து வருகிறார். "நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்தமான ஜனங்கள்; பூமியின்மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத் தெரிந்துகொண்டார்" (உபா.14:2). கர்த்தர் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலரைப் பார்த்து தம்முடைய தீர்க்கதரிசியைக் கொண்டு பேசினார். இன்றைக்கு நீங்கள் இவர்களைப்போல கர்த்தரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனமாகயிருக்கிறீர்களா? கர்த்தர் தாம் தெரிந்துகொண்ட ஜனங்களை நேசிக்கவும் போஷிக்கவும் அறிந்திருக்கிறார்.

அவர்களை எல்லாவிதமாக இக்கட்டுகளுக்கும் விடுவித்து அவர்களை காக்கிறார். ஆகையால் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் அவருடைய நாமத்தை பூமியெங்கும் பிரஸ்தாபப் படுத்த வேண்டும். "நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத்



தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" என்கிறார் அப்போஸ்தலனாகிய பேதுரு (1பேது.2:9). இப்படித் தெரிந்துகொள்ளப் பட்டவர்கள் பரிசுத்தமான ஜாதியாகவும், அவருக்குச் சொந்தமான ஜனமாகவும் இருக்கிறார்கள். இது எத்தனை ஆசீர்வாதமான வசனம் என்று பார்த்தீர்களா? இப்படி ஆசீர்வாதத்தை பெற்ற ஜாதி வேறே எது? அன்பானவர்களே, இந்தவிதமாக தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தான் இஸ்ரவேலர்கள்.

ஆனால் அவர்களோ, ஜீவனுள்ள தம்மை விட்டுவிட்டார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். "என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்" (எரே.2:13). அநேகர் ஜீவனுள்ள தேவனை விட்டு விட்டு தங்களுடைய ஆலோசனைப்படி வாழ்க்கையை மாற்றியமைத்துக் கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பிரயாசம் எல்லாம் வீணாய்போய்விடுகிறது. நன்கு சம்பாத்தியம் பண்ணுகிறார்கள். ஆனால் கடனாளியாக வாழ்கிறார்கள்.

தங்களுடைய பிரயாசத்தின் பலன் ஒன்றும் நிற்பதில்லை. தண்ணீர் நிற்காத தொட்டிகளைப்போல அவர்களுடைய வாழ்க்கையில் சம்பாதிக்கிற பணம் அவர்களுக்கு ஆசீர்வதாமாக இருப்பதில்லை. இதற்கு முக்கிய காரணம் அவர்கள் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய தேவனை விட்டுவிட்டார்கள் என்பதே. நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய தேவனையும் அவருடைய உபதேசத்தையும் விட்டுவிடாது காத்துக் கொள்ளுங்கள்.

ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து பிதாவைநோக்கி ஜெபிக்கும்போது; "நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன் பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும்" என்று ஜெபித்தார் (யோவா.17:11). தேவன் குறிப்பிட்ட ஜனங்களை தம்முடைய ஜனங்களாக தெரிந்துகொண்டதினிமித்தம் ஆண்டவர் இங்கு ஜெபிக்கும்போது நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும் என்று ஜெபிக்கிறார். ஆக, ஆண்டவர் இயேசு தம்முடைய ஜனங்களுக்காக மன்றாடியிருக்கிறதை நாம் வாசிக்கிறோம். நாம் தேவன் தெரிந்துகொண்ட ஜனங்களை நேசிக்கிறோமா? அவர்களுக்காக ஜெபிக்கிறோமா?

அப்படிப்பட்டவர்களுக்கு கர்த்தர் நிமித்தமாக உதவிசெய்கிறோமா? என்பதை எண்ணிப்பாருங்கள்.

ரூத் என்ற பெண்ணைக்குறித்து நாம் வேதாகமத்தில் படிக்கிறோம். அவளோ ஒரு புறஜாதிபெண். தன் கணவன் இறந்தபின் தனது மாமியார் நகோமியை விடாது பற்றிக்கொண்டாள். நகோமியோ அவளைப்பார்த்து; இதோ, உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப்போய்விட்டாளே; நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ என்றாள்;

"அதற்கு ரூத்: நான் உம்மைப்பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக்குறித்து, என்னோடே பேசவேண்டாம்; நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்றாள்" (ரூத் 1:16). இவளுடைய நம்பிக்கையை பார்த்தீர்களா? மற்றவளைப்போல தன் ஜனத்தண்டைக்கும் தன் தேவர்களண்டைக்கும் திரும்பிப்போகாமல், நகோமியை பின்தொடர்ந்தாள்.

நகோமியின் தேவன் ஜீவனுள்ளதேவன் என்பதையும், நகோமியின் ஜனம் ஆசீர்வதிக்கப்பட்ட ஜனம் என்பதையும் அறிந்தாள். ஆகையால் நகோமியை விடாது பின்பற்றி உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் என்றும் உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்றும் அன்று எடுத்த தீர்மானத்தில் உறுதியுடனிருந்து தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டாள். இந்தவிதமான உறுதி உங்களுக்குள் இருக்கிறதா? ரூத்தைப்போல தேவனுடைய ஜனங்களோடு சோர்ந்துகொண்டு தேவனை ஆராதித்து வருகிறீர்களா? அப்படிச்செய்யும்போது நீங்களும் ரூத்தைப்போல ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

ரூத்தைப்போல எஸ்தர் என்ற ஒரு பெண்ணைக்குறித்துப் படிக்கிறோம். அவள் தன் ஜனத்தின்மீது மிகவும் பற்றுள்ளவளாக இருந்தாள். ஆமான் என்று சொல்லக்கூடிய மனுஷன் யூதர்களுக்கு விரோதமான காரியங்களை செய்துகொண்டுவந்தான். இதை அறிந்த எஸ்தர் ராஜாவை நோக்கி: "ராஜாவுக்குச் சித்தமாயிருந்து அவர் சமுகத்தில் எனக்குக் கிருபைகிடைத்து, ராஜசமுகத்தில் நான் சொல்லும்வார்த்தை சரியென்று காணப்பட்டு, அவருடைய கண்களுக்கு நான் பிரியமாயிருந்தால், ராஜாவின் நாடுகளிலெல்லாம் இருக்கிற யூதரை அழிக்கவேண்டும் என்று அம்மேதாத்தாவின் குமாரனாகிய ஆமான் என்னும் ஆகாகியன் தீவினையாய் எழுதின கட்டளைகள் செல்லாமற்போகப்பண்ணும்படி எழுதி அனுப்பப்பட



வேண்டும். என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நான் எப்படிப் பார்க்கக்கூடும்? என் குலத்துக்கு வரும் அழிவை நான் எப்படிச் சகிக்கக்கூடும் என்றாள்" (எஸ்தர் 8:5,6).

யூத குலத்திலே பிறந்து தன் ஜனங்களுக்கு ஏற்படவிருந்த அழிவை ராஜசமுகத்திற்கு தெரியப்படுத்தி அதை தடுத்திநிறுத்தினாள். அந்நாட்களிலே நூற்றி இருபத்தேழு நாடுகளிலே இருந்த யூதர்கள் காக்கப்பட்டார்கள். எஸ்தரைப்போல தேவனுடைய ஜனங்கள் காக்கப்பட நீங்கள் போராடியதுண்டா? என் ஜனத்தின்மேல் வரும் பொல்லாப்பை நாம் எப்படிப்பார்க்கக்கூடும் என்றாள். இன்றை நாட்களில் வாழ்ந்துகொண்டிருக்கிற நாமும் தேவனுடைய ஜனங்களை நேசிக்கவும், அவர்களுக்காக குரள்கொடுக்கவும், நம்மை தூண்டுவதாக இச்செய்தி இருக்கிறதல்லவா, மேலும் அவள் ராஜசமுகத்தில் அவர் அழைத்தால் ஒழிய ஒருவரும் உள்ளே போகக்கூடாது என்ற உத்தரவு இருந்தபோதிலும் நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லி துணிந்து ராஜசமுகத்திற்கு சென்றாள். அவளுடைய துணிவு தன் ஜனத்தை எவ்வளவாய் நேசித்திருக்கிறாள் என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகிறது.

இன்றைக்கு நாம் வாழ்ந்தால்போதும். நாம், நம்முடைய குடும்பம் என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தேவனுடைய ஜனங்களைப் பற்றி அக்கரை கொள்வதில்லை. அன்பானவர்களே, தேவன் தம்முடைய ஜனத்தை நேசிக்கிறார். அதைப்போல அவரால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் அவருடைய ஜனங்களை நேசிக்கிறதை நாம் காண்கிறோம். அப்படியிருக்கிறபடியால் நாமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட ஜனங்களை நேசிக்கவும், அவர்களுக்கு உதவிடவும் வேண்டும். அதை இன்றே உங்களுடைய வாழ்க்கையில் துவங்குங்கள்.

நெகேமியா என்ற தேவ மனிதனைப் பற்றி நாம் வேதாகமத்தில்படிக்கிறோம். அவன் தன்னுடைய ஜனத்தை மிகவும் நேசித்து அவர்களை விசாரித்தான். "என் சகோதரரில் ஒருவனாகிய அனானியும், வேறே சில மனுஷரும் யூதாவிலிருந்து வந்தார்கள்; அவர்களிடத்தில் நான் சிறையிருப்பில் மீந்துதப்பின யூதரின் செய்தியையும், எருசலேமின் செய்தியையும் விசாரித்தேன்" என்கிறான் (நெகே.1:2). தேவனுடைய ஜனத்தை விசாரிக்கும் பழக்கம் உங்களிடம் இருக்கிறதா? அவர்கள் எப்படிப்போனால் எனக்கென்ன, என்று சொல்லுகிறீர்களா? இயேசு சொல்லும்போது; "பசியாயிருந்தேன், நீங்கள் எனக்குப்போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன், நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை;

அந்நியனாயிருந்தேன், நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை, வஸ்திரமில்லாதிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங்கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும் காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை யென்பார்" (மத்.25:42,43).

மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். இந்த விஷயத்தில் நெகேமியா தன் ஜனத்தை குறிப்பாக சிறையிருப்பில் மீந்துதப்பின யூதரின் செய்தியையும் எருசலேமின் நிலைமையையும் விசாரித்தான். நாம் சபையாக கூடிவருகிறோம். ஒரு வாரம் வராத சகோதரனையோ சகோதரியையோ விசாரிக்க தவறிவிடுகிறோம். ஏன் அவர்கள் வரவில்லை? அவர்களுக்கு என்னவாயிற்று, சுகமில்லாமல் போனார்களா? அல்லது ஏதாவது பிரச்சனையா? என்று மற்றவர்களிடம் விசாரிப்பதில்லை.

நாம் ஆவிக்குறிய விஷயத்தில் வளர்ச்சியடைந்திருக்கிறோம் என்று சொன்னால் குறிப்பாக நம் ஜனங்களை விசாரிக்க கற்றுக்கொள்ளவேண்டும். நம் ஜனம் என்று சொல்லும்போது உறவினர்கள் அல்ல. தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களே நம் ஜனங்கள் அவர்களை விசாரிக்க மறவாதிருங்கள்.

மேலும், இந்த நெகேமியா ஜெபிக்கும்போது, "உமது அடியாராகிய இஸ்ரவேல் புத்திரருக்காக இன்று இரவும்பகலும் உமக்கு முன்பாக மன்றாடி, இஸ்ரவேல் புத்திரராகிய நாங்கள் உமக்கு விரோதமாகச் செய்த பாவங்களை அறிக்கையிடுகிற அடியேனுடைய ஜெபத்தைக் கேட்கிறதற்கு, உம்முடைய செவி கவனித்தும், உம்முடைய கண்கள் திறந்தும் இருப்பதாக; நானும் என் தகப்பன் வீட்டாரும் பாவஞ்செய்தோம்" என்றான் (நெகே.1;6). நீங்கள் என்றாவது இந்த நெகேமியாவைப்போல உங்களுடைய ஜனங்களுக்காகவும், நீங்கள் தேவனுக்கு விரோதமாக செய்த பாவங்களை அறிக்கை செய்து ஜெபித்ததுண்டா? தன் ஜனங்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காக தேவனை நோக்கி மன்றாடினான்.

நெகேமியாவின் உயர்வான என்னத்தைப் பார்த்தீர்களா? இந்தவிதமான சிந்தையில் நாமும் வளர்சியடையவேண்டும். அதுமட்டுமல்ல எருசலேம் பாழாயிருக்கிறதையும், அதின் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டுக் கிடக்கிறதையும் கண்டு அவைகளை திரும்ப கட்டினான். என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாக இருக்கிறதையும், ராஜா என்னோடே சொன்ன வார்த்தைகளையும் அவர்களுக்கு அறிவித்து, வாருங்கள் எழுந்து கட்டுவோம் என்று சொல்லும்போது அந்த நல்ல வேலைக்கு



தங்கள் கைகளை திடப்படுத்தினார்கள். நெகேமியாவின் முயற்சியினால் அலங்கங்கள் கட்டப்பட்டது. அன்பானவர்களே, இங்கே நெகேமியா மூன்று காரியங்களில் கர்த்தருடைய மக்களை நேசித்திருக்கிறான்.

முதலாவது அவர்களை விசாரித்தான். இரண்டாவது அவர்களுக்காக ஜெபித்தான். முன்றாவது அவர்களை அழைத்து பொல்லாதவர்கள் அக்கினியால் அழித்துப்போட்ட எருசலேமின் அலங்கங்களைக் கட்டினான். இன்றைக்கு நாட்டில் என்ன நடக்கிறது என்பதை நாம் அறிவோம். கர்த்தருடைய பிள்ளைகள் எந்த விதமான சூழ்நிலையில் இருக்கிறார்கள் என்பதையும் அறிவோம். நாம் இந்த நெகேமியாவைப்பேல ஜெபிக்கவும், அவர்களை விசாரிக்கவும், அவர்களோடு சேர்ந்து கர்த்தருடைய ராஜ்யத்தை கட்டவும் செயல்படுவோமானால், நெகேமியாவைப்போல தேவனால் ஆசீர்வதிக்கப்படுவோம்.

**கேள்வி**

**நாம் செய்யவேண்டியதென்ன?**

"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக்கடவோம்" (கலா.6:10). நாம் பொதுவாக உலகத்தில் உள்ள எல்லோரையுமே நேசிக்கக் கற்றுக்கொள்ளவோண்டும். யாரும் நமக்கு வேண்டாதவர்கள் இல்லை. ஆனால் விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கு நன்மைசெய்ய பழகவேண்டும். கண்ட சகோதரனிடத்தில் அன்புகூராதவன் காணாத தேவனிடத்தில் எப்படி அன்புகூறுவான் என வேதாகமம் கேள்வி எழுப்புகிறது. ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மைசெய்யக்கவோம். அப்படிச்செய்யும்போது யோவேலில் செல்லப்பட்டபடி நாம் வெட்கப்பட்டுப்போவதில்லை.

"நீங்கள் சம்பூரணமாகச் சாப்பிட்டு, திருப்தியடைந்து, உங்களை அதிசயமாய் நடத்திவந்த உங்கள் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் துதிப்பீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போவதில்லை. நான் இஸ்ரவேலின் நடுவில் இருக்கிறவரென்றும், நானே உங்கள் தேவனாகிய கர்த்தர், வேறொருவர் இல்லையென்றும் அறிந்துகொள்வீர்கள்; என் ஜனங்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப் போகவில்லை" (யோவேல் 2:26,27).

தேவனுடைய ஜனங்களை நேசித்து, அவர்களுக்கு நன்மைசெய்ய நாடுங்கள். அப்பொழுது கர்த்தருடைய வாக்குத்தத்த ஆசீர்வாதங்கள் உங்களோடு இருந்து உங்களை வழிநடத்தும். உங்களுக்காகவும் உங்களுடைய குடும்பங்களுக்காகவும் ஜெபிக்கிறோம்.

# 37. இருமனமுள்ளவன்

## Double - Minded Man

**ஒ**ரே இருதயத்தை தேவனாகிய கர்த்தர் நம் எல்லோருக்கும் உண்டாக்கியிருக்கிறார். சரீரத்தில் இரண்டு இரண்டாக அநேக அவயவங்கள் உண்டாக்கி இருந்தபோதும். இருதயத்தை மட்டும் ஒன்றாக உருவாக்கியிருக்கிறார். இருதயம் ஒன்றையே சிந்திக்கவேண்டும் என்பதற்காகவே இப்படி உண்டாக்கியிருக்கிறார் என்று கருதுகிறேன். இதை மாற்றி சிந்திக்க முற்படுகிறவர்கள் இருமனமுள்ளவர்களாவே இருக்க பிரயாசப்படுகிறார்கள். "இருமனமுள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்" என்று யாக்கோபு சொல்லுகிறார் (யாக்.1:8). அவன் தேவனுக்கேற்றவைகளை சிந்திக்காமல் உலகக் காரியங்களை சிந்திக்கிறபடியால் அவன் நிலையற்றவனாயிருக்கிறான். ஆகையால் அவன் இருமனமுள்ளவனாயிருக்கிறான். இருவழிகளில் பணம் சம்பாதித்தால் வீடு ஐசுவரியத்தால் பெருகும் என்பார்கள்.

ஆனால் அந்த இருவழிகள் எப்படிப்பட்டவழிகள். நேர்மையான வழிகளா? அல்லது மற்றவர்களை ஏமாற்றும் வழிகளா? சாலொமோன் தமது நீதிமெழிகளில் இப்படியாக சொல்லுகிறார். "இருவழிகளில் நடக்கிற திரியாவரக்காரன் ஐசுவரியவானாயிருந்தாலும், நேர்மையாய் நடக்கிற தரித்திரன் அவனிலும் வாசி" என்கிறார் (நீதி.28:6). ஆம் ஐசுவரியவான் லாசரு சம்பவத்தில் லாசரு தரித்திரனாயிருந்தான். ஐசுவரியவானுடைய வாசலருகே பிச்சைக்காரனாயிருந்தான். அவனோ மரித்து ஆபிரகாம் மடியில் விடப்பட்டான். ஆனால் ஐசுவரியவானோ மரித்து பாதாளத்தில் அதாவது நரகத்தில் வேதனைப்படக்கூடிய இடத்தில் விடப்பட்டான். இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன?

இருவழிகளில் தவறாக நடந்து ஐசுவரியவான் ஆவதைக்காட்டிலும் கொஞ்சத்திலே உண்மையாய் இருந்துகொண்டு தரித்திரனாக இருந்தாலும் ஒரே மனமுடையவனாக இருப்பதே மேல் அல்லவா! ஆகையால் அன்பு நண்பரே நீங்கள் இருமனமுள்ளவர்களா இருக்கப்போகிறீர்களா? அல்லது ஒரே மனதையுடையவர்களா இருக்கப்போகிறீர்களா? இன்றே தீர்மானம் செய்யுங்கள். ஏனெனில்; "உத்தமனாய் நடக்கிறவன் இரட்சிக்கப்படுவான்; மாறுபாடான இருவழிகளில் நடக்கிறவனோ அவற்றில் ஒன்றிலே விழுவான்" (நீதி.28:18). உத்தமனாய் நடக்கிறவனுக்கு இரட்சிப்பு கிடைக்கிறது. இதை பிதாவாகிய தேவன் ஒவ்வொருவருக்கும் கொடுக்க சித்தமுள்ளவராயிருக்கிறார்.



இந்த இரட்சிப்பு நிலையானதாக இருக்கிறது. உலகத்தில் கிடைக்கக்கூடிய ஒரு விடுதலையைப்போல அல்ல இது. இந்த இரட்சிப்பு நித்தியமானதாகவும் நிலையானதாகவும் இருக்கிறது. இவ்வுலகத்திலே மாறுபாடாக நடக்கிறவர்களுக்கோ இந்த இரட்சிப்பு தூரமாக இருக்கும்.

பிலேயாம் என்ற தீர்க்கதரிசியை அறிவீர்கள். அவன் ஒருவிதத்தில் இருமனமுள்ளவனாயிருந்தான். ஆகையால் கர்த்தர் கழுதையின் வாயை திறந்து அவனை எச்சரித்தார். அவனோ, "கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனான்" என்று யூதா 11-ம் வசனத்தில் படிக்கிறோம். தேவனுடைய எச்சரிப்பைக் கேட்டும் பாலாக் என்ற ராஜாவின் வார்த்தைக்கு செவிகொடுத்து இஸ்ரவேலை சபிக்கும்படியாக மேடைகளில் ஏறினான். பாலாக்கின் பணம் அவனை விரைந்தோடச் செய்தது. இதினாலே தேவனுடைய பார்வையில் குற்றவாளியானான். ஒருமுறை சொல்லியிருக்கிற காரியத்தை கர்த்தர் மாற்றுகிறவரல்ல என்பதை நாம் முதலாவது புரிந்துகொள்ள வேண்டும்.

கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டவைகளாயிருக்கிறது. அவைகளை நாம் மாற்றாமல் அப்படியே அவைகளை ஏற்று கீழ்ப்படிந்து நடக்ககற்றுக்கொள்ளவேண்டும். அவைகளின்படி நடந்து ஒரே சிந்தையாகவும் ஒரே மனதுடையவர்களாகவும் இருக்கும்போது தேவனால் ஆசீர்வதிக்கப்படுவோம்.

இருமனமுள்ளவர்கள் தங்களுடைய இருதயங்களை பரிசுத்தபடுத்த யாக்கோபு ஆலோசனை சொல்லுகிறார். "தேவனிடத்தில் சேருங்கள் அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களை பரிசுத்தமாக்குங்கள்" என்கிறார் (யாக்.4:8). அழுக்கு வஸ்திரத்தை துவைத்து அதை வெண்மையாக்கிவிடுகிறோம். நம்முடைய இருதயத்தை பரிசுத்தமாக்குவதெப்படி? இயேசுவின் இரத்தத்தை நாம் விசுவாசித்து ஏற்றுக்கொள்ளும்போது அது பரிசுத்தமாக்கப்படுகிறது. இருமனமுள்ளவர்களா மாறும்போது அப்படிப்பட்ட இருதயம் மீண்டும் அசுத்தமாகிவிடுகிறது. அதை எப்படி சரிசெய்வது? முதலாவது உங்கள் கைகளைச் சுத்திகரிக்கவேண்டும். கையினாலே என்ன பாவம் செய்தோம் என்று நீங்கள் நினைக்கலாம். கையும், காலும், கண்களும், நாவும், நம்முடைய இருதயமும் பாவஞ்செய்ய தூண்டுபவையாக இருக்கிறது.

ஆகையால் உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள், இருமனமுள்ளவர்களே உங்கள் இருதயங்களை பரிசுத்தமாக்குங்கள்

என்கிறார். இவைகளை நாம் அவ்வப்போது பரிசுத்தமாக்கிக்கொண்டே இருக்கவேண்டும். இல்லையேல் சுத்தம்செய்யாத பாளடைந்த பங்களாவைப் போலாகிவிடும். குறிப்பாக ஒவ்வொரு நாளும் நம்முடைய இருதயத்தை பரிசுத்தப்படுத்தவேண்டும். தினமும் குளிக்கின்றோம். அதைப்போல நம்முடைய இருதயத்தின் பாவக்கரைகளை கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு கழுவுகிறோமா? நாவும் நம்முடைய அவயவங்களில் ஒரு முக்கியமான அவயவமாக இருக்கிறது. இதைக்குறித்து வேதாகமம் சொல்லும்போது; "நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலே சபிக்கிறோம். துதித்தலும், சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது" என்கிறார் (யாக்.3:8-10).

இந்த ஆசான் நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது, அதேவேளையில் என் சகோதரரே இப்படியிருக்கலாகாது என்கிறார். ஆக, நாம் செய்யவேண்டியதென்ன? ஒரே நாவாலே துதிக்கவும் சபிக்கவும் கூடாதே. ஆகையால் தேவனால் நமக்கு கொடுக்கப்பட்ட இந்த சரீரத்தில் தேவனையும் அவருடைய உபதேசத்தையும் மகிமைப்படுத்துகிறவர்களா இருக்கவேண்டும். தேவன் நமக்கு சரீரத்தில் கொடுத்திருக்கும் அவயவங்கள் ஒவ்வொன்றும் நம்முடைய ஜீவியகாலமெல்லாம் நன்மைசெய்யவும், நற்சாட்சியுள்ளவர்களா ஜீவிக்கவுமே கொடுத்திருக்கிறார். ஆகையால் தேவசித்தத்தை அறிந்து ஒரே மனதுடையவர்களா இருந்து ஒன்றையே சிந்திக்கவேண்டும்.

மேலும், யாக்கோபு சொல்லுகிறார்; "ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்" (யாக்.3:11-13).

உன் ஊற்றுக்கண் ஆசீர்வதிக்கப்படுவதாக என வேதத்தில் வாசிக்கிறோம். அந்த ஊற்றுக்கண் இரண்டுவிதமான காரியங்களை கொடுக்குமா? ஒரே ஊற்று நீர் இரண்டு விதமான தண்ணீரைக் கொடுக்காது. அதைப்போல அந்தந்த மரம் அதினதின் கனியைக் கொடுக்கும். நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்போமானால் தேவனுக்கேற்ற காரியங்களை செய்யவேண்டும். அவர் விரும்புகிற கனிகளை கர்த்தரில்



நிலைத்திருந்து கொடுக்கவேண்டும். ஆகையால் நாம் நிதானமுள்ளவர்களா இருந்துகொண்டு நம்முடைய கிரியைகள் மூலமாக நலமான காரியங்களை வெளிப்படுத்தவேண்டும். அப்படிச்செய்வீர்களா? அப்படிச்செய்ய ஒவ்வொருநாளும் முயற்சி எடுங்கள் அப்பொழுது உங்கள் முயற்சியையை கர்த்தர் ஆசீர்வதிப்பார்.

இஸ்ரவேலின் தேவனை அறிந்த அநேகர் கர்த்தருடைய ஆலோசனைக்கு விரோதமாக நடந்ததாக நாம் பரிசுத்தவேதாகமத்தில் படிக்கிறோம். "என் ஜனங்கள் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கிறார்கள்; அவர்களுடைய கோல் அவர்களுக்குச் செய்தியை அறிவிக்குமென்றிருக்கிறார்கள்; வேசித்தன ஆவி அவர்களை வழிதப்பித் திரியப்பண்ணிற்று; அவர்கள் தங்கள் தேவனுக்குக் கீழ்ப்பட்டிராமல் சோரமார்க்கம் போனார்கள்" (ஓசி.4:12). ஜீவனுள்ளதேவனை தன் சொந்த தேவனாக பெற்ற இந்த இஸ்ரவேலர் கட்டையினிடத்தில் ஆலோசனை கேட்கும்படியாக சென்றார்கள். இன்றும் குறிசொல்லுகிறவர்களை நாடுகிறவர்களையும் வீணான விக்கிரகங்களிடத்தில் சென்று சீட்டுப்போட்டு அதை எடுத்து இதுதான் நமக்கு சொல்லும் ஆலோசனை என்று தங்களை தாங்களே ஏமாற்றிக்கொண்டு திரிவதைப்போல இஸ்ரவேலர் இரண்டு நினைவுகளால் மாறிப்போனார்கள். இதனால் ஓசியா தீர்க்கன் சொல்லும்போது சோரமார்க்கம் போனார்கள் என்கிறார். சோரமார்க்கம் என்றால் விபசாரமார்க்கம் என காண்கிறோம். தேவனுடைய நியமத்தை மீறி செய்யும் செயல் எல்லாம் விபசாரமாக இருக்கிறது.

மேலும் யாக்கோபு சொல்லும்போது; "சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக" என்கிறார் (யாக்.1:6,7). இருமனமுள்ளவன் சந்தேகப்படுகிறவனாயிருக்கிறான். ஆகையால் அவனுடைய மனம் இதுவா அல்லது அதுவா என்ற சந்தேகத்தோடு அலைகிறது. இப்படிப்பட்ட அநேகரை நம்முடைய வாழ்க்கையில் பார்க்கிறோம். இவர்கள் கர்த்தரிடத்திலிருந்து ஒன்றையும் பெற்றுக்கொள்ள முடியாது. தேவன் கொடுத்த ஒரே இருதயத்தில் ஒரே சிந்தையோடு இருக்கும்போது கர்த்தருடைய சமுகத்திலிருந்து ஒத்தாசை வரும். இப்படி இருமனமுள்ளவர்களுக்கு காரிருள் வைக்கப்பட்டுள்ளதாக யூதாவில் படிக்கிறோம். "இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரை தள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற

நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்;இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" (யூதா 12,13).

ஒரு இடத்தில் நிலைத்திராமல் இங்கும் அங்கும் அலைவார்கள். அப்படிப்பட்டவர்கள் இருமனமுள்ளவர்களாவே இருக்கிறார்கள். இன்னும் சரியானதை தெரிந்துகொள்ளாமல் சந்தேகப்படுகிறவர்களாவும், கடல் அலைகளாகவும், மார்க்கம் தப்பி அலைகிற நட்சத்திரங்களாகவும் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிக்கிறதாக வேதாதகமம் வெளிப்படுத்துகிறது. காரிருள் என்று சொல்லும்போது கடுகளவும் அதில் வெளிச்சத்தை நாம் காணமுடியாது. பொதுவாக அம்மாவாசை அன்று சற்றுநேரம் மின் சப்பளை இல்லையென்றால் நாம் என்ன பாடுபடுகிறோம். நம்முடைய வீட்டில் உள்ள குழந்தைகள் அழ ஆரம்பித்துவிடுகிறது. தட்டு தடுமாறுகிறோம். சில பாத்திரங்களை தவறவிடுகிறோம். என்ன காரணம் வெளிச்சம் இல்லை. ஆகையால் தடுமாறுகிறோம். நித்தியமான காரிருள் இப்படியிருக்குமானால் நம்முடைய நிலைமை என்னவாகும்? சற்று சிந்தித்து, ஒரு மனமுள்ளவர்களா மாறுங்கள். "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனோ இரட்சிக்கப்படுவான்" (நீதி.28:26). தன் இருதயத்தை நம்பி கெட்டுப்போகிற கோடிக்கணக்கான மக்களை நாம் காண்கிறோம். அப்பொழுதே சொன்னாங்க நான் தான் கேட்காம தப்பு பண்ணிட்டேன் என்று புலம்புவார்கள். இதைத்தான் தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன் என வேதம் சொல்லுகிறது. நம்முடைய இருதயத்தை ஆண்டு நம்மை இரட்சிக்கும் கர்த்தரிடம் முழுஇருதயத்தையும் முழுசிந்தையையும் ஒப்புக்கொடுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்.

எலிசாவின் வார்த்தையை நம்பாத பிரதானி எலிசாவின் வார்த்தைப்படியே இரண்டு மரக்கால் வாற்கோதுமை ஒரு சேக்கலுக்கும் ஒரு மரக்கால் கோதுமை மா ஒரு சேக்கலுக்கும் சமாரியாவின் ஒலிமுக வாசலிலே விற்றது அதை கண்களினாலே பார்த்து அதை சாப்பிடாமல் ஜனங்கள் அவனை நெருக்கி மிதித்ததினால் செத்துப்போனான் என்று 2இரா.7-ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். சந்தேகப்படுகிற ஒவ்வொருவனும் இப்படியே இருக்கிறான். உங்களுடைய இருதயத்தில் சந்தேகப்படாமல், ஒரே மனதுடையவர்களா கர்த்தருடைய வார்த்தையை நம்பி ஏற்றுக்கொள்ளுங்கள்.

**கேள்வி**

**பரத்திலிருந்து இறங்கி வராத ஞானம் எப்படிப்பட்டதாயிருக்கிறது?**

"இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும்,



பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது" என்கிறார் யாக்கோபு (யாக்.3;15). அநேகர் இருமனமுள்ளவர்களாக கெட்டுப்போகிறார்கள் என்றால் அதற்கு முக்கிய காரணம். லௌகிக ஞானமுள்ளவர்களா இருந்துகொண்டு தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொள்வது. தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்தும் கொடுக்காமல் எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லி தேவனுடைய வார்த்தைகளை அலட்சியப்படுத்துவது. இப்படிப்பட்டவைகள் பேய்த்தனத்துக் கடுத்ததாயிருக்கிறது. பிசாசு, தேவனை விசுவாசிப்பான் ஆனால் கீழ்ப்படிய மாட்டான். அதைப்போல அவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் ஆனால் அதன்படி நடக்க தங்களை ஒப்புக்கொடுக்கமாட்டார்கள். தொடர்ந்து இரு வழிகளிலே நடப்பார்கள். அதன் முடிவு மரணம். அன்பான சகோதரனே, சகோதரியே, உங்களுடைய இருதயத்தை தேவனுக்கு நேராக ஒருமுகப்படுத்துங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 38. வீட்டைக் கட்டுகிறவர் யார்?

## Who Build The House?

மனிதன் எதை எதையோ கட்டுகிறான். அதில் வளர்ச்சி காண்கிறான். ஆனால் அவனுடைய வீட்டைக் கட்டுவது தேவனாகிய கர்த்தர். "கர்த்தர் வீட்டைக் கட்டாராகில், அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா; கர்த்தர் நகரத்தைக் காவாராகில் காவலாளர் விழித்திருக்கிறது விருதா" என சங்.127:1-ம் வசனத்தில் படிக்கிறோம். ஆம், தேவனாகிய கர்த்தர் மனிதன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்று அவனுக்கு ஏற்றதுணையை கொடுத்து முதல் குடும்பத்தை ஏதேன் தோட்டத்தில் ஆரம்பித்துவைத்தார். அன்றுமுதல் உலகத்தில் இருக்கிற எல்லோருமே இந்த காரியத்தை மட்டும் எந்த கலாச்சாரத்தைச் சேர்ந்தவராகயிருந்தாலும், மொழிபேசுகிறவர்களாக யிருந்தாலும் தங்களுடைய பிள்ளைகளுக்கு தவறாது செய்து திருமணத்தை முடித்து வைக்கிறன்றனர்.

நம்முடைய ஆதிப்பிதாக்களாகிய லாபானும் பெத்துவேலும் இந்த காரியம் கர்த்தரால் வந்தது என்று சொன்னார்கள். ஆம், வீட்டைக்கட்டுவது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. உங்களுடைய வீடு கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட குடும்பமா? அவர் உங்களுடைய வீட்டைக் கட்ட இடம் கொடுங்கள். அப்பொழுது அது ஆசீர்வாதமாக இருக்கும்.

சபையைக் கட்ட கர்த்தராகிய இயேசுவை தேவன் தெரிந்துகொண்டு; "இதோ, தெரிந்துகொள்ளப்பட்டதும் விலையேறப் பெற்றதுமாயிருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன்; அதின்மேல்

விசுவாசமாயிருக்கிறவன் வெட்கப்படுவதில்லை என்று வேதத்தில் சொல்லியிருக்கிறது. ஆகையால் விசுவாசிக்கிற உங்களுக்கு அது விலையேறப்பெற்றது; கீழ்ப்படியாமலிருக்கிறவர்களுக்கோ வீட்டைக் கட்டுகிறவர்களால் தள்ளப்பட்ட பிரதான மூலைக்கல்லாகிய அந்தக் கல் இடறுதற்கேதுவான கல்லும் விழுதற்கேதுவான கன்மலையுமாயிற்று" என்கிறார் (1பேது.2:6,7). இந்த மூலைக்கல்லின்மேல் ஆவிக்குரிய குடும்பம் கட்டப்பட்டு வருகிறது. அப்போஸ்தலர் தீர்க்கதரிசிகள் என்பவர்கள்மேல் இசைவாய் இணைக்கப்பட்டு கட்டப்படுகிறது.

இப்படியாக கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது. இதைக்குறித்து நீங்கள் என்றாவது சிந்தித்ததுண்டா? ஆகையால் ஆண்டவர் இயேசு தமது பிரசங்க வாக்கியத்தில் குறிப்பிடும்போது; "என்னை ஆண்டவரே! ஆண்டவரே! என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன? என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறனென்று உங்களுக்குக் காண்பிப்பேன். ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது. என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின்மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து முழுவதும் அழிந்தது என்றார்" (லூக்.6:46-49).

இன்றைக்கு அநேகர் கர்த்தரை நோக்கி ஆண்டவரே! ஆண்டவரே! என்று சொல்லியும் அவர் சொல்லுகிறபடி செய்யாமல் மண்ணின்மேல் தங்களுடைய அஸ்திபாரத்தை போட்டு அழிக்கப்படுகிறார்கள். தேவன் தம்முடைய சாயலில் மனுஷனை சிருஷ்டித்தார். அவர்களை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார் என காண்கிறோம். இப்படி உண்டாக்கப்பட்ட நாம் உண்டாக்கினவரின் சத்தம் கேட்டு அதற்கு கீழ்ப்படியவேண்டியது எவ்வளவு அவசியம். குடும்பத்தில் உள்ள அனைவருக்குமே அநேக உபதேசங்கள் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக சில காரியங்களை நாம் தியானிக்கலாம். குடும்பத்தில் மெய்யைப் பேச முதலாவது கற்றுக்கொள்ளவேண்டும். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும்.

பவுல் சொல்லுகிறார்; "இயேசுவினிடத்திலுள்ள சத்தியத்தின்படியே, நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து, அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி,



முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள். அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால், பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். திருடுகிறவன் இனித் திருடாமல் குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன். கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள். அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்" (எபே.4:21-32).

இந்தவிதமான சிந்தை உங்களுக்குள் இருக்குமானால் உங்களுடைய குடும்பம் கர்த்தர் சொன்னபடி கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்ட குடும்பமாக இருக்கும். எந்த விதமான சூழ்நிலையிலும், பிசாசுகொண்டுவரும் சகல விதமான தந்திரங்களிலுமிருந்து அப்பொழுது காக்கப்படுவீர்கள். மேற்கண்ட வசனத்தின்படி உங்களுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள். பவுலுடைய மேலான இந்த ஆலோசனைக்கு ஒவ்வொரு நாளும் கீழ்ப்படிந்து நம்முடைய நினைவுகளையும், சிந்தனைகளையும் எடுத்துப்போட்டு வசனத்தை உங்களுடைய இருதயமாகிய பலகைகளில் எழுதிக்கொள்ளுங்கள். அப்பொழுது எல்லாபுத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களை முற்றிலுமாக ஆட்கொள்ளும். அதில் குறிப்பாக; நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள் என்ற வாசகத்தை சற்று உன்னோக்கிப் பாருங்கள். பாவம் தேவனுக்கும் நமக்கும் பிரிவினையை ஏற்படுத்துகிறது. ஆகையால் இங்கு பவுல் குறிப்பிடும்போது கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள் என்கிறார்.

எப்படியாவது நம்மை பாவத்திற்கு அடிமையாக்க வேண்டும் என்பதுவே பிசாசினுடைய என்னமாயிருக்கிறது. இவைகளை நாம் முறியடிக்க பாவத்திற்கு விலகியிருக்க வேண்டும். ஆகையால் அடுத்த வசனத்தில் பிசாசுக்கு இடங்கொடாதிருங்கள் என்கிறார். நாம் இடங்கொடாமல் பாவம் நமக்குள்ளே வர வழி இல்லை. நாம் இடங்கொடுக்கிறபடியாலே பிசாசு அதன் வழியாக உள்ளே வருகிறான். யூதாசுக்குள்ளாக பண ஆசை இருந்தபடியாலே அவனுக்குள் பிசாசு உட்புகுந்தான் என ஆவியானவர் மிகதெளிவாக குறிப்பிடுகிறார். ஆகையால் உங்களில் ஒருவனாகிலும் வேசிக்கள்ளனாயிராதபடி எச்சரிக்கையாயிருங்கள். அப்படிப்பட்டவர்கள் தங்களுக்குத்தாங்களே ஆக்கினையை வருவித்துக் கொள்ளுகிறார்கள்.

நம்முடைய கைகளினாலே நலமான வேலைகளை செய்யக் கற்றுக்கொள்ளவேண்டும். வேலைசெய்ய மனதில்லாதிருக்கிறவன் அவன் சாப்பிடவுங்கூடாது என திருமறை நமக்குப்போதிக்கிறது. ஆகையால் பவுல் சொல்லும்போது; திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாக தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து, பிராயாசப்படக்கடவன் என்கிறார். நீங்கள் நலமான வேலைசெய்ய பிரயாசப்படும்போது; அந்த வேலையையும் உங்களுடைய கைகளின் பிரயாசத்தையும் கர்த்தர் ஆசீர்வதிப்பதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். ஈசாக்கை கர்த்தர் ஆசீர்வதித்தினால் அந்த வருஷத்தில் அவன் நூறுமடங்கு ஆசீர்வாதத்தைப் பெற்றனான். அதைப்போல நீங்களும் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட நலமான வேலைசெய்யுங்கள். அதைப்பேல பேசும்போது; கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜமுண்டாகும்படி பேசுங்கள் என்கிறார். உங்களுடைய பேச்சை வைத்துத்தான் உங்களுடைய காரியங்களை மற்றவர்கள் நிர்ணயிக்க முடியும். ஆகையால் வாய் சுத்தம் கை சுத்தம் தேவை என்பார்கள். நீங்கள் ஒரு கிறிஸ்தவராக சாட்சியுள்ளவராக வாழவிரும்பினால் உங்கள் வாயின் வார்த்தைகளைக்குறித்து மிகவும் கவனமாயிருக்க வேண்டும்.

மேலும், ஆவியானவரைக்குறித்து நாம் படிக்கும்போது; இன்று பரிசுத்த ஆவியானவரைப்பற்றி பலவிதமான போதனைகள் இருக்கிறது. ஆனால் வேதாகமம் மிகதெளிவாக ஆவியானவரைப்பற்றி பேசுகிறது. அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவி என போதிக்கிறது. ஒவ்வெருவரும் விசுவாசிக்கும்போது பரிசுத்த ஆவியானவரால் அவருக்குள்



முத்திரையிடப்படுகிறோம். அன்று முதலே நமக்குள்ளாக ஆவியானவர் வாசம் பண்ணி நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துகிறார். அவருடைய வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது. ஆக, நாம் மீட்கப்படும் நாளுக்கு பரிசுத்த ஆவியானவர் முத்திரையாக இருக்கிறார். ஒரு கடிதம் அனுப்புகிறோம். அக்கடிதம் முத்திரையிடப்படுகிறது. அப்படியானால் அக்கடிதம் ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு அதுவே அத்தாட்சியாக இருக்கிறது. நாமும் மீட்கப்படுவோம் என்பதற்கு பரிசுத்த ஆவியானவர் முத்திரையாக இருக்கிறார்.

ஆகையால் அவர் துக்கப்படும் அளவிற்கு நாம் நடந்துகொள்ளக் கூடாது என பவுல் இங்கு நமக்கு உணர்த்துகிறார். நீங்கள் உங்களுடையவர்கள் அல்ல என்பதை அறிவீர்களா? நாம் கிறிஸ்துவினுடையவர்கள். கிறிஸ்து நம்மை தமது இரத்தத்தை சிந்தி விலைக்கு வாங்கியிருக்கிறார். ஆகையால் நாம் பாவத்துக்கு அடிமைகள் அல்ல. கிறிஸ்துவுக்கு அடிமைகளாக இருக்கிறோம். நம்முடைய சரீரம் கிறிஸ்துவின் சரீரமாக தேவனுடைய ஆலயமாக இருக்கிறது. எனவே பாவத்திற்கு இடங்கொடாதிருக்கவேண்டும். கிறிஸ்துவானவர் நம்மில் வாசஞ்செய்கிறார். பரிசுத்த ஆவியானவர் வசனத்தின் மூலமாக நம்மோடு பேசுகிறார். இதற்கு ஏற்ற வகையில் நம்முடைய ஜீவிமானது காணப்படவேண்டும். அவரை நாம் துக்கப்படுத்தும்போது ஆவியானவர் நம்மைவிட்டு கடந்துசெல்வார். சவுல் கொள்ளையின் மீது கவனம் செலுத்தும்போது ஆவியானவர் அவனைவிட்டு போனார் என காண்கிறோம். ஆகையால், சகலவிதமான கசப்பும், கோபமும் மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்குணமும் உங்களைவிட்டு நீங்கக்கடவது என்கிறார் பவுல்.

நீங்கள் உங்களுடைய வாழ்க்கையில் இவைகளை நீக்கிவிட்டீர்களா? அநேகர் நான் இவைகளை என்னைவிட்டு அகற்றிப்போடும்படியாக முயற்சிக்கிறோன் முடியவில்லை என்பார்கள். ஒரு வீடு தனக்குத்தானே விரோதமாக பிரிந்திருந்தால் அந்த வீடு நிலைநிற்காது. ஆகையால் நம்முடைய சரீரம் நமக்கு விரோதமாக செயல்பட நாம் அனுமதித்தால் அது நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்காது. எனவே அவைகளை கிறிஸ்துவின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும்படியாக அவருடைய வசனங்களுக்கு செவிகொடுத்து நம்மில் எழும்புகிற காரியங்களை சிலுவையினால் ஜெயிக்க முற்படவேண்டும். இச்செய்தியில் நாம் தியானித்தபடி கர்த்தர் உங்களுடைய வீட்டைக் கட்ட இடம்கொடுங்கள். உங்களுடைய குடும்பங்களில் சத்தியம் நிலைக்க சத்தியத்திற்கு செவிகொடுத்து, பிசாசுக்கும் அவனுடைய தந்திரமான காரியங்களுக்கும் இடங்கொடாதிருங்கள்.

**கேள்வி**

**நாம் மன்னிக்கும்போது மகத்தான வெற்றியை நாம் பெறமுடியமா?**

ஆம், இந்த விதமான சிந்தை இருக்கும்போது மகத்தான வெற்றியை நாம் பெறலாம். பவுல் எபேசிய கிறிஸ்தவர்களுக்கு எழுதின கடிதத்தில் நான்காம் அதிகாரம் கடைசி வசனத்தில் இவ்விதமாக குறிப்பிட்டிருக்கிறார். "ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோலு, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் என்கிறார். இந்த விதமான மன்னிக்கும் சிந்தை வந்துவிட்டால் குடும்பங்களில் பிரச்சனை இருக்காது. நாம் எப்படி அவளை மன்னிக்க முடியும் அவள் செய்த காரியம் என்னவென்று தெரியுமா? நான் மன்னித்தாலும் அந்த கடவுளே அவளை மன்னிக்கமாட்டார் என்று சொல்லி இப்படிப்பட்ட வார்த்தைகளினாலே அநேகர் அடிக்கிக்கொண்டே போவார்கள். இதற்கு முடிவுஇல்லை. ஆனால் அதனுடைய முடிவு இருவரும் பிரிந்து போவார்கள். ஒருவருக்கொருவர் மன்னிக்கும் சிந்தை இருக்கும்போது. அங்கே சமாதானம் உண்டாகும்.

ஆகையால் கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல என குறிப்பிடுகிறார். நம்முடைய பாவத்தை நாம் அறிவோம். அவ்வளவு மோசமான நம்முடைய பாவத்தை தேவன் கிறிஸ்துஇயேசுவுக்குள் மன்னித்திருக்கும்போது, நாம் மட்டும் மற்றவர்கள் குறிப்பாக குடும்பத்தில் உள்ளவர்கள் செய்த தவறை மன்னிக்காமல் இருப்போமானால் அது எவ்வளவு பெரிய விபரீதத்தை ஏற்படுத்தும் என்பதை எண்ணிப்பாருங்கள். நீங்கள் மற்றவர்களை மன்னிக்கும்போது மகத்தான வெற்றியை பெற்றுக்கொள்வீர்கள். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

## 39. நூறுமடங்கு பலன்

## Hundredfold Blessing

**க**ர்த்தரை நம்புகிறவர்கள் நூறுமடங்கு ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நாம் நம்முடைய கவனத்தை பரிசுத்த வேதாகமத்திற்கு திருப்புவோமானால் ஈசாக்கு என்று அழைக்கப்பட்ட ஆபிரகாமின் குமாரன் நூறுமடங்கு தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டான். அவன் எவ்விதமாக நூறுமடங்கு ஆசீர்வாதத்தை தேவனிடத்திலிருந்து பெற்றான் என்றால். முதலாவது கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்தான். இன்றைக்கு நீங்களும் நானும் கீழ்ப்படிகிறோம். ஆனால் இந்த ஈசாக்கைப்போல நாம் கீழ்ப்படிகிறோமா? "கர்த்தர் அவனுக்குத்



தரிசனமாகி, நீ எகிப்துக்குப் போகாமல், நான் உனக்குச் சொல்லும் தேசத்திலே குடியிரு" என்றார் (ஆதி.26:2).

ஒருவேளை இந்த இடத்தில் நாமாக இருந்திருந்தால் என்ன சொல்லுவோம். எகிப்து நல்ல தேசம் நான் அங்கேபோய் குடியிருக்கிறேன் ஆண்டவரே என்று தேவனுக்கே ஆலோசனை சொல்லியிருப்போம் அல்லவா! ஈசாக்கோ அப்படியில்லாமல் கர்த்தர் சொன்ன தேசத்தில் குடியிருந்தான். அவனுக்கு கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தம் என்னவென்றால்; "இந்தத் தேசத்திலே வாசம்பண்ணு; நான் உன்னோடேகூட இருந்து, உன்னை ஆசீர்வதிப்பேன்; நான் உனக்கும் உன் சந்ததிக்கும் இந்தத் தேசங்கள் யாவையும் தந்து, உன் தகப்பனாகிய ஆபிரகாமுக்கு நான் இட்ட ஆணையை நிறைவேற்றுவேன் என்றார்" (ஆதி.26:3). கர்த்தர் அவனோடு இருந்தபடியால் இந்த நூறுமடங்கு ஆசீர்வாதத்தை அவன் பெறமுடிந்தது. கர்த்தர் இல்லாத வாழ்க்கை கால் வாழ்க்கைகூட இல்லையென்றே சொல்ல வேண்டும். ஆநேக குடும்பங்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறமுடியாமல் இருக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் அங்கே அவர்களோடு கர்த்தர் இல்லை. அவர் இருப்பாரானால் ஈசாக்கைப்போல நாமும் ஆசீர்வதிக்கப்படுவோம். கர்த்தர் நம்மோடு இருக்க ஈசாக்கைப்போல அவருடைய வார்த்தைக்கு முதலாவது நாம் செவிகொடுக்கவேண்டும். தேவன் நமக்குக் கொடுக்கும் இடம் நல்ல இடமாகவே இருக்கும்.

லோத்தைப்போல இடத்தைப் பார்க்காமல் கொடுத்தவரை நோக்கிப்பார்த்து அவருடைய சித்தம்செய்யும்போது நாம் ஆசீர்வதிக்கப் படுவோம். "உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" என நீதி.3:6-ம் வசனத்தில் படிக்கிறோம். நாம் எங்கே போனாலும் கர்த்தரையும் அவருடைய கிருபையுள்ள வசனங்களையும் நாம் நினைக்கவேண்டும். அப்பொழுது எல்லாவற்றிக்கும் வல்லவராகிய தேவன் நம்மோடிருப்பார். அதையே சாலொமோன் இங்கு நமக்கு நினைப்பூட்டுகிறார். சிலர் இருப்பிடத்தை விட்டு மற்றஇடங்களுக்கு சென்றவுடன் இருப்பிடத்தையும் மறந்துவிடுவார்கள். தங்களை அந்த இடத்திற்கு அழைத்து வந்த தேவனையும் மறந்துவிடுவார்கள்.

புதியவைகளை கண்ட சந்தோஷத்தில் அங்குள்ளவைகளால் ஈர்க்கப்படும்போது அவர்களுடைய இச்சையை அறிந்துகொண்ட பிசாசு அவர்களில் களைகளைவிதைத்து தந்திரமாக அவர்களை வசப்படுத்திவிடுவான். பின்பு யார் சொன்னாலும் கேட்காமல், தாங்கள் ஏதோ புதுமையானதைக் கண்டு கொண்டதைப்போல தங்களைத் தாங்களே மேன்மைப்படுத்திக்கொண்டு கர்த்தரைவிட்டு பின்வாங்கிப்போவார்கள்.

ஈசாக்குக்கோ கர்த்தர் மேலும் சொல்லும்போது; "ஆபிரகாம் என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியினால், நான் உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணி, உன் சந்ததிக்கு இந்தத் தேசங்கள் யாவையும் தருவேன்; உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றார்" (ஆதி.26:4,5).

பெற்றோர் செய்த நன்மைகள் பிள்ளைகளுக்கு கிடைப்பதை இங்கே நாம் வாசிக்கிறோம். ஆபிரகாம் கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடந்தார். அதனால் கர்த்தர் ஆபிரகாமின் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போலப் பெருகப்பண்ணினார். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு நண்பனே! நீ கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணங்களுக்கும் செவிகொடுப்பாயானால் உன் சந்ததியையும் கர்த்தர் ஆசீர்வதிப்பதற்கு சித்தமுள்ளவராயிருக்கிறார். நீ ஆபிராகாமோடு சேர்ந்து ஆசீர்வதிக்கப்படுவாய்.

"ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதைவிதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்" (ஆதி.26:12). தேவன் சொன்னபடி அந்த தேசத்தில் குடியிருந்துகொண்டு அவன் விவசாயம் செய்ய ஆரம்பித்தான். துவங்கின அந்த வருஷத்தில் நூறுமடங்கு ஆசீர்வாதம் கிடைத்தது. துவங்கின வருஷத்திலே போட்ட முதலையே இழக்கிற அநேகரைக்குறித்து நாம் கேள்விப்படுகிறோம் அல்லது அவர்கள் அத்தோடு அந்ததொழிலை விட்டுவிட்டு வேறே வேலைக்கு திரும்புகிறதைக் குறித்து கேள்விப்படுகிறோம். ஆனால் ஈசாக்கு கர்த்தருடைய வார்த்தையை நம்பி அவன் செயல்பட்டபடியால் நூறுமடங்கு ஆசீர்வதிக்கப்பட்டான். "கர்த்தரின் ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும்; அதனோடே அவர் வேதனையைக் கூட்டார்" என காண்கிறோம் (நீதி.10:22).

உங்களுடைய தொழில் உங்களுக்கு ஆசீர்வாதமாக இல்லையென்றால் அதை மறு ஆய்வு செய்யுங்கள். கர்த்தருக்கு ஏற்ற காரியத்தை செய்துகொண்டு இருக்கின்றீர்களா? அல்லது மற்றவர்கள் கொடுத்த ஆலோசனையின்படி உங்களுடைய தொழிலை செய்துகொண்டிருக்கிறீர்களா? என்பதை சற்று தேவசமுகத்தில் வைத்து சிந்தியுங்கள். கர்த்தர் உங்களை அவருடைய வல்லமையுள்ள வசனத்தின்படி நடத்துவார்.

அவருடைய ஆசீர்வாதமே நமக்கு ஐசுவரியத்தைத் தரும், அவருடைய ஆலோசனை நம்முடைய வாழ்க்கையில் சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொடுண்டுவரும். ஈசாக்கு அந்த தேசத்திலே



விருத்தியடைந்தான் என காண்கிறோம். "அவன் ஐசுவரியவானாகி, வரவர விருத்தியடைந்து, மகா பெரியவனானான்" (ஆதி.26:13).

பொதுவாக வளர்ச்சி அநேகருக்கு பொறாமையைக் கொண்டுவரும். ஈசாக்குடைய வாழ்க்கையிலும் அது நடந்தது. "அவனுக்கு ஆட்டுமந்தையும், மாட்டு மந்தையும், அநேக பணிவிடைக்காரரும் இருந்தபடியினாலே பெலிஸ்தர் அவன்பேரில் பொறாமைகொண்டு, அவன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் அவனுடைய வேலைக்காரர் வெட்டின துரவுகளையெல்லாம் தூர்த்து மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள்" (ஆதி.26:14,15). பொறாமையோ எழும்புருக்கி என வேதத்தில் படிக்கிறோம். ஈசாக்கைக் கண்ட ஜனங்கள் பொறமைகொண்டனர். அவனுடைய நிலம் நன்றாய் விளைகிறது, அவனுடைய ஆட்டுமந்தைகள், மாட்டுமந்தைகளை பழுகிப் பெருகுகிறது என்று பொறாமைகொள்ள ஆரம்பித்தனர். பொறாமை கொண்டால் அடுத்து என்ன செய்வார்கள் அதை எப்படியாவது தடுக்கவேண்டும் என்று நினைப்பார்கள். ஆகையால் அவனுடைய தண்ணீர் துரவுகளை மண்ணினால் நிரப்பிப்போட்டார்கள்.

சாப்பிடுகிற சாப்பாட்டில் மண்ணை அள்ளிப்போட்டது போல பொறாமைகொண்ட பெலிஸ்த மக்கள் செய்தார்கள். அந்த இடத்தில் நீங்கள் இருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? பதிலுக்கு பதில் செய்து இருப்பீர்கள். அப்படிசெய்யாவிட்டால் உங்களுக்கு தூக்கம் வராது. அப்படியே நீங்கள் தூங்கினாலும் உங்கள் வீட்டில் உள்ள உங்கள் மனைவி உங்களை தூங்கவிடாமல், இந்த மனுஷனுக்கு தூக்கம் ஒரு கேடா? தண்ணீர் துரவுகளை மண்ணைக்கொண்டு நிரப்பிப்போட்டவனை சும்மா விடலாமா? அவனுக்கு நாம என்ன துரோகம் பண்ணினோம்? ஏன் இப்படி செய்தானுக என்று சரமாரியா சொல்லி சண்டையிட செய்திடுவார்கள். ஆனால் ஈசாக்கோ, அவனுடைய மனைவி மற்றும் குடும்பத்தினரோ ஒன்றும் செய்யவில்லை.

பின்பு அந்த எதிர்ப்பை எப்படி சமாளித்தான் என நீங்கள் கேட்கலாம். "ஈசாக்கு அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, கேராரின் பள்ளத்தாக்கிலே கூடாரம் போட்டு, அங்கே குடியிருந்தான்" (ஆதி.26:17). பொல்லாதவர்களை விட்டு விலகினான். இவ்வளவு ஆசீர்வாதம் நிறைந்த இடத்தை எப்படி விட்டுக்கொடுக்க முடியும் என்று நாம் சொல்லுவோம். ஆனால் இப்படிச் செய்த அந்த பொல்லாத பெலிஸ்த மக்களை விட்டு பிரிந்து வேறொரு இடத்தில் குடியிருந்துகொண்டு ஆபிரகாம் வெட்டின துரவை கண்டு அதை சரிசெய்து தன்னுடைய வேலையைத் துவங்கினான். நாமாக இருந்திருந்தால் சலித்துப்போய் ஒன்று அந்த வேலையை விட்டு இருப்போம் இல்லையென்றால் தேவனை நோக்கி

முறையிட்டிருப்போம். அவனோ; "தன் தகப்பனாகிய ஆபிரகாமின் நாட்களில் வெட்டினவைகளும், ஆபிரகாம் மரித்தபின் பெலிஸ்தர் தூர்த்துப் போட்டவைகளுமான துரவுகளை மறுபடியும் தோண்டி, தன் தகப்பன் அவைகளுக்கு இட்டிருந்த பேர்களின்படியே அவைகளுக்குப் பேரிட்டான்" (ஆதி.26:18).

இங்கே நாம் கூர்ந்து கவனிக்க வேண்டிய ஒரு பகுதியிருக்கிறது; என்னவென்றால், பெலிஸ்தர் தூர்த்துப்போட்ட துரவுகளை மறுபடியும் தோண்டிய ஈசாக்கு அந்த துரவுகளுக்கு தன் தகப்பன் என்ன பேர் வைத்திருந்தானோ அதே பெயரையே மீண்டும் வைக்கிறான். இதிலிருந்து நாம் என்ன தெரிந்துகொள்கிறோம். தன் தகப்பன் ஜெபத்தோடு செய்த ஒரு சிறு காரியத்தைக்கூட மாற்றாமல் அதை பின்தொடர்ந்திருக்கிறான் என்பது நமக்கு தெரியவருகிறது. இன்றைக்கு துணிந்து வேதாகமத்தையே மாற்றிப்போதிக்கிற ஜனங்கள் பெருகி இருக்கிறார்கள். ஈசாக்கின் சம்பவம் நமக்கு ஒரு முன்மாதிரியை கொண்டுவருகிறது.

முற்பிதாக்கள் செய்த காரியங்களை நாம் மாற்றாமல் அவைகளை பாதுகாக்கவேண்டிய பொறுப்பு நமக்க இருக்கிறது. சில மியூசியத்தில் வேதாகமத்தின் சுவடுகள் காக்கப்பட்டு வருகின்றன. அப்படி காக்கப்படுவதினால், அவிசுவாசிகள் நம்புவதற்கு அவைகள் அவசியமாக இருக்கிறது. நமக்கும் அவைகளை நினைத்துப்பார்க்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகையால் ஜெபத்தோடு முதாதையர் செய்த காரியங்களை மாற்றாமல் அவைகளுக்கு இருக்கக்கூடிய பெயராலே அவைகளை நாமும் அழைக்க முற்படுவோம்.

ஈசாக்கு இப்படியாக இடம்பெயர்ந்து வேரே துரவுகளை வெட்டி குடியிருந்தும் அவனை பெலிஸ்தர்கள் விடவில்லை. அங்கும் வந்து வாக்குவாதம் பண்ணினார்கள். இந்த துரவு தங்களுடைய என்றார்கள். அவனோ; "உன்னோடு வழக்காடி உன் வஸ்திரத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்றிருக்கிறவனுக்கு உன் அங்கியையும் விட்டுவிடு" என்று கர்த்தர் மத்.5:40-ல் சொல்லியபடி அவன் தான் தோண்டின துரவுகளை பெலிஸ்த மக்களுக்கு விட்டுவிட்டு சென்றான். பின்பு அவ்விடம்விட்டுப் பெயர்ந்து போய், வேறொரு துரவை வெட்டினான்; அதைக்குறித்து அவர்கள் வாக்குவாதம் பண்ணவில்லை; அப்பொழுது அவன்; நாம் தேசத்தில் பலுகும்படிக்கும், இப்பொழுது கர்த்தர் நமக்கு இடம் உண்டாக்கினார் என்று சொல்லி; அதற்கு ரெகொபோத் என்று பேரிட்டான்.

மேலும், "அங்கே அவன் ஒரு பலிபீடத்தைக் கட்டி, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, அங்கே தன் கூடாரத்தைப்போட்டான்.



அவ்விடத்தில் ஈசாக்கின் வேலைக்காரர் ஒரு துரவை வெட்டினார்கள். அவன் செல்லும் இடங்களில் தேவனை தொழுகொண்டான் என்று படிக்கிறோம். நாம் கர்த்தரை தொழுது கொள்ள நினைக்கும்போது அவர் நம்முடைய கைகளின் பிரயாசத்தை ஆசீர்வதிப்பார். அவர் என்னை முதலாவது ஆசீர்வதிக்கட்டும் பின்பு நாம் அவருக்கு அள்ளிக்கொடுப்பேன் என்று அநேகர் சொல்வதைக் கேள்விப்படுகிறோம். முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடவேண்டும் அப்பொழுது இவைகளெல்லாம் கூட கொடுக்கப்படும் என்ற வசனத்தை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. ஈசாக்கு செல்லக்கூடிய இடத்தில் முதலாவது அவன் செய்த காரியம் ஒரு பலிபீடத்தைக் கட்டி கர்த்தரை தொழுதுகொண்டான்.

தேவனை அறியாதவர்கள் வீடு கட்டினால் முதலாவது சாமி ரூம் என்று ஒரு அறையை ஒதுக்குகிறார்கள். இந்த நம்பிக்கைகூட தேவனை அறிந்தவர்களுக்கு வருவதில்லை. நாம் தேவனுக்கு முதலிடம் கொடுக்கக் கற்றுக்கொள்ளுவோம். அவர் நமக்கு எண்ணிலடங்கா ஆசீர்வாதத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகையால் சங்கீதக்காரன் சொல்வதைப்போல சொல்லுவோம்; "இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு, கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன். நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்களெல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்" என்போம் (சங்.116:13,14). உங்களுடைய பிரயாசத்தை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக!

**கேள்வி**

**கர்த்தர் நம்மோடிருக்கும்போது எதிராளிகளின் நிலைமை என்னவாகும்?**

அப்படிப்பட்டவர்களை தேவன் ஒருக்காளும் அழித்துப் போடமாட்டார். அவர்களுக்கு முன்பாக தேவன் நம்மை உயர்த்துவார். ஈசாக்கின் வாழ்க்கையில் அது நடந்தது. "நிச்சயமாய்க் கர்த்தர் உம்மோடேகூட இருக்கிறார் என்று கண்டோம்; ஆகையால் எங்களுக்கும் உமக்கும் ஒரு ஆணை ஏற்பாடு உண்டாகவேண்டும் என்று நாங்கள் நிர்ணயம் பண்ணினோம். நாங்கள் உம்மைத் தொடாமல், நன்மையையே உமக்குச் செய்து, உம்மைச் சமாதானத்தோடே அனுப்பிவிட்டதுபோல, நீரும் எங்களுக்குச் தீங்கு செய்யாதபடிக்கு உம்மோடே உடன்படிக்கை பண்ணிக்கொள்ள வந்தோம். நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவராமே என்றார்கள்" (ஆதி.26:28,29).

சத்துருக்களும் உம்மோடே சமாதான உடன்படிக்கை பண்ணுவார்கள் என்று சொல்லப்பட்டபடி ஈசாக்கை எதிர்த்தவர்கள் கர்த்தர்

அவனோடு இருந்தபடியால் அவனோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்ளும் படியாக வந்தார்கள். அன்பானவர்களே கர்த்தரை நம்பி காரியத்தைச் செய்யுங்கள். ஈசாக்கைப்போல நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 40. துக்கம்
## Sorrow

**வே**தாகமம் இரண்டு விதமான துக்கத்தைப் பற்றி பேசுகிறது. இதைக்குறித்து பவுல் கொரிந்தியருக்கு எழுதிய இரண்டாம் நிருபம் 7:9-ம் வசனத்தில் படிக்கிறோம். "இப்பொழுது சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் துக்கப்பட்டதற்காக அல்ல, மனந்திரும்புகிறதற்கேதுவாகத் துக்கப்பட்டதற்காகவே சந்தோஷப்படுகிறேன்; நீங்கள் ஒன்றிலும் எங்களால் நஷ்டப்படாதபடிக்கு, தேவனுக்கேற்ற துக்கம் அடைந்தீர்களே". ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் துக்கம் வருகிறது. இங்கே பவுல் சொல்லுகிற துக்கம் தேவனுக்கேற்ற துக்கம். இந்த துக்கம் மனந்திரும்புதலை உண்டாக்குகிறது. இந்த விதமான துக்கத்தை அநுபவியாமல் உல்லாசமாக அநேகர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு கர்த்தரைப் பற்றியும், அவருடைய வசனங்களைப் பற்றியும் கவலையில்லை. அநுதினமும் குடித்து, கும்மாளமிட்டு உல்லாசமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தேவனுக்கேற்ற துக்கமுடையவர்கள் அழிந்து போகிற ஆத்துமாவைக்குறித்து கவலையுள்ளவர்களாகவும், அவர்கள் மனந்திரும்ப வேண்டியும் துக்கமுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆதியிலே தேவன் மனிதனை உண்டாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டார் அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது என ஆதியாகமம் 6:6-ல் வாசிக்கிறோம்.

ஏன் இந்தவிதமாக தேவன் மனஸ்தாபப்பட்டார் என்ற கேள்வி நமக்குள் எழும்புகிறது. அப்பொழுதிருந்த ஜனங்கள் தங்களை கெடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆகையால் அது அவருடைய இருதயத்துக்கு விசனமாயிருந்தது. இந்த சிந்தையுடையவர்கள் இப்பூமியில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பொல்லாதவர்களைப் பார்க்கும்போது அவர்களுக்கு அது மிகவும் வருத்தமாயிருக்கும். ஒரு பாவி இதைநினைத்து மந்திரும்பும்போது அது எவ்வளவு சந்தோஷத்தைக்கொண்டுவரும்.

அதையே வேதாகமமானது எதிர்பார்க்கிறது. ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல எல்லோரும் மனந்திரும்ப வேண்டுமென்று தேவன் நீடிய பொறுமையாயருக்கிறார். ஒரு மனிதன்



தேவனுக்கேற்ற துக்கமடையும்போது; "மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது" (2கொரி.7:10).

ஐயோ நான் தேவனுக்கு விரோதமாக இப்படி வாழ்ந்து விட்டேனே, என்று சொல்லி அவன் மனந்திரும்பும்போது அவனுடைய வாழ்க்கையில் இரட்சிப்பை உண்டாக்குகிறதல்லவா, அதையே பவுல் இங்கு உணர்த்தும்போது, இங்கே அவன் மனஸ்தாபப்படவேண்டிய அவசியமில்லை, ஒருபொருளை இழந்தால் அவன் மனஸ்தாபப்படவேண்டும் அல்லது ஒருவருக்கு விரோதமாக நடந்துவிட்டால் அவன் மனஸ்தாபப்படவேண்டும். அறியாமையால் ஒரு காரியத்தை செய்துவிட்டால் மனஸ்தாபப்படவேண்டும். தேவனுக்குகேற்ற துக்கம் அவனுடைய வாழ்க்கையில் ஆத்தும இரட்சிப்பைக்கொண்டு வந்திருக்கும்போது அவன் மனஸ்தாபப்படவேண்டிய அவசியமில்லை. இது குறித்து பவுல் மேலும் சொல்லும்போது; "பாருங்கள், நீங்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்த துண்டே; அது உங்களிடத்தில் எவ்வளவு ஜாக்கிரதையையும், குற்றந்தீர எவ்வளவு நியாயஞ்சொல்லுதலையும், எவ்வளவு வெறுப்பையும், எவ்வளவு பயத்தையும், எவ்வளவு ஆவலையும், எவ்வளவு பக்திவைராக்கியத்தையும், எவ்வளவு கண்டிப்பையும் உண்டாக்கிற்று இந்தக் காரியத்திலே நீங்கள் எல்லாவிதத்திலும் உங்களைச் சுத்தவான்களென்று விளங்கப்பண்ணீர்கள்" என்கிறார் (2கொரி.2:11).

ஒருவர் மனந்திரும்பும்போது இவ்வளவு காரியங்கள் நடைபெறுகிறது. இப்படிப்பட்டதான தேவனுக்கேற்ற துக்கம் உண்டாகவேண்டும். அப்பொழுதே இரட்சிப்பு உண்டாகுமென்று காண்கிறோம். நினிவேயின் மக்கள் தேவனுக்கு விரோதமாக வாழ்ந்துகொண்டிருந்தார்கள். அவர்களுக்கு யோனா தீர்க்கதரிசியின் மூலம் ஒரு எச்சரிப்பைக் கொடுத்தார். நினிவேயுக்கு விரோதமாக பிரசங்கி என்றார். அந்தப்படியாக அவன் பிரசங்கித்தபோது, அந்த ஜனங்கள் மனந்திரும்பினார்கள் தேவனுக்கேற்ற துக்கமடைந்தனர்; "அவர்கள் தங்கள் பொல்லாத வழியைவிட்டுத் திரும்பினார்களென்று தேவன் அவர்களுடைய கிரியைகளைப் பார்த்து, தாம் அவர்களுக்குச் செய்வேன் என்ற சொல்லியிருந்த தீங்கைக் குறித்து மனஸ்தாபப்பட்டு, அதைச் செய்யாதிருந்தார்" (யோனா 3:10). அவர்களோ காப்பாற்றப்பட்டார்கள்.

ஒருவேளை அவர்கள் வருவது வரட்டும் யார் என்ன சொன்னாலும் நாங்கள் எங்களுடைய பொல்லாத வழியைவிட்டு மனந்திரும்பமாட்டோம் என்று சொல்லி தேவனுக்கேற்ற துக்கங்கொள்ளாதிருந்திருப்பார்களேயானால் நிச்சயமாக சோதோம், கோமோரா பட்டணங்களை அழித்த கர்த்தர் நினிவே பட்டணத்தையும் அழித்துப்போட்டிருப்பார். அவர்களோ தேவனால் அனுப்பப்பட்ட யோனாவின் எச்சரிப்புக்கு ஒவ்வொருவரும் கீழ்ப்படிந்து ஒன்றும்

புசியாமலும், குடியாமலும் இருந்து இரட்டினால் தங்களை மூடிக்கொண்டு உபவாசம் பண்ணி தங்களுடைய பாவங்களை விட்டு மனந்திரும்பினார்கள். ஆகையால் அவர்களுக்கு இரட்சிப்பு கிடைத்தது. அந்நாட்டி ராஜாவும் அதற்கு இசைவாய் தான் உடுத்தியிருந்த உடுப்பை கழற்றிப்போட்டு, இரட்டை உடுத்திக்கொண்டு, சாம்பலிலே உட்கார்ந்தான்.

மேலும் மனுஷரும் மிருகங்களும் இரட்டினால் மூடிக்கொண்டு, தேவனை நோக்கி உரத்த சத்தமாய்க் கூப்பிடவும், அவரவர் தம்தம் பொல்லாத வழியையும் தம்தம் கைகளிலுள்ள கொடுமையையும் விட்டுத் திரும்பவுங்கடவர்கள் யாருக்குத் தெரியும்; நாம் அழிந்துபோகாதபடிக்கு ஒருவேளை தேவன் மனஸ்தாபப்பட்டு, தம்முடைய உக்கிரகோபத்தைவிட்டுத் திரும்பினாலும் திரும்புவார் என்று கூறச்சொன்னான். அந்தப்படியாக நினிவேயின் மக்கள் மனந்திரும்பியபோது அவர்களும் அவளுடைய மிருகங்களும் அந்தப் பட்டணமும் காக்கப்பட்டது.

இச்செய்தியை படித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே! நீங்கள் தேவனுக்கேற்ற துக்கம் கொண்டதுண்டா? நீங்கள் எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள்? ஒருவேளை நீங்கள் நினிவே பட்டணத்து மக்களைப்போல வாழ்ந்துகொண்டிருப்பீர்கள் என்றால் இன்றே காலம் தாழ்த்தாது மனந்திரும்புங்கள். அப்பொழுது நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள். நீங்கள் கர்த்தருடைய சத்தம் கேட்டும் மனந்திரும்பாமல் இருப்பீர்கள் என்றால் அழிவு சடுதியில் ஏற்படும். நீங்கள் உங்களுடைய ஆத்துமாக்களை இழக்க நேரிடும். ஆகையால் உங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தருடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு உங்களுடைய ஆத்துமாவில் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். காலம் சமீபமாயிருக்கிறது.

**இரண்டாவது லௌகீக துக்கம்.** இன்றைக்கு லௌகீக துக்கம் கொள்ளுகிறவர்கள் தான் அதிகமாக இருக்கிறார்கள். இந்த லௌகீக துக்கம் மரணத்தை உண்டாக்குகிறது என்று 2கொரி.7:10-ம் வசனத்தில் படிக்கிறோம். தேவனுக்கேற்ற துக்கம் இரட்சிப்பைக்கொண்டுவருகிறது என்று தியானித்தோம். ஆனால் லௌகீக துக்கமோ நம்முடைய வாழ்க்கையில் மரணத்தைக் கொண்டுவரும். ஆகையால் ஒருவரும் லௌகீக காரியங்களுக்காக துக்கங்கொள்ளாதிருங்கள். வார்த்தையில் சொல்லிவிடலாம் ஆனால் துக்கப்படாது யார்தான் இருக்கமுடியும் என்று நீங்கள் சொல்லலாம். கர்த்தர் நம்மோடு இருக்கும்போது நாம் லௌகீக துக்கம் கொள்ளவேண்டிய அவசியமில்லை. ஒருவேளை தேவனை ஏற்றுக்கொள்ளாத ஒருவர் ஆறுதல் அடையாமல் துக்கம் கொள்ளக்கூடும். ஆனால் கர்த்தராகி இயேசுவையும் தேவனையும் அறிந்த ஒரு ஆத்துமா லௌகீக அதாவது உலக



காரியங்களுக்காக துக்கப்படவேண்டிய தில்லை. அவர்களை போஷிக்கும் கர்த்தர் அவர்களோடிருப்பார். சிலர் தங்களுடைய அருமையானவர்களை இழந்திருக்கும்போது அந்த துக்கத்திலிருந்து மீளாதிருப்பார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு பவுல் சொல்லுகிறதான ஆலோசனை; "அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை" என்கிறார் (1தெச.4:13).

இங்கே நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போல என்று சொல்லும் வார்த்தையைக் கவனியுங்கள். ஒரு கிறிஸ்தவனுக்கு நம்பிக்கை மிகவும் முக்கியம். இந்த நம்பிகையினாலே நாம் தேவனை ஏற்றுக்கொண்டோம். நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று நம்புகிறோம். நாம் நித்தியத்திலே அவரோடு வாழுவோம் என்று நம்புகிறோம். அதைப்போல கர்த்தருக்குள் மரித்தவர்களையும் அவர் உலகத்தின் கடைசிநாளில் எழுப்புவார் என்ற நம்பிக்கையோடு இருந்து அந்த விதமான துக்கத்திலிருந்து விடுதலைபெறவேண்டும். மற்றமக்களைப்போல அதாவது நித்திரையடைந்தவர்கள் மீண்டும் எழுந்திருக்கமாட்டார்கள் என்ற எண்ணத்தில் இருப்பவர்களைப்போல நாமும் இருந்துவிடக்கூடாது.

இன்னும் லௌகீக துக்கம் என்று சொல்லும்போது சிலர் உடைக்காவும், உணவுக்காகவும், இருப்பிடத்திற்காகவும் இன்னும் இதுபோன்ற அநேக காரியங்களுக்காகவும் லௌகீக துக்கம் கொள்ளுவார்கள். ஆண்டவர் இயேசு காட்டுப்புஸ்பங்களைக் கவனித்துப்பாருங்கள் என்று சொல்லி அவைகளுக்கு தேவன் இவ்விதமாக உடுத்துவித்திருக்கும்போது அவைகளைப் பார்க்கிலும் தேவன் அதிகமாக நேசிக்கும் உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா என்கிறார். மேலும், "அற்ப விசுவாசிகளே! இன்றைக்கு இருந்து நாளைக்கு அடுப்பிலே போடப்படும் காட்டுப் புல்லுக்குத் தேவன் இவ்விதமாக உடுத்துவித்தால், உங்களுக்கு உடுத்துவிப்பது அதிக நிச்சயமல்லவா? ஆகையால் என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தோடுகிறார்கள்; இவைகயெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" என்றார் (மத்.6:30-32).

நம்முடைய இஸ்ரவேல் ஜனங்களோ கர்த்தருக்கு வனாந்தரத்தில் எரிச்சலை மூட்டினார்கள். அவர்களை எகிப்து தேசத்திலிருந்து அற்புதமாக வழிநடத்திக்கொண்டுவந்தார். அவர்களோ எகிப்தை திரும்பிப் பார்த்து;

"ஜனங்கள் தேவனுக்கும் மோசேக்கும் விரோதமாகப் பேசி: நாங்கள் வனாந்தரத்திலே சாகும்படி நீங்கள் எங்களை எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணினதென்ன? இங்கே அப்பமும் இல்லை, தண்ணீரும் இல்லை; இந்த அற்பமான உணவு எங்கள் மனதுக்கு வேறுப்பாயிருக்கிறது என்றார்கள். அப்பொழுது கர்த்தர் கொள்ளிவாய்ச் சர்ப்பங்களை ஜனங்களுக்குள்ளே அனுப்பினார். அவைகள் ஜனங்களை கடித்ததினால் இஸ்ரவேலருக்குள்ளே அநேக ஜனங்கள் செத்தார்கள்" (எண்.21:5,6).

இந்த இஸ்ரவேலரைப்போல இன்றும் அநேகர் லௌகீக துக்கம் கொண்டு உலககாரியங்களையே நாடி தேவனுடைய கோபத்திற்குள்ளாக தள்ளப்படுகிறார்கள். மனிதனை உண்டாக்கின தேவன் அவனுக்கு வேண்டியவைகளை கொடுக்காமல் இருப்பாரா! எவ்வளவோ காரியங்களை மனிதனுடைய வாழ்க்கையில் கர்த்தர் செய்தும், அவனுடைய நினைவெல்லாம் லௌகீகமானதாகவே இருக்கிறது. எகிப்திலிருந்து புறப்பட்ட ஆறு லட்சம்பேரில் இரண்டு பேர்மட்டுமே தேவனுடைய சித்தத்தை புரிந்தவர்களாக இருந்து வனாந்தர பயணத்தில் உறுதியுடனிருந்தார்கள். மற்றவர்கள் அதாவது லௌகீக எண்ணமுடையவர்கள் வனாந்தரத்தில் மாண்டுபோனார்கள். அன்பு நண்பரே, நீங்கள் லௌகீக காரியத்தினால் சோர்ந்துபோய் இருக்கிறீர்களா? உலகம்கொடுக்கக்கூடாத சந்தோஷத்தையும் சமாதானத்தையும் இயேசு ஒருவரே கொடுக்க வல்லவராயிருக்கிறார். அவரில் நம்பிக்கைகொள்ளுங்கள். அப்பொழுது அவரால் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நீங்கள் தேவனுக்குகேற்ற துக்கமுடையவராயிருக்கிறீர்களா? அல்லது லௌகீக துக்கமுடையவரா யிருக்கிறீர்களா? உங்களை சீர்தூக்கிப்பாருங்கள். தேவனுக்கேற்ற துக்கம் உங்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்பைக் கொண்டுவரும் ஆனால் லௌகீக துக்கமோ மரணத்தைக் கொண்டுவரும். எதை தேர்வு செய்யப்போகிறீர்கள்? நலமானதை தெரிந்துகொண்டு தேவனால் ஆசீர்வதிக்கப்படுங்கள்.

**கேள்வி**

**நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நல்லதா?**

இன்று டிவி செனல்களில் சிரிப்பொலி என்று ஒரு சில சேனல்களை ஒதுக்கி வைத்திருக்கிறார்கள். அது மனிதனுக்கு சற்றுநேரத்திற்கு சந்தோஷத்தை கொடுக்கக்கூடியதாக இருக்கிறது. இந்தவிதமாக சிரிப்புக்களை அநேகர் விரும்புகின்றனர். ஆனால் பரிசுத்த வேதாகமம் "நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம்: முகதுக்கத்தினாலே இருதயம் சீர்ப்படும்"என்றும் போதிக்கிறது (பிர.7:1).



ஒரு வகையில் நன்மை வருகிறது என்றால் அதை எல்லோரும் ஏற்றுக்கொள்கிறோம். அதை வேண்டாம் என்று யாரும் ஒதுக்குவது இல்லை. அப்படியிருக்கும்போது; நகைப்பினாலே நமக்கு நன்மைகள் சில இருந்தாலும் நகைப்பைப் பார்க்கிலும் துக்கிப்பு நலம் என வேதம் நமக்கு அறிவுருத்துகிறது. அதினாலே நன்மை என்னவென்றால் இருதயம் சீர்ப்படும். இருதயமே எல்லாவற்றிலும் திருக்குள்ளது எனவும் வேதம் போதிக்கிறது. இந்த இருதயம் சீர்ப்படுமானால் எத்தனை ஆசீர்வாதங்கள் நம்மைத்தோடி வரும். ஆகையால் கர்த்தர் இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் என்றார். இந்த இருதயம் சீர்ப்பட, மற்றும் சுத்தப்பட நகைப்பைப் பார்க்கிலும் துக்கத்திற்கு திரும்புங்கள். அதுவும் தேவனுக்கேற்ற துக்கத்திற்கு திரும்புங்கள் அது உங்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்பைக் கொண்டுவரும். உங்களுடைய வாழ்க்கை அர்த்தமுள்ளதாக மாற இவ்வசனங்களுக்கு உங்களை ஒப்புக்கொடுக்கும்படியாக கேட்கிறோம். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 41. சத்தியமும் பணமும்

## Truth & Money

**ச**த்தியம் சத்தியம் என்று எங்குபார்த்தாலும் பேசப்படுகிறது. எது சத்தியம்? சத்தியபரர் யார்? சத்தியம் எவர் மூலமாய் உண்டாயிற்று? சத்தியத்தின் பயன் என்ன? இந்த சத்தியத்தின் தீர்ப்பு எப்படியிருக்கும்? சத்தியம் எங்கும் பேசப்பட்டு வருகிறது. இந்த சத்தியத்தைக்குறித்து அப்போஸ்தலனாகிய யோவான் நமக்கு வெளிப்படுத்துகிறார். "உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம்" என்கிறார் (யோவா.17:17). ஆண்டவருடைய வசனம் சத்தியமாக இருக்கிறது. அது ஒரு மனிதனை பரிசுத்தமாக்குகிறதாயிருக்கிறது.

இந்த சத்திய வசனங்களை அறியாத ஒருவர் பரிசுத்தமாக முடியாது. வசனங்கள் சத்தியமாயும் ஜீவனாயும் இருக்கிறது. அதை நமக்குக் கொடுத்த ஆண்டவர் சத்தியபரராயிருக்கிறார். "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்றார் இயேசு (யோவா.14:6). அவரே வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவுமிருக்கிறார். இன்றைக்கு சத்தியத்தை அறியாத ஜனங்கள் மோசம்போய்கொண்டு இருக்கிறார்கள். வீணானவைகளை நாடி ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது. அதை ஒரு மனிதன் விசுவாசிக்கும்போது அது அவனுக்கு ஜீவனையும் விடுதலையையும் கொடுக்கிறது.

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" (யோவா.1:14). சத்தியம் நமக்குள்ளே வாசமாயிருக்கிறது. இயேசுவானவர் மாம்சத்திலே இப்பூமியில் காணப்பட்டார். அவர் கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் முதல் நூற்றாண்டு மக்கள் மத்தியில் ஜீவித்தார். அவருடைய மகிமையை அப்போஸ்தலர்களும் அநேக விசுவாசிகளும் புறஜாதிகளும் கண்டனர். அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது என்று சொல்கிறார் யோவான் அப்போஸ்தலன்.

ஆம், அன்பானவர்களே, அவர் இன்றும் சத்திய சொரூபியாகவே நமக்குள் வாசம்பண்ணுகிறார். அவருடைய வசனங்கள் சத்தியமாக இருக்கிறது. "நியாயப்பிரமாணம் மோசேயின் மூலமாய்க் கொடுக்கப்பட்டது, கிருபையும் சத்தியமும் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாயின" (யோவா.1:17). இந்த சத்தியத்தை பிதாவாகிய தேவன் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உண்டாகும்படிசெய்தார். நியாயப்பிரமாணத்தை மோசே மூலமாக ஜனங்கள் பெற்றார்கள். ஆனால் கிருபையையும் சத்தியத்தையும் நாம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாகவே பெற்றுக்கொள்கிறோம். இந்த சத்தியத்திற்கு உங்களுடைய செவியை சாய்த்து செவிகொடுங்கள். அப்பொழுது இரட்சிக்கப்படுவீர்கள்.

சத்தியத்தை குறித்து கேள்விப்பட்ட பிலாத்து அப்படியானால் நீ ராஜாவோ என்று இயேசுவைப்பார்த்துக் கேட்டான்; அதற்கு ஆண்டவர்; "நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக்குறித்துச் சாட்சிகொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன்; சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்" (யோவா.18:37). ஆம், பிரியமானவர்களே, இயேசுவானவர் சத்தியத்தை வெளிப்படுத்தும்படியாகவும் அதைக்குறித்து சாட்சிகொடுக்கவும் பிதாவினால் அனுப்பப்பட்டார். அதற்காகவே இந்த உலகத்தில் பிறந்தார். சத்தியத்தை நேசிக்கிற அதைப்பின்பற்றுகிற ஒவ்வொருவரும் இந்த சத்தியத்தியத்திற்கு செவிகொடுப்பார்கள்.

இந்த சத்தியத்தின் பயன் என்ன? என்று பார்க்கும்போது. இயேசுவானவர் தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி "சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார்" (யோவா.8:32). இந்த சத்தியத்தை ஒரு மனிதன் விசுவாசித்து அதை ஏற்றுக்கொள்ளும்போது தன்னுடைய வாழ்க்கையில் விடுதலையைப் பெற்றுக்கொள்கிறான். வேறுவகையில் இந்த உலகத்தில் அவனுக்கு விடுதலையில்லை. சத்தியம்



மட்டுமே அவனை அவனுடைய பாவவாழ்க்கையிலிருந்து விடுக்கக்கூடியதாக இருக்கிறது. வெறுமனே சத்தியத்தை விசுவாசித்து விட்டு நின்று விடுவானேயானால் அவனுக்கு விடுதலை கிடைக்காது. அதற்கு கீழ்ப்படியவேண்டியவனாயிருக்கிறான். சத்தியத்தையும் அறிவீர்கள் சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். யூதர்கள் சத்தியத்தை கேள்விப்பட்டதோடும், விசுவாசத்தோடும் நின்றுவிட்டனர். அதற்கு அநேகர் கீழ்ப்படியவில்லை. ஆகையால் சத்தியத்தை அறிந்து அதற்கு கீழ்ப்படியும்போது, அது நம்மை பாவத்திலிருந்து விடுதலையாக்கும். இது குறித்து எரேமியா குறிப்பிடும்போது; "நியாயஞ்செய்கிற மனுஷனைக் கண்டுபிடிப்பீர்களோ என்றும்; சத்தியத்தைத் தேடுகிறவன் உண்டோ என்றும் எருசலேமின் தெருக்களிலே திரிந்துபார்த்து விசாரித்து, அதின் வீதிகளிலே தேடுங்கள்; காண்பீர்களானால் அதற்கு மன்னிப்புத் தருவேன்" என்று கர்த்தர் சொன்னார் (எரே.5:1).

அப்படியானால் சத்தியத்தை தேடுகிற ஜனங்கள் அந்நாட்களிலே எருசலேமிலே குறைவாயிருந்திருக்கிறார்கள் என்பதையே இது நமக்குக் காட்டுகிறது. இன்றும் அதே நிலை நீடிக்கிறது. ஜனங்கள் சத்தியத்தை நோக்காகமல் அதற்கு செவிகொடாமல், தங்களுடைய இச்சைகளின்படி செய்யப்பார்க்கிறார்கள். அது சத்தியமாகாது. வேதமே சத்தியம், கர்த்தருடைய வசனமே சத்தியம் என காண்கிறோம். இறுதிநாட்களிலே இந்த வசனத்தின்படியே தீர்ப்பு இருக்கும் என்று வெளிப்படுத்தல் 19:1-ல் வாசிக்கிறோம். "இவைகளுக்குப்பின்பு, பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம் இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன். அவர்கள்; அல்லேலூயா, இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது: அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள்" என்றன.

வேதாகம சத்தியத்தின்படி நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. ஆனால் சொல்லப்பட்டுள்ள இந்த சத்தியங்களை தள்ளிவிடுகிறவர் களுக்கு சத்தியத்தின்படியே தீர்ப்பு இருக்கும். இதற்கு ஒருவரும் தப்பிக்கொள்ள முடியாது என்று காண்கிறோம். இச்செய்தியை வாசிக்கின்ற அன்பு சகோதரனே, சகோதரியே, நீ சத்தியத்திற்கு செவிகொடுக்கின்றாயா? அல்லது உலகமக்கள் பிடித்துக் கொண்டிருக்கும் அசத்தியத்திற்கு செவிகொடுத்துக்கொண்டு உன்னுடைய ஜீவியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறாயா? ஆண்டவர் இயேசுவே சத்தியமாகவும், அவருடைய வல்லமையுள்ள வசனங்கள் சத்தியம் நிறைந்தவைகளாகவும் இருக்கிறது. அவைகளை நீ ஏற்று கீழ்ப்படியும்போது சத்தியம் உன்னை விடுதலையாக்கும். நீ சமாதான வாழ்வை கண்டடைவாய்.

"பணஆசை எல்லாதீமைக்கம் வேராயிருக்கிறது" என்று 1தீமோ.6:10-ம் வசனத்தில் படிக்கிறோம். சிலர் இதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக்கொண்டிருக்கிறார்கள் என காண்கிறோம். நம்முடைய வாழ்க்கையிலும் அதை நாம் அன்றாடம் காணமுடிகிறது. பணம் இருந்தால் எதையும் சம்பாதித்துவிடலாம் என்ற நம்பிக்கை 90 சதவித மக்களின் நம்பிக்கையாக இருக்கிறது. அது சரியல்ல. பணத்தினால் சத்தியத்தை வாங்கிவிடமுடியாது. சத்தியம் ஒருபோதும் பாவத்திற்கு துணைபோகாது. அதில் ஒரு பொய்யையும் காணமுடியாது. பணம் எல்லாவித தீமைக்கும் காரணமாயும் வேராயும் இருக்கிறது. முதல் நூற்றாண்டு சபையில் அதாவது கிறிஸ்துவின் சபையில் அனனியா சப்பிராள் என்ற ஒரு தம்பதியினர் இருந்ததாக நாம் அப்போஸ்த நடபடிகள் புத்தகத்தில் படிக்கிறோம். இவர்கள் தாங்கள் விற்றுவந்த காணியாட்சியில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்துவிடு அப்போஸ்தலர்களிடத்தில் பொய் சொன்னார்கள்.

முதல் நூற்றாண்டு சபை சத்தியத்திற்கு தூணும் ஆதாரமுமாக இருந்தது. இந்த சபையில் இருக்கக்கூடியவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கவேண்டும்? ஆண்டவருடைய நாமத்தில் கூடிவருகிற இவர்கள் பொய்யராயிருக்கலாமா? ஆனால் இவர்களுக்குள்ளாக பணஆசை இருந்தபடியால் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து பொய்சொன்னார்கள். இதை அறிந்த அப்போஸ்தலனாகிய பேதுரு; அவர்களை நோக்கி: "அன்னியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" என்று கேட்டான் (அப்.5:3).

பொய் பிசாசினிடத்திலிருந்த வருகிறது. அவனே ஆத்துமாக்களுடைய இருதயத்தில் இடங்கொடுத்தவுடன் பாவத்தினாலே அவர்களுடைய இருதயத்தை நிரப்பி தேவனுக்கு விரோதமாக காரியங்களில் ஈடுபட செய்கிறான். அந்தப்படியாக அனனியா சப்பிராள் என்ற தம்பதியினுடைய இருதயத்தை பொய்யினால் நிரப்பினான். பண ஆசை எவ்வளவு பெரிய தீமையை கொண்டுவந்தது என்று பார்த்தீர்களா? அதைப்போல இயேசுவைக் காட்டிக்கொடுத்த யூதாஸை பிசாசு பொய்யினால் நிரப்பினான். யோவான் இதைக்குறித்து எழுதும்போது; "சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினான்" என்று எழுதுகிறார் (யோவா.13:2). அவன் பணப்பையை சுமக்கிறவனாயிருந்தான். பணஆசை அவனுக்குள் இருந்தது. இதன்வழியாக பிசாசு யூதாசுக்குள் புகுந்தான். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும்



நண்பரே, உனக்குள்ளாக பணஆசை இருக்குமானால் அதுவே உன்னுடைய அழிவுக்கு வழியாக இருக்கும். "நீங்கள் பண ஆசையில்லாதவர்களாய் நடந்து, உங்களுக்கு இருக்கிறவைகள் போதுமென்று எண்ணுங்கள், உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே" (எபி.13:5).

ஏனென்றால்; "பணப்பிரியன் பணத்தினால் திருப்தியடை வதில்லை; செல்வப்பிரியன் செல்வப்பெருக்கினால் திருப்தியடை வதில்லை; இதுவும் மாயையே" என்கிறான் பிரசங்கி 5:10. ஆகையால் பணத்தை நம்பி மோசம்போகாதிருங்கள். சகலத்தையும் உண்டாக்கின தேவன் உங்களுடைய தேவைகளை அறிந்திருக்கிறார். அவர் எப்பொழுதும் நமக்கு போதுமான தேவனாயிருக்கிறார். அவர் அற்புதமானவர் அதிசயமானவர், அவர்சொல்ல ஆகும், அவர் கட்டளையிட நிற்கும், இஸ்ரவேலை காக்கிர தேவன் உறங்குவதுமில்லை, தூக்குவதுமில்லை. அவர் உங்களுடைய அநுதினபடியை உங்களுக்கு கொடுத்து உங்களை போஷிப்பார்.

நம்முடைய தேவன் சத்தியத்தியபரராகையால்; "சத்தியத்தைக் கைக்கொண்டுவருகிற நீதியுள்ள ஜாதி உள்ளே பிரவேசிப்பதற்காக வாசல்களைத் திறவுங்கள்" என்கிறார் (ஏசா.26:2). பரலோகம் பாவத்திற்கு திறக்காது. சத்தியத்தை கைக்கொண்டுவருகிற ஜனங்களுக்கு பரலோகம் திறக்கும். புத்தியில்லாத கன்னிகைகள் ஐந்துபேரைப்போல ஆண்டவரே எங்களுக்கு கதவை திறக்கவேண்டும் எங்களுக்கு கதவை திறக்கவேண்டும் என்று சத்தமிட்டாலும், உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுவேன் என்பார்.

ஆகையால் சத்தியத்தின்படி நடக்க ஒவ்வொருநாளும் உங்களை ஒப்புக்கொடுங்கள். சத்தியம் நிறைந்த ஜாதிகளோடு உங்களுடைய ஐக்கியம் இருக்கட்டும். சத்தியத்திற்கு விரோதமாக நடக்கும் கூட்டத்தோடு ஒத்துப்போகாதிருங்கள். அப்படிப்பட்டவர்களோடு பங்காளிகளாகாதிருங்கள். "சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு" என்கிறார் சாலொமோன் தமது நீதிமொழிகளில் 23:23. நீங்கள் சத்தியத்தை வாங்கிக்கொண்டிருக்கிறீர்களா? அல்லது அதை விற்பனை செய்துகொண்டிருக்கிறீர்களா? அப்போஸ்தலர்களுக்கு கர்த்தர் கொடுத்த கட்டளையை மறவாதிருங்கள். அவர்களை அவர் அனுப்பும்போது; "இலவசமாய் பெற்றீர்கள், இலவசமாய்க் கொடுங்கள்" என்றார் (மத்.10:8).

அந்தப்படியே சுவிசேஷம் உலகமெங்கும் இலவசமாக பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. தேவனுடைய சிருஷ்டிப்பில் அநேக இலவசங்கள்

இருக்கிறது. அவைகளை நாம் அன்றாடம் அநுபவித்து வருகிறோம். அதற்கு எந்தவிதமான பணத்தை நாம் செலுத்துவதில்லை. ஏனென்றால் நம்மை சிருஷ்டித்த தேவன் நம்முடைய பிதாவாக, தகப்பனாக, அப்பாவாக இருப்பதினால் அவர் நம்மிடம் எதையும் எதிர்பார்ப்பதில்லை. அந்தப்படியே இந்த சத்தியத்தையும் இலவசமாகவே கொடுக்கிறார். பெற்று பயனடையுங்கள்.

**கேள்வி**

**இயேசுவினுடைய சத்தியத்தின்படியே நடந்த புதியஏற்பாட்டு ஜனங்கள் முதல் நூற்றாண்டில் இருந்தார்களா?**

ஆம், சத்தியத்தின்படியே நடந்த காயு என்ற சகோதரனைக்குறித்து நாம் 3யோவான் 3-ம் வசனத்தில் படிக்கிறோம். அதைப்போல சத்தியத்தின்படி நேசிக்கப்பட்ட தெரிந்துகொள்ளப்பட்ட அம்மாளுக்கு மூப்பனாகிய யோவான் எழுதும் இரண்டாம் நிருபத்தில் யாவரும் சத்தியத்தின்படி நேசித்திருக்கிற அம்மாளைக்குறித்து படிக்கிறோம். அதைப்போல, சத்தியத்தின்படி நடக்கிற பிள்ளைகளைக் குறித்து 2 யோவான் 4-ம் வசனத்திலும், 3யோவான் 4-ம் வசனத்திலும் படிக்கிறோம். இப்படிப்பட்ட ஆதாரங்கள் இருக்கும்போது நாம் ஏன் சத்தியத்தின்படி நடக்க தீர்மானிக்கக்கூடாது?

புதிய ஏற்பாட்டு கர்த்தருடைய சபையில் சத்தியத்தின்படி நடக்கிற சகோதரர்கள் இருந்திருக்கிறார்கள் மற்றும் சகோதரிகள் இருந்திருக்கிறார்கள் மற்றும் பிள்ளைகள் இருந்திருக்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற நீங்களும் நானும் அந்தப்படியாக சத்தியத்தின்படி நடந்து சத்தியத்திற்கு சாட்சிகளாகவும், தூணும் ஆதாரமுமாக இருந்து செயல்படவோண்டுமல்லவா? நீங்களும் உங்களுடைய குடும்பமும் பிள்ளைகளும், நீங்கள் கூடிவருகிற சபையும் சத்தியத்தின்படி நடக்க ஒவ்வொரு நாளும் முயற்சி எடுங்கள். உங்களுடைய முயற்சியை கர்த்தர் ஆசீர்வதிக்கும்படியாக நாங்கள் வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையாரோடு சேர்ந்து உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 42. புதுபெலன்
## New Strength

**க**ர்த்தர் ஒருவராலே புதுப்பெலனை ஒவ்வொருவருக்கும் கொடுக்கமுடியும். ஏனெனில், அவர் "பூமியின் கடையாந்தரங்களைச் சிருஷ்டித்த கர்த்தராகிய அநாதிதேவன் சோர்ந்துபோவதுமில்லை, இளைப்படைவதுமில்லை; இதை நீ அறியாயோ? இதை நீ கேட்டதில்லையோ? அருடைய புத்தி ஆராய்ந்துமுடியாதது" என ஏசாயா தீர்க்கன் சொல்லுகிறார் ஏசா.40:28. தொடர்ந்து ஒருவேலையைச் செய்யும்போது அல்லது அதிகமான



பாரம் நம்மீது சுமத்தப்படும்போது சோர்ந்துபோகிறோம். நாம் பார்க்கிற அண்டசராசரங்களையும் உண்டாக்கின தேவனாகிய கர்த்தர் சோர்ந்துபோவதில்லை. அவர் வல்லமைபடைத்தவராயிருக்கிறார். அவருக்கு முன்பாக ஒருவரும் நிற்கமுடியாது. அவருடைய ஞானமான படைப்பபை குறித்து இன்றுவரை ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து ஆச்சரியப்பட்டுப் போகிறார்கள்.

சோர்ந்துபோகாத தேவன் சோர்ந்துபோகிறவர்களுக்கு பெலன்கொடுக்க வல்லவராயிருக்கிறார். பிரசங்கி சொல்லுகிறான்; "என் கைகள் செய்த வேலைகளையும், நான் பட்ட பிரயாசத்தையும் கண்ணோக்கிப் பார்த்தேன்; இதோ, எல்லாம் மாயையும், மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை" (பிர.2:11). எல்லாவற்றையும் அனுபவித்த ஒரு மாபெரும் ராஜா சாலொமோன் அவன் தன்னுடைய பிரசங்க வாக்கியத்தில் எல்லாம் மாயையும் மனதுக்குச் சஞ்சலமுமாயிருந்தது; சூரியனுக்குக் கீழே பலன் ஒன்றுமில்லை என்று கண்டான். மனிதன் நிர்வாணியாகவே வருகிறான் நிர்வாணியாகவே போகிறான். அவன் பட்ட பிரயாசத்தில் பலன் ஒன்றையும் எடுத்துக்கொண்டு போவதில்லை. ஆகையால் மாயை எல்லாம் மாயை என்று பிரசங்கி சொல்லுகிறான். எனவே அநேகர் சலித்துப்போகிறார்கள், சோர்ந்துபோகிறார்கள். பட்டபிரயாசம் எல்லாம் ஒன்றுமில்லாமற்போகிறது. இருப்பது இருக்கட்டும் வருவது வரட்டும் என்று தங்களை தேற்றிக்கொள்ளுகிறார்கள்.

ஆனால் கர்த்தருடைய பரிசுத்த வேதாகமம் நமக்கு கொடுக்கும் வசனம் என்ன? "தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். மனம் பதறுகிறவர்களைப் பார்த்து; நீங்கள் பயப்படாதிருங்கள், திடன்கொள்ளுங்கள்; இதோ, உங்கள் தேவன் நீதியைச் சரிக்கட்டவும், உங்கள் தேவன் பதிலளிக்கவும் வருவார்; அவர் வந்து உங்களை இரட்சிப்பார் என்று சொல்லுங்கள்" (ஏசா.35:3,4). சோர்ந்துபோகாத தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு இஸ்ரவேலுக்கு உற்சாகமான வார்த்தைகளைக் கொடுத்தார். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் சோர்ந்துபோயிருந்தால் புதுபெலனடையும்படியாக தளர்ந்த கைகளைத் திடப்படுத்தி, தள்ளாடுகிற முழங்கால்களைப் பலப்படுத்துங்கள். அப்பொழுது பலப்படுவீர்கள்.

"சோர்ந்துபோகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து, சத்துவமில்லாதவனுக்குச் சத்துவத்தைப் பெருகப்பண்ணுகிறார்" என காண்கிறோம் (ஏசா.40:29). நீ சோர்ந்துபோவாயானால் அவரை நோக்கிப்பார் அப்பொழுது உன்னை பெலப்படுத்தி உனக்குச் சத்துவத்தை

பெருகப்பண்ணுவார். ஆகையால், அன்பான சகோதரனே சகோதரியே நீ சோர்ந்துபோகாதே. உன்னை உண்டாக்கின கர்த்தர் உன்னை ஒருபோதும் கைவிடமாட்டார். அவர் சோர்ந்துபோவதில்லை. அதைப்போல நீயும் சோர்ந்துபோகாதிருக்கவேண்டுமென்று அவர் விரும்புகிறார். எனவே நீ சோர்ந்துபோகும்போது உன்னைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க அவர் கண் இருந்தும் பாராத தெய்வமல்ல, உன்னை அநுதினமும் கண்ணோக்கிக் கொண்டிருக்கிறார். மனிதன் முகத்தைப் பார்ப்பான். உன்னை உண்டாக்கின பிதாவாகிய தேவன் உன் இருதயத்தைப் பார்க்கிறார் நீ சோர்ந்துபோகாதே.

எலியா என்ற தேவ மனிதனை நீங்கள் அறிவீர்கள். அவனைக் கொண்டு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்தார். அப்படிப்பட்ட அற்புதமான தேவமனிதனாகிய எலியா சோர்ந்துபோய், போதும் கர்த்தாவே என் பிதாக்களைப் பார்க்கிலும் நான் நல்லவன் அல்ல என் ஆத்துமாவை எடுத்துக்கொள்ளும் என்று வேண்டினான். அப்படி என்ன அவனுக்கு பாடுகள் வந்தது என்று நீங்கள் நினைப்பீர்கள். யேசபேல் என்ற பெண் எலியா தீர்க்கதரிசியை கொலைசெய்து போடும்படியாக ஆள் அனுப்பினாள். இதையறிந்த எலியா ஒரு சூரைச்செடியின் கீழ் உட்கார்ந்துகொண்டு நான் சாகவேண்டும் என்று முறையிட்டுக் கொண்டிருந்தான். சோர்வு விசுவாசிகளுக்கு மட்டும்தான் வரும் என்பதல்ல, ஒரு ஊழியக்காரனுக்கும் வரும். அவனுக்கும் பலபாடுகள், பிரச்சனைகள் உண்டு. இருந்தபோதும் அவனை அழைத்த தேவன் கைவிடுவாரா! அவனை கைவிடவில்லை.

சூரைச் செடியின்கீழ் நித்திரைபண்ணிக்கொண்டிருந்த எலியாவை ஒரு தூதன் எழுப்பி போஜனம்பண்ணு என்றான். அவன் எழுந்து விழித்துப்பார்க்கிறபோது இதோ, தழலில் சுடப்பட்ட அடையும், ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் அவன் தலைமாட்டில் இருந்தது. அப்பொழுது அவன் புசித்துக் குடித்துத் திரும்பவும் படுத்துக்கொண்டான். அவனை கர்த்தர் மீண்டும் சந்தித்தார்; "கர்த்தருடைய தூதன் திரும்ப இரண்டாந்தரம் வந்து அவனைத் தட்டியெழுப்பு எழுந்திருந்து போஜனம்பண்ணு; நீ பண்ணவேண்டிய பிரயாணம் வெகுதூரம் என்றான். அப்பொழுது அவன் எழுந்திருந்து புசித்துக் குடித்து, அந்தப் போஜனத்தின் பலத்தினால் நாற்பதுநாள் இரவுபகல் ஓரேப் என்னும் தேவனுடைய பர்வதமட்டும் நடந்துபோனான்" (1இரா.19:7,8).

சோர்ந்துபோகிறவனுக்கு எப்படி சத்துவத்தைப் பெருகப் பண்ணுகிறார் என்று பார்த்தீர்களா? சோர்ந்துபோய் நித்திரை செய்து கொண்டிருந்த எலியா தீர்க்கனை எழுப்பி போஜனம் கொடுத்தார். தேவன் கொடுத்த போஜனம் சாதாரண போஜனமாக இருக்குமா? அந்தபெலத்தினால் நாற்பது நாள் இரவுபகல் நடந்துபோனான் என்று பார்க்கிறோம். சிலவேளைகளில் நாம்



திருப்தியாக சாப்பிட்டுவிட்டால் இனி ஒன்றும் சாப்பிடமுடியாது என்று சொல்லுகிறோம் அல்லவா அதைப்போல திருப்தியான உணவை தேவதூதன் எலியாவுக்குக் கொடுத்தார். ஒரு வாரம் அல்லது இரண்டு வாரம் சாப்பிடாமல் ஊழியம் செய்திருக்கிற அநேகரைக்குறித்து நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இக்காலகட்டத்தில் இந்தவிதமாக சாப்பிடாமல் இருந்துகொண்டு ஊழியம் செய்கிறவர்கள் இருக்கும்போது அந்நாட்களில் இருப்பது ஒரு பெரிய காரியமல்ல. எலியா அந்த போஜனத்தின் பெலத்தினாலே 40 நாள் நடந்து ஓரேப் என்னும் தேவபர்வதம் மட்டும் சென்றார் என படிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லும்போது; "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு என்கிறார்" (பிலி.4:13). பவுல் தன்னுடைய முயற்சியை இங்கு சொல்லவில்லை. அவரைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே என்று சொல்வதைக் கவனியுங்கள். கிறிஸ்துவானவர் ஆசிய முழுமைக்கும் அவருடைய சுவிசேஷ வசனத்தை பிரசங்கிக்கும்படி பவுலைப் பெலப்படுத்தினார். அதைக்குறித்து பவுல் அப்போஸ்தல நடபடிகள் புத்தகத்தில் மற்றுமுள்ள நிருபங்களில் குறிப்பிட்டிருக்கிறார். சோர்ந்துபோகிற உங்களையும் அவர் பெலப்படுத்த வல்லவராயிருக்கிறார்.

தங்களுடைய பெலத்தை நம்புகிறவர்கள் நிச்சயமாக கர்த்தருடைய பெலனைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். "இளைஞர் இளைப்படைந்து சோர்ந்துபோவார்கள், வாலிபரும் இடறிவிழுவார்கள். கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" (ஏசா.40:30,31). மாபெரும் வீரன் கோலியாத் தன்னை யாரும் ஜெயிக்க முடியாது என்று அறைகூவல் விடுத்தான். அவனை தாவீது வெற்றி கொண்டான். எப்படிப்பட்ட வாலிபனாக இருந்தாலும் அவன் இடறிவிழுவான் அதில் சந்தேகமில்லை.

ஆனால் கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலனைப் பெற்றுக்கொள்வார்கள். கழுகு தன்னுடைய இறகுகள் உதிர்வதால் பறக்க முடியாமல் சிலகாலம் காத்திருக்கும். இறகுகள் முளைத்த பிறகு தன் செட்டைகளை அடித்து எழும்ப ஆரம்பிக்கும். அதைப்போல கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப்பெலனை தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்வார்கள். பவுல் சொல்லும்போது; "ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின" என்கிறார் (2கொரி.5:17). கிறிஸ்துவுக்குள்ளாக இந்த விதமான ஆசீர்வாதம் இருக்கிறது. அதாவது ஞானஸ்நானத்தில் இது நடைபெறுகிறது. அவன் புது மனிதனாகவும் புதுப்பெலனை பெற்றுக்கொண்டவனாகவும், புதிதாக

பிறந்த குழந்தையைப்போலவும் இருக்கிறான். சிலருக்கு பழைய வாழ்கை பிடிக்கவில்லை, பழைய செயல்பாடுகள் பிடிக்கவில்லை. ஏன் சொல்லப்போனால் அவர்களை அவர்களுக்கே பிடிக்கவில்லை. இப்படிப்பட்டவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவர் கொடுக்கிறதான பாவமன்னிபைப் பெற்று ஞானஸ்நானத்தில் புதிய மனிதனாக, கிறிஸ்துஇயேசுவுக்குள் புதுசிருஷ்டியாக மாற வாய்புகள் உள்ளது. இதைப் பெற்றுக்கொள்ளும்போது இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

கர்த்தருக்குக் காத்திருப்பது என்பது அவருடைய வாக்குத்தத்தங் களுக்கு காத்திருப்பது. அவருடைய வருகைக்கு காத்திருப்பது, அவருடைய நன்மைகளுக்கு காத்திருப்பது. உலக இரட்சகர் இயேசுவானவர் பிறப்பார் என்ற வாக்குதத்தத்தை நம்பி காத்திருந்த சிமியோனைப் பற்றி நாம் படிக்கிறோம். "சிமியோன் என்னும்பேர்கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வரக் காத்திருக்கிறவனாயும் இருந்தான்; அவன்மேல் பரிசுத்த ஆவி இருந்தார்... அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டுவருகையில், அவன் அவரைத் தன் கைகளில் ஏந்திக்கொண்டு தேவனை ஸ்தோத்திரித்து; ஆண்டவரே, உமது வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்; புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும் உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம்பண்ணின, உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது என்றான்" (லூக்.2:29,27-32).

கர்த்தருடைய பிறப்புக்கு காத்திருந்த இந்த சிமியோன் நீதியும் தேவபக்தியும் உள்ளவனாயிருந்தான். இயேசுவின் இரண்டாம் வருகைக்குக் காத்திருக்கிற நீங்கள் இந்த சிமியோனைப்போல காத்திருக்கிறீர்களா? அப்படி காத்திருக்கும்போது கர்த்தரோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவோம். கர்த்திருக்கிறவர்கள் கழுகுகளைப்பேல செட்டைகள் அடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். ஆம், அவர்களுடைய தேவனாகிய கர்த்தர் அவர்களோடிருப்பார். இயேசுவானவர் தம்முடைய சீஷர்களுக்குச் சொல்லும்போது இதோ, சதா காலமும் உங்களோடிருக்கிறோன் என்றார். அவர் நம்மோடிருப்பவர். சோர்ந்துபோகும் நேரத்தில் நமக்கு சத்துவத்தை கொடுக்கிறவர். அவரில் நம்பிக்கை கொள்ளுங்கள். அவர் ஒருபோதும் உங்ளை கைவிடார்.



தாவீது; "எனக்கு ஒத்தாசை வரும் பர்வதங்களுக்கு நேராக என் கண்களை ஏறெடுக்கிறேன். வானத்தையும் பூமியையும் உண்டாக்கின கர்த்தரிடத்திலிருந்த எனக்கு ஒத்தாசை வரும். உன் காலைத் தள்ளாடவொட்டார்; உன்னைக் காக்கிறவர் உறங்கார். இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை. கர்த்தர் உன்னைக் காக்கிறவர்; கர்த்தர் உன் வலதுபக்கத்திலே உனக்கு நிழலாயிருக்கிறார். பலகலிலே வெளிலாகிலும், இரவிலே நிலவாகிலும் உன்னைச் சேதப்படுத்துவதில்லை. கர்த்தர் உன்னை எல்லாத் தீங்குக்கும் விலக்கிக் காப்பார்; அவர் உன் ஆத்துமாவைக் காப்பார். கர்த்தர் உன் போக்கையும் உன் வரத்தையும் இது முதற்கொண்டு என்றைக்குங் காப்பார்" (சங்.121). இஸ்ரவேலுக்குக் கர்த்தர் கொடுத்த அதே ஆசீவாதம் உங்களோடும் இருப்பதாக!

**கேள்வி**

**தேவசமுகத்தில் புதுப்பெலனைப் பெற்றுக்கொள்ள வேறு வழிகள் உண்டா?**

புதுப்பெலனைப் பெற்றுத்தருகிறோம். புது வரத்தைப் பெற்றுத் தருகிறோம் என்று சொல்லி அநேகர் அநேகரை வஞ்சிக்கிறார்கள். முதல் நூற்றாண்டு காலத்தில் பரிசுத்த ஆவியின் வரம் தந்தருளப்படுகிறதை மாயவித்தைக் காரனாகிய சீமோன் கண்டபோது; அப்போஸ்தலர்களிடத்தில் பணத்தைக்கொண்டுவந்து, "நான் எவன்மேல் என் கைகளை வைக்கிறேனோ, அவன் பரிசுத்த ஆவியைப் பெறத்தக்கதாக எனக்கும் இந்த அதிகாரத்தைக் கொடுக்கவேண்டும் என்றான். பேதுரு அவனை நோக்கி: தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப்போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்குமுன்பாகச் செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை. ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான்" (அப்.8:19-23).

குறுக்குவழியில் வல்லமையை, பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற நினைத்த மாயவித்தைக்காரனாகிய சீமோன் தேவகுற்றத்திற்கு உள்ளானான். நாம் தேவசமுகத்தில் புதுப்பெலனைப் பெற்றுக்கொள்ள நாம் தியானித்தபடி கைக்கொள்ளுங்கள். அப்பொழுது பெற்றுக் கொள்வீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 43. கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சி

## Perfect In Christ Jesus

**ஒ**ரு மனிதனை கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடைய செய்ய அப்போஸ்தலனாகிய பவுல் மூன்று காரியங்களை ஒரே வசனத்தில் உணர்த்துகிறார். "எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம்" என்கிறார் (கொலோ.1:28). முதலாவது அவர் சொல்லும்போது அவரையே நாங்கள் அறிவித்து என குறிப்பிடுகிறார். ஒரு மனிதன் கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடைய வேண்டுமானால் நாம் முதலாவது ஆண்டவர் இயேசுவை அறிவிக்க வேண்டும். அநேகர் இதைச்செய்ய தவறிவிடுகின்றனர்.

தங்களுடைய யோசனையின்படியும் அல்லது நிர்வாகத்தின் ஆலோசனையின்படியும் எதையாவது கொடுத்து, அல்லது அன்பாக அவர்களோடு பழக்கம் வைத்து இன்னும் இப்படிப்பட்ட ஏதாவது ஒன்றைச் செய்து அவர்களை ஆதாயம் செய்ய விரும்புகின்றனர். "யூதர்கள் அடையாளத்தைக் கேட்கிறார்கள், கிரேக்கர் ஞானத்தைத் தேடுகிறார்கள்; நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" என்கிறார் பவுல் (1கொ.1:22,23). இன்றைக்கு அற்புதங்களையும் அடையாளங்களையும் ஜனங்கள் நாடுகிறார்கள். வேதாகமத்திலே சொல்லப்பட்ட அடையாளங்களும் அற்புதங்களும் அவர்களுக்கு போதாமலிருக்கிறது. இயேசு செய்த வேறு அநேக காரியங்களுமுண்டு; அவைகளை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் புஸ்தகங்கள் உலகம் கொள்ளாதென்று எண்ணுகிறேன் என்று அப்போஸ்தலனாகிய யோவான் தன்னுடைய சுவிசேஷத்தை எழுதி முடித்திருக்கிறார். வேதாகமத்தில் சொல்லப்பட்ட அற்புதங்கள் ஒரு மனிதனுடைய விசுவாசத்திற்கு போதுமானது.

அற்புத கர்த்தர் தம்மோடு இருந்த காலத்தில் அநேக அற்புதங்களை கண்ணாரக்கண்டவன் தோமா என்ற சீஷன். அவன் இயேசு உயிர்த்தெழுந்த பின்பு மற்ற சீஷர்கள் சொல்வதை அவன் நம்பவில்லை. அவரைக் கண்டு அவருடைய விலாவில் போட்டாலொழிய விசுவாசிக்க மாட்டேன் என்றான். அவனை கர்த்தர் கண்டு தோமாவே நீ என்னைக் கண்டதினால் விசுவாசிக்கிறாய் காணாதிருந்தும் விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள்



என்றார். ஆகையால் அப்போஸ்தலனாகிய பவுல் யூதர்கள் மத்தியில் போதிக்கும்போது தாங்கள் தேவனிடத்திலிருந்து வந்தவர்கள் என்பதற்கு அடையாளமாக ஒரு அற்புதத்தை அவர்கள் மத்தியில் செய்து காட்டவில்லை. ஆனால் யூதர்கள் அதை எதிர்பார்த்தார்கள்.

யூதர்கள் அடையாளத்தையும், கிரேக்கர் ஞானத்தையும் தேடுகிறார்கள். ஆனால் பவுலே சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை அவர்களுக்குப்பிரசங்கித்தார். என் அன்பு சகோதரனே சகோதரியே நீ எதைத் தேடிக்கொண்டிருக்கிறாய்? அற்புத அடையாளங்களையா? அல்லது சிலுவையில் உனக்காக அறையப்பட்ட இயேசுவையா? நீ தேர்ச்சியடைய அவரைக்குறித்து அறிந்துகொள்.

பெந்தெகொஸ்தே நாளில் பேதுரு பிரசங்கிக்கும்போது; "நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாரும் நிச்சயமாய் அறியக்கடவீர்கள் என்றான்" (அப்.2:36). இங்கே பேதுரு தன்னைப் பற்றியோ அல்லது மற்ற அப்போஸ்தலர்களைப் பற்றியோ பேசாமல் சிலுவையில் யூதர்களால் அறையப்பட்ட கிறிஸ்துவையும் அவருடைய உபதேசத்தையும் பேசினார். இதைக் கேட்ட 3000 பேர் கர்த்தருடைய சுவிசேஷ சத்தியத்திற்கு கீழ்ப்படிந்து ஞானஸ்நானம் பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டனர்.

மேலும், பவுல் சொல்லும்போது; "நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும், எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம்" என்கிறார் (2கொரி.4:5). பல இடங்களில் பிரசங்கியார்கள் பிரசங்கிக்கிறார்கள். தங்களுடைய சொந்த காரியங்களையும், தங்களுடைய தேவைகளையும் சொல்லி இதற்காக ஜெபியுங்கள் என்கிறார்கள். இவ்விதமான பிரசங்கங்கள் ஒரு மனிதனை கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடைய செய்யுமா?

இரண்டாவது பவுல் அந்த வசனத்தில் சொல்லும்போது; "எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி" என்று குறிப்பிடுகிறார். ஒரு மனிதனை கிறிஸ்துஇயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்த அவனுக்கு வேதாகமத்திலிருந்து புத்திமதிகளை சொல்லவேண்டிய பொறுப்பு இருக்கிறது. "நீங்கள் புத்தியைக்கேட்டு ஞானமடைந்து அதைவிட்டு விலகாதிருங்கள்" என்று நீதி.4:13-ல் படிக்கிறோம். ஒவ்வொருவரும் புத்தியை கேட்டு ஞானமடைய வழிஏற்படுத்தவேண்டும். ஏனென்றால் ஞானமே பிரதானம் என்று காண்கிறோம். என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியை சம்பாதித்துக்கொள் என திருமறை நமக்குப்போதிக்கிறது. மேலும், "புத்திமதியை உறுதியாய்

பற்றிக்கொள், அதை விட்டுவிடாதே; அதைக்காத்துக்கொள், அதுவே உனக்கு ஜீவன்'' என காண்கிறோம் (நீதி.4:13).

சிலர் புத்திமதியான வார்த்தைகளை அலச்சியப்படுத்துகிறார்கள். ஆனால் அது ஒரு மனிதனுக்கு ஜீவனாக இருக்கிறதாக படிக்கிறோம். ஞானவான்கள் புத்திமதிகளை ஏற்றுக்கொள்வார்கள். துன்மார்க்கரோ புத்திமதிகளை அலட்சியப்படுத்துகிறார்கள். பவுல் தீமோத்தேயு என்ற உத்தம வாலிபனுக்கு எழுதும் புத்திமதியை கவனியுங்கள்; ''உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு, இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால், உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்'' என்றார் (1தீமோ.4:16). இந்த பவுலின் புத்திமதிகளை ஏற்றுக்கொண்ட தீமோத்தேயு அந்தவிதமாக ஊழியத்தை செய்து தன்னைக் காத்துக்கொண்டான். சிலருக்கு இந்தவிதமான புத்திமதியான வார்த்தைகள் சொல்லிவிட்டால் போதும் எனக்கெல்லாம் யாரும் ஒன்னும் சொல்லவேண்டாம் எனக்கு எல்லாம் தெரியும் என்பார்கள். கற்றுக்கொள்ளுகிற ஒரு வாலிபம் வயதில் முதிர்ந்தவர்கள் சொல்லும் புத்திமதியான வார்த்தைகளை கவனிக்கவேண்டும். அது அவனுடைய வாழ்க்கைக்கு பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கும். நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடைய இந்த விதமான புத்திமதிகளை ஏற்றுக்கொண்டு உங்களைக்குறித்தும் உங்களுடைய உபதேசத்தை குறித்தும் எச்சரிக்கையாயிருந்து, பேச்சிலும் நடக்கையிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாக இருக்கபிரயாசப்படுங்கள்.

மூன்றாவது, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம் என்கிறார். கடனுக்காக உபதேசிக்கிறவர்களாக இருக்கக்கூடாது. ஞானமான உபதேசம் மிகவும் முக்கியம். ஞானமான உபதேசம் என்றால் உலக ஞானத்தைக் கற்றுக்கொடுப்பதா? அல்லது வாழ்க்கையின் ஞானமான காரியங்களைக் கற்றுக்கொடுப்பதா? இவைகளை கொடுக்க உலக கல்லூரிகள் இருக்கிறது. ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவுக்குள் தேர்ச்சியடைய வேதவசனங்களை ஞானத்தோடு உபதேசம் பண்ணவேண்டும். ''ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன்; ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன்; எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்து மூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக; அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்'' என்று பேதுரு சொல்லுகிறார் (1பேது.4:11).



ஒருவர் போதிக்க ஆரம்பித்துவிட்டாலே அவர் வாயிலிருந்து வருவதெல்லாம் வேதாகமத்தின் வசனங்களாகவே இருக்கவேண்டும். ஒரு வசனத்தை சொல்லிவிட்டு ஊர் கதையெல்லாம் சொல்லி பின்பு துவக்கின வசனத்தையே மறந்துவிடுவார்கள். அந்தவிதமாக பிரசங்கித்தால் அவர்கள் கர்த்தரையும் அவருடைய உபதேசங்களையும் அறிந்துகொள்ளுவதெப்படி? ''கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திராமல் மீறி நடக்கிற எவனும் தேவனை உடையவனல்ல; கிறிஸ்துவின் உபதேசத்தில் நிலைத்திருக்கிறவனோ பிதாவையும் குமாரனையும் உடையவன். ஒருவன் உங்களிடத்தில் வந்து இந்த உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தால், அவனை உங்கள் வீட்டிலே ஏற்றுக்கொள்ளாமலும், அவனுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருங்கள். அவனுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவனுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாயிருக்கிறான்'' (2யோவா.9-11).

உபதேசம் பண்ணுகிறவர்கள் கிறிஸ்துவின் உபதேசத்தைக் கொண்டுவராமலிருந்தாலோ, அந்த உபதேசத்தில் நிலைத்திராமல் மீறி நடக்கிறவர்களாயிருந்தாலோ அப்படிப்பட்டவர்களை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. ஏனென்றால் அவர்கள் தேவனை உடையவர்கள் அல்ல என்று வேதாகமமே அப்படிப்பட்டவர்களைக் குறித்துச் சொல்லுகிறது. அப்படிப்பட்டவர்களை நாம் அடையாளம் கண்டு அவர்களை நம்முடைய வீடுகளில் ஏற்றுக்கொள்ளாமல் அப்படிப்பட்டவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருக்கவேண்டும்.

அப்படி மீறி அவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறவன் அவர்களுடைய துர்க்கிரியைகளுக்கும் பங்குள்ளவனாயிருக்கிறான் என படிக்கிறோம். ஆகையால் இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கிற அன்பு சகோதரனே, ஞானமான உபதேசம் வேதாகமத்திலிருந்து வெளிப்பட வேண்டும். அந்த உபதேசம் உங்களை கிறிஸ்துஇயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும். மற்றபடி உலகபிரகாரமான ஆறுதலான வார்த்தைகள் உங்களை சரிசெய்யாது, உங்களுடைய பாவமன்னிப்புக்கு உதவாது. கர்த்தருடைய வசனம் மட்டுமே உங்களை பரிசுத்தப்படுத்தும். அந்த வசனங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அதைபிரசங்கிக்கிற சபைகளுக்கு செல்லுங்கள், அதை பிரசங்கிக்கிற பிரசங்கியாரை உங்கள் வீடுகளில் ஏற்றுக்கொண்டு கர்த்தருடைய வசனத்திற்கு செவிகொடுத்து அதற்கு கீழ்ப்படியுங்கள். எல்லா புத்திக்கும்மேலாக தேவசமாதானம் அப்பொழுது உங்களை ஆட்கொள்ளும்.

மேலும் அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லும்போது; ''நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற

அறிவிலும் வளருங்கள் அவருக்கு இப்பொழுதும் என்றென்றைக்கும் மகிமையுண்டாவதாக. ஆமென்" என்கிறார் (2பேது.3:18). ஒரு மனிதன் கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடைய அவன் அவருடைய கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளர வேண்டும். பொதுவாக பெயரளவில் கிறிஸ்தவர்களாக இருப்பவர்களிடம் ஏதாவது ஆண்டவரைப்பற்றி சொல்லிவிட்டால் போதும் உடனே அவர்கள் சொல்லுகிற வார்த்தை என்னவென்றால் நாங்கள் எல்லாம் கிறிஸ்தவர்கள் தான் தெரியாதவர்களிடம் போய் சொல்லுங்கள் என்பார்கள். முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள் அநுதினமும் தேவாலயத்திலே கூடினார்கள். எதற்காக? வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்க்கும்படியாகவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவில் தேர்ச்சியடையும்படியாகவும், ஜெபிக்கும்படியாகவும், ஐக்கியத்தில் வளர்ச்சியடையும்படியாகவும் கூடினார்கள்.

இதோ, சகோதரர்கள் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையாயிருக்கிறது என்று சங்கீதத்தில் வாசிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் ஆசியா முழுமைக்கும் சுவிசேஷம் அறிவித்தவர். அவர் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவர்களாக அநேகரை நிறுத்தும்படி அவரையே அறிவித்து, வேதாகமத்திலிருந்து புத்திசொல்லி, எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணினார். அதைப்போல நாங்களும் உங்களுக்கு போதிக்கவே விரும்புகிறோம். மற்றபடி மாய்மாலம் பண்ணவும், தந்திரமான வார்த்தைகளால் உங்களை வசனப்படுத்தவும், பொய்யான காரியங்களை உங்களிடத்தில் சொல்லி பணம் சம்பாதிக்கவும் விரும்பாமல் சத்தியத்தை சத்தியமாகவும் தேவனுடைய விருப்பத்தின்படியும் கர்த்தருடைய ஊழியத்தை அவருடைய திருசித்தத்தின்படி செய்யவுமே விரும்புகிறோம். ஆகையால் நீங்கள் கிறிஸ்து இயேசுவுக்குள் தேர்ச்சியடையும்படி அவரையும் அவருடைய உபதேசத்தையும் அறிந்துகொள்ளுங்கள்.

**கேள்வி**

**சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்குமா?**

ஆம், இன்றைக்கு சிலுவையைப்பற்றிய உபதேசத்தைச் சொன்னாலே சிலருக்கு பைத்தியம் பிடிப்பதைப்போல இருக்கிறது என்கிறார்கள். அதைச் சொன்னாலே வேறுஏதாவது பேசுவோமா? என்று கேட்க ஆரம்பித்துவிடுகின்றனர். வேதாகமம் இதைக்குறித்துச் சொல்லும்போது; "சிலுவையைப்பற்றி உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது" என்று காண்கிறோம் (1கொரி.1:18). உன்னதமான



நற்செய்தியை ஒரு மனிதன் வேண்டாம் என்று சொல்லுவானேயானால் அவன் கெட்டுப்போவான். அப்படிப்பட்டவனுக்கு அந்த செய்தி பைத்தியமாக இருக்கும். ஆனால் அதே செய்தி ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு இரட்சிப்பைக் கொடுக்கிறது. ஆகையால் இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவபெலனாயிருக்கிறது என காண்கிறோம்.

இச்செய்தி உங்களுடைய வாழ்க்கையில் இரட்சிப்பை கொண்டுவரும். இதை நீங்கள் விசுவாசிக்கும்போது அது உங்களை அரவணைக்கும், இரட்சிப்பின் வழியில் உங்களை வழிநடத்தும். உங்கள் ஆவி ஆத்துமா சரீரத்திற்கு மீட்பைக் கொடுக்கும். இந்த உபதேசத்தை விட்டுவிடாதிருங்கள். அதை உங்களுடைய இருதயமாகிய பலகைகளில் எழுதிக்கொள்ளுங்கள். மற்றவர்களுக்கும் இதை எடுத்துச்சொல்லுங்கள். அவர்களும் இந்த இரட்சிப்பை பெற்றுக்கொண்டு ஆசீர்வதிக்கப்பட உதவிடுங்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 44. சோம்பல்

## Slackness

**சோ**ம்பலினால் அநேக தேவனுடைய ஆசீர்வாதங்களை ஒவ்வொருநாளும் இழக்கிறோம். இந்த சோம்பலிலிருந்து விடுபட வழி என்ன? இதற்கு வேதாகமம் ஒரு நல்ல ஆலோசனையை நமக்குக் கொடுக்கிறது. "சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய், அதின் வழிகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள். அதற்குப் பிரபுவும், தலைவனும், அதிகாரியும் இல்லாதிருந்தும், கோடைகாலத்தில் தனக்கு ஆகாரத்தைச் சம்பாதித்து, அறுப்புக்காலத்தில் தனக்கு தானியத்தைச் சேர்த்துவைக்கும்" (நீதி.6:6-8). மனிதன் சில தொழிலை கற்றுக்கொள்வதற்காக பயிற்சி பெறும்படி பல இடங்களுக்கு கடந்துசெல்கிறான். அற்குவேண்டிய பணமும் செலுத்தி பயிற்சி பெறுகிறான். கர்த்தர் ஒரு இலவசமான பயிற்சியை சோம்பலுள்ளவர்களுக்கு அளிக்கும்படியாக எறும்பினிடத்தில் போய் அதின் வழிளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள் என்கிறார்.

இதற்காக நீங்கள் பணம் செலவழிக்கவேண்டியதில்லை. வெகுதூரம் சென்று பயிற்சிபெற வேண்டிய அவசியமில்லை. உங்கள் வீட்டின் ஓரங்களில் உள்ள எறும்பு புற்றுக்களை கண்ணோக்கிப்பார்ப்பீர்கள் என்றால், அது எவ்வளவு சுறுசுறுப்பாய் காரியங்களை செய்கிறது, எப்படி செய்கிறது என்பதை நீங்கள் காணமுடியும். அது தனக்கு வேண்டிய ஆகாரத்தை கோடைகாலத்திலே சம்பாதித்துவைக்கிறது. அறுப்புக்காலத்திலே அதிகமாக

தானியங்கள் கிடைக்கும் ஆகையால் அந்தக்காலத்தில் அது விழித்திருந்து சேர்த்துவைக்கிறது. அதற்கு தலைவன் இல்லை, அதிகாரியில்லை, பிரபுக்கள் இல்லை. ஆனாலும் பூமியிலே சிறியவைகளாயிருந்தும் மகா ஞானமாக காரியங்களைச் செய்கிறது. அவைகளைப் பார்க்கிலும் எத்தனையோ மடங்கு உயர்வாக சிருஷ்டிக்கப்பட்டவன் மனிதன்.

அவன் சோம்பலுள்ளவனாயிருக்கிறபடியால் அவனைப்பார்த்து கர்த்தருடைய வேதம் நீ போய் எறும்பினிடத்தில் கற்றுக்கொள் என்று ஆலோசனை சொல்லுகிறது. தேவசாயலில் உண்டாக்கப்பட்ட மனிதன் ஞானத்தை இழந்து சோம்பேறியாக மாறும்போது முழுபெலத்தையும் இழக்கிறான். ஆகையால் சத்துவமற்ற சந்துவாகிய எறும்பே அவனுக்கு ஆலோசனை சொல்லும் ஆசிரியாராக இருக்கிறது.

"சோம்பேறி குளிருகிறதென்று உழமாட்டான்; அறுப்பிலே பிச்சைகேட்டாலும் அவனுக்கு ஒன்றுங்கிடையாது" (நீதி.20:4). இப்படிப்பட்டவனுக்கு யார் பிச்சை கொடுப்பார்கள்? அவனுக்கு கைகால்கள் நன்றாக இருக்கிறது ஏதாவது ஒரு வேலைசெய்து பிழைக்கக்கூடாதா என்று சொல்லி அவனை அனுப்பிவிடுவார்கள். எறும்புகளிடமிருந்து கற்றுக்கொள்ளும் மற்றொரு காரியம். எறும்புகள் யாராவது வந்து கொடுப்பார்கள் என்று ஏங்கிக்கொண்டு இருப்பதில்லை. தனக்கு வேண்டிய போஜனமிருக்கும் இடத்தை அது அறிந்து உடனே சென்று அவைகளை உண்ணவும், சேகரிக்கவும் ஆரம்பிக்கிறது. பெரிய பள்ளத்தாக்குகளாக இருந்தாலும், மாட மாளிகைகளாக இருந்தாலும் அவைகள் அங்கு சென்று தனக்குவேண்டியவைகளை பெற்றுக்கொள்ளுகிறது. ஆனால் சோம்பேறியோ "தன் கையைக் கலத்திலே வைத்து அதைத் தன் வாய்க்குத் திரும்ப எடுக்க வருத்தப்படுகிறான்" (நீதி.26:15). இப்படிப்பட்ட சோம்பேறி எப்படி போஷிக்கப்படுவான். சோம்பேறியின் கைகள் வேலைசெய்ய சம்மதிப்பதில்லை.

கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது; "சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்; சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்" (நீதி.10:4). அநேகர் பரம ஏழைகளாக இருக்கிறார்கள் என்றால் அதற்கு முக்கிய காரணம் அவர்கள் வேலைசெய்ய விரும்புகிறதில்லை. உள்ளது போதும் என்று சொல்லி சோம்பலாக இருந்துகொண்டு கைமுடக்கிக்கொண்டு நித்திரை செய்வார்கள். அல்லது பொது இடங்களில் உட்கார்ந்துகொண்டு பொழுதை போக்குவார்கள். இப்படிப்பட்டவர்கள் ஒருபோதும் செல்வத்தைப் பார்ப்பதில்லை. எறும்புகளைப்போல சுறுசுறுப்பாக வேலைசெய்கிறவர்கள் என்றும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்கள் கைகள் செல்வத்தை உண்டாக்கும்.



சோம்பேறியின் விரும்பம் அதிகமாக இருக்கும். ஆனாலும் அவனுடைய விருப்பம் நிறைவேறுவதில்லை. "சோம்பேறியுடைய ஆத்துமா விரும்பியும் ஒன்றும் பெறாது; ஜாக்கிரதையுள்ளவர்களுடைய ஆத்துமாவோ புஷ்டியாகும்" என நீதி.13:4-ல் வாசிக்கிறோம். சோம்பேறிக்கு விரும்பம் இருக்கிறது. ஆனால் வேலைசெய்வதற்கு மனமில்லையே பின்பு எப்படி பெற்றுக்கொள்ளமுடியும். ஒரு மனிதன் தன்கைகளினால் வேலைசெய்யும்போது நல்ல பலனைப் பெற்றுக்கொள்ளுகிறான். அவனுடைய கைகளின் பிரயாசத்தை கர்த்தர் ஆசீர்வதிக்கிறார். மேலும் சோம்பேறியைக் குறித்து படிக்கும்போது; "சோம்பேறியின் கைகள் வேலைசெய்யச் சம்மதியாததினால், அவன் ஆசை அவனைக் கொல்லும்"(நீதி.21:22).

சிலர் பார்த்து பார்த்து ஏங்கிப்போவார்கள். அதைப்போல வேலைசெய்ய மனமில்லாத சோம்பேறியின் ஆசை ஒவ்வொருநாளும் அவனைக் கொல்லுகிறதாயிருக்கிறது. அவன் நினைத்து நினைத்து கொஞ்சம் கொஞ்சமாக கொல்லப்படுவான். அவனுக்கு சற்று உற்சாகம் வந்து வேட்டையாடி ஒன்றைப் பெற்றுக்கொண்டாலும் அவன் அதை சமைப்பதில்லை. ஏனென்றால் அவன் அதை சமைக்கும்படி அவனுடைய கைகள் ஒத்துழைப்பதில்லை. அவன் எப்படி திருப்தியாக சாப்பிட முடியும்.

ஆகையால் சோம்பலுள்ளவர்களை பார்த்து கர்த்தருடைய வசனம் மேலும் சொல்லுகிறது; "ஒருவன் வேலைசெய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்குக் கட்டளையிட்டோமே. உங்களில் சிலர் யாதொரு வேலையும் செய்யாமல், வீண் அலுவற்காரராய் ஒழுங்கற்றுத்திரிகிறார்களென்று கேள்விப்படுகிறோம். இப்படிப்பட்டவகள் அமைதலோடே வேலைசெய்து, தங்கள் சொந்தச் சாப்பாட்டைச் சாப்பிட வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே அவர்களுக்குக் கட்டளையிட்டுப் புத்திசொல்லுகிறோம்" என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (2தெச.3:10-12).

வேதாகமம் ஒருவரையும் சோம்பலாக்குவதில்லை. தேவன் ஆறுநாளும் வேலைசெய்து நாம் காண்கிற அனைத்தையும் உண்டாக்கிறார். ஏழாம் நாள் அவர் ஓய்ந்திருந்தார் என படிக்கிறோம். அவரால் இந்த உலகத்தில் உண்டாக்கப்பட்ட ஒவ்வொருவரும் வாரத்தில் ஆறுநாளும் வேலைசெய்யவும் ஒரு நாள் ஓய் எடுத்துக்கொள்ளவும் அனுமதிக்கப்படுகிறான். ஆகையால் இதில் வேலைசெய்ய மனதில்லாதவன் சாப்பிட கூடாது என்று அறிவுறுத்தப்படுகிறான். சோம்பேறிக்கு வேலைசெய்ய மனமில்லை ஆகையால் அவன் சாப்பிடாதிருக்கவேண்டும். எப்படி சாப்பிடாமல் இருக்கமுடியும் அது

கூடாதல்லவா, எறும்பு எப்படி தனக்குவேண்டியவைகளை தேடிக்கொள்கிறதோ அதைப்போல அவனும் தேடக்கடவன்.

சோம்பேறியின் வழி எப்படிப்பட்டது? நீதி.15:19-ம் வசனம் அது முள்வேலிக்குச் சமானம் என்று சொல்லுகிறது. முள்வேலியை ஒருவன் கடப்பது மிகவும் கடினம். எவ்வளவுதான் கவனமாக அடியெடுது வைத்தாலும் எங்கிருந்தாவது முள் அவனை குத்திவிடும் அப்படிபட்ட வழியாக அவன் செல்ல கால தாமதம் ஆகும். அந்தப்படியாக சோம்பேறியின் வழியும் இருக்கிறது. அவனுடைய வழியினால் ஒருவருக்கும் பிரயோஜமில்லை. அவனுடைய வழியைக்குறித்து மற்றவர்களுக்கு நாம் போதிக்க முடியாது. அவனுடைய வழியின் முடிவு அழிவு என காண்கிறோம். முற்களை அழித்துப்போடுவது போல அவனுடைய வழியும் அழிக்கப்படும். சோம்பேறியை நம்பி ஒரு காரியத்தை கொடுத்த அனுப்ப முடியாது. ஏனென்றால்; " பற்களுக்குக் காடியும், கண்களுக்குப் புகையும் எப்படியிருக்கிறதோ, அப்படியே சோம்பேறியும் தன்னை அனுப்புகிறவாகளுக்கு இருக்கிறான்" (நீதி.10:26). கசப்பானதை நாம் குடிக்கும்போது நம்முடைய பற்களுக்கு அவைகள் எப்படியிருக்கிறதோ அப்படியே சோம்பேறியும் இருப்பான். அதைப்போல நம்முடைய கண்களுக்கு புகை எப்படி பகையாக இருக்கிறதோ அப்படியே சோம்பேறியும் இருப்பான். அவனை நம்பி ஒரு காரியத்தையும் செய்யமுடியாது. அதினாலே நமக்கு நஷ்டம் ஏற்படும். எப்படி "மூடன் கையிலே செய்தி அனுப்புகிறவன் தன் கால்களையே தறித்துக்கொண்டு நஷ்டத்தை அடைகிறானோ" அதைப்போல சோம்பேறி தன்னை அனுப்புகிறவர்களுக்கு நஷ்டத்தை ஏற்படுத்துவான்.

சோம்பேறியைப்பற்றி மேலும் சொல்லவேண்டுமானால் அவனைக்குறித்து சாலொமோன்; "கதவு கீல்முளையில் ஆடுகிறதுபோல, சோம்பேறியும் படுக்கையில் ஆடிக்கொண்டிருக்கிறான்" என்கிறார் (நீதி.26:14). அதிகமான சோம்பேறிகள் இந்தவிதமாக செய்கிறதை நம்முடைய வாழ்க்கையில் பார்க்கமுடிகிறது. படுத்துக்கொண்டு நான் அதை செய்திடுவேன் இதைசெய்திடுவேன் என்று சொல்லுவான். ஆனால் அவனால் ஒன்றும் செய்யமுடியாது என்பதுவே உண்மை. கதவு கீல்முளையில் அடுகிறது அது அங்கேயே ஆடிக்கொண்டிருக்கும். அதைப்போலவே சோம்பேறியும் படுக்கையில் ஆடிக்கொண்டிருப்பான். இப்படிப்பட்ட சோம்பேறி கவனிக்கவேண்டியதும் கற்றுக்கொள்ள வேண்டியது எங்கே என்றால் எறும்பினிடத்தில் என்று வேதம் சொல்லுகிறது.

"பூமியிலே சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு" நீதி.30:24. அதில் ஒன்று எறும்பு. இது அற்பமான ஜெந்துவாயிருந்தும், கோடைகாலத்திலே தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை



சம்பாதிக்கிறது. அவைகளை சோம்பேறி கவனிக்க வேண்டும். அது தேவடைய சிருஷ்டிப்பிலே மிகவும் அற்பமாக படைக்கப்பட்டிருக்கிறது. அது தனக்கு இருக்கிற சக்தியால் தனக்கு வேண்டிய ஆகாரத்தை அதினதின் காலத்திலே நேர்த்தியாக சம்பாதித்துவைத்துக்கொள்ளுகிறது. தேவனுடைய சாயலில் உண்டாக்கப்பட்ட நீ சோம்பலாக இருந்துகொண்டு உனக்கு வேண்டியவைகளை யாராது கொடுப்பார்கள் என்று ஏங்கி காத்திருப்பது உனக்கு அவமானமல்லவா! என்பதை இது உணர்த்துகிறது.

அதைப்போல சத்துவமற்ற ஜெந்துவாயிருந்தும், தங்கள் வீட்டைக் கன்மலையிலே தோண்டிவைக்கும் குழிமுசல்கள். வேதாகமம் இதை சத்துவமற்ற ஜெந்து என குறிப்பிடுகிறது. ஆம் இதைப்பிடித்துப் பார்த்தால் மிகவும் மென்மையாக இருக்கும். இது தன்னுடைய விடாமுயற்சியினால் தன்னுடைய வீட்டை கன்மலையில் தோண்டி கட்டுகிறது. சிலர் கன்மலைகளை தோண்டும்போது மிகவும் கடினமாக இருக்கிறது வெடி வைத்துதான் இதை தகர்க்கவேண்டும் என்பார்கள். அவ்வளவு கடினமுள்ளதாக இருக்கும். இப்படிப்பட்ட கடினமுள்ள கன்மலையிலே குழிமுசல்கள் குடிகொள்ளுகிறதே அவைகளை சோம்பேறி நோக்கிப்பார்க்கவேண்டும். அதைப்போல ராஜா இல்லாதிருந்தும் பவுஞ்சு பவுஞ்சாய் புறப்படுகிற வெட்டுக்கிளிகளைக் குறித்து நீதி.30:27-ம் வசனத்தில் படிக்கிறோம்.

நிர்வாகத்தில் நிர்வாக அதிகாரி இல்லாதிருந்தால் எப்படியிருக்கும்? ஒரு நாட்டில் ராஜா இல்லாதிருந்தால் அந்த ராஜ்யபாரம் எப்படியிருக்கும்? ஆனால் வெட்டுக்கிளிகளுக்கு ராஜா இல்லாதிருந்தும் அவைகள் பவுஞ்சு பவுஞ்சாய் புறப்படுகிறது, அது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ஒரு சிறிய வெட்டுக்கிளிக்கு இவ்வளவு ஞானத்தையும் பெலத்தையும் கொடுத்திருக்கும்போது எல்லா சம்பத்துக்களையும் தேவ சமுகத்தில் பெற்றுக்கொண்ட மனிதன் சோம்பலாக இருக்கலாமா? மேலும், தன் கைகளினால் வலையைப்பின்னி, அரசர் மாளிகைகளில் இருக்கிற சிலந்திப்பூச்சிகளை நாம் கவனிக்கும்போது, அது எவ்வளவு அழகாக தன் கைகளினால் வலையைப்பின்னி உயர்வான இடங்களில் இருக்கிற அரசர் மாளிகைகளில் அவர்களுக்கும்மேலான இடங்களில் கட்டுகிறது.

ஒரு மாளிகையைக் கட்ட எத்தனையோ வருடங்களை எடுத்துக்கொள்ளுகிறார்கள். மகா சிறியவைகளாகிய இந்த சிலந்திப்பூச்சி யாருடைய உதவியும் இல்லாமல் தன் கைகளினாலே வலையைப் பின்னுகிறது, தனக்கு வேண்டிய இடத்தை தானே பூர்த்திசெய்து கொள்கிறது. இப்படி சத்துவமற்ற ஜெந்துக்களாக இருந்தும் அவைகள் செய்கிற காரியங்களை நோக்கிப்பார்க்கும்போது நமக்கு அது வெட்கமாக தோன்றுகிறது. உலகத்தில்

உள்ள சகல ஜீவசந்துக்களையும் ஆண்டுகொள்ளும்படியான அதிகாரத்தை பெற்றவன் மனிதன்.

அவன் சோம்பல் உள்ளவனாக இல்லாமல், நலமான காரியங்களைச் செய்ய தன்னை ஒவ்வொருநாளும் ஈடுபடுத்த வேண்டும். தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டுவந்து, அதைப் பண்படுத்தவும் காக்கவும் வைத்தார் என ஆதி.2:15-ம் வசனத்தில் படிக்கிறோம். தேவனுடைய இந்த நோக்கத்தை புரிந்துகொண்டு சோம்பல் இல்லாதவர்களாக தேவனுடைய சித்தம் செய்யுங்கள்.

**கேள்வி**

**சோம்பலின் அப்பத்தை கொடாமல் இருக்கிறவள் யார்?**

குணசாலியான ஸ்திரீ. அவளைக்குறித்து நீதிமொழிகள்31:10-31 வசனங்களில் படிக்கிறோம். அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள். ஆகையால் அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவளைப்பார்த்து; அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான். இப்படிப்பட்ட ஸ்திரீகளைப் பார்ப்பது அரிதாக இருக்கிறது. ஏனென்றால் தன் வீட்டுக்காரியங்களை கவனிப்பதில்லை. டிவி சீரியல் என்று உட்கார்ந்துகொண்டு நேரத்தை கழித்துக்கொண்டிருக்கிறார்கள்.

பிள்ளைகள் பள்ளிக்கு சென்று வீடுதிரும்பியவுடன் அம்மா பசிக்கிறது ஏதாவது செய்து கொடுங்கள் என்று கேட்டால், கடையிலே போய் ஏதாவது வாங்கிக்கொள் என்று பணத்தைக்கொடுப்பார்கள், அப்படியில்லையென்றால் கொஞ்சம் பொரு என்று சொல்லி அவன் கேட்டு, கேட்டு சலித்து தூங்கியவுடன் ஏதாவது ஒன்றை செய்து எழுப்பி கொடுப்பார்கள். இப்படி கொடுத்தால் அது சோம்பலின் அப்பமாகத் தானிருக்கும். நீங்கள் ஒரு குணசாலியாக இருந்து உங்கள் வீட்டை கவனியுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 45. தேவனுக்கு உபயோகமான பாத்திரம்

## A Useful Vessel For God

**மு**தல் நூற்றாண்டில் அநேகர் தேவனுக்கு உபயோகமான பாத்திரமாக வாழ்ந்தனர். அதினாலே சபையானது நாளுக்கு நாள் வளர்ந்துபெருகிற்று. அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதும்போது; "தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த



தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்க வேண்டுமென்று" எழுதுகிறதை நாம் 1தெச.2:11-ம் வசனத்தில் படிக்கிறோம். அதில் முதலாவது ராஜ்யத்திற்கும் என்று எழுதுகிறார். ராஜ்யம் என்பது கர்த்தருடைய ஆளுகை அதாவது சபை. சபை கிறிஸ்துவின் சரீரமாகவும் மணவாட்டியாகவும் இருக்கிறது. இந்த சபைக்கு கர்த்தர் தலையாயிருக்கிறார். இந்த சபையில் இருக்கிற ஒவ்வொருவரும் தேவனுக்கு உபயோகமான பாத்திரங்களாக ஜீவிக்கவேண்டும். ஏனெனில் "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக" என காண்கிறோம் (எபே.3:21).

சபையானது தேவனுக்கு மகிமையாக இருக்கிறது. சபையில் இருக்கிறவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகமெங்கும் அறிவிக்கக்கூடிய உன்னதான பணியைப் பெற்று இருக்கின்றனர். பைத்தியமாக தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்கு பிரியமாயிற்று. ஆகையினாலே சபையின் மூலமாக இரட்சிபு வருகிறது என காண்கிறோம். இன்றைக்கு அநேக சபைகள் இருக்கிறது. அவைகள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட சபைகளா என்று பார்க்கும்போது கர்த்தருடைய சபையைத் தவிர மற்ற எல்லா சபைகளுமே மனிதனால் ஏற்படுத்தப்பட்டவைகளாகவே இருக்கிறது. மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகளில் மனிதபோதனைகள் இருக்கிறது. ஆனால் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட சபையில் கர்த்தருடைய போதனை மட்டுமே இருக்கிறது. சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது.

அவருடைய ஆளுகைக்குள்ளாக இருக்கிறது. ஆகையால் அது தேவனுடைய ராஜ்யம் என்றும் கிறிஸ்துவின் ராஜ்யம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ராஜ்யமாகிய சபைக்குள்ளாக இருக்கிறவர்கள். பரிசுத்தமுள்ளவர்களாயும் நீதியுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். ஏனெனில் பாவத்திலிருந்து மீட்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானார்கள். ஆகையால் பவுல் எழுதும்போது; "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி" என்கிறார் (1தெச.2:10). அப்போஸ்தலர்கள் பேச்சினாலே மாத்திரமல்ல, ஜீவியத்திலும் சபையார் மத்தியில் சாட்சியுள்ளவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள்.

உபதேசிக்கிறவன் முதலாவது அதன்படி நடக்கவேண்டுமல்லவா, ஊருக்குத்தான் உபதேசம் தனக்கல்ல என்று ஒருவன் சொல்லமுடியுமா? கூடாதே. போதிக்கிறவன் அதன்படி நடக்கவேண்டும். பவுல் அந்தவிதமாக விசுவாசிகள் மத்தியில் இருந்தார். மேலும் அவர் சொல்லும்போது; "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரம்முண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு,

ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது" என்கிறார் (1கொரி.10:23). ஒரு கிறிஸ்தவன் இப்படித்தான் வாழவேண்டும் என்ற போதனை இருக்கிறது. அதன்படிதான் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டும். எப்படிவேண்டுமானாலும் வாழலாம் என்பதல்ல. செய்யக்கூடாத ஒரு காரியத்தை ஒரு கிறிஸ்தவன் செய்யும்போது தேவனை அறியாத அஞ்ஞானி பார்த்து இவனெல்லாம் ஒரு கிறிஸ்தவனாம் என்று ஏளனமாக நினைப்பான் அல்லவா? ஆகையால் தேவனுக்கு உகந்த பாத்திரமாக ஒவ்வொருநாளும் வாழும்படியாக நாம் முயற்சிக்கவேண்டும்.

இரண்டாவது அதேவசனத்தில் மகிமைக்கும் என்று படிக்கிறோம். மகிமை என்பது பரலோகம் என்று காண்கிறோம். தேவன் சபையின் மூலமாக பரலோகத்திற்கு அழைத்திருக்கிறார். சபையில் நம்மை சரிசெய்கிறார் என்றே சொல்ல வேண்டும். சபை என்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக்கப்பட்ட மணவாட்டி. ஆயத்தமாக்கப்பட்டவர்கள் மட்டுமே அவரோடு ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவார்கள். ஆகையால் தேவனுடைய அழைப்பையும் அவருடைய சித்தத்தையும் அறிந்துகொள்ளுங்கள். ஏனெனில், "தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்" என காண்கிறோம் (வெளி.21:27). உங்களுடைய வாழ்க்கையில் தீட்டுள்ளவர்களா வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? அருவருப்பான காரியங்களை செய்துகொண்டிருக்கிறீர்களா? பொய்பேசுகிறவர்களாக இருக்கிறீர்களா? என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். உலகத்திற்கு ஏற்றார்போல வாழ்ந்துகொண்டு நித்தியமான பரலோகத்திற்குள்ளாக சென்று விடலாம் என்று நினைத்துவிடக்கூடாது. இப்படிப்பட்டவைகளை செய்கிறவர்கள் அதில் பிரவேசிப்பதில்லை என காண்கிறோம்.

பரிசுத்தமாக வாழ்ந்து நீதியை நடப்பிக்கிறவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் எழுதப்படுவார்கள். அவர்கள் மட்டுமே அதில் பிரவேசிப்பார்கள் என காண்கிறோம். ஐ எ எஸ் பரீட்சை எழுதுகிறவர்கள் நேரடியாக அந்த பரீட்சையை எழுதமுடியாது. முறைப்படியாக படிப்படியாக படித்து ஏதாவது ஒரு டிகிரி முடித்து, அந்த ஐ.எ.எஸ் பரீட்சைக்கு ஆயத்தமாகிறார்கள். அதைப்போல தேவன் ஏற்படுத்திவைத்திருக்கிற இந்த இரட்சிப்பின் திட்டத்தை முதலாவது ஒருவர் புரிந்துகொண்டு அதற்கு கீழ்ப்படிந்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று, கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டு, பரிசுத்தமுள்ளவர்களாயும், நீதி நியாயங்களை செய்கிறவர்களாயும் வாழும்போது தேவனுக்கு உகந்த பாத்திரங்களாக



இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அவருடைய ஜீவபுத்தகத்தில் எழுதப்படுகிறார்கள். "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். அகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்" (1தெச.4:7,8).

தேவனுடைய அழைப்பையும் அவருடைய எதிர்பார்ப்பையும் முதலாவது ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளவேண்டும். இவைகளை புரியாத ஒருவர் அவருக்கேற்ற பாத்திரமாக வாழ்வது கூடாதகாரியம். பாவத்திலே ஒவ்வொருநாளும் முழ்கிக்கொண்டிருக்கும் ஜனங்களை இந்த உலகத்திலிருந்து தம்முடைய குமாரன் மூலமாக அவர்களை இரட்சிக்கும்படியாக தேவன் திட்டம் கொண்டார். ஆகையால் பழுதில்லா அவரை இந்த உலகத்தின் பாவத்திற்காக மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தார். அவருடைய மரணத்தினால் நாம் பாவத்திலிருந்து விடுதலையாகிறோம். நாம் செய்த நற்காரியங்களினாலோ அல்லது தானதர்மங்களினாலோ நாம் இரட்சிக்கப்படவில்லை. ஆண்டவர் இயேசு சிலுவையில் சிந்தின இரத்தித்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்கிறோம். மேலும் பவுல் சொல்லும்போது; "சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகையால் நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்" (பிலி.3:13-15).

பழைய காரியங்கள் நமக்கு இரட்சிப்பை கொண்டுவராது. அவைகளை நாம் மறந்து நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளவைகளை நாம் நோக்கிப்பார்த்து வெற்றிநடைபோடவேண்டும். அநேகர் பின்னிட்டுப்போவதற்கு காரணம். பின்னானவைகளையே திரும்பிப் பார்ப்பது. பின்னிட்டுப்பார்த்தவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை இழந்தார்கள் என்றே நாம் வேதத்தில் படிக்கிறோம். லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆகிவிட்டாள். இஸ்ரவேலரில் அநேகர் எகிப்தை பின்னிட்டுப்பார்த்து கானானை இழந்தார்கள். ஆண்டவரும் கலப்பையின் மேல் கைவைத்துவிட்டு பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவன்அல்ல என்கிறார். தேவன் நம்மை மேன்மையான காரியத்திற்கு அழைத்திருக்கிறார். கீழானவைகளை பார்த்து என்னவாகப்போகிறது?

தேவனுடைய மேலான ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு அவைகள் தடைகளாவே இருக்கும். ஆகையால் தேவனுடைய இந்த பரிசுத்த அழைப்பபை அசட்டை பண்ணாமல் கீழ்ப்படிந்து அவருக்கு உகந்த பாத்திரமாக மாறபிரயாசப்படுங்கள்.

மூன்றாவது எச்சரிப்பை பார்க்கிறோம். "தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்" என்கிறார் (1தெச.2:12). ஒரு நல்ல போதகன் ஒரு விசுவாசியும் கெட்டுப்போய் விடக்கூடாது என்பதற்காக அவர்களை நல்வழிபடுத்த பிரயாசப்படுவான். சபையானது ஒரு குடும்பத்தைப் போன்றது. அது ஆவிக்குரிய குடும்பமாகவே இருக்கிறது. குடும்பத்தில் உள்ள ஒருவன் கெட்டுப்போவதை எந்த ஒரு தகப்பனும் விரும்ப மாட்டான்.

ஆகையால் பவுல் இங்கு தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல புத்திமதிகளையும் எச்சரிப்பையும் கொடுக்கிறார். ஒரு தகப்பன் ஒரு காரியத்தைச் சொல்லி எச்சரித்தால் அக்குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள் அல்லவா, அதைப்போல ஆவிக்குரிய குடும்பத்தில் இருக்கிற நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சொல்லுகிற காரியங்களுக்கு நாம் கீழ்ப்படிந்து நம்மை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். நமக்கு நன்மை உண்டாயிருக்கும்படி அவர்கள் ஊழியக்காரர்களாயிருக்கிறார்கள்.

முற்பிதாக்களின் காலத்தில் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளைக் கொண்டு பேசிவந்தார் என்பதை நாம் அறிவோம். எசேக்கியேல் என்ற தம்முடைய தீர்க்கதரிசி மூலமாக பேசும்போது; "மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக" என்றார் (எசே.3:17). இந்த தீர்க்கன் தேவனுடைய நாமத்தினாலே அவர்களை எச்சரித்தான். அவன் சற்றும் யோசிக்கவில்லை. முகதாட்சனியம் பார்க்கவில்லை. கர்த்தருடைய வார்த்தையை உள்ளபடியாக சொல்லி அவர்களுடைய தவறான காரியங்களைக் குறித்து எச்சரித்தான்.

அந்தப்படியே பவுல் புத்திமதியான காரியங்களை சொல்லி எச்சரிக்கிறார். எச்சரிக்கப்பட்டவன் செய்யவேண்டுவதென்ன? மேலும் வாசிக்கிறோம், "அவன் எச்சரிப்படைந்து, தான்செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புகிறபடியினாலே அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை" என்று கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது (எசே.18:28).



ஒருவன் தேவனுக்கேற்ற பாத்திரமாயிராதபடியால் கர்த்தருடைய வசனம் அவனை எச்சரிக்கிறது. அந்த எச்சரிப்பின் சத்தத்தைக்கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து தன்னைமாற்றியமைத்துக் கொள்ளும்போது அவன் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான். இது எத்தனை பெரிய ஆசீர்வாதம் என்று பார்த்தீர்களா? தேவன் நம்மிடத்தில் பொன்னையோ பொருளையோ அல்லது நம்முடைய ஜீவனையோ கேட்கவில்லை. எச்சரிப்படைந்து நம்முடைய மீறுதல்களை விட்டு நாம் திரும்பும்போது நீடித்த நாட்களாய் கர்த்தரோடு வாழும் பாக்கியத்தை பெறுகிறோம்.

ஆகையால் எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ கர்த்தருக்கு ஏற்ற பாத்திரமாக வாழ பிரயாசப்படு. உன்னை அழைத்த தேவன் பரிசுத்தமுள்ளவர். அவர் இருக்கிற இடமும் பரிசுத்தமுள்ளது. நீ அதில் பிரவேசிக்க உன்னை அவர் அழைத்திருக்கிறார். "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்கிறார் (வெளி.22:12). உன்னுடைய கிரியைகள் எப்படிப்பட்டவைகளாயிருக்கிறது. அதற்கேற்ற பலன் கர்த்தரோடு வருகிறது. உன்னுடைய அழைப்பை சீர்தூக்கிப்பார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவருடைய எச்சரிப்பின் சத்தம்கேட்டு உன்னை ஆயத்தப்படுத்து.

**கேள்வி**

**கனத்துக்குரிய பாத்திரமாயிருக்க நாம் செய்யவேண்டியதென்ன?**

"ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்" என்கிறார் பவுல் (2தீமோ.2:20,21).

சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், கள்ளப்போதனைகளுக்கும், அவபக்திக்கும், அநியாயத்திற்கும் விலகி ஒருவன் தன்னை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சுத்திகரித்துக்கொண்டால் அவன் தேவனுக்கு உபயோகமானதும் எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனதுக்குரிய ஒரு பாத்திரமாக கர்த்தருடைய சபையில் இருப்பான். நீங்கள் எப்படிப்பட்டவர்களா இருக்கிறீர்கள்? தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லாமே இந்த உலகத்தில் பயனுள்ளவைகளாயிருக்கிறது. நீ தேவனால் கர்த்தருக்குள்ளாக புது சிருஷ்டியாக இருப்பாயானால் உன்னைக் கொண்டு

கர்த்தர் பெரிய காரியங்களை செய்ய சித்தமுள்ளவராயிருக்கிறார். இன்றே உன்னை அவருக்கு ஒப்புக்கொடு. அவர் தமக்கேற்ற கனத்துக்குரிய பாத்திரமாக உன்னை அவருடைய ராஜ்யத்தின் பணியில் பயன்படுத்துவார். நீ ஆசீர்வாதமாயிருப்பாய். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

## 46. சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க நான் கடனாளியாயிருக்கிறேன்

## I Am A Debtor To Preach The Gospel

மனிதன் பலவகையில் கடன்பட்டு கடனாளியாகின்றான். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னை சுவிசேஷ கடனாளி என்று அழைத்து அறிமுகப்படுத்துகிறார். அவர் எந்தவிதமாக சுவிசேஷத்தினிமித்தம் கடனாளி என்று கூறுகிறார். சுவிசேஷத்தினி மித்தம் யாரிடமாவது கடன் வாங்கி கடனாளியானாரா? அல்லது சுவிசேஷத்தை அறிவிக்காதது ஒரு கடனாக இருக்கிறது என்று கூறுகிறாரா? என்பது குறித்து இன்று நாம் தியானிக்கவுள்ளோம். அவர் சுவிசேஷத்தினிமித்தமாக யாரிடமும் கடன் வாங்கவில்லை.

அநேகர் கர்த்தர் நிமித்தமாக இந்த கடனை நாங்கள் அடைந்தோம் என்று சொல்லுகிறார்கள். கர்த்தர் எவரையும் கடனாளியாக்க விரும்பவில்லை. அவர் என்னிலடங்கா ஆசீர்வாதத்தை நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆகையால் எந்த ஒரு நபரும் கடன்பட வேண்டிய அவசியமில்லை. அப்போஸ்தலனாகிய பவுல் இங்கு சொல்லக்கூடிய கடன் சுவிசேஷக் கடன். அவர் அநேகருக்கு சுவிசேஷத்தை அறிவித்து வந்திருந்தும். இன்னும் நான் இந்தவிஷயத்தில் கடனாளியாகவே இருக்கிறேன் என்கிறார். இது குறித்து ரோமர்1:14-ல் "கிரேக்கருக்கும், மற்ற அந்நியர்களுக்கும், ஞானிகளுக்கும், மூடருக்கும் நான் கடனாளியாயிருக்கிறேன்" என்கிறார்.

கிரேக்கர் எப்படிப்பட்டவர்கள். ஞானத்தைத் தேடக்கூடியவர்கள். ஞானத்தைத் தேடிக்கூடியவர்கள் ஞானமாக இருப்பார்கள் அல்லவா? அப்படிப்பட்டவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டுமென்றால் நமக்கும் ஞானம் அவசியம். அந்த அளவு ஞானமுள்ளவர்களா இருந்தால்தான் அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கமுடியும். இந்த ஞானவான்களுக்கு போதிப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. வேதம் சொல்லுகிறது; "ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தைத் தேவன் பைத்தியமாக்க வில்லையா?" (1கொரி.1:20). உலகத்தின் ஞானம் தேவனுக்கு முன்பாக பைத்தியமாக இருக்கிறது. அவர் சர்வவியாபி என அறிகிறோம்.



ஆனால் ஞானத்தைத் தேடுகிறவர்கள் கொஞ்ச ஞானத்தை பெற்றுக் கொண்டவுடன் தங்களை பெரிய ஞானிகளாகவும் ஞானவான்களாகவும் எண்ணி மற்றவர்களை அசட்டைபண்ணுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்க நாம் அநேக காரியங்களைக் கற்றுக்கொள்ளவேண்டியது அவசியமாயிருக்கிறது. இயேசுவின் பிறப்பையும், அவருடைய மரணத்தையும் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துச்சொல்லவேண்டும்.

பொதுவாக பள்ளியில் முதலாம் வகுப்பில் உள்ள மாணவர்களுக்கு கற்றுக்கொடுப்பது சுலபம். அதே பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கின்ற மாணவனுக்கு கற்றுக்கொடுப்பது சற்று கடினம். ஏனென்றால் அவன் பாடம் சம்பந்தமாக அநேக கேள்விகள் கேட்கக்கூடும். முதலாம் வகுப்பில் உள்ள மாணவனுக்கு நாம் கற்றுக்கொடுப்பதே பாடம், அதை அப்படி தலையை ஆட்டிக்கொண்டு கேட்பான். ஆனால் பத்தாம் வகுப்பு மாணவன் சற்று தேறியிருப்பதால் அநேக கேள்விகளைக் கேட்பான். அதைப்போல இந்த கிரேக்கர்கள் ஞானத்தைத் தேடக்கூடியவர்கள். அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் பவுல் இன்னும் கடனாளியாகவே இருப்பதாக சொல்லுகிறார். அப்படியானால் இன்னும் அநேகருக்கு அவர் சொல்ல வேண்டியவராயிருக்கிறார் என்று அறிகிறோம். நாமும் நம்மை சுற்றியுள்ள மக்களுக்கு சுவிசேஷம் அறிவிப்பதில் கடனாளிகளாகவே இருக்கிறோம்.

மேலும், பவுல் அந்நியர்களுக்கும் கடனாளி என்கிறார். அந்நியர்கள் என்று நாம் பார்க்கும்போது, தேவனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் எல்லோருமே அந்நியர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய விருப்பப்படி தேவனை ஆராதிக்கக்கூடியவர்கள் அவர்களுக்கும் உன்னதமான சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும். இது ஆண்டவருடைய கட்டளையாயிருக்கிறது. ஆகையால் சீஷர்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர். ஒரு முறை யூதர்கள் மத்தியில் பவுலும் பர்னபாவும் ஊழியம் செய்யும்போது; யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள். "அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம்" என்றார்கள் (அப்.13:46).

இப்படி சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருந்த யூதர்களை விட்டு புறஜாதிநாடுகளுக்கும் கடந்துசென்று சுவிசேஷத்தை அறிவித்தார்கள். மேலும் "நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை

புறஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள்'' (அப்.13:47). சுவிசேஷத்தை அறிவிப்பதில் பவுல் வெட்கப்படாத ஒரு கிறிஸ்தவான இருந்து அறிவித்துக்கொண்டுவந்தார். அது என்மேல் விழுந்த கடமையாக இருக்கிறதென்றும், அதற்கு நான் கடனாளி என்றும் சொல்லிக்கொண்டார். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் நண்பரே இந்த சுவிசேஷத்தைக் குறித்து நீ என்ன நினைக்கிறாய்? இது உலகமுழுமைக்கும் அறிவிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு மாபெரும் இரட்சிப்பின் சுவிசேஷ நற்செய்தியாகும்.

இந்த சுவிசேஷ நற்செய்தியை அசட்டைபண்ணாமல் அதற்கு கீழ்ப்படிவாயானால் அது உன்னை இரட்சிக்கும். உன் குடும்பத்திற்கும் அது இரட்சிப்பைக் கொண்டுவரும். இந்த சுவிசேஷத்தைப் பெற்றுக்கொண்ட ஒவ்வொருவரும் இதை அறிவிப்பதில் கடனாளிகளாகவே இருக்கிறோம். நலமான காரியம் ஒன்று நம்நாட்டில் நடக்கிறது என்றால் அதை அப்படியே மறைத்து வைப்போமா? உடனே எல்லோருக்கும் அதை அறிவிப்போம் அல்லவா? அதைக் காட்டிலும் மேலானது இந்த சுவிசேஷம். உலகத்தில் உள்ள எல்லா நற்செய்திகளும் உலகத்திற்குரியவைகளே, ஆனால் கர்த்தருடைய மரணம் அடக்கம் உயிர்த்தெழுதலின் செய்தி உன்னதத்திற்கு கொண்டு செல்லக்கூடியது. ஆகையால் இது உலகத்திற்கும் மேற்பட்ட ஒரு உன்னதமான செய்தியாகும். இந்த சுவிசேஷத்தை உங்கள் கால்களில் தொடுத்துக் கொள்ளுங்கள். நீங்கள் செல்லும் இடமெங்கும் இச்செய்தியை அறிவிக்க வேண்டும். இப்பணி ஒரு உன்னதமான பணியாக இருக்கிறது. சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள் என வேதம் சொல்லுகிறது.

மேலும், பவுல் ஞானிகளுக்கும் கடனாளி என்கிறார். ஞானவான்களுக்கு உபதேசம் பண்ணுவது சற்று கடினமான காரியம் தான். அவர்கள் உலக ஞானத்தைப் பெற்று இருக்கிறார்கள். வேதம் ''ஞானிகளுடைய ஞானத்தை நான் அழிந்து, புத்தியை அவமாக்குவேன் என்று எழுதியிருக்கிறது'' (1கொரி.1:19). நாம் முன்னமே படித்தபடியாக தேவனுடைய பார்வையில் ஞானம் ஒன்றுமில்லை அது பைத்தியமாயிருக்கிறது. ஞானமாக செய்துவிட்டோம் என்று அநேகர் நினைப்பார்கள். ஆனால் அந்த ஞானம் சிலகாலங்களுக்குப்பின் ஒன்றுமில்லாதுபோகிறது. இதை நம்முடைய கண்களால் காணமுடிகிறது.

நம்முடைய முற்பிதாக்களுடைய அரண்மனைகளை



நோக்கிப்பாருங்கள். அந்த நாட்களில் அவைகள் எவ்வளவு கெம்பீரமாக கட்டப்பட்டிருக்கும். ஆனால் அவைகளின் தற்போதைய நிலைமையை எண்ணிப்பார்க்கும்போது ஒன்றுமில்லாமற்போகிறது. அதேவேளையில் தேவனுடைய சிருஷ்டிப்புகளில் ஒவ்வொன்றையும் ஒப்பிட்டுப்பாருங்கள். அவைகள் மாறாதவைகளாகவும் அழியாதவைகளாகவும் இருக்கிறது. அன்றுமுதல் இன்றுவரை சந்திரன் நிலைத்திருக்கிறது, சூரியன் ஒளியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. மேலும் பவுல் குறிப்பிடும்போது; ''இயேசு கிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கமாகிய என் சுவிசேஷத்தின்படியே உங்களை ஸ்திரப்படுத்த வல்லவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாயிருக்கிற தேவனுக்கு இயேசுகிறிஸ்துவின் மூலமாய் என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்'' என்று ரோம கிறிஸ்தவர்களுக்கு எழுதிமுடிக்கிறார் (ரோம.16:26,27). இப்படி என்னிலடங்கா காரியங்களை தேவன் ஞானமாய் சிருஷ்டித்திருக்கிறார். அவருடைய ஞானத்திற்கு முன்பாக மனித ஞானம் எம்மாத்திரம். ஞானத்தை நம்பிக்கொண்டிருக்கிற ஞானிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்படவேண்டும். அந்த ஞானத்திலே அவர்கள் கெட்டுப்போய் விடக்கூடாது. ஆகையால் ஞானிகளுக்கும் நான் கடனாளி என்கிறார்.

கடைசியாக மூடருக்கும் நான் கடனாளி என்கிறார். மூடர் தேவனுடைய காரியங்களை அசட்டைபண்ணுகிறவர்கள். ஆனால் அவர்களுக்கும் சுவிசேஷம் சொல்லப்பட வேண்டும். அவனோ மூடன் அவனுக்கு சுவிசேஷத்தை அறிவித்தால் அதை அவன் கேட்பானா? அதை அசட்டைபண்ணுவான். பின்பு அவனுக்கு இரட்சிப்பு உண்டாவது எப்படி? ஆகையால் அப்படிப்பட்டவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்கும்படி தன்னை ஆயத்தப்படுத்திக்கொண்டவர் அப்போஸ்தலனாகிய பவுல். ஒருவரும் கெட்டுப்போவது தேவனுடைய சித்தமல்ல. ஆகையால் எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட வேண்டும். ஆனால் நீதிமொழிகள் மூடரைக்குறித்து என்ன சொல்லுகிறது? ''கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்'' (நீதி.1:7).

இப்படி போதகத்தை அசட்டைபண்ணுகிற மூடனுக்கு நான் கடனாளியாயிருக்கிறேன் என்றார் பவுல். சுவிசேஷத்தை கேட்பவர்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதில் எத்தனையோ இடற்பாடுகளை சந்திக்கிறோம். அசட்டைபண்ணுகிறவர்களுக்கு எப்படி அறிவிக்கமுடியும்? ஆனால் அவர்களுக்கும் சுவிசேஷம் சென்றடைய வேண்டும். குழந்தைகள் சாப்பிடுவதற்கு அடம்பிடிக்கின்றன. அதற்காக குழந்தைகளுக்கு சாப்பாடு கொடுக்காமல் விட்டுவிடுகிறார்களா? இல்லையே, எப்படியாவது சில விளையாட்டுக்காரியங்களை காண்பித்தும், சில காட்சிகளைக் காண்பித்தும்

அந்த குழந்தைக்கு சாப்பாடு கொடுக்கிறார்கள். ஏன் அந்த குழந்தைகள் வளர்ச்சியடைய வேண்டும். நோய் இல்லாமல் காக்கப்படவேண்டும். நன்கு வளர்ச்சியடையந்து வீட்டிற்கும் நாட்டிற்கும் நற்பெயர் பெற்றுத்தரவேண்டும். இப்படி எத்தனையோ காரியங்களை வைத்து அக்குழந்தையை வளர்க்கிறார்கள். அதில் அதிகமான கஷ்டங்கள் இருக்கிறது. அதற்காக குழந்தைகளை யாரும் வளர்க்காமல் இல்லை. அதைப்போல மூடருக்கு சுவிசேஷம் அறிவிப்பது கடினமான ஒன்றுதான். அதற்காக அவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்காமல் இருந்துவிடமுடியாது. அவர்களும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள்தான், அவர்களுக்கும் ஒரு ஆத்துமா இருக்கிறது. அவர்களுடைய சூழ்நிலைகளை புரிந்துகொண்டு அவர்களுக்கும் நாம் சுவிசேஷம் சொல்ல வேண்டியவர்களாகயிருக்கிறோம்.

பவுல் ஒரு முறை ஜெபம்பண்ணுகிற இடத்துக்குப் போகையில் குறிசொல்ல ஏவுகிற ஆவியைக் கொண்டிருந்து, குறிசொல்லுகிறதினால் தன் எஜமான்களுக்கு மிகுந்த ஆதாயத்தை உண்டாக்கின ஒரு பெண் எங்களுக்கு எதிர்ப்பட்டாள். அவள் எங்களை பின்தொடர்ந்து வந்து: இந்த மனுஷர் உன்னதமான தேவனுடைய ஊழியக்காரர் இரட்சிப்பின் வழியை நமக்கு அறிவிக்கிறவர்கள் என்று சத்தமிட்டாள். இப்படி அநேகநாள் செய்து கொண்டுவந்தபடியால். பவுல் சினங்கொண்டு திரும்பிப்பார்த்து: நீ இவளை விட்டுப் புறப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் உனக்குக் கட்டளையிடுகிறேன் என்று அந்த ஆவியுடனே சொன்னான்; அந்நேரமே அது புறப்பட்டுப்போயிற்று. இதனால் அவர்களை "அதிகாரிகளிடத்தில் ஒப்புவித்து: யூதர்களாகிய இந்த மனுஷர் நம்முடைய பட்டணத்தில் கலகம்பண்ணி, ரோமராகிய நாம் ஏற்றுக்கொள்ளவும் அநுசரிக்கவும் தகாத முறைமைகளைப் போதிக்கிறார்கள் என்றார்கள்" (அப்.16:21,22). இப்படிப்பட்ட மூடப்பழக்க வழக்கங்களை கொண்டிருந்த அநேக இடங்களுக்கு சென்று சுவிசேஷத்தை அப்போஸ்தலர்கள் அறிவித்து அதினால் அனேக பாடுகளை அநுபவித்தனர்.

**கேள்வி**

**பவுலுடைய உறுதியான தீர்மானம் என்ன?**

சுவிசேஷத்தை அறிவிப்பதை தன்னுடைய உயிர் மூச்சாக கொண்டிருந்தார். "ஆகையால் ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்றமட்டும் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க விரும்புகிறேன்" என்றார் (ரோம.1:15). சுவிசேஷத்தை அறிவிப்பதிலே சோர்வுக்கோ, இயலாமைக்கோ இடமில்லை. அது தன்மேல் விழுந்த கடமையாகவே பவுல் எண்ணினார். ஆசிய முழுமைக்கும் சுவிசேஷத்தை முதல் நூற்றாண்டு காலத்தில் அறிவித்த



ஒரு மாபெரும் உன்னதான அப்போஸ்தலன். இவரைப்போல இன்று ஒவ்வொருவரும் சுவிசேஷத்தை மற்றவர்களுக்கு அறிவிப்பதில் தன்னை கடனாளி என்று சொல்லிக்கொள்ள வேண்டும். நாம் சுவிசேஷம் அறிவிக்கவேண்டிய ஜனங்கள் அதிகமாக இருக்கிறார்கள். பல மொழிபேசுகிறவர்களும், பல இனத்தவர்களும், பலவிதமான பழக்க வழக்கங்களைக் கொண்டவர்களும் நாம் வாழும் இந்தப்பூமியில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் சுவிசேஷம் சென்றடையவேண்டும்.

கர்த்தருடைய கட்டளையை நாம் ஒவ்வொருநாளும் நிறைவேற்ற பாடுபடவேண்டும். உலகத்தில் பலவிதமான காரியங்களில் கர்த்தருடைய பிள்ளைகள் கடனாளிகளாக இருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுலைப்போல சுவிசேஷ கடனாளிகளாக உங்களை நியமித்துக் கொள்ளுங்கள். மற்றொன்றிலும் கடன்படாதிருங்கள். கர்த்தர் உங்களுடைய முயற்சியை ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம்.

## 47. கர்த்தருடைய சிந்தை

## The Lord's Mind

**இ**ன்றைக்கு அநேகர் கர்த்தருடைய சிந்தையை அறியாமல் எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லி தேவனுடைய காரியங்களுக்கு விரோதமாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் கேட்கிறார்; "கர்த்தருடைய சிந்தையை அறிந்தவன் யார்? அவருக்கு ஆலோசனைக்காரனாயிருந்தவன் யார்?" (ரோம.11:34).

நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு ஆலோசனை ஒருவரும் சொல்லிவிடமுடியாது. ஏனென்றால் நாம் அவரால் உண்டாக்கப் பட்டவர்கள். வானமும் பூமியும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கு முன்னமே தேவனாகிய கர்த்தர் இருக்கிறவராகவே இருக்கிறார். அவருக்கு முன் என்பது இல்லை. அவருக்குப்பின்பே எல்லாம் உண்டாயின. அப்படியிருக்கிறவருக்கு ஒருவரும் ஆலோசனை சொல்லிவிடமுடியாது, அவருடைய சிந்தையை அறிந்துவிடவும் முடியாது. யோபு என்ற உத்தம புருஷனைப் பற்றி நாம் அறிவோம். அவன் ஒரு நீதிமான் ஒரு பொல்லாங்கும் செய்யாதவன். அப்படியிருந்த அவனுக்கு வந்த சோதனை அவனுக்குப் பின்பு ஒருவருக்கும் வந்திருக்க வாய்பில்லை என்றே எண்ணுகிறேன். அத்தனை பாடுகளை அனுபவித்தான் யோபு. அத்தனை பாடுகளிலும் கர்த்தரை மறுதலியாமல் தன்னுடைய மனைவியின் நம்பிக்கை அற்றுப்போன சூழ்நிலையிலும் தேவன்

கையிலே நன்மைகளைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான். இதை அவன் நன்கு வாழ்ந்து கொண்டிருந்த சூழ்நிலையில் அவன் சொல்லவில்லை, அவனுடைய சரீரம் கொடிய பருக்களால் நிறைந்து வேதனையோடு இருந்த சூழ்நிலையில் இதைச் சொன்னான்.

நமக்கெல்லாம் ஒரு சிறு வேதனை வந்துவிட்டால்போதும் நம்மிடத்தில் பேசுகிறவர்களைப் பார்த்து எரிந்துவிழுவோம். ஏன் நானே வேதனையோடு இருக்கிறேன். உங்களுக்கு என்ன விளையாட்டாக இருக்கிறதா? என்று பலவிதமான வார்த்தைகளாலே வருத்தப்பட்டு பேசுவோம். ஆனால் யோபுவோ தன் மனைவிக்கு அவன் இருந்த சூழ்நிலையிலும் தேவனைக்குறித்து உயர்வாக பேசி அவளுக்கு புத்திபுகட்டினான். இப்படிப்பட்ட யோபுவைப் பார்த்து கர்த்தருடைய வார்த்தை: "நான் பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது நீ எங்கேயிருந்தாய்? நீ அறிவாளியானால் அதை அறிவி" என்று கேட்டார் (யோபு38:4).

பூமியை அந்தரத்தில் தொங்கவைத்திருக்கிறார். நாம் ஒரு வீடுகட்ட அஸ்திபாரம்போடுகிறோம். அதுவும் ஆழமாக தோண்டி கற்பாறையின்மீது அஸ்திபாரம் போடுகிறோம். அப்படி போட்டும் பூகம்பத்தில் அது பாதிக்கப்பட்டுவிடுகிறது. தேவன், நாம் வாழும் இந்த பூமியை ஆகாயத்தில் அஸ்திபாரமிட்டிருக்கிறார் அவருடைய அநந்த ஞானம் எப்படிப்பட்டது? இதை அறியத்தக்கவன் யார்? அவர் இந்த பூமியை அஸ்திபாரப்படுத்துகிறபோது ஒருவரும் இல்லை. அதை அறியத்தக்க அறிவாளி இப்பூமியில் இல்லை.

மேலும், "இதோ, தேவன் மகத்துவமுள்ளவர், நாம் அவரை அறிய முடியாது; அவருடைய வருஷங்களின் இலக்கம் ஆராய்ந்து முடியாதது" (யோபு36:26). உலகம் உண்டானது முதல் 6 ஆயிரம் வருஷம் என வேதாகமத்தின் துணைகொண்டு அறிகிறோம். அவருடைய வருஷங்களின் இலக்கம் என்ன என்பதை யாராது சொல்லிவிடமுடியுமா? அல்லது ஆராய்ந்து சொல்லி விட முடியுமா? ஒருவராலும் ஒருக்காலும் சொல்லிவிட முடியாது என அறிகிறோம். நாம் நேற்று உண்டானவர்கள் புல்லுக்கு, புல்லின் பூவுக்கும் ஒப்பாயிருக்கிறோம். மண்ணிலிருந்து எடுக்கப்பட்டோம் மண்ணுக்குத் திரும்புகிறோம். நாம் தியானிக்கிற வசனத்தில் அவருக்கு ஆலோசனைக் காரனாயிருந்தவன் யார்? என வேதாகமம் கேள்வி எழுப்புகிறது. ஆலோசனை மிகவும் அவசியமாக இருக்கிறது. ஆனால் அதே ஆலோசனையை நாம் தேவனுக்கு கொடுத்துவிட முடியுமா? கூடாதே. "சர்வவல்லவரோடே வழக்காடி அவருக்குப் புத்தி படிப்பிக்கிறவன் யார்? தேவன்பேரில் குற்றம் பிடிக்கிறவன் இவைகளுக்கு உத்தரவு சொல்லக்கடவன் என்றார்" (யோபு 40:2).



பலர் நான் தேவனுக்கே ஆலோசனை சொல்லிவிடுவேன் என்று தங்களைக்குறித்து பெருமையாக பேசுவார்கள். இப்படிப்பட்டவர்கள் நான் தேவனாக இருந்திருந்தால் இதை இப்படி செய்திருப்பேன். அவருக்கு அது தெரியாமற்போய்விட்டது என்பார்கள். இப்படிப் பேசுகிறவர்கள் தங்களுடைய மேட்டிமையினால் இப்படிப்பேசுகிறார்கள். இரண்டொரு வார்த்தைகளை பேசிவிட்டு எதிர்பேசாமல் தேவசமுகத்தில் அமர்ந்திருந்த யோபு சொல்லுகிறார்; "இதோ, நான் நீசன்; நான் உமக்கு என்ன மறுஉத்தரவு சொல்லுவேன்; என் கையினால் என் வாயைப் பொத்திக்கொள்ளுகிறேன்" என்றார் (யோபு 40:4). பெற்றோர்கள் சிலவேளைகளில் பிள்ளைகளை அடிக்கும்போது வாயை மூடு என்று சொல்லி அடிப்பார்கள். இங்கே யோபு தேவசமுகத்திற்கு முன்பாக தன் வாயை தன் கைகளால் பொத்திக்கொள்கிறார்.

தேவனுக்கு ஆலோசனை சொல்லவும், அவரை குற்றப்படுத்தவும் நினைக்கிறவர்கள் முதலாவது உங்களுடைய வாயை மூடிக்கொண்டு கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுங்கள். தேவன் பலிகளையும், காணிக்கைகளையும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அவருக்கு செவிகொடுக்கும்படியாகவே விரும்புகிறார். நாம் நேற்று உண்டானவர்கள் ஒன்றும் அறியோம். அவர் ஆதாம் காலம் துவக்கி எத்தனையோ யுகயுகமாக அநேகரை பார்த்துக் கொண்டிருக்கிறார். அவருக்கு நாம் ஒன்றும் சொல்லிவிடமுடியாது. அவர் ஆலோசனையில் பெருத்தவர். ஞானத்தில் சிறந்தவர். சர்வலோகத்தின் ஞானியாகவும் இருக்கிறார். அவரோடே போராட மனிதன் எம்மாத்திரம்.

உண்டாக்கப்பட்ட ஜீவன் உண்டாக்கினவரை நோக்கி: நான் உனக்கு ஒரு ஆலோசனை சொல்லட்டும் என்று சொல்லுமோ? ஒரு எஜமானை நோக்கி வேலைக்காரன் என்னுடைய வார்த்தைக்கு செவிகொடு என்று சொல்லக்கூடுமோ? நீங்கள் இதை என்றாவது சிந்தித்ததுண்டா? அவரால் உண்டாக்கப்பட்ட நாம் அவருடைய காரியங்களை ஆராய்ந்து பார்த்து அவரையும், அவருடைய வல்லமையையும் புகழ்ந்து பாடவேண்டும். எண்ணிலடங்கா ஜீவன்களை பிதாவாகிய தேவன் பூமியிலே உண்டுபண்ணியிருக்கிறார். அவைகளுக்கெல்லாம் நேர்த்தியாக ஆகாரம் கொடுக்கிறார். ஒருவராலும் தூண்டிலினால் பிடிக்கக்கூடாத திமிங்கிலங்களை உண்டாக்கியிருக்கிறார்.

இப்படி அநேக மிருக ஜீவன்களை உண்டாக்கி அதற்கு வேண்டிய ஆகாரங்களையும் கட்டளையிடுகிறார். அவைகளுக்கு வேண்டிய இருப்பிடங்களையும் ஆயத்தம் செய்திருக்கிறார். இப்படி மகத்துவமுள்ள

தேவனுக்கு நீ ஆலோசனை சொல்லிவிட முடியுமா? அவரை நீ குற்றப்படுத்த முடியுமா? நீ தேவனுக்குப் பயந்து அவர் ஏற்படுத்தியிருக்கிற வழியில் நடக்கப் பிரயாசப்படு.

மேலும், "தனக்குப் பதில்கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்?" (ரோம.11:35). சிலர் பதில் சொல்லுவதில் முந்திக்கொள்வார்கள். அப்படிப்பட்டவர்கள் தேவனுக்கு முந்தி அவருக்கு ஒன்றைச் சொல்ல முடியுமா? என்றால் எப்படிப்பட்டவராலும் அதை சொல்ல முடியாது. நம்முடைய தேவனுக்கு முந்தி ஒரு ஆலோசனையை எவராலும் சொல்லிவிடமுடியாது. சிலருடைய ஆலோசனை நலமாகத் தோன்றும். அவைகள் பூமிக்குரியவைகளாகவே இருக்கும். இந்த ஞானத்தை வைத்து தேவனுடைய காரியங்களோடு ஒப்பிட முடியாது. யோபிலே நாம் வாசிக்கிறோம்; "நான் பேசத்துணிந்தேன் என்று யாதாமொருவன் அவருக்கு முன்பாகச் சொல்லத்தகுமோ? ஒருவன் பேசத்துணிந்தால் அவன் விழுங்கப்பட்டுப் போவானே" என காண்கிறோம் (யோபு37:20). துணிவாக எதையும் பேசிவிடுகிறார்கள், துணிவாக எதையும் செய்துவிடுகிறார்கள். தேவன் பாரார் கவணியார் என்று நினைக்கிறார்கள். அது தவறு அன்பானவர்களே, காதையும், கண்களையும் உண்டாக்கினவர் பாராமலும் கவணியாமலும் இருப்பாரா? நீ தேவசமுகத்தில் பேசும்போது மனம்பதறி ஒரு வார்த்தையும் சொல்லாதிரு என வேதத்தில் வாசிக்கிறோம். ஆகையால் நான் தேவனோடு பேசத்துணிந்தேன் என்று சொல்லாதிருங்கள். மாவட்ட கலெக்டர் அலுவலகம் சென்று அவரைப் பார்த்து நாம்முடைய இஷ்டப்படி அவரோடு எதிர்த்துப்பேசி விடமுடியுமா? ஒரு மாவட்ட அதிகாரியினிடத்திலே நாம் எதிர்த்துப்பேச பயப்படும்போது உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கினவரோடு பேசத்துணிந்துவிட முடியுமா? அப்படி பேசினால் என்னவாகும்? அவன் விழுங்கப்பட்டுப்போவான்.

இது உண்மையிலே ஒருமுறை நடந்தது. மோசேக்கு விரோதமாக கோராகு தாத்தான் கூட்டத்தார்கள் விரோதமாக பேசும்போது; கர்த்தர் மோசேயையும் ஆரோனையும் நோக்கி நீங்கள் இந்த இடத்தை விட்டு போங்கள் நான் அவர்களை அதம்பண்ணுவேன் என்றார். அவர்கள் அந்த இடத்தை விட்டு சென்றவுடன் பூமி தன் வாயைபிளந்து கோராகு தாத்தான் கூட்டத்தாரை விழுங்கிப்போட்டது. இது நமக்கெல்லாம் திருஷ்டாந்தமாக இருக்கிறது. தேவனைப்பற்றி அறிந்த யோபு சொல்கிறார்; "நான் இரண்டொருதரம் பேசினேன்; இனி நான் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பேன் என்றான்" (யோபு40:5). கர்த்தர் சகலத்தையும் அறிகிறார் காண்கிறார். அவருக்கு மறைவானவைகள் ஒன்றுமில்லை.



இதை அறிந்தவன் அவருடைய சமுகத்தில் பிரதியுத்தரம் கொடாமலும் பேசாமலும் இருப்பான். சிலர் தங்களுடைய வேதனை பெருகும்போது அந்தக்கடவுள் என் கண்முன்னே தோன்றினால் நான் அவரிடம் கேட்பேன். ஏன் இந்தப்பாடுகள் எதற்காக என்னைப் படைத்தாய் என்று. இப்படிப்பட்டவர்களுக்கு வேதாகமம் கொடுக்கும் பதில். தன் தகப்பனை நோக்கி ஏன் என்னைப் பெற்றாய் என்று கேட்கக்கூடாது. அப்படி மீறி கேட்கிறவன் சபிக்கப்பட்டவன். அவனுக்கு ஐயோ! என வேதம் சொல்லுகிறது. இந்த உலகத்தில் நம்மை பெற்றெடுத்த பெற்றோரை மதிக்கவேண்டும். அவர்களை கனம்பண்ணவேண்டும் என வேதம் போதிக்கிறது. அவர்களால் நாம் இந்த உலகத்தில் வந்தோம். ஆகையால் நாம் உயிரோடிருக்கும் மட்டும் அவர்களுக்கு நாம் நன்றியுள்ள பிள்ளைகளாகவே இருக்கவேண்டும். அநேக பிள்ளைகள் இதை மறந்து அவர்கள் எனக்கு என்ன செய்தார்கள்? என்னைப் படிக்க வைக்கவில்லை, எனக்கு சரியான இடத்தில் திருமணம் செய்து வைக்கவில்லை, இப்படி பல காரியங்களைச் சொல்லி அடிக்கிக்கொண்டே போவார்கள்.

நான் கேட்கிறேன் நீங்கள் அவர்களுக்கு என்ன செய்தீர்கள்? அவர்கள் உயிரோடிருக்கும் மட்டும் அவர்களுடைய பெயரைக் காப்பாற்றும் ஒரு பிள்ளையாக வாழ்ந்திருக்கிறீர்களா? அவர்களுடைய விருப்பத்தில் ஏதாவது ஒன்றையாவது நிறைவேற்றியிருக்கிறீர்களா? அவர்களை வேதம் சொல்லுகிற படியாவது கனம் பண்ணுகிறீர்களா? இப்படி ஏதுவுமே செய்யாமல் அவர்கள் எனக்கு என்ன செய்தார்கள் என்று சொல்வது மாபெரும் தவறல்லவா? சிந்தியுங்கள். கர்த்தருக்கேற்ற சிந்தையில் வளருங்கள். இயேசு கிறிஸ்துவிலிருந்து சிந்தை உங்களிலும் இக்கக்கடவது.

அவர் பிறப்புமுதல் சிலுவை மட்டும் தம்மைத்தாமே தாழ்த்தினார். பரலோக பிதாவின் சித்தத்தையும் விருப்பத்தையும் அவருடைய ஒரேபேரான குமாரனாக இருந்துகொண்டு இப்பூமியில் அதை நிறைவேற்றினார். இன்றைக்கு அவருக்கு அடுத்தபடியாக குமாரரும் குமாரத்திகளுமாக நாம் இருக்கிறோம். இயேசுவானவர் எப்படி பிதாவின் சித்தத்தை அவருடைய விருப்பத்தை நிறைவேற்றினாரோ அதைப்போல நீங்களும் நானும் அவருடைய சித்தத்தை நிறைவேற்றவேண்டும். அதை விட்டுவிட்டு தேவையற்ற காரியங்களை நம்மிலே வளர்த்துக்கொண்டு கிடைக்கப்பெற்ற நாட்களை விரையம் செய்யாமல் பிரயோஜனமுண்டாகும்படியாக வாழ்ந்து காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

நாம் பார்க்கிற யாவும் "சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; அவருக்கே என்றென்றைக்கும்

மகிமையுண்டாவதாக" ஆமென் என்கிறார் பவுல் (ரோம.11:36). உலகத்தையும் சகலத்தையும் உண்டாக்கினவர். யாருக்காவும் அதை உண்டாக்கவில்லை என அறிகிறோம். அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது. ஆகையால் அதை மாற்றியமைக்கவோ, அதை குறைசொல்லவோ யாருக்கும் அதிகாரம் இல்லை. இதை அறிந்து தேவனுக்கு ஆலோசனைக்காரராகவும், அவருக்கு ஒன்றை முந்திக்கொடுக்கவும், அவரை குற்றப்படுத்தவும் துணியாமல், நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற காரியங்களைச் செய்து, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவோம்.

**கேள்வி**

**கர்த்தருடைய பிள்ளைகளுக்கு எவ்விதமான சிந்தையிருக்கிறது?**

"கர்த்தருக்குப்போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது" என்கிறார் அப்போஸ்தலனாகிய பவுல் (1கொரி.2:16). மற்ற அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய யோவான் சொல்லும்போது; ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக் குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்தி லிருந்தும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது என்கிறார். ஆம், ஆதிகாலங்களில் அவர்கள் தேவனோடு வாழ்ந்துகொண்டு மகிமையின்மேல் மகிமை அடைந்தார்கள். அந்தவிதமான வாழ்க்கைக்கு உங்களை வேதாகமம் அழைத்து செல்கிறது. கிறிஸ்துவின் சிந்தைக்குள்ளாக வரும்போது; அவரோடு நீங்களும் ஆசீர்வதிக்கப்படுவீர்கள். நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 48. அறிவு மற்றும் அன்பு
## Knowledge & Love

**அ**றிவு நம்முடைய வாழ்க்கைக்கு மிகவும் பிரயோஜனமானது. அதே அறிவு பெருகிவிட்டால் அது என்னவாகும்? வேதம் சொல்லுகிறது; "விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டவைகளைக் குறித்த விஷயத்தில்,



நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே, அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்" என காண்கிறோம் (1கொரி.8:1). எனக்கு எல்லாம் தெரியும் என்று சொல்லக்கூடிய அறிவு இறுமாப்பை அவர்களுடைய வாழ்க்கையில் உண்டுபண்ணும். விக்கிரகமானது ஒன்றுமில்லை. ஆனால் அநேகர் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து அதை புகழ்வார்கள். "ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறிய வேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை" (1கொரி.8:2).

ஆம், பொதுவாக அறிவு பெருத்தவர்கள் மற்றவர்கள் சொல்வதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். தாங்கள் சொல்வதுதான் சரி என்று வாதிடுவார்கள். அப்படிப்பட்டவர்கள் சொல்வது தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் இருக்கிறது என்பதைப்போல இருக்கிறது. அவர்கள் ஒன்றையும் அறியவேண்டிய பிரகாரமாக அறிவில்லையென்றே சொல்லவேண்டும். அறிவு பெருத்தவர்களைக் குறித்து வேதம் இவ்விதமாக சொல்லுகிறது; "அதிக ஞானத்திலே அதிக சலிப்புண்டு; அறிவுபெருத்தவன் நோவுபெருத்தவன்" (பிர.1:18). நான் ஞானமாக செய்யக்கூடியவன் என்று சொல்லுகிறவர்களைப் பாருங்கள். அவர்கள் அவ்வப்போது சலித்துக்கொள்வார்கள்.

மற்றவர்கள் எது செய்தாலும் அவர்களுக்கு அது பிடிக்காது. ஆகையால் மற்றவர்கள் செய்த காரியத்தை நினைத்து இப்படியிருக்கிறார்களே என்று சலித்துக்கொள்வார்கள். அவர்களுக்கு இப்படிப்பட்ட சலிப்பு வருவதற்காக காரணம் தங்களை அதிக ஞானவான்களாகவும் மற்றவர்களை குறைத்தும் மதிப்பிடுவதால் அவர்களுடைய அதிக ஞானத்திலே சலிப்பு ஏற்படும். அதைப்போல அறிவு பெருத்தவர்கள் நோவு அதாவது வேதனை பெருத்தவர்கள். அவர்களால் நிம்மதியாக இருக்கமுடியாது. ஒரு மனிதனுக்கு தேவையான அறிவை தேவன் கொடுத்திருக்கிறார். அது அவனுடைய வாழ்க்கைக்கு போதுமானதாக இருக்கிறது. இதற்குமேலும் அதை பெருக்கிக்கொள்ள வேண்டும் என்று நினைத்து அதிகம் படித்து அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும் என்று விரும்புகிறவர்கள். வேதனைகளை விலை கொடுத்து வாங்கிக்கொள்ளுகிறார்கள். தேவன் அறிவை மூளையில் வைத்துள்ளார். அந்த மூளை சரீரத்தில் ஒரு சிறிய அவயவமாயிருக்கிறது. சரீரத்தைப்போல அது பெரியதாக இல்லை. சிறியதாகவே இருக்கிறது. சிலருடைய எண்ணம் சரீரம் மூளை அளவும் மூளை சரீர அளவும் இருந்திருந்தால் எவ்வளவு நன்றாய் இருக்கும் என்று நினைப்பார்கள். அது நினைப்பதற்கு வேண்டுமானால் நலமாக தோன்றாலாம் ஆனால் அது சரியல்ல.

தேவன் எல்லாவற்றையும் நேர்த்தியாக அமைத்திருக்கிறார். இது அவருடைய அநந்த ஞானமாக இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் பேசும்போது பெஸ்து "பவுலே, நீ பிதற்றுகிறாய், அதிகக் கல்வி உனக்குப் பயித்தியமுண்டாக்குகிறது என்றான். அதற்கு அவன்: கனம்பொருந்திய பெஸ்துவே, நான் பயித்தியக்காரனல்ல, சத்தியமும் சொஸ்தபுத்தியுமுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன்" என்றான் (அப்.26:24,25).

பவுலை இறுமாப்புள்ளவன் என்று கருதி அதிக கல்வி உனக்கு பயித்தியமுண்டக்குகிறது என்று பெஸ்து சொல்ல ஆரம்பித்தான். உண்மையிலே பவுல் ஒரு கல்விமான்தான் கமாலியேலின் பாதத்தருகே படித்தவன். நன்கு கற்றுத்தேர்ந்தவன். ஆனால் மற்ற ஞானவான்களைப் போல பவுல் இல்லை. தேவனை அறிகிற அறிவில் வளர்ச்சியடைந்தவர். ஆகையால் நான் பயித்தியக்காரனல்ல சத்தியமும் சொஸ்தபுத்தியுள்ள வார்த்தைகளைப் பேசுகிறேன் என்றார்.

அன்பான வாசகரே, நீங்கள் ஒரு ஞானவானா இருக்கிறீர்களா? அறிவுக்கு முக்கியதுவம்கொடுத்து மற்றவர்களை அதாவது அறிவில் வளர்ச்சியடையாதவர்களை அற்பமான எண்ணிக்கொண்டிருக்கிறீர்களா? தேனை மிகுதியாக உண்பது நல்லதல்ல என்று வேதம் சொல்லுகிறது. அதைப்போல அறிவு பெருத்தவன் நோவு பெருத்தவன் என வேதம் சொல்லுகிறது. உங்களுடைய அறிவு கர்த்தரையும் அவருடைய வல்லமையுள்ள வசனங்களையும் அறிகிற அறிவில் வளர்ச்யடையத்தக்கதாக அவைகளுக்கு உங்களை ஒப்புக்கொடுங்கள்.

அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும் என படித்தோம். ஆம், அன்பு இருக்குமிடத்தில் தேவன் இருப்பார். தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில்லாதவன் தேவனை அறியான் என காண்கிறோம். அன்பைப் பற்றி வேதம் அழகாக எடுத்துரைக்கிறது. "நான் மனுஷர் பாஷைகளையும் தூதர்பாஷைகளையும் பேசினாலும், அன்பு எனக்கிராவிட்டால், சத்தமிடுகிற வெண்கலம்போலவும், ஓசையிடுகிற கைத்தாளம் போலவும் இருப்பேன். நான் தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்து, சகல இரகசியங்களையும், சகல அறிவையும் அறிந்தாலும், மலைகளைப்பேர்க்கத்தக்கதாகச் சகல விசுவாசமுள்ள வனாயிருந்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் நான் ஒன்றுமில்லை எனக்கு உண்டான யாவற்றையும் நான் அன்னதானம்பண்ணினாலும், என் சரீரத்தைச் சுட்டெரிக்கப்படுவதற்குக் கொடுத்தாலும், அன்பு எனக்கிராவிட்டால் எனக்குப் பிரயோஜனம் ஒன்றுமில்லை" என 1கொரி.13:1-3 வசனங்களில் படிக்கிறோம்.



அன்பைப் பற்றி பேசாத மதங்கள் இல்லை நாடுகள் இல்லை, வீடுகள் இல்லை, நகரங்கள் இல்லை, கிராமங்கள் இல்லை எல்லோரும் அன்பை மிகவும் அழகாக பேசுகிறார்கள். ஆனால் அந்த அன்பின்படி தாங்கள் நடக்கிறார்களா என்றால் இல்லை. அன்னதானம் செய்கிறார்கள். தங்களுடைய காணியாட்சிகளை ஏழைகளுக்குக் கொடுக்கிறார்கள். ஏன் தங்களுடைய சரீர அவயவங்களை தானம் செய்கிறார்கள். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் அன்பாக நடக்கவில்லை என்றால் அவர்களுடைய அன்னதானமும், அவர்களுடைய காணியாட்சிகளும், அவர்களுடைய சரீர தாமும் என்னத்திற்கு? அவன் தன்னுடைய சரீரத்தையே சுட்டெரிக்க கொடுத்தாலும் அன்பு இல்லையென்றால் ஒன்றுமில்லை என வேதம் சொல்லுகிறது. ஒரு பிரசங்கியார் ஒரு முறை சபையில் அன்பைப்பற்றி மிகவும் அழகாக பிரசங்கித்தாராம். அவரைப்போல இதுவரை யவரும் அன்பைப் பற்றி பேசியது கிடையாது. அந்த அளவு அன்பைப் பற்றி மிக அழகாகவும் யாருவம் புரிந்துகொள்ளும்படியாகவும் பேசி அநேகருடைய பாராட்டைப் பெற்றார்.

இதை அறிந்த சபை மூப்பர்கள் ஒன்றுகூடி அவரை வீடுவரை வழி அனுப்ப ஏற்பாடுகள் செய்தனர். அப்பொழுது அவரை காரில் அழைத்து செல்ல அவருடைய கார் டிரைவர் சபைகூடாரத்திற்கு வெளியே நின்றுகொண்டிருந்த அவர் பிரசங்கியார் வர தாமதம் ஆனபடியால் பாத்ரூம் சென்று விட்டு வரலாம் என்று பாத்ரூம் சென்றுவிட்டார். அந்த வேளையில் அந்த பிரசங்கியாரை வழி அனுப்ப மூப்பர் ஒருவர் அவரை அழைத்துக்கொண்டு வெளியே வந்தார். அந்நேரத்தில் டிரைவர் இல்லாததை கண்டு பிரசங்கியாரின் முகநாடி வேறுபட்டது. சற்றுநேரம் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் கழித்து டிரைவர் வந்தவுடன் அவனை பலவிதமான வார்த்தைகளாலே அந்த பிரசங்கியார் திட்டு திட்டு என்று திட்டி வண்டியை எடு என்று கோபத்தோடே சொல்ல அவனும் மிகவும் பயந்துபோய் வண்டியை எடுத்தான்.

பிரசங்கியாரும் அந்த மூப்பரும் ஏறி உட்கார்ந்தார்கள். அந்த டிரைவரை பிரசங்கியார் வீடு வரை திட்டிக்கொண்டே சென்று இருக்கிறார். இதையெல்லாம் பார்த்துக்கொண்டே வந்த மூப்பர் சபையில் அவ்வளவு அழகாக அன்பை பற்றிபேசினார். சபையார் அனைவரும் அவரை பாராட்டு மழையில் நனைத்தனர். ஆனால் இவரோ இப்படி இருக்கிறாரே என்று எண்ணிக்கொண்டே வந்தார். பிரசங்கியார் வீட்டுக்கு கார்வந்தவுடன் டிரைவர் இறங்கி கார் கதவை திறந்துவிட்டான். அப்பொழுது அவனைப்பார்த்து கோபத்தோடே முனுமுனுத்துக் கொண்டே வீட்டிற்குள் சென்றார். அப்போது பிரசங்கியார் வீட்டு கடிகாரம் மணியடித்தது அப்பொழுது மணி 11. ஆனால் எட்டு பெல் மட்டுமே அடித்தது. மூப்பர் உடனே அந்த டிரைவரை நோக்கி என்னப்பா

உங்கள் பிரசங்கியார் வீட்டு பெல் எட்டு அடி அடிக்கிறது மணி 11 காட்டுகிறதே என்ன விந்தையாக இருக்கிறது என்று கேட்டாராம் அதற்கு அந்த டிரைவர். இங்கே மணிமட்டுமல்ல எல்லாமே சொல் ஒன்றாகவும் செயல் ஒன்றாகவுமே இருக்கும் என்று எந்த விதமான முகநாடியும் வேறுபடாமல் சொன்னானாம். அநேகர் இப்படியே வாழ்கிறார்கள்.

அன்பு என்றுமே ஒழியாது என காண்கிறோம். "அன்பு ஒருக்காலும் ஒழியாது, தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம்" (1கொரி.13:8). ஒழிந்துபோகிற காரியங்களைப் பற்றிக்கொண்டு இன்றைய சமுதாயம் வாழ்ந்துகொண்டிருக்கிறது. நிலையான அன்பை அநேகர் பற்றிக்கொள்ள தவறிவிடுகின்றனர். அன்பு சகோதரனே, சகோதரே நீ எப்படிப்பட்ட அன்பு உடையவனாக இருக்கின்றாய்? அகாப்பே அன்பு உடையவர்களா இருக்க பிரயாசப்படுங்கள். தேவன் தம்முடைய சொந்த குமாரனையே கொடுத்து நம்மில் அன்புகூர்ந்தார். இந்தவிதமாக அன்பு ஒருவரிடத்திலும் இல்லை. நம்முடைய ஜீவனை மீட்பதற்காக இயேசுதாமே சிலுவையில் ஜீவனைக் கொடுத்தார். "தேவனில் அன்புகூருகிறவனெவனோ, அவன் தேவனால் அறியப்பட்டிருக்கிறான்" (1கொரி.8:3).

நீங்கள் எவைகளில் அன்புகூருகிறீர்கள்? உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள். உலகத்தில் அன்புகூருகிறவர்களிடத்தில் பிதாவின் அன்பு இல்லை. உலகமும் அதிலுள்ளவைகளும் ஒருநாளில் அழிந்துபோம். தேவனுடைய சித்தம் செய்கிறவர்கள் என்றென்றும் நிலைத்திருப்பார்கள். தேவனில் அன்புகூருகிறவர்கள் அந்த தேவனால் அவர்கள் அறியப்பட்டிருக்கிறார்கள். தெரிந்துகொள்ளப்பட்டிருக்கிறார்கள், அழைக்கப்பட்டிருக்கிறார்கள், பரலோக ஆசீர்வாதங்களைப் பெற தகுதியுடையவர்களாயிருக்கிறார்கள். இந்த ஆசீர்வாதத்திற்கு நீங்கள் ஆயத்தமாயிருக்கிறீர்களா? தனக்கு அன்பு செலுத்தின அந்நிய தீவாரைப்பற்றி பவுல் சொல்வதைக் கவனியுங்கள்.

"நாங்கள் தப்பிக் கரைசேர்ந்தபின்பு, அந்தத் தீவின்பேர் மெலித்தா என்று அறிந்தோம். அந்நியராகிய அந்தத் தீவார் எங்களுக்குப் பாராட்டின அன்பு கொஞ்சமல்ல. அந்த வேளையிலே பிடித்திருந்த மழைக்காவும் குளிருக்காகவும் அவர்கள் நெருப்பை மூட்டி, எங்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டார்கள்" (அப்.8:1,2). அன்பு அன்பு என்று சொல்லிவிட்டால் அன்பு வந்துவிடாது. மற்றவர்களுடைய தேவைகளை அறிந்த நாம் அன்பு செலுத்தவேண்டும். இன்றைக்கு மணிக்கனக்காக அன்பைப் பற்றி பேசுவார்கள். ஆனால் செயல்வடிவில் ஒரு மணிநேரம் கூட அதற்காக ஒதுக்கமாட்டார்கள். ஆண்டவர்



இயேசு மூன்றரை வருடம் மனிதர்கள் மத்தியில் தேவனுடைய அன்பை விளங்கப்பண்ணினார். அவர் எங்கும் நன்மைசெய்கிறவராய் சுற்றித்திரிந்தார் என வாசிக்கிறோம். அவரால் சுகமாக்கப்பட்டவர்களையும் அவருடைய அற்புதங்களையும் எழுதினால் புத்தகங்கள் கொள்ளாது உலகம் கொள்ளாவது என அப்போஸ்தலர்கள் சொல்லுகிறதை நாம் படிக்கிறோம். இன்றைக்கு இயேசுவின் நாமத்தை தரித்துக்கொண்டு வாழுகிற எத்தனைபேர் அவரைப்போல அன்பு செலுத்துகிறவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்ப்போமானால். விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிலே இருகிறார்கள். இச்செய்தியை வாசித்துக்கொண்டிருக்கும் அன்பு வாசகரே, தேவனுடைய ஜனமே, நீங்கள் பிதாவின் அன்பைப்பெற்றவர் களாகவும் தேவனை அறிகிற அறிவைப்பெற்றவர்களாகவும் இருக்கப் பிரயாசப்படுங்கள். உலக ஞானத்திற்கும் அறிவுக்கும் முக்கியத்துவம் கொடுக்காமல் கர்த்தரையும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அறிகிற அறிவில் வளர்ச்சியடையுங்கள்.

**கேள்வி**

**தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகிற எண்ணத்தை மேற்கொள்ளுவது எப்படி?**

கிறிஸ்துவானவர் நம்மில் வாழ இடங்கொடுக்கவேண்டும். கிறிஸ்து நம்மில் இருப்பாரேயானால் நாம் இந்த உலகத்தையும் அதிலுள்ளவை களையும் ஜெயிக்கமுடியும். மேலும் உங்களுடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். இந்த விசுவாசத்தையும் நம்பிக்கையையும் பெற்றவர்கள் அப்போஸ்தலர்கள் மற்றும் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள். பவுல் கொரிந்து சபையாருக்கு எழுதும்போது; "அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும் தேவனை அறிகிற அறிவுக்கும் விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" (2கொரி.10:5).

நாம் ஒரு பொருளையோ அல்லது குடும்ப உறவுகளையோ தேவனுக்கு மேலாகவோ அல்லது கிறிஸ்து இயேசுவுக்கு மேலாகவோ உயர்வாக கருதுவோமானால் நாம் நிச்சயமாக பிசாசினால் பிடிபடுவோம். என்னிலும் அதிகமாக நேசிக்கிறவன் எனக்குபாத்திரனல்ல என்று ஆண்டவர் இயேசு சொன்ன வசனத்தை நீங்கள் நினைத்துப்பார்க்கவேண்டும். பவுல் அவரை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லாமேட்டிமையையும் நிர்மூலமாக்கி என்று சொல்வதைக் கவனியுங்கள். நாம் தான் அவைகளை நிர்மூலமாக்க வேண்டும். அப்படிப்பட்ட மேட்டிமையான எண்ணத்தையும்

பேச்சையும் நம்மை விட்டு எடுத்துப்போட்டு அவைகளை கிறிஸ்துவுக்குக் கீழாக கொண்டுவர வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்து எல்லாவற்றிக்கும் மேலாக ஆட்சிசெய்ய நாம் அனுமதிக்க வேண்டும். அப்படிச் செய்யும்போது தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகிற எண்ணத்தை மேற்கொள்ளமுடியும். நீங்கள் மேற்கொள்ள உங்களுக்காக ஜெபிக்கிறோம்

## 49. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்

## God Was Manifested In The Flesh

இந்த உலகத்திலே இருக்கிற மனிதர்களில் பலர் நினைப்பதுண்டு அந்த ஆண்டவன் இந்தப்பூமிக்கு வந்து மனிதனைப்போல மனிதனாக வாழ்ந்து கஷ்டங்களை அனுபவித்தால் தான் தெரியும் என்பார்கள். அன்பானவர்களே மனிதனுடைய இருதயத்தின் எண்ணங்களை அறிந்த தேவன் தன்னை மனிதனுக்கு வெளிப்படுத்தும்படியாகவும் அவனை பாவத்திலிருந்து மீட்கும் படியாகவும் மாம்சத்திலே வெளிப்பட்டார். இதைக்குறித்து பவுல் சொல்கிறார்; "அன்றியும் தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது, தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக் கொள்ளப்பட்டார்" என 1தீமோ.3:16-ல் வாசிக்கிறோம்.

**தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்.** அவர் ஒரு மனிதனைப்போல மாம்சத்திலே தன்னை வெளிப்படுத்தியதற்கு பல காரணங்கள் உண்டு. ஒன்று மனிதன் மாம்சத்திலே இருந்து கொண்டு பாவத்தை ஜெயிக்கமுடியும் என்பதை நிரூபிக்கும்படியாகவும், தேவனுடைய சித்தத்தை ஒவ்வொரு மனிதனும் மாம்சத்திலே இருந்துகொண்டு நிறைவேற்றமுடியும் என்பதை அனைவருக்கும் எடுத்துச்சொல்லும்படியாகவும், தேவனுடைய போதனைகளை ஜனங்களுக்குச் சொல்லும்படியாகவும் தேவன் மாம்சத்திலே அவருடைய குமாரனுக்கு ஏற்ற சாயலிலே வெளிப்பட்டார். "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரேபேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது" என்கிறார் (யோவா.1:14). மாம்சத்திலே வந்து மனிதனோடு மனிதனாக வாழ்ந்த அந்த ஆண்டவர் இயேசுவை இப்பூவியில் உள்ள மக்கள் அறியாமற்போனார்கள். அவர் கிருபை யினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் வாசம்பண்ணினார். அவருடைய



சத்தியத்திற்கு அந்த யூத மக்களே எதிராக இருந்து செயல் பட்டார்கள். மாபெரும் அற்புதங்களை அவர்கள் கண்ணாரக்கண்டும் அதை ஏற்றுக்கொள்ளாமல் அவரை சிலுவையில் அரையும்படி ஒப்புக்கொடுத்தார்கள்.

**அவர் ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்.** பாவ உலகத்தில் மாம்சத்திலே வெளிப்பட்ட அவர் பாவம் செய்யவில்லை. நீதிமான் என்று சாட்சி பெற்றார். எத்தனையோ தீர்க்கதரிசிகளை உலகத்திற்கு அனுப்பிக்கொண்டுவந்த தேவன் இந்தக் கடைசி நாட்களில் தம்முடைய ஒரேபேறான குமாரனையே அனுப்பினார். இவர்மூலமாய் உலகங்களை உண்டாக்கினார். ஆகையால் இவரைக்கொண்டு உலகத்தை இரட்சிக்கும்படியாக திட்டம் கொண்டார். உலக மக்கள் அவரை சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்தார்கள். ஆனால் பிலாத்துவின் மனைவியோ; "அவனிடத்தில் ஆளனுப்பி: நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் நிமித்தம் இன்றைக்குச் சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன் என்று சொல்லச் சொன்னாள்" (மத்.27:19).

யூதர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் அவர் தேவதூஷணம் சொன்னார் என்று சொல்லி அநேக குற்றச்சாட்டுகளை சொன்னார்கள். ஆனால் பிலாத்துவின் மனைவியோ அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம் என்று அவரைக்குறித்து சாட்சி கொடுத்தாள். ஆம், பிரியமானவர்களே, அவர் ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார்.

**தேவதூதர்களால் காணப்பட்டார்.** இந்த உலகத்தில் அவர் மாம்சத்திலே பிறக்கும்போது தேவதூதர்கள் அவருடைய பிறப்பைக்குறித்து சொன்னார்கள். சாஸ்திரிகள் அவரை பார்க்கும்படிபோனார்கள் என்றெல்லாம் நாம் வேதத்தில் வாசிக்கிறோம். உலகம் உண்டானது முதல் இவ்விதமான காரியம் சம்பவிக்கவில்லை. ஆகையால் தேவதூதர்களும் அவைகளைப் பார்க்க ஆவலாய் இருந்தார்கள். "அந்தக்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி; உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத்துதித்தார்கள்" (லூக்.2:13,14).

அவருடைய பிறப்பைக்குறித்து அநேக தீர்க்கதரிசிகள் தீர்க்கதரிசனம் உரைத்ததுண்டு. இது உலகத்திற்கு கிடைத்த ஒரு மாபெரும் நற்செய்தியாகவே காணப்பட்டது. ஆகையால் தேவதூதர்கள் சொல்லும்போது; பூமியிலே சமாதானமும் உண்டாவதாக. சமாதானமற்றிருந்த பூமிக்கு அன்றைய நாள் சந்தோஷத்தின் நாளாகவும் சமாதானத்தின் நாளாகவும் இருத்தது.

**புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார்.** இயேசுவின் கீர்த்தி

பெத்லகேமை சுற்றியுள்ள நாடுகளுக்குப் பரவ ஆரம்பித்தது. இயேசுவானவர் யூதா கோத்திரத்திலே வெளிப்பட்டார். அவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகையால் புறஜாதிகளிடத்தில் அவர் பிரசங்கிக்கப்பட்டார். யூதேயா, சமாரியா, கலிலேயா நாடுகளில் அவருடைய கீர்த்தி அதிகமதிகமாய் பரவிற்று. அப்போஸ்தலர்களுக்கு கர்த்தர் கட்டளை கொடுக்கும்போது நீங்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவியுங்கள் என்ற கட்டளை கொடுக்கப்பட்டது. ஆகையால் அவர்கள் புறப்பட்டு சகல நாடுகளிலும் சுவிசேஷத்தை அறிவித்தனர்.

பவுலும் பர்னபாவும் ஊழியம் செய்து கொண்டு வந்த நாட்களில் "ஓய்வுநாளிலே கொஞ்சங்குறையப் பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடிவந்தார்கள். யூதர்கள் ஜனக்கூட்டங்களைக் கண்டபோது பொறாமையினால் நிறைந்து, பவுலினால் சொல்லப்பட்டவைகளுக்கு எதிரிடையாய்ப் பேசி, விரோதித்துத் தூஷித்தார்கள். அப்பொழுது பவுலும் பர்னபாவும் தைரியங்கொண்டு அவர்களை நோக்கி: முதலாவது உங்களுக்கே தேவசனத்தைச் சொல்லவேண்டியதாயிருந்தது; நீங்களோ அதைத் தள்ளி, உங்களை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராகத் தீர்த்துக்கொள்ளுகிறபடியினால், இதோ, நாங்கள் புறஜாதியாரிடத்தில் போகிறோம். நீர் பூமியின் கடைசிபரியந்தமும் இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாக வைத்தேன் என்கிற வேதவாக்கியத்தின்படி கர்த்தர் எங்களுக்குக் கட்டளையிட்டிருக்கிறபடியினால் இப்படிச் செய்கிறோம் என்றார்கள். புறஜாதியார் அதைக் கேட்டுக் சந்தோஷப்பட்டு, கர்த்தருடைய வசனத்தை மகிமைப்படுத்தினார்கள். நித்திய ஜீவனுக்கு நியமிக்கப்பட்டவர்கள் எவர்களோ அவர்கள் விசுவாசித்தார்கள். கர்த்தருடைய வசனம் அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று" (அப்.13:44-49).

**உலகத்திலே விசுவாசிக்கப்பட்டார்.** ஆண்டவர் இயேசுவைக் குறித்தும், அவருடைய வல்லமையுள்ள வசனங்களை எடுத்து பிரசங்கிக்கும் போதும் அநேகர் விசுவாசமுள்ளவர்களாக மாற்றப்பட்டார்கள். விசுவாசிகளாகி கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டார்கள். "தேவனுடைய ராஜ்யத்துக்கும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்துக்கும் ஏற்றவைகளைக்குறித்து, பிலிப்பு பிரசங்கித்ததை அவர்கள் விசுவாசித்தபோது புருஷரும் ஸ்திரீகளும் ஞானஸ்நானம் பெற்றார்கள். அப்பொழுது சீமோனும் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்று, பிலிப்பைப்பற்றிக்கொண்டு, அவனால் நடந்த அடையாளங்களையும் பெரிய அற்புதங்களையும் கண்டு பிரமித்தான். சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள



அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்" அப். 8:12-14).

இப்படியாக புறஜாதி நாடுகளிலும் சுவிசேஷ வசனத்தை முதல் நூற்றாண்டு சீஷர்கள் பிரசங்கித்தார்கள். அவைகளை ஏற்றுக்கொண்டு அநேகர் இரட்சிக்கப்பட்டார்கள் என காண்கிறோம். இயேசுவின் பிறப்பும் சிலுவை மரணமும் ஒரு கூட்டத்தாருக்கு மாத்திரமல்ல. உலகில் உள்ள அனைவருக்கும் அறிவிக்கப்பட வேண்டிய ஒரு நற்செய்தியாகும். ஆகையால் சீஷர்களுக்கு கர்த்தர் கட்டளையிடும்போது நீங்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்றார். ஆகையால் தேவனை அறியாத புறஜாதிக மக்களும் அவரை அறிந்து கொண்டார்கள். அவர் ஏன் சிலுவையில் அறையப்பட்டார் என்பதை புரிந்துகொண்டார்கள். இன்றைக்கு உலகமே அறிய வேண்டிய ஆண்டவராயிருக்கிறார்.

அன்பானவர்களே, அவர் உலக தோற்றத்திற்கு முன்பே குறிக்கப்பட்டவர். அவர் முலமாகவே எல்லாம் உண்டாக்கப்பட்டது. அவர் உலகத்தை பாவத்திலிருந்து இரட்சிக்க வந்த உலக இரட்சகர். அவரை ஏற்றுக்கொள்ளாத ஒருவரும் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள இயலாது. ஆகையால் அவரை விசுவாசித்துப் பற்றிக்கொள்ளுங்கள். அப்பொழுது உங்களுடைய ஆத்து இரட்சிக்கப்படும்.

**மகிமையிலே எடுத்துக்கொள்ளப்பட்டார்.** மகிமை என்று பார்க்கும்போது அவர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் எங்கிருந்து வந்தாரோ அங்கே மறுபடியும் எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர் பூமிக்கு வந்ததின் நோக்கத்தை நாம் அறிகிறோம். அதைப்போல அவர் பரலோகத்தில் நமக்காக பிதாவினிடத்தில் பரிந்துபேசும்படியாக எடுத்துக்கொள்ளப்பட்டார் என்பதையும் நாம் அறியவேண்டும். எடுத்துக்கொள்ளப்பட்ட அவர் மீண்டும் வருவார். இதை தேவதூதர்கள் சொன்னார்கள்; "இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று; கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்துபார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்" (அப்.1:9-11).

ஆண்டவர் இயேசுவின் வருகைக்காக இன்றை நாட்களில் கர்த்தருடைய பிள்ளைகள் ஆவலாய் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவருடைய வருகையிலே அவருடைய மணவாட்டியாகிய சபை அதாவது கிறிஸ்துவின் சபை பரலோகத்திற்கு அவரோடே எடுத்துக்கொள்ளப்படும். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று இயேசு சொன்ன உபதேசத்தை இங்கே நினைத்துப்பாருங்கள். அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. வானத்தின் கீழ்ழெங்கும் அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை. ஆகையால் இச்செய்தியை வாசிக்கும் அன்பு நண்பரே, தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார், ஆவியிலே நீதியுள்ளவரென்று விளங்கப்பட்டார், தேவதூதர்களால் காணப்பட்டார், புறஜாதிகளிடத்தில் பிரசங்கிக்கப்பட்டார், உலகத்திலே விசுவாசிக்கப் பட்டார், மகிமையிலே ஏறெடுத்துக்கொள்ளப்பட்டார் என்று தியானித்தோம். இவ்வளவையும் யாருக்காக செய்தார். உங்களையும் என்னையும் மீட்கும்படியாகவும், மீட்டு பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்தில் சேர்க்கும்படியாகவும் வெளிப்பட்டார்.

இச்செய்தியை நீங்கள் இதுவரை அறியாதிருந்திருக்கலாம் அல்லது அறிந்தும் அதைக்குறித்து தியானிக்காமல் இருந்திருக்கலாம். இன்றே மாம்சத்திலே உன்னை மீட்க வெளிப்பட்ட ஆண்டவராகிய இயேசுவை விசுவாசித்து, பாவமன்னிபுக்கென்று ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போக கழுவப்படு. அப்பொழுது கர்த்தர் தம்முடைய சபையில் உன்னை சேர்ப்பார். இதற்கு உதவி செய்ய நாங்கள் காத்துக்கொண்டிருக்கிறோம். உங்கள் அருகாமையில் உள்ள கர்த்தருடைய சபையை நாடுங்கள். உங்கள் அருகாமையில் கர்த்தருடைய சபையில்லை என்றால் எங்களோடு தொடர்கொள்ளுங்கள். நாங்கள் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்து தருகிறோம்.

**கேள்வி**

**இவைகளைக்குறித்து அப்போஸ்தலர்கள் கொடுக்கும் சாட்சி உண்டா?**

தேவன் கொடுத்த சாட்சியைக்குறித்தும் நாம் வேதத்தில் படிக்கிறோம்; "இதோ, ஒளியுள்ள ஒரு மேகம் அவர்கள்மேல் நிழலிட்டது, இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன், இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று" (மத்.17:5). மேலும் அப்போஸ்தலனாகிய யோவான் சொல்லும்போது; "ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே தொட்டதுமாயிருக்கிற



ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு அறிவிக்கிறோம். அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள் கண்டு, அதைக்குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு அறிவிக்கிறோம். நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள் கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவோடும் இருக்கிறது" என்கிறார் (1யோவா.1:1-3).

தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டதற்காக சாட்சிகள் அநேகமுண்டு. காலம் ஆண்டவருடைய பிறப்பை வைத்தே இரண்டாக பிரிக்கப்பட்டிருக்கிறது. கிறிஸ்துவுக்கு முன் என்றும் கிறிஸ்துவுக்குப் பின் என்றும் படிக்கிறோம். இது தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒன்றாக இருந்தபடியாலே இதை யாரும் மறைக்க முடியவில்லை மறுக்கவும் முடியவில்லை. அந்த நாட்களிலே யூதேயா தேசத்தை அரசாண்ட ஏரோதின் நாட்களில் நடந்த சம்பவம் இது. இச்செய்தி உலகத்திற்கு இரட்சிபைக் கொடுக்கும் செய்தி. இதை நீங்கள் விசுவாசித்து பற்றிக்கொள்ளுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 50. காணப்படுகிறவைகள் மற்றும் காணப்படாதவைகள்

## The Things Which are Seen & Which are Not Seen

**கா**ணப்படுகிறவைகள் எப்படிப்பட்டவைகள்? அவைகளின் முடிவு என்ன? காணப்படாதவைகள் எப்படிப்பட்டவைகள்? அவைகளுக்கு முடிவு உண்டா? போன்ற காரியங்களை நாம் படிப்போம். முதலாவது காணப்படுகிறவைகளை தியானிப்போம். பரிசுத்த வேதாகமம் "காணப்படுகிவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவைகளோ நித்தியமானவைகள்" என போதிக்கிறது (2கொரி.4:18). இன்றைய மானிட வர்க்கம் காண்கிறவைகளையே நம்பிக்கொண்டிருக்கிறது. இவைகள் மனிதனுக்கு தேவையானவைகளே அதற்காக சதா உலகத்தையே தொற்றிக் கொண்டிருக்கவேண்டும் என்பதில்லை. "உலகத்திலும் உலகத்திலுள்ளவை களிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை" என காண்கிறோம் (1யோவா.2:15). உலகம் நாம் வாழுவதற்காக உண்டாக்கப்பட்டது. அதையே நாம் பிடித்துக்கொண்டிருக்க அல்ல. இவைகளில் ஒருவன் அன்புகூருவானேயாகில் அவனிடத்தில் பிதாவானவர் அன்பு செலுத்த மாட்டார்.

உலகம் என்று சொல்லும்போது பொருளாசையுள்ளவர்களாக அநேகர் உலகத்தையும் அதிலுள்ளவைகளையும் தன் ஜீவனுக்கும்மேலாக நேசிப்பார்கள். இப்படிச்செய்வதால் கண்களின் இச்சைக்கு பிசாசு உங்களை கொண்டுசெல்லுவான். நாளடைவில் அவைகள் மரணத்தைக் கொண்டுவரும். ஆகையால் உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையாக இருக்கிறது. உலகத்தை வெறுத்து ஜீவனைப் பற்றிக்கொள்ளுங்கள். லோத்து என்ற மனிதனை அறிவீர்கள் அவன் "யோர்தான் நதிக்கு அருகான சமபூமி முழுவதும் நீர்வளம் பொருந்தினதாயிருக்கக்கண்டான். கர்த்தர் சோதோமையும் கொமொராவையும் அழிக்கும் முன்னே, சோவாருக்குப்போம் வழிமட்டும் அது கர்த்தருடைய தோட்டத்தைப்போலவும் எகிப்து தேசத்தைப்போலவும் இருந்தது" (ஆதி.13:10).

ஆகையால் அந்த இடத்தை தேர்வு செய்தான். ஆனால் அவனுடைய தேர்வு பின்நாளில் தெரியவந்தது. அங்குள்ளவர்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாயிருந்தார்கள். ஆகையால் அந்த பட்டணங்களை கர்த்தர் கந்தகத்தால் அழித்துப்போட்டார். உலகப்பிரகாரமாக லோத்து பார்த்து தேர்வு செய்தான். நம்முடைய வாழ்க்கையிலும் இவ்விதமாக பார்த்து ஏமாற்றப்படுகிறோம். ஆபிரகாமைப்போல அழைத்த தேவன் மீது நம்பிக்கை வைப்போமானால் ஆபிரகாமைப்போல ஆசீர்வதிக்கப்படுவோம். புதிய ஏற்பாட்டில் தோமா என்று சொல்லக்கூடிய மனுஷனும் இவ்விதமாகவே உலகத்தைப் பார்த்து பின்னிட்டுபோய்விட்டான். தேவனுடைய உன்னதமான அழைப்பை அசட்டை பண்ணினான்.

அதாவது "தேமா இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து, என்னை விட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப்போய்விட்டான்" என பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின புத்தகத்தில் குறிப்பிடுகிறார் (2தீமோ.4:10). ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்தவர்கள் சில உலககாரியங்களை மையமாக வைத்து அவைகளை நேசித்து இந்த தேமாவைப்போல பின்னிட்டுப்போய் விடுகிறார்கள். உலகமும் அதிலுள்ளவைகளும் ஒரு நாளில் அழிந்துபோய்விடும். இவைகள் எல்லாம் அழிவுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. இப்படி அழிந்துபோகிற பொருட்கள் மீது நம்முடைய கண்களைப் பறக்கவிடாமல். காணாதவைகளை நாம் நோக்கிப்பார்க்கவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிறார்; "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது, மேலும் காணப்படுகிவைகளையல்ல, காணப்படாதவை களை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" என்கிறார் (2கொரி.4:16,17).



இவ்வுலகத்திலே புறம்பான மனுஷனுக்காக வாழ்வோமானால் எல்லாரைப்பார்க்கிலும் நாம் பரிதபிக்கப்படதக்கவர்களாயிருப்போம். ஏனென்றால் புறம்பான மனுஷன் அழியவேண்டும். அது அழிவுக்குரியது. பொதுவாக எல்லோருமே புறம்பான மனுஷனுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவைகளை கவனிக்கவே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். பிரான்ஸ் நாட்டில் தற்போது ஒரு கணக்கெடுப்பில் பெண்கள் தங்களை அலங்கரிப்பதற்காக ஆயுள் முழுக்க 65லட்சம் ரூபாய் ஒவ்வொரு பெண்களும் செலவிடுவதாக கணக்கெடுத்திருக்கிறார்கள். இது அதிகப்படியானது அல்லவா? தேவன் இயற்கையாகவே பெண்களுக்கு வேண்டி அழகை கொடுத்திருக்கிறார். இதற்கு மேலும் அவர்கள் இவ்வளவு செலவு செய்து புறம்பான அலங்கரிப்பு செய்கிறார்கள். இவைகள் நாளுக்கு நாள் அழிந்து உள்ளான மனுஷனானது நாளுக்கு நாள் புதிதாக்கப்படவேண்டும். அதற்காக சுத்தமாக இருக்கக்கூடாது என்பதல்ல. அதிகமாக அவைகளுக்கு செலவு செய்யாமல் உள்ளான மனுஷனில் நாம் பலப்படவேண்டும். கிராமப்புரங்களில் ஊழியம்செய்து நான் கரிகருத்துப்போய்விட்டேன். என்னைப் பார்க்கிறவர்கள் எல்லாரும் என்ன இப்படி ஆகிவிட்டாய் என்று கேட்கிறார்கள்.

ஆகையால் நான் இனி கிராமப்புறங்களில் ஊழியம் செய்யாமல் என்னுடைய சரீரம் கருத்துப்போகாமல் பாதுகாப்பேன் என்று ஒருவர் தீர்மானம் பண்ணினால் அந்த ஊழியங்களை யார்பார்ப்பது. நமக்கு கர்த்தருடைய ஊழியம் பெரியதா? நம்முடைய சரீரம் வெயில்பட்டு கருத்துப்போவது முக்கியமா? இந்த சரீரத்தில் எத்தனை நாட்கள் இருக்கப்போகிறோம். மண்ணுக்குப்போகும் இந்த சரீரத்தில் இருக்கக்கூடிய நாட்களில் நாம் அழிந்துபோகும் மக்களை நாடிச்செல்ல வேண்டும். காணப்படுகிறவை களையல்ல காணப்படாதவைகளை நோக்கியிருக்கிறோம். இந்த கொஞ்சகால கஷ்டங்கள் நமக்கு நித்திய கனமகிமையைக் கொண்டுவரும்.

மேலான ஆசீர்வாதங்களை பெற நாம் ஒவ்வொரு நாளும் புறம்பான மனுஷனையும் அதனுடைய ஆசைகளையும், புறம்பாக்கிப்போட்டுவிட்டு உள்ளான மனுஷனில் வல்லமையாய் பலப்படவேண்டும். காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள் என அறிந்த நாம் அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நித்திய நித்தியமாக என்றும் நிலைத்திருக்கிற பரலோகத்தை நோக்கி வெற்றி நடைபோடுவோம். உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராமல், நம்மை காக்கும்படியாக

சிலுவையில் தன்னையே தியாக பலியாக ஒப்புக்கொடுத்த இயேசுவிலும் அவருடைய வசனத்திலும் அன்பு செலுத்துவோம்.

**காணப்படாதவைகள் நித்தியமானவைகள் என காண்கிறோம்.** எது நமக்கு காணப்படாதவைகளாக இருக்கிறது? பரலோகமே நாம் காணப்படாத ஒன்றாக இருக்கிறது. அது நித்தியமான ஒன்றாகவே இருக்கிறது. "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என எபிரெய ஆசான் குறிப்பிடுகிறார் (எபி.11:1). அது நம்பப்படுகிறவைகளின் உறுதியாக இருக்கிறது. அநேகருடைய கேள்வி அதை யார் பார்த்தது? மனிதன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? காணாததை நம்புகிறதே நம்பிக்கை. இந்த நம்பிக்கை இருக்கிறவர்கள் அதில் பிரவேசிப்பார்கள். ஆபிரகாமை தேவன் அழைக்கும்போது அவனுக்கு ஒரு அடி நிலம்கூட இல்லை என்று காண்கிறோம். "சகோதரரே, பிதாக்களே, கேளுங்கள். நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம் காரானூரிலே குடியிருக்கிறதற்கு முன்னமே மெசொப்பொத்தாமியா நாட்டிலே இருக்கும்போது மகிமையின் தேவன் அவனுக்குத் தரிசனமாகி: நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்கு வா என்றார்.

அப்பொழுது அவன் கல்தேயர் தேசத்தைவிட்டுப் புறப்பட்டு, காரானூரிலே வாசம்பண்ணினான். அவனுடைய தகப்பன் மரித்தபின்பு, அவ்விடத்தை விட்டு நீங்கள் இப்பொழுது குடியிருக்கிற இத்தேசத்திற்கு அவனை அழைத்துக்கொண்டுவந்து குடியிருக்கும்படி செய்தார். இதிலே ஒரு அடி நிலத்தையாகிலும் அவனுடைய கையாட்சிக்குக் கொடாமலிருக்கையில், அவனுக்குப் பிள்ளையில்லா திருக்கும்போது; உனக்கும் உனக்குப் பின்வரும் உன் சந்ததிக்கும் இதைச் சுதந்தரமாகத் தருவேன் என்று அவனுக்கு வாக்குத்தத்தம் பண்ணினார்" (அப்.7:2-5).

தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம்பண்ணினதை விசுவாசத்தோடே அவன் பெற்றுக்கொண்டான். அவன் விசுவாசமில்லாமல் லோத்தைப்போல கண்களை ஏறிட்டுப்பார்த்து ஒரு இடத்தை தேர்ந்து எடுத்திருப்பானேயானால் லோத்தைப்போல இவனும் இல்லாமற்போயிருப்பான் அல்லவா? அன்பானவர்களே, வாக்குத்தத்தம் செய்த கர்த்தர் வல்லவராயிருக்கிறார். அவர் நமக்கு உண்டாக்கிவைத்திருக்கிற இந்த உலகமே இவ்வளவு அழகாக இருக்குமானால் இவைகளைப்பார்க்கிலும் நித்திய நித்தியமாக நிலைத்திருக்கிற அந்த பரலோகம் எப்படியிருக்கும் என்பதை எண்ணிப்பாருங்கள். இந்த உலகத்திலே இன்னும் எத்தனையோ காரியங்களை நாம் பார்க்காதவர்களாகவே இருக்கிறோம்.



ஏன் கொடைக்கானல் மலையை பார்க்காதவர்கள் எத்தனையோ பேர் இருக்கலாம். அதைப்போல காஷ்மீர் பகுதியைப் பார்க்காதவர்கள் எத்தனையோபேர் இருக்கலாம். நாம் எல்லோருமே பார்க்காத அண்டார்டிக்கா பகுதிகள் இருக்கிறது. மிகவும் பனிபடர்ந்த இந்த பகுதிகளை ஆராய்ச்சியாளர்கள் மட்டுமே பார்த்திருக்கிறார்கள். இப்படி எண்ணிலடங்கா பகுதிகளை இந்த உலகத்திலே நாம் கேள்விப்படுகிறோம், அல்லது தொலைக்காட்சிகளில் பார்க்கிறோம். ஆனால் நேரடியாக சென்று பார்த்ததில்லை. ஆனாலும் அப்படியொரு பகுதியிருப்பதாக நாம் நம்புகிறோம். இதைப்போல நித்தியமான பரலோகத்தை தேவன் மனிதனுக்காக ஏற்படுத்திவைத்திருக்கிறார் என்ற நம்பிக்கை உங்களுக்கு ஏற்படவேண்டும். அதில் பிரவேசிப்பதற்காக சில வழிகளைக்குறித்து வேதாகமம் நமக்கு எடுத்துக்காட்டுகிறது. அந்த வழிகளை பின்பற்றுவோமானால் காணப்படாத அந்த பரலோகத்தில் பிரவேசிப்போம்.

ஆகையால் "நாம் அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்தபுத்தியும் நீதியும் தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம்பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும் நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்படி நமக்குப் போதிக்கிறது" (தீத்து 2:13,14).

ஆண்டவராகிய இயேசு நாம் காணாத பரலோகத்திலிருந்து வருவார். அவரோடு ஆயத்தமுள்ளவர்கள் அதாவது காண்கிறவைகளை வெறுத்து, காணாதபரலோகத்தை நோக்கியிருக்கிறவர்கள், அவரோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார். அவரே தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியாயாதிபதி. அவர் பூமியை நீதியோடும் தம்முடைய சத்தியத்தோடும் நியாயந்தீர்ப்பார். ஆகையால் இவ்வுலகத்தின் இச்சையை வெறுத்து கர்த்தருடைய வசனத்திற்கு முக்கியதுவம்கொடுத்து அவைகளை பற்றிக்கொள்ளுங்கள். நீங்கள் இவ்வுலகத்திலே தெளிந்த புத்தியுள்ளவர்களாக ஜீவனம்பண்ண வேண்டும்.

இன்றைக்கு அநேகர் கர்த்தரை அறிந்திருக்கிறார்கள். ஆனால் அறியவேண்டிய பிரகாரம் அறியாமல் அறிந்திருக்கிறார்கள். தோமா என்று சொல்லக்கூடிய ஒரு சீஷனை நாம் எல்லோரும் அறிவோம். அவன் மற்றசீஷர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொள்ளாமல் அவரை நான் பார்த்து அந்தக் காயத்திலே என் விரலைவிட்டு, என் கையை அவருடைய விலவிலே போட்டாலொழிய விசுவாசிக்கமாட்டேன் என்றான். இப்படி அநேகர் பார்த்து விசுவாசிக்கவே முயற்சிக்கின்றனர். ஆகையால் அப்படிப்பட்டவர்களை

பிரியப்படுத்தும்படியாக அநேக போதகர்கள் அவர்களுக்கு ஏற்றாற்போல காரியங்களை செய்கிறார்கள். ஆனால் கர்த்தர் தோமாவைப்பார்த்து சொன்னது என்ன? "தோமாவே, நீ என்னைக் கண்டதினாலே விசுவாசிக்கிறாய், காணாதிருந்தும் என்னை விசுவாசிக்கிறவர்கள் பாக்கியவான்கள் என்றார்" (யோவா.20:29). அன்பு சகோதரனே, சகோதரியே நீ எப்படி விசுவாசித்துக் கொண்டிருக்கிறாய்? கர்த்தராகிய இயேசு உனக்காக மரித்து அடக்கம்பண்ணப்பட்டு, பின்பு மூன்றாம் நாள் உயிர்த்தார். அவர் உனக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணிவைத்திருக்கிறார். அதில் பிரவேசிக்க அதை விசுவாசி.

**கேள்வி**

**நிலையான ஒன்று பூமியில் உண்டா?**

இல்லவே இல்லை, ஆனால், நிலையான ஒன்றைக்குறித்து வேதாகமம் போதிக்கிறது. அதுவே பரலோகம். "நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை, வரப்போகிறதையே நாடித்தேடுகிறோம். ஆகையால் அவருடைய நாமத்தை துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலியை அவர்மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்" என்கிறார் எபிரெய ஆசான் (எபி.13:,14,15). இப்பூமிதான் நிலையான வாழ்வு என்று அநேகர் எண்ணிக்கொண்டு தங்களுடைய வாழ்க்கையை வீணாக்கிக்கொண்டிருக்கின்றனர். தங்களுக்கும் தங்களுக்குப்பின் வரும் சந்ததிகளுக்கும் தேவையானவற்றை சவதரித்துக் கொண்டிருக்கிறனர்.

பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்கவேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளை கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டு திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்துவையுங்கள் அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதுமில்லை என்று கர்த்தர் சொல்லுகிறார். காணாதை நோக்கிப்பார்த்து, அதை சுதந்தரித்துக் கொள்ள உங்களை ஒப்புக்கொடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 51. அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்

## Many Walk Differently

இன்றைக்கு உலகத்திலே அவரவர் தாம் தெரிந்துகொண்ட வழியில் நடக்கிறார்கள். ஆனால் உலகத்தையும் அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன் ஒரே ஒரு வழியை மட்டும் ஏற்படுத்தியிருக்கிறார். அந்த வழி நித்திய வழியாக இருக்கிறது. அந்த வழி செல்லும்போது மனிதனுக்கு



இளைப்பாறுதல் கிடைக்கும். இதை அநேகர் அறியாமல் வேறுவிதமாய் நடக்கிறார்கள். இதைப்பற்றி வேதம் நமக்கு எடுத்துரைக்கிறது. "அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள்; அவர்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞரென்று உங்களுக்குச் சொன்னேன், இப்பொழுது கண்ணீரோடும் சொல்லுகிறேன்" என்று அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பிய சபையாருக்கு எழுதின நிருபத்தில் படிக்கிறோம் (பிலி.3:18).

அப்படிப்பட்டவர்கள் தேவனுடைய சித்தத்திற்கு பகைஞராகவே இருக்கிறார்கள். தேவனுடைய சித்தத்தை அறிந்தும் அநேகர் வேறுவிதமாய் நடக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் கலாத்திய சபையில் இருந்தார்கள். அவர்களுக்கு அப்போஸ்தலனாகிய பவுல் எழுதும்போது; "புத்தியில்லாத கலாத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற் போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப் பட்டிருந்தாரே" என்கிறார் (கலா.3:1). இந்த சபையார் வேறுவிதமாக நடக்கிறதை அறிந்த பவுல் அவர்களை எச்சரிக்கத்தவறவில்லை. இன்றைக்கு நாமும் சத்தியத்திற்கு விரோதமாக போகின்ற ஜனங்களை எச்சரிக்கவேண்டியது அவசியமாயிருக்கிறது.

சத்தியம் என்றும் மாறாதவைகளாகவே இருக்கிறது. அவைகளை சிலர் மாற்றிப்போதிக்கும்படியாக துணிந்திருக்கிறார்கள். சிலர் அறியாமை யினாலே மாற்றிக் கைக்கொள்ளுகிறார்கள். எது எப்படியிருந்தபோதும் சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது. அதை ஒரு மனிதன் அறிந்துகொள்ளும்போது அந்த சத்தியம் அவனை விடுவிக்கும். மேலும், கொரிந்து சபையாருக்கு எழுதின கடிதத்தில் "நாங்களே சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்; அவர் யூதருக்கு இடறலாயும் கிரேக்கருக்குப் பைத்தியமாயும் இருக்கிறார்" என தெரியப்படுத்துகிறார் (1கொரி.1:23). இந்த யூதரும் கிரேக்கரும் தேடவேண்டியதை தேடாமல்; அடையாளத்தையும், ஞானத்தையும் தேடினார்கள். உலகத்திலே மனிதனை மீட்கும்படியாக தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார். இப்படி வெளிப்பட்ட அவரையும் அவருடைய உபதேசத்தையும் ஏற்க மனமில்லாமல் உலக ஞானத்தையும் அடையாளங்களையும் தேடி மோசம்போனார்கள். இன்றைக்கும் அநேகர் இவ்விதமாக தேடிக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்களுடைய முடிவு அழிவு என்று நாம் காண்கிறோம். ஏனென்றால், அவர்கள் தேவனை அறிந்துகொள்ளும் படியாக முயற்சிக்கவில்லை; ஆகையால், "தேவனை அறியாதவர்களும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும்

நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, ....ஆச்சரியப்படத்தக்கவராயும் அவர் வரும்போது, அவர்கள் கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்தும், அவருடைய வல்லமை பொருந்திய மகிமையிலிருந்தும் நீங்கலாகி, நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்" என காண்கிறோம் (1தெச.1:7-10).

பலி சடங்காசாரங்களையும் பண்டிகைகளையும் கர்த்தர் எதிர்பார்க்க வில்லை. அவர் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறார். சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற அனைவருக்கும் அறிவிக்கப்பட்டு வருகிறது. ஒருவரும் சாக்கு போக்கு சொல்ல இடமில்லை. இந்த சுவிசேஷ வசனத்திற்கு கீழ்ப்படியாதவர்களும், இவைகளை மாற்றி போதிக்கிறவர்களும் தேவனுடைய கோபத்திற்குள்ளாவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு விரோதமாக தேவனுடைய கோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருப்பதாக காண்கிறோம். "சத்தியத்தை அநியாயத்தினாலே அடக்கிவைக்கிற மனுஷருடைய எல்லாவித அவபக்திக்கும் அநியாயத்துக்கும் விரோதமாய், தேவகோபம் வானத்திலிருந்து வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது" (ரோம.1:18). இந்த கோபத்திற்கு ஒருவரும் தப்பிக்கொள்ள முடியாது. சத்தியத்தை அறிந்த ஒருநபர் சத்தியத்தின்படி வாழ வேண்டும். அதை மற்றவர்களுக்கும் எடுத்துச்சொல்ல வேண்டிய பொறுப்பு இருக்கிறது. இதை மறைத்து வைக்கவோ அல்லது மாற்றிபோதிக்கவோ அல்லது அவைகளை வேதாகமத்திலிருந்து நீக்கிவிடவோ யாருக்கும் அதிகாரம் இல்லை. ஆனால் பிரிவினை சபைபோதகர்கள் இதை அநியாத்தினாலே அடக்கிவைத்திருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் சிலுவைக்கு பகைஞர்களாகவே இருக்கிறார்கள்.

"அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள்" இதைக்குறித்து பிலி.3:19-ல் வாசிக்கிறோம். கிறிஸ்தவத்திற்கு ஏற்றார்போல சிந்திக்காமல் அநேகர் வேறுவிதமாய் சிந்திக்கிறார்கள். குறிப்பாக சொல்லவேண்டுமானால் அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வயிறு தேவனாக இருக்கிறது. மனிதன் அப்பத்தினாலே மாத்திரமல்ல தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா?

அநேகர் இவைகளை நோக்காமல் வீண் அலுவற்காரர்களாய் ஒழுக்கற்று திரிகிறார்கள். "அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்"



என பவுல் குறிப்பிடுகிறார் (ரோ.16:18). கர்த்தருக்கு பயந்து ஊழியஞ்செய்கிறவன் கர்த்தருடைய வார்த்தைகளை போதிப்பான். தன்னுடைய வயிற்றுக்கு ஊழியஞ்செய்கிறவன். இச்சகப்பேச்சினாலும் நல்ல ஆத்துமாக்களையும் வஞ்சிக்கிறவனாயிருப்பான். ஆகையால் இப்படிப்பட்டவர்களை நாம் ஏற்றுக்கொள்ளாமலும் இவர்களுக்கு வாழ்த்துதல் சொல்லாமலும் இருக்கவேண்டும். இப்படிப்பட்டவர்கள் தேவபகைஞராகவே இருக்கிறார்கள்.

தேமா என்று சொல்லக்கூடிய ஒரு சீஷன் இப்பிரபஞ்சத்தின்மீது ஆசைவைத்து கர்த்தருடைய ஊழியத்தைவிட்டு பின்னிட்டுப்போனான். இதை பவுல் தீமோத்தேயுவுக்கு தெரியப்படுத்துகிறார் (2தீமோ.4:10). அநேகர் இந்தவிதமாக உலக காரியங்களை மையமாக வைத்து ஊழியம் செய்கிறவர்கள். உலகத்தாலே பிடிபட்டு கர்த்தருடைய ஊழியத்தை செய்யாமல் பின்னிட்டுப்போய்விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களைக்குறித்து நாம் கவனமாயிருக்கவேண்டும்.

அப்படிப்பட்டவர்களுடைய மகிமை அவர்களுடைய இலட்சையே என காண்கிறோம். "அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள், அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர் களுமாயிருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்கவேண்டும். அவர்கள் இழிவான ஆதாயத்துக்காக தகாதவைகளை உபதேசித்து, முழுக் குடும்பங்களையும் கவிழ்த்துப் போடுகிறார்கள்" (தீத்.1:10,11). ஊழியம் என்பது, அது பரிசுத்தமானது அழைக்கப்பட்டவர்களால் செய்யவேண்டிய ஒரு உன்னதமான பணியாகும். இதை சிலர் ஆதாய தொழிலாக எண்ணி செய்கிறார்கள்.

சிலர் பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தை புரியாமல் போதகர்களா, அதாவது நியாயப்பிரமாண போதகர்களாக இருந்துகொண்டு தாங்கள் பேசுகிறது இன்னதென்றும் தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்து நியாயப் பிரமாணத்தைக்குறித்து மேட்டிமைகொள்ளுகிறார்கள். பண்டிகைகளையும், மாதபிறப்புகளையும் ஓய்வுநாட்களையும் முக்கியபடுத்தி ஜனங்களுக்கு ஏற்றாற்போல உபதேசித்து, வீணானவைகளை போதித்து மனதை மயக்குகிறவர்களாய் இருந்து கொண்டு, பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் அவர்கள் உட்புகுந்து அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். முதலாவது பிசாசு ஏதேன் தோட்டத்தில் உட்புகுந்து ஏவாளை வசப்படுத்தியதுபோல இவர்கள் பெண்களை இச்சகப்பேச்சினாலும், தங்களுடைய தந்தரத்தினாலும் அவர்களை வசப்படுத்துகிறார்கள்.

ஆகையால் இப்படிப்பட்டவர்களை, கர்த்தருடைய வசனத்தைக் கொண்டு வாயை அடக்கவேண்டும் என பவுல் நமக்கு உணர்த்துகிறார். இப்படிப்பட்டவர்களாலே அநேக குடும்பங்கள் வஞ்சிக்கப்பட்டு போகிறது. பிரிவினை சபைகள் வளர்ந்து பெருகுகிறது. இதற்கு முக்கிய காரணமே பிரிவினைவாதிகள்தான். அங்கே ஒழுங்கு கிடையாது எப்படி வேண்டுமானலும் ஜெபிக்கலாம், எப்படிவேண்டுமானலும் பாடலாம், எப்படிவேண்டுமானலும் நாம் கிறிஸ்தவர்களாக நடந்துகொள்ளலாம் என போதிக்கிறார்கள். ஆகையால் தாறுமாறாக ஓடுகிற பெண்ஒட்டகத்தைப் போல அவர்கள் இருக்கிறார்கள். ஆகையால் பெண்கள் அப்படிப்பட்டவர்களுடைய சபையில் அதிகமாக காணப்படுகிறார்கள். பெண்கள் பேசுவதற்கு அந்த சபையில் இடமளிக்கிறார்கள். ஆனால் பெண்களுக்கு பேசும்படி ஆண்கள் இருக்கிற இடத்தில் பெண்களுக்கு அதிகாரம் இல்லை. எந்த ஒரு பெண்ணும் சபையை குறிப்பாக ஆராதனை நடத்த பெண்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை என காண்கிறோம். பரிசுத்த வேதாகமத்தில் நாம் எங்கும் காணமுடியாது. அப்படியிருக்கும்போது, எப்படி துணிந்து செய்ய முடியும்? இவர்கள் துணிகரமுள்ளவர்கள். இஸ்ரவேலரைப்போல வழிவலகிப்போகும் இருதயத்தை உடையவர்களா இருக்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிறார்கள் என பிலி.3:19-ல் கடைசி பகுதியில் படிக்கிறோம். ஆம், இன்று பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கிற கூட்டம் அதிகமாக இருக்கிறது. உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லாத சதுசேயர் அந்நாட்களில் வாழ்ந்துகொண்டுவந்தார்கள். அவர்களுக்கு உயிர்த்தெழுதலிலும், தேவதூதர்களிலும் நம்பிக்கை இல்லை.

ஆகையால் ஆண்டவர் இயேசுவை பார்த்து இப்படிக் கேட்டார்கள்; "போதகரே, ஒருவன் மனைவியையுடையவனாயிருந்து பிள்ளையில்லாமல் இறந்துபோனால், அவனுடைய சகோதரன் அவன் மனைவியை விவாகம்பண்ணி தன் சகோதரனுக்குச் சந்தானமுண்டாக்கவேண்டும் என்று மோசே எங்களுக்கு எழுதிவைத்திருக்கிறாரே, சகோதரர் எழுபேரிருந்தார்கள், அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்துபோனான். பின்பு இரண்டாஞ்சகோதரன் அவளை விவாகம்பண்ணி, அவனும் பிள்ளையில்லாமல் இறந்துபோனான். மூன்றாஞ்சகோதரனும் அவளை விவாகம்பண்ணினான் அப்படியே ஏழு பேரும் அவளை விவாகம்பண்ணி, பிள்ளையில்லாமல் இறந்து போனார்கள். எல்லாருக்கும் பின்பு அந்த ஸ்திரீயும் இறந்துபோனாள். இவ்விதமாய் ஏழுபேரும் அவளை விவாகம்பண்ணியிருக்க, உயிர்த்தெழுதலில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாயிரபபாள் என்று கேட்டார்கள். இயேசு அவர்களுக்குப்



பிரதியுத்தரமாக; இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் பெண்கொண்டும் பெண்கொடுத்தும் வருகிறார்கள். மறுமையையும் மரித்தோரிலிருந் தெழுந்திருக்குதலையும் அடையப் பாத்திரராக எண்ணப்படுகிறவர்களோ பெண்கொள்வது மில்லை பெண் கொடுப்பதுமில்லை அவர்கள் இனி மரிக்கவு மாட்டார்கள்; அவர்கள் உயிர்த்தெழுதலின் பிள்ளைகளானபடியால் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய், தேவனுக்குப் பிள்ளைகளு மாயிருப்பார்கள்" (லூக்.20:28-36). பூமிக்கடுத்தவைகளை சிந்திக்கக் கூடியவர்கள் இந்த சதுசேயரைப்போலவே சிந்திக்கிறார்கள்.

நம் ஆண்டவர் சொன்னவைகளை நாம் நினைக்கவேண்டும்; "ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தை குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று, கவலைப்படாதிருங்கள். இவைகளையெல்லாம் அஞ்ஞானிகள் நாடித்தேடுகிறார்கள்; இவைகளெல்லாம் உங்களுக்குத் வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்" என்று குறிப்பிடுகிறார் (மத்.6:31,32). ஆகையால் அன்பானவர்களே பூமிக்குரியவை களையல்ல மேலானவைகளை நாடுங்கள்.

**கேள்வி**

**வேறுவிதமாய் நடக்கிறவர்களின் முடிவு என்ன?**

"நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்" (வெளி.22:15). இப்படிப்பட்டவர்கள் வேதாகமத்திற்கு புறம்பாக நடக்கிறவர்கள். இவர்களுக்காகவே நரகம் இருக்கிறது. புறம்பான இருள் அவர்களுக்கு வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒருக்காலும் வெளிச்சத்தை பார்க்காமல் இருளிலே தள்ளப்படுவார்கள். அங்கே நித்திய அழிவின் கூக்குரல் கேட்டுக்கொண்டே இருக்கும்.

யூதா இவர்களைக்குறித்து சொல்லும்போது; "இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொண்டார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிய நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" என்கிறார் (யூதா12,13).

தமக்குக் கீழ்ப்படியாதவர்களையும், தம்முடைய வார்த்தைக்கு விரோதமாக நடந்தவர்களையும், வேற்றுமையான உபதேசங்களை

போதிக்கிறவர்களையும் தேவன் இந்த விதமான இடத்தில் ஒப்புக்கொடுப்பார். இவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள். நீங்கள் வேறுவிதமாக சிந்திக்கிறவர்களாவும், நடக்கிறவர்களாவும் இருந்தால் இன்றே உங்களை மாற்றியமைத்துக்கொண்டு வசனத்திற்கு கீழ்ப்படியுங்கள். உங்களுக்கா ஜெபிக்கிறோம்.

## 52. இயேசுவைப் பின்தொடர்

## Follow Jesus

இன்றைக்கு நாம் யாரை மாதிரியாக கொள்ளவேண்டும்? அநேகர் தங்களுடைய மூதாதையர்களை மாதிரிய கொண்டு செயல்படுகின்றனர். இன்னும் அநேகர் தங்களுடைய மத தலைவர்களை மாதிரியாக கொள்ளுகின்றனர். சிலர் தங்களை வழிநடத்துகிற ஆசானை மாதிரியாகக் கொள்ளுகின்றனர். உலகத்தில் உள்ள எல்லோருக்குமே மாதிரியாகக் கொடுக்கப்பட்டவர் நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து. அவரையே நாம் எல்லோரும் மாதிரியக கொள்ளவேண்டும். "இதற்காக நீங்கள் அழைக்கப் பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப்போனார்" என்று பேதுரு தம்முடைய நிருபத்தில் எழுதியிருக்கிறார் (1பேது.2:21).

உலகத்தில் எத்தனை மாதிரிகள் இருந்தாலும் நாம் இயேசுவின் மாதிரியை நோக்கிப்பார்க்கவேண்டும். ஏனெனில் அவரே தேவனால் ஏற்படுத்தப்பட்ட மாதிரியாக இருக்கிறார். எல்லோரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களாகபோய் விட்டார்கள். தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட ஆண்டவராகிய இயேசு ஒருவரே தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுகிறவராய் உலகத்தில் தேவனுடைய சித்தத்தை செய்து நிறைவேற்றினார்.

இந்த உலகம் அவரை ஏற்றுக்கொள்ளாமல் அவரை மரண ஆக்கினைக்குள்ளாக தீர்த்து; "இயேசுவைப் பிடித்துக்கொண்ட மனுஷர் அவரைப் பரியாசம்பண்ணி, அடித்து, அவருடைய கண்களைக் கட்டி, அவருடைய முகத்தில் அறைந்து; உன்னை அடித்தவன் யார், அதை ஞானதிருஷ்டியினால் சொல் என்று அவரைக் கேட்டதுமன்றி, மற்றும் அநேக தூஷணவார்த்தைகளையும் அவருக்கு விரோதமாகச் சொன்னார்கள்" (லூக்.22:63-65). இத்தனை பாடுகளையும் அவர் தேவனுடைய குமாரனாயிருந்தும் நம்மை மீட்டுகும்படியாக பாடுபட்டார். அவரால்



உண்டாகக்கப்பட்ட மனுஷர்கள் அவருக்கு விரோதமாக செயல்பட்டனர். இதை நினைக்கும்போது அவர் எவ்வளவாய் சகித்தார் என்பதை நாம் எண்ணிப்பார்க்கவேண்டும். நம்மை ஒருவர் இந்தவிதமாக செய்தால் நாம் பொறுமையோடு இருப்போமா? அவரோ வாய்திரவாத ஒரு ஆட்டைப்போல கொண்டுபோகப்பட்டார். எத்தனை அவமானங்களை சகிக்கவேண்டுமோ அத்தனை அவமானங்களையும் சகித்தார். "அவர்மேல் துப்பி, அந்தக் கோலை எடுத்து, அவரைச் சிரசில் அடித்தார்கள்" (மத்.26:30).

இத்தனை பாடுகளையும் ஆண்டவர் எதற்காக சகித்தார்? உங்களையும் என்னையும் பாவத்திலிருந்து மீட்டுக்கும்படியாகவும், பாடுகளிலே பொறுமையோடிருக்கும்படியாகவும் நமக்கு மாதிரியாக செயல்பட்டார். வேதத்தில் வாசிக்கிறோம், "இயேசுவும் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே ஜனத்தைப் பரிசுத்தஞ்செய்யும்படியாக நகரவாசலுக்குப் புறம்பே பாடுபட்டார். ஆகையால் நாம் அவருடைய நிந்தையைச் சுமந்து, பாளயத்துக்குப் புறம்பே அவரிடத்திற்குப் புறப்பட்டுப்போகக்கடவோம்" (எபி.13:12,13).

இயேசுவை நாம் ஒவ்வொருநாளும் பின்தொடரும்போது அவருடைய பாடுகளை நாம் நினைத்து அவர் பாடுபட்ட இடத்திற்கு நம்மை கொண்டுசெல்லவேண்டும். அப்பொழுதுதான் நமக்குள்ளாக தாழ்மை ஏற்படும். சிலவேளைகளில் நாம் ஆண்டவரின் பாடுகளை நினைக்க தவறிவிடுகிறோம். அந்தவேளைகளில் பிசாசு நம்முடைய இருதயங்களில் களைகளை விதைத்துவிடுவான். எனவே, தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற வசனத்தின்படி ஆண்டவர் இயேசுவைப்போல உங்களை முற்றிலும் தாழ்த்துங்கள்.

அவர் பாவஞ்செய்யவில்லை என 1பேது.2:22-ல் படிக்கிறோம். ஆம், அவர் பாவ உலகத்தில் இருந்தார், ஆனால் அவர் பாவஞ்செய்யவில்லை. நீங்களும் நானும் பாவ உலகத்தில் இருந்துகொண்டு பாவிகளாகவே இருக்கிறோம். தேவனால் அனுப்பப்பட்ட அவருடைய குமாரனாகிய இயேசு உலகத்தில் பிறந்து நம்மைப்போல மாம்சத்தில் வெளிப்பட்டார். அவருக்கும் பசியுண்டாயிற்று, ஆனால் அவர் நம்மைப்போல பாவம் செய்கிறவராயிருக்க வில்லை. பாவம்அறியாவதவராய் இருந்தார். ஆனால், "மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்" என காண்கிறோம் (ரோம.8:3).

இது தேவனுடைய மாபெரும் திட்டமாயிருக்கிறது. ஏன் இந்த திட்டத்தை தேவன் ஏற்படுத்தினார்? தம்முடைய ஜனங்களை இரட்சிக்கும்படியாக தேவன் தம்முடைய குமாரனை மாம்சத்தில் மரிக்கும்படியாக ஒப்புக்கொடுத்தார். அவர் மாம்சத்தில் மரித்ததினாலே பாவத்தை சிலுவையில் ஜெயித்து ஆதிமுதலாக மனுஷனை ஆண்டு கொண்டுவந்த பாவத்தை ஆக்கினைக்குள்ளாக தீர்த்தார். ஆகையால் பாவத்திற்கு அடிமைகளாயிருந்த நம்மை மீட்டு நீதிக்கு அடிமைகளாக மாற்றினார். மேலும், "நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" என பேதுரு நமக்கு தெளிவுபடுத்துகிறார் (1பேது.2:24).

நம்முடைய பாவங்களைச் சிலுவையில் ஆண்டவராகிய இயேசு சுமந்தார். அதினாலே நாம் பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்கிறோம். சிலர் சிலுவையில் நம்முடைய நோய்களை சுமந்துதீர்த்தார் என்று எண்ணுகிறார்கள் அது தவறு நம்முடைய பாவநோயை தீர்த்தார் என்றே சொல்லவேண்டும். நோயைப் பார்க்கிலும் பாவம் கொடிதானது. நோயை குணப்படுத்திவிடலாம். ஆனால் பாவத்தை போக்கும் மருந்து இயேசுவின் இரத்தம் மட்டுமே அதை நியாயப்பிரமாணம் செய்யக்கூடாதிருந்தபடியால் தம்முடைய ஒரேபேரான குமாரனையே அனுப்பினார் என காண்கிறோம். தேவன் நம்மீது வைத்த அன்பை இங்கே நாம் புரிந்துகொள்கிறோம். அவர் முதலாவது தம்முடைய குமாரனையே கொடுத்து அன்புகூர்ந்தார். பின்பு நாம் அவரில் அன்புகூருகிறோம். ஒருவராலும் நம்மை பாவத்திலிருந்து மீட்கமுடியாது. ஆனால் ஆண்டவர் சிலுவையில் சிந்தின இரத்தம் நம்மை பாவமரகழுவுகிறது. இந்த இரத்தத்தை சிந்தி நம்மை பாவத்திலிருந்து மீட்ட அவரை நோக்கிப்பார்த்து அவருடைய அடிச்சுவடுகளை நாம் அநுதினமும் பின்பற்றவேண்டியது நம்முடைய கடமையல்லவா? இப்படிப்பட்ட உன்னதமானவர் நமக்கு மாதிரியாக கொடுக்கப்பட்டிருக்கும்போது நாம் நம்மைப்போல உள்ள மனிதர்களை ஏன் மாதிரியாக கொள்ளவேண்டும். நம்மைபோல மாம்சத்தில் உள்ளவர்களை நோக்காமல், இயேசுவை நோக்கிப்பாருங்கள்.

அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை என காண்கிறோம். இன்றைக்கு மதவட்டாரத்தில் இருக்கிற முன்மாதிரிகள் ஜனங்களை வஞ்சிக்கிறவர்களாக இருக்கிறார்கள். அதைச் செய்கிறோம் இதைச் செய்கிறோம் என்று சொல்லி தங்களுக்கு வேண்டியவைகளை பூர்த்தியாக சம்பாதித்துக்கொள்ளுகிறார்கள். நம் ஆண்டவரோ தலைசாய்க்க



இடமில்லாதவராயிருந்தார். அப்படிப்பட்டவரை அப்பொழுதிருந்த பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் அவரைக்குற்றங்கண்டுபிடிக்கும்படியாக வகைதேடினார்கள்.

"அவர்கள் சமயம்பார்த்து, தேசாதிபதியின் ஆளுகைக்கும் அதிகாரத்துக்கும் அவரை ஒப்புக்கொடுக்கும்படி அருடைய பேச்சிலே குற்றங்கண்டு பிடிக்கலாமென்று, தங்களை உண்மையுள்ளவர்களாய்க் காண்பிக்கிற வேவுகாரரை அவரிடத்தில் அனுப்பினார்கள். அவர்கள் வந்து போதகரே, நீர் நிதானமாய்ப் பேசி உபதேசிக்கிறீரென்றும், முகதாட்சணியமில்லாமல் தேவனுடைய மார்க்கத்தைச் சத்தியமாய்ப் போதிக்கிறீரென்றும் அறிந்திருக்கிறோம். இராயனுக்கு வரி கொடுக்கிறது நியாயமோ அல்லாவோ, எங்களுக்குச் சொல்லும் என்று கேட்டார்கள்... அதற்கு அவர் அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடைய தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார்" (லூக்.20:20-25). அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படுமா என்று என்னி அவரைக் குற்றப்படுத்தினவர்கள் இந்த வசனத்தைக்கேட்டவுடன் ஆச்சரியப்பட்டுப் போய்விட்டார்கள். ஆம், அன்பான சகோதரனே, சகோதரியே அவர் ஒருவரையும் வஞ்சிக்கவில்லை. அவர் ஒருவரையும் வஞ்சிக்கவேண்டிய அவசியமில்லை. ஏனென்றால் அவரால் நாம் உண்டாக்கப்பட்டவர் களாயிருக்கிறோம். ஒரு தகப்பன் தன் பிள்ளையை வஞ்சிப்பானா? அவர் நம்முடைய நன்மைகளை நாடுகிறவர். நமக்கு வேண்டிய சகலத்தையும் உண்டாக்கிவைத்திருக்கிறார். அவரை பின்பற்றியவர்களுடைய கண்ணீரை துடைத்தார். அவர்கள் வேண்டிக்கொள்ளும்போது இன்றுபோய் நாளை வா என்று ஒருவரையும் அவர் சொல்லாமல், அந்த நிமிடமே அவர்களுடைய பிரச்சனைகளை தீர்த்துவைத்தார். உலகத்தில் எந்த மனிதனாலும், எந்த அரசியல் வாதிகளாலும், எந்த அரசாங்கத்தாலும், எந்த ராஜாக்களாலும் தீர்த்துவைக்க முடியாத பிரச்சனைகளை மனிதர்களுக்கு உடனே அவர் தம்முடைய வல்லமையால் தீர்த்துவைத்து அவர்களை அனுப்பிவைத்தார்.

இப்படிப்பட்ட அற்புதங்களை உலகமுண்டாது முதல் கேள்விப்படவில்லையே என்று ஜனங்கள் பேசிக்கொண்டார்கள். அந்த அளவு அற்புதங்களை ஜனங்கள் மத்தியில் செய்து தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றினார். அப்படிப்பட்ட உன்னதமான கர்த்தரை நம்முடைய பிதாவாகிய தேவன் நம்மெல்லாருக்கும் மாதிரியாக கொடுத்திருக்கிறார். அவரை பின்தொடர்ந்து இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுங்கள்.

மேலும், "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத்

தம்மை ஒப்புவித்தார்'' (1பேது.2:23). இன்றைக்கு இருக்கிற உலக கடவுள்கள் பயமுறுத்துகிறதாக இருக்கிறது. அவைகளை பின்பற்றுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்களும் அது கையை வாங்கிடும், காலைவாங்கிடும், கோபக்காரசாமி என்று சொல்லுகிறார்கள். ஆனால் உலகத்தை இரட்சிக்கும்படியாக வந்த ஆண்டவர் இயேசு ஒருவரையும் பயமுறுத்துகிறவராய் வராமல் சாதுவானவராயிருந்தார்.

அவரை அத்தனை பாடுகளுக்கு உட்படுத்தியும் அவர் வாய்திறவா ஆட்டைப்போல இருந்தார். ஆட்டுக்குட்டியை கசாப்புக் கடைக்காரர் கழுத்தை அறுக்கும்படியாக கொண்டுபோகிறார். அவைகள் கத்துவதில்லை, தன்னை அவர்கள் கழுத்தை அறுக்கப்போகிறார்கள் என்பதை அறியாது அவர்கள் வைத்திருக்கிற கத்தியை சில ஆடுகள் ஏதோ சாப்பிடக்கூடியதா என்று அவைகளை முகர்ந்து பார்க்கும் அந்த அளவு அது அறியாமல், சத்தமில்லாமல்போகிறது, அதைப்போல நம் ஆண்டவர் அவரை சிலுவையில் அரைய கொண்டு சென்றபோது வாய்திறவாதிருந்தார். "உன்னை நீயே இரட்சித்துக்கொள்; சிலுவையிலிருந்திறங்கிவா என்று அவரைத் தூஷித்தார்கள். அப்படியே பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களைக்குள்ளே பரியாசம்பண்ணி; மற்றவர்களை இரட்சித்தான் தன்னைத்தான் இரட்சித்துக் கொள்ளத்திராணியில்லை'' என்று அவரை பரியாசம் பண்ணினார்கள் (மாற்.15:30,31).

இத்தனை பரியாசங்களுக்கு மத்தியில் அவர் பதில் பேசாமல் நியாயமாய் தீர்ப்புசெய்கிறவருக்கு தம்மை ஒப்புவித்தார். இந்த இடத்தில் நீங்களா இருந்திருந்தால் என்ன செய்திருப்பீர்கள்? ஒன்று சபித்திருப்பீர்கள், அல்லது அவர்களை கால் கைகள் விளங்காதவர்களா மாற்றியிருப்பீர்கள். ஆண்டவருக்கு எல்லா வல்லமைகளும் இருந்தும் அவர் நன்மை செய்கிறவராயும், பிதாவின் சித்தம் செய்கிறவராயும் இருந்தபடியால் அவர்களை மன்னிக்கும்படியாக சிலுவையில் தேவனை நோக்கி ஜெபித்தார். இப்படி உலகத்தில் உள்ள எந்த ஒரு நபராவது இருக்கக்கூடுமா? இத்தனை பாடுகளையும் நம்மை இரட்சிக்கும்படியாக அனுபவித்தார். அவரை நோக்கிப்பாருங்கள். அவரை பின்தொடருங்கள். அவருடைய வசனங்களை ஒவ்வொருநாளும் வாசியுங்கள். மற்றவர்களுக்கும் அவருடைய அன்பை எடுத்துச் சொல்லுங்கள்.

**கேள்வி**

**கர்த்தருடைய ஊழியக்காரன் எப்படியிருக்கவேண்டும்?**

"மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த்



தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்'' (எபே.6:6). ஊழியம் என்ற போர்வையில் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொண்டு ஊழியம் செய்கிற அநேகரை நாம் காண்கிறோம். இவர்கள் பெரும்பாலும் மனிதர்களை பிரியப்படுத்தவே ஊழியம் செய்கிறார்கள். ஊழியத்திற்கு அழைத்த தேவனுக்கு ஊழியம் செய்யாமல் ஒரு வியாபார நோக்கில் ஊழியம் நடந்துகொண்டிருக்கிறது. வியாபாரத்தையும், ஊழியத்தையும் ஒப்பிட முடியாது. பணம் முதலீடு செய்தால் ஒரு வருடத்தில் 10 மடங்கு அல்லது அதற்கு அதிகமாகவும்கூட சம்பாதித்துவிடலாம். ஊழியத்தை அந்த விதமாக செய்ய முடியாது. தேவனுடைய அநுகிரம் வேண்டும். அவருடை வழிநடத்துதல் வேண்டும், அவருடைய பிரசன்னம் வேண்டும். வேலை செய்யக்கூடியவர்கள் அதற்கு இசைவாய் ஒப்புக்கொடுத்திருக்க வேண்டும். இப்படி பல காரியங்கள் இருக்கிறது.

ஆகையால் கிறிஸ்துவை பிரியப்படுத்தும்படியாக ஊழியத்தை செய்ய நாடுங்கள். அவருக்கு பிடிக்காதவற்றை நம்மை விட்டு முதலாவது அகற்றிபோட நாம் முன்வரவேண்டும். ஆண்டவர் ஊழியம் கொள்ளும்படி வராமல் ஊழியம் செய்யவும் அநேகரை மீட்கும்படியாக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். அதைப்போல சிந்தையுள்ளவர்களாக ஊழியம் செய்யநாடுங்கள். முதலாவது, உலகமெங்கும் சுவிசேஷம் சொல்ல சீஷர்களை அனுப்பினார். அவர்கள் உலகமெங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தனர். அதைப்போல முதலாவது சுவிசேஷம் அறிவிக்க நாடுங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.

## 53. இரக்கமுள்ளவர்களாயிருங்கள்

## Be Merciful

இரக்கம் இறுதிவரை ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய ஒன்று. நாம் மற்றவர்களுக்கு இரங்குகிறபடி நமக்கும் இரக்கம் கிடைக்கும். இதை நீங்கள் விசுவாசிக்கிறீர்களா? இயேசு சொல்கிறார்; "உங்கள், பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்'' என்றார் (லூக்.6:36).

சகலத்தையும் உண்டாக்கின பிதாவாகிய தேவன் இரக்கமுள்ளவராயிருக்கிறார். நல்லோர்மேலும் தீயோர்மேலும் நீதியின் சூரியனை உதிக்கப்பண்ணுகிறார். அவரை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு மட்டும் நன்மை செய்கிற தேவன் அல்ல. அவரை தூஷிக்கிற, அவரை ஏற்றுக் கொள்ளாத அனைவருக்குமே அவர் நன்மைசெய்கிற தேவனாயிருக்கிறார். ஒரு தகப்பனுக்கு ஐந்து பிள்ளைகள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அவர்களில்

மூவர் அந்த தகப்பனுடைய சொல்லைக்கேட்டு கீழ்ப்படிந்து வாழ்ந்தாலும், கீழ்ப்படியாத மற்ற இரண்டு பிள்ளைகளுக்கும் அவர் தகப்பனாகவே இருக்கிறபடியால் அவர்களுக்கும் அந்த தகப்பன் நன்மைசெய்வான் அல்லவா? அதைப்போல பூமியில் உள்ள அனைவருக்கும் அவர் ஒரே தகப்பனாயிருக்கிற படியால் அவர் யாவரையும் நேசித்து நன்மைகளை செய்கிறார். அவருக்கு இப்பூமியில் வேண்டாதவர்கள் என்று யாரும் இருக்கமுடியாது. பரிசேயர் பாவிகளை வெறுக்கக்கூடியவர்கள். ஆனால் ஆண்டவர் இயேசு பாவிகளை நேசிக்கக்கூடியவர்.

இவர் பாவிகளின்மீது கரிசனைகொண்டு அவர்களை அவர்களுடைய வியாதிகளிலிருந்து சுகமாக்கினதை பரிசேயர் கண்டு இவர் பாவிகளோடும், ஆயக்காரரோடும் போஜனம்பண்ணகிற தென்னவென்று அவருடைய சீஷர்களைப் பார்த்துக்கேட்டார்கள். இதை அறிந்த ஆண்டவர் இயேசு; "பிணியாளிகளுக்க வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுக்கொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்" (மத்.9:12,13).

அநேகர் பலி, சடங்கா சாரங்களில் தங்களுடைய கவனத்தை அதிகமாக செலுத்துகிறார்கள். இவைகளை செய்து விட்டால் போதும் நம்முடைய பாவங்களை கர்த்தர் என்னமாட்டார் என நினைக்கின்றனர். கர்த்தர் இரக்கத்தை விரும்புகிறார். ஆகையால் அவர் ஒரு உவமையைச் சொல்லும்போது; "ஒரு மனுஷன் எருசலேமிலிருந்து எரிகோவுக்குபோகையில் கள்ளர் கையில் அகப்பட்டான்; அவர்கள் அவன் வஸ்திரங்களை உரிந்துகொண்டு, அவனைக் காயப்படுத்தி, குற்றுயிராக விட்டுப் போனார்கள். அப்பொழுது தற்செயலாய் ஒரு ஆசாரியன் அந்த வழியே வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். அந்தப்படியே ஒரு லேவியனும் அந்த இடத்துக்கு வந்து, அவனைக் கண்டு, பக்கமாய் விலகிப்போனான். பின்பு சமாரியன் ஒருவன் பிரயாணமாய் வருகையில், அவனைக் கண்டு, மனதுருகி, கிட்ட வந்து, அவனுடைய காயங்களில் எண்ணெயும் திராட்சரசமும் வார்த்து, கயங்களைக் கட்டி, அவனைத் தன் சுயவாகனத்தின்மேல் ஏற்றி, சத்திரத்துக்குக் கொண்டுபோய், அவனைப் பராமரித்தான்" (லூக்.10:30-34).

தேவனை அறிந்த ஆசாரியனும் லேவியனும் பக்கமாய் விலகிப்போனார்கள். அதுவும் அவர்கள் எந்த விதமான அலுவலாக வராமல் தற்செயலாக வந்தார்கள். அவர்களுக்கு உதவி செய்ய நேரம் இருந்தது. ஆனால் அவர்களோ குற்றுயிராக உயிருக்கு போராடிக்கொண்டிருக்கும் அந்த



மனிதனைக் கண்டு விலகிப் போனார்கள். அதே வழியில் பிரயாணமாய் வந்த சமாரியன். அவன் தேவனை அறியாதவன் அவனைக் கண்டு, மனதுருகி அவனுடைய பிரயாணத்தைக்கூட எண்ணமால் அவனுக்கு இரக்கம் செய்தான். மேலும் சத்திரத்துக்கு கொண்டுபோய் பராமரித்தான். தன்னுடைய சொந்த பணத்தை செலவு செய்ய அவன் யோசிக்கவில்லை.

அவனை காப்பாற்றுவதில் அவனுடைய பங்கு இருந்தது. இன்றைக்கு கர்த்தரை அறிந்திருக்கிறோம் என்று சொல்லுகிற கணக்கில்லா ஜனங்கள் இப்படியே அநேகரை பார்த்து விலகிப் போகிறார்கள். நமக்கு ஏன் வம்பு என்று நினைக்கிறார்கள். இந்தப் பூமியில் தேவன் உங்களுக்கு கொடுக்கும் சமயத்திற்கு தக்கதாக நன்மைசெய்ய நாடுங்கள். பரலோகத்திலே இந்த வேலையை நீங்கள் செய்யமுடியாது, அங்கே திருடரும் இல்லை, கொலையாளிகளும் இல்லை. கர்த்தரே நமக்கு வெளிச்சமாயிருப்பார். ஆகையால் பிதா இரக்கமுள்ளவராயிருப்பதைப்போல நீங்களும் இரக்கமுள்ளவர் களாயிருங்கள்.

மேலும், பதினாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனை குறித்து நாம் மத்.18:23-27 வசனங்களில் வாசிக்கிறோம்; "பரலோகராஜ்யம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப் பார்க்கவேண்டுமென்றிருந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. அவன் கணக்குப் பார்க்கத் தொடங்கினபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாகக் கொண்டுவந்தார்கள். கடனைத்தீர்க்க அவனுக்கு நிர்வாகம் இல்லாதபடியால் அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும் விற்று, கடனைத் தீர்க்கும்படிக்கட்டளையிட்டான். அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி ஆண்டவனே! என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். அந்த ஊழிக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலைபண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான்" (மத்.18:23-27). கர்த்தர் மன்னிக்க தயைபெருத்தவர். ஆகையால் ஆண்டவர் இயேசு சொல்லுகிற உவமைகளில் மன்னிப்பைப் பற்றி அதிகமாக எடுத்துச்சொல்லுகிறார்.

ஆண்டவர் மலைப்பிரசங்கத்தில் சொல்லும்போதுகூட "இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் இரக்கம் பெறுவார்கள் என்றார்" (மத்.5:7). நாம் மற்றவர்களுக்கு இரக்கம் செய்யும்போது நமக்கும் இரக்கம் கிடைக்கும். "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" என காண்கிறோம் (நீதி.19:17). அவன் ஏழையாய் பிறந்தது யார்செய்த பாவமோ என்று சொல்லி, அநேகர் ஏழையை தூஷிக்கவும், துன்பப்படுத்தவும்

செய்கிறார்கள். ஏழைக்கு நாம் உதவும்போது அது தேவனுக்கு கடன் கொடுப்பதைப்போன்றது.

தேவனிடத்தில் கொடுத்ததை அவர் திரும்பகொடுக்காமல் இருப்பாரா? மனிதன்வேண்டுமானால் ஏமாற்றுவான். ஆனால் பிதாவாகிய தேவன் பண்மடங்காக உங்களுக்கு அவைகளை திரும்பகொடுப்பார். அப்போஸ்தலனாகிய பவுல் தன்னைக்குறித்து சொல்லும்போது; "முன்னே நான் தூஷிக்கிரவனும், துன்பப்படுத்துகிறவனுமாயிருந்தேன்; அப்படியிருந்தம், நான் அறியாமல் அவிசுவாசத்தினாலே அப்படிச் செய்தபடியினால் இரக்கம் பெற்றேன்" என்கிறார் (1தீமோ.1:13). அறியாமல் செய்கிற காரியங்களை கர்த்தர் மன்னிக்கிறார். அறிந்து செய்கிறவர்களுக்கு அநேக அடிகள் அடிக்கப்படும். பவுல் அறியாமல் செய்தபடியால் அவர் தேவனிடத்தில் இரக்கம் பெற்றார் என காண்கிறோம்.

இப்படி இரக்கம் பெற்றவர்கள் "தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் விற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார். இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை; வெயிலாவது உஷ்ணமாவது இவர்கள்மேல் படுவதுமில்லை. சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து, இவர்களை ஜீவதண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்; தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர்யாவையும் துடைப்பார்" (வெளி.7:15-17). பூமியிலே இரக்கமாயிருந்தால் நமக்கு என்ன கிடைக்கப்போகிறது என்று நினைப்பவர்கள் இங்கே கவனிக்க வேண்டுகிறேன். அவர்களுக்கு கர்த்தர் இரங்கி இரக்கத்தின் ஐசுவரியமாகிய நித்திய வாழ்க்கையை கொடுப்பார். அங்கே கவலையில்லை, கண்ணீர் இல்லை, துக்கமில்லை, என்று காண்கிறோம். நீங்கள் பூமியிலே இரக்கமுள்ளவர் களாயிருக்கும்போது உங்களுக்கும் கர்த்தர் இரங்கி இவைகளை செய்வார். பின் நாளில் நடப்பதை யார் பார்த்தது என்று மெத்தனமாக இருப்பீர்கள் என்றால் இன்றே உங்களுடைய தீர்மானத்தை மறு ஆய்வு செய்யுங்கள்.

"ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக்கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மை பாராட்டும்" என காண்கிறோம் (யாக்.2:13). தேவனுடைய சித்தத்தின்படி ஜீவிக்காத ஜனங்களைப் பார்த்து அக்கிரம செய்கைக்காரர்களே என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று சொல்லி உங்களை அறியேன் என்பார். பிதா இரக்கமுள்ளவராயிருப்பதைப்போல நீங்கள் இரக்கமுள்ளவர்களாயிருக்கும்



போது உங்களுக்கும் இரக்கம் கிடைக்கும். இரக்கமில்லாதவர்களுக்கு இரக்கமில்லாத தீர்ப்பு கிடைக்கும் நியாயத்தீர்ப்பு நாளிலே இரக்கம் மேன்மைபாராட்டும்.

ஐயோ, நான் இரக்கமில்லாமல் வாழ்ந்தேனே என்று அந்நாட்களில் புலம்பினாலும், அழுதாலும் இரக்கம் நம் முன்பாக மேன்மை பாராட்டும். நாம் தியானித்தபடி பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் மன்னிப்பை பெற்றான். அவனோ அந்த மன்னிப்பை தன்னிடத்தில் கடன்பட்டவனுக்கு காட்டாமல் அவனை "பிடித்து தொண்டையை நெரித்து நீ பட்ட கடனை எனக்குச் கொடுத்துத் தீர்க்கவேண்டும் என்றான். அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து என்னிடத்தில் பொறுமையாயிரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். அவனோ சம்மதியாமல், போய் அவன் பட்ட கடனைக் கொடுத்துத் தீர்க்குமளவும் அவனைக் காவலில் போடுவித்தான்" (மத்.18:28-30). கடன்கள் மன்னிக்கப்பட்ட ஒரு கடனாளி மற்றவனுக்கு செய்த தீர்ப்பைப் பார்த்தீர்களா? நாம் மற்றவர்கள் செய்த தப்பிதங்களை மன்னிக்காதிருக்கும் போது நம்முடைய தப்பிதங்களையும் கர்த்தர் மன்னிக்கமாட்டார் என்பதை நாம் அறியவேண்டும். ஆகையால், "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்கிறார் (வெளி.22:12). எல்லாவற்றையும் தேவன் நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார். அவனவன் செய்த நன்மையின்படியே தக்கபலனை கர்த்தருடைய சமுகத்தில் பெற்றுக் கொள்வான். இதில் பட்சபாதம் ஒன்றும் கிடையாது.

ஐயோ, நான் போதகருடைய மகன், அல்லது நான் மூப்பருடைய குமாரத்தி, என்னுடைய சொத்தையெல்லாம் கர்த்தருடைய ஊழியத்திற்கு கொடுத்திருக்கிறோம். இந்த ஏழைக்கு நீர் இரங்கி இருக்கிறீர் எங்களுக்கு இரக்கம் செய்யவேண்டும். நாங்கள் குடும்பத்தோடு பரலோகத்தில் இருக்க இடத்தை கொடுக்கவேண்டும் என்று நியாயத்தீர்ப்பில் ஒருவரும் அவருக்கு முன்பாக பேசிவிட முடியாது.

ஐசுவரியவான் தரித்திரன் சம்பவத்தில் "பாதாளத்தில் அவன் வேதனைப் படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜுவாலையில் வேதனைப்படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங்

காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறது என்றான்" (லூக்.16:23-26). லாசரு ஐசுரியவானுடைய வாசலருகே கிடக்கும்போது ஐசுரியவான் காணாதவனாயிருந்தான். மரித்து ஆபிரகாமுடைய மடியிலே இருப்பதைப்பார்த்து விரல் நுனியிலே தண்ணீரை நனைத்து என் நாவைக்குளிரப்பண்ணும் என்று ஆபிரகாமைப்பார்த்து கேட்கிறான். அன்று இரக்கம் செய்யாத ஐசுவரியவான் இரக்கத்திற்கு காத்திருக்கிறான் ஆனால் அவனுக்கு இரக்கம் கிடைக்கவில்லை. இதுவே இரக்கமில்லாதவர்களுக்கு கிடைக்கும் தீர்ப்பாயிருக்கும். ஆகையால் இரக்கம் செய்ய நாடுங்கள். அப்பொழுது இரக்கம் பெறுவீர்கள்.

## கேள்வி நேரம்

**கர்த்தருடைய இரக்கம் எப்படியிருக்கும்?**

கர்த்தருடைய இரக்கத்தைக் குறித்து நாம் ஒன்று சொல்லிவிடமுடியாது. அதற்காக நாம் பரிந்துபேசவும் முடியாது. ஏனென்றால்; "அப்படியே, யாக்கோபைச் சிநேகித்து, ஏசாவை வெறுத்தேன் என்றும் எழுதியிருக்கிறது. ஆகையால் நாம் என்ன சொல்லுவோம்? தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? சொல்லக்கூடாதே. அவர் மோசேயை நோக்கி: எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் இரக்கமாயிருப்பேன், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருப்பேனோ அவன்மேல் உருக்கமாயிருப்பேன் என்றார். ஆகையால் விரும்புகிறவனாலும் அல்ல, ஓடுகிறவனாலும் அல்ல, இரங்குகிற தேவனாலேயாம்" (ரோம.9:13-16).

நமக்கு சிலரை பிடிப்பதில்லை. ஆனால் கர்த்தருக்கு அவர்களைப் பிடிக்கும். அவர்கள் நம்முடைய பார்வைக்கு தகாதவர்கள் போலிருக்கலாம். ஆனால் அவர்கள் கர்த்தருடைய பார்வையில் சிறப்பானவர்கள். ஆகையால் அவர்களுக்கு அவர் இரக்கம் செய்வார். இதைத்தான் யாக்கோபு ஏசா சம்பவத்தில் பார்க்கிறோம். தேவனிடத்திலே அநீதி உண்டென்று சொல்லலாமா? பயற்றங்கூலை கொடுத்து சேஷ்டபுத்திரபாகத்தை யாக்கோபு எழுதி வாங்கிட்டான். அவன் சரியானவன் என்று அவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறார். அது அவருடைய விருப்பமாயிருக்கிறது. ஆகையால் கர்த்தருடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள். உங்களுக்காக ஜெபிக்கிறோம்.